
ராம சரித மானஸ்

துளஸி ராமாயணம்

பால காண்டம்



ஸாதனா நிகேதன்

வெளியீடு

ஓம்:

ஸ்ரீ கணேசாய நம:

ஸ்ரீ ஜாநகீ வல்லபோ விஜயதே

கோஸ்வாமி துளஸிதாஸ்

இயற்றிய

ராம சரித மாநஸ்

துளஸி ராமாயணம்

பாலகாண்டம்

(வசநம்)

தமிழாக்கம்

சிவராமக்ருஷ்ணன்

ஸாதனா நிகேதன்
பதிப்பு

பதிப்பாளர் : நா. ராமதாஸ்
ஸாதனு நிகேதன்
கீழ கொட்டையூர்
(கும்பகோணம்) 612 002

முதல் பதிப்பு: 1000 ப்ரதிகள்
துந்துபி, வைகாசி — மே, 1982

அச்சிட்டது:
வள்ளலார் அச்சகம்
கீழக்கொட்டையூர், கும்பகோணம்.

பதிப்புரை

இறை வழிபாட்டிலும், சாதுக்கள் சேவையிலும் காலம் கழித்துவந்த எனக்கு இறையருளால் பல மகான்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அவர்களுள் வட இந்தியா (பஞ்சாப் மாநிலம்) ஸ்ரீலஸ்ரீ ராம சாது அவர்களின் தரிசனம் எனக்கு வாழ்க்கையில் ஓர் பெரிய திருப்பத்தை ஏற்படுத்தியது. அவருடைய தரிசனம் என்உள்ளத்தில் பக்தியையும், ஞானத்தையும் மேலும் வலுவடையச் செய்தது. அவ்வப்போது அவர்கள் துளசிதாஸ் ராமாயணம் சொல்வார்கள். சாதகன் இப்படித்தான் வாழ வேண்டும் என்று வழி காட்டுவார்கள்.

இராமாயணம் பல உள. எனினும் துளஸி ராமாயணத்தில் பக்தி, நீதி, தர்மம், சாதகர்களுக்குத் தேவையான தத்துவார்த்தங்கள் ஆங்காங்கே அமைக்கப் பட்டுள்ளது. துளஸிதாஸரின் பெருமையை விளக்கு வதாக அமைந்துள்ளது. துளஸி ராமாயணத்தால் சாது அவர்கள் வாழ்க்கையில் சித்தி பெற்றமையால் அவர்கள் வாக்கில் ஓர் உயிர் ஓட்டத்தையும் தெவிட்டாத பக்தி ரசத்தையும் என்னால் அனுபவிக்க முடிந்தது. தமிழில் (ராம சாது அவர்களுக்கு போதிய பாண்டித்யம் இன்மையால்) ராமாயணத்தின் அந்த ஆழ்ந்த உயர்ந்த கருத்துக்களை தமிழக மக்களுக்கு பிரசாதமாக வழங்க விரும்பி, சாது அவர்கள் சமீப காலத்தில் தம்மிடம் வந்துசேர்ந்த ப்ரம்மசாரியை இப் பணியில் ஈடுபடுமாறு பணித்தார்கள்.

இளமையிலிருந்தே ப்ரம்மச்சரிய விரதம் பூண்டு பக்தி மார்க்கத்தில் காலம் கழித்து, பேராசியராகப் பணியாற்றி வந்தவர். வாழ்க்கை முழுவதும் பக்தி நெறியில் செலவிட எண்ணி பணியைத் துறந்து பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டவர். பக்தியின் பயனுக இறைவன் அவருக்கு குருதேவர் (ஸ்ரீலஸ்ரீ ராம சாது) அவர்களின் தரிசனத்தையும் அவருடைய தமிழ் மொழி பெயர்ப்பு ஆணையையும் பிரசாதமாக அளித்தான்.

இந்த இராமயோகம் ரெளத்ரி (1980ஆம் ஆண்டு) ராமநவமி அன்று தங்கம்மாள்புரத்தில் (நெல்லை மாவட்டம்) ஸ்ரீ லலிதா பரமேஸ்வரியின் சன்னதியில் ஆரம்பித்து இடைவிடாது செய்து முடிக்கப்பட்டது.

சுவாமிகள் இதை பெரிய பதிப்பாளர் யாருக்கும் கொடுக்காமல் அடியேனிடம் இந்த பொறுப்பையும், அச்சிடும் பொறுப்பை சிறு வயது முதற்கொண்டே எங்களுடன் ஆசிரமச் சேவையில் ஈடுபட்டு வரும் வள்ளலார் அச்சகம் திரு. ஸ்ரீநிவாஸன் அவர்களிடமும் ஒப்படைத்தார்கள். தானும், பெற்ற தாய் சிசுவை பேணி வளர்ப்பது போன்று நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக கவனித்து, பணி முற்றுப் பெற முழு ஒத்துழைப்பை நல்கினுர்கள். அனுபவம் சிறிதும் இல்லை எனினும், இராமனின் அருளில் பூரண நம்பிக்கையால் இது செய்யப்பட்டது.

இதில் உள்ள பெருமை எல்லாம் பகவான் ஸ்ரீராமனைச் சேர்ந்தது. குறை இருப்பின் அது மனித மனதின் குறைபாடுகளே.

எனவே, இதைப் படிப்போர் தம்முடைய கருத்துக்களை மனமுவந்து தெரிவித்தால் அடுத்த வெளியீட்டில் திருத்தம் செய்து வெளியிட துணைபுரியும். நூல் சிறப்பாக வெளியிட உதவிய சுவாமிகளுக்கும், தமிழில் மொழி பெயர்த்தவருக்கும், வள்ளலார் அச்சகத்தினர் அவர்களுக்கும், பொருள் உதவி செய்த T. V. S. ஸ்தாபனத்தார்களுக்கும், மற்றும் பல்லாற்றானும் உதவிய அன்பர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூல் தமிழக மக்களுக்கு ஓர் ஒளி விளக்காக அமையும் என நம்புகிறேன்.

அடுத்து அயோத்யா காண்டமும், அரண்ய காண்டமும் IIம் பாகமாயும், மற்ற 4 காண்டங்களும் IIIம் பாகமாயும் ராம அருளால் கூடிய விரைவில் வெளியிடப்படும்.

இந்நூலை குருமகராஜ் ஸ்ரீலஸ்ரீ இராமாசாது அவர்களின் திருவடிகளுக்கு காணிக்கையாக சமர்ப்பிக்கிறேன்.

நா. ராமதாஸ்
சாதனா நிகேதனம்
ஸ்ரீ ராமார்ப்பணம் டிரஸ்ட்
கீழக் கொட்டையூர், கும்பகோணம்.

ஓம்

முக்வுரை

'ஹே ராம' என்றே இடிமுழக்கம் செய்த குரல்
'ஹே ராம' என்றெழுப்ப மெய்மறந்த எதிர்க்குரல்
பாராம லோருக்கம் ராத்ரியிலே தந்தகுரல்
''ஸ்ரீராம-ஸாது'' எனும் யோகி அவர் தந்த குரல்

காவேரி மாதாவின் கரையினிலோர் குடிசையில்
மா-ஏரி மாநஸ் ராம சரிதம் தமிழ் மொழியில்
மா-ஏரி ஸநாதந தர்ம சாஸ்த்ரமாம் வகையில்
காவேரி மாநதி அமுதாய்த் தமிழர் கையில்

ராம யோகமாக செய்து யோகியர்க்கு வழியாக
ராம யக்ஞமாக, ஸாதகர் ஸாதனையாக,
ராம பக்தியாக அவர் தண் கமல மலராக
ராம அருள் தருகின்றார் துளஸி தளமாக

''ராம நாம...ப்ரபாவத்தை ஸாதுக்கள் உபநிஷத்துக்கள் புராணங்கள் பாடுகின்றன...பகவான் சம்பு அதை எப்போதும் ஜபம் பண்ணுகிறார்...ஒரு ராமன் அயோத்யா ராஜாவின் புத்ரன் ...மனைவியின் பிரிவால் அபார துக்கமடைந்தார். கோபம் வந்தது—ராவணனை யுத்தத்தில் கொன்றார்...த்ரிபுராரி ஜபம் பண்ணுவது அதே ராமனா? வேறொருவரா''—என்று

பரத்வாஜர் - யாக்ஞவல்க்யரைக் கேட்கிறார். (பக். 41)

''இதே ஸந்தேஹம்தான் பவாநியும் பட்டாள்......

ஜகத்துக் கெல்லாம் இவர் ஸ்வாமி...இவர் போய் ஒரு ராஜபுத்ரனை 'ஸச்சிதானந்த பரதாம' என்று சொல்லி நமஸ்காரம் பண்ணினாரே!.......ப்ரஹ்மம்.......தேஹமெடுத்துக் கொண்டு மநிதனாக வர முடியுமா!......அக்ஞாநியைப்போல மனைவியைத் தேடுவாரா?......(பக். 43)

'......ரகு நாத கதை எல்லாவிதமாகவும் சொல்லி என் அக்ஞாநத்தை...பாரமான ப்ரமையை......அகற்றுங்கள்' (பக் 76)

''அயோத்யா ராஜாவின் புத்ரனா ராமன்? அல்லது அஜனான, நிர்குணனான, போக்கைப்புரிந்து கொள்ள முடியாத ஒருவரா! எவருடைய புத்தி மனைவியின் பிரிவால் பித்துப்பிடித்ததாகி விட்டதோ......அவர் ப்ரஹ்மம் எப்படியாகும்?'' (பக். 76)

– உமா 20 கேள்விகள் கேட்டாள். அதற்கு விளக்கமாக ......ஹரன் ரகுபதி கதை வர்ணிக்கலானர். *(பக். 79)*

''......நான் எப்படிக் கேட்டுத் தெரிந்து கொண்டேனே...... அப்படி...சொல்கிறேன்.'' *(பக். 75)*

இதுதான் துளஸியின் ராமாயணம்

இதில் த்ருவ நக்ஷத்ரம் போல் ஒளிவீசும் பகவானின் ''அஞ்ஜேல்'' செய்தி—

கைகளுயர்த்தி ப்ரதிக்ஞை பண்ணினர்: 'பூமியில் ராக்ஷஸரே இல்லாமல் செய்வேன்'. அரண்ய-9.

சரணடைந்தவரின் பயத்தைப் போக்குவது என் ப்ரதிக்ஞை.
- ஸுந்தர. 4/46

ஒரு கோடி ப்ரஹ்ம ஹத்யா தோஷம் பற்றியிருந்தவனானலும் 'சரணம்' என வந்துவிட்டால் நான் அவனையும் தள்ளமாட்டேன்.
—ஸுந்தர. 1/44

ஜகத்தில் ஸம்பூர்ண ஜட-சேதன ஜகத்துக்கே த்ரோஹியாகி இருந்தாலும், பய-பீதியடைந்து என் சரணமாக வந்துவிட்டால் மத-மோஹ-பலவித கள்ளம் விட்டுவிட்டானேல் நான் அவனையும் உடனே ஸாதுக்கு ஸமமாக்கிவிடுவேன். ஸுந்தர, 1,2/48

என் தர்சநம் ஜகத்தில் பலன் தராமல் விடாது. 4/49
என் ஸேவகனை விடப் ப்ரியமானது எனக்கு வேறெதுமில்லை.
உத்தர— 4/83

'இந்த ராக்ஷஸர்கள் என்னை வைர பாவத்துடன் ஸ்மரணம் பண்ணினர்கள்' என்று ப்ரபு அவர்களுக்கு நல்ல கதி கொடுத்தார்
லங்கா—2/65

இந்த வாக்குறுதிகளைத் தாங்கி வருவதே துளஸி ராமாயணம்

இவைகளை நிறைவேற்றவே அவதாரம் ஆகியது.

ப்ரம்மம் அனந்தமானது. அநாதி, மநஸுக்கும்; வாக்குக்கும் எட்டாதது. அதை அடைய த்யானிப்பதுதான் மனிதர்கள் மிக மேலானதாக செய்யக்கூடியது.

அந்த ப்ரம்ஹம் பக்தர்களுக்காக லீலா சரீரம் எடுத்துக் கொள்கிறார் என்று வேதம் சொல்கிறது.

பகவான் மநு மனைவியுடன் உக்ரமான தபஸ் பண்ணி அவரை ப்ரத்யக்ஷம் (கண்கூடு) ஆக்கினார். விஸ்வ நன்மைக்காக அவரை புத்ர ரூபத்தில் அடைய வரம் பெற்றார். வேதத்தால் தெரிந்து கொள்ளக்கூடிய பரப்ரஹ்மம், வேதங்கங் துதிக்கும் புருஷோத்தமன், பூலோகத்தில் தசரதன் பிள்ளையாக, ராம ருபமாக பிறக்க இசைந்தார்.

''மநிதர்களுக்கு ஏற்ப செயல்கள் நிகழ்த்தி உதாரணமாகக் காட்டுகிறார்'',

''தயாளு ராமச்சந்த்ரன் பக்தர், பூமி, பசு. தேவர்களுக்கு நன்மை செய்வதற்காக மநித சரீரம் ஏந்தி விதம் விதமாக செயல்கள் நிகழ்த்தினார்''.

''தேவர் ஸாதுக்களின் கார்யம் பண்ணுவதற்காக நீ மனித தேஹம் எய்தினாய். ஆகையால் பூலோக ராஜா போல பேசுகிறாய், செய்கிறாய்''. —பரத்வாஜர்

''தேவர்களின் கார்ய ஸித்திக்காக ராஜாவாக தேஹம் ஏந்தி துஷ்ட ராக்ஷஸர்களை அழிக்கப் போய்க்கொண்டிருக்கிறாய்''.

— வால்மீகி

இதனால் ஸம்ஸாரத்துக்கு அவரது தர்சனம் ஸுலபமாயிற்று. அவருடைய ரூப த்யானம், சரித்ர கானம், நாம ஸ்மரணம் இவைகளால் எல்லோரும் லாபம் அடையலாயிற்று.

ராமன் பிறந்தபோது கூடவே வேதங்கள் ப்ராசேதேஸ் வால்மீகியின் மூலம் ராமாயணமாக உருக்கொண்டன. வால்மீகி துளஸிதாஸ் ஆக வட நாட்டிலும், கம்பன்ஆக தமிழ் நாட்டிலும் வந்தார். மஹரிஷி வால்மீகி த்ரேதாயுகத்தில் இயற்றினார். அந்தக் காலத்து ஜனங்களை உய்விக்கச் செய்தார். அவரே கலியுக குடில (கோணல்தனமான) ஜீவன்களைக் கடத்திவிட துளஸிதாஸர் ரூபத்தில் அவதாரம் கொண்டார். வால்மீகி ராமாயணம் இனிமையே முக்யமாகக் கொண்டது, ஸ்ரீ ராம-சந்த்ரன் ஈச்வர அவதாரம் ஆனதை மிக நுட்பமாகவே எங்கோ ஓரோரிடத்தில் மட்டும் வர்ணித்தார், அதனால் கலியுக குடில ஜீவன்களுக்கு நன்மை ஏற்படுவது கடினம். க்ரந்தம் முழுதையும் அந்தக் கோணத்தில் படிக்க இவர்களுக்கு சக்தியில்லை.

ஆகையால் அதே பகவான் வால்மீகி துளஸிதாஸர் ரூபத்தில் அவதாரம் பண்ணி ஸ்ரீ ராம சரித மாநஸ் என்ற ஐச்வர்யம் (ஈச்வர பாவம் முக்யமாகவுள்ள) க்ரந்தம் இயற்றி அடிக்கொரு தரம் ஸ்ரீ ராமசந்த்ரனின் ஐச்வர்யத்தைச் சொல்லி கலிகால

குடில ஜீவனின் உள்ளத்தை உய்விக்கப் பண்ணினூர். இதில் காவ்ய ஆனந்தத்தைவிட அதிகமாக ஆனந்தம் பஜனை ரூபமாக விளைந்தது. வேத அர்த்தமே ராமாயண அர்த்தம். அதில் நிர்க்குண ராமன், ஸகுண ராமன், அவருடைய மங்கள மயமான லீலைகளின் கதைகளே முக்யமாக வர்ணிக்கப் படுகின்றன.

ராமாவதாரம் விதவிதமானவை, ராம கதைகள் நூறு கோடி. வராஹ கல்ப வ்ருத்தாந்தத்தை ஒட்டி பராசரர் இயற்றினூர். ச்வேத கல்ப ஸந்தர்ப்பத்தில் வாயு இயற்றினூர், விஷ்ணு புராணத்தில் வராஹ கல்ப கதையும், நாரத புராணத்தில் ப்ருஹத் கல்ப கதையும் உள்ளன. துளஸிதாஸர் நாலு கல்பத்தின் ராமாவதாரக் கதைகளையும் ஒன்ருகத் தொகுத்து விரிவாகச் சொல்கிருர். ராமாவதாரம் ப்ரதானகதை. உடன் க்ஷீரசாயீ பகவான், விஷ்ணு பகவானின் ராமாவதாரக் கதை. மாற்ற வேண்டிய இடங்களில் மாற்றி இருக்கிருர். ராமசரித மானஸில் பகவானின் சரித்ரத்துடன் 5 மஹா பாகவதர் களின் சரித்ரம் இருக்கின்றன. உமா சரிதம், சம்பு சரிதம், பரத சரிதம், ஹநுமான் சரிதம், புஸுண்டி சரிதம். கதைப் போக்கிற்கு ஏற்ப ஸமூஹ நீதி, தர்மம் அவச்யமான விஷயங் களும் வர்ணிக்கப்படுகின்றன.

ராம சரித மானஸ் ப்ரஸாத காவ்யமாம். ஸநாதந தர்மத்தை தைர்யமாக விளக்கி அசைக்க முடியாதபடி நிலைநாட்டி இருக்கிருர். ஸ்ரீ கோஸ்வாமி வைதீக மதத்தை நிலைநாட்டிய ஆசார்யராவர்—'வைதிக மரபு ப்ரதிஷ்டா பநாசார்ய'. எல்லா சாஸ்த்ரங்களையும் கடைந்தெடுத்து ஸாரத்தைத் தருகிருர். மானஸின் வட்டத்துக்குள் எல்லா ஸம்ப்ரதாயங்களும் இடம் பெற்றிருக்கின்றன. தன் வாழ்க்கை அனுபவத்தில் திரண்ட மதக்கருத்துக்களையும், கர்ம காண்ட அனுஷ்டானங்களையும் புராண விஷயங்களையும் சேர்த்தார். இவை நன்ருக அவருடைய அறிவுரையை உறுதியாக்கி, மனஸில் பதியச்செய்கின்றன. இதில்தான் அவரது க்ரந்தத்தின் சிறந்த முக்யத்துவம் இருக்கிறது.

உண்மையான ஆஸ்திக மனத்தில் வேட்கை, நம்பிக்கை உள்ள அசைக்கமுடியாத வேதாந்தி ஒருபுறம். முழுக்க முழுக்க உலகத்திய போகங்களில் திளைக்கும் நாஸ்திகர்கள் ஒருபுறம். இத்தகைய நாஸ்திகர்களின் தன்னல காமித்தனத்தைக் கண்டிக்கிருர். கர்மானுஷ்டானங்கள் ஸமூஹ சடங்குகள் இவைகளுக்கு சலுகை தருகிருர். உதாரணமாக ப்ராஹ்மண பக்தி, ஜாதிக் கட்டுப்பாடுகளை அநுஷ்டிப்பது கடமை எனக் கருதுகிருர்.

வேதாந்தம் கற்றுக்கொள்ளும் அமைப்பை, நிர்க்குண ப்ரஹ்ம தியானத்தை ஒப்புக்கொள்கிருர். மாயா தத்வத்தை வலியுறுத்துகிருர். உதாரணமாக நாரதர் கதையிலும் ஸதியின் கதையிலும் இது தெளிவாகும். அது பகவானின் க்ரியா லீலா என்பார். ஒன்ருன பரம்பொருள் - பக்தியை வலியுறுத்துவார். ஸகுண ரூபம் ஒன்றை இஷ்ட தெய்வமாக கொண்டு பக்தியை, நம்பிக்கையை, அதில் பதிக்கச் சொல்வார். ராமனே லக்ஷ்ய புருஷனுக, மனித ராஜ குமாரனுக, பக்தி வேட்கையில் உருகி, பரம்பொருளேயே இந்த ரூபத்தின் மூலம் அடைய முயற்சி பண்ணக் காட்டுவார்.

மாநஸின் அமைப்பு :— சிவன் இதை இயற்றினுர். கொஞ்சகாலம் மநஸிலேயே வைத்துக்கொண்டு இருந்தார். உரிய சமயம் வந்ததும் பார்வதிக்கு அதைச் சொன்னுர். பின்னர் இதை யாக்ஞவல்க்யருக்கும், இன்னெரு சமயம் லோமசருக்கும், இதைச் சொன்னுர். அதன்பின் வெவ்வேறு சமயங்களில் யாக்ஞவல்யர் பரத்வாஜருக்கும், லோமசர் காகபுசுண்டிக்கும் இவர் கருடனுக்கும் சொன்னுர்கள். சிவனே அதை புசுண்டி சொல்லவும் கேட்டுக்கொண்டிருந்ததாக க்ரந்த கர்த்தா சொல்லுவது ஓர் அலாதியான கவி நயமாகும். அதையே தான் வர்ணிப்பதாகச் சொல்கிருர். இப்படி அதற்கு தெய்வ மூலம், ருஷி வழி, தெய்வ புனர் விமர்சனம், எல்லாம் வலியுறுத்துகிருர்.

தலைப்பும் இதற்கு சிவனே கொடுத்தார்—ராம சரித மாநஸ். உலகில் மிக உயரமான இடத்தில் அமைந்த மானஸ ஸரோவரம், மனிதனின் அந்தக்கரணத்தில் தெரிந்து கொள்ளக் கூடிய மிக உயர்ந்த மனஸ்—இந்த உவமையை மிக விரிவாக பல துறைகளில் பொருத்தமாக விவரிக்கிருர். மானஸ ஸரோவரத்தைக் கண்ணுல் பார்க்கிருேம். ராம சரித மாநஸைக் க்ஞானக் கண்ணுல் பார்க்கிருேம். இதை க்ரந்தத்தின் முதலில் மாநஸப் பிரசங்கம் என்னும் பகுதியில் விவரமாகக் கொடுக்கிருர். முதல் 46 தோஹாக்களில் அவர் கொடுக்கும் முக உரையில் இது முக்யமான பகுதியாகும்.

இந்த முகஉரைப் பகுதியை துளஸி ராமாயணம் ப்ரசாரமாக இருக்கும் இடங்களில்கூட, ப்ரவசனம் செய்வோரும்கூட சொல்லும் வழக்கமில்லையாம். இதை முதலிலிருந்து படிப்போர் சலிப்புத் தட்டினுல் பக். 12ல் நிறுத்திவிட்டு, பக். 40லிருந்து படித்து முடித்து மீண்டும் விட்ட பகுதியைப் படிக்கலாம்.

ஆஸ்திக யாத்திரிகர்களுக்கு ஸரோவரத்தில் இறங்கி ஸ்நானம் செய்ய எளிதாக இருக்க, அதன் நாலு புறங்களிலும் துறைகள் அமைத்து, அங்கே ஏழு படிகள் அமைத்து, நான்கு துறைகளிலும் முறையே, தான் கிழக்கே, ஶிவன் மேற்கே, யாக்ஞவல்க்யர் தெற்கே, புசுண்டி வடக்கே கதை சொல்வதாக அமைக்கிறார்.

பலன்:-- பக்தி, யுக்தி, முக்தி, விரும்பியவை நிறைவேறுதல். எல்லாம் மாநஸத்தை ஸேவிப்பதால் கிடைக்கின்றன. ராம ரூப த்யானத்தால் வைராக்யம் கிடைக்கும். அவரது சரித்ர கானத்தால் தர்ம மார்க்கம் கிடைக்கும். ராம நாம ஸ்மரணத்தால் க்ஞாநம் கிடைக்கும். அவரைப் பூஜை பண்ணுவதால் ஐச்வர்யம் (ஈச்வர பாவம்) கிடைக்கும். காமம், மதம், தம்பம் அகலும். மநஸ் ரூபமான யானை விஷய ரூபமான பெருந்தீயால் எரிக்கப்படுகிறது. இந்த மாநஸ ஸரோவரத்தில் வந்து சேர்ந்தால் ஸுகியாகிவிடலாம். மூன்று துக்கங்களையும் அழித்துவிடும். பலன்கள் விவரமாக முகஉரையில் தருகிறார். அதோடு ஸந்தர்ப்பம் ஏற்படும்போது எல்லாம் ஒன்றைக்கூட நழுவவிடாமல் எல்லாப்பாத்திரங்களின் அறுதியான ஆசியாகவும் கொடுக்கிறார். சிவன் ராம பக்தியையும், ராமன் சிவ பக்தியையும் இன்றியமையாதது என்றும் அதில்லையேல் தன் பக்தி கிட்டாது என்றும் அறைந்து சொல்கிறார். எல்லாரும் துளஸியைப் படிக்க ஆரம்பித்தால் நல்லவர்கள் ஆகாமல் தப்பமுடியாது. நல்லவர் ஆகி பலம் மிக்க, வீரம் மிக்க, ஸந்தோஷமிக்கவர் ஆவது திண்ணம். துளஸியின் காவியத்தைக் கேட்டு, அந்த சங்கீதத்தை தன் அந்தராத்மாவில் எதிரொலிக்கச் செய்த யார்தான் ஆத்மீக எழுச்சி அடையாமலோ தேவலோகத்துக்கு நேரான பாதையில் போகாமலோ இருக்கமுடியும். 'மனிதன் மனிதனாக' ஆவான். ஜனங்கள் கோஸ்வாமியின் சாஸ்த்ரீய பக்தி பாவனையால் ஸதாசாரம் (நல்ல ஒழுக்கம்), அத்யாத்ம வித்யா, பகவத் ப்ரஸாதம் அடைவாராக.

துளஸி ஸ்த்ரீகளைக் கண்டனம் பண்ணுவதாகத் தோன்றக் கூடும் இடங்கள் அஸுர, தாமஸகுணமுள்ளவர்களைக் குறித்தே சொல்லப்பட்டவை.

உயர்நிலையில் ஹிந்தி படிப்போருக்கு முக்ய பாடமாக உள்ள ராமசரித மாநஸ் பகுதிகளைப் படிக்க இது உதவினால் இந்த தமிழாக்கத்தின் நோக்கங்களில் ஒன்று நிறை பெற்றதாகும்.

எல்லாவற்றிலும் முக்யம் துளஸியின் காலத்தில் அவர் கண்ட ஸமூஹத்தின் பழக்கவழக்கங்கள், ஆசைகள், ஏமாற்றங்கள் முதலியவற்றையும் படிக்கிறோம். தெரிந்துகொள்கிறோம். தமிழ் நாட்டு மரபு, பழக்கவழக்கங்களுக்கு வேறாக இருக்கிறதே என்று முகம் சுளிக்கக்கூடாது.

இந்த மொழிப்பெயர்ப்பில் கையாண்டிருக்கும் சில முக்யமான முறைகள்: பெயர்கள் க்ரந்த கர்த்தா கொடுத்தபடியே கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏனெனில் அந்தந்த இடத்தில் அந்தந்தப் பெயருக்கு முக்யத்துவம் இருக்கிறது. உதாரணமாக ராமு, ரகுநாதன், ஸுரஸ்வாமி; ஸிய-ஸிதா; லகந்-லக்ஷ்மணன்; கருடன், ககேசன்; உமா, பவாநி, சைலகுமாரி; சிவன், த்ரிபுராரி. பொதுவாக அடைமொழிகளாகக் கருதப்படுவனவும் பல இடங்களில் பெயராகவே ஸஹஸ்ரநாமத்தில் போல உபயோகப்படுத்தி இருக்கிறார். அவையும் அங்கங்கே அப்படியே வருகின்றன. அவற்றிற்கு அங்கே பொருள் வடிவம் கொடுப்பது பொருந்தாது. உதாரணம்: பானுகுல-கமல-வந-தின-கரன். ஆனால் முதல் தடவை இவை வரும்போது பொருள் கொடுக்கப்பட்டிருக்கிறது. கூட்டுச் சொல்லும் இதேபோல் வருகிறது. அவற்றில் பெரும்பாலும் பகுதிகள் எல்லாம் தெரிந்தனவை யாகவே இருக்கும். உதாரணம்: குரு-பத-பத்ம-தூளி-(குருவின் திருவடித் தாமரையின் மகரந்தப்பொடி)

வேத மதம் ஓர்ந்து, ஓர்ந்து-ஓர்ந்து புராணம் எலாம்
ஸாது யார் அஸாது எனும் பேதம் ஓர்ந்து சொல்லுவார்
கபட, குரூர, தீய, கலி - கோட ஜீவன்
உய்ய ராம நாமமாம் சர்ச்சையில் செலுத்துவார்
வேநீ கவி உரைபோல் நம்பிக்கை உண்டுபண்ணுவார்
கல்லன மனத்தை அன்பினால் உருக ஆக்குவார்
யாரே பவ ஸாகரத்தை யெம்மை தாட்ட வீடுவார்
ராமாயணம் இஃதை துளஸி பாடவில்லையேல்?

—வேநீ கவி

துளஸிதாஸ் வாழ்க்கை வரலாறு

—o—

ப்ரயாகைக்குப் பக்கத்தில் பாந்தா ஜில்லாவில் ராஜபுர் என்ற க்ராமம். அதில் ஆத்மாராம தூபே என்ற ப்ரதிஷ்டித ஸரயூபாரீண ப்ராஹ்மணன் இருந்தார். அவருடைய தர்மபத்நி ஹுளஸி. ஸம்வத் 1554 ச்ராவண சுக்ல ஸப்தமியன்று அபுக்த மூலா நக்ஷத்ரத்தில் இந்த பாக்யசாலிகளான தம்பதிகளுக்கு 12 மாதம் கர்ப்பத்திலிருந்து, பிறகு, கோஸ்வாமி துளஸிதாஸரின் ஜன்மா உண்டாயிற்று. ஜனன காலத்தில் குழந்தை துளஸிதாஸ் அழவில்லை. ஆனல் 'ராம' என்று அதன் வாயிலிருந்து சப்தம் வந்தது. அதன் வாயில் 32 பற்கள் இருந்தன. 5 வயதுக் குழந்தைபோல வடிவம்! இப்படி அத்புதமான குழந்தை. அ-மங்களமானவை என்று தகப்பனருக்கு கவலே பய-பீதி உண்டாயிற்று. அதைப்பற்றிப் பலவிதமாகக் கல்ப்பனே பண்ணலானர். இதைப் பார்த்து தாயார் ஹுளஸிக்கு மிகவும் கவலே உண்டாயிற்று. குழந்தைக்கு என்ன கெடுதல் ஏற்படுமோ என்ற பயத்தில் தசமி ராத்ரியில் வேலேக்காரியிடம் இந்தப்பச்சைக் குழந்தையைக் கொடுத்து மாமனர் வீட்டுக்கு அனுப்பினள்,

சுநியா என்ற அந்த வேலேக்காரி குழந்தையை மிகவும் ப்ரேமையுடன் வளர்த்துவந்தாள். துளஸிதாஸுக்கு சுமார் 5 வயதாயிற்று. சுநியாவும் தேஹத்தை விட்டாள். குழந்தை அநாதையானன். வீடு வீடாகத் தேடித் திண்டாடலானன். நன்ருக முன்னுக்கு வரக்கூடியவன் என்று இந்தப் பிள்ளேமேல் ஜகஜ்ஜநநீ பார்வதிக்கு தயை வந்தது, ப்ராஹ்மணி வேஷத்தில் ஒவ்வொரு நாளும் அவனிடம் வந்து தன் கையாலேயே அவனுக்கு போஜனம் பண்ணி வைத்தாள்.

இங்கே ராம சைலத்தில் வஸித்துவந்த ஸ்ரீ அனந்தானந்தரின் ப்ரிய சிஷ்யர் ஸ்ரீ நரஹர்யானந்தர் சங்கர பகவானின் ஏவலால் இந்தப் பிள்ளேயைத் தேடிக் கண்டு பிடித்தார். அவனுக்கு ராம்போலா என்று பெயர் வைத்தார். அயோத்யாவுக்கு அழைத்துச் சென்ருர்.

அங்கே ஸந் 1561 மாக சுக்ல பஞ்சமி சுக்ர வாரத்தில் அவனுக்கு உபநயனம் பண்ணி வைத்தார். சொல்லித் தராமலேயே இந்தப்பிள்ளை காயத்ரீனீய உச்சரித்தான். அதைப்பார்த்து எல்லாரும் திகைத்துப் போனூர்கள். அதன்மேல் நரஹரிஸ்வாமி இவனுக்கு வைஷ்ணவர்க்கான 5 ஸம்ஸ்காரமும் பண்ணிவைத்து ராமமந்த்ர தீக்ஷையும் கொடுத்து அயோத்யா விலேயே இருந்து கொண்டு அவனுக்கு வித்யாத்யயனம் செய்விக்கலானுர். பிள்ளை ராம்போலாவின் புத்தி மிகவும் கூர்மையாக இருந்தது. ஒரு தடவை குருவிடம் கேட்ட பாடம் உடனே அவனுக்குத் திருப்பிச் சொல்ல முடிந்தது. கொஞ்ச காலத்திற்குப் பிறகு குருவும் சிஷ்யனும் ஸூகர க்ஷேத்ரத்தை அடைந்தார்கள். அங்கே ஸ்ரீநரஹரி துளஸிதாஸனுக்கு ராம சரிதம் சொன்னுர். கொஞ்ச காலத்திற்குப்பின் காசி வந்தான். காசியில் சேஷநாதனிடம் வஸித்துக்கொண்டு துளஸிதாஸ் 12 வருஷம் வரையில் வேத-வேதாங்கம் அத்யயனம் பண்ணினுன். இங்கே அவனுடைய லோகவாஸனு கொஞ்சம் விழித்தெழுந்தது. தன் வித்யாகுருவிடம் ஆக்ஞை பெற்று தன் ஜந்ம-பூமிக்குத் திரும்பி வந்தான். அங்கே தன் பந்துக்கள் எல்லாரும் காலமாகி விட்டதைத் தெரிந்து கொண்டான். விதிப்படி தன் பிதா முதலானேருக்கு ச்ராத்தம் பண்ணினுன். அங்கேயே இருந்து கொண்டு ஜனங்களுக்கு ராமகதை சொல்லலானுன்.

ஸம் 1583ல் ஜ்யேஷ்ட சுக்ல 13 குருவாரம் - பரத்வாஜ கோத்ரப்பெண் ஒருத்தியை விவாஹம் பண்ணிக்கொண்டான். ஸுகமாக வாழ்க்கை நடத்தலானுன். ஒரு தடவை அப்பெண் அங்கு வந்திருந்த ஸஹோதரனுடன் தாயார் வீட்டுக்குப் போனுள். பின்னுலேயே துளஸிதாஸனும் அங்கே போய்ச் சேர்ந்தான். பத்நி இவரை இதற்காக மிகவும் கடிந்தாள். ''என்னுடைய இந்த எலும்பு-மாம்ஸத்தாலான தேஹத்தின்மேல் உங்களுக்கு இருக்கும் ஆசையில் பாதியாவது பகவான்மேல் இருந்தால் அது உங்களைக் கடத்திவிடும்'' என்முள்.

துளஸிக்கு இது பற்றிக்கொண்டது. ஒரு க்ஷணம் கூட நிற்கவில்லை. அங்கிருந்து கிளம்பிவிட்டான்.

ப்ரயாகை வந்து சேர்ந்தான். அங்கே க்ருஹஸ்த வேஷத்தைக் களைந்தான். ஸாது வேஷம் கொண்டான். தீர்த்தாடனத்துக்குப் புறப்பட்டார். காசியை அடைந்தார். மானஸ ஸரோவரத் தருகில் அவருக்குக் காக புசுண்டியின் தர்சனம் கிடைத்தது.

காசியில் துளஸிதாஸ் ராமகதை சொல்லலானார். அங்கே அவரை ஒருநாள் ஒரு ப்ரேதம் ஸந்தித்தது. அதனிடமிருந்து ஹநுமானின் விலாஸம் கிடைத்தது. ஹநுமானைச் சந்தித்து அவரிடமிருந்து ரகுநாதனைத் தர்சிக்க ப்ரார்த்தனை பண்ணினார். ''உனக்குச் சித்ர கூடத்தில் ரகுநாதனின் தர்சனம் ஆகும்'' என்றார் ஹநுமான்''. துளஸிதாஸ் சித்ரகூடம் வந்து சேர்ந்தார்.

அங்கே ராம-கட்டத்தில் தன் வாஸத்தை அமைத்துக் கொண்டார். ஒருநாள் ப்ரதக்ஷிணம் பண்ணப் புறப்பட்டார். வழியில் அவருக்கு ஸ்ரீ ராம தர்சனம் ஆயிற்று. மிகவும் அழகான இரண்டு ராஜகுமாரர்கள் குதிரைமேல் அமர்ந்து கையில் தநுஸ்-பாணத்துடன் காக்ஷியளித்தார்கள். அவர்களைப் பார்த்து துளஸிதாஸர் மயங்கிப் போனார். ஆனால் அவர்களைத் தெரிந்து கொள்ளவில்லை. பின்னாலிருந்து ஹநுமான் வந்து அதெல்லா வற்றையும் சொன்னார். மிகவும் வருந்தலானார். ஹநுமான் அவரை சாந்தப்படுத்தி விடியற்காலை மீண்டும் தர்சனம் ஆகும் என்றார்.

ஸம்வத் 1607ல் மௌனி அமாவாஸ்யா புதவாரம் அவருக்கு முன் (பிள்ளை ரூபத்தில்) பகவான் ஸ்ரீராமன் ப்ரத்யக்ஷமானார். ''பாபா எங்களுக்குச் சந்தனம் கொடுங்கள்'' என்றார். ஹநுமான் யோசித்தார். இந்தத் தடவையும் இவர் ஏமாறக் கூடாது என்று எண்ணி அவர் கிளி ரூபமெடுத்துக்கொண்டு இந்த தோஹாவைச் சொன்னார்:

சித்ரகூடத் துறையிலே, ஸாதுக்க(ள்) கூட்ட(ம்) திரள
சந்தன(ம்) துளஸிதாஸறைக்க, திலக(ம்) ரகுவீர(ன்) கொள

''சித்ர கூடத்தின் கட்டத்தில் ஸாதுக்களின் கூட்டம் கூடியது. துளஸிதாஸர் சந்தனம் அரைக்க ரகுவீரன் திலகம் வைத்தார்.'' அந்த அழகைக் கண் இமைக்காமல் பார்த்துத் துளஸிதாஸர் மெய் மறந்து நின்றார். பகவான் தன் கையாலேயே சந்தனம் எடுத்து தனக்கு இட்டுக்கொண்டு துளஸிக்கும் இட்டார். உடனே அந்தர்த்தானமானார்.

ஸம்; 1628ல் ஹநுமானின் ஆக்ஞையால் அயோத்யாவுக்குப் போனார். அப்போது ப்ரயாகையில் மாக-மேளா. அங்கே சில நாள் தங்கினார்: பர்வாவின் 6 நாளுக்குப்பிறகு ஒரு ஆலமரத்து அடியில் அவருக்கு பரத்வாஜர், யாக்ஞவல்க்யர்களின் தர்சனம் ஆயிற்று. அங்கே அப்போது ஸூகர க்ஷேத்ரத்தில் அவர் தன் குருவிடம் கேட்ட அதே கதை நடந்துகொண்டிருந்தது. அங்கிருந்து காசியை வந்தடைந்தார். அங்கே ப்ரஹ்லாத கட்டத்தில் ஒரு ப்ராஹ்மணரின் வீட்டில் தங்கினார். அங்கே அவருக்கு அஹத்தில் கவித்வ சக்தி துளிர்த்தது. ஸம்ஸ்க்ருதத்தில் செய்யுள் இயற்றலானார். ஆனால் மத்யான்னத்தில் எழுதிய எல்லா கவிதையும் ராத்ரி தொலைந்து போய்விட்டது. இப்படியே ஒவ்வொரு நாளும் ஆயிற்று. 8-ம் நாள் அவருக்குக் கனவு—பகவான் சங்கரன் அவருக்குக் கட்டளையிட்டார்—நீ உன் பாஷையில் காவ்யம் இயற்று—என்றார். துளஸிதாஸரின் நித்திரை கலைந்தது எழுந்து உட்கார்ந்தார். உடனே பகவான் சிவனும் பார்வதியும் ப்ரத்யக்ஷமானார்கள். துளஸிதாஸர் ஸாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணினார். சிவன் ''நீ அயோத்யாவுக்குப் போய் வாஸம் பண்ணு. ஹிந்தியில் காவ்யம் இயற்று. என் ஆசீர்வாதத்தால் உன் கவிதை ஸாமவேதம் போல பலன் தருவதாகும்'' என்று சொல்லி அந்தர்த்தானமானார்கள். துளஸிதாஸர் அந்த ஆக்ஞையை சிரஸில் ஏற்று அயோத்யா போய்ச் சேர்ந்தார்.

ஸம் 1631 ஆரம்பித்தது. அந்த வர்ஷம் ராமநவமியும் த்ரேதாயுகத்தில் ராமன் ஜநித்த அதே யோகம் அமைந்திருக்கக் கூடும். அன்று ப்ராத: காலத்தில் ஸ்ரீ துளஸிதாஸர் ஸ்ரீ ராம சரித மானஸ் இயற்ற ஆரம்பித்தார். 2 வர்ஷம் 7 மாதம் 26 நாளில் க்ரந்தம் பூர்த்தி ஆயிற்று. ஸம் 1633 மார்கசீர்ஷ ஸுக்ல பக்ஷத்தில் ராம விவாஹ தினத்தில் 7 காண்டமும் பூர்த்தியாயின.

அதன் பிறகு பகவானின் ஆக்ஞையால் காசி போய்ச் சேர்ந்தார். அங்கே பகவான் விச்வநாதருக்கும் மாதா அந்நபூர்ணாவுக்கும் ஸ்ரீ ராம சரிதமானஸ் படித்துக் காட்டினார்.

ராத்ரி, புஸ்தகம் கோயிலில் வைக்கப்பட்டது. காலையில் கதவு திறக்கப்பட்டதும் (அதில்) புஸ்தகத்தின்மேல் எழுதப்பட்டு இருந்தது தெரிந்தது— ''ஸத்யம் சிவம் ஸுந்தரம்'' என்றும், அதன் கீழே பகவான் சங்கரனின் கையொப்பமும் இருந்தது. அப்போது அங்கே வந்திருந்தவர்கள் ''ஸத்யம் சிவம் ஸுந்தரம்'' என்ற வாக்கைக் காதால் கேட்டார்கள்.

பண்டிதர்கள் இதைப்பற்றிக் கேட்டதும் அவர்களுக்கு பொறாமை உண்டாயிற்று. கக்ஷி கட்டிக்கொண்டு துளஸிதாஸரை நிந்திக்கலாயினர். அந்தப் புஸ்தகத்தையும் நஷ்டமாக்க முயன்றார்கள். புஸ்தகத்தைத் திருடிக்கொண்டுவர 2 திருடர்களை அனுப்பினார்கள். திருடர்கள் போனார்கள்— துளஸிதாஸரின் குடிசையைச்சுற்றி இரண்டு வீரர்கள் தநுஸ்— பாணம் ஏந்தி பாரா இருந்தார்கள். அவர்கள் மிக அழகாக இருந்தார்கள். ஒருவர் ச்யாமவண்ணம், மற்றவர் வெண்ணிற மானவர். இந்த தர்சனத்தால் திருடர்களின் புத்தி சுத்த மாயிற்று. திருடும் எண்ணத்தை அந்தக்கணமே விட்டு பஜனை செய்யலானார்கள். தன்னால் பகவானுக்குக் கஷ்டம் நேர்த்ததைத் தெரிந்துகொண்ட துளஸிதாஸர் எல்லா ஸாமான்களையும் நாசமாக்கினார். புஸ்தகத்தைத் தன் மித்ரன் டோடர்மல் இடம் பத்திரமாக வைத்தார், பின்னர் இரண்டாவது ப்ரதி எழுதினார். அதன் ஆதாரப்படி இன்னம் பல ப்ரதிகள் தயாராக ஏற்பாடு ஆயிற்று.

வேறு வழி தோன்றாமல் பண்டிதர்கள் அந்தப் புஸ்தகத்தை மதுஸூதன ஸரஸ்வதியைப் பார்க்கும்படி ஏவினார்கள். அவர் அதைப் பார்த்து மிகவும் ஸந்தோஷப்பட்டார். அதைத் தெரிவித்து அதன்மேல்

''ஆனந்த கானனம் ஈதில் ஜங்கம துளஸீ மரம்
ஒளிரும் காவியக் கொத்து வண்டாய்த் திகழ ராமனே''

இதன்மேலும் பண்டிதர்களுக்கு ஸந்தோஷம் உண்டாகவில்லை. புஸ்தகப் பரீக்ஷைக்கு இன்னமோர் உபாயம் பண்ணினார்கள். பகவான் விஸ்வநாதரின் முன் புஸ்தகங்களை அடுக்கினார்கள்! எல்லாவற்றிற்கும் மேலே வேதம் — அதனடியில் சாஸ்த்ரம், அதனடியில் புராணம், எல்லாவற்றிற்குமடியில் ராம சரித மானஸ் வைக்கப்பட்டது. கோயிலை மூடினார்கள். ப்ராத: காலத்தில் கோயில் திறக்கப்பட்டபோது — ராம சரித மானஸ் வேதங்களுக்குமேல் (வைக்கப்பட்டு)இருந்தது! எல்லாரும் பார்த்தார்கள். பண்டிதர்களுக்கு மிகவும் வெட்கமாயிற்று. துளஸிதாஸரிடம் மன்னிக்கும்படி வேண்டினார்கள். பக்தியுடன் அவருடைய சரணோதகத்தை எடுத்துக்கொண்டார்கள்.

துளஸிதாஸர் இனி அஸீ-கட்டத்தில் வஸிக்கலானார். ஒருநாள் ராத்ரியில் கலியுகம் வடிவம் எடுத்துக்கொண்டு அவரிடம் வந்தது. அவரைப் பயமுறுத்தித் தொல்லை கொடுக்கலாயிற்று. கோஸ்வாமியோ ஹநுமானை த்யாநம் பண்ணினார். அவரை வேண்டுகோள் [விநய பதம்] இயற்றும்படி ஹநுமான் பணித்தார். விநய பத்ரிகா எழுதினார். பகவானின் சரணங்களில் ஸமர்ப்பித்தார். ஸ்ரீராமன் அதன்மேல் தன் கையொப்பம் பதித்தார். துளஸிதாஸரின் பயத்தைப் போக்கினார்.

ஸம். 1680ல் ச்ராவண க்ருஷ்ண த்ருதீயா சனிக்கிழமையன்று அஸீ கட்டத்தில் கோஸ்வாமி ராம-ராம என்று உச்சரித்துக் கொண்டே தன் சரீரத்தை நீத்தார். 127 வயஸ்.

பொருளடக்கம்

தேவர்கள் ஸ்துதி

தான் கேட்டவரை, தன்
புத்திக்குப்பட்டவரை
சொல்ல ப்ரதிக்ஞை

வேதத்தில் கிடைப்பதும் முநி
கணங்கள் த்யானம்
பண்ணத்தக்கதும், ஆன
சரணமாகிய ராமனிடம்
ப்ரஹ்ம புத்தி உண்டாகா
விடில் சிவனுக்கு அ-ப்ரிய
மானது. இத்தகைய புத்தி
யுள்ளவர்களை நிந்திப்பது.
லாபம் கெடுவதைப் பாரா
தவர்பற்றி வேதத்துக்
கெதிரான வாக்கு.

நிர்குண, ஸகுண விவேகம்

இல்லாதவர் கல்பனை செய்த
வசனம்

மாயாவால் மூடரான புருஷர்
களின் பேச்சு கேட்கத்தக்க
தல்ல.

ஆராய்வு மூலம் ஸந்தேஹம்
விட உபதேசம்

ராம பஜனம் பண்ண
உபதேசம்

IV நான்காம் ப்ரார்த்தனைக்கு விளக்கம்

நிர்குண-ஸகுணங்களின் பேத
மில்லை

நிர்குணம்-ஸகுணம் ஆவது

நிர்குண-ஸகுணங்களில் ஸ்தூல

ஸூக்ஷ்ம நிலையால் உண்டான
பேதம் மாத்திரமே

ராம நாமத்தால் அக்ஞானம்
நாசம்

ராமன் ஸச்சிதானந்தன்

அதில் மோஹம்—ராத்ரியின்
லேசமும் இன்மை

இயல்பான ப்ரகாசரூபத்தில்
விக்ஞான விடியற்காலமும்
இன்மை

ஸந்தோஷம், துயரம், க்ஞாநம்
அக்ஞானம், ஜீவதர்மம்
அஸ்மிதா இவை இன்மை.

ராமன் ப்ரஹ்மம், வ்யாபகம்,
ப்ரஸித்தம், ஸ்தூல ஸூக்ஷ்மங்
களின் நாதன் — அவனுக்கு
நமஸ்காரம்

தன் அக்ஞானத்தை ராமன்
மேல் போடுதல்

விஷயம், கரணம், ஸுர,
ஜீவங்களை ப்ரகாஸப்
படுத்துபவர்

அவரே ஸத்யமானவர்.
அது விட்டு மாயாவை
ஸத்யமாக எண்ணுவது

சிப்பியில் வெள்ளி, கானல் நீர்
போல ராமனிடம் மாயா
ப்ரகாசிப்பது.

ராம க்ருபையால் ப்ரமை
அழிவது

எவரிடம் ஸர்வேந்த்ரிய
குணாபாஸம் இருக்கிறதோ
[குணங்கள் ப்ரகாசிப்பது],
எவர் ஸர்வேந்த்ரிய
விவர்ஜிதனோ [எல்லா
இந்த்ரியங்களும் இல்லா
தவரோ] அவரே தாசரதி
[தசரதன் பிள்ளை] ராமன்,
அவர் நாம-பலத்தால்
காசியில் எல்லாருக்கும்
முக்தி

தன் வசமிலாத போதும்
அவருடைய நாமாவைக்
கொண்டால் பாபம் நாசம்
பயபக்தியுடன் ஸ்மரணம்
பண்ணினுல் பவத்தைக்
கடக்க முடியும்

ராமன் பரமாத்மா

இதில் ஸந்தேஹம் படுவது
தவறு. ஸந்தேஹத்துக்கு
மனஸில் இடம்
கொடுத்தாலே க்ஞானம்,
வைராக்யம் நாசமாகும்

இரண்டாவது கேள்விக்கு
விடையுள்ளராமாயணம்-
ராமாவதார கதை
180-3-195

கொம்பொடித்து நில்லாமல் கவிதை சொல்ல எழுதிவந்த
அம்பதம் பணிந்து முதல் அருள் வேண்டி போற்றுவனே

எழுத்தறிவிலாத எளியன் நாவிலே எழுத்து கீறி
பழுத்த கவிஞனுக்கியவள் அருள் வேண்டி போற்றுவனே

கனவி லேவ துளஸி 'ராமசரித' மானஸ'ாக்கினர்
நனவி(ல்) சம்பு பவாநயின் அருள்வேண்டி போற்றுவனே

பதமு(ம்) பொருளு மாக இணை ஸீதா ராம ரிருவரின்
பதமு(ம்) மநஸிலே தரித்து அருள்வேண்டி போற்றுவனே

ராம சரித மாநஸைத் தமிழிலாக்கவே பணித்த
'ராம' குரு பதம் பணிந்(து) அருள்வேண்டி
போற்றுவனே.

ஓம் ஸ்ரீ கணேசாய நம:
ஸ்ரீ ஜானகீ வல்லபோ விஜயதே !

ஸ்ரீ ராம சரித மாநஸ்

முதல் ஸோபாநம் (படி) பால காண்டம்

மங்களாசரணம்

ச்லோகங்கள் :

வர்ணங்கள், அர்த்த சேரைகள்,
ரஸங்கள், சந்தஸுக்களும்
மங்கலங்கள் இழைப்பார்கள்,
வாழ்த்தாம் - வாணீ விநாயகர். 1

எழுத்துக்கள், அர்த்தத் தொகுதிகள், ரஸங்கள், சந்தஸ்:செய்யுள் வடிவங்களும், மங்கலங்களும் செய்வோர் - வாணீ, விநாயகர் இருவருக்கும் இது வாழ்த்தாம்.

காவ்யத்தின் முதலில், காப்புச் செய்யுள்களிலும் முதல் செய்யுளில் - முதல் எழுத்து வ(ர்); காவ்யத்தின் கடைசியில் கடைசிச் செய்யுளில் - கடைசிச் சொல் 'மாநவர்;' அதில்-கடைசி எழுத்து வ(ர்). எனவே மொழிபெயர்ப்பில் 'வர்ண' வைத்துக் கொள்ளப்பட்டது.' வ-காரம் ஜல தத்த்வம். ராம சரித மாநஸ் ப்ரேமை ஜலம் நிரம்பியுள்ளது - என்பது கருத்து.

தமிழில் சீர் போல ஸம்ஸ்க்ருத செய்யுள் இலக்கணத்தில் கணம்—குறில், நெடில் மூன்று சேர்ந்தது. 8 கணங்கள். வர்-ணா-னாம் [வர்-ணங்-கள்]—மூன்று நெடில்கள் உள்ளது. ம-கணம். இது ஸ்ரீ-யின் விஸ்தாரம்.

சாஸ்த்ர க்ருபை, ஈஸ்வர க்ருபை, குரு க்ருபை, ஆத்ம க்ருபை—இவையில்லாமல் நன்மை உண்டாகாது. சாஸ்த்ர க்ருபை வேண்டி வாணீ, விநாயகர் வந்தநம். சொல்-அர்த்தம், ரஸம், சந்தஸ்களால் காவ்யம் ஆகிறது. வாணீ - சொல், விநாயகர்-சொல் மயம். 'நீ சொல் மயம் நீ சிந்-மயம்' என வேதம் சொல்லும். எனவே இருவர் இயல்பும் ஸமம். இருவரும் மங்கலம் செய்பவர். 'மங்கல மெமக்கு செய்க விநாயகர்; மங்கல மெமக்கு செய்க ஸரஸ்வதி' என வேதம் சொல்லும். எனவே ஒரே செய்யுளில் சேர்த்து வாழ்த்து.

அர்த்தம் 7: த்ரவ்ய, குண, கர்ம, ஸாமாந்ய, விசேஷ, ஸமவாய அபாவ. ரஸங்கள் 9 : ச்ருங்கார, ஹாஸ்ய, கருணா, ரௌத்ர, வீர, பயாநக, பீபத்ஸ, அத்புத, சாந்த. பக்தர்கள் 3 ரஸங்கள் ஏற்றுக்கொள்வர் : ஸக்ய, வாத்ஸல்ய, தாஸ்ய.

செய்யுள் வடிவங்களில் இந்தக் காவ்யத்தில் 4 மட்டும் கையாள்கிறார்: சௌபாயி, ஸோரடா, தோஹா, சந்த்—இதில் 3 வகை மட்டும்—ஹரிகீதிகா, சௌபய்யா, த்ரிபங்கி.

1—5 ச்லோகங்கள் அநுஷ்டுப் வ்ருத்தம்.

பவாநீ சங்கரர் வாழ்த்தாம்
 ச்ரத்தா விச்வாஸ ரூபிகள்
ஸித்தர் தமுள் இவர் இன்றி
 காணார் வாழ்கின்ற ஈசனே. 2

பவாநீ சங்கரர் முறையே ச்ரத்தா, விச்வாஸம் உருவமாம். இவர்களில்லாமல் ஸித்தர்களும்கூட தம் உள்ளத்திலேயே வாஸம் பண்ணும் ஈச்வரனைக் காணமுடியாது. இவர்களுக்கு வாழ்த்தாம்.

ச்ரத்தா—விச்வாஸம் : பெயர்தான் வேறு; வஸ்து ஒன்றே. அதுபோல பவாநீ-சங்கரர்: பெயர்தான் வேறு; தத்த்வம் ஒன்றே. சொல்லும் பொருளும் போல இணைந்தவர். [சொல்லும் அர்த்தமுமாய்ச் சேர்ந்தோர்-என்பார் காளிதாஸன்] [எத் தேவீ பூத(ம்) யாவற்று(ம்)—ச்ரத்தா ரூபத்தி(ல்) நிற்பளோ—ஸப்த சதியில் சொல்வது] இவை இன்றியமையாதவை. அநாஹத சக்ரத்தில் இவர்கள் உளர். இந்த இரண்டு ரூபத்தில் இவர்கள் தோன்றினால் ஈச்வர தர்சனம் கிடைக்கும்.

வாழ்த்தாம் க்ஞாந மயன் நித்தன்
 குருக்கே - உரு சங்கரன் -
அடைய சந்த்ரனன்னாரை
 வந்தித்தார் எங்கு(ம்) வக்ரனே ! 3

க்ஞாந மயமான நித்யனான, சங்கர உருவமான குருவுக்கு வாழ்த்தாம். சங்கரனை அடைந்ததால் சந்த்ரன் வளைவாக [2-ம் பிறை] இருப்பினும் எங்கும் வந்திக்கப்படுகிறான்.

சந்த்ரன்போல் தனக்கும் கோணல் புத்தி இருந்ததென்றாலும், அவன் தேய்வதுபோல் தன் ஸாமர்த்யம் தேய்கினும் ஜகத்தில் தன் காவ்யம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். சங்கரனே எல்லாருக்கும் குரு.

ஸீதா ராம குணக்கூட்ட
 புண்யக் காட்டி லுறைபவர்
வாழ்த்தாம் தெளிந்த விக்ஞாநக்
 கவீச்வர கபீஸ்வரர். 4

3

ஸீதா-ராமன் இவர்களின் குணகணங்கள் ரூபமான புண்யமான காட்டில் வாழ்பவர் தூய்மையான க்ஞானச் செறிவுள்ளவர்—கவிகளில் முதலான சிறப்புள்ளவர் - வால்மீகி, கபி : வானரங்களுக்கு சிறப்புமிக்க முதலான தலைவர்—ஹநுமான், இவர்களுக்கு வாழ்த்தாம்.

அவர்[தம்] குணங்கள் ஒளிவானவை. [பின்னர் சிவன் தம் வாயால் சொல்வார்—'உமா ராம குணம் கூடம்' (ஒளிவானது) அடைதலரிது. புரியாது. காட்டுள் புக முடியாது. அங்குள்ள பொருள்கள் எளிதில் கிடைக்காது—ராம நாம, குண, புண்ய, வல்லமை எல்லாம் தெரிவது கடினம். காட்டில் வாழ்வோர், வழிகாட்டி, தேடிக் கொடுத்தால் கிடைக்கும். அப்படிச் செய்யச் சிறந்தவர் இவர்கள் இருவரும். அவர் இனிய கவிதை தந்தார். இவர் ஐச்வர்யம் தந்தார்.

ஆக்குதல், நி(லை)லயா யாக்கி,
    நீக்குதல், துன்ப(ம்) போக்குதல்,
செய்வாள் நன்மை எலாம் ஸீதா -
    பணிந்தேன் - ராம வல்லபா. 5

படைத்தல், நிலைப்படுத்தல், அழித்தல் செய்பவள், துன்பம் அகற்றுபவள், மேன்மை எல்லாம் செய்பவள் - ஸீதா, ராமனின் பேரன்புக்குரியவள்—அவளைப் பணிந்தேன்.

மேல் செய்யுளில் குணம் சொன்னார். இங்கு அந்த குணம் உடையோரைச் சொல்லி வணங்குகிறார். ஸீதா ஆதிசக்தி எனவே முத்தொழிலும் அவளது.

துன்பங்கள் :- *1)* அவித்யா—நிலையிலாததை நிலையானது என, தூயதல்லாததைத் தூயதாக, துக்கத்தை ஸுகமென, ஆத்மாவல்லாததை ஆத்மாவென எண்ணுவது. *2)* அஸ்மிதா—கண்ணையே பார்க்கும் சக்தி என எண்ணுவது. *3)* ராக—ஸுகத்தை நினைத்து அதற்குக் காரணமான - பொருள்கள்மேல் பேராசை கொள்வது *4)* த்வேஷ—துக்கத்தை நினைத்து அதை உண்டாக்கும் பொருள்கள்மேல் கோபம். *5)* அபிநிவேச—மரணம் பற்றி பயம்.

இவ்வுலகத்திய, பரலோகத்திய எல்லா நலமும் செய்பவள்.

இவள் சொன்னால்தான் பவம் கடக்க முடியும்.

எம் மாயா வசமோ இ-விச்வமுழுதும்
ப்ரஹ்மாதி தேவாஸுரர்
தாம்பில் பாம்பென யாவுமே தெளியுமோ
பொய் மெய்யினின்றும் எதோ
எப்பாதம் ஒரு கப்பலாம் பவ கடல்
தாண்டல் விழைவோர்க் கெலாம்—
வந்தித்தேன்—ஹரி ஈவி(ல்) காரண பரன்
ராமன் எனும் ஈசனே. 6

ராமனைத் தொழுகிறேன். அவரது மாயாவுக்குட்பட்டதே உலகெலாம். அதற்குட்பட்டவரே பிரஹ்மா முதலான தேவர்களும், அஸுரர்களும். அவரது உண்மையாலேதான் கயிற்றில் பாம்பு தோன்றும் மயக்கம்போல உலகமெலாம் உண்மைபோலத் தோன்றுகிறது. அவரது திருவடிகளே உலகமெனும் கடலைக் கடக்க ஒரே ஒருதவியான கப்பலாம். அவர் எல்லாக் காரணங்களுக்கும் அப்பால்ப் பட்டவர். அவர் ஈசன்.

அடி (1)ல் மாயாவின் வல்லமை—காவ்யத்தில் பல இடங்களில் விளக்குவார். உ-ம். சிவன் சொல்வார்: ''ஹரி மாயா பலமுளது பவாநீ | மோஹமடையா ரேது க்ஞாநி!'' அடி 2ல் ஹரியின் ஸத்தாவின் வல்லமை—ஸம்ஸாரம் முழுதும் அவரது ஸத்தாவால் ஸத்தாவான் ஆகிறது. ஹரியில் ஸம்ஸாரத்தின் ப்ரதீதி தோன்றுகிறது. அடி 3ல் சரண வல்லமை—மற்ற ஸாதனங்கள் கடல் நுரைபோல. கப்பல் போலத் தோன்றும். கொள்ள ஏற்றதல்ல. அடி 4ல்--ஸ்வரூபவர்ணனம்—கார்ய காரண சங்கிலி அவரிடம் போய் முடியும். அவர் ப்ரபு — மாயா, அதன் சுற்றத்துக்கு அப்பாலானவர். — சார்தூல விக்ரீடித வ்ருத்தம்.

எல்லா புராண ம(றை)ற யாகம மேற்றவையும்
ராமாயணங்களி முள்ளன, மற்றவையும்
தன்னின்பமாக துளஸீ ரகுநாத காதை
பாஷையிலே அழகுமிக்க இயற்றுவானே.

பல வேறு புராணங்கள், வேதம். தொழுமுறை இவை ஒப்புக்கொள்வது; இன்னம் பலவிடங்களிலும் சொல்லியுள்ளவை—எல்லாவற்றின் [ஸாரமாக] ரகுநாத காதை துளஸி ப்ராக்ருத [ஹிந்தி] மொழியில் இயற்றுவான்.

இது இவரது ராமாயண 'ஆரதி'யாகக் கருதலாம். மற்றவை--எல்லா நூல்களும்—காவ்ய, நாடகங்களின் ரஸம், மஹாத்மாக்களின் அநுபவம். இதன் ப்ரயோஜனம்—தனக்கு இன்பம் தரவே. — வஸந்த திலகா வ்ருத்தம்.

*ஸுர வந்தனம்

நி(னை)ன நி(னை)னய கைகூடும்,
கண நாயகா களிறு முகம்
நின தநுக்ரஹம் கொடும்,
புத்தி ராசி சுபகுண அகம். 1

எவரை ஸ்மரணம் பண்ணுவதால் எல்லா வேண்டுகோளும் நிறைவேறுமோ, எவருடைய முகம் யானையின் முகம்போல் அழகாய் இருக்கிறதோ, எவர் எல்லா நல்ல குணங்களுக்கும் களஞ்சியமோ, மஹா புத்திமானோ அத்தகைய கணேச, தாங்கள் என்மேல் க்ருபை பண்ணுங்கள்.

ஊ(மை)ம ஆவ(ன்) நாவலன்,
மந்து மலை முடமேறுவன்
அருள் புரிக தயாலன்,
கலிமலமெல்லாம் தீர்ப்பவன். 2

எவருடைய க்ருபையால் ஊமையும் பேச்சுத்திறமை பெறுவனோ, முடமும்கூட ஏறவொண்ணாத கஷ்டமான பெரிய மலையின் உச்சியை அடைந்துவிட முடியுமோ, அவர், கலிகாலத்தின் எல்லா தோஷங்களையும் போக்குபவர், தயையின் கடலான தாங்கள், எம்மேல் மகிழ்ச்சியடைய வேண்டும்.

நீல தாமரை ச்யாம,
கண்விரிந்த செந்தாமரை
செய்க (எ)னுளம் (அ)வ(ன்) தாம,
ஸதா பால் கடல் நித்திரை. 3

எவருடைய சரீரம் நீலத்தாமரைபோல அழகோ, எவருடைய கண்கள் அப்போது மலர்ந்த செந்தாமரைக்கு ஸமமாக அழகோ, எவர் எப்போதும் பால்கடலிலே படுத்துக் கொண்டிருக்கிறாரோ, அந்த விஷ்ணு பகவான் என் ஹ்ருதய கோயிலில் வாஸம் பண்ணுவாராக.

தேஹம் குந்த(ம்) - மதி - போல்,
உமாரமண இல்ல மாமருள்
அருளுவார் எளியோர் மேல்,
மதன(னை)ன அழித்தவா அருள் ! 4

எவருடைய சரீரம் குந்த புஷ்பம் போலும், சரத்கால சந்த்ரன் போலும் உள்ளதோ, எவர் உமாதேவியின் கணவரோ, காமதேவனை எரித்தாரோ, எளியோர்க்கு இரங்குவது எவருடைய ஸ்வபாவமோ, கருணையின் வீடான அந்த சிவன் என் மேல் க்ருபை பண்ணுவாராக.

நம: குருபத தாமரை,
நரரூப அரனருட் கடல்
மாமோஹ இருள் திரை,
புரிதி கதிரதற்கவர் சொல். 5

எவர் மநித ரூபத்தில் க்ருபையின் கடலோ, கண்கூடாக பகவானேயோ, (-சாஸ்த்ரங்களில் குரு ஈச்வரனுக்கு ஸமம் என்பர்-) எவருடைய வாக்கு, (-உபதேசம்-) அக்ஞான ரூபமான மஹா இருளை நாசம் பண்ணும் ஸூர்யகிரணக் கற்றையோ அந்த குருவின் சரண கமலங்களில் நமஸ்காரம் பண்ணுகிறேன்.

—O—

*ப்ராக்ருத (-ஹிந்தி-)மொழி - ஸோரடா எனும் மாத்ரா சந்தம்

பாலகாண்டம்
முதல் *ஸோபானம்

குரு-பத-பத்ம-தூளிக்கு நமஸ்காரம். அது நல்ல ருசியானது; நல்ல வாஸனையுள்ளது; *அநுராகம் உள்ளது; அம்ருதம் மயமான வேரின் பொடி; அழகானது; இந்த *ஸம்ஸாரத்தின் நோய்களின் பரிவாரங்களை அழித்துவிடும். புண்யரூபமான சம்புவின் தேஹத்தில் விபூதி, அழகானது; மங்களமானது. ஆனந்தம் தருவது, ஜனங்களின் மன-ரூபமான கண்ணாடியில் மலத்தைப்போக்குவது; திலகமாக அணிந்து கொண்டால் குண-கணங்களை வசமாக்கக் கூடியது. ஸ்ரீ குரு-பத-நக-மணி-கணங்களின் ஜ்யோதியை ஸ்மரணை பண்ணுவதால் ஹ்ருதயத்தில் திவ்ய த்ருஷ்டி உண்டாகிறது. மிகப்பெரிய பாக்யத்தால் அது எவருடைய ஹ்ருதயத்தில் உண்டாகிறதோ அவருடைய மோஹ இருளைப் போக்கிவிடும். ஹ்ருதயத்தின் நிர்மலமான கண் திறக்கும். ஸம்ஸார ரூபமான ராத்ரியின் துக்கம் அழிகிறது. ராமசரித்ரம் ரூபமான மணி-மாணிக்கம், புதைந்தும் தெரிந்தும் எங்கே எந்த சுரங்கங்களில் இருக்கின்றதோ அதைக் காட்டும். ஸாதகர்களும், நல்ல க்ஞாநிகளும் உயர்ந்த (தான) அஞ்ஜனம் தீட்டிக்கொண்டு மலை, வனம், பூமிகளில் அரிய சுரங்கங்களைப் பார்க்கிறார்களே (அதுபோல் தெரியும்). குரு-பத-தூளி ம்ருதுவான, அழகான அஞ்ஜனம்; கண்களுக்கு அம்ருதம்; பார்வையின் தோஷங்களைப் போக்கிவிடும். அதைக்கொண்டே விவேகம் ரூபமான கண்களை சுத்தமாக்கி, ஸம்ஸாரத்தை துண்டித்துவிட வல்ல ராம சரிதத்தின் வர்ணனை பண்ணுகிறேன்.

முதலில் ப்ராஹ்மணர் சரணங்களுக்கு வந்தனம். அது மோஹத்தாலுண்டான எல்லா ஸந்தேகங்களையும் போக்கும். *ஸுஜனஸமாஜம் எல்லா குணங்களும் உள்ள இடம். நான் ப்ரேமையுடன் அழகான வாக்கில் அதற்கு நமஸ்காரம் பண்ணுகிறேன். ஸாது ஜனங்களின் சரிதம் பருத்தியின் சரிதம் போன்றது. அதன் பழத்தில் ரஸம் இருக்காது; ஆனால், மாசிலாதது; குண மயமானது; அவர்கள் தாம் துக்கப்படவேண்டியிருந்தாலும் ஏற்றுப்பொறுத்துக்கொண்டு மற்றவர்களின் தோஷங்களை மறைத்துவிடுவார்கள்; வந்தனை செய்யத் தக்கவர்கள்; அவர்களால் உலகத்துக்கு புகழ் உண்டாகிறது.

---

* படி * அன்பு * உலகம் * நல்லோர்

ஸாதுக்களின் ஸமாஜம் அஹ இன்பமும், புற இன்பமும் தரும். அது உலகுத்தில் உலவிவரும் 'தீர்த்த ராஜா' (ப்ரயாகை), அதில் ராமபக்திதான் கங்காவின் படுகை; ப்ரஹ்மவிசார ப்ரசாரம்தான் ஸரஸ்வதி நதி. * பண்ணவேண்டிய கர்மாக்கள், தவிர்க்க வேண்டிய கர்மாக்கள் பற்றிய கதையே கலிமலம் போக்கக்கூடியவை - யமுனா ரூபமாக வர்ணிக்கப்படுகிறது. ஹரி ஹர கதைகள் *த்ரிவேணியென விளங்கும். அதைக் கேட்டலுமே அஹமகிழ்ச்சியும் புற இன்பமும் உண்டாக்குவது. * ஸ்வதர் மத்தில் அசையாத விச்வாஸம் தான் '' அக்ஷய வடம் '' - ஆல மரம். நல்ல கர்மாக்கள் தீர்த்த ராஜாவின் ஸமாஜம். இது எல்லா நாட்களிலும், எல்லா தேசங்களிலும், எல்லாருக்கும் ஸுலபமாகக் கிடைக்கும். பயபக்தியுடன் ஸேவித்தால் துக்கங் களை அழிக்கும். இந்தத் தீர்த்த ராஜா வாயால் சொல்லி வர்ணிக்க இயலாதது; இவ்வுலகத்தியதே அல்ல. உடனுக்குடன் பலன்தரும். அதன் பெருமை கண்கூடானது. மனமகிழ்ந்து கேட்டு உணர்ந்து தெரிந்து கொள்பவர்களே இதில் ஆசையுடன் ஸ்நானம் பண்ணுபவர்கள்; அவர்களுக்கு இந்த சரீரத்திலேயே * நாலுவிதப் பலன்களும் உண்டாகின்றன. ஸ்நான பலன் உடனுக்குடனே கண்கூடாகத் தெரியும் காகம் * குயில் ஆயிற்று; * கொக்கு ஹம்ஸம் ஆயிற்று. இதைக்கேட்டு யாரும் ஆச்சர்யப் படவேண்டாம். ஸத் ஸங்கத்தின் மஹிமை ஒளிமறைவான தல்ல. * வால்மீகி, * நாரதர், * அகஸ்த்யர் அவரவர் அநு பவத்தைத் தத்தம் வாயாலேயே சொல்லியிருக்கிறுர்கள். நீரில் வாழ்பவை, நிலத்தில் வாழ்பவை, ஆகாயத்தில் செல்பவை எல்லா விதம் விதமான உயிரினங்களும், உயிரில்லாதவைகளும் எத்தனை உண்டோ, அவைகளில் புத்தி, கீர்த்தி, கதி, ஐச்வர்யம் நன்மை எவ்வெப்போது, என்னென்ன உபாயத்தினுல், எங்கெங்கே யார் யார் அடைந்தார்களோ அவை ஸத் ஸங்கத் தின் ப்ரபாவத்தாலேயே என்று தெரிந்துகொள். லோகத்திலும் வேதத்திலும் இன்னொரு உபாயமே கிடையாது. ஸத் ஸங்கம் இல்லாமல் விவேகம் உண்டாகாது; ஸத் ஸங்கமோ ஹரி - க்ருபை இல்லாமல் கிடைக்காது. ஸத் ஸங்கம், அஹ இன்பம் புற இன்பங்களுக்கு வேர்; அதே பல ஸித்தியும்; ஸாதனங்கள் எல்லாம் புஷ்பங்கள்.

கெட்டவனும் ஸத் ஸங்கத்தைச் சேர்ந்தால் திருந்திவிடு கிறுன். பாரஸமணி பட்டவுடன் இரும்பின் துகளும் நல்ல உலோகமாகி விடுகிறது. விதி வசத்தால் ஸாது ஒருவர் கெட்ட

---

* கர்ம காண்டம் * அவரவர் கடமை * தர்ம, அர்த்த, காம, மோக்ஷம் உத்தரகாண்டத்தில் புசுண்டி கதை.

ஸங்கத்தில் சிக்கிவிட்டாலும் அவர் ஸர்ப்பத்தின் மணிபோல தன் குணங்களின் வழியே தான் நடப்பார்.

விதி, ஹரி, ஹரன், *பண்டிதன் இவர்கள் வாக்குமே ஸாதுக்களின் மஹிமையைச் சொல்ல தயங்கும். என்றால் அதை எப்படி சொல்ல முடியும்! கீரை விற்பவனுக்கு மணிகளின் தராதரம் எப்படித் தெரியும்! ஸாதுக்களுக்கு வந்தனம் செய்கிறேன் — அவர்களுடைய சித்தம் ஸம நிலையிலிருக்கும். அவர்களுக்கு இனியவருமில்லை, இன்னாதாருமில்லை. அஞ்ஜலியில் உள்ள புஷ்பங்கள் இரண்டு கைகளையும் ஸமமாக வாஸனைப்படுத்தும்; அது போன்றவர்கள். எளிய சித்தமுள்ளவர்களே, ஜகத்துக்கே இனிது செய்பவர்களே, நல்ல பாவமும் ஸ்நேகமும் (இருப்பதை) தெரிந்துகொண்டு, சிறியவனான என் வேண்டுகோளைக் கேட்டு க்ருபைபண்ணி ராம சரணங்களில் ஆசை எனக்கருளுங்கள்.

கொடியவர் கணங்களுக்கும் ஸத்யமான பாவத்துடன் வந்தனம் பண்ணுகிறேன். காரணமில்லாமலே அநுகூலமாய் இருப்பதற்கும் ப்ரதிகூலமே பண்ணுபவர்கள். ஏனையோரின் இன்பத்துக்குக் கேடு ஏற்படுத்துவதே தம் லாபமாக எண்ணுபவர்கள். ஏனையோர் வீழ்ந்தால் அதில் ஆனந்தப்படுவர்; வாழ்ந்தால் வருத்தப்படுவார்கள்.

வஜ்ரம் போலக் கொடிய வார்த்தைகளே அவர்களுக்குப் ப்ரியமாயிருக்கும்; ஏனையோரின் தோஷங்களை ஆயிரம் கண்களால் பார்ப்பார்கள்.

ஹரிஹர-புகழ் ரூபமான பூர்ண சந்த்ரனுக்கு ராஹு போன்றவர்; ஏனையோரின் கார்யங்களைக் கெடுக்க *ஸஹஸ்ரபாஹு போல வீரர். ஏனையோரின் நன்மை ரூபமான * நெய்யில் இவர்கள் மனம் ஈ போன்றது. உஷ்ணத்தில் அக்நி போல, கோபத்தில் மஹிஷாஸுரன் போல, பாவம்-கெட்ட குணம் ரூபமான தனத்தில் குபேரன் போல -- அவர்கள் தோன்றியதே எல்லோருக்கும் கேதுக்ரஹத்துக்கு ஸமானம் — அவர்கள் கும்பகர்ணன் போல தூங்கினாலே நல்லது! ஏனையவருக்கு நஷ்டமுண்டாக்க தம் சரீரத்தையே கொடுக்கும் அளவுக்குத் துறக்கத் தயாராக இருப்பார்கள் - பனிக்கட்டி மழை வயலை அழித்துத் தானும் உருகி அழியும் - அதுபோல்தான் (ஆதி)சேஷன் போல ஆயிரம் வாயால் மற்றவர்களின் தோஷங்களை ரோஷத்துடன் வர்ணிப்பார்கள் — அத்தகைய கொடியவர்களுக்கு வந்தனம் பண்ணுகிறேன். *ப்ருது ராஜாவுக்கு நிகராக அவர்களைக் கருதி அவர்களுக்கு நமஸ்காரம்

* வேதம் சொல்வதெல்லாம் நன்கறிந்தவன்.

பண்ணுகிறேன். அவர்கள் பத்தாயிரம் காதுகளால் போல மற்ற வர்களின் தோஷத்தை உன்னிப்பாகக் கேட்பார்கள். இந்த்ர னுக்கு ஸமமாகவும் அவர்களை எண்ணுகிறேன் - நமஸ்காரம் பண் ணுகிறேன் - இந்த்ரனுக்கு தேவஸேனை போல இவர்களுக்கு போதை தரும் குடிகள். வஜ்ரம் போலக் கடுமையான வார்த்தை களே இவர்களுக்குப் பிடிக்கிறது. மற்றவர்களின் தோஷங்களை ஆயிரம் கண்களால் பார்ப்பார்கள். கெட்டவர்களின் போக்கு இது-மற்றவர் யாராயிருந்தாலும் சரி-ஸந்யாஸியோ, சத்ருவோ, மித்ரனோ - அவர் நன்மையைப் பற்றிக் கேட்ட உடனே இவர்க ளுக்குப் பற்றி எரியும்! (ஆகையால்) கால்கள் சேர்த்துக் கைகளைக் கூப்பி ஸேவகநின் ப்ரீதியுடன் வேண்டிக் கொள்கிறேன். நான் என் தரப்பில் வேண்டிக் கொண்டு விட்டேன். அவர்கள் தம் தரப்பில் * தப்புப் பண்ண மாட்டார்கள். மிகவும் அநுராகத்து டன் வளர்த்தாலும் காகம் புலால் உண்ணுமலிருக்குமா என்ன? (இப்போது நான்) ஸஜ்ஜனங்கள் (நல்லோர்), துர்ஜனங்கள் (தீயோர்) இரு சாரார் சரணங்களுக்கும் வந்தனம் பண்ணு கிறேன். இருவருமே துக்கம் தருபவர்தான் - ஒரே ஒரு வித்யா ஸம் - ஒருவர் பிரிந்து போவதால் உயிரையே கொண்டுபோகிறுர்; மற்றவர் ஸந்தித்ததாலேயே கொடிய துக்கம் உண்டாக்குகிறுர். இரு சாராரும் உலகத்தில் சேர்ந்தேதான் வளர்கிறுர்கள்; ஆனுல் தாமரையும் அட்டையும் போல இவர்களின் குணங்கள் வெவ்வே ருனவை. ஸாது அம்ருதம் போன்றவர்; அஸாது கள் போன்ற வன். இரு வகையினரையும் உண்டாக்குவது ஜகத் எனும் ஆழம் காணமுடியாத ஸமுத்ரம்தான். நல்லவரும் தீயவரும் அவரவர் செயல்களால் புகழ்ச்சியும் இகழ்ச்சியும் ஐச்வர்யமாக அடைகி ருர்கள். அம்ருதம், சந்த்ரன், (கங்கை) தேவநதி, ஸாதுக்கள் - நல்லவகை. விஷம், நெருப்பு, *கலி-மலநதி, வேடன் - தீயவகை. நல்ல குணமும் கெட்ட குணமும் (எதெது என்று) எல்லாருக்கும் தெரியும்; ஆனுல் யாருக்கு எது பிடிக்கிறதோ அவருக்கு அதுதான் நல்லது என்று தோன்றும் - நல்லவர்கள் நல்ல கார்யங்களால் புகழ் பெறுகிறுர்கள்; தீயவர் இழிவான கார்யங்களால் இகழ்ச்சி அடைகிறுர்கள். அம்ருதம் அமரத்துவத்தால் புகழ் பெற்றது; விஷம் மரணம் தருவதாகப் புகழ் பெற்றது. தீயவர்களின் பாவம்- கெட்ட குணங்கள் பற்றிய கதை, நல்லவர்களின் (நல்ல) குணங் கள் பற்றிய கதை இரண்டுமே ஆழம் காணமுடியாத, எல்லையில் லாத ஸமுத்ரம். ஆகையால் நான் ஏதோ கொஞ்சம் குணங்களை யும், தோஷங்களையும் வர்ணித்தேன் - ஏனென்றுல் தெரிந்து கொள்ளாமல் எதையும் எடுத்துக்கொள்ளவோ, விட்டுவிடவோ முடியாது.

---

* கெட்டது கர்மநாசா

விதி தான் நல்லது கெட்டது எல்லாவற்றையுமே உண்டாக்கினர். ஆனல் வேதங்கள் அவைகளின் குண - தோஷங்களை பகுத்துத் தொகுத்துக் காட்டி தனித்தனியாகப் பிரித்தன. விதியின் ப்ரபஞ்சத்தில் நல்ல குணமும் கெட்ட குணமும் பின்னிக் கிடக்கின்றன என்று வேதம் புராணம் இதிஹாஸம் எல்லாம் சொல்கின்றன. துக்கம் - ஸுகம், பாபம் - புண்யம், இரவு - பகல் அஸாது - ஸாது, குஜாதி - ஸுஜாதி (கெட்ட ஜாதி-நல்ல ஜாதி) தானவர் - தேவர், கீழ் - மேல், விஷம் - அம்ருதம், சாவு - நல்வாழ்வு, மாயா - ப்ரஹ்மம், ஜீவன் - ஜகதீசன், தரித்ரம்-லக்ஷ்மி, ஏழை - ராஜா, மகதம் - காசி, கர்மநாசா - தேவநதி (கங்கா), மார்வாட் - மாளவம், பசுவைத் தின்பவன் - ப்ராஹ்மணன், நரகம் - ஸ்வர்க்கம், ப்ரீதி - வைராக்யம், (இவை பின்னிக் கிடக்கின்றன); ஆனல் வேதமும் சாஸ்த்ரமும் இவைகளின் குணங்களையும் தோஷங்களையும் பிரித்துச் சொல்லியிருக்கின்றன. ஜட(மும்) - சேதன(மயமு)மாகவும், குண(மும்) - தோஷ(மு)மாகவும், உலகத்தை விதி பண்ணிவைத்தார். ஹம்ஸ ரூபமான ஸாதுக்கள் பால் ரூபமான குணத்தை எடுத்துக் கொள்கிருர்கள்; ஜல ரூபமான துர்குணத்தை ஒதுக்கி விடுகிருர்கள். இந்த மாதிரி விவேகம் *கர்த்தா கொடுத்தபோது மனம் தோஷங்களை ஒதுக்கி குணங்களில் ஒட்டிக் கொள்கிறது. காலம், ஸ்வபாவம், கர்மங்களின் பலத்தால் நல்லதும் ப்ரக்ருதி (ஸ்வபாவ) வசப்பட்டு நன்மையில் இணைந்துவிடுகிறது தேஹத்தில் படிந்த தூளியை (துடைத்து) சுத்தமாக்கி விடுவது போல ஹரி திருத்தி விடுகிருர். துக்க தோஷங்களை அழித்துவிடுகிருர். நிர்மலமான புகழ் தருகிருர். அது போலவே கெட்டவனும் நல்ல ஸங்கத்தை அடைந்து நன்மை பண்ணிக் கொண்டிருப்பான்; ஆனல் அவனுடைய கெட்ட ஸ்வபாவம் போகாது; ஏனெனில் அது அழிவதில்லை. நல்ல வேஷம் அமைந்திருப்பதைப் பார்த்து, வேஷத்தின் பெருமையால் உலகத்தை ஏமாற்றுகிறவர்களுக்கும் பூஜை (பண்ணுகிருர்கள்) நடக்கிறது. ஆனல் கடைசியில் இது வெளிப்பட்டு விடுகிறது. அந்த வேஷத்தை அப்படியே நிர்வாஹம் பண்ண முடிவதில்லை. * காலநேமி, * ராவணன், *ராஹு இவர்களுக்கு ஏற்பட்ட மாதிரிதான் ஆகும். இழிவான கோலத்திலிருந்தாலும் ஸாதுவுக்கு பெருமை ஏற்படுகிறது - ஜாம்பவானுக்கும் ஹநுமானுக்கும் உலகத்தில் பெருமை ஏற்பட்டது! அதுபோலத்தான். கெட்ட ஸங்கத்தால் தீங்கும், நல்ல ஸங்கத்தால் நன்மையும் உண்டாகிறது. இது லோகத்திலும் வேதத்திலும் தெளிவாகத் தெரிகிறது. எல்லோருக்கும் தெரியும். காற்றுடன் சேர்ந்து புழுதி ஆகாயத்தில் எழும்புகிறது. மிகவும் கீழே உள்ள தண்ணீருடன் சேர்ந்து சேறு ஆகிறது. ஸாதுவின் வீட்டில் கிளியும் மைனவும்

ராம ஸ்மரணம் பண்ணுகின்றன. கெட்டவர் வீட்டில் வரிசை யாக வசை பொழிகின்றன. கெட்ட ஸங்கத்தால் புகை கரி ஆகிறது; ஆனுல் அதே எழுத மை ஆகிறது. இதனுல் புராணம் எழுதப்படுகிறது. அதே புகை ஜலம், வாயு, அக்நியுடன் சேர்ந்தால் லோகத்துக்கு ஜீவன் அளிக்கும் மேகம் ஆகிறது. க்ரஹம், மருந்து, ஜலம், காற்று, வஸ்த்ரம் எல்லாம் தவருன சேர்க்கையால் கெட்டதாகவும், நல்ல சேர்க்கையால் நல்லதாக வும், ஆகிறது. இது பார்ப்பவர்களுக்குத்தான் புரியும். மாதத்தில் இரண்டு பக்ஷங்கள் - ப்ரகாசமும் இருளும் ஸமமாக வேதான் இருக்கும். விதிதான் பெயரில் வித்யாஸம் பண்ணி வைத்தார். ஒன்றில் சந்த்ரன் தேய்கிறது. மற்றதில் வளர்கிறது. இது தெரிந்து லோகத்தில் ஒன்றுக்குப் புகழும் மற்றதற்கு இகழ்ச்சியும் கொடுத்துவிட்டார். ஜகத்தில் எத்தனை ஜடமும் சேதனமும் இருக்கின்றனவோ எல்லாம் ராம மயம் என்று உணர்ந்து நான் அவர்களின் சரண கமலங்களில் எப்போதும் கை கூப்பி வந்தனம் பண்ணுகிறேன். தேவர், மனிதர், தைத்யர் நாகர், ப்ரேதர், பித்ருக்கள், கந்தர்வர், கிந்நரர், நிசாசரர், எல்லாருக்கும் வந்தனம் பண்ணுகிறேன். எல்லாரும் க்ருபை பண்ணுங்கள். *நாலு வகைகள், நாலு லக்ஷம் யோனிகளின் ஜீவன்கள், ஜலம், நிலம், ஆகாயத்தில் வஸிக்கின்றன. ஜகத் முழுவதையும் ஸீதா-ராம மயமாக நினைத்துக்கொண்டு இரண்டு கைகளையும் கூப்பிக்கொண்டு நமஸ்காரம் பண்ணுகிறேன். என்னையும் கிருபையின் இல்லம் (ஸ்ரீராம) அவர்களின் ஊழியன் எனக் கருதி எல்லோரும் சேர்ந்து கபடமில்லாமல் எனக்கு தயவு பண்ணுங்கள் எனக்கு என் புத்தி பலத்தில் நம்பிக்கை இல்லை; ஆகையால் எல்லாரிடமும் வேண்டிக் கொள்கிறேன்.

வேண்டுகோள்

நான் ரகுபதி குணப்புகழ்க் கதையை இயற்ற ஆசைப் படுகிறேன். ஆனுல் என் புத்தி சிறியது. அந்தச் சரிதமோ ஆழம் காண முடியாதது. ஒரு உபாயத்தின் அங்கமும் எனக்குப் புலப்படவில்லை. என் மனம் - புத்தி கங்காளம்! மனோ ரதமோ ராஜா போலிருக்கிறது. என் புத்தி மிக இழிவானது; ருசியோ மிக உயர்வானது; மிக நல்லது. அம்ருதம் வேண்டும், ஆனுல் உலகில் மோரும் கூட கிட்ட வழியில்லை, ஆகையால் ஸாது ஜனங்கள் என் துணிச்சலை மன்னித்து விடுவார்கள்; சிறுவனின் வார்த்தைகளை மனம் ஒன்றிக் கேட்டார்கள். குழந்தை மழலை

இயற்ற நான்கு அங்கங்கள்:- சாஸ்த்ரா க்ஞானம், வ்யவஹார க்ஞானம், நல்ல ஸம்ஸ்காரம், நல்ல கவிகளிடம் சிக்ஷை.

பேசினுல் தாய்-தந்தைகள் அதை ஸந்தோஷமாகக் கேட்பார்கள். கொடியவர்கள், கெட்டவர்கள், தீய எண்ணங்களுள்ளவர்கள் பிறரை தூஷிப்பதே தம் *பூஷணமாகக் கொண்டவர்கள் எல்லாம் சிரிப்பார்கள். ரஸம் ததும்புவதாலுைம், ரஸமே இல்லாததாலுைம், தன் கவிதையை யார்தான் நல்லது என்று நினைக்கமாட்டார்? மற்றவர் கவிதையைக் கேட்டு ஸந்தோஷப் படுவார் லோகத்தில் அதிகமில்லை. அப்பனே, லோகத்தில் நதிகள் குளங்கள் போன்ற மனிதர்கள் ஏராளம். - அவற்றில் த்ண்ணீர் வந்து பாய்ந்தால் நிரம்பிவிடும்; ஆனுல் ஸமுத்ரத்துக்கு நிகராக சிலர்தான் இருப்பார்கள் - சந்த்ரன் பூர்ணமானுல்தான் பொங்கு வார்கள். பாக்யம் சின்னது; ஆசை பெரியது! ஆனுல் ஒரு நம்பிக்கை! இதைக் கேட்டு ஸஜ்ஜனங்கள் எல்லோரும் ஸுகம் அடைவார்கள்; கெட்டவர்கள் கேலி பண்ணுவார்கள்.

கெட்டவர்களின் சிரிப்பால் எனக்கு நன்மையே உண்டாகும். காகம் குயிலின் குரலைப் பழிக்கும் - கடுமையாக இருப்பதாகக் கருதும் கொக்கு ஹம்ஸத்தையும், வௌவால் சாதகப் பறவை யையும் பார்த்துச் சிரிக்கும். அப்படித்தான் *மலின மனமுள்ள கெட்டவர்கள் நல்ல நிர்மலமான வாக்கைப் பழிப்பார்கள். கவித்துவத்தை ரஸிக்க முடியாதவர்களுக்கும், ஸ்ரீராம சரணங் களில் மனம் ஒன்ருதவர்களுக்கும் இது ஸுகம் தரும் ஹாஸ்ய ரஸம் ஆகும். இது பாஷை (பேச்சு மொழி) யில் இயற்றிய கவி - என் புத்தியும் ஸாமர்த் தியமிலாதது ஆகையால் சிரிக்கத் தகுந்தது சிரிப்பதில் ஏதும் தப்பில்லை. ப்ரபு சரணங் களில் ப்ரீதி இல்லாதவர்களுக்கும், நல்ல புத்தி இல்லாதவர் களுக்கும் இந்தக் கதை சப்பென்று இருக்கும். ஹரிஹர பதத்தில் எண்ணம் லயித்தவர்களுக்கும், புத்தி குதர்க்கம் பண்ணுதவர் களுக்கும் ரகுவரனின் கதை இனிமையாக இருக்கும். ஸ்ரீராம பக்தியால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது என்று நல்லோர் தம் மனதில் இதைக்கருதி அழகான வாக்கில் இதைப் பெருமைப் படுத்திக்கொண்டே கேட்பார்கள். நான் கவி இல்லை; பேச்சுத் திறமையும் எனக்கில்லை; எல்லாக் கலைகளும், வித்யைகளும் இல்லாதவன். சப்தம், அர்த்தம் இவைகளில் அநேக *அலங் காரங்கள் உண்டு; யாப்பு, பிரபந்தங்கள் அநேக விதங்கள் பாவம், ரஸங்களில் எத்தனையோ வித்யாஸம். கவிதையில் பல வகை குணங்களும், தோஷங்களும் எத்தனையோ! காவ்யத்தின் விவேகமும் ஒன்றுகூட எனக்கில்லை. இதை நான் *வெற்றுக் காகிதத்தில் எழுதித்தருகிறேன்.

க்ராம மொழியில் ஆக்க

* அணிகலன் குழம்பிய அணிகள் உறுதிமொழி.

1017

எல்லா குணங்களும் என் கவிதையில் இல்லை. ஆனால் ஒரு குணம் லோகத்தில் புகழ் பெற்றது. அதைக் கருதி இதை நிர்மலமான விவேகமுள்ள நல்லமதி உள்ளவர்கள் கேட்பார்கள். இதில் ரகுபதியின் உதாரமான நாமம் இருக்கிறது. அது பவித்ர மானது. புராணங்கள், ச்ருதிகளின் ஸாரம் நன்மையின் வீடு. அமங்கலத்தை அகற்றுவது. அஃது புராரி (சிவன்)யும் அவருடன் உமாவும் ஜபம் பண்ணுவது. கவிதை அழகாக இருக்கும்; நல்ல கவி இயற்றியதாக இருக்கும்; ஆனால் ரகுபதி(ராம)நாமம் இல்லாமல் அதற்கு பெருமை இல்லை. சந்த்ரன் போன்ற முகம் உள்ளவராக இருக்கலாம்; எல்லா விதத்திலும் சிங்காரிக்கப் பட்டிருக்கலாம்; அப்படியும் எந்தச் சிறந்த ஸ்த்ரீயும் ஆடை இல்லாவிடில் அழகாயிருக்காது. குணமே ஏதுமில்லாமல், கு-கவி இயற்றியதாயிருந்தாலும் ராம நாமத்தின் புகழ் உடுத்தியிருப் பதைத் தெரிந்து பண்டிதர்கள் அதை மரியாதையுடன் சொல்வர் கேட்பர். ஏனெனில் வண்டுகளைப்போல ஸாது ஜனங்கள் குணங்களை மட்டுமே எடுத்துக்கொள்வார்கள். இதில் கவிதையின் ஒரு ஆனந்தமும் இராதோ என்னவோ ஸ்ரீராமனின் பெருமை இதில் கண்கூடாயிருக்கும். ஸத் ஸங்கத்தால் பெருமை அடையாதார் யார்? இதுதான் என் நம்பிக்கை அகரு சேர்ந்தால் புகையும் நல்ல வாஸனையாகிறது; தன் ஸ்வ பாவமான கடுகடுப்பை இழந்து விடுகிறது. என் கவிதையில் அழகு இராதோ என்னவோ — ஆனால் இதில் நல்ல பொருள் வர்ணிக்கப்பட்டிருக்கிறது — ராம காதை ஜகத்துக்கே மங்களம் தருவது. துளஸி சொல்கிறான் — ரகுநாதன் கதை நன்மை பண்ணுவது; கலியுகத்தின் பாபங்களை அகற்றிவிடுவது. கவிதா-நதி வளைந்து வளைந்து செல்வது பவித்ரமான ஜலமுள்ள கங்கா வின் போக்கு போன்றது. ப்ரபுவின் நல்ல புகழுடன் சேர்ந்து நல்லதாக ஸாதுக்களின் மனம் கருதத்தக்கதாகும். பவனின் அங்கத்தில் சேர்ந்த விபூதி போற்றத்தக்கதாக, பவித்ரமாகக் கருதப்படுகிறது. ஸ்ரீ ராமனின் புகழுடன் சேர்ந்து என் கவிதை எல்லாருக்கும் மிகவும் பிரியமாக இருக்கும். பிறகு - யாரும் கவனிக்கமாட்டார் என்றாலும் பயத்துடன் சேர்ந்தால் வந்தனம் பண்ணப்படுகிறது. பசு கறுப்பாக இருக்கலாம்; ஆனால் அதன் பால் தான் நல்ல வெண்ணிறமாயிருக்கும்; மிகவும் குணம் தருவது. எல்லாரும் அதைப் பருகுவார்கள். அதேபோல க்ராமப் பேச்சு மொழியிலும் ஸீதாராமனின் புகழ் நல்லோர் பாடுவார்கள், கேட்பார்கள் மணி, மாணிக்கம், முத்து — எவ்வளவு அழகாகத் திகழ வேண்டுமோ அவ்வளவு

வேஷம் முக்யமில்லை

ஸர்ப்பம், மலே, யானேகளில் இருக்கும்போது திகழ்வதில்லே. ராஜா, மகுடம், நவயௌவன ஸ்த்ரீயின் தேஹத்தில் இருக்கும் போது அதிக ப்ரகாசமாகக் காண்கின்றன. அதேபோல் தான் நல்ல கவியின் கவிதைபற்றியும் பண்டிதர்கள் சொல்கிருர்கள் — ஓரிடத்தில் பிறந்து வளரும், இன்னெரு இடத்தில் அழகுபெருமை அடைகிறது.

ராமசரிதம் பாடுவதால் ஸரஸ்வதியின் அலுப்புதீரும்

ஸ்மரணே பண்ணியவுடன் பக்தியின் காரணமாக சாரதாதேவி விதியின் வீட்டிலிருந்து ஓடிவருகிருள் ராம சரித ஸரஸ்ஸில் ஸ்நானம் பண்ணி வைக்காவிட்டால் அவளுடைய ச்ரமம் வேறுகோடி உபாயங்கள் பண்ணிலைும் தீராது. பண்டிதர், கவிகள் இப்படி யோசித்து கலிமலத்தைப் போக்கவல்ல ஹரி-புகழை பாடுகிருர்கள். லோகத்தவர்களின் குணங்களேப் பாடினுல் ஸரஸ்வதி தலேயில் அடித்துக்கொண்டு வருத்தப்படுகிருள். ஹ்ருதயம் ஓர் ஸமுத்ரம் புத்திதான் சிப்பி. க்ஞாநிகள் ஸரஸ்வதியை ச்வாதி நக்ஷத்ரத் துக்கு ஒப்பிடுகிருர்கள். ஸரஸ்வதி ரூபமான ச்வாதி நக்ஷத்ரம் விசாரம் ரூபமான ஜலம் பொழிந்தால், அதை புத்தி ரூபமான சிப்பி வாங்கிக் கொள்ள முடிந்தால், அப்போது கவிதா ரூபமான அழகான முத்து உண்டாகிறது.

ஸஜ்ஜனங்கள் அணியத்தகும் முத்து ஹாரம்

யுக்தியினுல் அவைகளேத்துளேத்து ராம சரித ரூபமான இழையில் கோக்க வேண்டும். ஸஜ்ஜனங்கள் அதை அநுராகத்துடன் தம் நிர்மலமான ஹ்ருதயத்தில் அணிகிருர்கள். எல்லேயிலா அநுராகம் தான் அதன் அழகு.

கொடிய கலியுகத்தில் ஜன்மமெடுத்து விட்டார்கள்; - காகம் போல் செயல் ஆனுல் ஹம்ஸம்போல் வேஷம்; வேத மார்க்கத்தை விட்டு கெட்ட வழியில் போகிறவர்கள்; கபடத்தின் வடிவம்; கலியுகப் பாபங்கள் எல்லாம் உள்ள பாத்ரம்; ராம பக்தர்கள் என்று சொல்லிக்கொண்டு உலகத்தை ஏமாற்றுவார்கள்; பொன்கோபம், காமங்களின் அடிமை, ஆஷாடபூதி, பாவி, வஞ்சகர், தர்ம அநுஷ்டானம் பண்ணுவதாக வெளி வேஷம் போடுபவர் - இவர்களின் வரிசையில் முதல் புள்ளி நான். என் அவகுணங்களேச் சொல்லிக்கொண்டு போனுல் மிகவும் வளர்ந்து கொண்டே போகும்; முடியவே முடியாது; ஆகையால் நான் மிகவும் கொஞ்சம் தான் வர்ணித்தேன். இந்த கொஞ்சத்திலிருந்தே புத்திமான்கள் புரிந்துகொண்டு விடுவார்கள்.

பலவிதமாக நான் வேண்டிக் கொண்டேன்; இதைப் புரிந்துகொண்டு (நான் சொல்லும்) கதையைக் கேட்டுக் குற்றம் சொல்லமாட்டார்கள். இத்தனைக்கும்மேல் யாரேனும் ஸந்தேஹப்பட்டால் அவன் என்னையும்விட மூர்க்கனாக, புத்தி இல்லாதவனாக இருக்கவேண்டும். நான் கவி இல்லை; சாதுர்யமாகப்பேச வல்லவனும் [நாவலனும்] அல்ல. என் புத்திக்குத் தோன்றியபடி ராம குணங்களைப் பாடுகிறேன். அபாரமான ரகு-பதி சரிதமெங்கே, ஸம்ஸாரத் தொல்லைகளில் இழைந்து அல்லல்பட்டுழலும் என் புத்தி எங்கே! ஸுமேரு பர்வதத்தையே பறக்கடிக்கும் காற்றின் முன் பஞ்சு எம்மாத்திரம்? சொல். ஶ்ரீ ராமனின் எல்லையிலா வல்லமையை உணர்ந்து கதை இயற்றுவதில் என் மனம் பயந்து தயங்குகிறது. * சாரதா, (ஆதி)சேஷன் மஹேசன், விதி, ஆகமங்கள், புராணங்கள், வேதங்கள், சாஸ்திரங்கள் - எல்லாம் 'நேதி - நேதி' (இதல்ல, இதல்ல) என்று சொல்லி எவருடைய குணங்களை எப்போதும் பாடிக் கொண்டிருக்கின்றனவோ அதே ப்ரபுவினுடைய வல்லமை எல்லாருக்கும் தெரியும், இருந்தாலும் யாரும் சொல்லாமல் இருப்பதில்லை; இதற்கு வேதங்கள் சொல்லும் காரணம் - பஜனையின் மஹிமை பலவிதமானது. பரமேச்வரன் ஒருவனே; விருப்பமில்லாதவன், அவருக்கு ரூபமில்லை; பெயரில்லை; ஜன்மமில்லை; * ஸத்-சித்-ஆனந்தன்; அவரே வைகுண்டம்; எங்கும் வ்யாபித்திருப்பவர்; விச்வ ரூபன்; பகவான்; அவரே சரீரம் எடுத்துக்கொண்டு பலவிதமாக லீலைகள் பண்ணியிருக்கிறார். அந்த லீலைகளும் பக்தர்களுக்காகவே தான். ஏனெனில் பகவான் பரமக்ருபாளு; சரணடைந்தவர்களிடம் மிகுந்த அநுராகம் உள்ளவர்; அவருக்கு பக்தர்கள்மேல் 'தன்னவன்' என்று க்ருபை உள்ளது. ஒரு தடவை ஒருவர்மேல் க்ருபைவைத்து விட்டார் என்றால், பிறகு அவனிடம் கோபமே கொண்டதில்லை. ரகுராஜா* நஷ்டமாகப் போய்விட்டதை திரும்ப அடையச் செய்வார். தீனபந்து, ஸரளமான ஸ்வபாவமுள்ளவர். பலவான், ஸ்வாமி, இதை உணர்ந்து புத்திமான்கள் ஶ்ரீ ஹரியின் புகழைப்பாடி வர்ணித்து அதனால் தங்கள் வாணியையும் பவித்ரமாகவும், உத்தமமாகவும் பண்ணிக் கொள்கிறார்கள்.

அதே பலத்தால் ஶ்ரீ ராம - பதத்தில் தலைவணங்கி ரகுபதி குணங்களின் பாட்டைப் பாடுவேன். ஐய, * முனிவர்கள் முன்னர் ஹரிகீர்த்தனம் இயற்றியிருக்கிறார்கள்; அதே வழியில் போவது எனக்கு நல்லதாயிருக்கும். கடத்தற்கரிய மிகப் பெரிய

---

* ஸரஸ்வதி, எல்லாவற்றின் மூலம் வேர், வால்மீகி

சிறந்த நதிகளின்மேல் ராஜா பாலம் கட்டினுராஞல் மிகச் சிறிய அல்ப்பமான எறும்பும் அதன்மேல் ஏறி சிரமமே இல்லாமல் நதியைக் கடந்து விடுகிறது.

இப்படி மனத்துக்குத் தைர்யம் காட்டி நான் ரகு-பதியின் அழகான கதையை இயற்றுவேன், வ்யாஸர் முதலான அநேக சிறந்த கவிகள் இருந்திருக்கிறுர்கள்; அவர்கள் பயபக்தியுடன் ஹரியின் நல்ல புகழைப் பாடியிருக்கிறுர்கள். அவர்கள் எல்லாருடைய சரணகமலங்களுக்கும் வந்தனம் பண்ணுகிறேன். எல்லாரும் என் மஞேரதத்தை பூர்த்திபண்ணுவார்களாக.

கவி ஸமாஜ வந்தனம்

ரகுபதியின் குண ஸமூஹங்களை இக்கலியுகத்தில் வர்ணனை பண்ணியுள்ள கவிகளுக்கும் வந்தனம் பண்ணுகிறேன். பெரிய புத்திமான்களான ப்ராக்ருத (-பாஷா) கவிக்ள் பேச்சு மொழியில் ஹரி சரிதம் வர்ணித்திருக்கிறுர்கள். முன்னர் இருந்தவர்கள், இப்போது இருப்பவர்கள், இனி தோன்றப் போகிறவர்கள் எல்லாருக்கும் கபடமில்லாமல் நான் நமஸ்காரம் பண்ணுகிறேன். எல்லாரும் என்னிடம் ஸந்தோஷப்பட்டு வரம் கொடுங்கள். என் கவிதைக்கு ஸாது ஸமாஜங்களில் மரியாதை கிடைக்குமாக.

3 முறை க்ருபை வேண்டல்.

ஏனெனில் எந்த ப்ரபந்தத்தை பண்டிதர்கள் மதிக்கவில்லையோ அதை இயற்றுவதில் வீண் பாடு பட்டவர்கள் மூர்க்கர்களே. கங்கையைப்போல் எல்லாருக்கும் (ஸந்தோஷம்) ஹிதம் பண்ணும் கீர்த்தி, கவிதை, ஸம்பத்துதான் நல்லது. ஸ்ரீராமன் கீர்த்தியோ மிகப் பெரியது; என் கவிதையோ சப்பையானது. (நாட்டுப் பாடல்). இதுதான் எனக்குத் தயக்கம், கவலை. ஆனுல், கவிகளே, உங்கள் க்ருபையால் என்னுடைய இந்த ஆசையும் எளிதாக முடியும். பட்டு, ரெட்டு இரண்டிலுமே பூவேலைப்பாடுகள் பண்ணுகிறுர்கள். அழகாகத்தான் இருக்கும். கவிதையைக்கேட்டவுடன் சத்ருவும் பகையை விட்டுப் பாராட்டும்படி அமைந்த ஸரளமான கவிதையையும் நிர்மலமான புகழையும் தான் நல்ல க்ஞானிகள் மதிப்பார்கள். நிர்மலமான புத்தி இல்லாவிட்டால் இந்த மாதிரி கவிதை பண்ண முடியாது. எனக்கு புத்தி பலம் மிகவும் குறைவு. ஆகையால் நான் திரும்பத் திரும்ப வேண்டிக் கொள்கிறேன். நீங்கள் க்ருபை பண்ணுங்கள். நான் ஹரியின் புகழ் வர்ணனை பண்ணுகிறேன். ராம சரித மானஸ்

(ஸரஸ்)ஸின் ஹம்ஸங்கள் பண்டிதர்கள். (அவர்கள்) இந்தச் சிறு பிள்ளையின் வேண்டுகோளைக் கேட்டு, (என்) நல்ல ருசியையும் பார்த்து என்மேல் க்ருபை பண்ணுங்கள்.

ராமாயணம் இயற்றிய * முநிவரின் சரணகமலங்களுக்கு வந்தனம் பண்ணுகிறேன். அதில் * கரன் இருந்தாலும் கோமளமாக இருக்கிறது. * தூஷணன் இருந்தாலும் தோஷ மில்லாமல் அமைந்திருக்கிறது. *நாலுவேதங்களுக்கும் வந்தனம் பண்ணுகிறேன். அவை ஸம்ஸார ஸமுத்ரத்துக்குக் கப்பலாகும், அவை ரகுவர - புகழை வர்ணனை பண்ணி, அதனால் கனவிலும், துக்கம் உண்டாகாமல் செய்கிறது. விதி - பத - தூளிக்கு வந்தனம் பண்ணுகிறேன். அவர் தான் இந்த பவ - ஸாகரத்தை படைத்தார். அதில் ஸாதுக்கள், அம்ருதம், சந்த்ரன் [காம -] தேநு [என தேவ வர்க்கத்தவர்] உண்டானார்கள்; அதேபோல கெட்டவர்களும், விஷமும், குடியும் [அஸுர வர்க்கம்] உண்டாயிற்று.

தெய்வங்கள், ப்ராஹ்மணர், பண்டிதர்கள், க்ர ஹங்கள் -- எல்லாருடைய சரணங்களுக்கும் வந்தனம் பண்ணி, கை கூப்பி சொல்லுகிறேன். ஸந்தோஷமாகி எல்லாரும் என் அழகான மநோரதத்தை பூர்த்தி பண்ணுங்கள். சாரதா வுக்கும், கங்காவுக்கும் வந்தனம் பண்ணுகிறேன். இரு வரும் பவித்ரமான, மனோஹரமான சரித்ரம் உடையவர், ஸ்நானம் பண்ணுவதாலும், பானம் பண்ணுவதாலும், ஒருத்தி (கங்கா) * பாவத்தைப் போக்குகிறாள். மற்றவள் (ஸரஸ்வதி) குணம், புகழ்களை உரைப்பதாலும், கேட்பதாலும் * அவிவேகத்தைப் போக்குகிறாள்.

தினபந்து; எக்காலமும் கொடுப்பவர்; மாதா - பிதா போன்றவர்; குருவும் அவர்; ஸீதா - பதியின் ஸேவகர், தோழர், ஸ்வாமி, துளஸிக்கு எல்லாவிதத்திலும் ஸத்யமாக, ஏமாற்றாத ஹிதம் பண்ணுபவர் - அந்த மஹேசன் - பவானி இருவரையும் நமஸ்காரம் பண்ணுகிறேன். ஹரனும் கிரிஜாவும் கலியுகத்தைப் பார்த்து ஜகத்தின் நன்மைக்காக 'சாவர மந்த்ர ஸமூஹ'*த்தை இயற்றினார்கள். அதில் அக்ஷரங்கள் கலந்து கிடக்கின்றன. அர்த்தம் ஏதுமதில் வராது. ஆனால் மஹேசனின் ப்ரதாபத்தால் அதற்கு சக்தி ஏற்பட்டிருப்பது கண்கூடானது. அதே மஹேசன் எனக்கு அநுகூலமாக இருந்துகொண்டு இந்தக் கதையை ஆனந் தமும் மங்கலமும் உண்டாக்கும்படி செய்வாராக! நான்

சிவன் பார்வதியை ஸ்மரணம் பண்ணி, ப்ரஸாதம் பெற்று ஆனந்தமான சித்தத்துடன் ராம சரித வர்ணனை பண்ணுவேன். சந்த்ரன் - நக்ஷத்ர ஸமூஹத்துடன் உள்ள ராத்ரி எப்படி அழகு ஆகிறதோ அதுபோல என் கவிதை சிவ - க்ருபையால் அழகாக இருக்கும். இந்தக்கதையைப் ப்ரேமையுடன்

பல ச்ருதி

உரைப்பவர்களும், கேட்பவர்களும் கவனமாகக் கேட்டுத் தெரிந்து கொள்பவர்களும் ராம-சரணத்தில் அநுராகமுள்ளவர்களாவார்கள். கலி - மலம் நீங்கி ஸுமங்கலமடைவார்கள். கனவிலும்கூட எனக்கு ஹரன்-கௌரி இவர்களின் ப்ரஸாதம் இருக்கும் என்றால், (பேச்சுமொழி) பாஷைக்கு நான் என்ன மஹிமை சொன்னேனோ அதெல்லாம் ஸத்யமாகும்,

அவத ஸமாஜ வந்தனம்

மிகவும் பவித்ரமான அயோத்தியாபுரியையும் கலியுகத்தின் பாபங்களை நாசம் பண்ணும் ஸரயு நதியையும் வந்தனம் பண்ணுகிறேன். அந்தப்புரியின் நரர்களையும், நாரிகளையும் வந்தனம் பண்ணுகிறேன். அவர்கள் மேல் ப்ரபுவின் அபிமானம் கொஞ்சமல்ல ! ஸிதாவை நிந்தித்தவனின் பாப ஸமூஹத்தை அழித்து, சோகம் அகற்றி வாழ வைத்தார்.

கிழக்கு திசைக்கு நிகரான கௌசல்யா மாதாவுக்கு வந்தனம் பண்ணுகிறேன். அவருடைய கீர்த்தி ஸம்ஸாரம் முழுதும் (ஒளிவீசிப்) பரவியதல்லவா? அங்கே [கௌசல்யா எனும் கிழக்கு திசையில்] தானே அழகான சந்த்ரனுக்கு நிகரான ரகுபதி உதித்தார்; ஸம்ஸாரத்துக்கு ஸுகம் தருவாரானார்; கொடியவர் ரூபமான தாமரைக்கு பனிக்கட்டி மழையானார் !

ராணிகள் சூழ இருக்கும் தசரதனைப் புண்யம், மங்கலங்களின் ரூபமாக எண்ணி நான் மனம், வாக்கு, கர்மாக்களால் நமஸ்காரம் பண்ணுகிறேன். ''தங்கள் புத்ரனின் ஸேவகனாக என்னைக் கருதி க்ருபை பண்ணுங்கள்.'' அவரைப் படைத்ததால் *விதாதாவும் பெருமை அடைந்தார். ஸ்ரீ ராமனின் மாதா பிதா மஹிமையின் வரம்பே யாவர் !

அயோத்யாவின் ராஜாவுக்கு நமஸ்காரம். தீனதயாளன் பிரிந்து போனவுடன் தன் ப்ரியமான சரீரத்தை துரும்புக்கு ஸமமாக எண்ணி விட்டுவிட்டார்; அவருக்கு ராமபதத்தில் அவ்வளவு ப்ரேமை இருந்தது !

குடும்பம் சூழ இருக்கும் விதேஹ ராஜாவுக்கு நமஸ்காரம் அவருக்கிருந்த ராம - சரண - ப்ரேமை மறைவாயிருந்தது. யோகத்திலும்- போகத்திலும் அதை ஒளித்து வைத்திருந்தார். ஆனுல் ஸ்ரீ ராமனைப் பார்த்தவுடன் அது வெளிப்பட்டது.

முதலில் பரதனின் சரணங்களுக்கு நமஸ்காரம். அவருடைய நியமமும்- வ்ரதமும் வர்ணிக்க முடியாது. அவருடைய மனஸ் வண்டுபோல மயங்கி ராம - சரண-ரூபமான தாமரையின் பக்கத்திலிருப்பதை விட்டு போவதே இல்லை.

லக்ஷ்மணனின் சரணகமலங்களுக்கு நமஸ்காரம். அவர் அழகானவர்; குளுமையானவர்; பக்தர்களுக்கு ஸுகம் தருபவர். ரகுபதியின் கீர்த்தி ரூபமான விமலமான *கொடியின் * புகழ்கோலுக்கு நிகரானவர். ஜகத்துக்குக் காரணமானவர்; ஆயிரம் தலையுள்ளவர்; பூமியின் பாரத்தை அகற்றவே அவர் அவதாரம் பண்ணினுர். அவர் க்ருபாஸிந்து; குணங்களின் களஞ்சியம்; ஸுமித்ராவின் புத்ரன்; எப்போதும் எனக்கு அநுகூலமாக இருப்பாராக.

சத்ருக்னனின் பத - கமலத்திற்கு நமஸ்காரம்! அவர் சூரன். நல்ல சீலமுள்ளவர். *பரதனுடனேயே இருப்பவர்.

மஹாவீரன் ஹநுமானை வேண்டிக்கொள்கிறேன். அவருடைய புகழை ஸ்ரீ ராமனே வர்ணித்திருக்கிறுர். பவநகுமாரன் (ஹநுமா)னுக்கு நமஸ்காரம். கொடியவர்கள் ரூபமான வனத்துக்கு அவர் அக்நி, க்ஞாந - கனம் செறிந்தவர்; அவருடைய ஹ்ருதய ரூபமான வீட்டில் தநுஸ் ஏந்தி ஸ்ரீராமன் வாஸம் பண்ணுகிறுர்.

*கபி-பதி *கரடி ராஜா *நிசாசரர் ராஜா அங்கதன் முதலான வாநர ஸமாஜங்கள் — எல்லாருடைய அழகான சரணங்களுக்கும் வந்தனம் பண்ணுகிறேன். எல்லாரும் மட்டமான சரீரம் எடுத்துக்கொண்டும்கூட ஸ்ரீராமனை அடைந்தார்கள் (அல்லவா !)

---

1. த்யானம் பண்ணுவோரின் சித்தத்தைக் கவரக்கூடியவர்
2. பாபம், தாபம், மாயா போக்கக் கூடியவர்.
3. ராமாவதாரம் என்ற த்வஜம் (கொடி)
4. ஜாக்ரத் அவஸ்தையின் விபு
8. கபி - வாநரம்; அதன் ராஜா ஸுக்ரீவன்
9. ஜாம்பவான்
10. விபீஷணன் - நிசாசரர் - [ராக்ஷஸர்]

மிருகங்கள், பக்ஷிகள், தெய்வங்கள், மநிதர்கள், அஸுரர்கள் உட்பட ரகுபதியின் சரணங்களின் உபாஸகர்கள் யார் யார் உண்டோ ஆசை ஏதும் இல்லாத ராமதாஸர்களோ அவர்கள் எல்லாருடைய பத - ஸரோஜத்துக்கு வந்தனம்.

சுகாசார்யார், ஸநகர், ஸநந்தனர், ஸநத் குமாரர், பக்தமுநி நாரதர், இன்னம் விக்ஞாந—விசாரத முநிவர்கள் எல்லாருக்கும் நான் தரையில் தலைவைத்து நமஸ்காரம் பண்ணுகிறேன். முநீஸ்வரர்களே, என்னை உங்களவனாக எண்ணி க்ருபை பண்ணுங்கள்.

*ஜநக—ஸுதா, *ஜகத்தின் மாதா, கருணா - நிதானமான ராமனுக்கு எல்லையில்லாத ப்ரீதியானவர்; *ஸ்ரீ ஜாநகியின் *பாதமிரண்டையும் த்யானம்பண்ணுகிறேன். அவருடைய க்ருபையால் நிர்மலமான மதி உண்டாகுமாக.

ராஜீவ நயனன், தநுஸ் - பாணம் ஏந்தியவர், பக்தரின் விபத்துக்களை நாஸம் பண்ணுவது — ஸுகம் தருவது இவற்றில் ஸாமார்த்தியம் மிகுந்தவர்; ரகுநாயகன் - அவருடைய சரண - கமலங்களுக்கு நான் மனம், வாக்கு, கர்மாவால் மறுபடியும் வந்தனம் பண்ணுகிறேன்.

ஸீதா — ராம பதமானது வார்த்தையும் - அர்த்தமும் போன்றது; ஜலமும் அதன் அலையும் போன்றது. தனித்தனியாகச் சொல்வார்கள்; ஆனால் தனித்தனி அல்ல - அதற்கு வந்தனம். அவர்களுக்கு துக்கப்படுபவர்கள் மேல் எல்லையிலாத ப்ரியம்.

ராம நாம மஹிமை

ரகுவரனின் 'ராம' நாமத்துக்கு வந்தனம். அது அக்நி, ஸூர்யன் - சந்த்ரன் இவைகளுக்குக் காரணம். விதி, ஹரி-ஹர மயமான வேதத்தின் ப்ராணன்; நிர்குணம்; உபமானமிலாதது; குணங்களின் களஞ்ஜியம்.

மஹேசன் ஜபம் பண்ணும் மஹா மந்த்ரம் அது; முக்திக்காக காசியில் உபதேசிக்கப்படுவது; அதன் மஹிமை * கணேசனுக்குத்தெரியும்; பெயரின் பெருமையாலே அவருக்கு முதல் பூஜை நடக்கிறது. நாமத்தின் சக்தி ஆதிகவி வால்மீகிக்குத் தெரியும். நாமத்தை (எழுத்து) மாற்றிச் சொல்லி (மரா) ஜபம் பண்ணி அவர் சுத்தமானார். அது ஸஹஸ்ரநாமத்துக்கு நிகரானது என்று

சிவன் சொல்லவும் பவாநி தன் பதியுடன் எப்போதும் அதை ஜபம் பண்ணுகிருள். அவளுடைய ஹ்ருதயம் (ராம) நாமத்தில் கொண்டுள்ள ப்ரீதியை பார்த்து ஹரன் மிகவும் ஸந்தோஷப் பட்டு *ஸ்த்ரீகளுள் பூஷணம் ஆன அவளை தனக்கு * பூஷணமாக ஆக்கிக்கொண்டார். நாமத்தின் மஹிமை சிவனுக்கு நன்ருகத் தெரியும். அது காளகூடத்தை அம்ருதப் பலனுக்கிவிட்டது.

ரகுபதியின் பக்தி வர்ஷாருது (மழை காலம்); உத்தமமான ஸேவகர் [அடியார்] நல்ல தான்யம். ராமநாமத்தின் இரு அக்ஷரங்களும் *ச்ராவண, பாத்ரபத மாஸங்களாம் என்று துளஸி சொல்கிருர்.

லௌகிக லாபம், குணம்

இரண்டு அக்ஷரங்களும் மதுரமானவை; மனோஹரமானவை. அக்ஷரங்கள் கண்கள். பக்தர்களின் மனதைப்பார்க்கக் கூடியவை, ஸ்மரணம் பண்ண ஸுலபமானவை. எல்லாருக்கும் ஸுகம் தருவது. லோகத்தில் லாபம் தருவது. பரலோகம் அடைய முடியும். சொல்லவும், கேட்கவும். ஸ்மரணம் பண்ணவும் மிக நல்லது. துளஸிதாஸருக்கோ ராம-லக்ஷ்மணரைப்போல ப்ரிய மானது. எழுத்துக்களைத் தனித்தனியே வர்ணனை பண்ணுவதில் ப்ரீதி தனித்தனியே உண்டாகிறது. ஆனல் (இரண்டு எழுத்துக் களும்) ப்ரஹ்மமும் ஜீவனும் போல *இயல்பாகவே இணைந் துள்ளன.

பாரமார்த்திக லாபம்

இந்த இரண்டு அக்ஷரங்களுக்கும் நரர்-நாராயணர் போன்ற உறவு. ஜகத்தை பாலிப்பன. விசேஷ ரூபத்தில் பக்தர்களின் ரக்ஷகன். பக்தி ரூபமான அழகான ஸ்த்ரீயின் காதுகளில் அழ கான தோடுகள். ஜகத்தின் ஹிதத்துக்கு நிர்மலமான சந்த்ர னும். *ஸூர்யனுமாம்.

மோக்ஷ விஷயம்

இது நல்ல கதி.(மோக்ஷம்) ரூபமான அம்ருதத்தின் இனிப்பும் ஸந்தோஷப்படுத்துவதும் போன்றது. பூமியைத் தாங்குவதற்கு ஆமையும், (ஆதி) சேஷனும் போன்றது. பக்தர்களின் மன ரூபமான அழகான தாமரைக்கு வண்டுகள் போன்றது. நா-ரூப மான யசோதாவுக்கு ஹரியும் (கிருஷ்ணனும்), ஹலதர (பல ராம)னும் போலாம்.

ப்ரணவரூப நாம மஹாமந்த்ரம்

துளஸி (தாஸ்) சொல்கிருர்: ஒன்று குடை போன்றது மற்றது முகுட மணி போன்றது. எல்லா அக்ஷரங்களின் மேல் அமைகிறதைப் பார்! இப்படித்தான். ர கு வ ர நாமத்தின் இரண்டு அக்ஷரங்களும் ப்ரகாசிக்கின்றன.

நன்ருகப் புரிந்துகொண்டால் நாமமும், நாமமுடையோனும் ஒன்றே. இரண்டுக்கும் இடையே ஒரு ப்ரபுவும். அவனுடன் அண்டியிருப்பவன் போலும் உ ள் ள உறவாம், ப்ரியமாம். நாமம்-ரூபம் இரண்டும் பரமேச்வரனின் உ பா தி க ள் வார்த்தையால் சொல்ல முடியாத, அநாதி. நல்ல புத்தியினுல் தான் இதைப் புரிந்துகொள்ள முடியும்,

நாமம் சிறந்தது

எது பெரியது? எது சிறியது? அப்படிச் சொன்னுல் குற்ற மாகும். குணங்களின் வித்யாஸத்தைக் கேட்டு ஸாதுக்கள் புரிந்துகொள்வார்கள். நாமத்திற்கு ரூ ப ம் உட்பட்டதாகக் காணப்படுகிறது. நா ம ம் இல்லாமல் ரூபத்தின் க்ஞானம் உண்டாக முடியாது.

நாமத்தைத் தெரிந்து கொள்ளாமல் ரூபத்தின் விசேஷம் கையில் கிடைத்தாலும் தெரிந்துகொள்ள முடியாது. ரூபத்தைப் பார்க்காமல் நாம ஸ்மரணம் பண்ணினுலோ ஹ்ருதயத்தில் அதிக ப்ரீதி உண்டாகிறது. நாமம்-ரூபம் இவற்றின் போக்கு எப்படி என்ற கதை சொல்ல முடியாது. புரிந்துகொண்டால் ஸுகம் தரும். ஆனுல் வர்ணனே பண்ண முடியாது. நிர்-குணம் — ஸ-குணம் களினிடையே நாமம் அ ழ கா ன ஸாக்ஷியாகும் இரண்டினுடைய க்ஞாநமும் உண்டாவதற்கு கெட்டிக்கார இரு மொழிப்புலவராம் [து-பாஷி]

அஹமும் புறமும் உனக்கு வெளிச்சம் படும்படி இருக்க வேண்டும் எனில் வாய் ரூபமான நுழை வாசலில் நா-ரூபமான நிலவில் ராம நாம ரூபமான மணி தீபத்தை வை என் கிருர் துளஸி(தாஸ்).

புஷ்டி பக்தர்க்கு ஆதாரம்

விரஞ்சியி [ப்ரஹ்மாவி]னுல் படைக்கப்பட்ட இந்த ப்ரபஞ் சத்திலிருந்து வைராக்யத்தால் தம்மைத் துண்டித்துக்கொண்டு விட்ட முக்தர்களான யோகி ஜனங்கள் ராமநாமத்தை நாவால்

ஜபித்து *விழித்திருக்கிருர்கள். உபமானம் இல்லாத ப்ரஹ்ம ஸுகத்தை அனுபவிக்கிருர்கள். அதைச் சொல்ல முடியாது; அது தோஷமில்லாதது; நாம-ரூப மிலாதது.

பரமாத்மாவின் ஒளிவான ரஹஸ்யத்தைம் (மஹிமையை உள்ளபடி) தெரிந்துகொள்ள விரும்புகிறவர்களும் நாவால் நாமத்தை ஜபம் பண்ணி தெரிந்து கொள்ளுகிருர்கள். (லௌகிக ஸித்திகளை வேண்டுவோர்) ஸாதகர்களும் விருப்பத்தைக் குறித்து மனதொரு முனைப்பட்டு நாம ஜபம் பண்ணி, அணிமா முதலான ஸித்திகள் அடைந்து ஸித்தர்கள் ஆகிருர்கள்,

மிகவும் பீடிக்கப்பட்டுள்ள பக்தர்களும் நாம ஜபம் பண்ணு கிருர்கள்; கெட்ட ஸங்கடங்கள் ஒழிகின்றன; அவர்கள் ஸுக மடைகிருர்கள்.

ஸம்ஸாரத்தில் நாலு *வித பக்தர்கள் இருக்கிருர்கள். புண்யாத்மாக்கள், பாபமில்லாதவர்கள், உதாரமானவர்களும் நாலு விதம்.

நாலுவித பக்தர்களுக்கும் நாமமே ஆதாரம். ஆனுல் க்ஞாநி தான் ப்ரபுவுக்கு மற்றெல்லோரையும் விட ப்ரியமானவர், நாலு யுகங்களிலும், நாலு வேதங்களிலும் நாமத்தின் மஹிமைதான் சொல்லியிருக்கிறது. ஆனுல் கலியுகத்தில் விசேஷமாக அப்படி-ஏனெனில் வேறு உபாயமே கிடையாது.

எந்த விதமான ஆசையும் இல்லாதவர், ராம பக்தி ரஸத்தில் திளைப்பவர்,- அவர்களும் நாம ரூபமான அழகான ப்ரேமையின் அம்ருத குண்டத்தில் தம் மனத்தை மீன் ஆக்கி யிருப்பர்.

நிர்குண ப்ரஹ்மம், ஸகுண ப்ரஹ்மம் - இரண்டு ஸ்வரூபங்கள். இரண்டும் சொல்ல முடியாதவை; அநாதி; உபமானமிலாதவை. நாமம் இவ்விரண்டிலே பெரியது என்பது என் கருத்து. அது தன் பலத்தால் இரண்டையும் தன் வசத்தில் வைத்திருக்கிறது.

இப்படிச் சொல்வதை துளஸியின் கர்வமான பேச்சு என்ருே, கேவலம் காவ்யத்திற்காக (மிகைப்படுத்தி)ச் சொல்லப்பட்டது, என்ருே (ஸாது ஜனங்கள்) நினைக்கக்கூடாது. நான் என் மனத்தின் விச்வாசம் ப்ரீதி, ருசி - களைச் சொல்கிறேன்.

இரண்டு விதமான ப்ரஹ்ம - விவேகமும் அக்னிக்கு ஸமமானவை. ஒரு அக்னி விறகினுள் இருப்பது. மற்றது வெளிப்படத் தெரிவது. இரண்டுமே அடைய முடியாதவை. ஆனுல்

நாமத்தால் இரண்டும் கிடைக்கும். ப்ரஹ்மம். ராமன் இரண்டையும் விட நாமம் பெரிது என்பேன். ப்ரஹ்மம் ஒன்றே அவிநாசி. ஸத் சேதனம் கன-ஆனந்தத்தின் ராசி.

இந்த மாதிரி நிர்விகார ப்ரபு தம் ஹ்ருதயத்தில் வஸித்துக் கொண்டிருந்தும் கூட ஜகத்தில் எல்லா ஜீவர்களும் பலமிழந்தும் துக்கமடைந்துமிருக்கிறார்கள். ரத்னத்தினாலேயே அதன் மதிப்பு வெளிப்படுவது போல நாம நிருபணத்தாலும் நாம-யத்னத்தாலும் கண்கூடாகிறது.

இப்படியாக நிர்-குணத்தை விட நாமத்தின் ப்ரபாவம் மிக அதிகமானது. அபாரமானது. இனி என் விசார (ஆராய்த் திறன்) ப்படி நாமம் ராமனை (ஸகுணத்தை) விடப் பெரியது என்று காட்டுகிறேன்.

பக்தர்களுக்காக ராமன் மனுஷ்ய சரீரம் எடுத்துக் கொண்டார்; ஸங்கடங்களைப் பொறுத்துக் கொண்டு ஸாதுக்களுக்கு ஸுகம் தந்தார். ஆனால் ப்ரேமையுடன் நாம ஜபம் பண்ணுவதால் பக்தன் ஸஹஜமாகவே ஆனந்தம்-மங்களங்களின் வாஸம் ஆகிறான். ராமன் ஒரு தபஸ்வி-பத்நியை (அஹல்யா) புத்துயிர் பெறச்செய்தார். நாமம் ஒரு கோடி கெட்டவர்களின் கோணல் புத்தியைத் திருத்தியது. ராமன் ருஷிகளுக்கு நன்மை பண்ணுவதற்காக ஸுகேதுவின் பெண்ணை (தாடகையை) அவளுடைய பிள்ளைகளுடனும் ஸேனையுடனும் அழித்தார். ஸூர்யன் ராத்ரியை அழிப்பது போல நாமம் தாஸனுடைய தோஷத்தையும் துக்கத்தையும், துராசையையும் அழித்துவிடும். பவ சாபத்தை (சிவதநுஸை) ராமன் தானே ஒடிக்கவேண்டியிருந்தது; ஆனால் ஸம்ஸாரத்தின் பயத்தை நாமத்தின் ப்ரதாபம் ஒடித்துவிடுகிறது.

ப்ரபு ராமன் தண்டக வநத்தை வஸிக்கத்தக்க தாக்கினார். நாமமோ எண்ணிலடங்காத பக்தர்களின் மனங்களைப் பரிசுத்தமாக்கிவிடுகிறது. ரகுநந்தனன் ராக்ஷஸ ஸமூஹங்களை அழித்தார். நாமமோ கலியுகத்தின் மலங்கள் எல்லாவற்றையும் அகற்ற வல்லது. ரகுநாதன் சபரீ, கழுகு முதலான நல்ல ஸேவகர்களுக்கு முக்தி தந்தார்; நாமம் அநேக கெட்டவர்களை கை தூக்கி விட்டிருக்கிறது. அவருடைய குணங்களின் புகழ் வேதங்களிலேயே பாடப்பட்டிருக்கிறது.

ராமன் ஸுக்ரீவனையும், விபீஷணனையும் தன் அடைக்கலமாக ஏற்றுக்கொண்டார். இது எல்லோருக்கும் தெரியும். நாமமோ அநேக பலவீனமானவருக்குக் க்ருபை பண்ணியிருக்கிறது. இந்தப் புகழ் வேதத்திலும், லோகத்திலும் நன்றாக விளங்குகிறது.

ராமன் கரடிகளையும், கபிகளையும் படையாகத் திரட்டிக் கொண்டார். பாலம் கட்டினார் - அதில் கஷ்டம் கொஞ்சமல்ல ! ஆனால் நாமம் எடுத்துக்கொண்டவுடனேயே ஸம்ஸார ஸமுத்ரம் வற்றிப் போகிறது. ஸஜ்ஜனங்களே, மனத்தில் நன்றாக விசாரித்துப் பாருங்கள் ! ராவணனை, அவன் குடும்பம் முழுவதையும் யுத்தத்தில் ராமன் கொன்றான். ஸீதையை அழைத்துக்கொண்டு நகர் திரும்பினான், ராஜாவானான். அயோத்யா அவருக்கு ராஜதானி (தலைநகரம்) ஆயிற்று. தேவர்களும், முனிவரும் ச்ரேஷ்டமாக அவருடைய குணங்களைப் பாடினர். ஸேவகர் ப்ரேமையுடன் நாம ஸ்மரணம் பண்ணிக்கொண்டு ச்ரமமே இல்லாமல் மோஹத்தின் ஸேனைகளை ஜயித்து விடுகிறார்கள். \ ப்ரேமையில் மூழ்கி ஆத்மானந்தத்தில் விளைய வருகிறார்கள். நாமத்தின் ப்ரஸாதத்தால் அவர்களுக்குக் கனவிலும் கவலை இருப்பதில்லை. வரம் தருவோருக்கும் நாமம் வரம் தரும். ப்ரஹ்மம், ராமன் இரண்டிலும் பெரிது. நூறுகோடி ராம சரிதங்களிலிருந்து மனத்தில் நன்றாகத் தேர்ந்து மஹேசன் நாமத்தையே எடுத்துக்கொண்டு இருக்கிறார்.

நாமத்தின் ப்ரஸாதத்தால் சிவன் அவிநாசி ஆனார். அமங்கல வேஷம் பூண்டிருந்தாலும் மங்கலத்தின் ராசி ஆவார். ஸுகாசார்யர், ஸநகாதி ஸித்தர்கள், முனிவர்கள், யோகிகள், நாமத்தின் ப்ரஸாதத்தால்தான் ப்ரஹ்மானந்தம் அநுபவிக்கிறார்கள்.

நாரதருக்கு நாமத்தின் ப்ரதாபம் தெரியும். ஸம்ஸாரத்துக்கு ஹரி ப்ரியமானவர். ஹரிக்கு ஹரன் பிரியமானவர். ஹரனுக்கு நாரதர் பிரியமானவர். நாமம் ஜபம் பண்ணியதால் பகவான் ப்ரஸன்னமானார்; ஆகவே ப்ரஹலாதன் பக்தர்களுள் சிரோமணியானான். த்ருவன் துக்கமும் வெட்கமும் பட்டு நாம ஜபம் பண்ணினான். அசையாத. உபமானமில்லாத ஸ்தானம் அடைந்தான். பவநஸுதன் (ஹநுமான்) பவித்ரமான நாம-ஸ்மரணம் பண்ணி ராமனைத் தன் வசமாக்கிக் கொண்டான். பதிதனான *அஜாமிளன். கஜம், கணிகை - இவர்களும் ஹரிநாமத்தின் ப்ரபாவத்தால் முக்தர்களானார்கள். நாமத்தின் பெருமையை எத்தனைதான் சொல்லட்டும் ! நாமத்தின் குணங்களை ராமன்தானே முழுவதும் தெரிந்துகொள்ள முடியாது. ராமனின் நாமம் கல்பகவிருக்ஷம் போன்றது. கலியுகத்தில் நன்மையின் வாஸஸ்தலம். அதை ஸ்மரணம் பண்ணித்தான் துளஸிதாஸன் 'பாங்' (லாஹிரிப் பொருள்) ஆக இருந்தவன் துளஸி ஆனான்.

நாலு யுகங்களிலும், மூன்று காலங்களிலும், மூன்று லோகங்களிலும் நாம ஜபம் பண்ணி ஜீவன் சேர்கம் நீங்கியிருக்கிறது. ''எல்லா புண்ய கர்மாக்களுக்குமே பலன் ராமனிடம் ப்ரேமை உண்டாவதுதான்'' என்பதுதான் வேத-புராணம்-ஸாதுக்களின் கருத்து. முதல் யுகத்தில் த்யானத்தாலும், இரண்டாவதில் யக்ஞத்தாலும், த்வாபர யுகத்தில் பூஜையாலும் பகவான் ப்ரஸன்னமானுர். ஆனுல் கலியுகம் மலத்தின் மூலமாகும்; அழுக்கு, பாபங்களின் ஸமுத்ரம். இதில் மனுஷ்யனின் மனம் மீன்போல் இருக்கிறது. இந்தக் கொடிய காலத்தில் நாமம் கல்பதரு. அதை ஸ்மரணை பண்ணினுலேயே அது ஸம்ஸார வலைகளை நாசமாக்குகின்றது. கலியுகத்தில் ராம நாமம் மனம் வேண்டியதைத் தரவல்லது. கலியுகத்தில் கர்மா இல்லை, பக்தி இல்லை, க்ஞானமில்லை. ராம நாமம் ஒன்றுதான் பற்றுக்கோடு. கபடத்தின் களஞ்சியமான கலியுக ரூபி காலநேமிக்கு ராமனின் நாமம் புத்திமானுன, ஸாமர்த்தியம் மிகுந்த ஹநுமானும். ராமனின் நாமம் (ந்ருஸிஹ்ம) நர கேஸரியாம். கலியுகம் ஹிரண்யகசிபு. தேவர்களுக்கு துக்கம் தந்தவனைக் கொன்று ப்ரஹ்லாதன்போல ஜபம் பண்ணுவோரை ரக்ஷிக்கும். நல்ல பாவத்தோடோ கெட்ட பாவத்தோடோ, கோபத்தோடோ, சோம்பலுடனே; நாமம் ஜபம் பண்ணுவதால் பத்து திசைகளிலும் மங்களமுண்டாகிறது. அதே நாமத்தை ஸ்மரணம் பண்ணிக் கொண்டு, ரகுநாதனுக்கு நமஸ்காரம் பண்ணி ராமனின் குணங்களின் கதையை இயற்றுவேன்.

தன் குண-தோஷங்கள்

யாருடைய க்ருபை க்ருபை பண்ணுவதில் த்ருப்தியடையாதோ அவர் என்னை திருத்துவாராக. ராமன் அவ்வளவு நல்ல (தலைவன்) யஜமானன்; நானோ இவ்வளவு மோசமான ஸேவகன். அப்படியிருந்தும் அவர் தன் தரப்பில் தன் இயல்புப்படி என்னையும் காப்பாற்றியிருக்கிறுர். நல்ல ஸ்வாமி எப்படி இருப்பார் என்று வேதம் சொல்கிறது; லோகத்திலும் சொல்வார்கள்; விண்ணப்பம் சொன்னவுடனேயே ப்ரேமையைத் தெரிந்து கொண்டு விடுகிறுர். செல்வமுள்ளவனோ, ஏழையோ; நகர்வாஸியோ, நாட்டுப்புறத்தானோ; பண்டிதனோ, மூடனோ; அழுக்குப்படிந்ததோ, ப்ரகாசமானதோ; நல்ல கவியோ, கெட்ட கவியோ; எல்லா ஸ்த்ரீ புருஷர்களும் அவரவர் புத்திக்கு ஏற்றபடி ராஜாவைப் புகழ்வார்கள்; ராஜாவோ ஸாது, க்ஞானி, நல்ல சீலமுடையவர்*ஈச்வர அம்சத்திலிருந்து உற்பத்தியானவர்.

பரம க்ருபாளுவாக இருப்பார். (புகழை) கேட்டு ராஜா-நல்ல வாக்கையும், பேச்சையும், பக்தி, பணிவு, போக்கு, எல்லாம் தெரிந்துகொண்டு எல்லாருக்கும் (தகுந்தபடி) ஸந்மானம் பண்ணுவார். இது ஸாதாரண ராஜாக்களின் ஸ்வபாவம். கோசல ராஜாவோ தெரிந்துகொள்வாரில் சிரோமணி.

ராமன் (உயிருக்குயிரான சிரோமணி) ஸுத்தமான ஸ்நேஹத்தால் மிகவும் சந்தோஷப்படுபவன்; என்னைப்போல மந்தமான, அழுக்கடைந்த புத்தியுள்ளவன் ஸம்ஸாரத்திலேயே வேறு யார் இருக்கமுடியும்? க்ருபாளுவான ராமன் துஷ்ட ஸேவகனை என்மேல் ப்ரீதி கொள்வார்; என்னை அவருக்குப் பிடிக்கும். அவர் *பாறைகளைக் கப்பலாக்கினார்; வாநரங்களை புத்திமானை (மந்த்ரிகளா)க்கினார். நானும் [வெட்கமில்லாமல், தயக்கமில்லாமல்] சொல்கிறேன். (சொல்பவரிடம் விரோதமில்லை)—எல்லாரும் சொல்கிறார்கள்.—'ஸீதாநாதனைப்போன்ற ஒரு யஜமானனுக்கு துளஸிதாஸ் போன்ற ஒரு ஸேவகனை கிடைத்தான்?' இந்த கேலியை அவர் பொறுத்துக் கொள்வார்.

இது எவ்வளவு தோஷமானது! எனக்கு எத்தனை துணிச்சல்! இந்தப் பாபத்தைக் கேட்டு நரகமும் மூக்கைப் புடித்துக்கொள்ளும். இதை நினைத்து நானே கல்பனை பண்ணிக்கொண்ட பயத்தால் நடுங்குகிறேன். ஆனால் ராமன் இதைக் கனவிலும் நினைத்திருக்கவில்லை

இதைக் கேட்டு நல்ல சித்தம் உடையவராக என்னை நோக்கி என் பக்தி, புத்தியைப்பாராட்டினார். சொல்லுவதில் இது கெட்டு போகும். ஆனால் ஹ்ருதயத்துக்குப் பிடித்தால் ராமன் மனிதனின் மனத்தை உணர்ந்து ஸந்தோஷப்படுவார்.

ப்ரபுவின் சித்தத்தில் தன் பக்தர் இழைத்த பிழைகள் ஏதும் நினைவிலில்லை. அவருடைய ஹ்ருதயம் எப்படியிருந்தது என நூறு தடவை நினைத்துக்கொள்கிறார். எந்தப் பாபத்தால் வாலியை வேடன் போலக் கொன்றாரோ அதே தவறு பின்னரும் ஸுக்ரீவனிடம் ஏற்பட்டது,

அதே கார்யம் விபீஷணனாலும் செய்யப்பட்டது. ஆனால் ராமன் அதைக் கனவிலும் ஹ்ருதயத்தால் காணவில்லை. பரதனிடம் கூடியபோது ராமன் விபீஷணனை ஸபையில் பாராட்டினான். அவனுக்கு ஸந்மானம் பண்ணினான். ப்ரபு மரத்தின்கீழ் இருக்க, வாநரம் கிளைமேல்- அவனை தனக்கு ஸமமாகப் பண்ணிக் கொண்டார்.

இப்படியாக என் குண-தோஷங்களைச் சொல்லிவிட்டு எல்லா ருக்கும் தலை தாழ்த்தி ரகுவரனின் நிர்மல யசஸ்ஸை வர்ணனை பண்ணுகிறேன். இதைக் கேட்டால் கலிமலம் அழிந்துபோகும்.

ஸமஷ்டிக்கு மீண்டும் நமஸ்காரம் பண்ணிவிட்டு ரகுவர-விசத-யசஸ் (ரகுவரனின்-அழகான-புகழ்) வர்ணிக்கிறார்

கதா பரிசயம் - (அறிமுகப்படுத்துவது)

முனிவர (சிறந்தவ)ரான பரத்வாஜருக்கு யாக்ஞவல்க் யர் அழகான கதையைச் சொன்னார்; அதையே நான் இப்போது விவரிப்பேன். ஸஜ்ஜனங்கள் எல்லாரும் ஸுகமாகக் கேளுங்கள்.

வேண்டல்

இந்த அழகான சரிதத்தை சம்பு இயற்றினார். க்ருபை பண்ணி அதைப் பிறகு உமாவுக்குச் சொன்னார். காக புசுண்டி ராம பக்திக்கு ஸரியான அதிகாரி என்று கருதி சிவன் இதை அவருக்குக் கொடுத்தார்.

குரு பரம்பரை

* அவரிடமிருந்து யாக்ஞவல்க்யர் அதை அடைந்தார். அதை அவர் பரத்வாஜருக்குச் சொன்னார். சொன்னவரும். கேட்டவரும் ஸமான ஸ்வபாவமுள்ளவர்கள்; ஸர்வதர்சி [எல்லாம் காண்பவர்]கள். ஹரியின் லீலையை நன்றாகத் தெரிந்துகொண்டிருந்தார்கள்.

அவர் தன்னுடைய க்ஞானத்தால் உள்ளங்கை நெல்லிக்கனி போல மூன்று காலங்களையும் அறிந்திருந்தார்; நல்ல க்ஞானியான ஹரி பக்தர்கள் பலவிதமாக சொல்வார்கள், கேட்பார்கள், தெரிந்துகொள்வார்கள்.

என் குருவிடமிருந்து இந்தக் கதையை நான் ஸூகர க்ஷேத்ரத்தில் கேட்டேன். அந்தக் கதையின் போக்கை அப்போது சிறுவனாயிருந்ததால் என்னால் நன்றாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவ்வளவு அறிவு இல்லை. கேட்பவரும், சொல்பவரும் மஹாக்ஞான நிதிகளாயிருந்தார்கள், ராம கதையோ ஒளிவானது. நானோ கலியுக பாபங்களில் சிக்குண்டிருக்கிறேன். மஹா மூடன், ஜடமானவன். அதை என்னால் எப்படிப் புரிந்து கொள்ள முடியும்? இருந்தாலும் குரு திருப்பித் திருப்பிச் சொன்னார். அதனால் என் புத்திக்குத் தகுந்தபடி கொஞ்சம்

* சிவனிடமிருந்து

புரிந்தது. நினைவு வந்தது. அதையே நான் பாஷை (பேச்சு மொழி ப்ராக்ருத-ஹிந்தி)யில் *சந்தக் கட்டுடன் செய்வேன். அதில் என் மனத்தில் க்ஞானம் உண்டாகட்டும். எனக்கு உள்ள கொஞ்சம் புத்தி விவேகம் இவற்றின் பலத்தால் என் ஹ்ருதயத்தில் உண்டான ஹரியின் ஏவலால் அப்படியே சொல்வேன். * என் ஸந்தேஹத்தை, மோஹத்தை, ப்ரமையைப் * போக்கவல்ல கதை இயற்றுகிறேன். ஸம்ஸாரமாம் நதி (யை கடக்க)க்கு இது கப்பல் போலாம்.

ராம கதை மாஹாத்ம்யம்

ராம கதை வித்வான்களுக்கு * விச்ராமம் தருவது. எல்லா மனிதர்களின் மனஸையும் மகிழச் செய்வது. கலியுக பாபத்தை அகற்றவல்லது. ராம கதை கலியுக ரூபமான ஸர்ப்பத்திற்கு பரணி (மந்த்ரம்). விவேக ரூபமான அக்நி கடைந்தெடுக்க அரணிக்கட்டையாம்.

ராமகதை கலிகாலத்தில் காமதேனுவாம், ஸஜ்ஜனங்களுக்கு அழகான உயிருள்ள மயிலாகும். இதே பூவுலகத்தில் அம்ருதத்தின் நதி. பயத்தை அகற்றுவது; ப்ரமை ரூபமான தவளைக்குப் பாம்பு!

அஸுர ஸேனையை அழித்தது போல ராமகதை நரகத்தையும் நாசம் பண்ணக்கூடியது. ஸாது ரூபமான தேவகுலத்திற்கு ஹிதம் பண்ணுவதில் கிரி *நந்திநியாம். ஸந்த ஸமாஜம் ரூபமான பால்கடலுக்கு லக்ஷ்மிபோல, ஸம்ஸாரத்தின் பாரத்தைத் தாங்குவதில் அசையாத பூமி போலவாம்.

யம கணங்களின் முகத்தில் கரியைப்பூச இது (ராம கதை) யமுநாவுக்கு ஸமானமாம். ஜீவன் முக்திக்குக்காசி. ராமனுக்குப் பவித்ரமான துளஸிபோல ப்ரியமாம். துளஸிதாஸனுக்கோ * ஹுளஸியின் ஹ்ருதயத்துக்கு ஸமமாம்.

நர்மதையைப்போல சிவனுக்குப் ப்ரியமானது. எல்லா ஸித்திகள், ஸம்பத்துக்கள், ஸுகங்களின் ராசி. நல்ல குணரூபமான தேவர்களுக்கு இதுதாயார் அதிதி போன்றது. ரகுவரனின் ப்ரேம பக்திக்கோ இது எல்லையே யாம்.

ராம கதை மந்தாகிநியாம். நல்ல சித்தமே சித்ரகூடம். துளஸி சொல்கிறார்; அழகான ஸ்நேஹமே வநம். அதில் ஸிய (ஸீதா)வும் ரகுவீரனும் வஸிக்கிறார்கள்.

---

* 10-வது தடவை * 11-வது தடவை * 12-வது தடவை
5) பார்வதி 6) துளஸியின் மாதா

இருபத்தெட்டு குணக்ராமம் (ஸ்தோத்ரங்கள்) மஹிமை.

ராம சரிதம் அழகான சிந்தாமணி. ஸாதுக்களின் நல்லமதி ரூபமான ஸ்த்ரீக்கு இது மிக அழகான ஆபரணமாகும். ராமனின் குணங்களின் தொகை ஜகத்துக்கு மங்கல ரூபமானது. முக்தி, தனம், தர்மம், தாமம் (இடம்) எல்லாம் தருவது.

க்ஞானம், வைராக்யம், யோகம்களுக்கு நல்லகுரு. ஸம்ஸார ரூபமான பயங்கர ரோகத்துக்கு தேவ - வைத்யர்கள் (அச்விநீ குமாரர்). இது ஸீதாராமனின் ப்ரேமைக்கு மாதா, பிதா. எல்லா வ்ரத, தர்மம், நியமங்களுக்கு பீஜம்.

பாபம், ஸந்தாபம் (எரிப்பது), சோகங்களை நாசம் பண்ணுவது. இந்த லோகத்தையும், பரலோகத்தையும் அன்புடன் பரிபாலனம் பண்ணுவது. *விசார ரூபியான ராஜாவுக்கு மந்திரி. நல்ல *பணியாள். லோபம் ரூபமான கடக்க முடியாத ஸமுத்ரத்துக்கு * கும்பஜ ருஷி (அகஸ்த்யர்).

பக்தர்களின் மன ரூபமான வநத்தில் காம, க்ரோத, கலியுக பாப ரூபமான * யானைகளுக்கு சிங்கக்குட்டி. த்ரிபுராரிக்கு *பூஜிக்கத்தக்க, ப்ரியமான அதிதி (விருந்தாளி) யாகும். தரித்ர * ரூபமான வநத் (தைப்பிடித்த) தீக்கு வேண்டியதைப் பொழியும் மேகம்.

விஷய * ரூபமான ஸர்ப்பத்துக்கு மஹாமந்த்ரமணி. நெற்றியில் எழுதிய கெட்ட * விதியை அழிக்கும். இருட்டை அகற்ற ஸூர்யனின் கிரண ரூபமானது. ஸேவகர் * ரூபமான தான்யங்களை வளர்க்க மேகம் போன்றது.

வேண்டிய பலனைக் *கொடுப்பதில் கல்ப வ்ருக்ஷம். ஸேவை * பண்ணுவதற்கு ஹரி-ஹரர் போல ஸுலபமானது; ஸுக மானது. நல்ல * கவியின் மந ரூபமான சரத்ருதுவின்போதுள்ள ஆகாசத்தில் நக்ஷத்ரங்கள் போன்றது. ராம பக்தர்களுக்கோ வாழ்வின் * தனமேயாம்.

ஸம்பூர்ண புண்யங்களின் * பலன் - ஸ்வரூபமான போகங்களின் தொகைக்கு ஸமமானது. ஜகத்துக்கு * ஏமாற்றலில்லாத ஹிதத்துக்கு ஸாதுக்களைப் போன்றது. ஸேவகரின் மநரூபமான மாநஸ ஸரோவரத்தில் ஹம்ஸம் போன்றது. *கங்காவின் அலைகளைப் போல பவித்ரமானது.

கெட்ட வழி, கோணல் தர்க்கம், கலியின் கெட்ட போக்கு. கபடம், தம்பம், பாகண்டம் எல்லாவற்றையும் எரித்துவிடக் கூடியது ராமனின் குண ஸமூஹம். விறகுக்குக் கொழுநீ போன்றது. ராமனின் சரிதம் பூர்ண சந்த்ரனின் கிரணங்கள் போல எல்லாருக்கும் ஸமாந ரூபத்தில் ஸுகம் தருவது. ஸஜ்ஜனங்கள் ரூபமான அல்லிக்கும், சகோரத்துக்கும் சித்தத்துக்கும் விசேஷமாக ஹிதமானது. பெரும் லாபம் தருவது. (கிரணத்தின் ஸ்பர்சத்தால் அல்லி மலர்கிறது. ஆகையால் அதற்கு ஹிதம். சகோரம் அதைப் பருகிறது - அதனல் அதற்குப் பெரிய லாபம்.)

பவாநி என்னமாதிரி கேள்வி கேட்டாள்; சங்கரன் எப்படி விளக்கிச் சொன்ஞர். இந்தக் காரணங்கள் எல்லாவற்றையும் நான் விசித்ரமான கதா-வாகத் தொகுத்து விரிவாகச் * சொல்வேன்

இக் கதை கேட்டிராதவர்கள் இப்போது இதைக் கேட்டு ஆச்சர்யப்பட வேண்டாம். அ-லௌகிகமான (லோகத்தியதல்லாத-ரஹஸ்யம் முதலான) கதை கேட்டால் க்ஞாநி ஆச்சர்யப்படமாட்டார்.

ராமனுடைய கதைக்கு இவ்வுலகத்தில் எல்லை இல்லை. அவருடைய மனத்தில் இப்படி ஒரு நம்பிக்கை இருக்கிறது. ராமனுடைய அவதாரங்கள் விதம் விதமானவை. ராமாயணங்கள் நூறு கோடியுண்டு. எல்லையிலாதவை.

ராமனின் அழகான சரிதம் கல்ப வித்யாஸத்தால் அநேக விதமாக முநீச்வரர்கள் பாடியிருக்கிருர்கள். இதை ஹ்ருதயத்தில் கொண்டு ஸந்தேஹப்படாமல் கதையைப் பயபக்தியுடன் கேளுங்கள்.

எண்ணிலடங்காத ராமன்கள், அவர் குணங்கள் எண்ணிலாதவை. அவருடைய கதையின் பரப்பு எல்லையிலாதது. நிர்மலமான விசாரத் திறமையுள்ளவர்கள் இது கேட்டு ஆச்சர்யப்படமாட்டார்கள்.

இப்படி ஸந்தேஹம் எல்லாம் போக்கி, குரு-பத-பங்கஜ-தூளியைச் சிரமேல்க் கொண்டு, மறுபடி கைகள் கூப்பி எல்லாரையும் வேண்டிக் கொள்கிறேன். கதை அமைப்பைப் பற்றிக் குற்றம் சொல்லாதிருப்பராக.

மீண்டும் ஸமஷ்டி வந்தனம்

* 13-வது தடவை

இப்போது சிவனுக்கு பயபக்தியுடன் தலை தாழ்த்திவிட்டு ராமனின் விமல குணங்களின் 'காதா'வின் வர்ணனை பண்ணுகிறேன். ஹரி சரணங்களில் தலைவைத்து ஸம்வத் * 1631ல் கதை இயற்றுகிறேன்.

க்ரந்த ஆரம்ப இடம், காலம்.

சித்திரை மாஸம், நவமி, மங்கள வாரம்; அயோத்யாபுரியில் இந்த சரித்ரம் வெளியிட்டார். அன்று ராம ஜனனம் உண்டாயிற்று என்று வேதம் சொல்கிறது. எல்லா (புண்ய) தீர்த்தங்களும் அன்று அங்கே வந்து சேர்கின்றன.

(அன்று) அஸுரர், நாகர், பக்ஷிகள், முநிவர்கள், தேவர்கள் எல்லாரும் வந்திருந்து ரகுநாயகனின் ஸேவை பண்ணுகிறார்கள். க்ஞாநி ஜநங்கள் ராம ஜனனத்தை மஹோத்ஸவமாக்குகிறார்கள். அவருடைய அழகான கீர்த்தியைப் பாடுகிறார்கள். ஸஜ்ஜனங்கள் கூட்டம் கூட்டமாக ஸரயூவில் ஸ்நாநம் பண்ணுகிறார்கள். அழகான ச்யாம சரீரனை ஹ்ருதயத்தில் த்யான்ம் பண்ணிக் கொண்டு ராம-ஜபம் பண்ணுகிறார்கள்.

தர்சனம், ஸ்பர்சனம், மஜ்ஜனம் (மூழ்குவது), பானம் (பருகுவது) பாபத்தைப் போக்கும் என்று வேத, புராணங்கள் சொல்கின்றன. இந்த நதி பவித்ரமானது. இதன் மஹிமை எல்லையிலாதது. நிர்மல புத்தியுடைய சாரதா (ஸரஸ்வதி) வும் அதைச் சொல்லமுடியாது.

இந்த அழகான புரி ராமன் வஸிக்க இடம் தந்தது. எல்லா லோகங்களிலும் ப்ரஸித்தமானது. மிகவும் பவித்ரமானது. ஜகத்தில் 4 வித ஜீவன்கள் இருக்கின்றன. அவைகளுக்கு எல்லையே இல்லை. ஆனால் அயோத்யாவில் சரீரத்தை விட்டால் மறுபடியும் ஸம்ஸாரம் கிடையாது.

எல்லா * விதத்திலும் இந்தப் புரி மனோஹரமானது (மனதைக் கவர்வது). எல்லா ஸித்திகளும் தரும். மங்கலத்தின் களஞ்ஜியம் என்று தெரிந்துகொண்டு நான் நிர்மலமான கதையை ஆரம்பிக்கிறேன். இதைக் கேட்டால் காமம், மதம், தம்பம் எல்லாம் அகலும்.

---

*க்ரிஸ்து சகாப்தம் 1585 *14-வது தடவை *15-வது தடவை

இதன் பெயர் ராம சரித மானஸ். இதைக் காதால் கேட்டாலே விஸ்ராமம் உண்டாகும். மநஸ் ரூபமான யானை விஷய ரூபமான *தாவாநலத்தால் எரிக்கப்படுகிறது. இந்த ஸரோவரத்தில் வந்து சேர நேர்ந்தால் ஸுகி ஆகிவிடலாம். முனிவருக்குப் ப்ரியமானது. பவித்ரமானது. அழகானது. இந்த ராம சரித மானஸ்ஸை சிவன் இயற்றினார். அது மூன்று விதமான துக்கங்களையும் தரித்ரத்தையும் அழித்து விடும். கலியின் தப்பான போக்கையும் எல்லா பாபங்களையும் அழிக்கிறது.

இதை இயற்றிவிட்டு மஹேசன் தன் மனத்துள்ளேயே வைத்துக்கொண்டிருந்தார். நல்ல ஸமயம் நேர்ந்தபோது 'ஸிவாஸனா'வுக்கு (உமாவுக்கு) சொன்னார். இதை நன்றாக யோசித்து, உணர்ந்து, ஸந்தோஷமாக இதற்கு ராம சரிதமாநஸ் என்ற சிறந்த பெயர் வைத்தார். அதே அழகான, ஸுகம் தரும் கதையை நான் *சொல்கிறேன். ஸஜ்ஜனங்களே! பயபக்தியுடன் மனமொன்றிக் கேளுங்கள்.

1. மாநஸ ஸர ப்ரஸங்கம்

இந்த மாநஸ் எப்படி இருக்கிறது. என்ன விதி முறைப்படி உண்டாயிற்று. என்ன காரணத்தால் லோகத்தில் இதற்குப் ப்ரசாரம் உண்டாயிற்று. அதே ப்ரஸங்கம் முழுவதையும் இப்போது, உமா, வ்ருஷகேது இருவரையும் ஸ்மரணம் பண்ணிக் கொண்டு *சொல்கிறேன்.

சம்புவின் க்ருபையாலேயே ஹ்ருதயத்தில் நல்ல-மதி ப்ரகாசமாயிற்று. துளஸி ராம சரித மாநஸ்ஸின் கவி ஆனான். புத்தியின் திறமைப்படி மனதைக் கவரும்படி *செய்வான்; க்ஞானி ஜனங்கள் அழகான சித்தத்துடன் இதைக்கேட்டு உய்வார்களாக. ஸு-மதி (நல்லமதி) தான் முகவுரை. ஹ்ருதயம் ஆழ்ந்த ஸ்தானம். வேத புராணங்கள் ஸமுத்ரம். ஸாது—மேகம் ராமனின் *ஸு-யசஸ் ரூப மதுர மங்களகாரி (நல்ல புகழ் ரூபமான இனிய மங்கலமாக்கும்) -மநோஹரஜலம் பொழிகிறது.

ஸகுண லீலை என்ன வர்ணிக்கிறதோ அதே தூய்மை மலத்தைப் போக்குகிறது. எந்த ப்ரேமையும், பக்தியும் வர்ணிக்க முடியாதோ அதே இனிமையுள்ள, அழகான, உஷ்ணம் தணிக்கும் உணவு.

---

* காட்டுத் தீயால்   * 16-வது தடவை   * 17-வது தடவை
* 18-வது தடவை

அந்த ஜலம் நல்ல கார்யம் ரூபமான பயிர்க்கு நல்லது பண்ணும். அதே ராம பக்தர்களின் ஜீவனம். அந்த பவித்ரமான, மனதுக்குப் பிடித்த ஜலம் மேதா(மனத்தில் நிலைப்படுத்திக்கொள்ளும்) சக்தி ரூபமான பூமியில் விழுந்து திரண்டு காது ரூபமாக ஆற்றுப்பட்டு (உள்ளே) பாய்கிறது.

அழகான மாநஸ (ஏரி / மனம்) *நிரம்பியது. அழகான *இடத்தை அடைந்து *தெளிந்து ஸுகம் *தரும்படி, குளுமையாக, ருசியுள்ளதாக அழகாக *பழமையாகியது. புத்தியினல் ஆராய்ந்து இணையிலா அழகான உயர்வான ஸம்வாதங்கள் இயற்றினர்; அவ்வரிய பவித்ரமான, ஸரோவரத்தில் நான்கு மனோஹரமான துறைகள். ஏழு *ப்ரபந்தங்களும் ஏழு படிக்கட்டுகள் (ஏணிகள்). அவைகளை க்ஞான ரூபமான கண்களால் பார்த்தால் மனம் மகிழும். ராமனின் நிர்குண, ஆழங்காண முடியாத மஹிமையை வர்ணிப்பேன். அதே ஜலத்தின் ஆழம். ராமன்-ஸீதா இவர்களின் யசஸ்தான் அம்ருதத்துக்கு நிகரான ஜலம். உபமானங்களே அழகான அலைகளின் விளையாட்டுகள் (கார்ய வர்க்கம்). அழகான சௌபாயி (நாலடி)கள் திடமான (தாமரைக்) கொடி (தண்டுகள்)யில் இலைகள். யுக்திகள் அழகான மணிகள் உள்ள சிப்பிகள். சந்த், ஸோரடா, அழகான தோஹாக்கள் பல வண்ணமாகத் திகழும் தாமரை மலர்கள்.உபமானமில்லாத அர்த்தம், அழகான பாவம், அழகான பாஷா இவை வரிசையாக மகரந்தப்பொடி, மலர்த்தேன், நல்ல மணம். புண்யத் தொகுதியே அழகான வண்டுக்கூட்டங்கள் க்ஞானம், வைராக்யம், ஆராய்வு-ஹம்ஸங்கள். த்வநி-வ்யங்க்யார்த்தம் (பொதிந்த அர்த்தம்). கவிதா குணம், ஜாதி இவை 4 வகை மனோஹர மீன்கள். அர்த்தம், தர்மம், காமம், மோக்ஷம் எனும் நாலும், க்ஞானம், விக்ஞானம் விசாரம் பண்ணி சொல்வர்—நவ *ரஸங்களும், ஜபம், யோகம், வைராக்யம் எல்லாம் அழகான தடாகத்தில் நீரில் வாழ்வன. நல்ல கார்யங்களைப்பற்றிப் பாட்டுக்கள், ஸாது குண கானம், நாம குண கானம் - இவை சித்ர விசித்ரமான நீர்வாழ் பக்ஷிகள். ஸாதுக்களின் ஸபையே ஸரோவரத்தின் நாலு பக்கமும் அமைந்த மாந் தோப்புகள். ச்ரத்தையை வஸந்தருதுவாக அமைத்து வர்ணனை பண்ணப்பட்டிருக்கிறது. பக்தியை நிரூபணம் பண்ணும் அநேக விதங்கள், க்ஷமா, தயா இவை மரங்களிடை லதா மண்டபம். சம-யம-நியமங்கள் மலர்கள்; க்ஞாநம் - பழம்; ஹரியின் சரணம் உயர்வான ரஸம்; இப்படி வேதங்கள்

6 * காண்டங்களும்

வர்ணித்திருக்கின்றன. இன்னம் எத்தனையோ நிகழ்ச்சிகளுடைய கதைகள். இவையே கிளிகள், கோகிலங்கள் முதலான அனேக வண்ண பக்ஷிகள்.

மெய் சிலிர்த்தலே நந்தவனம், தோப்பு, வநம். அங்கே ஸுகம் ரூபமான அழகான பக்ஷிகள் வஸிக்கின்றன. அழகான மநஸ் ரூபமான தோட்டக்காரன் அன்பு ரூபமான ஜலத்தை அழகான கண்கள் மூலம் தெளிக்கிறான். இந்த சரிதத்தைப் பாதுகாத்துப் பாடுவோர்களே இந்தக் குளத்தைப் ஸாமர்த்யமாகப் பாதுகாப்பவர். எப்போதும் இதை பயபக்தியுடன் கேட்கும் ஸ்த்ரீ-புருஷர்களே இந்த மாநஸ்ஸுக்கு தகுதி பெற்ற தேவதைகள். மிகவும் கெட்ட(வர்), புலனின்பம்படு(வோர்) கொக்கும் காகமும் - துர்பாக்கியசாலிகள், அந்த ஸரஸின் கிட்டவே போவதில்லை. இங்கே நத்தை, தவளை, பாசிக்கு ஸமமான புலனின்பம் தரும் கதையோ, பலவித ரஸங்களோ கிடையாது. ஆகையால் ஹ்ருதயத்திலே தோல்வியடைந்த காமியான காகமும், பாவம்-கொக்கும் வருவதில்லை. இந்த ஸரஸ்ஸுக்கு வருவது மிகவும் கஷ்டம். ராம க்ருபை இல்லாமல் இங்கு வர முடியாது.

கடினமான கெட்ட ஸங்கம்தான் கஷ்டமான பாதை. அவர்கள் உரைகள் தான் புலியும் ஸிம்ஹமும் பாம்புமாம். வீட்டுக் கார்யங்களும், பலவிதமான கவர்ச்சிகளும் கால்கட்டுகளுமே ஏறமுடியாத பெரிய பெரிய மலைகள். மோஹம், மதம் எல்லாம் வநங்கள். பலவிதமான குதர்க்கங்கள் பயங்கர நதிகள். ச்ரத்தா ரூபமான வழிச் செலவுப் பணம் (கையில்) இல்லாதவர்கள் ஸாதுக்களின் துணை இல்லாதவர், ரகுநாதன் ப்ரியம் இல்லாதவர்களுக்கு மாநஸ் அடையவே முடியாது. அப்படியும் கஷ்டப்பட்டுப் போய் சேர்ந்துவிட்டாலும், அங்கே சேர்ந்தவுடன் தூக்கம் ரூபமான குளிர் காய்ச்சல் பற்றிக்கொள்ளும். அவன் ஹ்ருதயம் உணர்விழந்து உதறல் வசமாகி - அபாக்யவான் - ஸ்நாநம் பண்ண முடியாது. ஸரஸ்ஸில் ஸ்நாநம் பண்ண முடியாது; அந்த ஜலத்தைப் பருக முடியாது. கர்வத்துடன் திரும்புவான். பிறகு யாரேனும் அவனைக் கேட்டால் ஸரோவரத்தைத் திட்டுவான்.

அழகான க்ருபையுடன் ராமன் யாரைப் பார்ப்பாரோ அவனுக்கு இந்தக் கஷ்டங்கள் ஒன்றுமே வராது. அவனே மரியாதையுடன் ஸ்நானம் பண்ணுவான். மஹா பயங்கரமான

* மூன்றுவித தாபங்களும் அவனை எரிக்க மாட்டா. யாருடைய ஹ்ருதயத்தில் ராம-சரணங்களில் திடமான பாவம் இருக்குமோ அவன் ஸரோவரத்தை ஒருபோதும் விடமாட்டான். இந்த ஸரோவரத்தில் ஸ்நானம் பண்ண ஆசைப்படுவார் ஸத்ஸங்கம் பண்ணுவாராக. இத்தகைய மானஸ்ஸை மனக் கண்ணால் பார்த்து, அதில் ஸ்நானம் பண்ணி, கவியின் புத்தி ஹ்ருதயத்தில் ஆனந்தம் உத்ஸாஹம் நிறைந்தது. ப்ரேமை, ப்ரமோதம் பொங்கி எழுந்தன.

மனதார நிதித்யாஸனம் நிர்மலமாகியது.

ஸரயு ரூபகம், ஹிந்தி பேசும் நாட்டின் பரப்பு, க்ரந்த ப்ரசாரம்.

அழகான நதிபோல கவிதை பெருகி வெளிப் பட்டது. அதில் ராமனின் விமல யசஸ் ரூபமான ஜலம் நிரம்பி ஓடியது. அதன் பெயர் ஸரயூ. அது எல்லா மங்கலத்துக் கும் வேர். லோகமதமும், வேத மதமும், அதன் அழகானகரைகள். இந்த பவித்ர மான நதி மானஸரஸ்ஸின் கன்னி. கலியுக பாபமெனும் புல்லை, மரத்தை வேரோடு பெயர்த்துப் பாய்வது. மூன்று வித மான ச்ரோதாக் (கதை கேட்பவர்)களின் ஸமூகங்களே இரு கரைகளிலும் * புரங்கள், க்ராமங்கள், நகரங்கள். எல்லா மங்க லங்களுக்கும் வேர். ஸாதுக்களின் *ஸபையே உபமானம் சொல்ல முடியாத அயோத்யா. நல்ல * கீர்த்திரூபமான ஸரயு போய் ராமபக்தி ரூபமான கங்காவில் கலக்கிறது. தம்பிகளுடன் கூட ராமன் அடைந்த போர்ப்புகழ் மஹாநதமான சோணும் அதில் கலக்கிறது. இரண்டுக்கும் இடையில் பக்தி ரூபமான கங்கா வின் ஓட்டம்; அழகான விசாரத்துடன் சோபிக்கிறது. இப்படி மூன்றுவித தாபங்களுக்கும் பயம் உண்டாக்கும் 'த்ரிமுஹாநி' ராம ஸ்வரூபமான ஸமுத்ரத்தை நோக்கிப் பாய்கிறது.

எதனுடைய மூலம் மானஸமோ அந்த ஸரயூ கங்காவில் போய்க் கலக்கிறது. இதைக் கேட்டலுமே ஸுஜநங்களின் மனதைப் பவித்ரமாக்குகிறது. இடை இடையே வரும் கதைப் பாகங்கள் நதிக்கரையில் வநங்களும் தோப்புகளுமாம். உமா-மஹேச விவாஹத்தில் பிள்ளை வீட்டார் ஊர்வலத்திலிருந் தோரே அநேக வித *ஜல ஜந்துக்கள். ரகுவரனின் ஜன்ம (கதை) யின் ஆனந்தம் உத்ஸவமே இந்த நதியின் சுழல்களும் அலைகளும் தெரிக்கும் அழகாம். நாலு ஸஹோதரர்களின் பால சரிதங்கள் வண்ண வண்ணமான அநேக * கமலங்கள். ராஜா, ராணி குடும் பத்தாரின் * புண்யங்கள் வண்டுகளும், ஜல பக்ஷிகளுமாம். ஸீதா வின் ஸ்வயம்வரத்தின் அழகான கதையே அழகான நதியில்

பரவியுள்ள அழகு. அநேக விதமான *உத்தமமான கேள்விகள் இந்த நதியில் படகுகள். இவற்றின் விவேக மயமான விடைகள் ஸாமர்த்யமுள்ள படகோட்டிகள். கதை கேட்டபின் ச்ரோதாக்கள் திரும்ப அதைத் தமக்குள் உரையாக்கிப் பார்ப்பதுதான் நதியில் வழிப்போக்கர் ஸமாஜத்தின் சோபை. பரசுராமரின் கோபம் கோரமான ஆறு. ராமனின் (விடை) சிறந்த வாக்கு மிக திடமாக அமைக்கப்பட்ட துறைகள். ஸஹோதரருடன் ராமனின் விவாஹ உத்ஸவம், நதியின் சுபமான வெள்ளப் பெருக்கு. எல்லாருக்கும் நல்லது. சொல்ல, கேட்க, ஜனங்கள் மெய்சிலிர்க்கும். ஸந்தோஷமடைகிறார்கள். அவர்கள் புண்ய ஆத்மாக்கள். மலர்ந்த மனத்துடன் ஸ்நாநம் பண்ணுவர்.

ராமனின் பட்டாபிஷேகத்திற்காக ஏற்பாடுகள் பண்ணி னவை பர்வாக்களில் உண்டாகும் கோலாஹலமாம். கைகேயி யின் கெட்ட புத்தி பாசியாம். அதன் பலன் ரூபமாக கோர விபத் துக்கள் உண்டாயின. எல்லையில்லாத கேடுகள் அடங்க பரத னுடைய சரித்ரம் *ஜப யக்ஞம். கலியுகத்தின் பாபங்களும், துஷ்டர்களின் தோஷங்களும் வர்ணனை பண்ணியிருப்பதே ஜலத் தின் மலத்தை (பாசியை)த் தின்னும்கொக்கு, காகம்.

கீர்த்தி ரூபமான நதிஆறு ருதுக்களிலும் அழகாக இருக்கும். அந்தந்த ஸமயத்தில் இனிமையாக, எல்லையிலாத பவித்ரமாக இருக்கும். ஹிம-சைல ஸுதா (பார்வதி)- சிவன் விவாஹம் பனி-காலம் (ஹேமந்தருது) ப்ரபுவின் ஜன்மோத்ஸவம் ஸுகம் தரும் (சிசிரருது) பின்பனிக்காலம். ராம-விவாஹ ஸமாஜ வர்ணனை ஆனந்த மங்கள மயமான ருதுக்களின் ராஜா வஸந்தருது. ராம-வநகமனம் ஸஹிக்கமுடியாத (க்ரீஷ்மருது) வெயில் காலம், வழியைப் பற்றிய கதை கடுமையான வெயிலும், அனல் காற் றும். ராக்ஷஸர்களுடன் செய்த கோர யுத்தம் (வர்ஷாருது) மழை காலம். தேவதைகள் ரூபமான நெல் பயிருக்கு அழகாக நன்மை பண்ணும். ராம ராஜ்யத்தில் ஸுகம், விநயம், பெருமையே, அழகான ஸுகம் தரும் நிர்மலமான சரத்-ருது. ஸதிகளின் சிரோமணியான ஸீதா-வின் குணங்களின் கதை அந்த நிர்மலமான, உபமானமிலாத, ஜலத்தின் குணம்.

பரதனின் ஸ்வபாவமே அழகான குளுமை. எப்போதும் ஒரே ரஸமானது. அதை வர்ணிக்கவே முடியாது.

பார்ப்பது, பேசுவது, ஸந்திப்பது, ப்ரீதி பரஸ்பர ஹாஸ்யம், நாலு ஸஹோதரர்களின் உத்தமமான ஸஹோதரத்வம், இவையே ஜலத்தின் இனிமை, நல்ல மணம்.

என் குழப்பம், விநயம், சோர்வு ரூபமான அழகான அல்பத் தனம், இவைகளுக்கு இந்த அழகான ஜலத்தில் குறைவில்லே. (ஏராளமாகஇருக்கும்) மிகவும் அத்புதமான ஜலம்; கேட்டவுடன் குணமாக்கிவிட வல்லது. ஆசை ரூபமான மன-மலத்தை அகற்றி விட வல்லது.

இந்த அழகான ஜலம் ராமனிடம் அழகான ப்ரேமையை வளர்க்க வல்லது. கலியுக பாபங்களால் உண்டாகும் வாட்டத்தை அகற்றும். ஸம்ஸாரத்தின் சோர்வை உலர்த்திவிடும்; ஸந்தோஷத்தையே ஸந்தோஷப் படுத்தும். பாபம், துக்கம் தரித்ரத் தன்மை ரூபமான தோஷங்களே அழிக்கும். காமம்-க்ரோத-மத-மோஹங்களே அழித்து விடும். நிர்மலமான விவேகம், வைராக்யம் அதிகமாக்கும். மரியாதையாக ஸ்நாநம், பானம் பண்ணிுல் ஹ்ருதயத்தின் எல்லா பாபமும், துக்கமும் அழியும்.

இந்த ஜலத்தால் தன் மனத்தைக் கழுவாதவர், கோழைகள் இவர்களே கலிகாலம் ஏய்த்துவிடும். தாஹமெடுத்த மான் காநல் நீரை ஜலம் என்றெண்ணி அதனண்டை போக விரும்புகிறது. (துக்கம் அன்றி வேறெதும் கிடைக்காது). அதுபோல மநிதன் துக்கமடைந்து திரிகிருன்.

தன் புத்தியின்படி அழகான ஜலத்தின் குணங்களேக் கணக்குப்பண்ணி, மனத்தால் ஸ்நாநம் பண்ணி, பவாநி—சங்கரர்களே ஸ்மரணம் பண்ணி, கவி (துளஸிதாஸன்) இனிமையான கதை * சொல்வான். ப்ரஸாத ரூபமாக அடைந்து ரகுபதி-பத-தாமரையை மனத்தில் அணிந்துகொண்டு இரண்டு முநிவர்களும் ஸந்தித்ததையும், அழகான ஸம்வாதத்தையும் * சொல்வேன்.

---

* 19-வது தடவை * 20-வது தடவை

பரத்வாஜ-யாக்ஞவல்க்ய ஸம்வாதம்

பரத்வாஜ முனி ப்ரயாக ராஜாவில் வஸித்துக்கொண்டிருந்தார். அவருக்கு ராம-சரணங்களில் மிகவும் அநுராக மிருந்தது. தபஸ்வி, அவர், சம-தம-தயா களின் இருப்பிடம். பரமார்த்த மார்க்கத்தில் பெரிய நிபுணர். மாக மாஸத்தில் ஸூர்யன் மகர ராசியில் வரும்[போது] எல்லாரும் தீர்த்த ராஜாவான ப்ரயாகையில் வந்து சேர்வார்கள். தேவர், தைத்யர், கிந்-நரர், மநிதர் கூட்டங்கள் எல்லாம் பக்தி மரியாதையுடன் த்ரிவேணியில் ஸ்நாநம் பண்ணுகிறார்கள். மாதவனின் சரண கமலங்களைப் பூஜை பண்ணுகிறார்கள். அக்ஷயவட [ஆல மரம்]த்தை ஸ்பர்சித்து புளகித-மடைகிறார்கள்.

பரத்வாஜ ஆச்ரமம் மிகவும் பாவநமானது. அழகானது. முனிவரில் சிறந்தவர்களுக்கு அதுமிகவும் இஷ்டமானது. ப்ரயாகையில் ஸ்நாநம் பண்ண வந்த ருஷி முனிவர்கள் அங்கேதான் கூடினார்கள். ப்ராத: காலத்தில் எல்லாரும் உத்ஸாஹமாக ஸ்நாநம் பண்ணினார்கள். ஒருவருக்கொருவர் பகவானின் குணங்களின் கதை சொன்னார்கள். ப்ரஹ்ம நிரூபணம் பண்ணினார்கள். தர்மத்தின்விதி, தத்வத்தின்விபாகங்கள் வர்ணனைபண்ணினார்கள். க்ஞானம் வைராக்யம் சேர்ந்த ஈச்வர பக்திக் கதை சொன்னார்கள். இந்த மாதிரி மாக மாஸம் முழுதும் ஸ்நானம் பண்ணினார்கள். அதன்பிறகு எல்லாரும் அவரவர் ஆச்ரமத்திற்குப் போனார்கள். ஒவ்வொரு வர்ஷமும் எல்லையில்லாத ஆனந்தம் உண்டாயிற்று. முனிவர்கள் மகர [தை மாத] ஸ்நாநம் பண்ணிவிட்டுப் போனார்கள்.

ஒரு வர்ஷம் மகர மாதம் முழுதும் ஸ்நானம் பண்ணிவிட்டு எல்லா முநீச்வரர்களும் அவரவர் ஆச்ரமத்துக்குப் போனார்கள், ஆனால் பரம விவேகி யாக்ஞவல்க்ய முனிவரை பரத்வாஜர் அவர் சரணங்களைப் பிடித்துக்கொண்டு அவர் போக விடாமல் தடுத்தார். மரியாதையுடன் அவர் சரண கமலங்களை நீராட்டினார். மிகப் புநிதமான ஆஸனத்தில் அமரச்செய்தார். பூஜை பண்ணி அவருடைய ஸு-யசஸ்ஸைப் புகழ்ந்தார்; மிகவும் புநிதமாக இனிமையாகச் சொல்வார். ''வேதங்களின் தத்த்வம் எல்லாம் உங்கள் கையில் உள்ளன. ஹே நாத! என் ஹ்ருதயத்தில் ஒரு பெரிய ஸந்தேஹம் இருக்கிறது. அதைச் சொல்ல எனக்குப் பயமும், வெட்கமும் உண்டாகிறது. சொல்லாவிட்டாலும் பெரிய கேடு உண்டாகும். ஹே ப்ரபோ! ஸந்த ஜனங்கள் இப்படி நீதி சொல்கிறார்கள்—ச்ருதி, புராணம், முனிவர்களும்கூட இதைக் கானம் பண்ணுகிறார்கள்.

— குருவிடமிருந்து ஏதேனும் ஒளித்துக் கொண்டால் ஹ்ருதயத்தில் நிர்மல விவேகம் உண்டாகாது. இதை யோசித்து நான் என் மோஹத்தை வெளிப்படையாகச் சொல்கிறேன். தாங்கள் அடியேனிடம் கருணை வைத்து அதைப் போக்குங்கள்.

ராமநாமத்துக்கு அபாரமான ப்ரபாவம் இருக்கிறது. ஸாதுக்கள், புராணங்கள் உபநிஷத்துக்கள் அதைப்பாடுகின்றன. அவிநாசி, க்ஞானகுண ராசி, பகவான் சம்பு அதை எப்போதும் ஜபம்பண்ணுகிறார். ஸம்ஸாரத்தின் ஜீவன்களில் 4 வகைகள் இருக்கின்றன. எதுமே காசியில் மரணமடைந்தால் பரமபதம் அடைகின்றது. ஹே முநிராஜ! அதுமே ராம மஹிமையால் ஏற்படுகிறது. சிவனார் தயவு பண்ணி உபதேசம் கொடுக்கிறார். ஹே ப்ரபோ! நான் தங்களைக்கேட்கிறேன்.

அந்த ராமன் யார்?

ஹே க்ருபாஸாகர, எனக்குத் தெளிவாக்குங்கள். ஒரு ராமன் அயோத்யா ராஜாவின் புத்ரன். அவருடைய சரிதம் ஜகத்தெங்கும் தெரியும். அவர் மனைவியின் பிரிவால் அபார துக்கம் அடைந்தார். கோபம் வந்தது - ராவணனை யுத்தத்தில் கொன்றார். ஹே ப்ரபோ! த்ரிபுராரி ஜபம் பண்ணுவது அதே ராமனா? அல்லது வேறொருவரா? தாங்கள் ஸத்ய தாமம்! ஸர்வக்ஞர்! ஆராய்ந்து சொல்ல வேண்டுகிறேன். நாத எப்படிச் சொன்னால் என் பாரமான ப்ரமை போகுமோ அப்படி விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்''.

யாக்ஞவல்க்யர் சிரித்துவிட்டுச் சொன்னார். — ''உனக்கு ரகுபதியின் ப்ரபுத்வம் தெரியும். மனம்-வாக்கு-கர்மாக்களால் நீ ராம பக்தன். உன் ஸாமர்த்யம் எனக்குத் தெரிந்துவிட்டது, — ஸ்ரீ ராமனின் ரஹஸ்யமான குணங்களைத் தெரிந்துகொள்ள விரும்புகிறாய். அதற்காக அடிமுட்டாள்போல கேள்விகேட்டாய். அப்பனே, பயபக்தியுடன் மனமொன்றிக் கேள். ராமனின் அழகான கதை சொல்கிறேன். மஹா மோஹம் விசாலமான மஹிஷாஸுரன்; ராமனின் கதை பயங்கரமான காளிகா. ராமனின் கதை சந்த்ரனின் கிரணங்களாம்; ஸாதுக்கள் ரூபமான சகோரம் அதைப் பருகும்.

தென்துறை ஆரம்பம்

இதே ஸந்தேஹம்தான் பவானியும் பட்டாள். அப்போது மஹாதேவன் விளக்கிச் சொன்னார். நான் இப்போது என் புத்தியில் தெரிந்தபடி உமா-சம்பு ஸம்வாதம் எந்த ஸமயத்தில், என்ன காரணத்திற்காக ஏற்பட்டது என்று சொல்கிறேன்— முநியே, இதைக் கேட்டால் வருத்தம் போய்விடும்.

த்ரேதாயுகத்தில் ஒரு ஸமயம் சம்பு அகஸ்த்ய ருஷியிடம் போனார். அவருடன் ஜக-ஜநநீ ஸதியும் இருந்தாள். ருஷி அவரை எல்லா ஜகத்துக்கும் ஈச்வரனாக பூஜித்தார். முனிவரர் ராமகதை வர்ணனம் பண்ணினார். மஹேச்வரன் பரம ஸுக மாக அதைக் கருதி கேட்டார். பின்னர் முனிவர் உளம் மகிழும் ஹரிபக்தியைப் பற்றிக் கேட்டார். அவர் தகுந்த பாத்ரம்தான் என்று கருதி சிவன் சொன்னார்.— ரகுபதியின் குணங்களின் கதை களைக் கேட்டுக்கொண்டும், சொல்லிக்கொண்டும் கிரிநாதன் கொஞ்சநாள் வரை அங்கேயே இருந்தார். அதன்மேல் முனி வரிடம் விடைபெற்றுக்கொண்டு த்ரிபுராரி தக்ஷ குமாரியுடன் தன்னிடத்துக்குப் புறப்பட்டார்.

அதே நாளில் பூ-பாரம் அகற்ற ஹரி ரகு குலத்தில் அவ தாரம் பண்ணினார். பிதாவின் வாக்குப்படி ராஜ்யத்தைத் துறந்து தண்டக வநத்தில் அலைந்தார்.

ஹரன் தன் மனத்தில் யோசித்துக்கொண்டே போனார்.— எப்படி தர்சனம் பண்ணலாம்—ப்ரவு ஒளிவான ரூபத்தில் அவ தாரம் பண்ணியிருக்கிறார். அங்கே நான் இப்போது போனால் எல்லாரும் தெரிந்துகொண்டு விடுவார்கள். சங்கரன் மனஸில் குழப்பமுண்டாயிற்று. ஸதிக்கு இந்த வித்யாஸம் தெரியாது.

துளஸி ‘‘ அவர் மனத்தில் பயம் ’’ கண்களிலோ பார்க்க ஆவல்

ராவணன் மனுஷ்யன் கையால்தான் தனக்கு மரணம் ஏற்படலாம் என்று வரம் வாங்கிக்கொண்டிருக்கிறான். விதி அந்த வரம் கொடுத்ததை ப்ரபு ஸத்யமாக்க விரும்புகிறார். இப் போது நான் அவரிடம் போகாவிடில் மனத்தில் பச்சாத்தாபம் உண்டாகும். யோசித்தார். ஒன்றுமே ஸரியாக அமையவில்லை. மஹாதேவன் இப்படி சிந்தனை வசமாயிருந்தார்.

அதே சமயம் நீசனான தசசீஸன் (ராவணன்) போய் நீசனான மாரீசனை உடன் கூட்டிக்கொண்டு போனான். மாரீசன் உடனே கபடமான் ஆனான். அந்த மூடன் ராவணன் ஏமாற்றி வைதே ஹியை அபகரித்துக்கொண்டு போனான். ப்ரபுவின் ப்ரபாவம் எப்படி யிருக்கும் என அவனுக்குத் தெரியாது.

மானைக் கொன்றுவிட்டு தம்பியுடன் ஹரி திரும்பிவந்தார். ஆச்ரமத்தைப் பார்த்தார். கண்களில் நீர் நிறைந்தது. ரகுராயி மநிதர்களைப்போல வ்யாகுலமடைந்தார். [கலங்கினார்]! ஸஹோ

தரர்களிருவரும். ஸீதாவைத் தேடிக்கொண்டு வநத்தில் அலைந்தார்கள். எவருக்கு ஒரு காலும் சேர்க்கை பிரிவு ஏற்படாதோ அரை ப்ரத்யக்ஷமாக (கண்கூடாக) பிரிவு துக்கத்திலிருப்பதை சிவன் பார்த்தார்.

ரகுபதி சரித்ரம் மிகவும் விசித்ரமானது. பரம ஞானிக்குத் தான் அது தெரியும். மந்த புத்தியுள்வர்கள் மடமையின் வசத்தால் இதை வேறுவிதமாக நினைக்கிறுர்கள்.

சம்பு அப்போது ராமனைப் பார்த்தார். அவர் மனத்தில் மிக விசேஷமான ஸந்தோஷம் உண்டாயிற்று. அழகின் ஸமுத்ரமான ராமனை சிவன் கண்ணுரைப் பார்த்துக் கொண்டார். ஸந்தர்ப்பம் சரியில்லை என எண்ணி அவரை நேரில் ஸந்திக்கவில்லை.

'' ஜய ஸச்சிதானந்த ஜக பாவன! [ஜகத்தை பவித்ரமாக்குபவரான ஸச்சிதானந்த ''] என்று சொல்லிவிட்டு, காமனைக் கொன்றவரான க்ருபாநிதாஸன் சிவன் போனுர். மீண்டும் மீண்டும் ஆனந்தத்தால் புளகிதமடைந்து ஸதியுடன் போய்க் கொண்டிருந்தார்.

சம்புவினுடைய அந்த நிலையை ஸதி பார்த்தாள். அவள் மனத்தில் விசேஷமான ஸந்தேஹம் எழுந்தது—ஜகத் முழுதுமோ சங்கரனுக்கு வந்தனம் பண்ணுகிறது. ஜகத்துக்கெல்லாம் இவர் ஸ்வாமி. தேவர், மனிதர், முநிவர் எல்லாரும் இவருக்குத் தலை தாழ்த்துகிறுர்கள். இவர் போய் ஒரு ராஜபுத்ரனை 'ஸச்சிதானந்த பரதாம' என்று சொல்லி நமஸ்காரம் பண்ணினுரே! அவருடைய அழகைப்பார்த்து, இவர் அதில் இப்படி மூழ்கிப் போனுரே! இன்னம் ஹ்ருதயத்தில் அந்த ப்ரீதியை தடுத்தும் முடியவில்லையே! ப்ரஹ்மம்! எல்லாவற்றிலும் வியாபித்துள்ளவர். மாயா இலாதவர். அஜன்மா (ஜன்மமில்லாதவர்); கலையிலாதவர்; விருப்பமோ வித்யாஸமோ இலாதவர். வேதமே அவரை அறியாது. அப்படிப்பட்டவர் தேஹம் எடுத்துக் கொண்டு மநிதனுக வர முடியுமா என்ன? தேவர்களுக்காக விஷ்ணு மநித சரீரம் எடுத்துக்கொண்டார் என்முல், அவரும் சிவனுக்கு ஸமமாக ஸர்வக்ஞரே. அவர் க்ஞாநதாம; ஸ்ரீபதி; அஸுராரி; அக்ஞாநியைப் போல மனைவியைத் தேடுவாரா என்ன? சம்பு பகவானின் வாக்கோ பொய்யாகாது. சிவன் ஸர்வக்ஞன் என்று எல்லாருக்கும் தெரியும்'' இப்படி அபார ஸந்தேஹம் மனத்தில் பொங்கியது. எந்த விதத்திலும் க்ஞானம்

1. ப்ரஹ்மம் 2. அவதாரம்

உண்டாகவில்லை. பவாநி இதை வெளியில் சொல்லவில்லை என்றாலும் ஹரன் எல்லாம் தெரிந்துகொண்டுவிட்டார்.

''ஸதி! இதோ பார்! இது ஸ்த்ரீ ஸ்வபாவம்; இந்த மாதிரி ஸந்தேஹம் ஒரு காலும் மனதில் கொள்ளக்கூடாது. கும்பஜ முநிவர் எவருடைய கதையைப் பாடினாரோ, எவர்மேல் பக்தி பண்ணுவதைப் பற்றி நான் முநிவருக்குச் சொன்னேனோ, அதே ரகுவீரன் என் இஷ்ட தெய்வம். அவரை தீர முநிவர்கள் எப்போதும் ஸேவித்திருப்பார்கள். *முநிவர், *தீரர், *யோகிகள், *ஸித்தர்கள் — நிரந்தர சுத்த சித்தத்துடன் எவரை த்யானம் பண்ணுகிறார்களோ, வேதம்-புராணம்-சாஸ்த்ரம்கள் 'நேதி-நேதி' என்று சொல்லி எவருடைய கீர்த்தியைப் பாடுகின்றனவோ, அதே ப்ரஹ்மம், வ்யாபகள், புவன ஸமூஹங்களின் பதி, மாயாவின் ஸ்வாமி, ஸ்ரீ ராமன், தன் பக்தர்களுக்காக அவதாரம் பண்ணினார். ரகுகுலமணி நித்ய ஸ்வதந்த்ரன்'' என்றார் சிவன்.

பல தடவை சிவன் சொன்னார். அப்படியும் ஸதியின் ஹ்ருதயத்தில் உபதேசம் பிடிக்கவில்லை.

ஹரி-மாயாவின் பலம் எப்படிப் பட்டது என்று பார்த்ததும் மஹேசன் சிரித்தார். மேலும் சொன்னார் - ''உன் மனத்தில் பலமாக ஸந்தேஹம் இருந்தால் போய் பரீக்ஷை பண்ணுவது தானே. நீ திரும்பி வரும்வரை இந்த வட வ்ருக்ஷத்தின் நிழலில் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். உன் பாரமான மோஹத்தின் ப்ரமை என்ன செய்தால் அகலுமோ, விவேகத்துடன் நன்றாக யோசித்து அதைச் செய்'' என்றார்.

சிவனிடம் உத்தரவு பெற்று ஸதி போனாள். மனத்தில் [யோசிக்கலானாள்] — (மனஸே) என்ன பண்ணலாம்' என்று யோசிக்கலானாள்.

இங்கே சம்பு ''தக்ஷன் பெண்ணுக்கு இது நல்லதல்ல. நான் இத்தனை விளக்கிச் சொல்லியும் அவளுடைய ஸந்தேஹம் அகலவில்லை; இது விபரீதம்தான்! நல்லதாக இல்லை'' என்று மனத்தில் இப்படி அனுமானம் பண்ணிக்கொண்டார்: ''ராமன் என்ன அமைத்து வைத்திருக்கிறாரோ அதுதான் நடக்கும். தர்க்கம் பண்ணி கிளையைப் பெரிதாக்க முடியுமா என்ன?'' என்று சொல்லி ஹரிநாமம் ஜபம் பண்ணலானார். ஸுக-தாமன் எங்கே இருந்தாரோ அங்கே ஸதி போனாள். திரும்பத் திரும்ப மனத்தில் யோசித்தாள். ஸீதாவின் ரூபம் எடுத்துக்கொண்டு மனிதர்களின் ராஜா வந்துகொண்டிருந்த வழியில் போனாள்.

---

*1 ஞானமார்கி 2 உபஸனாமார்கி 3 யோகமார்கி 4 கர்மமார்கி

உமா பண்ணிக்கொண்டிருந்த ரூபத்தை லக்ஷ்மணன் பார்த்தான். திகைத்தான். ஹ்ருதயத்தில் விசேஷப்ரமை உண்டாயிற்று. மிகவும் கம்பீரமானவன். ஏதும் சொல்ல முடியவில்லை. மதி-தீரன். அவனுக்கு ப்ரபுவின் ப்ரபாவம் தெரியும்.

ஸுர ஸ்வாமி ஸதீயின் கபடத்தைத் தெரிந்துகொண்டார்- எல்லாவற்றையும் பார்ப்பவர். எல்லாருடைய ஹ்ருதயத்திலும் வசிப்பவரல்லவா ! எவரை ஸ்மரணம் பண்ணினாலே அக்ஞானம் அழியுமோ அதே ஸர்வக்ஞ பகவான் ராமன் !

ஸதி அங்கேயும் மறைக்க விரும்பினாள். ஸ்த்ரீயின் ஸ்பாவத்தின் ப்ரபாவத்தைப் பார் !

தன் மாயாவின் பலத்தை மனதுக்குள் பாராட்டிக்கொண்டு ராமன் சிரித்து இனிமையாகச் சொன்னான்.— கைகளைக் கூப்பிக் கொண்டு நமஸ்காரம் பண்ணினான். பிதா பெயரைச் சேர்த்துத் தன் பெயரைச் சொல்லிக்கொண்டான். ''வ்ருஷகேது எங்கே? தாங்கள் தனியே ஏன் அலைகிறீர்கள் ?'' என்றான்.

ராமனின் இனிமையான ஆனால் கூட (மறைமுகமான) சொல்லைக் கேட்டு ஸதிக்கு மிகவும் வெட்கம் உண்டாயிற்று. பயந்து மஹேசன் இருக்குமிடத்துக்கு வரலானாள். ஹ்ருதயத்தில் பெருங்கவலைஉண்டாயிற்று. ''சங்கரன் சொன்னதை நான் மதிக்கவில்லை (ஒப்புக்கொள்ளவில்லை). என் அக்ஞானத்தை ராமன்மேல் போட்டேன் (சுமத்தினேன்). இப்போது போய் என்ன சொல்லட்டும்?'' ஹ்ருதயத்தில் பெரிய கொடிய எரிச்சல் உண்டாயிற்று.

ஸதி மிகவும் துக்கப்படுவது ராமனுக்குத் தெரிந்தது. ஆகையால் கொஞ்சம் தன் ப்ரபாவத்தை வெளிப்படுத்திக்காட்டினான். போய்க்கொண்டிருந்த ஸதி வழியில் இப்படிஒரு வேடிக்கை பார்த்தாள்.— ராமன் ஸீதா லக்ஷ்மணனுடன் முன்னால் இருந்தான். திரும்பினாள்—ஸஹோதரன், ஸீதா இருவரும் உடனிருக்க ப்ரபு பேரழகான வேஷத்திலிருந்தார். எங்கே பார்த்தாலும் சரி, அங்கே ராமன் விளங்கினார். பண்டிதர்கள், ஸித்தர்கள், முநீசர்கள் அவருக்கு ஸேவை பண்ணிக்கொண்டிருந்தார்கள். அநேக சிவன்கள், ப்ரஹ்மாக்கள், விஷ்ணுக்கள்! ஒருவர் மற்றொருவரை விட எல்லையிலாத ப்ரபாவ முள்ளவராகத் தோன்றினர். ப்ரபுவின் சரணத்துக்கு வந்தனமும் ஸேவையும் பண்ணிக்கொண்டிருந்தனர். தேவர்கள் அநேக வேஷங்களிலிருந்ததை பாத்தாள். கணக்கிலாத, உபமானமிலாத ஸதீகள், ப்ரஹ்மாணிகள், லக்ஷ்மிகள்! எந்த வேஷத்தில் அஜன் முதலானோர் இருந்தார்களோ

அதற்கு ஒத்தபடி வேஷங்களில் இவர்களும் இருந்தார்கள். எங்கெங்கே எத்தனே ரகுபதிகள் இருந்தார்களோ, சக்திகளுடன் கூட அத்தனே மற்ற எல்லா தேவர்களும் இருந்தார்கள்—பார்த்தாள், ஸம்ஸாரத்திலும் எத்தனே சராசர ஜீவன்கள் உண்டு-அவையெல்லாம் அநேக விதமாகப் பார்த்தாள். அநேக வேஷங்கள் ஏந்தி தேவர்கள் ப்ரபுவைப் பூஜை பண்ணிக்கொண்டிருந்தாகள். ஆனுல் ராமன் மட்டும் வேறு வேஷத்தில் இல்லே. ஸீதா கூட இருக்கும் ரகுபதிகள் எத்தனேயோ இருந்தார்கள். ஆனுல் அவர்கள் அநேக வேஷங்களில் இல்லே. அதே ரகுவரன் அதே லக்ஷ்மணன், அதே ஸீதா — பார்த்து ஸதிக்கு பெரிய பயம் உண்டாயிற்று. ஹ்ருதயம் நடுங்கலாயிற்று. தேஹத்தில் உணர்வே பூராவும் போய்க் கொண்டிருந்தது. கண்களே மூடிக் கொண்டாள் அப்படியே உட்கார்ந்து விட்டாள். (மறுபடி) கண்ணேத் திறந்தாள். தக்ஷகுமாரிக்கு ஏதுமே காணப்படவில்லே. திரும்பத் திரும்ப ராம சரணத்தில் தலே தாழ்த்தினுள். கிரீஸன் இருந்த இடத்தை நோக்கிப் போனுன்.

பக்கத்தில் வந்ததும் சிவன் சிரித்தார். குசலம் விசாரித்தார். ''என்னமாதிரி பரீக்ஷை பண்ணினுய் எல்லாம் ஸத்யமாக அப்படியே சொல் என்ருர்.''

ரகுவீரனின் ப்ரபாவத்தை ஸதி நினேத்துக்கொண்டாள். பயமாயிருந்தது. ''குஸாயி ! (ஸ்வாமி !) நான் பரீக்ஷை ஏதும் பண்ணவில்லே. உங்களேப் போலவே நானும் நமஸ்காரம் பண்ணினேன். தாங்கள் சொன்னது பொய்யாகாது. இதில் என் மனத்தில் எல்லேயில்லாத விச்வாஸம் இருக்கிறது.'' என்ருள். உண்மையை மறைத்தாள்.

சங்கரன் த்யானம் பண்ணினுர். ஸதீ என்னென்ன பண்ணிஞளோ எல்லாம் தெரிந்துகொண்டார். ராமனின் மாயாவுக்கு நமஸ்காரம் பண்ணினுர். அதன் ஏவலால் ஸதியைப் பொய் சொல்ல வைக்கலாயிற்றே! ஹரியின் விருப்ப ரூபமாக நடக்க வேண்டியது மிகவும் பலமுள்ளது என்று எண்ணினுர் க்ஞானியான சம்பு. ஸதி ஸீதாவின் வேஷம் ஏந்தியது சிவனுக்கு விசேஷமான வருத்தம் கொடுத்தது. ''நான் ஸதியிடம் ப்ரீதி கொண்டால் பக்தி மார்கம் விழுந்துவிடும். பெரிய அநீதியாகும். ஆனுல் ஸதி மிகவும் பவித்ரமானவள். ஆகையால் அவளே விட முடியாது. ப்ரேமை கொண்டாலோ பெரிய பாபமாகும்'' என்று

எண்ணினர். ஆனல் வெளிப்படையாக மஹேஸன் ஏதும் சொல்ல வில்லை. ப்ரபு ராம சரணங்களில் நமஸ்காரம் பண்ணினர். ராமனை ஸ்மரணம் பண்ணினர். இந்த சரீரத்தில் ஸதியுடன் சேர்க்கை இனி கிடையாது என்று சிவன் மனஸில் ஸங்கல்பம் பண்ணினர். இப்படி ரகுவீரனை எண்ணியபடியே மதி தீரரான சங்கரன் கைலாசத்துக்குச் சென்ருர்.

அப்போது அழகான ஆகாசவாணி கேட்டது. ''ஜய, மஹேசா ! உங்கள் பக்தியை நன்ருக திடமாக்கி விட்டீர்கள், உங்களையன்றி வேறு யார் இப்படி ப்ரதிக்ஞை பண்ண முடியும். நீங்கள் ராம பக்தர்; ஸாமர்த்யமுள்ளவர். பகவான்.''

ஆகாச வாணியைக் கேட்ட ஸதியின் மனத்தில் துக்கம் உண்டாயிற்று. தயக்கத்துடன் சிவனைக் கேட்டாள். ஹே க்ருபாளு ! சொல்லுங்கள், என்ன ப்ரதிக்ஞை பண்ணினீர்கள் ? ப்ரபோ ! தாங்கள் ஸத்யதாம தீனதயாளன்''. ஸதி பல விதமாகக் கேட்டுப்பார்த்தாள்; ஆனல் த்ரிபுராந்தகன் சொல்ல வில்லை.

''ஸர்வக்ஞன் ! எல்லாம் தெரிந்துகொண்டு விட்டார்'' என ஸதி ஊஹித்துக்கொண்டாள். ''நான் சம்புவிடம் கபடம் பண்ணினேன். ஸ்வபாவமாகவே ஸ்த்ரீ ஜடம். அக்ஞானி ப்ரீதியின் நல்ல போக்கைப்பார் ! தண்ணீர் பாலுக்கு நிகராகிறது; ஆனல் கபடம் எனும் புளிப்பு பட்டவுடன் இரண்டும் தனித் தனியே பிரிந்து விடுகின்றன. ரஸம் இருப்பதில்லை''. தான் செய்ததை எண்ணவும் துக்கம் உண்டாயிற்று. விவரிக்க முடியாத வேதனை. ''சிவன் கம்பீரமானவர். என் அபராதத்தை (குற்றம்) வெளிப்படுத்தவில்லை. சங்கரன் முக பாவத்திலிருந்து ப்ரபு தன்னை த்யாகம் பண்ணிவிட்டார் என்று பவானி ஊஹித் துக் கொண்டாள். மனஸில் மிகவும் வ்யாகூலமுண்டாயிற்று. தான் குற்றவாளி என உணர்ந்து ஏதும் சொல்ல முடியவில்லை. ஆனல் மனஸ் காளவாய் போலக் காந்தியது.

ஸதி சோகமுற்றவளாகக் கண்ட வ்ருஷகேது ஸுகம் தரும்படி அழகான கதைகள் சொன்னர். வழியில் பலவிதமான இதிஹாஸங்கள் சொன்னர். விச்வநாதன் கைலாஸம் சேர்ந்தார். அங்கே மீண்டும் தன் ப்ரதிக்ஞையை சம்பு நினைத்துக்கொண்டார். வட வ்ருக்ஷத்தின் கீழ் பத்மாஸனத்தில் அமர்ந்து தன் ஸஹஜமான ஸ்வரூபத்தில் அகண்டமான, அபாரமான ஸமாதியில் இருந்தார்.

ஸதீ கைலாஸத்தில் வஸிக்கலானுள். மநஸில் மிகுந்த வேதனை. இந்த ரஹஸ்யம் (வித்யாஸம்) யாருக்கும் தெரியாது. ஆனல் அவளுக்கு ஒரு நாள் கழிவது ஒரு யுகம் போலிருந்தது. ஸதியின் மநஸில் நித்தம் ஒரு புது துக்கம் உண்டாயிற்று. ''இந்த துக்க ஸாகரத்தை எப்போது கடக்க முடியும் ! ரகுபதிக்கு அவமானம் இழைத்தேன். பதியின் வாக்கு பொய்யென்றெண்ணினேன். அதற்குப் பலனை விதாதா கொடுத்துவிட்டார். உசிதமானதைத்தான் பண்ணினுர். ஆனல் ஹே விதாதா, சங்கரன் பாராமுகமாயிருக்க என்னை உயிரோடு வைத்திருப்பது உசிதமில்லை''.

ஸதி புத்திசாலி. மனத்தில் ராமனை ஸ்மரணம் பண்ணினுள். ''ஹே ப்ரபோ ! நீங்கள் தீனதயாளன், கஷ்டத்தைப் போக்குபவர் என வேதம் சொல்லி யசஸ் பாடுகிறது. அப்படியானல் நான் கை கூப்பி வேண்டிக்கொள்கிறேன். சீக்ரமே என் சரீரம் விட்டுப் போகட்டும். சிவனின் சரண கமலங்களில் என் ஆசை, மனம், சொல், செயல்களால் என் வ்ரதம் ஸத்யமானது எனில் ஹே ஸர்வதர்சி, ப்ரபோ, கேளுங்கள். என் மரணம் ச்ரமமில்லாமல் ஆக வேண்டும். பொறுக்க முடியாத இந்தக் கஷ்டம் விட்டுப்போக வேண்டும். அப்படி ஒரு உபாயம் பண்ணுங்கள்!'' இப்படி ப்ரஜேசகுமாரி பாரமான, கடினமானதுக்கப்பட்டாள்.

1087 வர்ஷங்கள் ஆகியது. அவிநாசி சம்பு ஸமாதி கலைந்தார். சிவன் ராமநாமம் ஸ்மரணை பண்ணலானுர்.

ஜகத்பதி விழித்துக்கொண்டார் என்று ஸதி தெரிந்துகொண்டாள். போனுள். சம்பு பாதங்களில் நமஸ்காரம் பண்ணினுள். அவர் அவள் உட்கார தன் முன்னல் ஆஸனம் கொடுத்தார். இனிமையான ஹரிகதைகள் சொல்லலானுர்.

அதே ஸமயம் தக்ஷன் ப்ரஜேசன் ஆனுன். விதி யோசித்து உணர்ந்தார்.— தக்ஷன் எல்லா விதத்திலும் தகுதி யுள்ளவன் என்று தெரிந்தது. ப்ரஜாபதிகளின் நாயகனுக்கினுர்.

பெரிய அதிகாரம் அடைந்தவுடன் தக்ஷன் மநஸில் மஹாகர்வம் உண்டாயிற்று. ப்ரபுத்வம் அடைந்து கர்வம் கொள்ளாதவர் ஸம்ஸாரத்தில் யாருமே இல்லை.

தக்ஷன் எல்லா முநிவர்களையும் அழைத்தான். பெரிய யாகம் பண்ணலானுன். அதில் பாகம் பெறவேண்டிய எல்லா தேவர்களுக்கும் மரியாதை மிக அழைப்பு அனுப்பினுன். கிந்நரர், நாகர், ஸித்தர், கந்தர்வர் முதலான எல்லா தேவர்களும்

அவரவர் பத்நிகளுடன் போனுர்கள். விஷ்ணு, விரிஞ்சி, மஹே சன் தவிர மற்ற எல்லாரும் அவரவர் விமானங்களை ஏற்பாடு பண்ணிக்கொண்டு போனுர்கள்.

ஆகாசத்தில் அநேகவிதமான விமானங்கள் போய்க்கொண் டிருந்ததை ஸதீ பார்த்தாள். தேவர்களின் மனைவிகள் இனிமை யாகப் பாடிக்கொண்டு போனுர்கள். முநிவர்களின் த்யானமும் கலையும்படி அது அவ்வளவு இனிமையாயிருந்தது. கேட்டாள். சிவன் விளக்கிச் சொன்னுர்.

பிதாவின் யக்ஞத்தைப்பற்றிக் கேட்ட ஸதீக்கு ஸந்தோஷம் உண்டாயிற்று. மஹேசன் உத்தரவு கொடுத்தால் இந்த சாக்கில் அங்கே போய்க் கொஞ்ச நாள் இருக்கலாமே! பதி கைவிட்டது மனத்தில் பெரும் பாரமான துக்கம் தந்தது. ஆனுல் தன் அபராதத்தை எண்ணி ஒன்றும் சொல்லவில்லை. பயம், ஸங்கோசம், ப்ரேமை தோய்ந்த இனிய வாக்கில் சொன்னுள்.— பிதாவின் வீட்டில் பெரிய உத்ஸவம்! ப்ரபோ! தங்கள் ஆக்ஞை கிடைத்தால், க்ருபாயதன, நானும் தக்க மரியாதையுடன் அதைப் போய்ப் பார்க்கலாம்.

''நீ சொன்னது சரி, எனக்கும் இஷ்டம்தான். ஆனுல் அவன் அழைக்கவில்லை. ஆகையால் போவது உசிதமில்லை. தக்ஷன் தன் புத்ரிகள் எல்லாரையும் அழைத்திருக்கிருன். ஆனுல் என் னிடம் உள்ள பகையால் உன்னைக்கூட அழைக்கவில்லை. ப்ரஹ்மா வினுடைய ஸபையில் அவன் நம்மைப்பற்றி துக்கமடைந்தான். அதனுல் இதுவரை நமக்கு அவமானம் இழைத்து வருகிருன். பவாநி, அழைக்காமலே நீ போவாயேல், அது சீலமில்லை. ஸ்நேஹ மும் இராது, மரியாதையுமிருக்காது. நண்பன், ஸ்வாமி, பிதா, குரு—களின் வீட்டுக்கு அழைக்காவிட்டாலும் போகலாம். அதில் ஸந்தேஹமில்லை. இருந்தாலும் விரோதம் கொண்ட இடத்திற்கு போனுல் நல்லதல்ல''. சம்பு அநேக விதமாக எடுத்துச் சொன் னுர். ஆனுல் விதிவசத்தால் ஸதீயின் ஹ்ருதயத்தில் க்ஞான முண்டாகவில்லை.

''அழைப்பில்லாமலே போனுல் அது ஸரியில்லை என்பது என் எண்ணம்'' என்ருர் ப்ரபு. ஹரன் எத்தனை விதமாக விளக்கிச் சொல்லியும், முயற்சி பண்ணியும் தக்ஷ குமாரி மனஸில் இருக்க இஷ்டமில்லை எனத் தெரிந்ததும், தன் முக்ய கணங்கள் துணை யுடன் த்ரிபுராரி அவளுக்குப்போக அனுமதி கொடுத்தார்.

4

பவாநி பிதாவின் வீட்டுக்குப் போனுள். யாரும் அவளுக்கு மரியாதை கொடுக்கவில்லே. தக்ஷனிடம் அவர்களுக்கு பயம்! தாயார் ஒருத்தி மட்டும் அன்புடன் எதிர்கொண்டழைத்தாள். ஸஹோதரிகளும் கூட வந்தார்கள், ஆனுல் சிரித்தார்கள். தக்ஷன் குசலம் விசாரிக்கவில்லே. ஸதியைப் பார்த்து அவன் சரீரத்தில் முழுதும் எரிச்சல்தான் உண்டாயிற்று.

ஸதி போய் யக்ஞத்தைப் பாத்தாள். சிவனுக்கு பாகம் எங்குமே இல்லே. சிவன் சொன்னது நினைவு வந்தது. ஸ்வாமிக்கு இழைக்கப்பட்ட அவமானத்தை உணர்ந்தாள். அவளுடைய ஹ்ருதயம் காந்தியது. இந்தத் தாபம் போல் முன்னேய துக்கம் கூட அவ்வளவு எரிக்கவில்லே. ஜகத்தில் எத்தனேயோவித துக்கம் உண்டு. ஆனுல் தன்னவருக்கு அவமானம் உண்டானுல் அது எல்லாவற்றையும்விடக் கடினமானது. இதை எண்ணி ஸதீக்குக் கடும் கோபம் வந்தது. தாயார் அவளேப் பலவிதமாகத் தேற்றி ஞள். ஆனுல் சிவனுக்கு ஏற்பட்ட அபராதத்தை அவளால் பொறுக்க முடியவில்லே. தேற்றியது ஏதும் அவளேத் தேற்ற வில்லே. மிடுக்காக ஸபை முழுவதையும் தடுத்து எதிர்த்துக் கோபமாக ''ஸபா ஸதர்களே! முநீஸ்வரர்களே! கேளுங்கள். இங்கே யார் யார் சங்கரனேத் தூற்றினுர்களோ, தூற்றுவதைக் கேட்டுக்கொண்டிருந்தார்களோ, அவர்கள் எல்லோருக்கும் சீக்கிரமே பலன் கிடைக்கப் போகிறது. என் பிதாவும் நன்ருக வருத்தப்படப் போகிருர். ஸாதுக்கள், சம்பு, ஸ்ரீபதி பற்றி அபவாதம் எங்கே கேள்விப்பட்டாலும் அங்கே இப்படி நீதி நடக்கும்—முடிந்தால் சொல்வார் நாக்கை அறுக்கவேண்டும். அல்லது காதுகளேப் பொத்திக்கொண்டு அங்கிருந்து ஓடிப்போக வேண்டும். ஜகத்தின் ஆத்மா மஹேச்வரன், த்ரிபுராந்தகன், ஜகத்தின் தந்தை, ஜகத்துக்கு நல்லது பண்ணுபவர். அவரை நிந்தை பண்ணிக்கொண்டிருக்கிருர் இந்த மந்த மதியான தந்தை. இதே தக்ஷனுடைய வீர்யத்திலிருந்து இந்த தேஹம் உண்டாகியது, ஆகையால் சந்ரமௌலி வ்ருஷகேதுவை ஹ்ருதயத்தில் கொண்டு நான் இந்த தேஹத்தை விடப்போகிறேன்'' என்ருள்.

யோகாக்னியில் உடலே பஸ்மமாக்கிவிட்டாள்.

யக்ஞ சாலே முழுவதும் 'ஹா ஹா' என்ற ஒலி நிறைந்தது.

ஸதியின் மரணம் ருத்ரகணங்களுக்குத்தெரிந்தது. யக்ஞத்தை த்வம்ஸம் பண்ணலானுர்கள்.

முநீஸ்வரர் ப்ருகு அதைப் பார்த்து அதைக் காப்பாற்றினுர்.

எல்லா ஸமாசாரமும் சங்கரனுக்குக் கிடைத்தது. அவருக்குக் கோபம் பொங்கியது. வீரபத்ரனே அனுப்பினர் .அவன்போய் யக்ஞத்தை த்வம்ஸம் பண்ணினன். எல்லா தேவர்களுக்கும் தக்க பலன் தந்தான். சிவனிடம் பாராமுகமானவர்க்குக் கிடைக்கும் ஜகத் ப்ரஸித்தமான அந்த கதி தக்ஷனுக்கு ஏற்பட்டது.

இந்தக் கதை உலகமெலாம் தெரியும். ஆகையால் நான் சுருக்கமாகச் சொன்னேன்.

மரிக்கும்போது ஸதீ ஹரியிடம் வரம் கேட்டுக்கொண்டாள்— ஜன்மம் தோறும் சிவனின் சரணங்களில் ப்ரேமை இருக்க வேண்டும்.

இதனல் ஹிம கிரி வீட்டில் போய் பார்வதியாக சரீரம் எடுத்துக்கொண்டு பிறந்தாள்.

அப்போது முதலாக அங்கே எல்லா ஸித்திகளும், ஸம்பத்துகளும் நிறைந்தன. முனிவர்கள் அங்கங்கே நல்ல ஆஸ்ரமம் அமைத்துக் கொண்டார்கள். *ஹிம பூதரன் அவர்களுக்கு உசிதமான இடம் அளித்தான். மலேமேல் விதம் விதமான புதிய மரங்கள் பூத்துப் பழுத்துக் குலுங்கின. மணிகள் உள்ள பல வகையான சுரங்கங்கள் காணப்பட்டன. எல்லா நதிகளிலும் பவித்ரமான ஜலம் பாய்ந்தது. பக்ஷி, மிருகங்கள், வண்டுகள் எல்லாம் ஸுக மாயின. உயிரினங்கள் ஸ்வபாவமான பகை விட்டு எல்லாம் மலேயில் அநுராகம் கொள்ளலாயின. வீட்டில் கிரிஜா வந்த முதலாக மலேயில் ஒரு சோபை உண்டாகியது. ராம பக்தி அடைந்த ஒருவனுக்கு ஏற்படுவது போல இருந்தது. ப்ரஹ்மா முதலானவர் பாடும் அவருடைய வீடு நித்தம் புது மங்களம் உள்ளதாயிற்று.

நாரதருக்கு எல்லா ஸமாசாரமும் கிடைத்தது. வேடிக்கை பார்க்க ஹிமவான் வீட்டுக்கு வந்தார். கிரி அவருக்குப் பெரிய மரியாதை பண்ணினன்.பாதங்களை நீராட்டினன்.ச்ரேஷ்டமான ஆஸனம் அளித்தான். மனேவியும், தானும் அவர் பாதங்களில் தலே தாழ்த்தினன். அவருடைய சரணோதகத்தை வீடு எங்கும் ப்ரோக்ஷித்தான், தன் பாக்யத்தை மிகவும் பாராட்டிக்கொண்டான். புத்ரியை அழைத்தான். முனிவரின் சரணங்களில் பணியச் செய்தான். ''தாங்கள் த்ரிகாலக்ஞர். தாங்கள் எங்கும் போகிறவர். ஹே முனிவர! ஹ்ருதயத்தில் நன்ருக ஆராய்ந்து என் புத்ரியின் குண-தோஷங்களே எடுத்துச்சொல்ல வேண்டுகிறேன்'' என்ருன்.

* ஹிமய மலே (பூமியைத் தாங்குபவன்)

முனிவர் சிரித்தார். கூடமாக (பொருள் பதிந்ததாக)இனிமையாகச் சொல்வார்.—''உன் புத்ரி எல்லா குணங்களும் இருக்குமிடம். ஸ்வபாவமாகவே அழகு. நல்ல சீலம். புத்திசாலி. அவளுடைய பெயர் உமா, அம்பிகா, பவாநி. பெண்ணுக்கு எல்லா லக்ஷணங்களும் பொருந்தியிருக்கின்றன. இவளுடைய பதிக்கு இவள் எப்போதும் ப்ரியமாயிருப்பாள். இவளுடைய ஸௌபாக்யம் எப்போதும் அசைக்கவொண்ணததாயிருக்கும். இவளுடைய மாதா-பிதா புகழ் அடைவார்கள். ஜகத் எங்கும் இவள் பூஜிக்கத் தக்கவளாவாள். இவள் ஸேவை பண்ணுவோருக்கு ஏதுமே கிடைக்காததாகாது. ஸம்ஸாரத்தில் இவள் நாமத்தை ஸ்மரணம் பண்ணிக்கொண்டால் ஸ்த்ரீகள் பதிவ்ரதம் ரூபமான கத்தி முனையில் நடந்து செல்வார்கள். சைல, உன் புத்ரி நல்ல லக்ஷணங்கள் பொருந்தியவள்.

இரண்டொரு தோஷங்கள் இருக்கின்றன. அவைகளையும் கேள். [அகுண- அமாந - மாத்ரு - பித்ருஹீந - உதாஸீந, க்ஷீண ஸம்சய-யோகி] குணமிலா-மாநமிலா -தாய்தந்தையரிலா-பற்றிலா-ஐயமிலா-யோகி-சடையன்-காமமிலா மனமுடைய-அமண-அசுப வேஷமுள்ள-ஸ்வாமி இவளுக்குக் கிடைப்பான். அந்த மாதிரி ரேகைகள் இவள் கையில் அமைந்திருக்கின்றன.

முனிவர் சொன்னதைக் கேட்டார்கள். ஹ்ருதயத்தில் அதெல்லாம் ஸத்யமே என்று தெரிந்துகொண்டார்கள். தம்பதிகளுக்கு துக்கம் உண்டாயிற்று. உமா ஸந்தோஷமடைந்தாள். நாரதருக்கும் இந்த மர்மம் தெரியாது. ஏனெனில் எல்லாருடைய நிலையும் அப்படியே ஒன்றுகவே இருந்தது. புரிந்துகொள்வதில் தான் பேதம். எல்லா சகிகள்-கிரிஜா, கிரி, மேனு - எல்லாருக்கும் மெய் சிலிர்த்தது. கண்களில் நீர் பெருகியது. தேவர்ஷி சொன்னது பொய்யாகாது. உமா இதை ஹ்ருதயத்தில் பதித்துக் கொண்டாள். சிவ-பத-கமலத்தில் ஸ்நேஹம் உண்டாகியது. ஆனல் மநஸில் ஸந்தேஹமுண்டாகியது.— சேர்வது கடினமே! ஸமயம் ஸரியில்லை உன்று உள்ளத்திலேயே ஒளித்துக் கொண்டாள். போய் ஸகியின் மடியில் அமர்ந்தாள்.

''தேவருஷியின் வாக்கு பொய்யாகாது'' இந்த விஷயத்தை தம்பதிகளும் புத்திசாலிகளான ஸகிகளும் யோசிக்கலானுர்கள். ஹ்ருதயத்தில் தைர்யம் கொண்டு ஹிமவான் சொன்னுன்.— ''நாத! சொல்லுங்கள். என்ன உபாயம் செய்யலாம்?''

முநீசன் சொன்னார்.— ''ஹிமவந்த ; கேள். விதி நெற்றியில் எழுதியதை தேவர்-தநுஜர் - நரர்-நாகர்-முநிவர்-யாரும் அழிக்க முடியாது. இருந்தாலும் நான் ஒரு உபாயம் சொல்கிறேன்;—ப்ராரப்தம் சேர்ந்துவந்தால் நடக்கும். எந்த மாதிரி வரன் வர்ணித்தேனோ அதே மாதிரிதான் உமாவுக்கு அமையும். அதில் ஸந்தேஹமில்லை. என்ன-என்ன தோஷங்கள் வரனுக்கு இருக்கும் என்றேனோ, அவையெல்லாம் சிவனுக்கு இருக்கின்றன என எண்ணுகிறேன். சிவனுடன் விவாஹம் ஆனால் உமாவுக்கு எது தோஷம் என்றேனோ, அவையே குணம் என்பர். ஹரி ஸர்ப்ப படுக்கையில் படுத்திருக்கிறார்.—எனினும் பண்டிதர் அதில் தோஷம் சொல்வதில்லை. ஸூர்யன், அக்நி எல்லா ரஸங்களை யும் புசிக்கிறார்கள். அவர்களுக்கு யாரும் தோஷம் சொல்வ தில்லை. பவித்ரமான, அபவித்ரபான எல்லாவித ஜலமும் பாய் கிறது - ஆனாலும் கங்காவை யாரும் அபவித்ரமென்பதில்லை. கோஸாயி (ஹரி), ஸூர்யன், அக்நி, கங்கா—இவைகளுக்கு எப்படி தோஷம் சொல்வதில்லையோ அது போல கெட்டிக்கார ருக்கு யாரும் தோஷம் சொல்ல மாட்டார். ஜீவன் ஈச்வரனுக்கு ஸமானமா என்ன? முட்டாள் எவனாவது க்ஞானத்தின் கர்வத் தினால் 'ஸமம்' என்பானேல் அவன் கல்பகாலமெல்லாம் நரகத்தில் கிடக்க வேண்டியதுதான். கங்கா ஜலத்தில் பண்ணி யது என்றாலும் 'மதிரா'வை ஸாது ஜனங்கள் பருக மாட்டார் கள். (மறுபடி) அதே கங்காவில் கலந்து போனால் பவித்ரமாகி விடுகிறது. அதே பேதம் தான் ஈச்வரனுக்கும் - அநீச்வர னுக்கும்.

சம்பு ஸ்வபாவமாகவே ஸாமர்த்யமுள்ளவர். பகவான். ஆகவே, இந்த விவாஹம் நடப்பது எல்லா விதத்திலும் நன்மையே ! மஹாதேவனை ஆராதனம் பண்ணுவது மிகவும் கடினம். ஆனால் கஷ்டப்பட்டாலும், சீக்கிரமே ஸந்தோஷப் படுவார். உன் புத்ரி தபஸ் பண்ணினால், வர விருப்பதையும் கூட த்ரிபுராரி அழித்துவிட வல்லவர். லோகத்தில் அநேக வரன் கள் இருக்கலாம்; அனால் இவளுக்கு சிவனைத்தவிர வேறு வரனே கிடையாது.

சிவன் வரமருள்பவர்; பணிந்தவரின் கஷ்டத்தைப்போக்கு பவர். க்ருபா-ஸமுத்ரன். ஸேவை பண்ணுபவரின் மனத்தை ஸந்தோஷப் படுத்துபவர். சிவனை ஆராதனை பண்ணாவிடில் ஒரு கோடி யோகமும், ஜபமும் ஸாதனம் பண்ணினாலும் விரும்பிய பலன் கிடைக்காது.

சொல்லி(முடித்தார்). ஹரியை ஸ்மரணம் பண்ணிக்கொண்டு கிரிஜாவுக்கு ஆசீர்வாதம் கொடுத்துவிட்டு,— ஹே கிரீச, ஸந்தேஹத்தை விடு. இந்த 'நன்மை' நிச்சயம் ஏற்படும் என்றூர். ப்ரஹ்ம லோகத்துக்குப் போனூர்.

மேலே என்ன நடந்தது. — அதையும் கேள் என்று யாக்ஞவல்க்யர் பரத்வாஜருக்குச் சொல்வார்.

மேனா தநிமையில் பதியைச் சந்தித்தாள். ''நாத, எனக்கு முநிவர் சொன்னது புரியவில்லே. வீடும் குலமும் உபமானம் சொல்ல முடியாதபடி [அவ்வளவு சிறப்பாக] அமைந்தால் கந்யைக்கு ஸமமான ரூபமுள்ள விவாஹம் பண்ணவேண்டும். இல்லாவிட்டால் கந்நி விவாஹமில்லாமலே வேண்டுமானுலும் இருந்து விடட்டும். காந்த ! உமா எனக்கு ப்ராண ப்ரியமானவள். கிரிஜாக்குத் தகுந்த வரன் கிடைக்காவிடில் 'கிரி ஸ்வபாவமாகவே ஜடம்தானே!' என்பர். நாத நன்ருக யோசித்து, பின்னுல் வருந்த வேண்டியிராதபடி விவாஹம் பண்ணிவையுங்கள்'' என்று சொல்லி அவர் சரணங்களில் தலே பதித்து கீழே கிடந்தாள்.

''சந்த்ரனில் அக்நி வெளிப்பட்டாலும் சரி! நாரதரின் வாக்கு வேருகாது. ப்ரியே நீ எல்லாக் கவலேயும் விடு. பகவானின் ஸ்மரணம் பண்ணிக்கொள். பார்வதியை யார் படைத்தாரோ அவரே அவளுக்கு நல்லது பண்ணுவார். உனக்கு உன் புத்ரிமேல் பிரியம் இருந்தால் போய் அவளுக்கு உபதேசம் இப்படிச்செய்— ''மஹேச்வரன் கிடைக்கத்தக்க தபஸ் பண்ணு'' என்று சொல். வேறு உபாயத்தால் கஷ்டம் தீராது. நாரதர் சொன்னது பொருள் பொதிந்தது. காரணமிருக்கிறது. வ்ருஷகேது அழகானவர். குணங்கள் இருக்குமிடம். இப்படி யோசித்துப் பார். கபலேப்படாதே. எல்லாவிதத்திலும் சங்கரன் களங்கமில்லாதவர்'' என்று ப்ரியமாகச் சொன்னுன்.

பதி சொன்னதைக் கேட்டு மனத்தில் ஸந்தோஷம் உண்டாயிற்று. உடனே எழுந்து கிரிஜாவிடம் போனுள். உமாவைப் பார்த்ததும் கண்களில் நீர் நிறைந்தது. ப்ரேமையுடன் மடியில் அமர்த்திக்கொண்டாள். மீண்டும் மீண்டும் மார்போடு தழுவிக் கொண்டாள். தொண்டை அடைத்துக்கொண்டது. பவாநி ஜகத்தின் தாயார். ஸர்வக்ஞா, தாயாருக்கு ஸுகம் தரும்படி இனிமையாகச் சொன்னுள்.— ''அம்மா, நான் சொல்வதைக் கேள். ஒரு கனவு கண்டேன். வெள்ளே வண்ணமான அழகான

ச்ரேஷ்டமான விப்ரவரன் ஒருவர் எனக்கு உபதேசம் பண்ணி ஞர். ''சைல குமாரி, நாரதர் என்ன சொன்னரோ அதை ஸத்ய மென்று நம்பு. போய் தபஸ் பண்ணு. உன் மாதா-பிதாவுக்கும் இது பிடிக்கும்''. தபஸ் ஸுகம் தரும். துக்கத்தைப்போக்கும்.

தபஸ்ஸின் பலத்தால் விதாதா ப்ரபஞ்சத்தை அமைக்கிருர். தபஸ்ஸின் பலத்தால் விஷ்ணு ஸகல ஜகத்தையும் காக்கிருர், தபஸ்ஸின் பலத்தால் சம்பு ஸம்ஹாரம் பண்ணுகிருர். தபஸ்ஸின் பலத்தால் சேஷன் பூமியின் பாரம் தாங்குகிருர். தபஸ்ஸின் பலத்தால் தான், ஹே பவாநி, ஸ்ருஷ்டி முழுதும் தாங்கப்படுகிறது.

இதைக் கேட்டு தாயாருக்கு மஹா ஆச்சர்யம் ஆகியது. ஹிமவானைக் கூப்பிட்டு கநவைச் சொல்லச் சொன்னுள்.

மாதா-பிதாவைப் பலவிதமாகத் தேற்றி உமா தபஸ் பண்ண ஆனந்தமாகப்போனுள்.

ப்ரியமான பரிவாரமும், மாதா - பிதாவும் கலங்கினர். பேச்சே வாயிலிருந்து வரவில்லை.

* வேத சிரா முநிவர் வந்தார். எல்லாருக்கும் விளக்கிச் சொன்னுர். பார்வதியின் மஹிமையைக் கேட்டு எல்லாரும் மிகவும் ஸந்தோஷமடைந்தார்குள்.

ப்ராணபதியின் சரணங்களில் ஹ்ருதயத்தை பதித்துக் கொண்டு உமா வநத்தில் போய் தபஸ் பண்ணலானுள். எல்லை யிலாத மென் தளிர் சரீரம் தபஸ்ஸுக்குத் தகுந்ததல்ல. எனினும் பதியின் சரண-ஸ்மரணம் பண்ணிக்கொண்டு எல்லா போகங்களை யும் விட்டாள். சரணங்களில் நித்தம் புதிய ப்ரேமை உண்டாக லாயிற்று. தேஹத்தின் உணர்வு எல்லாம் மறந்தாள். தபஸ்ஸி லேயே மனம் ஒன்றியது. ஓராயிரம் வர்ஷம் கிழங்கும், பழமும் மட்டும் உண்டாள். நூறு வர்ஷம் பச்சைக் காய், இலைகள் மட்டும் உண்டாள். கொஞ்ச நாள் ஜலமும் காற்றுமே ஆஹார மாயிருந்தாள். பிறகு கொஞ்ச நாள் கடினமான உபவாஸம் இருந்தாள். கொடிகளின் இலைகள் காய்ந்து தரையில் விழும்— அதை மட்டுமே மூவாயிரம் வர்ஷம் உணவாக எடுத்துக்கொண் டாள். அதன் பின் உலர்ந்த இலை உண்பதையும் விட்டாள். அப்போது உமாவின் பெயர் அபர்ணு ஆயிற்று. தபஸ்ஸால் உமாவின் சரீரம் வாடியது,

அதைப் பார்த்து ஆகாசத்தில் கம்பீரமான ப்ரஹ்மவாணி உண்டாயிற்று.— கிரிராஜ குமாரி, உன் மனோரதம் பலன்

அடைந்துவிட்டது. நீ இனி பொறுக்கவொணுத வாட்டம் எல்லா வற்றையும் விடு. த்ரிபுராரி உனக்கு கிடைத்து விடுவார். பவாநி! அநேக தீர முநிவர்களும், க்ஞாநிகளும் இருந்திருக் கின்ருர்கள். ஆனுல் இந்த மாதிரி தபஸ் யாரும் பண்ணியதில்லே. ப்ரஹ்மவாணி ஸதா ஸத்யமானது, பவித்ரமானது என்று உணர்ந்து உன் ஹ்ருதயத்தில் எடுத்துக்கொள். உன் பிதா உன்னே அழைத்துக்கொண்டு போக வருவார். அப்போது பிடி வாதத்தைவிட்டு வீட்டுக்குப் போ. ஸப்தருஷிகள் உன்னே ஸந்திக்க வருவார்கள். அப்போது 'ப்ரஹ்மவாணி' (கார்ய ரூபமாகிறது என்று) உனக்கு நிரூபணம் ஆகும். தெரிந்துகொள்.

ஆகாசத்திலிருந்து சொல்லப்பட்ட விதியின் வாணியைக் கேட்டு கிரிஜாவுக்கு மெய் சிலிர்த்தது. மிகவும் ஸந்தோஷம் அடைந்தாள்.

''அழகான உமாசரிதம் சொன்னேன். இனிசம்புவின் இனிய கதையைக் கேள்'' என்று யாக்ஞவல்க்ஞர் பரத் வாஜருக்குச் சொல்வார்.

சம்பு சரிதம்

ஸதீ போய் தன் தேஹத்தை விட்டதிலிருந்து சிவன் மநஸில் வைராக்யம் உண்டாகிவிட்டது. ஸதா ரகுநாயக நாம ஜபம் பண்ணுகிருர்! அங்கங்கே ராம குணக்ராமத்தைக் (காதார) கேட்கிருர். சிதானந்தன், ஸுக-தாம-மான சிவன் மோஹம் மதம், காமம் இலாதவர், லோகம் முழுவதுக்கும் ஆனந்தம் தருபவர், ஹரியை ஹ்ருதயத்தில் கொண்டு பூவுலகில் திரியலானுர் ஓரிடத்தில் முநிவர்களுக்கு க்ஞான உபேசம் தருகிருர். ஓரிடத் தில் ராமனின் குணங்களின் வர்ணனம் பண்ணுகிருர். காமமிலா தவர், மேலும் நல்ல க்ஞாநி, பகவான், பக்தரின் பிரிவு துக்கத் தால் துக்கமடைந்திருக்கிருர்.

இப்படி நீண்டகாலம் கழிந்து விட்டது. ராம பத ப்ரீதி நித்தம் புதிது புதிதாக உண்டாகலாயிற்று இவருடைய நியமத் தையும் ப்ரேமையையும் ராமன் பார்த்தார். பக்தியின் ஸம்ஸ் காரம் ஹ்ருதயத்தில் அசையாமலிருந்தது. க்ருதக்ஞன், க்ருபாளு, ரூபம் சீலங்களின் பொக்கிஷம், தேஜஸ்வியான ராமன் சங்கரனின் முன் தோன்றினுர். அவருடைய பெருமையைப் பலவிதமாகப் பாராட்டினுர். 'இப்படிப்பட்ட வ்ரதம் உங்களேத் தவிர யார் நிர்வாஹம் பண்ணமுடியும்!' என்ருர். பலவிதமாக விளக்கிச் சொன்னுர். பார்வதியின் ஜனனம்பற்றிச் சொன்னுர், கிரிஜாவின்

பவித்ரமான செயல்களை விரிவாக வர்ணனை பண்ணினார். ''சிவ! என் வேண்டுகோளைக் கேளுங்கள். உங்களுக்கு என்னிடம் ஸ்நேஹம் இருந்தால் நான் யாசிக்கும் இதைக் கொடுங்கள். சைலஜாவை விவாஹம் பண்ணிக்கொள்ளுங்கள்'' என்றார்.

சிவன் ''இப்படிச் செய்வது உசிதமில்லாவிட்டாலும் நாதன் சொல் தவிர்க்கவொண்ணாதது, நாத உங்கள் ஆக்ஞையைச் சிரமேல் கொள்ளத்தக்கது என்று கருதுவேன். இது தான் என் பரம தர்மம். மாதா - பிதா - குரு - ஸ்வாமியின் சொல்லை விசாரிக்காமலேயே சுபம் என்று உணர்ந்து பண்ணவேண்டும். நீங்களோ எல்லா விதமாகவும் எனக்கு பரம ஹிதம் பண்ணுபவர்; உங்கள் ஆக்ஞை என் சிரமேல் இருக்கும்'' என்றார்.

பக்தி, விவேகம், தர்மம் - இவைகளுடன் சேர்ந்த சங்கர வாக்ய அமைப்பு கேட்ட ப்ரபு ஸந்தோஷமடைந்தார். ''ஹர! உங்கள் ப்ரதிக்ஞை நிலை பெற்றுவிட்டது. இனி நான் சொன்னதை ஹ்ருதயத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்'' என்று சொல்லி முடித்து (ராமன்) அந்தர்த்தானமானார்.

சிவன் அதேவடிவத்தை ஹ்ருதயத்தில் பதித்துக்கொண்டார்.

அதே ஸமயத்தில் ஸப்த ருஷிகள் சிவனிடம் வந்தார்கள். ப்ரபு அவர்களிடம் அழகாகச் சொல்வார். ''நீங்கள் பார்வதியிடம் போய் ப்ரேமை - பரீக்ஷை பண்ணுங்கள். கிரியை அனுப்பி அவளை வீட்டுக்கு அழைத்துப் போகச் சொல்லுங்கள். அவர்களுடைய ஸந்தேஹத்தையும் போக்க வேண்டும்''.

ருஷிகள் பார்த்த போது கௌரி எப்படி இருந்தாள் - தபஸ் தானே ஒரு உருவம் ஏந்தி வந்திருந்தது போலிருந்தது. கேட்டார்கள். ''சைல குமாரி, எதற்காக மாபெரும் தபஸ் பண்ணிக் கொண்டிருக்கிறாய்? யாரை ஆராதனை பண்ணுகிறாய்? என்ன விரும்புகிறாய்? உண்மையை எங்களிடம் சொல்லேன்''.

(கௌரி பதில் சொன்னாள்). ''சொல்ல மநஸ் மிகவும் தயங்குகிறது, என் மூடத்தனத்தைக் கேட்டு சிரிப்பீர்கள். மநஸ் பிடிவாதம் பிடிக்கிறது, அறிவுரைகளைக் கேட்டுக்கொள்ள மறுக்கிறது. தண்ணீரின்மேல் சுவர் எழுப்ப ஆசைப்படுகிறது! நாரதர் சொன்னதை ஸத்யம் என்று உணர்ந்து கொண்டேன். இறக்கைகளில்லாமல் பறக்க ஆசைப்படுகிறேன்! முனிவர்களே என் அவிவேகத்தைத் பாருங்கள் - ஸதாசிவனைப் பதியாகக்கொள்ள ஆசைப்படுகிறேன்!

ருஷிகள் சிரித்தார்கள். ''உன் தேஹம் மலையிலிருந்து உண்டானது! சரி.-நாரதரின் உபதேசத்தைக்கேட்டு யார் வீடுதான் உருப்பட்டது! *தக்ஷன் பிள்ளைகளுக்குப் போய் உபதேசம் பண்ணினார். அவர்கள் போய்விட்டு வீட்டுக்குத் திரும்பி வரவே இல்லை.**சித்ரகேதுவின் வீட்டை உருப்படாமல் செய்தார்; கநககசிபுவுக்கும் இதே கதிதான் ஆயிற்று. எந்த ஸ்த்ரீயோ, புருஷனோ - நாரதர் சொல்லித் தந்ததைக்கேட்டால் அவர் வீடு வாசல் துறந்த பிச்சைகாரராகி விடுகிறார் - அவருடைய மனம் கபடமானது. சரீரத்தில் மட்டும் ஸஜ்ஜனங்கள் [போல] சின்னம். எல்லாரையும் தன்னைப் போல பண்ணிவிட விரும்புகிறார். அவர் சொன்னதை நம்பி இப்படி ஒரு பதியை நீ விரும்புகிறாய். [ஸஹஜமாகவே உதாஸி குணஹீன, லஜ்ஜையிலாத, கெட்டவேஷமான, கபாலம் ஏந்திய க்ருஹஹீந, அமண, பாம்பை அணிந்த] எதிலும் பற்றில்லை; குணமில்லை; வெட்கமில்லை; கெட்ட வேஷம்; கையில் கபாலம்; குலமில்லை; வீடில்லை; அமணம்; பாம்பு தான் அணி! இப்படி வரன் கிடைத்து என்ன ஸுகம் இருக்கும் சொல். வஞ்சகமாகச் சொன்னதைக்கேட்டு நன்றாக ஏமாந்து விட்டாய். இவர் சொன்னதற்காக சிவன் ஸதியை விவாஹம் பண்ணிக்கொண்டார். பிறகு அவளுக்கு துக்கமே தான் - அவள் சாகவும் செய்தாள். இப்போது ஸுகமாகத் தூங்குகிறார். ஒரு கவலையுமில்லை! பிக்ஷை எடுத்துச் சாப்பிடுகிறார். இப்படி ஒரு பிறவிச் சோம்பேறியின் வீட்டில் ஸ்த்ரீ வாழ முடியுமா?

இப்போதாவது எங்கள் பேச்சைக் கேள் - உனக்கு நாங்கள் நல்ல வரன் தேர்ந்தெடுத்திருக்கிறோம். எல்லையிலா அழகு. பவித்ரமானவர், ஸுகம் தருபவர், நல்ல சீலம் உள்ளவர்; அவருடைய புகழ், லீலைகளை வேதம் பாடுகிறது. தோஷமே இல்லை. எல்லா குணங்களின் ராசி- ஸ்ரீபதி. வைகுண்டத்தில் வஸிக்கிறார். இந்த வரனை உன்னை வந்து பார்க்கச் செய்வோம்.

பவாநி உரக்கச் சிரித்தாள். நீங்கள் சொன்னது ஸத்யம் தான். என் சரீரம் பர்வதத்திலிருந்து உண்டானது தான். தேஹம் விட்டுப்போனாலும் ஹடம் விடாது. தங்கம் கூட கல்லில் இருந்து தான் உண்டாகிறது. உருக்கினாலும் அதன் இயல்பை விடாது. நாரதரின் பேச்சை விடமாட்டேன். வீடு மிஞ்சினாலும் சரி. அழிந்தாலும் சரி. எனக்கு பயமில்லை. குருவின் பேச்சைக் கேட்காதவனுக்குக் கனவிலும் ஸித்தி எளிதில் அடைய முடியாது. மஹாதேவன் அவகுணங்களின் இல்லம்! - விஷ்ணு எல்லா குணங்களின் இருப்பிடம்! ஆனால் எவருடைய மனம் எதில்

இன்புறுகிறதோ அவருக்கு அதைப்பற்றித்தான் கார்யமிருக்கும். முநீஸ்வரர்களே, உங்களை முன்னரே ஸந்தித்திருந்தால் உங்கள் உபதேசத்தை சிரமேல்க் கொண்டிருப்பேன். கேட்டிருப்பேன். இப்போதோ நான் இந்தப் பிறவி சம்புக்காக எடுத்துக்கொண் டிருக்கிறேன். இப்போது குண தோஷங்களைப்பற்றி ஆராய்ச்சி யார் பண்ணுவார்? உங்கள் மனத்தில் மிகவும் பிடிவாதமிருந் தால் வரன் தேடாமல் இருக்கமுடியாது எனில், தேடுங்கள். வேடிக்கை பார்ப்பவர்களுக்கு சும்மா இருக்க முடியாது. லோகத் தில் வரன்களுக்கும் கந்நிகளுக்கும் குறைவேயில்லை. கோடி ஜன் மங்கள் வரை எனக்கு முயற்சி இருக்கும். சம்புவை வரிப்பேன்; அல்லது குமரியாகவே இருப்பேன். மஹேசனே நூறு தடவை சொல்லட்டுமே. அப்படியும் நாரதரின் உபதேசத்தை விடமாட் டேன். ''ஜகதம்பா மேலும் சொன்னாள் உங்கள் கால்களில் விழு (ந்து கேட்டுக்கொள்)கிறேன். போய் வாருங்கள் மிகவும் நேரமாகி விட்டது'' என்றாள்.

இந்த ப்ரேமையைப் பார்த்த முநிவர்கள் சொல்வார்கள், ''ஜய ஜகதம்ப! ஜய பவாநி ! நீ மாயா. சிவன் பகவான். உலகுக் கெல்லாம் மாதா-பிதா ஆவீர்''. சரணங்களில் தலை தாழ்த்தி மீண்டும் மீண்டும் மெய் சிலிர்க்க, முநிவர்கள் சென்றார்கள். ஹிமவானை அனுப்பினார்கள். (அவன்) வேண்டிக்கொண்டு (பார்வதியை) வீட்டுக்கு அழைத்து வந்தான்.

ஸப்தருஷிகள் சிவனிடம் போனார்கள். உமாவின் கதை முழுதும் சொன்னார்கள்.

(பார்வதியின்) ப்ரீதியைக் கேட்டு சிவன் ஆழ்ந்து போனார்.

ஸப்த ருஷிகள் சந்தோஷமாக வீடு திரும்பினர்.

க்ஞாநியான சிவன் மனத்தை திடமாக்கிக் கொண்டார். ரகுநாயகனை த்யானம் பண்ணலானார்.

அந்த நாளில்தான் தாரகாஸுரன் உண்டானான். அவனுக்கு மிகவும் பலம், தேஜஸ், புஜங்களின் ப்ரதாபம் இருந்தது. எல்லா லோகங்களையும், லோக பாலர்களையும் ஜயித்தான். தேவர்கள் ஸுகம் ஸம்பத்தி இழந்தார்கள். அவனுக்கு மூப்பில்லை, மரண மில்லை. அவனை ஜயிக்க முடியாது. பலவிதமாகப் போர் இட் டான். தேவர்கள் தோற்றார்கள். விரிஞ்சியிடம் புகார் குவிந்தது. தேவர்கள் துக்கப்படுதை விதி பார்த்தார்,

ப்ரஹ்மா எல்லாருக்கும் எடுத்துச் சொன்னார். சம்புவின் சுக்லத்தால் ஒரு புத்ரன் உண்டாவான். அவன் தான் இந்த

தைத்யனை ஜயிப்பான். இவன் மரணம் உண்டாகும். நான் சொல்வதுபோல உபாயம் பண்ணுங்கள். ஈச்வர அனுக்ரஹம் அமைந்தால் கார்யம் நடக்கும். தக்ஷ யக்ஞத்தில் தன் சரீரத்தை விட்ட ஸதி ஹிமாசலத்தின் வீட்டில் பிறந்திருக்கிருள். சம்புவைத் தன் பதியாகக்கொள்ள அவள் தபஸ் பண்ணியிருக்கிருள். ஆனல் சிவன் எல்லாவற்றையும் துறந்து ஸமாதியிலிருக்கிருர். நான் சொல்வது போல் செய்வதில் எத்தனையோ கஷ்டங்கள் இருக்கும். இருந்தாலும் எப்படியாவது பண்ணுங்கள். நீங்கள் போய் காமதேவனை சிவனிடம் அனுப்புங்கள். அவன் சங்கரன் மநஸில் சலனம் (ஆசை) உண்டாக்கட்டும். நாம் அப்போது போய் சிவனுக்கு நமஸ்காரம் பண்ணி விவாஹம் பண்ணிக்கொள்ளும்படி வற்புறுத்தி பண்ணிவைப்போம்.

இது மிக நல்ல வழி, தேவர்களுக்கு நன்மை உண்டாகும் என்று கருதி, ஸ்துதி பண்ணினுர்கள்.

ஐந்து பாணங்கள் ஏந்தி மீன் கொடியுடையவன் அவர்கள் முன் தோன்றினுன்.

தேவர்கள் அவனிடம் தங்கள் கஷ்டங்கள் எல்லாவற்றையும் சொன்னுர்கள்.

அதைக் கேட்டு அவன் சிரித்தான். யோசித்தான் 'சம்புவிடம் விரோதம்பண்ணிக்கொள்வது எனக்கு நல்லதில்லை. இருந்தாலும் உங்கள் கார்யத்தைப் பண்ணுகிறேன். ஏனெனில் பரோபகாரமே மேலான தர்மம் என்று வேதங்கள் சொல்கின்றன. பிறருக்காக தன் தேஹத்தை த்யாகம் பண்ணுபவனை ஸாது ஜனங்கள் பெருமைப்படுத்துகிருர்கள்'' என்ருன். எல்லாருக்கும் நமஸ்காரம் பண்ணினுன், புஷ்ப வில்லைக் கையில் எடுத்துக்கொண்டான். தனக்கு உதவி பண்ணுபவ (வஸந்த)னையும் மற்றவர்களையும் கூட்டிக்கொண்டு போனுன். மநஸ்ஸில் யோசித்துக் கொண்டே போனுன். சிவ விரோதத்தால் தன் மரணம் நிச்சயம் ஏற்படப் போகிறது என்று தெரியும், இருந்தாலும் (கார்யத்தை ஆரம்பித்தான்,) தன் சக்தியைப் ப்ரயோகித்தான். ஸம்ஸாரம் முழுவதையும் தன் வசமாக்கிக் கொண்டான்.

காமதேவனுக்குக் கோபம் வந்த அந்த க்ஷணத்திலேயே வேதங்களின் கட்டுப்பாடுகள் தகர்ந்துபோயின. ப்ரஹ்மசர்யம், வ்ரதம் பலவித அடக்கங்கள், தைர்யம், தர்மம். க்ஞானம், விக்ஞானம், ஸதாசாரம் (நல்ல நடத்தை), ஜபம், யோகம், வைராக்யம், விவேகம் இவைகளின் ஸேனை முழுவதும் பயந்து ஓடிவிட்டன.

மஹாவீரர்கள் போர்க்களத்தில் புறமுதுகு காட்டினார்கள்; நல்ல நூல்கள் எல்லாம் மலையின் குஹைகளில் போய்ப் பதுங்கிக் கொண்டன. ஜகத்தில் எங்கும் குழப்பம். ஜனங்கள் பயந்து அரற்றலானார்கள்; ''கர்தார, எல்லாம் வல்லவரே, இப்போது என்ன நடக்கப் போகிறது? எங்களை யார் காப்பாற்றுவார்? உலகெங்கும் குழப்பமாகி விட்டதே! காமதேவன் கையில் வில் ஏந்தி கோபமாயிருக்கிறானே? இரண்டு தலையாருக்கு இருக்கிற தென்று இப்படி பண்ணுகிறான்''. [ஒருதலை உள்ள எல்லாரையும் தான் ஜயித்தாகி விட்டதே; இரண்டாவது தலை யாருக்கு இருக்கிறதென்று, அவரை ஜயிக்க இப்படி கோபமாக வந்தான் - யாருமில்லை என்பது அர்த்தம். இரண்டென்ன! - ஐந்து தலை யுள்ளவரை ஜயிக்கத்தான் இப்படி முஸ்தீபாக போர் தொடுக்கி றான் - பாவம், ஜனங்களுக்கு இதெப்படி தெரியும்!]

காம தஹந ப்ரஸங்கம்.

உலகத்தில் எத்தனை சராசரங்கள் உண்டோ, ஆண் - பெண் என்றிருந்தார்களோ - எல்லாம் கட்டுப்பாடுகளை தகர்த்துவிட்டு காம வசமாயின. காமவெறி உள்ளத்தில் பொங்கியது. கொடி களை நோக்கி மரங்கள் தம் கிளைகளை வளைத்து குனியலாயின. நதிகள் பொங்கிக்கொண்டு ஸமுத்திரத்தினிடம் ஓடின. குளம் குட்டைகள் கரைகளை உடைத்துக்கொண்டு கலக்கலாயின.

ஜடங்களின் கதியே இப்படியானால் உயிரினங்களின் செயல் களை யார் வர்ணிக்க முடியும்! பசு, பக்ஷி ஆகாசம், ஜலம், பூமி களில் வசிப்பன - எல்லா உயிரினங்களும் பருவமோ, வேளையோ எதையும் பொருட்படுத்தாமல் காமதேவனின் வசமாகிவிட்டன. எல்லா ஜனங்களும் காமத்தால் குருடராகி கலக்கமுற்றனர். கோக பக்ஷி, அதன் பேடைகளுக்கு இரவு பகல் நினைவே இல்லை. தேவர் தைத்யர் மநிதர், கிந் - நரர், நாகர். ப்ரேதம் பிசாசுகள் வேதாளம் - இவை எல்லாவற்றையும் காமனின் அடியார்கள் என்று கருதி இவர்களின் நிலையை வர்ணிக்கவில்லை. ஸித்தர், வைராகிகள். மஹாமுநிவர்கள், யோகிகளும் - எல்லாரும் காமன் வசமாகி யோகத்திலிருந்து நழுவி விட்டார்கள். அப்படி யாக, பாவம் சின்னச் சின்ன ஜீவன்களுடைய நிலையை யாரால் சொல்ல முடியும்? யார் எல்லா சராசரங்களையும் ப்ரஹ்ம மயமாகக் காண்பார்களோ; அவர்களே இப்போது எல்லா வற்றையும் ஸ்த்ரீ மயமாகப் பார்க்கலானார்கள். ஸ்த்ரீகள் எல்லாரும் ஜகத் முழுவதையும் புருஷ மயமாகவும் புருஷர்கள்

ஸ்த்ரீமயமாகவும் நினைக்கலானுர்கள். இரண்டே நாழிகைக்குள் [48 நிமிஷத்தில்] ப்ரஹ்மாண்டம் முழுவதிலும் காமதேவன் இப்படி விளையாட்டு பண்ணிவிட்டான். எல்லாருடைய மனஸ்ஸையும் எடுத்துக் கொண்டுவிட்டான் - மனஸிஜன் [மனத்தில் உண்டானவன்!] யாருக்குமே உள்ளத்தில் தைர்யமில்லை.

ஆமாம்! அந்த ஸமயத்தில் யாரை ரகுவீரன் காப்பாற்றினுரோ அவரே மிஞ்ஜினர்! அந்த இரண்டு நாழிகை வரை. [அதாவது காமதேவன் சம்புவிடம் போய்ச் சேர்ந்த வரை], இந்த வேடிக்கை நடந்தது.

சிவனைப் பார்த்தவுடனேயே காமனுக்கு பயம், தயக்கம் உண்டாயிற்று. ஏனெனில் அவர் மிக உக்ரமாக திடமாக இருந்தார், அந்தக் கணமே உலகமெல்லாம் எப்படி இருந்ததோ அப்படியே ஆகிவிட்டது. ஜகத்தின் உயிரினங்கள் உடனேயே முன்போலவே ஸுகமாக ஆயின. குடிகாரனுடைய போதை தெளிந்ததுபோல ஆயிற்று. ருத்ரனைப் பார்த்து காமனுக்கு பயம் உண்டாகியது. ஏனெனில் பகவான் அசைக்க முடியாதவர். நெருங்கவும்முடியாது. திரும்பிப்போக வெட்கமாயிருந்தது, காமனுக்கு. அவனுல் ஒன்றும் சொல்லவோ பண்ணவோ முடியவில்லை. [மரிக்க முடிவு பண்ணிக்கொண்டு மாற்ற கடைசியில்] ஒரு உபாயம் யோசித்துப் பண்ணினுன். அங்கே அழகான வஸந்தருதுவை தோற்றுவித்தான்.

மரங்களெல்லாம் அழகாகப் பூத்துக் குலுங்கின. வநம், உபவநம் மிக அழகான வநம், உபவநனம், பூங்கா, ஏரி, குளம் இடைத் திசைகள் எங்கும் பேரழகு பொலிந்தது எங்கும் ப்ரேமை பொங்கியது. அதைப் பார்த்து மரிக்கும். மநஸிலும் ப்ரேமை [பொங்கியது] விழித்தெழுந்தது. இத்தகைய வநத்தின் அழகு சொல்லமுடியாது. காம ரூபமான அக்னியின் உண்மையான தோழன்-குளுமையான-மென்மையான நல்ல மனமுள்ள காற்று தவழ்ந்து வரலாயிற்று. ஏரியில் அனேக விதமான கமலங்கள் மலர்ந்தன. அவற்றின்மேல் அழகான வண்டினங்கள் உரலலாயின. கலஹம்ஸம், கோகிலம், கிளி. இனிமையாக மொழியலாயின. அப்ஸரஸ்கள் பாடிக்கொண்டு ஆடினுர்கள்.

தானும் தன் ஸேனையும் கோடிவிதமாக எல்லாக் கலைகளையும் நிகழ்த்தி தோற்றுப்போனுன்.

சிவனின் திடமான ஸமாதி அசையவில்லை. காமதேவனுக்குக் கோபம் வந்தது, மாமரம் ஒன்றின் அழகான கிளையைப் பார்த்தான். கோபமாக அதில் ஏறிக்கொண்டான்,

புஷ்ப வில்லில் பாணத்தைத் தொடுத்தான், காதுவரை நாணை இழுத்துக் குறி பார்த்து வெகு கோபமாக எய்தான். ஐந்து பாணங்களையும் எய்தான்.

அவை சிவனின் ஹ்ருதயத்தில் பாய்ந்தன. அவருடைய ஸமாதி பங்கமாகியது, [ஒடிந்தது, கலைந்தது]; சம்பு விழித்துக் கொண்டார். ஈசனின் மனத்தில் விசேஷமான கலக்கம் உண்டாகியது. கண்களைத் திறந்தார். எல்லாப் பக்கமும் பார்த்தார். மாந்தளிர்களிடையில் மறைந்து இருந்த மதனனைப் பார்த்தார். கோபம் உண்டாயிற்று. மூன்று லோகங்களும் நடுங்கின, (சிவன்) மூன்றும் கண்ணைத் திறந்தார்.

[பார்த்த]வுடனே காமன் எரிந்து பஸ்மமானான்.

ஜகத் எங்கும் ''ஹா ஹா' என்ற பெரிய அலறல் எழுந்தது.

தேவர்கள் நடுங்கினார்கள்.

தைத்யர்கள் ஸந்தோஷப்பட்டனர்,

போகி ஜனங்கள் காம ஸுகத்தை எண்ணிப்பார்த்து துக்கப் பட்டார்கள்.

யோகி ஜனங்களின் முள் அகன்றது.

பதியின் கதியைக் கேட்டதும் ரதி மூர்ச்சையானாள். புலம்பிக் கொண்டு, பலவிதமாக அரற்றிக்கொண்டு, கெஞ்சிக்கொண்டு சங்கரனிடம் வந்தாள். மிகவும் ப்ரேமையுடன், அநேக விதமாக விண்ணப்பித்துக்கொண்டு கைகள் கூப்பிக்கொண்டு அவரெதிரே நின்றாள்.

சீக்ரம் ஸந்தோஷப்படுபவரான ப்ரபு, க்ருபாளன், சிவன் அபலையைப் பார்த்தார், பலன் தருவதில் தவறாத வாக்கு சொல்வார்: ரதி, இனி உன் நாதனின் பெயர் 'அநங்கன்' ஆகும். சரீரம் இல்லாமலேயே இவன் எங்கும் பரவுவான். உன்னவரை நீ சேரக்கூடியதைப் பற்றியும் சொல்கிறேன்: பூமியின் பெரும் பாரத்தை அகற்றுவதற்காக யது வம்சத்தில் க்ருஷ்ணவதாரம் ஆகும்போது, உன் பதி க்ருஷ்ணனின் பிள்ளையாவான். என் வாக்கு வேறாக மாறாது என்றார்.

சங்கரின் வாக்கைக் கேட்டு ரதி புறப்பட்டுப் போனாள்.

இனி மற்ற கதையைச் சொல்கிறேன்.

தேவர்களுக்கு இங்கு நிகழ்ந்தவையெல்லாம் தெரிந்ததும் ப்ரஹ்மா முதலாக எல்லோரும் வைகுண்டத்துக்குப் போனுர்கள். விஷ்ணுவையும் அழைத்துக்கொண்டு எல்லாரும் க்ருபாநிகேதனுன சிவன் இருந்த இடத்துக்குப் போனுர்கள். தனித்தனியே எல்லாரும் ஸ்துதி பண்ணினுர்கள். சந்த்ர-அவதம்சன், *[சந்த்ரனை அணிகலனுக உடையவர்] ப்ரஸன்னமடைந்தார். *க்ருபாஸிந்து *வ்ருஷகேது *''அமர கணங்களே! என்ன காரணமாக வந்தீர்கள்? சொல்லுங்கள்!'' என்று கேட்டார்.

ப்ரஹ்மா ''ப்ரபோ! தாங்கள் அந்தர்யாமி, என்ருலும் ஸ்வாமி, பக்திவசமாகி விண்ணப்பம் செய்கிறேன். சங்கர [நன்மை பண்ணுபவரே], நாத, எல்லா தேவர்களின் மனத்திலும் பேராவல் ஒன்று எழுகிறது—தங்கள் விவாஹத்தைத் தம் கண்ணுரக் காண வேண்டுமாம். மதந மத மோசன [மதனின் மதத்தை விடச்செய்தவ], நாங்கள் அந்த உத்ஸவத்தை கண்ணுரக்காண ஆவன செய்தருள வேண்டும். ஹே க்ருபாஸிந்து தாங்கள் காமதேவனை பஸ்மமாக்கிய பின் ரதிக்கு வரம் அருளியது மிக நல்லதாம். நாத, இது ப்ரபுவின் இயல்பல்லவா— முதலில் தண்டனை அளிப்பார்கள்.—பிறகு அருள் புரிவார்கள். பார்வதி அபாரமான தபஸ் பண்ணியிருக்கிருர்கள். அவர்களை இப்போது ஏற்றருள வேண்டும்'' என்ருர்.

ப்ரஹ்மாவின் வேண்டுகோளைக் கேட்டார். ப்ரபுவின் வாக்கையும் நினைத்துக்கொண்டார். 'அப்படியே ஆகட்டும்' என்ருர். அதுதான் ஸுகமானது என்று கருதினுர்.

தேவர்கள் நகாரி முழக்கினுர்கள். புஷ்ப மாரி பொழிந்தார்கள். ''ஜய ஜய ஸுரஸாயி [தேவர்களின் ஸ்வாமி]'' என்று கோஷமிட்டனர்.

இது நல்ல சமயம் என்று தெரிந்து ஸப்தர்ஷிகள் வந்தார்கள். விதி அவர்களை உடனே கிரியின் வீட்டுக்கு அநுப்பினுர். அவர்கள் பவாநி இருந்த இடத்துக்கு முதலில் போனுர்கள். ஏமாற்றல் செறிந்ததாக இனிமையாகச் சொல்வார்கள். ''நாரதர் உபதேசத்தைக் கேட்டுக்கொண்டு நீ அப்போது நாங்கள் சொன்னதை எடுத்துக்கொள்ளவில்லை.—இப்போது உன் பணயம் பொய்யாகி விட்டது. மஹேசன் காமனை எரித்துவிட்டார்.''

இதைக் கேட்டதும் பவாநி சிரித்தாள். ''விக்ஞாநிகளான முநிச்வரர்களே! நீங்கள் சொன்னது சரிதான். இப்போது

காமனே எரித்தார் என்பதுதானே உங்கள் எண்ணம்! இதுவரை சம்பு [காம] விகார முள்ளவராக இருந்தாராக்கும்! ஸதாசிவன் எப்போதுமே யோகி என்பது என் கருத்து. அஜன், அநவத்ய, அகாம-அபோகி [பிறப்பில்லாத-குற்றமிலாத-காமமிலாத-போக மற்றவர்] இப்படிக் கருதி நான் மனஸ்-வாக் [வசனத்தால்] செயலால் ப்ரீதியுடன் சிவனின் ஸேவை செய்தேன் என்பது [உண்மையானு]ல், முநீச்வரர்களே, கேளுங்கள்; — க்ருபாநிதி, ஈசன், என் ப்ரதிக்ஞையை ஸத்யமாக்குவார். ஹரன் காமனே எரித்தார் என்றீர்களே அது உங்களுடைய மா பெரும் அவிவேகமேயாகும். அக்னியுடன் பிறந்த ஸ்பாவமே தீய்ப்பது. பனிக்கட்டி அதனண்டை போகாது. போயிற்ருே, அழிந்து விடும். நிச்சயம். இதே போக்குதான் காமன், மஹேசன் இரு வருடையதும்.

கேட்டனர். ப்ரீதியையும், விச்வாஸத்தையும் பார்த்தார்கள். முநிவர்கள் ஸந்தோஷமடைந்தார்கள். பவாநிக்கு தலைதாழ்த்தி ஞர்கள். ஹிமாசலனிடம் போனுர்கள்.

கிரிபதிக்கு நிகழ்ந்த தெல்லாவற்றையும் சொன்னுர்கள்.

மதன தஹனத்தைக் கேட்டதும் அவன் மிகவும் துக்கமடைந் தான். ரதிக்கு வரதானம் பற்றிச் சொன்னதும் ஹிமவந்த்(ான்) மிக ஸுகமடைந்தான். சம்புவின் ப்ரபுத்வத்தைப்பற்றி சிந்தித் துக்கொண்டான்.

மரியாதையுடன் முநிவர்களை வர அழைத்தான். நல்ல நாள், நல்ல நக்ஷத்ரம், நல்ல வேளை ஆராய்ந்து தேர்ந்தெடுக்கச் செய் தான். வேத விதிப்படி சீக்கிரமே லக்னம் நிச்சயம் பண்ணச் செய்தான், ருஷிகளிடம் லக்ன பத்ரிகையைக் கொடுத்தான். அவர்களுடைய பாதங்களைப் பிடித்துக்கொண்டு ஹிமாசலன் வேண்டிக் கொண்டான்.

அவர்கள் போய் அந்த லக்ந பத்ரிகையை விதிக்குக் கொடுத் தார்கள். அதைப் படித்தபோது அவருக்கு ப்ரீதி உளங் கொள்ளவில்லை. லக்நத்தைப் படித்து எல்லாருக்கும் சொன்னுர்.

எல்லா முநி கணங்களும், தேவர்களும் ஸந்தோஷப்பட்டார் கள். ஆகாசத்தில் புஷ்பமாரி பொழிந்தது. வாத்யங்கள் முழங் கின. பத்து திசைகளிலும் மங்கள கலசங்கள் ஏற்பாடு செய்யப் பட்டன. எல்லா தேவர்களும் தம்முடைய விதம்-விதமான வாஹனங்களையும், விமானங்களையும் ஏற்பாடு பண்ணிக்கொண் டார்கள். சுபம் காட்டும் சகுனங்கள் உண்டாகலாயின. அப் ஸராக்கள் பாடலாயினர்.

சிவ கணங்கள் அவருக்கு அலங்காரம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். சடை - மகுடம். அதில் ஸர்ப்பங்களால் மாப்பிள்ளை மகுடம் அமைத்தனர். ஸர்ப்பமே குண்டலங்களாக, ஸர்ப்பமே கங்கணங்களாக அணிவித்தார்கள். சரீரத்தில் விபூதி, ஆடையாக புலித்தோல், நெற்றியில் சந்த்ரன், உச்சியில் கங்கை அழகாக அமைத்தார்கள். மூன்று கண்கள். ஸர்ப்பங்களால் ஆன யக்ஞோபவீதம். [குரல்வளை] கண்டத்தில் விஷம். கழுத்தில் நர-தலை-மாலை. வேஷம் இப்படி அமங்கலமாம். ஆனால் க்ருபாளு மங்களங்களின் இல்லமாம். கையில் த்ரிசூலமும்—மழுவும் விளங்கின. எருதின் மேல் ஏறிச்சென்றார்.

வாத்யங்கள் முழங்கின.

சிவனைப் பார்த்து தேவர்களின் மனைவியர் சிரித்தனர். ''வரனுக்கு ஏற்ற மணப்பெண் இந்த ஸம்ஸாரத்தில் எங்குமே கிடையாது'' என்றார்கள்.

விஷ்ணு, ப்ரஹ்மா முதலானோர், தேவ ஸமூஹம் வாஹனங்களில் ஏறிக்கொண்டு 'பாராத்'தில் சென்றார்கள். அந்த ஸமாஜம் எல்லாப் படியாலும் உபமானமிலாததாக இருந்தது. மேலும் பாராத் மணப்பிள்ளைக்கு ஏற்றதாக இல்லை.

திக்பாலர் * எல்லாரையும் விஷ்ணு கூப்பிட்டார், 'எல்லாரும் தனித்தனியாக அவரவர் ஸமாஜத்தில் போங்கள்' என்று சிரித்துக் கொண்டே சொன்னார். 'இந்த பாராத் வரனுக்கு ஏற்றதாக இல்லை. பிறர் ஊரில் போய் கேலிக்கிடமாகப் போகிறீர்கள்.'

விஷ்ணு சொன்னதைக் கேட்டு தேவர்கள் எல்லாரும் சிரித்தார்கள். அவரவர் ஸேனையைக் கூட்டிக்கொண்டு தனித்தனியே போனார்கள்.

மஹேசன் மனதுக்குள் சிரித்துக்கொள்கிறார். ''ஹரியின் கேலிப்பேச்சு அவரை விடாது'' என்று சொன்னார். தன் ப்ரிய மானவர் மிகப் ப்ரியமாகச் சொன்னதைக் கேட்டு ப்ருங்கியைக் கூப்பிட்டு தன் கணங்களைக் கூட்டி வரும்படி அனுப்பினார்.

சிவனின் உத்தரவைக் கேட்டு எல்லாரும் வந்தார்கள். ப்ரபு - பத - கமலத்தில் தலை வணங்கினார்கள். அவர்களுக்குப் பலவிதமான வாஹனங்கள்; பலவிதமான வேஷங்கள்! சிவன் தன் ஸமாஜத்தைப் பார்த்து சிரித்தார்.

* மணப்பிள்ளை வீட்டார் ஒரு கோஷ்டியாக செல்வது வட நாட்டில் பழக்கம்.

ஒருவனுக்கு முகமில்லை. ஒருவனுக்கு அநேக முகங்கள். ஒருவனுக்கு கை கால் இல்லை. ஒருவனுக்கு அநேக கை, கால்கள் ஒருவனுக்கு கண்ணே இல்லை. ஒருவனுக்கு அநேக கண்கள் ஒருவன் மிகவும் பருத்திருந்தான். ஒருவன் மிக மெலிந்து பல வீனமாயிருந்தான். ஒருவன் மிகவும் பவித்ரமாயிருந்தான். ஒருவன் மிக அபவித்ரமாயிருந்தான். பயங்கரமான உடை அணிகள் அணிந்து, கையில் கபாலம். சரீரம் முழுதும் புதிய ரத்தம். ஒருவனுக்கு கழுதை முகம்; ஒருவனுக்கு நாய் முகம்; ஒருவனுக்குப் பன்றி முகம்; ஒருவனுக்கு குள்ள நரி முகம். கணங்களின் எண்ணிலாத வேஷங்களை யார் கணக்கிட முடியும்? பலவித ப்ரேத, பிசாச, யோகிநிகளின் குழாங்கள்! அதை வர்ணிக்கவே முடியாது. பூதங்கள் ப்ரேதங்கள் எல்லாம் மிக களிப்புடனிருந்தன; ஆடின, பாடின. பார்த்ததே விபரீதமாயிருந்தது. பேச்சுமாதிரி விசித்ரமாயிருந்தது. மாப்பிள்ளை எப்படி இருந்தாரோ அப்படியே - பாராத் அமைக்கப்பட்டது. போகப்போக வழியெலாம் அநேக விதமான வேடிக்கைகள் நிகழ்ந்தன.

இங்கே ஹிமாசலம் வர்ணிக்கமுடியாத அத்தனை விசித்ரமான மண்டபம் அமைத்திருந்தான்.

ஜகத்தில் எத்தனை மலைகள் இருந்தன. — பெரிதென்ன, சின்னதென்ன - வர்ணிக்கவே முடியாதவை! வநம், ஸமுத்ரம், குளம் எல்லாருக்கும் ஹிமகிரி அழைப்பு அநுப்பியிருந்தான். எல்லாம் தமக்கு விருப்பமான சரீரம் ஏந்தி, சிறந்த மனைவியருடனும், ஸமாஜத்துடனும் துஹினசல [ஹிமாசல]த்தின் வீட்டுக்குப் போனார்கள். ஆசைமிக, மங்கல கானம் பாடினார்கள். ஏற்கனவே கிரி அநேக வீடுகள் அமைத்திருந்தான். எல்லாரும் கூடிவிட்டால் கஷ்டமாகிவிடும். ஆகையால் அங்கங்கே அவரவர் தகுதிக்கு ஏற்ப தங்கச்செய்தான். புரத்தின் அழகைப்பார்த்தபோது விரிஞ்சியின் நிபுணத்வமும் அல்ப்பமாக தோன்றியது. வநம், பூங்கா, கிணறு, குளம், நதிகள் எல்லாம் அழகாயிருந்தன. அதன் வர்ணனை யார் பண்ணமுடியும்?

ஒவ்வொரு வீட்டிலும் தோரணங்கள், கொடிகள், பதாகங்கள் திகழ்ந்தன. அழகான ஸ்த்ரீ புருஷர்களின் பொலிவைப் பார்த்த முநிவர்களின் மனமும் மோஹமடைந்தன.

ஜகதம்பா அவதரித்த அந்த புரத்தின் சோபையைச் சொல்ல முடியுமா என்ன? அங்கே புதுப்புது ருத்தி, ஸித்தி, ஸம்பத், ஸுகம் பெருகிக்கொண்டே இருந்தன.

பாராத் நகரை நெருங்கிவிட்டதென்று கேட்டு நகரமெங்கும் கோலாஹலமாயிற்று. மிக அழகாயிருந்தது. தாங்களும் எல்லாம் ஏற்பாடு பண்ணிக்கொண்டு அநேக வாஹனங்களுடன் மரியாதை மிக எதிர்கொண்டு அழைக்கப் போனார்கள்.

தேவர்களின் கூட்டத்தைப் பார்த்து எல்லாருக்கும் ஸந்தோஷமுண்டாயிற்று. ஹரியைப் பார்த்து எல்லாருக்கும் மகிழ்ச்சி உண்டாயிற்று.

சிவ ஸமாஜத்தைப் பார்த்தவுடனே யானை, குதிரை வாஹனங்களெல்லாம் பயந்து ஓடிவிட்டன. கெட்டிக்காரர்கள் மட்டும் தைர்யமாக நின்றார்கள். பிள்ளைகளோ உயிரைப் பிடித்துக் கொண்டு ஓடினார்கள். வீட்டில் வந்ததும் தாய் தந்தையர் கேட்டார்கள். அவர்கள் பயத்தால் நடுங்கிக்கொண்டே, ''என்னத்தைச் சொல்ல ! ஒரு வார்த்தையும் சொல்லமுடியாது. இது யமராஜனின் ஸேனையா, பாராத்தா ? பித்தன், வரன் எருதின்மேல் உட்கார்ந்திருக்கிறான் ! பாம்பும், கபாலமும், சாம்பலும் அவன் ஆபரணங்கள். வரனின் தேஹமெல்லாம் சாம்பல் பூசியிருக்கிறது. அமணம். சடை. உருவம் பயங்கரமாயிருக்கிறது. அவன் தோழர்கள் பூதம், ப்ரேதம், பிசாசம், பயங்கர முகமுள்ள ராக்ஷஸர்! இந்த பாராத்தைப் பார்த்தும் உயிரோடிருப்பவன் மஹா புண்யவானாவான்! உண்மையாகவே! அவனே உமாவின் விவாஹத்தைப் பார்க்கக்கூடும்''. இந்தச் செய்தி வீட்டுக்கு வீடு சொல்லப்பட்டது.

மஹேசனின் ஸமாஜத்தைப் பற்றித் தெரிந்துகொண்ட தாய் தந்தையர் சிரித்தார்கள். பிள்ளைகளைப் பல விதமாகத் தேற்றினார்கள். பயப்பட வேண்டாம். பயப்பட ஒன்றுமே இல்லை என்றார்கள்.

வரவேற்கப் போன குழாம் பாராத்தை அழைத்துவந்தது. எல்லாருக்கும் அழகான இருப்பிடம் கொடுத்தார்கள். மேனு மங்கள ஆரதி ஏற்பாடு பண்ணிவைத்துக் கொண்டாள். அவளுடன் ஸ்த்ரீகள் அழகாக மங்கள கானம் இசைத்துக் கொண்டிருந்தார்கள். அழகான கரங்களில் தங்கத் தட்டுகள் விளங்கின. ப்ரஸன்னமாக அவர்கள் ஹரனுக்கு த்ருஷ்டி கழிக்கப் போனார்கள். ருத்ரனின் பயங்கரமான வேஷத்தைப் பார்த்தவுடனே ஸ்த்ரீகளுக்கும் ஹ்ருதயத்தில் பயம் உண்டாயிற்று. பயந்து ஓடி வீட்டுக்குள் ஒளிந்துகொண்டார்கள்.

மஹேசன் ஜன வாஸத்துக்கு [இருக்க ஏற்பாடாகி இருந்த இடத்துக்கு]ப் போனார்.

மேனுவின் ஹ்ருதயத்தில் பெரிய துக்கம் உண்டாயிற்று. கிரீச—குமாரியைக் கூப்பிட்டாள். அதிகமான ஆசையுடன் மடியில் அமர்த்திக் கொண்டாள். நீல கமலக் கண்களில் நீர் நிரம்ப சொன்னுள்: ''எந்த விதி உனக்கு இந்த மாதிரி ரூபத்தை அளித்தானோ, அந்த ஜடம் எப்படி உன் வரனைப் பித்தனுக்கினுன்? கல்ப வ்ருக்ஷத்தில் இருக்க வேண்டிய கனி [பழம்] கருவேல மரத்தில் இருக்கிறதே! உன்னைக் கட்டிக்கொண்டு நான் மலை உச்சியிலிருந்து விழப்போகிறேன்; தீயில் எரிந்துவிடப் போகிறேன்; ஸமுத்ரத்தில் முழுகிச் சாகப்போகிறேன். வீடு போகட்டும்; அவதூறு வரட்டும். ஆனுல் உயிரோடு நான் இந்த விவாஹத்தை நடக்க விடமாட்டேன்.'' கிரி-மனைவியின் துக்கத்தைப் பார்த்து எல்லா ஸ்த்ரீகளும் கலங்கினுர்கள். பெண்ணின் ப்ரேமையைப் பாராட்டி அரற்றி அழுது-பாடினுர்கள். ''நாரதனுக்கு நான் என்ன குற்றம் பண்ணினேன்? என் வாழும் வீட்டை இப்படி வேரோடு பிடுங்கிவிட்டானே! பித்தனுன வரனுக்காக தபஸ் வேறு பண்ணும்படி உமாவுக்கு உபதேசம் பண்ணினுனே! நிஜம் தான். அவனுக்குப் பிரியமுமில்லை, இரக்கமுமில்லை. பற்றற்றவனுகவே இருந்துகொள்ளட்டும். அவனுக்குப் பணமில்லை; பெண்டில்லை, வீடில்லை. பிறர் குடியைக் கெடுப்பவன். அவனுக்கு வெட்கமுமில்லை, பயமுமில்லை. மலடிக்கு ப்ரஸவ வேதனை எப்படித் தெரியும்!''

தாயார் கலங்கிவிட்டதைப் பார்த்தாள் பவாநி. விவேகம் செறியும் இனிய வார்த்தை சொல்வாள்: அம்மா, விதாதா என்ன அமைத்து வைத்திருக்கிருரோ அது மாருது. இதை யோசித்துப் பார். துக்கப்படாதே. என் ப்ராரப்த்தத்தின்படி பித்தனுன பதிதான் எழுதி வைத்திருக்கிருர் என்ருல் யாரையும் எப்படி குற்றம் சொல்லலாம்? விதியின் பகுதி எதையும் நீ அழிக்க விரும்பினுல் அழிக்க முடியுமா? அம்மா வீணுகப் பழி வாங்கிக் கொள்ளாதே. கெட்ட பெயர் வாங்கிக் கொள்ளாதே. விவாதம் வேண்டாம். இது ஸமயமில்லை. என் கர்மாவின்படி ஸுகமோ துக்கமோ என்ன எழுதி வைத்திருக்கிறதோ அதை எங்கே போனுலும் அடைந்தே தீருவேன்.''

பணிவாக, இனிமையாக உமா சொன்னதைக் கேட்ட ஸ்த்ரீகள் எல்லாரும் வருத்தமடைந்தார்கள்; பலவிதமாக விதியின் மேல் குற்றம் சாட்டினுர்கள்; கண்ணீருகுத்தார்கள்.

அதே ஸமயத்தில் இதுபற்றிக் கேட்டது ஹினகிரி[ஹிமாசலம்] நாரதர், ஸப்தருஷிகள் எல்லாரையும் கூட்டிக்கொண்டு அங்கே வந்தான்.

நாரதர் எல்லாருக்கும் விளக்கிச் சொன்னுர். முன் கதை நிகழ்ச்சிகளை எடுத்துச் சொன்னுர். ''மேனு ! நான் சொல்வது ஸத்யம், இதைக் கேள். உன் பெண் ஜகத்தின் தாயார். பவாநி. இவள் ஒருக்காலும் ஜன்மம் எடுத்துக் கொள்வதில்லை. இவள் அநாதி சக்தி. இவளுக்கு அழிவே ஏற்படுவதில்லை. இவள் எப்போதும் சம்புவின் பாதி உடலாயிருப்பாள். இவளே ஸம்ஸாரத்தின் உத்பத்தி, பாலனம், நாசம் பண்ணுபவள். தான் விரும்பிய படி லீலா நிகழ்த்தவே சரீரம் எய்துகிருள்.

முதலில் இவள் தக்ஷன் வீட்டில் போய் வளர்ந்தாள். அப்போது இவள் பெயர் ஸதி. நல்ல அழகான சரீரம் கொண்டிருந்தாள். அங்கேயும் ஸதி சங்கரனையே விவாஹம் பண்ணிக் கொண்டாள். இந்தக் கதை ஜகத் எல்லாம் புகழ் பெற்றது. ஒரு தடவை சிவனுடன் வந்துகொண்டிருந்தபோது ரகு-குல-கமல-பதங்கனைப் பார்த்தாள். இவளுக்கு மோஹமுண்டாகியது. சிவன் சொன்னதைக் கேட்கவில்லை. ப்ரமையில் பிடிபட்டாள். சிய ரூபம் எடுத்துக்கொண்டாள். இந்தக் குற்றத்திற்காகவே சங்கரன் இவளைக் கைவிட்டார். ஹரனின் பிரிவு தாங்கமுடியாமல் பிதாவின் யக்ஞத்துக்குப் போனுள். அங்கே யோகாக்நியில் பஸ்மமானுள். இப்போது உன் வீட்டில் ஜன்மமெய்தி தன் பதிக்காக கடும் தவம் பண்ணியிருக்கிருள். இதைத் தெரிந்து கொள். ஸந்தேஹத்தை விடு. கிரிஜா எப்போதும் சங்கர ப்ரியையாம்.

நாரதர் சொன்னதைக் கேட்டு எல்லாருக்கும் துக்கம் நீங்கியது.ஒரு க்ஷணத்தில் இந்த ஸம்வாதம் [உரையாடல்] ஒவ்வொரு வீட்டுக்கும் பரவியது.

மேனுவும், ஹிமவானும் ஆனந்தமடைந்தார்கள். மீண்டும் மீண்டும் பார்வதியின் பாதங்களில் வந்தனம் செய்தார்கள். நகரத்தின் ஸ்த்ரீகள், புருஷர்கள், பிள்ளைகள், யுவர்கள், முதியோர்கள் எல்லாரும் ஸந்தோஷமடைந்தார்கள். நகரத்தில் மங்களகானம் முழங்கலாயிற்று. எல்லாரும் அநேக விதமாக தங்கக் கலசங்கள் ஏற்பாடு பண்ணினுர்கள். சமையல் சாஸ்த்ரப் படி அநேக வித உணவுகள் சமைத்தார்கள். விருந்துகள் ஏற்பாடு பண்ணினுர்கள். மாதா பவாநி வஸித்த வீட்டில் விருந்து வர்ணிக்கவா முடியும் ! மரியாதை மிளிர விஷ்ணு விரஞ்சி முதலாக எல்லா ஜாதி தேவர்களும், பாராத் பூராவும் அழைக்கப்பட்டனர் [பாராத்தில் வந்த எல்லாரும்].

அநேக பந்திகளில் அமர்ந்தார்கள். ஸாமர்த்யமிக்க பரிசாரகர் விருந்து பரிமாறலாயினர். தேவர்கள் உணவருந்துவதறிந்து ஸ்த்ரீகள் வந்து ஏசல் பாட்டுகள் பாடலாயினர். இனிமையான ஸ்வரத்தில் பாடினுர்கள்.

தேவர்கள் சாப்பிட வெகு தாமதம் பண்ணுகிருர்கள். வேடிக்கைப் பாட்டுகள் கேட்டு மிகவும் ஸந்தோஷப்படுகிருர்கள். விருந்தின்போது பெருகிய ஆனந்தம் ஒரு கோடி வாயாலும்கூட சொல்ல முடியாது. எல்லாரும் கை, வாய் சுத்தம் பண்ணிக்கொண்ட பின் வெற்றிலே பாக்கு கொடுக்கப்பட்டது. யாருக்கு எங்கே டேரா இருந்ததோ அவர் அங்கே போனுர்.

பின்னர் முநிவர்கள் வந்து ஹிமவந்தனிடம் லக்னத்தைத் தெரிவித்தார்கள். விவாஹ வேளே வந்துவிட்டதென்று தேவர்களே அழைத்துவரச் சொன்னுன். தேவர்கள் எல்லாரையும் மிக மரியாதையுடன் அழைத்து வந்தார்கள். எல்லாருக்கும் தகுந்த ஆஸனங்கள் கொடுத்தார்கள்.

வேத முறைப்படி வேதி அமைக்கப்பட்டது. ஸ்த்ரீகள் அழகாக ஸுமங்களமாக பாடலானுர்கள்.

பெரிய தெய்வீகமான ஸிம்ஹாஸனத்தின்மேல் எவ்வளவு விசித்ரமானவை பண்ணப்பட்டிருந்தது - அதன் வர்ணனே பண்ண முடியாது.

ப்ராஹ்மணர்களுக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டு, ஹ்ருதயத்தில் தன் ப்ரபு ரகுராயியை ஸ்மரணம் பண்ணிக்கொண்டு சிவன் அமர்ந்தார்.

பின்னர் முநிவர்கள் உமாவை அழைத்துவரச் சொன்னுர்கள். *அலங்காரம் பண்ணி தோழிகள் அவளே அழைத்து வந்தனர். அந்த ரூபத்தைப் பார்த்து தேவர்கள் எல்லாரும் மோஹமடைந்தார்கள். உலகத்தில் இதுபோன்ற அழகை வர்ணிக்கத் திறமையுள்ள கவி யார்? இவள் ஜகதம்பிகா; பவ(சிவ)னின் மனேவி என்று தெரிந்து தேவர்கள் மனஸுக்குள்ளேயே நமஸ்காரம் பண்ணினுர்கள். பவாநி அழகின் வரம்பாகத் திகழ்ந்தாள். அந்த அழகை ஆயிரம் வாயாலும்கூட வர்ணிக்க முடியாது. வேதம், சேஷன், சாரதாவும் சொல்லத்தயங்குவர்; மந்தமதி துளஸி என்ன பொருட்டு [எந்த கணக்கில் சேர்ப்பது]! அழகின் அஹமான அன்னே பவாநி சிவனின் அருகே மண்டபத்துள் சென்ருள். தயக்கத்தால் [வெட்கத்தால்] நிமிர்ந்து பார்க்க முடியவில்லே. ஆனுல் மநஸ் ரூபமான வண்டு என்னவோ பதிபத கமலத்தில் பதிந்திருந்தது.

முனிவர்கள் ஆக்ஞைப்படி சம்புவும் பவாநியும் கணபதி பூஜை பண்ணினார்கள்.

அவர் (கணபதி) அநாதி தேவர் என்று தெரிந்துகொண்டால் இதைக் கேட்டு யாரும் ஸந்தேஹப்பட மாட்டார்.

விவாஹ விதிகள் வேதம் எப்படி சொல்லியிருக்கிறதோ அதெல்லாம் முனிவர்கள் செய்வித்தனர்.

கிரீசன் [ஹிமவான்] தன் கையில் குசம் [தர்ப்பை வகை] எடுத்துக்கொண்டு கன்னியின் கரத்தை—அவள் பவாநி என்ற நினைவுடன்— பவனுக்கு ஸமர்ப்பித்தான்.

சிவன் பாணிக்ரஹணம் [கையை (ப்பிடித்து) எடுத்துக்கொள்வது] பண்ணியவுடன் லோக பாலர்கள் ஸந்தோஷப்பட்டார்கள். முனிவர்கள் வேதகோஷம் பண்ணினார்கள். தேவர்கள் ''ஜய ஜய ஜய சங்கர'' என்று சொன்னார்கள் [முழக்கினார்கள்]. அநேக விதமான வாத்யங்கள் முழங்கின. ஆகாயத்திலிருந்து எல்லா விதமான புஷ்பங்களும் பொழியலாயின.

ஹர-கிரிஜா விவாஹம் நடந்து முடிந்தது.

உலகம் முழுதும் உத்ஸாஹம் நிரம்பியது.

பணிப்பெண்கள், பணியாட்கள். குதிரைகள், ரதங்கள், பசுக்கள், வஸ்த்ரங்கள், மணிகள் முதலாக பொருள்கள் வகைகள்; அன்னம், தங்கப் பாத்ரங்கள் வண்டிகளில் நிறைத்து வரதானமாகக் கொடுக்கப்பட்டன. அதை வர்ணிக்க முடியாது.

பல விதமாக வர-தானங்கள் கொடுத்து, கைகள் கூப்பி, ஹிம-பூ-தரன் சொல்வான்; ''சங்கர, நீங்கள் பூர்ணகாமன். நான் உங்களுக்கு என்ன தரமுடியும்?'' என்று அவருடைய பாதங்களைப் பிடித்துக்கொண்டான்.

க்ருபாஸாகரன், சிவன் மாமனாரைப் பலவிதமாக ஸந்தோஷப் படுத்தினார். பின்னர் ப்ரேமை நிரம்ப மேனா அவருடைய பாதங்களைப் பிடித்துக் கொண்டு. ''ஹே நாத! உமா எனக்கு ப்ராணன் போல ப்ரியமானவள். இவளைத் தாங்கள் தங்கள் *வீட்டுப் பணியாளாக்கிக் கொள்ள வேண்டும். அவளுடைய எல்லாக் குற்றங்களையும் மன்னித்தருள வேண்டும். மனம் மகிழ்ந்து இந்த வரம் எனக்கருள வேண்டும்.''

சம்பு பலவிதமாக மாமியாரை ஸமாதானப் படுத்தினார். அவருடைய சரணங்களில் நமஸ்காரம் பண்ணிவிட்டு வீட்டுக்குப் போனார்கள்.

பின்னர் தாயார் உமாவை அழைத்தாள். மடியில் அமர்த்திக்கொண்டு அழகான அறிவுரை கொடுத்தாள். ''எப்போதும் சங்கரனின் பாதத்தைப் பூஜை பண்ண வேண்டும். ஸ்த்ரீகளுக்கு இதுதான் தர்மம். அவர்களுக்கு பதியை அன்றி வேறு *தெய்வமே கிடையாது''. சொல்லச் சொல்ல கண்களில் நீர் நிரம்பியது. மகளை மீண்டும் மார்பொடு தழுவிக் கொண்டாள். மேலும் சொல்வாள்: ''உலகில் விதி ஸ்த்ரீகளை ஏன் உண்டாக்கினார்! மற்றவர் அதிகாரத்திற்குட்பட்டவர்களுக்கு என்றுமே ஸுகம் கிடையாது''. தாயார் மிகவும் கலக்கமடைந்திருந்தாள். ஆனால் ஸமயம் ஸரியில்லை எனத் தெரிந்துகொண்டு தைர்யம் கொண்டாள். மீண்டும் மீண்டும் அவளிடம் வருவதும் சரணங்களில் விழுவதுமாக இருந்தாள். அந்தப் பரம ப்ரேமையை கொஞ்சமும் வர்ணிக்க முடியாது. பவாநி எல்லா ஸ்த்ரீகளிடமும் சென்று விடை பெற்றுக்கொண்டு, மீண்டும் தாயாரிடம் போய் மார்பில் ஒன்றிக்கொண்டாள். விடை பெற்றுக்கொண்டு போனாள். எல்லாரும் பொருத்தமாக ஆசீர்வாதம் அளித்தார்கள். திரும்பத் திரும்பத் தாயாரைப் பார்க்கிறாள். பின்னர் ஸகிகள் அவளை சிவனிடம் அழைத்துக்கொண்டு போனார்கள்.

எல்லாப் பொருள்களையும் யாசகர்களுக்கு வழங்கிவிட்டு சங்கரர் உமா உடன் வர, வீடு சேர்ந்தார்.

தேவ கணங்கள் ஸந்தோஷமடைந்து புஷ்பங்கள் பொழியலாயினர். ஆகாசத்தில் நன்றாக டங்கா முழங்கியது.

எல்லையிலாத ப்ரீதியுடன் ஹிமவான் அவரைக் கொண்டு விடப் போனான். வ்ருஷகேது பலவிதமாக அவரைத் தேற்றி விடை தந்தனுப்பினார். கிரி உடனே வீட்டுக்கு வந்தான். எல்லா பர்வதங்கள், ஏரிகளை அழைத்தான். *மரியாதை *தானம் பணிவு மிக அன்புடன் அளித்து எல்லாருக்கும் விடை கொடுத்தனுப்பினான்.

சம்பு கைலாஸம் சேர்ந்ததும் தேவ கணங்கள் அவரவர் லோகத்துக்குப் போனார்கள்.

சம்பு-பவாநி ஜகத்தின் மாதா பிதா ஆகையால் அவர்களுடைய ச்ருங்கார (லீலை)களை நான் வர்ணிக்கவில்லை. விதம் விதமாக போக-விலாஸம் பண்ணிக்கொண்டு தம் கணங்களுடன் கைலாஸத்தில் வஸிக்கலாயினர். ஹர கிரிஜா விளையாட்டுக்கள் நித்தமும் புத்தம் புதிதாயிருந்தன. இப்படியாக வெகு காலம் கழிந்தது.

அப்போது ஆறுமுகனின் ஜன்ம முண்டாயிற்று. அவன் போரில் தாரகாஸுரனை மாய்த்தான். இது வேத சாஸ்த்ர புராணங்களில் ப்ரஸித்தமானது. ஷடானனனின் [ஆறுமுகனின்] ஜன்மக் கதை உலகெலாம் தெரியும். அவனுடைய ஜன்மா, கர்மா, ப்ரதாபம், மஹா புருஷார்த்தம் உலகெலாம் தெரியும். ஆகையால் நான் வ்ருஷகேதுவின் புத்ரனின் (ஜன்ம) சரித்ரத்தை சுருக்கமாகச் சொன்னேன்.

இந்த உமா-சம்பு விவாஹத்தை எந்த ஸ்த்ரீ புருஷர் சொல்வரோ, பாடுவரோ, அவர்கள் நல்ல கார்யங்களின்போதும் விவாஹங்களின் போதும் எப்போதும் ஸுகம் அடைவர்.

கிரிஜா ரமண-சரிதம் ஸமுத்ரமானது. அதன் அக்கரையை வேதமும் அடையவில்லை.

மந்த புத்தியுள்ளவன், பட்டிக்காட்டானை துளஸிதாஸ் எப்படி வர்ணனை பண்ண முடியும் ?

ஸம்கதி வாக்யம்

ரஸம் தோய்ந்த அழகான சம்பு சரிதத்தைக்கேட்டு பரத்வாஜர் மிக ஸந்தோஷம் அடைந்தார். கதையில் ஆவல் மேலும் அதிகமாயிற்று. கண்களில் நீர் நிரம்பியது. மயிர்க்குச்செரிந்தது. ப்ரேமையில் மெய் மறந்து நின்றார். வாயில் வார்த்தை ஏதும் எழவில்லை.

இந்த நிலையைப் பார்த்து க்ஞாநி முனிவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். ''முநீசா, உங்கள் வாழ்க்கை தந்யமானது. [நீங்கள் பாக்யசாலி]. கௌரீசன் உங்களுக்கு ப்ராண ப்ரியன். சிவனுடைய சரணங்களில் யாருக்கு ப்ரீதி *இல்லையோ அவர்களை ராமனுக்கு கனவிலும் பிடிக்காது. ராம பக்தன் என்பதன் லக்ஷணமே இதுதான்: விச்வநாதனின் சரணங்களில் கள்ளமிலாத ப்ரீதி இருப்பதாகும். சிவனுக்கு சமமாக ரகுபதி *வ்ரதம் மேற்கொண்டவர் யார் ? பாபமிலாத ஸதியை யன்ன பத்நியையே த்யாகம் பண்ணினரே! ப்ரதிக்ஞை செய்து ரகுபதி பக்தியைக் காட்டினரே ! அன்ப ! சிவனுக்கு ஸமமாக ராமனுக்கு ப்ரியமானவர் யார் ? முதலில் நான் சிவனின் சரித்ரம் சொல்லியே உன் *ரஹஸ்யத்தைத் தெரிந்துகொண்டேன். நீ தோஷமில்லாத வனாக ராமனின் தூய ஸேவகன் ! உன் குணம் சீலங்களைப் புரிந்துகொண்டேன். இனி ரகுபதி லீலைகளைச் சொல்கிறேன்.

* 1 செய்து 2. கொடுத்து 3. வேண்டிக்கொண்டு

முநிவர, கேள். இன்று உன்னைச் சந்தித்ததில் என் மனஸில் என்ன ஸுகம் உண்டாயிற்றோ அதைச் சொல்ல முடியாது. ராம சரிதம் முடிவிலாதது, எல்லையிலாதது. அதை நூறு கோடி சேஷனும் சொல்ல முடியாது. இருந்தாலும், நான் எப்படிக் கேட்டுத் தெரிந்துகொண்டிருக்கிறேனோ! அப்படி கிரா-பதி [சொல்லின் தெய்வமான] தநுஸ் பாணியான (கையில் வில் ஏந்திய) ப்ரபுவை [ராமனை] ஸ்மரணம் பண்ணிவிட்டு சொல்கிறேன். சாரதா கைப்பொம்மைக்கு ஸமமாம். ஸ்வாமி அந்தர்யாமி ராமன் தான் [அதை ஆட்டிக்காட்டும்] ஸூத்ரதாரி. பக்தன் என்று தெரிந்து யார் மேல் அவர் க்ருபை பண்ணுகிறாரோ அந்தக் கவியின் ஹ்ருதய ரூபமான மேடையில் வாணியின் ந்ருத்யத்தை நடத்தி வைக்கிறார். அதே க்ருபாலு ரகுநாதனுக்கு நான் நமஸ்காரம் பண்ணுகிறேன். அவருடைய நிர்மல குணகாதா வர்ணிக்கிறேன்.

மலைகளில் சிறந்த கைலாஸம் மிக அழகானது. அங்கே சிவன்-உமா எப்போதும் வஸிக்கிறார்கள். அங்கே ஸித்தர்கள், தபஸ்விகள், யோகியர், தேவர், கிந்நரர், முநி ஜநங்கள், எல்லா புண்யாத்மாக்களும் வஸிக்கின்றனர்; ஸுகத்தின் மேக ரூபமான சிவனுக்கு ஸேவை பண்ணுகிறார்கள். ஹரி-ஹரனிடம் பாராமுக மானவர்களும், தர்மத்தில் ப்ரீதி இல்லாதவர்களும் கனவிலும் அங்கே போகமுடியாது.

அந்த மலைமேல் ஒரு மாபெரும் ஆலமரம் இருக்கிறது. அது எப்போதும் புதிதாகவும் எல்லாக் காலத்திலும் அழகாகவும் இருக்கும். அங்கே குளுமையான, நல்ல வாஸனையுள்ள, மென்மையான காற்று தவழ்ந்து வந்து கொண்டே இருக்கும். அதன் நிழல் அழகானது; குளுமையானது. ''சிவன் விச்ராமம் செய்யும் மரம்'' என்று வேதம் அந்த மரத்தைப் பற்றிச் சொல்கிறது.

ஒரு ஸமயம் ப்ரபு அந்த மரத்தடிக்குப் போனார். அதைப் பார்த்து அவர் ஹ்ருதயத்தில் மிகுந்த ஸுகம் உண்டாயிற்று. தன் கையாலேயே புலித்தோலை விரித்தார். * இயல்பாக அமர்ந்தார்.

சரீரம் குந்தமலர், சந்த்ரன், சங்கு போல வெளேரென்றிருந்தது. நெடிய புஜங்கள். முநி - வஸ்த்ர முடுத்திருந்தார். பாதங்கள் செங்கமலம் போல. நகங்களின் ஜோதி பக்தர்களின் மந - இருளைப் போக்கவல்லது. ஸர்ப்பமும் பஸ்மமும் அணிந்த த்ரிபுராரியின் முகம் சரத்கால சந்த்ரனின் அழகைத் தோற்கடிப்பதாயிருந்தது. தலையில் ஜடா மகுடம், ஸுரஸரித் (கங்கா),

கமலம் போன்ற அகன்ற கண்கள். நீலவண்ண கழுத்து அழகின் களஞ்சியம். சிரத்தில் இரண்டாம் பிறை சந்த்ரன். காமரிபு (பகைவன்) அமர்ந்திருந்து எப்படி சோபித்தார்! சாந்த ரஸமே, சரீரம் எடுத்துக்கொண்டால் போலிருந்தது. அது நல்ல ஸமயம் எனக்கருதி மாதா பவாநி, பார்வதி, சம்பு விடம் வந்தாள். தன் ப்ரியையை எல்லையிலாத மரியாதையுடன் இடப் பக்கம் அமர்த்திக் கொண்டார்.

மிக ஸந்தோஷத்துடன் சிவன் அருகே அமர்ந்தாள். முன் ஜன்ம கதை நினைவு வந்தது. பதியின் ஹ்ருதயத்தில் ப்ரேமை அதிகமாகியதை ஊகித்து உமா சிரித்துக்கொண்டு ப்ரியமாகச் சொல்வாள்! எந்தக் கதை எல்லா லோகங்களுக்கும் ஹிதம் பண்ண வல்லதோ, அதையே சைல குமாரி கேட்க ஆசைப் பட்டாள்.

உமாவின் கேள்விகள்.

விச்வநாத, என் நாத, புராரே, மூன்றுலகங்களிலும் தங்கள் மஹிமை தெரியும். சரம், அசரம், நாகர், நரர், தேவர் எல்லாரும் தங்கள் பத பங்கஜத்துக்கு ஸேவை பண்ணுகிறார்கள். சிவ, தாங்கள் ப்ரபு. ஸாமர்த்யமுள்ளவர், ஸர்வக்ஞர், எல்லாக் கலைகள் குணங்களின் இருப்பிடம். யோகம், க்ஞானம், வைராக் யங்களின் பொக்கிஷம். தங்கள் பெயர் ப்ரணத - கல்ப - தரு [பணிந்தோர் வேண்டுவதைக் கொடுக்கும் கல்ப - வ்ருக்ஷம்]. ஹே! ஸுக ராசி, என்னிடம் தங்களுக்கு ஸந்தோஷம் எனில், என்னை உண்மையாகவே தங்களுடைய தாஸி என்று கருது கிறீர்கள் எனில், ஹே ப்ரபோ, ரகுநாத கதை எல்லாவித மாகவும் சொல்லி என் அக்ஞானத்தை அகற்றுங்கள். எவருடைய வீடு கல்பவ்ருக்ஷத்தின் நிழலிலடியில் இருக்கிறதோ அவர் தரித்ரத் தால் [வறுமையால் - இல்லாமையால்] உண்டாகும் துக்கத்தை ஸஹித்துக் கொள்வாரா? சசிபூஷண, நாத, இப்படி ஹ்ருதயத் தில் யோசித்து, என் பாரமான மதி (புத்தி) ப்ரமையை அகற் றுங்கள். ப்ரபு! பரமார்த்த வாதிகளான முனிவர்கள் ராமனை அநாதி ப்ரஹ்மம் என்கிறார்கள்.) சேஷன், சாரதா, வேதம், புராணம் எல்லாம் ரகுபதி குணகானம் பண்ணுகின்றன. அநங்க அநாதி; (மன்மதனின் பகைவ! தாங்களும்இரவு - பகல், ராம ராம' என்று ஜபம் பண்ணுகிறீர்கள். அதே நினைவு எப்போதும் எவ்வளவு பெருகுகிறது! அதில் லயித்து இருக்கிறீர்கள், மறப் பதே இல்லை! அயோத்யா ராஜாவின் புத்ரனா ராமன்? அல்லது (பிறப்பிலாத) அஜனா, நிர்குணனா (குணமிலாதவன்) போக் கைப் புரிந்துகொள்ள முடியாத ஒருவரா? எவருடைய புத்தி

மனைவியின் பிரிவால் பித்து பிடித்ததாகிவிட்டதோ ராஜாவின் புத்ரனுயிருப்பவர் ப்ரஹ்மம் எப்படியாகும்? அவருடைய செயலை பார்த்தும், மஹிமையைக் கேட்டும் என் புத்தி பெரும் சுழலில் சிக்கிவிட்டது. விருப்பம் அற்ற, எங்கும் பரவிய, [எங்கும் நிறைந்த] ப்ரபு ப்ரஹ்மம் எனில் ஹே நாத, எனக்கு விளக்கிச் சொல்லுங்கள். அறிவிலி என்று என்மேல் கோபங் கொள்ளக் கூடாது. எப்படி என் மோஹம் அழியுமோ அப்படி செய்யுங்கள். வநத்தில் ராமனின் ப்ரயுத்வத்தை நான் பார்த்தேன். எல்லையிலாத பயத்தால் நான் கலங்கிப்போய் விட்டிருந்தேன். ஆகையால் தங்களிடம் ஏதும் நான் தெரிவிக்கவில்லை. பின்னரும் மலினமான என் மனஸில் க்ஞானம் உண்டாகவில்லை. அதன் பலனையும் நான் நன்ருக அடைந்து விட்டேன். நாத! என் மநஸில் இப்போதும் கொஞ்சம் ஸந்தேஹம் இருக்கிறது. தாங்கள் க்ருபை பண்ணுங்கள். நான் கைகள் கூப்பி வேண்டிக்கொள் கிறேன். ப்ரபோ! அந்த ஸமயத்தில் தாங்கள் எனக்குப் பல விதமாக விளக்கிச் சொன்னீர்கள் அதை நினைத்து என்மேல் கோபம் கொள்ளக்கூடாது. அப்போதிருந்தது போன்ற மோஹம் இப்போதில்லை. ராம கதைமேல் மனத்தில் ருசி இருக்கிறது. ஹே புஜக ராஜ பூஷண, (பாம்பு அரசர் அணியாக உடையவர்) ஸுரநாத, புநிதமான ராம - குண-காதா சொல்லுங்கள். தரையில் தலை தாழ்த்தி வைத்து தங்கள் பாதங்களுக்கு வந்தனம் பண்ணுகிறேன். கைகள் கூப்பி வேண்டிக்கொள் கிறேன். ச்ருதி - ஸித்தாந்தங்களை ஆராய்ந்து ரகுவரனின் நிர்மல மான யசஸ்ஸை வர்ணித்தருள வேண்டுகிறேன். ஸ்த்ரீ இதற்கு அதிகாரிணி [தகுந்தவர்] இல்லாது போனுலும், நானோ மநஸ்; கர்மா - வசனங்களால் தங்கள் தாஸி. வேட்கை மிகுந்த அதிகாரி அடைந்தவுடன் [வந்துவிட்டான் எனில் ஸாதுக்கள் ரஹஸ்யமான தத்துவங்களையும் கூட மறைத்து வைத்துக் கொள்வதில்லை. ஸுரராய! (தேவர்களின் ராஜா), [மிகுந்த] எல்லையிலாத ஆவலுடன் கேட்கிறேன்.

தயவு பண்ணி ரகுபதி கதை சொல்லுங்கள்.

முதலில் அந்தக் காரணத்தை ஆராய்ந்து சொல் லுங்கள். நிர்குண ப்ரஹ்மம் ஸகுண சரீரம் ஏன் எடுத்துக் கொண்டது.

இரண்டாவதாக, ப்ரபோ, ராமவதாரம் சொல் லுங்கள்.

பின்னர் உதாரமான [மேன்மையான] பாலசரித்ரம் சொல்லுங்கள்.

அதன்மேல். எதனுல் ஜாநகியை விவாஹம் பண்ணி கொண்டார்- அதைச் சொல்லுங்கள்.

என்ன தோஷம் காரணமாக ராமனே ராஜா த்யாகம் பண்ணிஞர். [ராஜ்யம் துறந்தது].

வநத்தில் வஸித்துக்கொண்டு என்ன அபாரமான செயல்கள் நிகழ்த்திஞர்? என்ன விதமாக ராவணனேக் கொன்ருர்? ஹே ஸுக - சீலசங்கர, அவர் சிம்ஹாஸனத்தில் வீற்று நிகழ்த்திய லீலைகள் எல்லாமே சொல்லுங்கள்.

கருணுயதந, ராமன் ஆச்சர்யமான ஒன்று செய்தாரே - ரகுவம்ச மணி ப்ரஜைகளே உடன் கூட்டிக் கொண்டு தன் இருப்பிடம் போஞரே - அதெப்படி? இதையும் சொல்லுங்கள்:

ப்ரபு! மேலும் அந்த தத்வத்தை வர்ணனே பண்ணுங்கள் - எந்த விக்ஞானத்தில் க்ஞாநி, முநிவர்கள் ஆழ்ந்து இருக்கிருர்கள்? பக்தி, க்ஞானம், வைராக்யம் எல்லாவற்றையும் அவ்வவற்றின் பிரிவுகளுடன் சொல்லுங்கள்.

மிக நிர்மலமான க்ஞானமுள்ள நாத! என்னென்ன இன்னம் அநேக ராம ஹஸ்யங்கள் உண்டோ அவைகளே வர்ணித்துச் சொல்லுங்கள். இன்னம் நான் கேட்காதவை என்னென்ன உண்டோ அவைகளேயும் மறைத்து வைக்காமல் சொல்லுங்கள்.

தாங்கள் மூன்று லோகங்களுக்கும் குரு என்று வேதம் சொல்கிறது. மற்ற பாமர ஜீவனுக்கு என்ன தெரியும்?

உமாவின்ஸ்வபாவமான அழகான கள்ளமிலாத கேள்விகளேக் கேட்டு சிவன் ப்ரஸன்னமாஞர். ஹரனின் ஹ்ருதயத்தில் ராம சரிதம் முழுவதும் வந்தது. ப்ரேமையால் [மயிர்க்குச்செறிந்தது] மெய் சிலிர்த்தது. கண்களில் நீர் திரண்டது.

ஸ்ரீ ரகுநாதனின் ரூபம் ஹ்ருதயத்தில் வந்தது. பரமானந்தமும், அளவிலாத ஸுகமும் அடைந்தார். இரண்டு நாழிகை த்யாந ரஸத்தில்ஆழ்ந்திருந்தார். பின்னர் மநஸ்ஸை வெளியிட்டார்.

ப்ரஸன்னமாகி ஹரன் ரகுபதி கதை வர்ணிக்கலானார்.

எதைத் தெரிந்துகொள்ளாவிட்டால் பொய்யும் மெய் யென்று தோன்றுமோ, எப்படி தெரிந்து கொள்ளாவிடில் தாம்பு (கயிறு) பாம்பாக (என)த் தோன்றுமோ, எதன் பெயரால் ஸம்ஸாரம் அற்றுப் போகுமோ, எப்படி விழித்துக்கொண்டதும் கனவின் ப்ரமை போய்விடுமோ, அந்த பால ராம ரூபத்தை வந்தனம் பண்ணுகிறேன். அவருடைய பெயரை ஜபம் பண்ணு வதால் ஸித்திகள் எல்லாம் எளிதில் கிடைக்கின்றன. மங்கலத் தின் இல்லம்; அமங்கலத்தை அழிப்பவர்; தசரதனின் (மாளிகை) முற்றங்களில் விளையாடும் அவர் க்ருபை பண்ணுவாராக.

ராமனுக்கு நமஸ்காரம் பண்ணினர். ஸந்தோஷமானர். த்ரிபுராரி அம்ருதம் போன்று சொல்லலானர்: கிரி ராஜ குமாரி, நீ தந்யை! உன் போல உபகாரம் பண்ணுவார் ஒருவரும் கிடையாது. நீ ராமகதை ப்ரஸங்கம் சொல்லும்படி கேட்டாய். அது எல்லா லோகத்தையும் பவித்ரமாக்க வல்லது — கங்கா போன்றது. நீயோ ரகுவீர சரணங்களில் ப்ரியப்படுபவள்; ஜகத்தின் நன்மைக்காக நீ கேள்வி கேட்டாய். பார்வதி, கனவிலும் கூட உன் ஹ்ருதயத்தில் ராம க்ருபையால் சோகம், மோஹம், ஸந்தேஹம், ப்ரமை கொஞ்சமும் கிடையாது. இது என் முடிவு! இருந்தாலும் நீ இப்படி ஸந்தேஹம் கொண்டாய். ஏன் எனில், அதைச் சொல்வதாலும் (அதன் விடை) கேட்பதா லும் எல்லாருக்கும் நன்மை உண்டாகும்.

ஆறு விதமான நிந்தைகள்

யார் ஹரிகதையைக் காதால் கேட்கவில்லையோ அவருடைய செவியின் வாயில் *ஸர்ப்பத்தின் வளைக்கு நிகராகும். யார் தம் கண்ணுர ஸாதுக்களின் தர்சனம் பண்ண வில்லையோ அவருடைய கண்கள் மயில் இறகின் கண்ணுக்கு நிகராம். யார் ஹரி, குரு சரணங்களில் பணியவில்லையோ அவர் தலை கசப்புச் சுரைக்காய்க்கு ஸமம். யார் தன்ஹ்ருதயத்தில் ஹரி பக்திகொண்டு வரவில்லையோ அந்த ப்ராணி பிணத்துக்கு ஸமமே. — உயிருள்ள பிணம்! எவருடைய நா ராம குணகானம் பண்ணவில்லை அது தவளையின் நாவுக்கு நிகராம். ஹரி சரிதத்தைக்கேட்டு ஸந்தோஷ மடையாத மார்பு (உள்ளம்) (நெஞ்சம்) இளக உருக முடியாதது.

வஜ்ரத்துக்கு நிகராக கடினமானது. ஹே கிரிஜே, ராமனின் லீலாக்களைக் கேள். அது தேவர்களுக்கு நன்மை பண்ணுவது [ராக்ஷஸர்] தநுஜர்களை மோஹிக்கச் செய்வது. ராம கதை காமதேநுவாம். அதை ஸேவித்தால் எல்லா ஸுகமும் தரும். ஸத் புருஷர்களின் [நல்லோர்களின்] ஸமாஜம் எல்லாம் தேவ லோகமாம். அங்கே காமதேனு வஸிக்கிறது. இப்படித் தெரிந்து கொண்டால் யார்தான் அதை [க்காதாரக்]கேட்க மாட்டார்? ராம கதை ஸந்தேஹ ரூபமான பக்ஷியை ஓட்டும் அழகான கை தட்டலாம். (ராமகதை) அது கலி ரூபமான மரத்துக்கு கோடரி. கிரி ராஜ குமாரி, அதை பய பக்தியுடன் கேள். ராமனின் நாமம் குணம், செயல் எல்லாம் அழகானவை. (அவரது) ஜன்மா, கர்மா-எண்ணிலாதவை. அவைகளை வேதம் பாடி இருக்கிறது. பகவான் ராமன் எப்படி அனந்தமோ [முடிவிலாதவரோ] அதேபோல் அவருடைய கதை, அவருடைய கீர்த்தி, குணங்கள்-எல்லாம் முடிவிலாதவை. இருந்நாலும்எப்படி நான் கேட்டேனோ, எப்படி என் புத்தி இருக்கிறதோ, அப்படி உன் ப்ரீதியைப் பார்த்துச்சொல்வேன். உமா உன் கேள்வி (இயல்பாகவே)யே மிக அழகானது. ஸுகம் தருவது. ஸாதுக்கள் ஒப்புக்கொள்வது. எனக்கும் பிடித்தது. பவாநி ஒன்றுதான் எனக்குப் பிடிக்கவில்லை. நீ மோஹ வசமாகித்தான் சொன்னாய் என்றாலும்-ராமன் இன்னொருவர்-என்றாயே! ராமனை *வேதம் பாடுகிறது! ராமனை முனிவர்கள் த்யானம் பண்ணுகிறார்கள். எவன் மேல் மோஹபிசாசு பற்றிக்கொண்டுவிட்டதோ,எவன் பாகண்டனோ, பகவச் சரணங்களிடமிருந்து முகத்தைத் திருப்பிக்கொண்டு போகிறானோ, பொய் - மெய் எதென்று மநஸுக்குத் தெரிய வில்லையோ, அத்தகைய இழிவானவன்தான் இப்படிச் சொல்வான், கேட்பான். அக்ஞாநி, மூர்க்கன், குருடன், பாக்ய ஹீனன் [நலம் கெட்டவன்], எவனுடைய மநஸ் ரூபமான கண்ணாடியில் விஷய [புலன்] ரூபமான மலம் படிந்திருக்கிறதோ, லம்படன், கபடமுள்ளவன், விசேஷமாக குடிலமானவன் [கோணல் தனமுள்ளவன்],எவன் கனவிலும் ஸாது ஸமாஜத்தைப் பார்த்ததில்லையோ, எவனுக்கு தன் நல்லது கெட்டதே தெரிய வில்லையோ,- இவர்கள்தான் வேதத்துக் கெதிராகப் பேசுவார்கள். ஒன்று * மலம் படிந்த *கண்ணாடி; அதோடு *கண்ணுமில்லை. பாவம்! ராம ரூபத்தை எப்படிப் பார்க்க முடியும்! எவனுக்கு நிர்குண ஞானமில்லையோ, ஸகுண ஞானமில்லையோ, அவன் அநேக விதமான கல்பனை பண்ணி பிதற்றுவான்.

---

1 அந்த:க்கரணம், சாஸ்த்ரக்ஞாநம், பூர்வ ஜன்ம பாவங்களால் விவேக புத்தி

எவன் ஹரி மாயா வசமாகி ஜகத்தில் சுற்று கிருனோ அவனுக்கு ஏதுமே சொல்ல முடியாததாகாது. எவனுக்கு வாயு ரோகம் உண்டாகி விட்டதோ, பயித்தியமாகி விட்டானோ, அல்லது ஸந்நிபாதம் உண்டாகி விட்டதோ, பூதம் பற்றிக்கொண்டதோ, அல்லது அழிவு வந்துவிட்டதோ, அவன் யோசித்து பேசமாட்டான். எவன் மஹா மோஹ ரூபமான மதிரா (கள் போன்ற போதைப் பொருள்) குடித்திருக் கிருனோ — இத்தகையவரின் பேச்சைக் கவனிக்கக் கூடாது.

இப்படி உன் மனத்தில் யோசித்து ஸந்தேஹத்தை விடு. ராம பதத்தை வழிபடு. கிரி ராஜ குமாரி, கேள்! ப்ரமை ரூபமான இருளைப் போக்க ஸூர்ய கிரணம் போன்றது நான் சொல்வது.

'ஸகுணம்—நிர்குணம்' இரண்டுக்கும் கொஞ்சமும் வித்யாஸ மில்லை. முனிவர், புராணம், வேதம், பண்டிதர் இப்படி பாடுகிருர்கள். எது 'நிர்குணமோ' அரூபம் (ரூப மிலாதது) அ-ஜன்மா (பிறவியிலாதது)வோ, பார்க்க முடியாததோ, அதே பக்தர்களின் ப்ரேமை வசமாகி 'ஸகுணம்' ஆகிறது. எதற்கு குணமில்லையோ அதெப்படி ஸ-குணம் (குணத்துடன் கூடியது) ஆகும்? எப்படி ஜலமும் பனிக்கட்டியும் வேறில்லையோ, எவருடைய நாமம் ப்ரமை ரூபமான இருள் அழிக்கும் ஸூர்யனோ அவரை மோஹம் சேர்ந்தது என்றும்கூட எப்படிச் சொல்லலாம்?

ராம ஸ்வரூபம்

ராமன் ஸத்-சித்-ஆனந்த ஸூர்யன். அங்கே அக்ஞானம் எனும் ராத்ரி இம்மியும் இல்லை. (பகவான் ஸ்வபாவமாகவே ப்ரகாச ரூபமானவர். அங்கே விக்ஞாந ரூபமான விடியற்காலம் கூட கிடையாது.)

பகவான் ஸ்வபாவமாகவே ப்நகாச ரூபமானவர். அங்கே விக்ஞான ரூபமான (1) ப்ராத; (விடியற்)காலமும்கூடக் கிடை யாது. (2) மகிழ்ச்சி, (3) சோகம், (4) க்ஞானம், (5)அக்ஞானம், (6) *அஸ்மிதா (7) கர்வம் இவை ஜீவ தர்மங்கள். இந்த ஏழும் ப்ரஹ்மத்தில் இல்லை. ராமனோ (1) வ்யாபக ப்ரஹ்மம், (2) பரமானந்த ஸ்வரூபம், (3) எல்லாருக்கும் ஸ்வாமி, (4) புராண புருஷன்—இது லோகத்துக்குத் தெரியும். எவர் (5) ப்ரஸித்தமான புருஷனோ, தெளிவாய்த் தெரியும் (6) ப்ரகாசத்தின் நிதியோ, (7) ஸூக்ஷ்ம-ஸ்தூலமானவைகளின் வெளிப்படையான ஸ்வாமியோ, அவரே ரகுகுல மணி; என் ஸ்வாமி.

---

* ஆணவம்

சிவன் தலை தாழ்த்தினர்

அக்ஞானிக்குத் தன் ப்ரமை தெரியாது. அவிவேகியான ப்ராணி [மநிதன்] தன் மோஹத்தை [மோஹத்தின் காரணம்] ப்ரபுவின் மேல் [ப்ரபு தான் என்று] சுமத்துகிறுன். ஆகாசத்தில் மேகங்களின் திரை உண்டாகவும், கெட்ட யோசனையுள்ளவர்கள் ஸூர்ய அது அஸ்தமனம் என்பார்கள். அதுபோல் தான் கண் முன் விரலை வைத்துப் பார்ப்பவனுக்கு இரண்டு சந்த்ரன்கள் நன்ருகத் தநித்தநியாகத் தெளிவாகத் தெரியும். உமா, ராமன் விஷயமாக இப்படித் தான் மோஹம் இருக்கிறது. ஆகாசத்தில் இருளும், புகையும், தூசும் விளங்குவது போல! விஷயங்களைவிட [புலன் உணர்ச்சிகளைவிட] இந்த்ரியங்களும், தேவர்கள் இந்த்ரியங் களை விடவும், அதைவிட அதிகமாக ஜீவாத்மாவும் சேதனமுள்ள தாம். இவை எல்லாவற்றையும் எவர் பரமப் ரகாசப் படுத்து கிருரோ அவரே, அநாதி, 'ராமன்' அயோத்யாபதி :

ஜகத் ப்ரகாசம் ஆக்கப்படுவது; ராமன் ப்ரகாசமாக்குபவர். அவர் மாயாவின் ஸ்வாமி. க்ஞானம், குணங்களின் இருப்பிடம். எவருடைய ஸத்யத்தால் ஜடமான மாயா மோஹத்தின் உதவி யால் ஸத்யம் போல விளங்குகிறதோ, எப்படி சிப்பியில் சந்த்ர, ஸூர்ய கிரணங்களால், ஜலம் விளங்குகிறதோ [முத்துப்போல], இவை முக்காலமும் பொய்யே என்ருலும் இந்த ப்ரமையை யாருமே மாற்ற முடிவதில்லையோ, இது போல ஜகத் ஹரியின் பலத்தால் இருக்கிறது. அஸத்யமானதுதான் - ஆனுல் துக்கம் தருகிறது. கனவில் ஒருவனுக்கு தன் தலை வெட்டப்பட்டது என்ருல் விழித்துக்கொண்டாலன்றி வலி போகாது. கிரிஜே! எவருடைய க்ருபையால் இத்தகைய ப்ரமை அழியுமோ, அதே க்ருபாளு ரகுராயி ! எவருடைய ஆதியோ அந்தமோ யார்க்கும் தெரியாதோ, அவரை வேதங்கள் தன் புத்திக்கேற்ப இப்படிப் பாடுகின்றன.

அது *காலில்லால் நடக்கும்! காதில்லாமல் கேட்கும்; கை இல்லாமல் பலவிதமான கார்யங்கள் பண்ணும்; வாய் இல்லாமல் எல்லா ரஸங்களையும் அநுபவிக்கும். வாக்கு இல்லாமல் மஹா பெரிய உரையாளனாம் அந்த மஹாயோகி ! சரீரம் இல்லாமல் [தீண்டலின் உணர்வு கொள்ளும்] தொடும். கண் இல்லாமல் பார்க்கும். நாசி இல்லாமல் நுகரும்.

எவருடைய செயல் இப்படியாக இந்த லோகத்தியதே அல்லவோ, அவருடைய மஹிமை வர்ணனை செய்யமுடியாது.

எவரை வேதமும் பண்டிதரும் இப்படி பாடுகிறுர்களோ, எவரை முனிவர்கள் த்யானம் பண்ணுகிறுர்களோ,—
அவரே, தசரதனின் புத்ரர், பக்தர்களுக்கு நல்லது பண்ணுபவர், கோசலபதி, பகவான்.

காசியில் இறக்கும் ப்ராணியைப் பார்த்து எவருடைய நாம பலத்தால் நான் அதன் [ப்ராணியின்] சோகத்தைப் போக்கு கிறேனே, அவரே, ரகுவரன், அந்தர்யாமி, ஜட-சேதனத்துக்கும் ஸ்வாமி, என் ஸ்வாமி - எல்லா ஹ்ருதயங்களிலும் இருக்கிறுர்.

தன் வசமிழந்த நிலேயிலாவது எவருடைய நாமத்தை ஒருவன் உச்சரிப்பானோ அவனுடைய அநேக ஜன்மங்களில் செய்த பாபங்களே எரித்துத் தள்ளி விடுகிறுரோ, ஒருவன் பய பக்தியுடன் ஸ்மரித்தால் அவன் ஸம்ஸாரத்தை மாட்டுக் குளம்பு தண்ணீரைப் போல் கடந்துவிடுவாளோ - ஹே பவாநி - அதே பரமாத்மா ராமன். 'அவருக்கு ப்ரமை இருக்கிறது' என்று நீ சொன்னது மிக மிக அநுசிதமானது. [பொருத்தமற்றது, கொஞ்சமும் ஒவ்வாதது]. இதுமாதிரி ஸந்தேஹம் மநஸில் வருவதால் க்ஞானம், வைராக்யம் எல்லா குணங்களும் போய் விடுகின்றன.

ப்ரமையை அழிக்கும்படியாக சிவன் சொன்னதைக் கேட்ட தும் குதர்க்கம் உருவாக்கியதெல்லாம் அழிந்தது. ரகுபதி பதத்தில் ப்ரீதி உண்டாயிற்று. கடினமான அ-விச்வாஸம் போய் விட்டது. திரும்பத் திரும்ப ப்ரபுவின் பத கமலங்களேப் பிடித்துக் கொண்டாள். ப்ரேமை ரஸம் தோய்ந்து கிரிஜா சொல்வாள்:— சந்த்ர கிரணங்களுக்கு ஸமமாக தாங்கள் சொன்னதைக் கேட்டு சரத்ருதுவின் வெயிலுக்கு நிகரான என் மோஹத்தின் கடுமை யான எரிச்சல் போய்விட்டது. ஹே க்ருபாலு! தாங்கள் [என்] ஸந்தேஹம் எல்லாவற்றையும் அகற்றி விட்டீர்கள். எனக்கு ராம-ஸ்வரூபம் தெரிந்து விட்டது. நாத, தங்கள் க்ருபையால் என் வருத்தம் போய்விட்டது. தங்கள் சரணங்களின் ப்ரஸாதத்தால் நான் ஸுகி ஆகிவிட்டேன். ஸ்வபாவமாகவே நான் ஜடம் என்றுலும், க்ஞானமில்லாதவள் என்றுலும், தாங்கள் என்னேத் தங்கள் தாஸி என்று கருதி, ஹே ப்ரபோ, தாங்கள் என்னிடம் ஸந்தோஷமடைந்திருக்கிறீர்கள் எனில், நான் முதலில் தங்களேக் கேட்ட விஷயத்தைச் சொல்ல வேண்டு கிறேன். ராமன் ப்ரஹ்மம். சின்மயன்மானவர். அவிநாசி, ஏது மற்றவர் எல்லாருடைய ஹ்ருதய ரூபமான புரத்தில் வஸிக்கிறுர். ஹே நாத! ஹே வ்ருஷகேது! இதை ஆராய்ந்து சொல்லுங்கள்; அவர் மநித ரூபம் என்ன காரணத்துக்காக எடுத்துக்கொண்டார்?

மிகவும் பணிவாக உமா சொன்னதைக் கேட்டு, ராம கதையில் அவளது பவித்ரமான ப்ரேமையைப் பார்த்து காமாரி [காமதேவனின் பகைவன்] நல்ல க்ஞானி, க்ருபாநிதானன் மன மகிழ்ந்து, உமாவை அனேக விதமாக புகழ்ந்து, மேலும் சொல்வார்:

பவாநி, ராம சரித மாநஸ் கதை *கேள்: இதை [காக] புஸுண்டி வர்ணித்துச் சொன்னுன். விஹக நாயகன் கருடன் கேட்டான். அந்த அழகான, ஸம்வாதம் என்ன விதமாக உண்டாகியது என்று அதை முதலில் சொல்கிறேன். இப்போது மிகவும் அழகான, பாபமிலாத, ராம அவதார சரிதம் கேள்:

ஹரியின் குணமும், நாமமும் அபாரமானவை. கதை வடிவங்களும் எண்ண முடியாதவை. உமா, நான் அதை என் புத்திக்கு பட்டபடி சொல்கிறேன். பயபக்தியுடன் கேள். கிரிஜே, கேள்! வேதமும் சாஸ்த்ரமும் பகவானின் அழகான, விஸ்தார மான, நிர்மலமான சரிதத்தைப் பாடியிருக்கின்றன. ஹரியின் அவதாரம் என்ன காரணத்துக்காக உண்டாகிறது.— அந்தக் காரணம் இதுதான்! இப்படியேதான் என்று சொல்லமுடியாது. இந்த ஒரு ரூபத்தால் சொல்லவும் இயலாது. பவாநி, கேள்! என் கருத்து இதுதான்: 'ராமன்' தர்க்கத்துக்கு உட்பட்டவ ரல்லர். மனம், புத்தி, வாக்குகளின் தர்க்கம் அவரிடம் செல்லா. இருந்தாலும் ஸாதுக்கள், முனிவர், வேதம், புராணம் எப்படி கொஞ்சம் தம் புத்தியின் போக்கின்படி சொல்கின்ருர் களோ ஹே *ஸுமுகி காரணம் எப்படி என் மநஸுக்கு வரு கிறதோ அப்படி சொல்கிறேன்:

எவ்வெப்போது தர்மத்துக்கு ஹாநி [கேடு]உண்டாகிறதோ, இழிவான, கர்வம் மிகுந்த அஸுரர் [பலம்] [ஓங்குகிருர்களோ], பெருகுகிருர்களோ, வர்ணிக்க முடியாத அநீதி இழைக்கிருர் களோ, ப்ராஹ்மணர், பசு, பூமி, பீடிக்கப்படுகிருர்களோ அவ்வப்போது ப்ரபு விதம் விதமான சரீரம் எய்தி க்ருபாநிதி யானவர் ஸஜ்ஜனங்களின் துன்பத்தை அகற்றுகிருர். அஸுரர் களை அழிக்கிருர், தேவர்களை ஸ்தாபிக்கிருர் [நிலைநிறுத்துகிருர்]. தன் வேத ரூபமான பாலத்தை ரக்ஷிக்கிருர். நிர்மலமான யசஸ்ஸை உலகத்தில் பரப்புகிருர். இதுதான் ராம ஜன்மத்தின் காரணம். அதே யசஸ்ஸைப் பாடி பக்தர்கள் ஸம்ஸாரத்தைக் கடக்கிருர்கள். க்ருபாஸிந்து பக்தர்க்காக சரீரம் எய்துகிருர்.

ராம ஜன்மத்துக்கு [பிறப்புக்கு] அநேக காரணங்கள் இருக்கின்றன. [அவை] ஒன்றைவிட ஒன்று விசித்ரமானவை. ஹே ஸுமதி [நல்ல புத்தியுடையவளே], பவாநி, * ஓரிரு ஜன்மாக்களை நான் வர்ணிக்கிறேன்.

ஹரிக்கு ப்ரியமாக இரண்டு த்வாரபாலகர் [வாயில் காப்போர்] உண்டு. *ஜயன், விஜயன் என்று அவர்கள் பெயர். மிகவும் ப்ரஸித்தமானவர்கள். விப்ர ஸாபத்தால் இரு ஸஹோதரர்களும் தாமஸ அஸுர தேஹம் அடைந்தார்கள். அவர்களே கநக [ஹிரண்ய] கசிபு, ஹாடக லோசனன் [ஹிரண்யாக்ஷன்] ஆனார்கள். இந்த்ரனின் மதத்தைப் போக்கிய அவர்கள் உலகெலாம் தெரியும். போரில் மஹாவீரர்கள் விஜயமே அடைவார்கள். வராஹ அவதாரம் எடுத்துக்கொண்டு பகவான் ஒருவனைக் கொன்றார். *ந்ருஸிம்ஹ அவதாரம் எடுத்துக்கொண்டு மற்றவனைக் கொன்றார். பக்த ப்ரஹ்லாதனின் நல்ல புகழைப் பரப்பினார். அவர்களிருவருமே பலவான்களான ராக்ஷஸர்களாக ஆனார்கள். கும்பகர்ணன், ராவணன் என்று அவர்கள் பெயர். இவர்கள் தேவர்களை ஜயித்த மஹா வீரர்கள் என உலகமெலாம் தெரியும். பகவான் இவர்களைக் கொன்றார். ஆனால் அவர்களுக்கு முக்தி கிடைக்கவில்லை. த்விஜர் [ப்ராஹ்மணர்] வாக்குப்படி மூன்று பிறவிகள் ஆகவேண்டும். ஒரு தடவை அவர்களுக்காக பக்தர்மேல் ப்ரியமுள்ளவர் [பகவான்] சரீரம் எடுத்துக் கொண்டார். அங்கே கச்யபரும் அதிதியும் பிதா-மாதா ஆனார்கள். தசரதன், கௌஸல்யா என்ற பெயர்களில் மிகவும் ப்ரஸித்தமானார்கள். ஒரு கல்பத்தில் இப்படி அவதாரம் ஆயிற்று. சரித்ரத்தால் ஸம்ஸாரத்தை பவித்திரமாக்கினார்.

ஒரு கல்பத்தில் ஜலந்தரனால் எல்லா தேவர்களும் போரில் தோற்கடிக்கப்பட்டார்கள். அவர்கள் துக்கமடைந்திருந்ததைப் பார்த்து சம்பு அபாரமாகப் போரிட்டார். ஆனால் மஹா பலவானான தநுஜன் [ராக்ஷஸன்] அடிபட்டு சாகவில்லை. அந்த அஸுர ராஜாவின் பத்நி மஹா பதிவ்ரதை. அவள் பலம் அவனுக்கிருந்ததால்தான் புராரி அவனை ஜயிக்க முடியவில்லை. ப்ரபு மாயம் செய்து ஏமாற்றி அவளுடைய வ்ரதத்தைக் கெடுத்தார்; தேவர்களின் கார்யத்தை முடித்தார். இந்த மர்மம் அவளுக்குத் தெரிந்தது. பெருங் கோபம் வந்தது. சாபம் கொடுத்தாள்.

---

* வைகுண்டத்தின் மேற்கு வாயிலில்

பகவானுக்கு வேடிக்கை மிகவும் ப்ரியம். க்ருபாலு அவளுடைய சாபத்தை ஏற்றுக்கொண்டார். அந்த கல்பத்தில் ஜலந்தரன் ராவணன் ஆனான். அவனைப் போரில் மாய்த்து அவனுக்கு ராமன் பரமபதம் அளித்தார்.

ராமன் நர [மநித] தேஹம் எடுத்துக்கொள்வதற்காக [ஒரு [பிறப்பு எடுத்துக் கொண்டார்] தடவை பிறந்தார்] இது காரணமாயிற்று.

முனிவரே, ப்ரபுவின் ஒவ்வொரு *அவதாரத்துக்கும் அநேக கதைகள் முனிவர்கள் வர்ணனை பண்ணியிருக்கிறார்கள்.

ஒரு தடவை நாரத முனிவர் சாபம் கொடுத்தார். அதற்காகவே ஒரு கல்பத்தில் அவதரித்தார்.

இதைக்கேட்டு கிரிஜா மிகவும் திகைத்துப் போனாள். '' நாரதரோ விஷ்ணு பக்தர்; பரம க்ஞாநி. என்ன காரணத்துக்காக முனிவர் சாபம் கொடுத்தார்? ரமாபதி அவருக்கு என்ன அபராதம் [குற்றம்] இழைத்தார்? ஹே புராரீ இந்த ப்ரஸங்கத்தை எனக்குச் சொல்லுங்கள். முனிவரின் மநஸ்ஸில் மோஹமுண்டாகியதா? இது மிக ஆச்சர்யமாயிருக்கிறதே !'' என்றாள்.

மஹேசன் சிரித்தார். சொன்னார் : யாரும் க்ஞாநி இல்லை. யாரும் மூடனில்லை. ரகுபதி எப்போது, யாருக்கு, எப்படி செய்து வைக்கிறாரோ, அப்போது அவன், அப்படியே ஆகிறான்.

பரத்வாஜரே, நான் ராம-குண-காதா சொல்கிறேன் மரியாதையுடன் அதைக் கேள்.

துளஸிதாஸ் தனக்குச் சொல்லிக்கொள்கிறார்: நீ மானம்[தற்பெருமை] மதம் விட்டு அவரை வழிபடு(பஜி)

2. நாரத மோஹ ப்ரஸங்கம்

ஹிமகிரியில் ஒரு பெரிய பவித்ரமான குஹை இருந்தது. அதன் அருகிலேயே ஸுரஸரி [கங்கா] பாய்ந்து கொண்டிருந்தது. அந்த பவித்ரமான, அழகான ஆச்ரமத்தைப் பார்த்த நாரதருக்கு அது மிகவும் பிடித்தது. மலை, நதி, வநத்தின் பகுதி எல்லாம் பார்த்து ரமாபதியின் சரணங்களில் அநுராகம் [ஆசை] உண்டாகியது. ஹரியை ஸ்மரணம் பண்ணின உடனேயே *சாபத்தின் கதி [போக்கு] தடைபட்டது. ஸ்வபாவமாகவே நிர்மலமான மநஸ் இருந்தது. ஸமாதி ஆகிவிட்டது.

---

* இந்த கல்பத்தின் கதை கர்ம-காட்டில் (துறையில்) நிகழ்ந்ததாம்

முநிவரின் போக்கு, நிலைமையைப் பார்த்து இந்த்ரனுக்கு பயம் உண்டாகியது. காமதேவனைக் கூப்பிட்டான். வெகு மதிகள் கொடுத்தான். அவனைப் பாராட்டி பெருமைப் படுத்தினன். 'எனக்காக நீ ஸேனையுடன் போ' என்றான்.

காமதேவன் ஹ்ருதயத்தில் ஸந்தோஷமடைந்தான். புறப் பட்டுப் போனன்.

''தேவ ருஷி என் புரத்தில் வாஸம் அமைத்துக்கொள்ள [வஸிக்க] விரும்புகிறார்'' என்று இந்த்ரனுக்கு பயம். யார் லோகத்தில் காமியாகவும், எல்லாவற்றிலும் திளைக்க விரும்புகிற னாகவும் இருக்கிறானோ, அவன் கெட்ட காகம் போல எல்லா வற்றிடமும் பயப்படுவான். நாய் ஒன்று உலர்ந்த எலும்பைக் கடித்துக்கொண்டிருக்கிறது; சிங்கத்தைப் பார்க்கிறது; சிங்கம் அதைப் பிடுங்கிக்கொண்டு விடுமோ என்று பயப்படுகிறது. அதைக் கவ்விக்கொண்டு ஓடுகிறது! அதேபோல இந்த்ரனுக்கு வெட்கமில்லை.

காமன் அந்த ஆச்ரமத்தில் வந்தான். உடனே தன் மாயாவால் வஸந்த காலம் உண்டாக்கினன். அநேக விதமான மரங்களில் வண்ண வண்ணமான புஷ்பங்கள் மலர்ந்தன. அவற்றின்மேல் குயில்கள் இசைத்தன. வண்டினம் உரவின. காமத்தீயை மூட்டும், வீக்கும் மூன்று விதமான காற்றுகள் குளுமையாக, மணம் தாங்கி, தவழ்ந்து வந்தன. ரம்பா முதலான நவ யுவதிகள், ஸ்வர்க்கத்தின் அப்ஸரஸ்கள், காம கலைகள் எல்லா வற்றிலும் வல்லவர்கள், அனேக விதமான தானங்களின் அலைகள் எழுப்பி கானம் பண்ணினார்கள். ஜல பக்ஷிகள் அநேக விதமாக விளையாடுகின்றன. ஸேனையைப் பார்த்தான். [காமதேவன்] மதனன் ஸந்தோஷமடைந்தான். மேலும் அநேக விதமாக ப்ரபஞ்சம் பண்ணினன். காமனின் கலை ஏதும் முநிவரிடம் பலிக்கவில்லை. பாபி! மனோபவன் [காமன்] தன் பயத்தாலேயே பயந்தான்.

எவனுக்கு மஹா பெரிய ரக்ஷகனாக ரமாபதியே இருக்கிறாரோ அவனுடைய வரம்பையும் ஒருவர் தகர்[ஏய்]க்க முடியுமா?

மிகவும் பயந்துபோய் தன் உதவியாளர்களுடன் போனன். மனஸில் படு தோல்வியை ஒப்புக்கொண்டான். கெஞ்சிக் கொண்டு முநிவரின் பாதங்களைப் பிடித்துக்கொண்டான்.

நாரதர் மனஸில் கொஞ்சமும் கோபம் உண்டாகவில்லை. ப்ரியமாகப் பேசி காமனை ஸந்தோஷப்படுத்தினர்.

அவன் அவர் சரணங்களில் சிரம் தாழ்த்தி உத்தரவு பெற்று, ஸேனையைக் கூட்டிக்கொண்டு போய்ச் சேர்ந்தான். இந்த்ரனின் ஸபையில் முநிவரின் நல்ல சீலம், தான் செய்தது எல்லாம் வர்ணனை பண்ணினான்.

அதைக் கேட்ட எல்லாருடைய மநஸிலும் ஆச்சர்யம் உண்டாகியது. மநஸில் முநிவரைப் புகழ்ந்து, ஹரிக்கு தலை தாழ்த்தினார்கள்.

நாரதர் சிவனிடம் போனார். ''நான் காமனை ஜயித்து விட்டேன்'' என்று மநஸில் அஹங்காரம் உண்டாகியிருந்தது. மாரன் [காமன்] செய்ததை சிவனிடம் சொன்னான். மிகவும் ப்ரியமானவன் என்று சிவன் சொன்னார்: முனிவரே உன்னிடம் திரும்பத் திரும்ப வேண்டிக்கொள்கிறேன். இந்தக் * கதையை எனக்குச் சொன்னமாதிரி எங்காவது ஹரியிடம் சொல்லி விடாதே. உரையாடலில் ஊடே இதைத் தொட்டுவந்தாலும் இந்த விஷயத்தை மட்டும் மறைத்துக்கொள்.

நல்லதுக்காகத்தான் சம்பு புத்திமதி சொன்னார். ஆனால் நாரதருக்கு அது பிடிக்கவில்லை.

பரத்வாஜரே! வேடிக்கையைக் கேள். ஹரியின் விருப்பம் மிக பலமுள்ளது.

ராமன் என்ன செய்ய விரும்புகிறாரோ அதேதான் நடக்கும். அதை வேறு விதமாகப் பண்ணக் கூடியவர் எவருமில்லை.

சம்பு சொன்னது முநிவர் மநஸுக்குப் பிடிக்கவில்லை.

விரிஞ்சி லோகத்துக்குப் போனார்.

ஸங்கீதத்தில் நிபுணரானவர் கையில் வீணை ஏந்தி, ஹரி குணம் பாடிக்கொண்டு ஒரு தடவை பால் கடலுக்குப் போனார். வேதத்தின் நெற்றியான ஸ்ரீநிவாஸன் வாஸம் பண்ணுமிடத்துக்குப் போனார்.

ரமாநிகேதன் (விஷ்ணு) எழுந்து, அவருடன் மிகவும் ஸந்தோஷப்பட்டு, ஸந்திந்தார். ருஷியுடனேயே ஆஸனத்தில் அமர்ந்தார். சராசரத்தின் ஸ்வாமி சிரித்தார். ''முநிவரே வெகு நாட்களுக்குப் பிறகு இப்போதுதான் தயவு பண்ணினீர்! என்றார்.

சிவன் ஏற்கனவே எச்சரித்து தடுத்திருந்தும், முனிவர் சொல்லி தீர்த்தார்.

ரகுபதியின் மாயா மிகவும் பலமுள்ளது. அது மோஹமடையும்படி செய்யாதவர் இந்த உலகத்தில் யார்? [யாரைத் தான் அது மோஹமடையும்படி செய்யாமல் விட்டது]

அவரது நோக்கமறிந்து இனிமையாகச் சொன்னுர். ''உன்னே ஸ்மரணம் பண்ணிஞலே மோஹம், காமம், மாநம் [கர்வம்] அழிந்துபோம். முநிவரே கேள்! எவருடைய ஹ்ருதயத்தில் க்ஞானம் வைராக்யம் உண்டாகவில்லேயோ அவர் மனஸில் மோஹம் உண்டாகும். நீயோ ப்ரஹ்மசர்ய வ்ரதத்தில் ஒன்றிய மதிதீரன். காம வேதனே உன்னிடம் வரமுடியுமா என்ன?''

நாரதர் தற்பெருமையுடன் ''பகவானே! இதெல்லாம் தங்கள் க்ருபைதான்,'' என்ருர்.

கருணு நிதானன் மனஸில் ஆராய்ந்து பார்த்தார்: இவனுடைய ஹ்ருதயத்தில் மாபெரும் *கர்வ மரம் முளேத்து விட்டது.

''நான் அதை உடனே [களேந்து] கல்லி எடுத்துவிடுவேன். ஸேவகனுக்கு நன்மை பண்ணுவது நம் ப்ரதிக்ஞை-முநிவருக்கு நல்லதாகும், எனக்கும் ஒரு விளேயாட்டு கிடைத்தது. இப்படி ஒரு உபாயம் அவசியம் பண்ணுவேன்.''

நாரதர் ஹரிபதத்தில் தலே வணங்கிஞர்; புறப்பட்டுப் போஞர். ஹ்ருதயத்தில் கர்வம் மேலும் விங்கியது.

ஶ்ரீபதி தன் மாயாவை ஏவிஞர்.

இனி அந்தக் கடினமான செயலேக் கேள்.

வழியில் 100 யோஜனே பரப்புள்ள நகரம் அமைத்தார். அதில் விதம் விதமான அமைப்புகள் (வைகுண்டத்)திலிருந்ததை விட அதிகமாக இருந்தன. அங்கே அழகான ஸ்த்ரீகளும் புருஷர்களும் இருந்தார்கள். மநஸிஜனும் [காமனும்] ரதியுமே அநேக ஸரீரம் ஏந்தி இருந்தார்கள்போல் தோன்றியது. அந்த நகரத்தில் சீலநிதி என்ற ராஜா வஸித்தான். குதிரை, யானே, ஸேனேகள் எண்ணிலடங்காது. அவனுடைய செல்வம் 100 இந்த்ரர்களுடைய செல்வம் சேர்த்த அவ்வளவுக்கு ஸமமாய் இருந்தது. அவன் ரூபம், தேஜஸ், பலம், நீதிகளின் வசிக்குமிடம். விச்வமோஹிநி என்று அவனுக்கு ஒரு பெண். அவளுடைய ரூபத்தைப்பார்த்து லக்ஷ்மியும் மயங்கிப்போனுள். அவள் எல்லா குணங்களின் பொக்கிஷமான ஹரிமாயா. அவளுடைய ஸோபையை வர்ணிக்கமுடியுமா என்ன? அந்த ராஜகுமாரி ஸ்வயம்வரம் பண்ணிக்கொண்டிருந்தாள். எண்ணமுடியாத ராஜாக்கள் வந்திருந்தார்கள்.

வேடிக்கை ப்ரியரான முனிவர் அந்த நகரத்துக்குள் போனார். நகரவாஸிகளிடம் எல்லாம் கேட்டுக்கொண்டார். ராஜ மாளிகைக்குப்போனார். ராஜா முனிவருக்கு பூஜை பண்ணினான். ஆஸனமளித்து அமரச்செய்தான். ராஜகுமாரியை அழைத்து வரச்சொன்னான். முனிவருக்குக் காண்பித்தான். ''நாத தாங்கள மனஸில் ஆராய்ந்து இவளுடைய குணதோஷங்களைச் சொல்லுங்கள்'' என்றான்.

ரூபத்தைப் பார்த்தார். முனிவர் வைராக்யத்தை மறந்தார். வெகுநேரம் பார்த்துக்கொண்டே இருந்தார். அவளுடைய லக்ஷணத்தைப் பார்த்தார். தன்னையே மறந்தார். ஹ்ருதயத்தில் ஆனந்தம் உண்டாகியது. வெளிப்படையாக ஏதும் சொல்ல வில்லை. இவளை விவாஹம் பண்ணிக்கொள்பவன் அமரனாவான் போர்க்களத்தில் அவனை யாரும் வெல்லமுடியாது. சீலநிதியின் பெண் யாரை வரிப்பாளோ [தேர்ந்தெடுத்துக்கொள்வாளோ] அவனுக்கு சராசர ஜகத்தே ஸேவை பண்ணும். எல்லா லக்ஷணங் களையும் ஆராய்ந்து மனஸிலேயே வைத்துக்கொண்டார். கொஞ்சம் இட்டுக்கட்டி [புனைந்து] ராஜாவுக்குச் சொன்னார். நல்ல லக்ஷணமுடையவள் என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுப் போனார். மனசில் யோசிக்கிறார் — குமாரி எப்படி என்னை வரிப்பாளோ அப்படி அதற்கு வேண்டிய முயற்சிகள் பண்ண வேண்டும். ஜபம் தபஸ் ஏதும் அப்போது பண்ண நேரமில்லை. ''ஹே விதி, பாலா எப்படி எனக்குக் கிடைப்பாள்? இந்த ஸமயத்துக்குப் பேரழகும் பரந்த ரூபமும் வேண்டும். அதைப் பார்த்ததும் குமாரி மயங்கவேண்டும் [ஸந்தோஷப்படவேண்டும்] ஜயமாலையை எனக்கு அணிவிக்கவேண்டும். ஹரியிடம் அழகு வேண்டிப் பெறுவேன். அங்கே போக நேரம் அதிகமாகிவிடும். எனக்கு நல்லது பண்ணுவதில் ஹரியைப்போல வேறு யாருமில்லை. இந்த ஸமயத்தில் அவர்தான் எனக்கு உதவி பண்ணவேண்டும்.'' பலவிதமாக வேண்டிக்கொண்டார்.

வேடிக்கை ப்ரியரான, க்ருபாலுவான ப்ரபு தோன்றினார். ப்ரபுவைப் பார்த்ததும் முனிவரின் கண்கள் குளிர்ந்தன. கார்யம் நிறைவேறிவிடும் என்று மனஸில் மிகவும் ஸந்தோஷப்பட்டார். மிக உருக்கமாக கதையைச் சொன்னார். ''ப்ரபோ! க்ருபை பண்ணுங்கள். எனக்கு உதவி பண்ணுங்கள். ப்ரபோ! எனக்குத் தங்கள் ரூபம் கொடுத்தருளுங்கள். வேறெந்த விதத்திலும் நான் அவளை அடைய முடியாது. ஹே நாத, எப்படி எனக்கு நல்லது உண்டாகுமோ அந்தவிதமாக சீக்கிரமே செய்தருளுங்கள். நான் தங்கள் தாஸன்.''

தீனதயாளன் தன் மாயாவின் பரந்த யலத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டார். ''நாரதா, கேள். என்ன விதத்தில் உனக்குப் பரம ஹிதம் உண்டாகுமோ அதே செய்கிறேன், வேறெதும் வேண்டாம். என் வாக்கு பொய்யாகாது. ரோகத்தால் கலக்கமடைந்த ரோகி [நோயால் கலக்கமடைந்த நோயாளி] கெட்டதை வேண்டிக் கேட்பான். யோகி முனிவரே, கேளுங்கள். வைத்யன் அதை கொடுக்கமாட்டான். அதே மாதிரி நான் உனக்கு எது நல்லது என நிச்சயம் பண்ணிக் கொண்டாயிற்று'' என்ருர். அந்தர்த்தானமாஞர். [கண்களுக்குத் தெரியாமல் மறைந்தார்]

மாயா வசமாகிய முனி முட்டாளாகிவிட்டார். வெளிப் படையாக ஹரி சொன்னதைப் புரிந்துகொள்ளவில்லே. உடனே புறப்பட்டார். ருஷி ராஜா ஸ்வயம்வர பூமி அமைக்கப்பட் டிருந்த இடத்துக்குப் போஞர்.

அலங்காரமெல்லாம் பண்ணிக்கொண்டு அவரவர் ஸமாஜத் துடன் ராஜாக்கள் தம் ஆஸனங்களில் அமர்ந்திருந்தார்கள்.

முனிவரின் மநஸில் பெருமகிழ்ச்சி: ''எனக்குப் பேரழகு திகழ்கிறது. என்ஃனவிட்டு மறந்துங்கூட வேருெருவஃன வரிக்க மாட்டாள்.''

முனிவரின் நன்மைக்காக க்ருபாநிதானன் அவருக்கு கு-ரூபம் தந்திருந்தார். அதை வர்ணிக்கவே முடியாது. ஆஞல் அந்தச் செயல் யாருக்கும் தெரியாது. நாரதர் என்றே அவருக்கு எல்லாரும் நமஸ்காரம் பண்ணிஞர்கள்.

அங்கே ருத்ரகணங்கள் இருவர் இருந்தனர். அவர்களுக்கு ரஹஸ்யம் முழுதும் தெரிந்துவிட்டது. விப்ர வேஷத்தில் எல்லாம் பார்த்துக்கொண்டு திரிந்துகொண்டிருந்தனர். அவர்கள் மிகவும் வேடிக்கை ப்ரியர்கள். முனிவர் மனஸில் தன் ரூபத்தைப்பற்றி மிகவும் கர்வம் இருந்தது. எந்த ஸமாஜத்தில் முனிவர் உட்கார்ந் திருந்தாரோ அதிலேயே இவர்கள் போய் உட்கார்ந்திருந்தார்கள். ருத்ர கணங்கள் விப்ர வேஷத்திலிருந்தார்கள். இவர்களுடைய போக்கை யாரும் கண்டுகொள்ளவில்லே. மறை பொருளாக இவர்கள் நாரதர் காதில் படும்படி பேசிஞர்கள்: ''ஹரி இவருக்கு மிக நல்ல அழகு கொடுத்திருக்கிருர். இந்த அழகைப் பார்த்து ராஜகுமாரி மயங்கிப் போவாள். விசேஷமான 'ஹரி' இவர் என்று எண்ணி இவரையே வரிப்பாள்.''

முனிவருக்கு மோஹமுண்டாகிவிட்டது. அவருடைய மனஸ் பிறர் வசம் இருந்தது. ருத்ர கணங்களுக்கு ஆனந்தம் உண்டாகிக் கொண்டிருந்தது. அவர்கள் சிரித்துக்கொண்டிருக்கிறார்கள். முனிவர் அவர்களுடைய கேலிப் பேச்சைக் கேட்கிறார். ஆனால் அவர் புத்தி ப்ரமையில் உழல்கிறது. புரியவில்லை. இந்த விசேஷ செயலை யாரும் கவனிக்கவில்லை.

குரங்கு முகம். பயங்கர தேஹம். இந்த ஸ்வரூபத்தை ராஜ கன்னி மாத்திரம் பார்த்தாள். பார்த்தவுடன் அவள் ஹ்ருயத்தில் கோபம் பொங்கியது. ஸகிகளைக் கூட்டிக்கொண்டு ராஜ ஹம்ஸம் போல போய்விட்டாள். எல்லா ராஜ குமாரர்களையும் பார்த்துக்கொண்டே சுற்றி வந்தாள்.

அவளுடைய கர கமலத்தில் கமல ஜய மாலை இருந்தது. இரும் பூது பூத்து நாரதர் எங்கே உட்கார்ந்திருந்தாரோ அந்தப் பக்கம் அவள் மறந்துங்கூடத் திரும்பிப் பார்க்கவில்லை. மீண்டும் மீண்டும் முனிவர் எழுந்தார். நகர்ந்தமர்ந்தார். குழப்பமடைந்தார்.

இந்த நிலையைப் பார்த்து ஹர கணங்கள் சிரித்தார்கள்.

க்ருபாலு [ஹரி] ராஜா வேஷம் ஏந்தி அங்கே போனார். ராஜ குமாரி [அவரைப் பார்த்ததும்] ஸந்தோஷமடைந்து ஜய மாலையை அணிவித்தாள். லச்சி [லக்ஷ்மி] நிவாஸன் மணப் பெண்ணைக் கூட்டிக்கொண்டு போய்விட்டார். ராஜ ஸமாஜம் முழுதும் ஏமாந்தது.

முனிவர் மிகவும் கலங்கிவிட்டிருந்தார். மோஹம் அவரது புத்தியை அழித்துவிட்டிருந்தது. முடிச்சு விட்டுப்போய் மணி எங்கோ விழுந்துவிட்டது போலிருந்தது.

ஹர கணங்கள் சிரித்து 'போய் கண்ணாடியில் உங்கள் முகத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று சொல்லிவிட்டு எல்லையிலா பயத்துடன் ஓடிப்போனார்கள்.

முனிவர் தண்ணீரில் குனிந்து தன் முகத்தைப் பார்த்தார். வேஷத்தைப் பார்த்தார். எல்லையிலாத கோபம் பொங்கி வந்தது. அவர்களுக்குக் கடுமையான சாபம் கொடுத்தார். ''நீங்கள் இருவரும் கபடமான பாபிகளான ராக்ஷஸர்களாகிப் போவீர்களாக. என்னைப் பார்த்து சிரித்தீர்களா? அதன் பலனை வாங்கிக் கொள்ளுங்கள். இனி எந்த முனிவரையும் பார்த்துச் சிரிக்கக் கூடாது.''

மறுபடியும் ஜலத்தில் பார்த்தார், தன் பழய ரூபம்! இருந்தாலும் ஹ்ருதயத்தில் ஸந்தோஷம் உண்டாகவில்லை. உதடுகள் துடித்தன. மநஸில் கோபம். வேக வேக மாக கமலாபதியிடம் போனார். ''போய் சாபம் கொடுப்பேன், அல்லது ப்ராணனைக் கொடுப்பேன்! ஜகத்தில் என்னை சிரிப்புக்காளாக்கினார்.''

வ ழி யி லே ல யே தநுஜாரியை [அஸுரர்களின் பகைவனை] ஸந்தித்தார். அவருடன் லக்ஷ்மி இருந்தாள். ராஜகுமாரியும் இருந்தாள்! ஸுர-ஸ்வாமி இனிமையாகச் சொன்னார். ''முநிவரே, கலக்கமுற்றவரைப் போல போகிறீர்களே? எங்கே போகிறீர்கள்?''

கேட்டவுடன் பெருங்கோபம் உண்டாகியது. மாயா வசமாகி விட்டிருந்ததால் க்ஞானம் இருக்கவில்லை. ''இன்னொருவருடைய ஸம்பத்தை உன்னால் பார்க்க முடியாது. உனக்கு பொறாமையும், கபடமும் அதிகம். கடல் கடைந்த ஸமயத்தில் நீ ருத்ரனைப் பயித்யமாக்கினாய்! தேவர்களை ஏவி அவரை விஷம் குடிக்கச் செய்தாய். அஸுரர்களுக்கு ஸுரா (கள்); சங்கரனுக்கு விஷம்! உனக்கு!—லக்ஷ்மியும், கௌஸ்துபமும்! நீ மஹா ஸுயநலத்தன்! கெட்டவன். எப்போதும் கெட்ட வ்யவஹாரங்களேதான் உனக்கு! மிகவும் ஸ்வதந்த்ரமானவன்! உன் தலைமேல் ஏதும் [எந்தப் பழியும் விழுவது] இல்லை. உன் மநஸுக்கு என்ன தோன்றுகிறதோ அதையே பண்ணுகிறாய். நல்லதைக் கெட்டதாக்குகிறாய்; கெட்டதை நல்லதாக்குகிறாய். உன் ஹ்ருதயத்தில் வருத்தமும் உண்டாவதில்லை. ஸந்தோஷமுமுண்டாவதில்லை. எல்லாரையும் ஏமாற்றி ஏமாற்றி உ ன க் கு த் துணிச்சலாகிவிட்டது. ஸந்தேஹமே கொஞ்சமும் இல்லாது போகவே எப்போதும் உத்ஸாஹமாக இருக்கிறாய். நல்ல கார்யம், கெட்ட கார்யம் ஏதும் உன்னை பாதிப்பதில்லை. இது வரை உன்னை யாரும் அடக்கவில்லை. இப்போது நல்ல வீடு ஒன்று காணிக்கையாக எனக்குத் தந்து விட்டாய். நீ பண்ணியதின் பலனை அடையப்போகிறாய். எந்த சரீரம் எடுத்துக்கொண்டு என்னை ஏய்த்தாயோ அதே சரீரம் எடுத்துக்கொள். இது என் சாபம்! என் ரூபம் குரங்காகப் பண்ணினாய். குரங்கே உனக்கு உதவி பண்ணட்டும். எனக்குப் பெரிய அபசாரம் [தீங்கு] பண்ணினாய். நீயும் மனைவியின் பிரிவால் துக்கமடைவாயாக!

ப்ரபு சாபத்தை சிரமேல் ஏற்றுக்கொண்டார். ஹ்ருதயத்தில் ஸந்தோஷமடைந்தார். வேண்டிக்கொண்டார். க்ருபாநிதி தன் மாயாவின் பெரும் பலத்தைக் இழுத்துக்கொண்டார்.

மாயாவை ஹரி அகற்றியவுடன் அங்கே லக்ஷ்மியுமில்லை, ராஜ குமாரியுமில்லை. முநிவருக்கு எல்லையிலாத பய பீதி உண்டாயிற்று. ப்ரபுவின் சரணங்களைப் பிடித்துக்கொண்டார். ''ப்ரணதாரதிஹரண [பணிந்தவரின் துன்பத்தைப் போக்குபவ] என்னைக் காப்பாற்றுங்கள். ஹே க்ருபால என் சாபம் பொய் யாய்ப் போகக் கடவது'' என்றார்.

தீநதயாளன் ''இது என் விருப்பம்'' என்றார்.

'' தங்களை நான் மிகவும் கெட்டது சொல்லிவிட்டேனே; என் பாபம் எப்படி அழியும்?''

''போய் சங்கரனின் (அஷ்டோத்தர) ஸதநாமாவை ஜபம் பண்ணு - உடனே ஹ்ருதயத்தில் சாந்தி உண்டாகும். சிவனுக்கு ஸமமாக எனக்குப் ப்ரியமானவர் வேறெவருமில்லை. இந்த மாதிரி ப்ரதீதி [விஸ்வாஸம்]யை மறந்துங்கூட விட்டுவிடக் கூடாது. *எவர்மேல் புராரி க்ருபை பண்ணவில்லையோ, ஹே முநிவரே, அவர் என் பக்தி அடைய மாட்டார். இப்படி மநஸில் கொண்டு பூலோகத்தில் வளைய வருவாய். இனி மாயா உன் பக்கமே வராது. ப்ரபு பலவிதமாக முநிவரைத் தேற்றினார். பின்னர் அந்தர்த்தானமானார். [கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தார்.]

ராம குண காநம் பண்ணிக் கொண்டு நாரதர் ஸத்ய லோகம் போனார். முநிவர் வழியில் போய்க்கொண்டிருந்ததை ஹர கணங்கள் பார்த்தார்கள். மோகம் அகன்று, ஸந்தோஷமாக இருக்கிறார் என்று தெரிந்து கொண்டனர். மிகவும் பயந்து கொண்டு நாரதரின் அருகே வந்தனர். அவர் பாதங்களைப் பிடித்துக்கொண்டு மனம் உருகி ''ஹே முநிராஜ, நாங்கள் ஹர கணங்கள். விப்ரரில்லை. பெரிய குற்றம் பண்ணிவிட்டோம். அதன் பலனும் அடைந்துவிட்டோம். ஹே க்ருபாளு, இனி சாப-அநுக்ரஹம் பண்ணியருள வேண்டுகிறோம் என்றார்கள்.

''நீங்கள் இருவரும் போய் நிசிசரர் ஆகிவிடுங்கள். உங்களுக்கு மாபெரும் ஐஸ்வர்யம். தேஜஸ், பலம் உண்டாகும். உங்களுடைய புஜ பலத்தால் என்று ஸம்ஸாரத்தை ஜயித்து விடுகிறீர்களோ, அன்றே விஷ்ணு மநுஷ்ய சரீரம் ஏந்துவார். யுத்த களத்தில் ஹரியின் கையால் உங்களுக்கு முடிவு ஆகும். முக்தர்களாவீர்கள். மீண்டும் ஸம்ஸாரத்தில் வரவேண்டி இராது'' என்றார் தீநதயாளு.

இருவரும் முநிவர் சரணங்களில் சிரம் தாழ்த்திவிட்டுப் போனார்கள். காலம் வந்ததும் ராக்ஷஸர் ஆனார்கள்.

ஒரு கல்பத்தில் இந்தக் காரணத்துக்காக பகவான் மநுஷ்ய அவதாரம் எய்தினர்.

ஹரி தேவர்களை ஸந்தோஷப்படுத்துபவர். ஸஜ்ஜனங்களுக்கு ஸுகம் தருபவர். பூ-பாரத்தை அகற்றுபவர். இந்த விதியின்படி ஹரியின் ஜன்மமும் [பிறப்பும்] கர்மாவும், அழகானவை, ஸுகம் தருபவை; மிக விசித்ரமானவை. ஒவ்வொரு கல்பத்திலும் ப்ரபு அவதரிக்கிறார். அநேக விதமாக லீலைகள் பண்ணுகிறார்.

அவ்வப்போது முநீச்வரர்கள் அநேக ப்ரபந்தங்கள் இயற்றி கதையைப் பாடியிருக்கிறார்கள். அநேகவிதமான இணையிலாத ப்ரஸங்கங்கள் வர்ணனை பண்ணியிருக்கிறார்கள். இவைகளைக் கேட்டு கெட்டிக்கார ஜனங்கள் ஆச்சர்யப்படுவதில்லை.

ஹரி முடிவிலாதவர். ஹரி கதை முடிவிலாதவை. சாது ஜனங்கள் அவைகளைப் பலவிதமாக சொல்கிறார்கள், கேட்கிறார்கள். ராமசந்த்ரனின் இனிய சரித்ரங்கள் ஒரு கோடி கல்பங்களிலும் பாடி முடிக்க இயலாது.

பவாநி, க்ஞாநி முநிவர்களும் ஹரி மாயாவால் மயங்கிப் போகிறார்கள் என்று (காட்டவே) இந்தப் ப்ரஸங்கம் சொன்னேன். ப்ரபு விளையாட்டுப் ப்ரியர். பணிந்தவர்க்கு ஹிதம் பண்ணுபவர். ஸேவை பண்ண ஸுலபமானவர். எல்லா துக்கங்களையும் போக்குபவர். பலம் மிகுந்த மாயா மயக்காத தேவர், மநிதர். முநிவர்களில் எவருமே இல்லை. இதை மனத்தில் கொண்டு மஹா மாயாவின் பதியை பஜிக்க (வழிபட) வேண்டும்.

*சைலகுமாரி, பகவானின் அவதாரத்துக்கு இன்னொரு காரணமும் கேள்: அவருடைய விசித்ர கதையை விஸ்தாரப் படுத்தி [விரிவாக] சொல்கிறேன்—எந்தக் காரணத்தால் அஜன், அகுணன், அரூபன் ஆன ப்ரஹ்மம் கோஸலபுர ராஜா ஆனார் என்றதனை கேள். எந்த ப்ரபுவை நீ அவருடைய தம்பியுடன் முநி-வேஷத்தில் வநத்தில் திரிவதைப் பார்த்தாயோ, எவருடைய செயலைப்பார்த்து, ஹே பவாநி, நீ ஸதி-சரீரத்தில் அவரைப் பயித்யம் என்று பண்ணிவிட்டாயோ, [வைத்து விட்டாயோ] இன்றும் கூட உன்மேலிருந்து அந்த நிழல் அகலவில்லையோ,

* மூன்றாவது கல்ப கதை 2) பார்வதி

அதே [ப்ரபுவின்] சரித்ரம் கேள். அது ப்ரம ரூபமான நோயை போக்கவல்லது. அவர் அவதாரம் பண்ணி என்னென்ன லீலைகள் நிகழ்த்தினரோ எல்லாம் என் புத்திக்குப்பட்டபடி சொல்கிறேன்.

பரத்வாஜ, சங்கரன் சொன்னதைக்கேட்டு உமா வெட்கமடைந்தாள்.

சிரித்தாள். என்ன காரணத்துக்காக அவதாரம் பண்ணினர் என்று வ்ருஷகேது வர்ணனை பண்ணலானர் :- அதெல்லாம் நான் உனக்குச் சொல்கிறேன். மனமொன்றிக் கேள். ராமகதை கலிமலத்தைப் போக்க வல்லது. மங்கலம் செய்ய வல்லது. அழகானது.

ஸ்வாயம்பூ மநு * இதிஹாசம்

ஸ்வாயம்பூ மநு, சதரூபா — இவர்களிலிருந்துதான் உபமானம் சொல்ல முடியாத மநித ஸ்ருஷ்டி உண்டாகியது. இருவரும் மிக நல்ல ஆசாரம் [நடத்தை] உள்ளவர்கள். இன்றும் வேதம் அவர்களுடைய*ப்ரமாணத்தைப் பாடுகிறது. அவருடைய பிள்ளை உத்தானபாதன். இவருடைய பிள்ளை ஹரிபக்தன் த்ருவன். மநுவின் இளைய பிள்ளை ப்ரிய-வ்ரதன். வேத-புராணங்கள் அவனைப் புகழ்கின்றன. அவருடைய [மநுவின்] பெண் தேவஹூதி. அவள் கர்தம முநிவரின் ப்ரிய பத்நி ஆனள். ஆதிதேவன், தீனதயாளன், க்ருபாளன், ப்ரபு கபிலரை இவள் கர்ப்பத்தில் [கருவில்] கொண்டாள். அவர் [கபிலர்] ஸாங்க்ய சாஸ்த்ரத்தை தோற்றுவித்து வர்ணித்தார். [இந்த] பகவான் தத்வ விசாரத்தில் பெரிய நிபுணர். மநு வெகு காலம் ராஜ்யம் ஆண்டார். ப்ரபுவின் ஆக்ஞையை எல்லா விதத்திலும் பாலனம் பண்ணினர். [நிறைவேற்றிக் காப்பாற்றினர்.] அரண்மனையில் வசித்து [முதுமையே வந்துவிட்டது] நாலாம் பருவமே அடைந்துவிட்டார். விஷயங்[புலன்]களிலிருந்து வைராக்யம் [பற்று விடவில்லை] உண்டாகவில்லை. ஆகையால் ஹ்ருதயத்தில் ''ஹரி பக்தி யில்லாமலே ஜன்மம் கழிந்துவிட்டதே என்று துக்கம் உண்டாகியது.

ராஜா கட்டாயப்படுத்தி பிள்ளையிடம் ராஜ்யத்தைக் கொடுத்தார். மனைவியுடன் வநத்துக்குப் போனர்.

---

* வரலாறு. * சான்று.

புண்யமான இடங்களுள் நைமிஷம் மிகச் சிறந்தது. அது மிகவும் புநிதமானது. ஸாதகர்களுக்கு ஸித்தி தரவல்லது. அங்கே முநிவர்கள், ஸித்தர்களின் ஸமாஜம் வஸித்தது. அங்கேயே மநு ராஜா ஸந்தோஷமாகப் போனர். தீர மதி [தைர்யமான புத்தி] யுள்ள ராஜாவும், ராணியும், வழியில் போகும்போது க்ஞானமும் பக்தியுமே சரீரம் ஏந்தி வந்திருந்ததுபோல சோபித்தார்கள்.

தேநுமதி [கோமதீ] நதி கரையை அடைந்தார்கள். நிர்மல மான ஜலத்தில் ஸந்தோஷமாக ஸ்நாநம் பண்ணினர்கள். ராஜா 'தர்மதுரந்தரன்' [தர்மத்தை நிலைநாட்டி திடப்படுத்தி நிலைத்து நிற்பவன்], ராஜர்ஷி என்று தெரிந்துகொண்டு க்ஞாநி முநிவர் களும், ஸித்தர்களும் பார்க்க வந்தார்கள். எங்கெங்கு அழகான தீர்த்தங்கள் இருந்தனவோ எல்லாவற்றுக்கும் ராஜாவுக்கு யாத்ரை பண்ணி வைத்தார்கள். [ராஜா ராணியின்] சரீரம் பலவீனமாயிற்று. மரஉரி உடுத்து ஸாது ஸமாஜத்தில் புராணம் சொல்வது கேட்கிறார்கள். மந்த்ரங்களில் சிறந்த த்வாதஸ [12] அக்ஷரத்தை [ஓம் நமோ பகவதே வாஸுதேவாய] அநுராகத்துடன் ஜபம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். வாஸுதேவ சரண கமலங்களில் ராஜா-ராணியின் மனம் நன்றாக ஒன்றிவிட்டது.

காய் கனி கிழங்கு மாத்ரமே ஆஹாரம். ஸச்சிதானந்த ப்ரஹ்மத்தை ஸ்மரணம் பண்ணுகிறார்கள். ஹரிக்காக தபஸ் பண்ணலானர்கள். பழம் கிழங்குகளையும் ஒதுக்கி ஜலம் மாத்ரம் அருந்தி இருந்தார்கள். இடைவிடாமல் மநஸில் இதே ஆசை அந்த ப்ரபுவைக் கண்ணாரக் காணவேண்டும். நிர்குண, அகண்ட, அனந்த, அநாதி, பரமார்த்த வாதிகள் சிந்திக்கும் அவரை, எவரை வேதம் 'நேதி-நேதி' [இதல்ல இதல்ல] என்று சொல்லி நிருபிக்கின்றதோ, எவர் நிஜானந்தனோ, உபாதி இலாதவரோ, உபமானம் இலாதவரோ, எவருடைய அம்சத்தால் அனேக ப்ரஹ்மா, சம்பு, விஷ்ணு பகவான் உண்டாகிறார்களோ, இத்தகைய ப்ரபுவும் ஸேவகர் வசமாக இருக்கிறாரோ, பக்தர்க்காக லீலா சரீரம் எடுத்துக் கொள்கிறாரோ, — வேதம் இப்படி சொன்னது ஸத்யமெனில் என் ஆசையும் நிறைவேறும்.

இப்படி ஜலமே ஆஹாரமாக 6000 வர்ஷம் கழிந்தது. பின்னர் 7000 வர்ஷம் வாயு [காற்றே] ஆஹாரமாக கழிந்தது. 10000 வர்ஷம் அதையும் விட்டார்கள். இருவரும் ஒரு காலில் நின்று தபஸ் பண்ணினர்கள்.

[ப்ரஹ்மா] விதி, ஹரி, ஹரன் இவர்களுடைய அபார தபஸ்ஸை பார்த்துப் பல தடவை வந்தார்கள். 'வரம் கேட்டு வாங்கிக்கொள்' என்று பல தடவை ஆசை காட்டினுர்கள். பரம தீரர்கள்—அசையவில்லே. சரீரம் வெறும் எலும்புக் கூடாகி விட்டது. ஆனுலும் அவர்களுடைய மநஸில் இம்மியும்கூட வேதனை இருக்கவில்லே.

தன் தாஸன் என்று ஸர்வக்ஞ ப்ரபு தெரிந்துகொண்டார். 'என்னையன்றி வேறெரு கதி கிடையாது' [என்றும் கண்டார்].

மிகவும் கம்பீரமான ஆகாச வாணி உண்டாயிற்று. அருள் அம்ருதம் தோய்ந்த சொற்கள்; ''வரம் வாங்கிக்கொள். என்ன விரும்புகிருய்?''

மரிப்பவனேயும் உயிர்ப்பிக்கவல்ல அந்த வாணி செவி வாயில் வழியே ஹ்ருதயத்துக்கு வந்தவுடன் அவர்களுடைய சரீரம் களிப்பு வளப்பமாக ஆயின. அப்போதுதான் வீட்டிலிருந்து வந்தார்கள் போலிருந்தது. அம்ருதம் போன்ற வாணியை செவிகளால் கேட்டவுடனே அவர்களுக்கு மெய் சிலிர்த்தது. மநு தண்டனிட்டார். ப்ரேமை ஹ்ருதயம் கொள்ளவில்லே. சொல்வார்: ''ஸேவகனின் கல்ப வ்ருக்ஷமே, காம தேநுவே, கேளுங்கள். தங்கள் பத-தூளியை விதி-ஹரி-ஹரர் வந்திக்கிருர்கள். ஸேவை பண்ணினுல் தங்களே எளிதில் அடைய முடிகிறது. எல்லா ஸுகமும் தருபவர். ப்ரணத பாலன் (பணிந்தவரைக் காப்பவர்): சர-அசரங்களின் ஸ்வாமி. அநாதைகளுக்கு நல்லது பண்ணுபவ! எங்களிடம் ஸந்தோஷம் உண்டாகியிருக்கிறதென்ருல், ஸந்தோஷமாக இந்த வரம் கொடுங்கள்: எந்த ஸ்வரூபம் சிவன் மனஸில் வஸிக்கிறதோ, எதற்காக முநிவர்கள் முயற்சிக்கிருர்களோ, எது புஸுண்டியின் மனஸ் ரூபமான மாநஸஸரோவரத்தில் ஹம்ஸமோ, எவர் புகழை வேதம் நிர்குணமென்றும் ஸகுண ரூபமென்றும் சொல்லுகின் றனவோ, அந்த ரூபத்தை நாங்கள் கண்ணுரக் காணவேண்டும். பணிந்தவரின் கஷ்டத்தைப் போக்குப, க்ருபை பண்ணுங்கள்.''

அழகாக, பணிவாக, ப்ரேமை ரஸம் தோய்ந்தபடி இருவரும் சொன்னது பிடித்தது. பக்தவத்ஸல ப்ரபு, க்ருபா நிதான, *விச்வவாஸ பகவான் தோன்றினுர். நீலகமலம், நீலமணி, நீலமேகம் போல வண்ணம்—ச்யாம வண்ணம். சரீரத்தின் சோபையைப் பார்த்து நூறு கோடி.காம தேவர்களும் வெட்கிப் போவர். அந்த அழகின் மேலான எல்லேயாக முகம் சரத் [கால] சந்த்ரன் போலிருந்தது. அழகான கன்னம், மோவாய். சங்கம்

போன்ற கழுத்து, சிவந்த உதடுகள், அழகான மூக்கு, சந்த்ரனின் கிரணங்களைப் பழிக்கும் சிரிப்பு. கண்களின் சோபை அப்போது அலர்ந்த தாமரை போலிருந்தது, அழகான முகத்தோற்றம், மனஸுக்கு மிகவும் ப்ரியமாயிருந்தது. புருவங்கள் காமதேவனின் வில்லைப் பழிப்பது போலிருந்தன. நெற்றியில் மின்னும் திலகம். காதுகளில் மகர வடிவமான குண்டலங்கள். தலையில் மகுடம் சோபித்தது. சுருண்ட முடி வண்டுக்கூட்டம் போலிருந்தது. மார்பில் ஸ்ரீவத்ஸம்; வந மாலை, மோஹந மாலை, பூஷணம், மணி ஜாலம் விளங்கின. சிங்கம் போன்ற தோள். அழகான உபவீதம். பாஹுக்களில் அணிகள் மிக அழகு. யானைத்துதிக்கை போன்ற அழகு புஜங்கள். அரையில் தூணி - கைகளில் தநுஸ் [வில்] பாணங்கள் [அம்புகள்]. மின்னலைப் பழிக்கும் பீதாம்பரம் உடுத்திருந்தார். வயிற்றில் சோபிக்கும் மூன்று ரேகைகள். யமுனையின் மடுவின் அழகைத் தோற்கடிக்கும் மனமயக்கும் நாபி.

கமலம் போன்ற பாதங்களை வர்ணிக்கவே முடியாது. முநிவர்கள்ரூபமான வண்டுகள் அதில் வஸிக்கின்றன. அவரது இட பாகத்தில் எப்போதும் அனுகூலமான சோபையின் களஞ்சியம் ஜகத்தின் மூலமாவாள் ஆதி சக்தி விளங்கினுள். அவளுடைய அம்சத்தால் குணங்களின் இருப்பிடமான எண்ணிலடங்காத லக்ஷ்மி, உமா, ப்ரஹ்மாணிகள் [ஸரஸ்வதி] உண்டாகிறுர்கள். அவளுடைய புருவ விலாஸத்தால் ஸம்ஸாரம் உண்டாகிறது. அதே ஸீதா—ராமனின் இடது பக்கம் [இருக்கிறுள்]. அழகு ஸமுத்ரமான ஹரி ரூபத்தைப் பார்த்து இமை மூட மறந்து உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்: உபமானம் சொல்ல முடியாததை மநுவும் சதரூபாவும் பய பக்தியுடன் பார்த்துக் கொண்டிருக்கிறுர்கள். த்ருப்தி ஏற்படவில்லை. ஸந்தோஷத்தில் மெய்மறந்து, தன் நிலை உணர்விலாமல், சரணங்களைப் பிடித்துக் கொண்டு தண்டனிட்டார்கள்.

ப்ரபு தன் கர கமலத்தால் அவர்கள் தலையைத் தொட்டார். உடனே எழுப்பினுர். க்ருபா நிதானன் சொல்வார். ''எனக்கு மிக ஸந்தோஷம்[ஆகிறது]. நான் பெரிய வள்ளல் என நினைத்துக் கொண்டு என்ன வரம் வேண்டுமோ கேட்டுக்கொள்'' .

ப்ரபு சொன்னதைக் கேட்டார்கள். இருவரும் கைகூப்பிக் கொண்டார்கள். தைர்யம் வருவித்துக்கொண்டு இனிமையாக ''ஹே நாத, தங்கள் பத கமலத் தர்சனத்தால் என் ஆசை எல்லாம் பூர்த்தியாகி விட்டது, மநஸில் ஒரு பெரிய ஆவல் —

அது அடையக்கூடியதோ அடைய முடியாததும்கூட தங்கள் க்ருபை பண்ணும் பான்மையால் அடையமுடியும் என்று தோன்றுகிறது. என் கஞ்சத்தனத்தால் அடைய முடியாது எனத் தோன்றுகிறது, எப்படி தரித்ரன் ஒருவன் கல்ப வ்ருக்ஷம் அடைந்தால்கூட அதிகமான ஸம்பத்தி கேட்கத் தயங்குவானோ-கல்ப வ்ருக்ஷத்தின் வல்லமை அவனுக்கெப்படித் தெரியும்'— அதே போல என் ஹ்ருதயத்தில் ஸந்தேஹம் உண்டாகிறது. ஹே அந்தர் யாமி, தங்களுக்கு அது தெரியும். ஹே ஸ்வாமி, என் மனோ ரதத்தைப் பூர்த்திசெய்யுங்கள்'' என்றார்.

''ராஜன் தயக்கத்தைவிட்டு என்னிடம் கேட்டுக்கொள் என்றால் உனக்குக் கொடுக்க முடியாதபடி ஏதுமே இல்லை''

''கொடுப்பவர்களின் சிரோமணியே! க்ருபாநிதி! ஹே நாத! ஸத்ய பாவத்துடன் சொல்கிறேன். தங்களைப் போன்ற புத்ரன் வேண்டும். ப்ரபுவிடம் எதைத்தான் மறைக்கமுடியும்?''

ப்ரீதியைப் பார்த்தார். உத்தமமான பேச்சைக் கேட்டார். கருணாநிதி ''ஏவம் அஸ்து'' [இப்படியே ஆகுக] என்றார். ''நான் என்னைப்போல இன்னொருவனை எங்கே போய்த் தேடட்டும்? ராஜன் நானே உன் புத்ரனாகிறேன்'' என்றார். சதரூபா கைகள் கூப்பி நிற்பதைப் பார்த்தார். ''தேவி, உனக்கு என்ன வரம் ஆசையோ கேட்டுக்கொள்'' என்றார்.

சதரூபா சொல்வாள்; 'க்ருபாளு! ஸாமர்த்யமுள்ள ராஜா என்ன வரம் கேட்டுக்கொண்டாரோ அதே எனக்கும் ப்ரியமாம். ஆனால், ப்ரபோ எனக்கு மிகத் துணிச்சல் வருகிறது. பக்த வத்ஸல, தங்களுக்கு நல்லது என்று படுகிறது. இருந்தாலும் தாங்கள் ப்ரஹ்மா முதலானவர்களுக்கே பிதா. ஜகத்தின் ஸ்வாமி. எல்லார் ஹ்ருதயத்திலும் அந்தர்யாமி ரூபமாயிருக்கும் ப்ரஹ்மம். இதை எண்ணும்போது மனஸில் ஸந்தோஷம் உண்டாகிறது, ஆனால் ப்ரபு என்ன சொன்னீர்களோ அதுதான் ப்ரமாணம். ஹே நாத, யார் தங்களுடைய பக்தரோ, அவர் எந்த ஸுகம் அடைகிறாரோ, எந்த கதி அடைகிறாரோ, அதே கதி, அதே பக்தி, அதே அந்த தங்கள் சரணங்களில் ஆசை, அதே விவேகம், அதே வாழ்க்கைமுறை, பழக்க வழக்கம் எனக்கு க்ருபை பண்ணிக் கொடுங்கள்.''

அழகாக, கூடமாக [மறை பொருள் உள்ள] மனோஹரமாக அவள் சொல்ல கேட்டு க்ருபாஸிந்து மென்மையாகச் சொல்வார்: உன் மனத்துக்கு எது சுவையாயிருக்கிறதோ (பிடித்ததோ) அதெல்லாம் நான் கொடுத்தேன், இதில் ஸந்தேஹமில்லை.

தாயே, உன் அலௌகிக [இவ்வுலகத்தியதல்லாத] விவேகம் ஒரு காலும் விடாது என்று அநுக்ரஹம் பண்ணுகிறேன்.''

பின்னரும் மநு ப்ரபுவின் சரணங்களில் வந்தனம் பண்ணி ''ஹே ப்ரபு. என் இன்னுமொரு வேண்டுகோள் இருக்கிறது. என்னைப் பெரிய முட்டாள் என்றாலும் சரியே! எனக்கு தங்கள் பதங்களில் புத்ரனிடம் உள்ளது போன்ற ப்ரேமையே ஆக வேண்டும். மணியில்லாவிடில் ஸர்ப்பத்தின் கதி, தண்ணீரில்லா விடில் மீனின் கதி, போலவே என் வாழ்வு முடிவு தங்கள் தர்சனத்தினைச் சார்ந்திருக்க வேண்டும்'' இப்படி வரம் கேட்டு சரணங்களைப் பிடித்துக்கொண்டே இருந்தான்.

கருணாநிதி 'ஏவமஸ்து' என்றார். ''இனி என் ஆக்ஞை ஏற்று இந்த்ரனின் ராஜதானி அமராவதியில் போய் வஸியுங்கள். அங்கே விரிவாக போகங்கள் அநுபவியுங்கள். கொஞ்ச கால மான பின் நீ அயோத்யா ராஜா ஆவாய். அப்போது நான் உன் பிள்ளை ஆவேன். ஸங்கல்ப மய மநிதனாகசரீரம் ஏந்தி நான் உன் வீட்டில் தோன்றுவேன். அன்ப, நான்என் அம்சங்களுடன் தேஹம் ஏந்தி பக்தர்களுக்கு ஸுகம் தரும் செயல்கள் நிகழ்த்துவேன். அவைகளை பய பக்தியுடன் கேட்டு மஹா பாக்யசாலிகள் மமதை, மதம் விட்டு, பவகடலை கடந்து போவார்கள். ஸம்ஸாரத்தை உண்டாக்கிய ஆதிசக்தியும் அவதாரம் பண்ணுவாள். இவள் என் மாயா. நான் உன் ஆசையைப் பூர்த்தி பண்ணுவேன். என் ப்ரதிக்ஞை ஸத்யம்; ஸத்யம்; ஸத்யம்.''

இப்படித் திருப்பித் திருப்பிச் சொன்னார். அந்தர்த்தானம் ஆனார்.

இந்த இருவரும் பக்தர்மேல் க்ருபை பண்ணுபவரை ஹ்ருதயத்தில் கொண்டு அந்த ஆச்ரமத்தில் கொஞ்ச காலம் இருந்தார்கள். ஸமயம் வந்ததும் கஷ்டமில்லாமல் சரீரம் விட்டு அமராவதியில் போய் வாஸம் பண்ணினார்கள்.

இந்த மிக பவித்ரமான இதிஹாஸத்தை வ்ருஷகேது உமாவுக்கு சொன்னார். பரத்வாஜ, ராம ஜன்மாவுக்கு இன்னொரு காரணமும் கேள்.

பானு ப்ரதாபன் கதை

முனிவரே, பழைய, பவித்ரமான கதை கேள். அது கிரிஜா வுக்கு சம்பு சொன்னது.

கைகய தேசம் உலகத்தில் புகழ் பெற்றது. அதில் ஸத்யகேது என்ற ராஜா இருந்தான். அவன் தர்மத்தை நிலைப்படுத்தியவன். நீதியின் களஞ்சியம். தேஜஸ்வி, வலிமை மிக்கவன். பல மிக்கவன். அவனுக்கு இரண்டு புத்ரர்கள். மஹா வீரர்கள். அவர்கள் எல்லா குணங்களுக்கும் ஆச்ரயமாம் [அடைக்கலமா யுள்ள இடம்] பெரிய போர் வீரர்கள். பட்டத்துக் குரியவன்- பெரிய பிள்ளை பானு ப்ரதாபன். மற்றவன் அரிமர்தனன். அளவிலடங்கா புஜ பலம் பெற்றவன். போரில் அசைக்க முடியாதவன். அண்ணன் தம்பிகளிடை மிகவும் ஒற்றுமை இருந்தது. தோஷமே இல்லை. கள்ளமில்லை. ராஜா மூத்த பிள்ளையிடம் ராஜ்யத்தைக் கொடுத்துவிட்டு பகவானை நாடி வநம் போனான்.

பானு ப்ரதாபன் ராஜா ஆன பிறகு தேசத்தில் அவன் ஆணை அறிவிக்கப் பட்டது. வேத விதிப்படி ஜனங்களை நன்றாக பேணினான். எங்கும் பாபம் லவலேசமும் நிற்கவில்லை.

ராஜாவுக்கு நல்லது பண்ணும் ப்ரியமான புத்திசாலி மந்த்ரி இருந்தான். அவன் பெயர் தர்மருசி. நீதி தெரிந்து கொள்வதில் சுக்ரன்.

ப்ரியமான மந்த்ரி, பலவானான, வீரனான, தம்பி, தானும் வல்லமையின் பொதி, போரில் தீரன். அபாரமான நாலுவகைப் படை கூட இருந்தது. போரில் உயிரைக் கொடுக்கவும் தயாராக நின்ற ஒப்பிலாத போர் வீரர். இத்தகைய தன் ஸேனையை பார்த்தான் ராஜா மிக மகிழ்ந்தான். உத்ஸாக மூட்டும் நிசானம் முழக்கினான். திக் விஜயத்துக்காக சின்ன ஸேனை அமைத்துக்கொண்டான். நல்ல நாள் பார்த்து டங்கா முழக்கிக் கொண்டு புறப்பட்டான்.

அங்கங்கே அநேக போர் நிகழ்ந்தது. ஆனால் எல்லாரையும் ராஜா தன் பலத்தால் ஜயித்தான். தன் புஜ பலத்தால் ஏழு தீவுகளையும் தன் வசமாக்கிக் கொண்டான். ராஜாக்களிடம் கப்பம் வாங்கிக்கொண்டு விட்டுவிட்டான். பூவுலக முழுவதிலும் அப்போது ஒரே ராஜா - பானுப்ரதாபன்தான். தன் புஜ பலத்தால் ஸம்ஸாரத்தை வசமாக்கிக்கொண்டு தன் புரத்துக்குள் வந்தான்.

ராஜா அர்த்தம்-தர்மம் காமம்- முதலான ஸுகங்களின் ஸமயப்படி எல்லாரையும் ஸேவித்தான். ராஜா பாநு ப்ரதாப னின் பலம் பெற்று பூ உலகம் காமதேநு ஆயிற்று. மக்கள் துக்கமே இலாமல் ஸுகப்பட்டார்கள். ஸ்த்ரீகளும் புருஷர்களும் அழகாகவும் தர்மாத்மாக்களாகவும் இருந்தார்கள்.

மந்த்ரி தர்மருசி ஹரி சரணங்களில் ப்ரீதியுடையவன். அவன் ராஜாவின் நல்லதுக்காக நித்தமும் அவனுக்கு நீதி உபதேசம் பண்ணிஞன். குரு, தேவர், ஸாதுக்கள், பித்ருக்கள், ப்ராஹ்மணர்களுக்கு ராஜா எப்போதும் ஸேவை பண்ணிஞன். ராஜாவின் தர்மமென வேதம் சொல்லும் எல்லாம் ஸுகம் என்று கருதி செய்துவந்தான். நித்தமும் அநேகவிதமான தானங்கள் கொடுத்தான். நல்ல சாஸ்த்ர - வேத - புராணங்கள் சொல்லக் கேட்டான். அநேக ஏரி, குளங்கள், கிணறுகள், பூந்தோட்டங்கள் அழகான பழத்தோட்டங்கள், நந்தவனங்கள் அமைக்கச் செய்தான். ப்ராஹ்மணர்களுக்கு வீடுகள், தேவர்களுக்கு அழகான கோயில்கள் எல்லா தீர்த்தங்களும் விசித்ரமாக அமைக்கச் செய்தான். வேத-புராணங்கள் எந்தமட்டில் ஒவ்வொரு தடவை யக்ஞம் பண்ணச் சொல்லியிருந்ததோ அவைகளை ஆயிரம் ஆயிரம் தடவை ராஜா ப்ரியமாகச்செய்தான். ஹ்ருதயத்தில் பலனைப்பற்றி கருத்தே கொள்ளவில்லை. ராஜா மிக விவேகமுள்ளவனுயும், தெரிந்து கொள்பவனுகவும் இருந்தான். க்ஞாநி ராஜா கர்மா-மந-வாக்கால் என்ன தர்மம் பண்ணிஞனோ அதெல்லாம் வாஸுதேவனுக்கு அர்ப்பணித்தான்.

ஒரு ஸமயம் ராஜா நல்லதொரு குதிரை மீதேறி வேட்டைக்காக எல்லாம் ஏற்பாடு (தயார்) பண்ணிக்கொண்டு விந்த்ய மலையின் அடர்ந்த காடுகளுக்குப் போனுன். ஏராளமான புநீதமான ம்ருகங்களைக் கொன்ருன். [உணவாகக் கொள்ள உரியவை மட்டும்] வநத்தில் சுற்றிவந்தான். ஒரு பன்றியைக் கண்டான். வநத்தில் ஒளிந்திருந்தபோதும் சந்த்ரனை ராஹு வந்து கவ்விக்கொண்டது போலிருந்தது. சந்த்ரன் பெரிதாய் இருந்தது. பன்றியின் வாய் கொள்ளவில்லை, கோபம் மேலிட்டதால் அது அதைத் துப்பவுமில்லை. பன்றியின் கொடிய பற்களைச் சொல்லியாயிற்று. அதன் உடலும் பெரிதாக கொழுத்திருந்தது. குதிரையின் காலடிச் சத்தம் கேட்டு அது உறுமியது. காதுகளை உயர்த்திக்கொண்டு வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தது. நீலமலைச் சிகரம் போன்ற பேருடல் வராஹத்தைப் பார்த்த ராஜா குதிரையை விரட்டிஞன். தாமதித்தால் பிறகு நிர்வாஹம் பண்ண முடியாது.

வேகமாகக் குதிரை வருவதைப் பார்த்து வராஹம் வாயு - வேகத்தில் ஓடியது. ராஜா உடனே பாணத்தைத் தொடுத்தான். வராஹம் பாணத்தைப் பார்த்ததும் தரையில் ஒண்டியது. ராஜா குறி வைத்து வைத்து பாணத்தை எய்தான். ஆனுல் வராஹம் சாலக்காக தன் சரீரத்தைக் காப்பாற்றிக் கொண்டு ஓடியது. இப்படி வெளிப்படுவதும் மறைவதும் பதுங்குவதுமாக ஓடியது. ராஜாவும் கோபவசத்தால் அதைத் துரத்திக் கொண்டே போனுன். வராஹம் வெகுதூரம் போய் அடர்ந்த காட்டுக்குள் நுழைந்தது. யானை, குதிரை அங்கே போக முடியாது. ராஜா தன்னந்தநியனுகிவிட்டான். வநத்தில் மிகவும் கஷ்டமாயிருந்தது. அப்படியும் அவன் அதைத் துரத்துவதை விடவில்லை. ராஜா மிக தீரன் என வராஹம் பார்த்தது. அது ஓடிப்போய் அடர்ந்த காட்டில் ஆழ்ந்த மலைக்குஹை ஒன்றுள் ஒளிந்துகொண்டது. அதில் ராஜா நுழைய முடியாது. ஆகையால் மிகவும் வருத்தப்பட்டான். திரும்பினுன். மிகவும் அடர்ந்த வநம். அதில் வழி மறந்து விட்டது. துக்கத்தால் சோர்வு, பசி, தாஹம், - கலக்கம் அடைந்தான். குதிரைக்கும் தண்ணீர்த் தவிப்பு. நதி, குளம் ஏதானும் இருக்குமா என தேடினுன். தண்ணீரில்லாமல் உணர்விலாமலானுன். அலைந்து வந்தான். ஒரு ஆஸ்ரமம் தென்பட்டது. அதில் கபடமான முநிவர் வேஷத்தில் ஒரு ராஜா இருந்தான். அவனுடைய தேசத்தை ராஜா பாநு ப்ரதாபன் கைப்பற்றி விட்டிருந்தான். ஏனெனில் அவன் போரில் அவன் ஸேனையை விட்டு ஓடிவிட்டான். பாநுப்ரதாபனுக்கு ஸமயம் அனுகூலமாயிருந்தது; தனக்கு எதிராக இருந்தது என்று உணர்ந்து ஓடிப்போனுன். வீட்டுக்கும் போகவில்லை. கர்வம் மிகுந்த அந்த ராஜா பாநுப்ரதாபனை ஸந்திக்கவே இல்லை. மநஸில் கோபம், தரித்ரன்போல் தபஸ்வி வேஷம் பண்ணிக் கொண்டு வநத்தில் வஸித்தான். அவனிடமே இப்போது பாநு ப்ரதாபன் வந்துசேர்ந்தான்! இவன் பாநுப்ரதாபன்தான் என்று அவன் தெரிந்துகொண்டு விட்டான்.

ராஜாவுக்கு தண்ணீர்த் தவிப்பு ! அவனைத் தெரிந்துகொள்ள வில்லை. அழகான வேஷத்தைப் பார்த்தான். இது ஒரு மஹா முனி என்று நினைத்துக் கொண்டான். குதிரையிலிருந்து இறங்கினுன். நமஸ்காரம் பண்ணினுன். இருந்தாலும் கெட்டிக் காரன்; ராஜா தன் பெயரைச் சொல்லவில்லை.

ராஜாவுக்குத் தண்ணீர்த் தாஹம் என்று தெரிந்து அவன் ஒரு குளத்தைக் காட்டினுன். குதிரையும் தானும் ஸந்தோஷ மாக ராஜா அதில் குளித்தான்; தாஹம் தீர குடித்தான்.

சோர்வெல்லாம் போயிற்று. ராஜா ஸுகமடைந்தான். அவனை தபஸ்வி தன் ஆச்ரமத்துக்கு கூட்டிக்கொண்டு போனான். ஸூர்யாஸ்தமனம் ஆகி விட்டதென்று தெரிந்து கொண்டான். ராஜாவுக்கு ஆஸனம் அளித்தான். தபஸ்வி இனிமையாகச் சொல்வான்: நீ யார்? அழகான காளைப்பருவம்! உயிரோடு விளையாடுகிறாயே; தனியாக வனத்தில் ஏன் திரிகிறாய். உனக்கு சக்ரவர்த்தியின் லக்ஷணங்கள் இருக்கின்றன. உன்னைப் பார்த்ததும் எனக்கு உன்மேல் இரக்கம் உண்டாகிறது.

''முநீச, கேளுங்கள். பானுப்ரதாபன் என்று ராஜா இருக்கிறானே, அவனுடைய மந்த்ரி நான். வேட்டையாடித் திரிந்து வந்தேன், வழி மறந்து விட்டது. தங்கள் சரணங்களை தர்சனம் பண்ணலாயிற்று, என் பெரும் பாக்யம். எங்களுக்கோ தங்கள் தர்சனம் கிடைத்தற்கரிது. விதி நல்லது பண்ணிற்று என்று தெரிகிறது.

முநிவன் சொன்னான்: பிள்ளாய் இருட்டாகி விட்டது. உன் நகரம் எழுபது யோஜனை தூரம் இருக்கும். கோரமான ராத்ரி. மிக அடர்ந்த காடு. பாதை கிடையாது. நீ புத்திசாலி இதைத் தெரிந்துகொள்வாய். இன்று இங்கேயே தங்கிவிடு. பொழுது விடிந்ததும் புறப்பட்டுப் போகலாம்.

துளஸிதாஸ் சொல்கிறார்: விதி எப்படி இருக்குமோ அப்படியே அதற்கு உதவியும் அமையும். தானே அவனிடம் தேடி வரும். அவனை வருங்காலத்திடம் சேர்த்து வைக்கும்,

தபஸ்வியின் ஆக்ஞையைத் தலைமேல் கொண்டு ராஜா ''ஸ்வாமி அப்படியே. மிகவும் சரி'' என்றான். குதிரையை மரத்தில் கட்டினான். உட்கார்ந்தான்.

பலவிதமாக முநிவனைப் புகழ்ந்தான். சரணங்களில் வந்தனம் செய்தான். பாக்யத்தை மெச்சிக்கொண்டான். அழகாக இனிமையாக 'தங்கள் திருநாமத்தைச் சொல்ல வேண்டுகிறேன், நாத!' என்றான். ''தங்களைத் தந்தையாக எண்ணி துணிச்சலுடன் கேட்கிறேன். என்னைப் பிள்ளையாக, ஸேவகனாக எண்ணி சொல்லுங்கள்'' என்றான்.

ராஜா அவனைத் தெரிந்துகொள்ளவில்லை. ஆனால் அவன் கபடத்தில் கைதேர்ந்தவன்: ராஜாவோ நல்ல மநஸ் உள்ளவன்.

அவன் ஒன்று - பகைவன்; அதோடு க்ஷத்ரியன்! அதற்கும் மேலே ராஜா!! வஞ்சகத்தால் தன் கார்யத்தை ஸாதித்துக் கொள்ள விரும்புகிறான். அந்த ஸத்ரு [தன் முன்னைய] ராஜ ஸுகத்தை எண்ணி துக்கப்பட்டுக்கொண்டிருந்தான். அவனுடைய மநஸ் காளவாய்போல எரிந்துகொண்டிருந்தது. ராஜாவின் ஸரளமான பேச்சைக் காதால் கேட்டதும் பகையை உறுதிப்படுத்திக் கொண்டான், ஹ்ருதயத்தில் ஸந்தோஷப்பட்டான். அழகாக கபடம் தோய்ந்த யுக்தியுடன் சொல்வான்: இப்போது என் பெயர் பிச்சை. பணமிலாதவன்; வீடிலாதவன்.

''நல்ல க்ஞானத்தின் களஞ்சியமானவர், தங்களைப்போல கர்வம் விட்டவர், தம்மை எப்போதும் ஒளித்துக்கொள்வார். எல்லாவிதத்திலும் நிபுணர் என்றாலும் மோசமான வேஷம் செய்து கொள்வார். அதனால்தான் *வேதமும் ஸாதுக்களும் அறைந்து சொல்கின்றன. ஏதுமே எஞ்சியிலாதவன், பரம ஏழையே ஹரிக்கு மிக ப்ரியமானவன். தங்களைப்போல தனமிலாதவன், பிச்சைக்காரன். வீடிலாதவனிடம் ப்ரஹ்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் ஸந்தேஹம் உண்டாகிறது. தாங்கள் யாராக வேண்டுமானாலும் இருங்கள். நான் தங்கள் சரணங்களில் நமஸ்காரம் பண்ணுகிறேன். ஸ்வாமி, என்மேல் க்ருபை பண்ணுங்கள்'' என்றான் ராஜா.

ராஜாவினுடைய ஸ்வபாவமான ப்ரீதியையும் தன்மேல் அவனுக்கு ஏற்பட்டிருந்த நம்பிக்கையும் பார்த்து கபடமுநி எல்லாப் படியாலும் ராஜாவைத் தன்னவனாக்கிக்கொண்டு [தன் வசம்] அதிக அன்பு வெளிக்காட்டிக்கொண்டு ''ராஜன், நான் ஸத்ய பாவத்துடனே சொல்கிறேன்—கேள். இங்கே நான் இருக்கத் தொடங்கி வெகு காலமாகிவிட்டது. இதுவரை என்னை யாரும் ஸந்திக்கவில்லை. நானும் என்னை யாருக்கும் தெரிவித்துக் கொள்ளவில்லை. எனக்கு யாரையும் தெரியாது. ஏனெனில் லோகத்தின் மதிப்பு அக்நியைப்போல தபஸ் எனும் வநத்தை எரித்துவிடும்.

துளஸிதாஸர்: அழகான வேஷத்தைப் பார்த்து மூடர்கள் மயங்கி விடுகிறார்கள். அழகான மயிலைப்பார்—அம்ருதம் போல குரல்; ஆனால் பாம்பைத் தின்கிறது!

அதனால்தான் உலகத்திலிருந்து ஒளிந்து இருக்கிறேன். ஹரியைத் தவிர எனக்கு வேறெதும் பயனில்லை. ப்ரபு தெரிவிக்காமலேயே எல்லாம் தெரிந்து கொள்பவர். லோகத்தின் பாராட்டுதலால் என்ன கிடைக்கப்போகிறது!

நீ தூயவன், நல்ல புத்தி யுள்ளவன். எனக்கு நீ மிக ப்ரிய மாகி விட்டாய். என்மேல் உனக்கு அன்பும் நம்பிக்கையும் இருக்கிறது. உன்னிடமிருந்து ஒளித்தேனுனல் எனக்குக் கொடிய துக்கமுண்டாகும்.

எவ்வெப்படியெல்லாம் தபஸ்வீ உதாஸீனத்தை [பற்றற்ற நிலையை] சொல்லிக்கொண்டு போனானோ, அவ்வப்படியே ராஜாவிற்கு விச்வாஸம் [நம்பிக்கை] உண்டாகிக்கொண்டே போயிற்று. மநஸ் வாக்கு செயல்களால் ராஜா தன் வசம் ஆகி விட்டான் என்று கண்டதுமே [அப்போதே] அந்த கபட த்யாநி 'அன்ப, என் பெயர் ஏகதநு [ஒருடல்]' என்றுன்.

கேட்டவுடன் ராஜா மறுபடி நமஸ்காரம் பண்ணினுன். 'என்னைத் தங்கள் ஸேவகன் என்று கருதி நாமத்தின் அர்த்தம் விளக்கிச் சொல்லவேண்டும்' என்றுன்.

''ஆதி ஸ்ருஷ்டி ஏற்பட்டபோதே நானும் உண்டானேன். எனக்கு வேறு தேஹமே ஏற்படவில்லை. அதனுலேதான் என் நாமம் ஏகதநு என்றுகியது. பிள்ளாய், மநஸில் ஆச்சர்யப்பட வேண்டாம். தபஸுக்கு எதுமே துர்லபமில்லை. [தபஸால் அடைய முடியாதது ஏதுமில்லை] தபோ பலத்தால் ப்ரஹ்ம தேவன் ஸ்ருஷ்டி முழுதும் பண்ணுகிருர். தபோ பலத்தால் விஷ்ணு பாலனம் பண்ணுகிருர். தபோ பலத்தால் சம்பு ஸம்ஹாரம் பண்ணுகிருர். இந்த ஸம்ஸாரத்தில் தபோ பலத்தால் அடைய முடியாதது ஏதுமில்லை.

கேட்டதும் ராஜாவுக்கு எல்லையிலாத அநுராகம் உண்டாகியது. தபஸ்வி புராணக் கதைகள் சொல்லலானுன். கர்மா, தர்மங்கள் பற்றி அனேக வரலாறுகள் சொல்லி வைராக்யம், விவேகம், நிரூபணம் செய்யலானுன். உத்பத்தி, பாலனம், ப்ரளயம் பற்றி கதைகள், பெரிய பெரிய ஆச்சர்யங் களுடன் வர்ணிக்கலானுன்.

இதெல்லாம் கேட்டதும், ராஜா தபஸ்வியின் வசமாகி விட்டான். அப்போது தன் பெயரைச் சொல்லலானுன்.

அதற்குள் தபஸ்வி ''ராஜன், எனக்கு உன்னைத் தெரியும். நீ எவ்வளவோ கபடம் பண்ணினுய், ஆனுல் எனக்குப் பிடித்து விட்டது. ராஜன், கேள். இது நீதி; ராஜா தன் பெயரை எல்லா இடங்களிலும் சொல்லக்கூடாது. இந்த நீதி நிபுணத்வம் உன்னிடம் இருக்கிறது. அதைப் பார்த்து எனக்கு உன்மேல் பேரன்பு உண்டாகிறது.

உன் பெயர் பாநுப்ரதாபன். உன் தந்தை ராஜா ஸத்யகேது. ராஜன், குருவின் அருளால் எல்லாம் எனக்குத் தெரிந்து விடுகிறது. ஆனுல் இதை நான் சொல்வதில்லே. ஏனெனில் இதனுல் தனக்கேதான் கேடு உண்டாகும். குழந்தாய், உன் ஸ்வபாவமான நேர்மை, ப்ரீதி, விச்வாஸம், நீதி-நிபுணத்வம் எல்லாம் பார்த்து என் மநஸில் [நீ என்னவன் என்ற] மமதா உண்டாகிறது. நீ கேட்டதால் என் கதைசொல்லிக் கொண்டிருக்கிறேன். எனக்கு மிக ஸந்தோஷம். அதில் ஸந்தேஹமில்லே. ராஜன் உன் மநஸில் என்ன தோன்றுகிறதோ கேட்டு பெற்றுக்கொள்.

இப்படி அழகாகச் சொன்னதைக் கேட்டு ராஜா ஸந்தோஷ மானுன். பாதங்களேப் பிடித்துக்கொண்டு பல விதமாக வேண்டிக்கொண்டான். ''க்ருபாஸிந்து முநிவரே! தங்கள் தர்சனத்தால் தர்ம, அர்த்த, காம. மோக்ஷம் எனும் நான்கும் என் கையில் கிடைத்துவிட்டன. இருந்தாலும் ப்ரபு ப்ரஸன்ன மாகியதைப் பார்த்து அடைய அரிதான அருள் வேண்டி சோகம் அற்றவனுக ஆசைப்படுகிறேன். நான் மூப்பிலாமல், மரண மிலாமல் இருக்கவேண்டும். சரீரத்தில் ஒரு துக்கமும் வரக் கூடாது. யுத்தத்தில் எவனும் என்னே ஜயிக்கக் கூடாது. சத்ரு இல்லாமல் பூலோகத்தில் நூறு கல்பகாலம் (என்)ஒரே குடைகீழ் ராஜ்யம் அமையவேண்டும்'' என்முன்.

தபஸ்வி சொன்னுன்; ''ஏவமஸ்து [அப்படியே ஆகுக] ஆனுல் இதில் ஒரு பெரிய கஷ்டம் இருக்கிறது. அதையும் கேள். ப்ராஹ்மண குலம் ஒன்று தவிர காலனும் உன் சரணங்களில் சிரம் பணிவான். தபஸ்ஸின் பலத்தால் விப்ரன் எப்போதும் மஹாபலம் உள்ளவனுயிருக்கிருன். அவனுடைய கோபத்தி லிருந்து காக்க யாருமே இல்லே. [யாராலும் முடியாது]. ராஜன் விப்ராகனே வசமாக்கிக் கொண்டு விட்டாயேல், விஷ்ணு, மஹேசனும், உன் வசமாவார்கள். நான் இரு கைகளேயும் உயர்த்திச் சொல்கிறேன். ப்ரஹ்ம குலத்திடம் ;வலிமை ஒன்றும் செல்லாது. ராஜன், கேட்டுக்கொள். விப்ர-சாபத்தா லன்றி, ஒரு காலத்திலும் உனக்கு நாசம் ஏற்படமுடியாது.

அவன் சொன்னதைக் கேட்டு ராஜா மலர்ச்சியடைந்தான். ''நாத, இனி எனக்கு நாசம் ஏற்படாது. ப்ரபு க்ருபாநிதான தங்கள் க்ருபையால் எனக்கு எப்போதுமே நன்மையேதான்'' என்முன்.

''ஏவமஸ்து'' என்ருன் குடில கபட முநி. ''வழி மறந்ததையோ என்னைச் சந்தித்ததையோ (யாரிடமேனும்) சொன்னாயானுல்-அப்புறம் என்னைக் குற்றம் சொல்லாதே. இந்த நிகழ்ச்சியை சொன்னாயானுல் உனக்குப் பெரும் கேடு உண் டாகும். ஆகையால்தான் அப்படிச் செய்யாமல் உன்னைத் தடுக் கிறேன். ஆருவது காதில் [மூன்ரும் பேருக்கு] இந்தக் கதை பட்டதோ உன் நாசம் உண்டாகிவிடும். நான் சொல்வது ஸத்யம், இந்த விஷயம் வெளியில் வந்தால் அல்லது த்விஜர் சாபத்தால்தான் உன் நாசம் ஆகும். வேறு எந்த உபாயத்தாலும் உனக்கு மரணம் ஏற்பட முடியாது. ஹரி ஹரர் விஷ்ணு மநஸில் கோபம் ஏற்பட்டாலும் சரி.''

சரணங்களைப் பிடித்துக்கொண்டு ராஜா சொன்னுன்: ''ஸத்யம் தான் நாத! த்விஜர் குரு கோபத்திலிருந்து யார்தான் காப்பாற்ற முடியும்? விதாதாவின் கோபத்திலிருந்து குரு காப்பாற்றுவார். குருவின் கோபத்திலிருந்து காப்பாற்ற ஸம்ஸாரத்தில் யாருமே இல்லை. தங்கள் ஆக்ஞையின்படி நான் எல்லாம் செய்யவில்லை எனில் நாசமே ஆகட்டும். அதில் எனக்கு துக்கம் இல்லை. ஒரே ஒரு பயத்தால் எனக்கு பெரும் பயம் உண்டாகிறது. மஹிதேவர் [ப்ராஹ்மணர்] சாபம் மஹா கோரமானது. இப்போது க்ருபை பண்ணி இதைச் சொல்லுங்கள்—எப்படி விப்ரரை வசமாக்கிக் கொள்ளலாம். ஹே தீநதயாள தங்களைத்தவிர லோகத்தில் எனக்கு ஹிதமானவர் யாரும் தென்படவில்லை.''

''ராஜன் கேள். ஸம்ஸாரத்தில் அநேக விதமான உபாயங்கள் இருக்கின்றன. ஆனுல் அவை கஷ்டப்பட்டே ஸாதிக்கக்கூடியவை. அப்படிப்பட்டாலும் பலன் நிச்சயமாகக் கிடைக்கும் என்று சொல்லமுடியாது. ஆனுலும் சரி ஆகாவிட்டாலும் சரி. ஒரு உபாயம் மிக ஸுலபமானது. அதிலும் ஒரு கடினம் இருக்கிறது.

''அந்த யுக்தி என் கையில் இருக்கிறது. உன் நகருக்குள் நான் வருவது என்பது முடியாது. நான் உண்டானதிலிருந்து இன்று வரை எந்த கிராமத்துக்குள்ளுமோ, யார் வீட்டுக்குமோ நான் போனதில்லை. நான் வராவிட்டால் உன் கார்யம் கெட்டுப் போகும். இன்று [இப்படி] ஒரு இக்கட்டான நிலைமை ஏற்பட்டு விட்டது.''

இதைக் கேட்டு ராஜா இனிமையாகச் சொல்வான்: நாத இப்படி ஒரு நீதி நிகமங்களில் [வேத] ஸம்மதமானது—பெரியவர் சின்னவர்மேல் ஆசை வைக்கிருர்கள்; மலை எப்போதும் தன்

தலைமேல் புல்லைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. ஆழம் காண முடியாத ஸமுத்ரத்தின்மேல் நுரை போகிறது. பூமி எப்போதும் புழுதியைத் தாங்குகிறது'' என்று சொல்லி ராஜா முனிவரின் பாதங்களைப் பற்றிக்கொண்டான். ''ஸ்வாமி, கிருபை பண்ணுங்கள். தாங்கள் நல்லோர்; தீந-தயாளன். எனக்காக துக்கம் பொறுத்துக்கொள்ளுங்கள்'' என்றான்.

ராஜா தன் ஆதீனத்திலிருப்பதைத் தெரிந்துகொண்டான் கபட முனிவன். கெட்டிக்காரன். சொன்னான்: ''ராஜன், நான் உன்னிடம் ஸத்யமாகச் சொல்கிறேன். லோகத்தில் எதுமே எனக்கு துர்லபமில்லை. நான் உன் கார்யத்தை கட்டாயம் செய்கிறேன். ஏனெனில் நீ மனத்தாலும் வாக்காலும் கர்மாவாலும் என் பக்தன். யோகம், யுக்தி, தபஸ், மந்த்ரங்களின் சக்தி ரஹஸ்யமாக வைத்துக்கொண்டால்தான் பலிக்கும். ராஜன், நான் சமைத்து நீ பரிமாறினால், என்னை யாரும் தெரிந்து கொள்ளவில்லை எனில், அந்த அந்நத்தை யார் உண்டாரோ அவர் உன் ஆக்ஞையை ஏற்பார். மேலும் அவன் வீட்டார் யார் உண்டாரோ அவரும் உன் வசமாவார். ஆகையால்; போய் இந்த உபாயம் பண்ணு. ஒரு வர்ஷத்துக்கு ஸங்கல்பம் பண்ணிக் கொள். நித்தமும் ஒரு லக்ஷம் த்விஜர்கள்—அன்றன்று புதியவராக-[வரித்து] அவர் தம் பரிவாரங்களுடன் வரணம் பண்ணு; நான் உன் ஸங்கல்பத்துக்காக நித்தமும் விருந்து பண்ணுவேன். ராஜன், இப்படி, மிகத் துளி ச்ரமம் எடுத்துக் கொண்டால் எல்லா விப்ரர்களும் உன் வசமாவார்கள் விப்ரர்கள் ஹோமம், மகம், பூஜை பண்ணுவர். அந்த ப்ரஸங்கத்தால் தேவகணம் ஸாதாரணமாக உன் வசமாவர். நான் உனக்கு ஒரு அடையாளமும் கொடுக்கிறேன்! நான் இந்த வேஷத்தில் ஒருபோதும் வரமாட்டேன். நான் உன் புரோஹிதரை மாயாவால் கொணர்வேன். தபஸின் பலத்தால் அவரை எனக்கு நிகர் ஆக்குவேன். இங்கே ஒரு வர்ஷம் வரை வைத்திருப்பேன். ராஜன், கேள். நான் அவர் வேஷம் பண்ணிக் கொண்டு எல்லாப்படியாலும் உன் கார்யத்தை முடிப்பேன். இரவு வெகு நேரம் ஆகிவிட்டது. இனி தூங்கு. ராஜன் என்னை மூன்றாவது நாள் ஸந்திப்பாய். நான் தபஸின் பலத்தால் உன்னை உன் குதிரையுடன் தூங்கிக் கொண்டிருக்கும்போதே வீட்டில் கொண்டு சேர்த்துவிடுவேன். நான் அதே வேஷத்தில் வருவேன். நான் தனிமையில் உன்னை அழைத்து இந்தக் கதை முழுதும் சொல்லும்போது என்னை அடையாளம் தெரிந்துகொள்.

உத்தரவு பெற்றுக்கொண்டு ராஜா தூங்கப்போனுன். கபடமுநி போய்த்தன்ஆஸனத்தில் உட்கார்ந்துகொண்டான். ராஜா சோர்ந்திருந்தான்! கோர நித்ரையில் ஆழ்ந்தான். கபடி முநி எப்படித் தூங்குவான்! அவனுக்கு யோசனைகள் அதிகமாயிற்று. காலகேது எனும் நிசிசரன் அங்கே வந்தான்.

அவன்தான் வராஹ ரூபத்தில் ராஜாவை ஏமாற்றியவன். அவன் தபஸ்வி - ராஜாவுக்கு மிகவும் ஸ்நேஹமானவன். மிகவும் ஆழ்ந்த மாயா செய்ய வல்லவன். அவனுக்கு 100 பிள்ளைகள், 10 தம்பிகள் இருந்தார்கள். எல்லாரும் மற்றெல்லாரையும்விட கெட்டவர்கள். யுத்தத்தில் இவர்களை யாரும் ஜயிக்கமுடியாது. தேவர்களுக்குக் கஷ்டம் கொடுத்துக் கொண்டிருந்தனர். ஆகையால் விப்ரர், ஸாதுக்கள், தேவர்களின் கஷ்டத்தைப் பார்த்து முதலிலேயே ராஜா அவர்கள் எல்லாரையும் போரில் கொன்றுவிட்டிருந்தான். அந்த துஷ்டன் அதன்பின் வைரம் வைத்துக்கொண்டே இருந்தான். தாபஸ ராஜா-கபடமுநி-யுடன் சேர்ந்து சூழ்ச்சி செய்தான். சத்ருவை நாசம் பண்ண உபாயம் உருவாக்கினுன்.

(வருங்கால) விதி வசத்தால் ராஜாவுக்கு ஒன்றுமே தெரியாது.

சுறுசுறுப்பாகச் செயல்படும் சத்ரு தநியனுக இருந்தாலும்கூட அவனை அல்ப்பமாக எண்ணிவிடக்கூடாது. ராஹுவுக்குத் தலை மட்டுமே மிஞ்சியது. அப்படியும் இன்று வரை ஸூர்யனுக்கும் சந்த்ரனுக்கும் துக்கம் தந்து வருகிறுன்.

தாபஸ ராஜா தன் தோழன் வருவதைப் பார்த்து ஸந்தோஷமாக எழுந்து வந்து ஸந்தித்தான். ஸுகமடைந்தான்.

நண்பன் கதை முழுதும் சொன்னுன்.

ராக்ஷஸன் ஸுகமடைந்தான். சொன்னுன்: ராஜன், கேள். நான் சொல்வதன்படி நீ நடந்தாயானுல் இனி சத்ருவை நான் ஸரிபண்ணி விடுவேன். கவலையை விட்டு போய்த்தூங்கு. மருந்து இல்லாமலேயே விதி வ்யாதியைப் போக்கிவிட்டார். குலத்தோடு சத்ருவை வேறுேடு அகழ்ந்தெடுத்துவிட்டு நாலாம் நாள் வந்து உன்னை ஸந்திப்பேன். தாபஸ ராஜாவை மிகவும் ஸந்தோஷப் படுத்திவிட்டு மஹா கபடி, மேலும் கோபமாகப் போனுன்.

பாநு ப்ரதாபனைக் குதிரையுடன் ஒரு க்ஷணத்தில் வீட்டில் கொண்டு சேர்த்தான். ராஜாவை ராணியினண்டை தூங்க வைத்தான். குதிரையை சேணம் நீக்கிக் கட்டிவைத்தான். ராஜாவின் புரோஹிதரைக் கவர்ந்துகொண்டு போனுன். அவனை மலைக்குஹையில் மாயாவால் புத்தியை மயக்கிவைத்தான். தன் ரூபம் புரோஹிதரைப் போலவே பண்ணிக்கொண்டான்.

ப்ராத:கால உணர்வு ஏற்பட்டது. ராஜா விழித்துக் கொண்டான். தன் மாளிகை என்று உணர்ந்தான். எல்லை யிலாத ஆச்சர்யம் உண்டாகியது. முநிவரின் மஹிமையை ஊஹித்துக்கொண்டான். ராணிக்குத் தெரியாதபடி மெள்ள எழுந்தான். அதே குதிரைமேல் ஏறி வநத்துக்குப் போனுன். புரத்தின் ஸ்த்ரீ-புருஷர் ஒருவருக்கும் ஏதும் தெரியாது. மத்தியானம் வத்தான். வீட்டுக்கு வீடு உத்ஸவம் கொண்டாடி னுர்கள். வாத்யங்கள் முழங்கின. புரோஹிதரைப் பார்த்தான். அந்தக் கார்யத்தை நினைத்துக்கொண்டான், திகைத்துப் பார்க்கலானுன்,

மூன்று நாள் கழிவது யுகம் போலிருந்தது. ராஜாவுக்கு கபட முநிவன் சரணங்களிலேயே மனம் ஒன்றியிருந்தது.

ஸமயம் ஆனதும் புரோஹிதர் வந்தார். ராஜாவுக்குத் தநிமையில் எல்லாம் சொன்னுர்.

ராஜா குருவை அடையாளம் தெரிந்துகொண்டான். ஸந்தோஷம் அடைந்தான். உடனே ஒரு லக்ஷம் வைதீக விப்ரர்களை குடும்பத்துடன் வரித்தான். ஆறு ரஸங்கள் [சுவைகள்] நாலு வகைகள். வேதம் எப்படி சொல்லியிருக்கிறதோ அப்படியே விருந்து புரோஹிதர் பண்ணிவைத்தார். மாயா மயமான சமையல் பண்ணினுன். அநேகவிதமான வியஞ்சனங்கள் பண்ணினுன். எண்ணிலடங்காதவை. அநேகவிதமான ம்ருகங் களின் மாம்ஸம் சமைத்தான். துஷ்டன், அவற்றில் விப்ர மாம்ஸமும் கலந்தான். போஜனத்துக்கு விப்ரர்களை வரச் சொன்னுன். கால்களை நீராட்டி உட்காரச் செய்தார்கள்.

ராஜா பரிமாற ஆரம்பித்தான்.

ஆகாசவாணி ஒலித்தது.

''விப்ர ஸமூஹமே! எழுங்கள், எழுந்து வீட்டுக்குப் போங்கள் அந்நத்தைச் சாப்பிடாதீர்கள். பெரிய கேடு ஏற்பட்டிருக்கிறது. சமையல் பூஸுரர் மாம்ஸத்தால் ஆகியிருக்கிறது.''

த்விஜர்கள் அதை நம்பினுர்கள். எழுந்தார்கள்.

ராஜா கலங்கிப் போனுன். புத்தி மயங்கியது. பாவி [வரப் போவதன்—விதி] வசத்தால் வாயிலிருந்து வார்த்தை ஏதும் எழவில்லை. விப்ரர் எல்லாரும் கோபமாகப் பேசலானுர்கள். ஏதும் யோசிக்கவில்லை. சாபம் கொடுத்தார்கள்;

''மூடராஜன், உன் பரிவாரத்துடன் நீ நிசிசரர் ஆகப்போ! க்ஷத்ரியாதம [க்ஷத்ரியர்களுள் இழிவானவனே]!, நீ ப்ராஹ்மணர்களைக் கூப்பிட்டு அவர்களை ஸமாஜத்தோடு அழிக்கப்பார்த்தாய். ஈச்வரன் எங்கள் தர்மத்தைக் காப்பாற்றினர். நீ பரிவாரத்துடன் அழிந்து போவாயாக. ஒரு வர்ஷத்துக்குள் உன் நாசம் ஆகும். உன் குலத்தில் தண்ணீர் விடக்கூட ஒருவன் மிஞ்சமாட்டான்.''

ராஜா சாபத்தைக் கேட்டான். அளவிலாத பயத்தால் துக்கம் அடைந்தான்.

மீண்டும் ஆகாசவாணி கேட்டது. ச்ரேஷ்டமாயிருந்தது. ''விப்ரர்களே, ஆராய்ந்து சாபம் கொடுக்கவில்லை. ராஜா அபராதம் ஏதும் செய்யவில்லை''

ஆகாச வாணியைக்கேட்டு விப்ரர்கள் எல்லாரும் திகைத்தனர்

போஜன சாலைக்கு ராஜா போனன். அங்கே சமையல் இல்லை. சமையல் செய்தவனுமில்லை. ராஜா திரும்பி வந்தான். மனஸில் பெரும் துக்கம். கதை முழுவதையும் மஹீஸுரர்களுக்குச் சொன்னன். மயங்கி தரையில் விழுந்தான்.

''ராஜன், நடக்க வேண்டியது நடந்தே தீரும்: அது அழியாது. உன்மேல் தோஷமில்லை என்ருலும் சரியே. செய்வது வேருக முடியாது. விப்ர சாபம் கோரமானது.'' இப்படிச் சொல்லிவிட்டு மஹிதேவர் எல்லாரும் போய்விட்டார்கள்.

புரவாஸிகளுக்கு இதெல்லாம் தெரிந்தது. துக்கப்பட்டார்கள். 'தைவ'த்தைக் குற்றம் சொன்னர்கள். இஷ்டம்போல அது ஹம்ஸத்தைக் காகமாக்கிவிட்டதே.

அஸுரன் புரோஹிதரைக் கொணர்ந்துவிட்டான். தாபஸ ராஜாவுக்கு தெரிவித்தான்!

அந்த துஷ்டன் எல்லா இடங்களுக்கும் கடிதம் அனுப்பினன். அந்த ராஜாக்கள் ஸேனைகள் ஏற்பாடு பண்ணிக்கொண்டு வந்தார்கள். எல்லா ராஜாக்களும் டங்கா முழக்கி நகரத்தை முற்றுகை இட்டனர். அநேக விதமாக யுத்தம் நடந்தது. எல்லா மாவீரர்களும் வல்லமை காட்டி போரிட்டு மடிந்தனர். தம்பியுடன் ராஜாவும் மாண்டான். ஸத்ய கேதுவின் குலத்தில் யாரும் மிஞ்சவில்லை. விப்ர சாபம் எப்படி அஸத்யமாகும்!

எல்லா ராஜாக்களும் சத்ருவை ஜயித்து, நகரை வசமாக்கிக் கொண்டு வீடு திரும்பினர். விஜயமும் யசஸ்ஸும் அடைந்தனர்.

பரத்வாஜ, கேள். யாருக்கு விதாதா இடமாகி விட்டாரோ அவருக்கு தூசும் மேருவாகிவிடும்; பிதா யமனாகிவிடுவார்; தாம்பே பாம்பாகிவிடும்.

ராவணாவதார ப்ரஸங்கம்

முனிவரே, கேள். காலம் வந்ததும் அதே ராஜா (பானுப்ரதாபன்) ஸமாஜத்துடன் நிசாசரன் ஆனான். அவனுக்கு 10 தலைகள்; 20 புஜங்கள். அந்த வீரன் பலவான்களால் போற்றப்பட்டான். அவன் பெயர் ராவணன்.

(பானுப்ரதாபனின்) தம்பி அரிமர்த்தனன் பலத்தின் இருப்பிடமான கும்பகர்ணன் ஆனான். தர்மருசி என அவனுடைய மந்த்ரியாயிருந்தவர் மாற்றும் [தாய்-வயிற்றில் பிறந்து] தம்பி ஆனார். அவன் பெயர் விபீஷணன் என்றாயிற்று. அவன் விஷ்ணு பக்தன். விக்ஞானத்தின் களஞ்சியம் என்று உலக மெல்லாம் தெரியும். ராஜாவின் அனேக பிள்ளைகளும் ஸேவகர் களும் கோர நிசாசரர் ஆயினர். இந்த துஷ்டர்கள் மனம் விரும்பியபடி ரூபம் எடுத்துக்கொள்ளக் கூடியவர். அநேக விதமாக குடிலர், பயங்கரமானவர், விவேகமிலாதவர். எல்லாரும் இரக்கமிலாதவர், துன்பப்படுத்துபவர். பாபிகள். உலகத்தையே வாட்டி வதைத்த அவர்களை வர்ணிக்க முடியாது. அவர்கள் பாவனமான, நிர்மலமான. உபமானமிலா புலஸ்த்ய குலத்தில் உண்டானவர்கள் என்றாலும், [ப்ராஹ்மண] மஹீஸுர சாபத்தால் பாப ரூபமாகவே வளர்ந்தார்கள்.

மூன்று ஸஹோதரர்களும் அநேக விதமாக தபஸ் பண்ணினார்கள், மிக உக்ரமாக செய்தார்கள். அவைகளை வர்ணிக்கவே முடியாது.

தபஸ்ஸைப் பார்த்து விதாதா அருகில் சென்றார். 'பிள்ளாய் எனக்கு ஸந்தோஷமாகியது: வரம் வேண்டிக் கேட்டு பெற்றுக் கொள்க' என்றார்.

பணிந்து, பாதங்களை பிடித்துக்கொண்டு தஸஸீஸா [பத்து தலையோன்] 'ஜகதீசா, கேளுங்கள். வாநரம், மனிதன் தவிர யார் அடித்தாலும் நான் மரிக்கக் கூடாது' என்றான்.

''ஏவமஸ்து. நீ மஹாபெரிய தபஸ் பண்ணியிருக்கிருய். [சங்கரன் சொல்வார்] நானும் ப்ரஹ்மாவும் சேர்ந்து இதைக் கொடுத்தோம்.

ப்ரபு அதன் பின் கும்பகர்ணனிடம் போஞர். அவனைப் பார்த்து மிக ஆச்சர்யம் உண்டாயிற்று. 'இந்த துஷ்டன் நித்தமும் போஜனம் பண்ணுவானேல் ஸம்ஸாரம் அழிந்துவிடும்' என்று சாரதாவை ஏவி, அவன் புத்தியை திருப்பிவிட்டார். அவன் 6 மாதத்துக்கு தூக்கம் வேண்டி வரம்பெற்ருன்,

அதன்மேல் விபீஷணனிடம் போஞர். 'பிள்ளாய் வரம் வேண்டிக்கொள்' என்ருர்.

அவன் பகவானின் பத கமலங்களில் அ-மல மான அநுராகம் [பக்தியை] வேண்டினுன்.

அவனுக்கு வரம் கொடுத்துவிட்டு ப்ரஹ்மா புறப்பட்டுப் போஞர்.

அவர்கள் ஸந்தோஷமாக வீடு திரும்பினுர்கள்.

மயன் [எனும் ராக்ஷஸனின்] பெண் மந்தோதரி என்பாள். பேரழகி. ஸ்த்ரீ ரத்னம். மயன் அவளை ராவணனுக்கு அளித்தான். இவன் யாதுநானபதி [ராக்ஷஸர்களின் ராஜா] ஆவான் என்று அவன் தெரிந்துகொண்டிருந்தான்.

நல்ல மனைவி அடைந்து ராவணன் ஸந்தோஷப்பட்டான்.

பின்னர் தன் இரு தம்பிகளுக்கும் விவாஹம் பண்ணி வைத்தான்.

ஸமுத்ரத்தின் மத்தியில் த்ரிகூடம் எனும் மலை இருந்தது. விதி உண்டாக்கியிருந்தார். அது நெருங்க முடியாதது. பிற்காலத்தில் மயதாநவன் அதை செப்பனிட்டான். பொன் மணிகளால் எண்ணிலாத வீடுகள் கட்டினுன்.

போகாவதி எப்பது ஸர்ப்ப குல வாஸம் ஆகியதோ, அமராவதி எப்படி இந்த்ரனின் ராஜதாநி [ஆகியதோ] யோ, அதையும் விட அதிக அழகாக உலகம் புகழும்படி லங்கா எனும் அழகான நகரம் அமைந்தது. ஆழமான ஸமுத்ரம் நாலு பக்கமும் அகழ் போல சுற்றியது. தங்கக் கோட்டை. மணிகளால் ஆன மதில்கள். அதன் அமைப்பைச் சொல்ல முடியாது. ஹரியின் ஏவலால் எந்த கல்பத்தில் ராக்ஷஸர்களின் ராஜா சூரனுக, ப்ரதாபமிக்க அளவிலாத பலமுள்ளவனுஞனோ, அவன் ஸேனையுடன் அங்கேதான் வஸித்தான்.

முதலில் அங்கே மஹா வீரர்களான நிசிசரர் வஸித்தார்கள். அவர்கள் எல்லாரையும் தேவர்கள் போரில் மாய்த்தார்கள். இப்போது அங்கே இந்த்ரனின் ஏவல்படி குபேரன் தரப்பிலிருந்து ஒரு கோடி யக்ஷர் காவல் புரிந்து வந்தனர்.

எங்கிருந்தோ தசமுகனுக்கு [ராவணனுக்கு] இது தெரிந்தது. ஸேனை திரட்டி லங்கா கோட்டையை முற்றுகையிட்டான். மாபெரும் ஸேனை, பயங்கரமான வீரர்களைப் பார்த்து யக்ஷர்கள் உயிரைப் பிடித்துக்கொண்டு ஓடிவிட்டார்கள்.

[ராவணன்] தசாநனன் நகரம் முழுவதையும் சுற்றிப் பார்த்தான். கவலை தீர்ந்தது. மிகவும் ஸுகம் அடைந்தான். இயற்கையாகவே அது நெருங்க முடியாதது. அழகாயிருந்தது. அதைப்பார்த்து [அவன்] ராவணன் அதை ராஜதானி ஆக்கிக் கொண்டான்.

எவருக்கு எந்த அளவு தகுதி இருந்ததோ அதன்படியே உரிய பாகத்தில் ஏற்ற வீடு அளித்தான். ரஜநீசரர் [ராக்ஷஸர்]களை ஸந்தோஷப்படுத்தினுன்.

ஒரு தடவை குபேரனைப் போருக்கு அழைத்தான். ஜயித்து புஷ்பக விமானத்தைக் கொண்டுவந்தான். பின்னர் விளையாட்டாகவே கைலாஸத்தைப் பெயர்த்துத் தூக்கினுன். தன் பாஹு பலத்தை [தோள் வலிமையை] எடை போட்டுப் பார்த்து மிக ஸந்தோஷமடைந்து சென்றுன்.

ஸுகம், ஸம்பத்தி, பிள்ளைகள், ஸேனை. உதவிகள்—ஜயம், ப்ரதாபம், பலம், புத்தி, மஹிமை— எல்லாம் நித்தமும் வளர்ந்[துவந்]தன. எப்படி எத்தனை லாபம் பெருகுகிறதோ அத்தனை லோபமும் வளர்கிறது.

மிக பலவானுன கும்பகர்ணன் போன்ற தம்பி; இவனுக்கு இணையாக ஸம்ஸாரத்தில் யாரும் பிறந்ததே இல்லை. அவன் மது குடித்துவிட்டு ஆறு மாஸம் தூங்கினுன். அவன் விழித்துக் கொண்டாலே மூன்று லோகங்களும் நடுங்கின. அவன் நித்தமும் சாப்பிட்டால் சீக்கிரமே இந்த ஸம்ஸாரமே அழிந்துபோம். அவன் போர்த்திறமையை வர்ணிக்கவே முடியாது. அவ்வளவு பெரியது. அவனுக்கு கிட்டத்தட்ட [ஏறக்குறைய] பலம் உள்ளவர்கள் எண்ணிலடங்காத பலவான் வீரர்களிருந்தனர்.

ராவணனின் பெரிய பிள்ளை வாரிதநாதன். வீரர்களுள் அவனை முதல்வனாக கணக்கிட்டார்கள். யுத்தத்தில் எவரும் அவன்முன் நிற்கமுடியாது. தேவலோகத்தில் நித்தமும் குழப்பமும் ஓடி ஒளிதலும். துர்முகன், அகம்பநன், வஜ்ர தம்ஷ்ட்ரன், தூமகேது, அதிகாயன், இவர்கள் தந்நந்தநியாகவே உலகத்தை ஜயிக்க வல்லவர். கிட்டதட்ட இந்தமாதிரி மஹாவீரர்கள் அநேகர் இருந்தனர். எல்லாரும் விரும்பியபடி ரூபம் எடுத்துக்கொள்ள வல்லவர்கள். மாயா உண்டாக்கத் தெரிந்தவர்கள். கனவிலும் அவர்களுக்கு தர்மமோ, இரக்கமோ இல்லை.

தசமுகன் ஒரு தடவை ஸபையில் வீற்றிருந்து எண்ணில் அடங்காத தன் பரிவாரத்தைப் பார்த்தான். பிள்ளைகளின் கூட்டம், சொந்தக்காரர், உடன் இருப்போர், பேரன்கள் ஸமூஹம்—நிஸாசர ஜாதியை யார் எண்ண முடியும்?— இயல்பாகவே கர்வம் மிகுந்தவன். ஸேனையைப் பார்த்து கோபம் மதம் மிளிர சொல்வான்: ரஜநீசர ஸமூஹம் எல்லாம் கேட்டுக் கொள்ளுங்கள். விபுத[தேவர்] ஸமூஹம் நம் வைரிகள். அவர் தீரமாக எதிர்நின்று போரிடுவதில்லை. ஸத்ரு பலவான் எனத் தெரிந்து ஓடிப்போகிறார்கள். அவர்கள் சாக ஒரு வழி இருக்கிறது. ஆராய்ந்து சொல்கிறேன். இப்போது அதைக் கேளுங்கள். த்விஜர் போஜனம், மகம், ஹோமம், சிராத்தம் இந்த கர்மாக்கள் நடக்கும் இடங்களுக்கு நீங்கள் போய் தொல்லை கொடுங்கள்.

பசியால் நலிந்து தேவர்கள் தாமாகவே வந்து சேர்வார்கள். அப்போது அவர்களை நல்லபடியாக நம் வசம் ஆக்கிக்கொண்டு கொன்றுபோடுவேன். அல்லது விட்டுவிடுவேன்.

அதன்பின் மேகநாதனைக் கூப்பிட்டான்.

அவனுக்கு [புத்திமதிகள்] சொல்லிக்கொடுத்தான், ஸேனை கொடுத்தான். பகைமை [உணர்ச்சி] கொடுத்தான். பெருமைப் படுத்தினான். ''போரில் தீரரான, போரில் விருப்பமுள்ள, தேவர் கிடைத்தால் அவர்களைப் போரில் ஜயித்து கட்டிக் கொண்டுவா'' என்றான்.

பிள்ளைகள் எழுந்தார்கள். பிதாவின் ஆக்ஞையைத் தோளில் போட்டுக்கொண்டனர் [ஏற்றார்கள்].

இப்படி எல்லாருக்கும் உத்தரவு கொடுத்தான். தானும் கதை எடுத்துக்கொண்டு போனான்.

தசாநனன் போனபோது பூமி ஆடிய்து. அவன் கர்ஜித்ததும் தேவர்களின் மனைவியரின் கரு விழுந்தன. ராவணன் கோபமாக வருவதைக் கேட்டு தேவர்கள் மேருமலையின் குஹைகளில் பதுங்கிக் கொண்டார்கள். திக் பாலர்களின் அழகழகான லோகங்களை தசாநனன் சூன்யமாக்கினுன். திரும்பத் திரும்ப பெரிதாக ஸிம்ஹநாதன் செய்தான். தேவர்களை ஏசி, சண்டைக் கிழுத்தான். போர் வெறி பிடித்து லோகத்தில் ஓடித்திருந்தான். தனக்கு இணையாக ஒருவன் உண்டா என்று தேடினுன். ஆனுல் எங்கும் அவனுக்கு எதிரே நிற்பவரே இல்லை. ஸூர்யன், சந்த்ரன், பவநன் [வாயு], வருணன், தந-தாரி [குபேரன்], அக்நி, காலன், யமன், கிந்நரர், ஸித்தர், மநுஜர் (மநிதர்), ஸுரர். நாகர், —எல்லாரையும் விடாமல் துரத்திஞன். ப்ரஹ்மாவின் ஸ்ருஷ்டியில் உடல் எய்திய எத்தனை உண்டோ, ஆணோ, பெண்ணோ, எல்லாரும் தசமுகனின் வசமாயினர். எல்லாரும் பயந்து அவனுடைய உத்தரவை மதித்தனர். நித்தமும் அவன் சரணங்களில் பணிந்து வேண்டிக்கொண்டனர்.

புஜ பலத்தால் விச்வம் முழுவதையும் வசமாக்கிக் கொண்டான். யாரையும் ஸ்வதந்திரமாக விட்டுவைக்கவில்லை. மண்டலேச்வரர்களின் ஸிரோமணி ராவணன், தன் யோசனைப் படியே ராஜ்யம் ஆண்டான். தேவ-யக்ஷ-கந்தர்வ-மநித-கிந்நர-நாக குமாரிகளையும், இன்னம் அநேக ஸ்திரிகளையும் புஜவலியால் போரில் ஜயித்து வரித்து [மனைவியர் ஆக்கி]க் கொண்டான்.

இந்த்ரஜித்திடம் அவன் என்ன சொன்னுனோ அவை எல்லாம் அவன் ஏற்கனவே செய்தாகிவிட்டது.

[யாக்ஞவல்க்யர்]: முன்னரே யாருக்கு என்ன உத்தரவு இட்டிருந்தானே, அவர்கள் அதை நிறைவேற்றிய வரலாற்றைக் கேள் :—

தேவர்களுக்கு துக்கம் தந்த பாபி ராக்ஷஸர்கள் பார்க்க மிக பயங்கர ரூபத்திலிருந்தார்கள். அஸுரர்களின் கூட்டம் உபத்ரவம் பரப்பினுர்கள். மாயாவால் எல்லாரும் அநேக ரூபங்கள் எடுத்துக்கொண்டனர். தர்மத்தின் வேர் எப்படி கல்லி எறியப்படுமோ, அப்படியே வேதத்துக்கு எதிராகப் பேசினர். எந்த தேசம், நகரம், க்ராமம், புரங்களில் தேநு(பசு)த்விஜர்களைப் பேணினுர்களோ, அந்த நகரம், க்ராமம், புரங்களை எரித்தார்கள். எங்கும் சுப-ஆசரணம் [நல்ல கார்யங்கள்] நடக்க முடியவில்லை தேவ-விப்ர-குருக்களை யாரும் மதிக்கவில்லை. ஹரி பக்தி. யக்ஞம்,

தபஸ், க்ஞானம் பற்றி துப்பே இல்லை! வேத-புராணங்கள் எவரும் கனவிலும் கேட்கவில்லை. ஜபம், யோகம், வைராக்யம், தபஸ், யக்ஞபாகம்,—பற்றி காதில் கேட்டால் உடனே தஸஸீஸன் தானே எழுந்து ஓடினன். இவை இருக்கவிடவில்லை. எல்லாவற்றையும் கெடுத்தான்; அழித்தான்; தர்மம் காதால் கூட கேட்க இல்லாதபடி ஸம்ஸாரத்தில் ஒழுக்கக்கேடு பரவியது. வேத புராணம் சொன்னவரைப் பலவிதமாகப் பயமுறுத்தினன்; தேசத்தை விட்டு வெளியேற்றினன்.

கோர நிசாசரர் இழைத்த அநீதியை வர்ணிக்கவே முடியாது. ஹிம்ஸை பண்ணுவதில் எவருக்கு எல்லையிலாத ப்ரீதி உண்டாகிறதோ அவருக்கு பாபத்தின் எல்லை என்று ஒன்று உண்டா என்ன ?

துஷ்டர்கள், திருடர்கள், சூது ஆடுபவர் ஏராளமாக ஆனர்கள். பிறர் மனைவியை, பிறர் தனத்தை விரும்புவோர்; மாதா, பிதா, தேவர்களை மதிக்க மாட்டார்கள். ஸாதுக்களை ஸேவை பண்ணச் செய்தார்கள்.

பவாநி, எவர் நடத்தை இப்படி இருக்கிறதோ அந்த 'ப்ராணிகள்' எல்லாரும் நிசிசரர் என்று தெரிந்து கொள்.

தர்மத்திற்கு இப்படி வரம்பு கடந்த துன்பத்தைப் பார்த்து மிகவும் பயந்து தரா (பூமி) கலக்கமடைந்தாள். ''கிரி, ஸரி [நதி] ஸிந்து [கடல்] இவைகூட எனக்கு அவ்வளவு பெரும் சுமையாக இல்லை. ஒரு பரத்ரோஹி அவ்வளவு பாரம் எனக்கு'' என்றாள். தர்மமெல்லாம் விபரீதமாகி விட்டதைப் பார்க்கிறாள். ஆனல் ராவணனிடம் பயத்தால் ஏதும் சொல்ல முடியவில்லை. ஹ்ருதயத்தில் ஆராய்ந்து அவள் பசு ரூபம் எடுத்துக்கொண்டாள். தேவர் முனிவர் கூடியிருந்த இடத்துக்குப் போனாள். அழுது தன் துக்கத்தைச் சொன்னாள். ஆனல் யாரும் ஏதும் பண்ண முடிய வில்லை. ஸுரர் முனிவர், கந்தர்வர், எல்லாரும் சேர்ந்து விரஞ்சி லோகத்திக்குப் போனார்கள். அவர்களுடன் பயம், சோகத்தால் மிகவும் கலங்கிக் கிடந்த பூமியும் - பாவம் - பசு ரூபத்தில் இருந்தாள்.

ப்ரஹ்மா எல்லாம் தெரிந்து கொண்டார். மநஸில் யோசித்தார்: எனக்கும் ஒரு வழியும் தோன்றவில்லை. பூமியிடம் சொன்னார். ''யாருக்கு நீ தாஸியோ, அவிநாசி, அவர்தான் உனக்கும் எனக்கும் உதவக்கூடியவர். தரணி, தைர்யமாயிரு. ப்ரபுவின் பதங்களை ஸ்மரணம் பண்ணு. பக்தர்களின் துன்பம் அவருக்குத் தெரியும். கொடிய கஷ்டத்தை அவர் போக்கி விடுவார்'' என்றார்.

தேவர்கள் உட்கார்ந்து யோசிக்கலானார்கள். ப்ரபுவைப் பார்த்து, முறையிடவேண்டும். எங்கே பார்க்க முடியும்!

அவர் வைகுண்டத்திலிருப்பார் என்றார் ஒருவர்.

பால்க்கடலில்தான் அவர் வாஸம் பண்ணுவார் என்றார் இன்னொருவர்.

எவர் ஹ்ருதயத்தில் எந்த மாதிரி பக்தி ப்ரீதி இருக்கிறதோ, ப்ரபு அவருக்காக எப்போதும் அங்கேயே அதே மாதிரியாகத் தோற்றமளிப்பார்.

ஹே கிரிஜே, நானும் அப்போது அந்த ஸமாஜத்தில் இருந்தேன். ஸமயம் பார்த்து நானும் ஒரு வார்த்தை சொல்லிவைத்தேன்.

''ஹரி எங்கும் ஸமான ரூபத்தில் பரவியுள்ளவர். ப்ரேமையால் தோன்றுகிறார். இது எனக்கு நன்றாகத் தெரியும். தேசம், காலம், திசை, விதிசைகளில் ப்ரபு இல்லாத இடம் எது? அவர் சராசர மயமானவர். என்றாலும், எல்லாவற்றையும் விட்டு விலகி இருப்பவர். வைராகி [பற்றில்லாதவர்]. ப்ரேமைக்காக அவர் *அக்நியைப்போல கண்முன் காணக் கிடைப்பார்'' என்றேன்.

நான் சொன்னதை எல்லார் மநஸும் ஒப்புக்கொண்டது. 'நன்று, நன்று' என்றான் ப்ரஹ்மா! பாராட்டினான். ப்ரஹ்மாவுக்கு மநஸில் மிகவும் ஸந்தோஷம் உண்டாயிற்று. மெய்சிலிர்த்தது. கண்களில் நீர் நிரம்பியது. தீர-மதியுள்ளவன். மநஸ் ஒருமுனைப் படுத்தி கைகூப்பிக்கொண்டான். ஸ்தோத்ரம் பண்ணலானான்:-

ஜய ஜய! தேவர்களின் தலைவ, ஜனங்களுக்கு ஸுகம் தருபவ, பணிந்தவரைக் காப்பவ, பகவானே! பசு-த்விஜர்களுக்கு நன்மை பண்ணுபவ, ஜய! அஸுரர்களின் பகைவ, கடல்-மகள்-ப்ரிய-காந்தா, தேவர்களையும், பூமியையும் காப்பாற்றுபவ! உன் கார்யங்கள் அத்புதமானவை. உன் மர்மத்தை யாரும் அறியார். ஸ்வபாவமாகவே நீ தீனதயாளன். எங்களுக்கு க்ருபை பண்ணு,

ஜய ஜய! அழிவிலாதவ, எல்லாவற்றுள்ளும் வஸிப்பவ, எங்கும் பரவியுள்ளவ, பரமானந்த ஸ்வரூப; அறியமுடியாதவனே, இந்த்ரியங்களால் உணரப்படாதவ, மாயை இல்லாதவ,

முகுந்த, மோக்ஷம் தருபவ, எதற்காக முனிவர்களெல்லோரும் மோஹத்தை அகற்றி பற்றற்றவராகின்றனரோ, அத்துடன் அன்போடு எவரை இரவு-பகல் த்யானம் பண்ணுகிறார்களோ, இன்னம் குணப்பொதிகளை பாடுகிறார்களோ, அந்த ஸச்சிதானந்த பகவானே. ஜய !

எவர் வேறு எவருடைய உதவியுமின்றி மூன்று வித ஸ்ருஷ்டியையும் ஆக்கினாரோ, பாபங்களை அழிக்கும் அந்த ப்ரபு எங்களைப் பற்றியும் கொஞ்சம் நினைக்கவேண்டும். எங்களுக்கு பக்தி தெரியாது. பூஜை தெரியாது. எந்த பகவான் ஸம்ஸாரத்தின் பயத்தை அகற்றுபவரோ, முனிவர் மனதுக்கு ஆனந்தம் தருபவரோ, விபத்துக் கூட்டங்களை அழிப்பவரோ, அந்த பகவானின் சரணங்களில் தேவர்கள் எல்லாரும் தங்கள் திறமைகளைத் தூர வைத்துவிட்டு, மனம், சொல், செயல்களால் இப்போது இங்கே வந்திருக்கிறார்கள்.

ஸரஸ்வதி, வேதம். ஆதிசேஷன், ருஷிகள் இவர்கள் ஒருவருமே எவரை அறியாரோ, எவரை வேதங்கள் தீன-நாதன் [நொந்தவர்களிடம் ப்ரியமானவன்] என்று அழைக்கின்றனவோ, அதே பகவான் எங்களிடம் ப்ரியம் கொள்ளவேண்டும். மனமிளகி எங்களிடம் ஓடிவரவேண்டும். ஸம்ஸார ரூபமான கடலுக்கு நீங்கள் மந்தரமலை; நீங்கள் எல்லாவிதத்திலும் அழகானவர், குணங்களின் கோயில், ஸுகத்தின் பொதி; ஹே நாத! எல்லா முநிவர்களும், ஸித்தர்களும், தேவர்களும், பெரும் பயத்தால் நடுங்கி உங்கள் சரண கமலங்களில் நமஸ்காரம் பண்ணுகிறார்கள்.

ஸுரர்களும் பூமியும் பயபீதியடைந்திருப்பதைப் பார்த்து ஆவல் மிக அமைத்த வாக்கைக் கேட்டு எல்லா ஸந்தேஹங்களையும் அகற்றக்கூடிய கம்பீர ஆகாசவாணி உண்டாயிற்று:

''முநிவர்களே, ஸித்தர்களே, ஸுரேசர்களே, பயப்படாதீர்கள். உங்களுக்காக நான் மநித ரூபம் எடுத்துக்கொள்வேன்! அம்சங்களுடன் மநிதனாக உத்தமமான ஸூர்ய குலத்தில் அவதரிப்பேன். கச்யபரும் அதிதியும் மஹா பெரிய தபஸ் பண்ணினார்கள். அவர்களுக்கு நான் முன்னரே வரம் கொடுத்தாகி இருக்கிறது. அவர்களே தசரதர், கௌஸல்யா ரூபங்களில் கோஸலபுரியில் மநித ராஜாவாக தோன்றியிருக்கிறார்கள். ஆகையால் நாங்கள் நாலு ஸஹோதரர்கள் அவர்கள் வீட்டில் ரகுகுலதிலகம் ஆக அவதாரம் கொள்வோம்.

''நாரதர் சொன்னதை முழுவதையும் நான் ஸத்யமாக்குவேன். பரம சக்தியுடன் அவதாரம் பண்ணுவேன். பூமியின் கஷ்டம் எல்லாவற்றையும் அகற்றுவேன். தேவர்கள் பயம் விட்டுப் போங்கள்'' என்று கேட்டது.

ப்ரஹ்மம் செய்த ஆகாசவாணியைக் கேட்டு ஹ்ருதயம் குளிர்ந்தது. உடனேதேவர்கள் திரும்பிப் போனார்கள்.

ப்ரஹ்ம தேவன் தரணியைத் தேற்றினார்.

அவளும் பயம் நீங்கினாள். மனஸில் நம்பிக்கை ஏற்பட்டது.

விரஞ்சி தேவர்களுக்கு இப்படி சொல்லிக் கொடுத்தார். ''நீங்கள் வாநர சரீரம் எடுத்துக்கொண்டு பூமியில் போய் ஹரி-பத-ஸேவை பண்ணுங்கள்.'' பின்னர் தன் லோகத்துக்குப் போனார்.

தேவர் எல்லாரும் அவரவர் இடத்துக்குப் போனார்கள். பூமியுடன் அவர்களுக்கும் மநஸில் ஆறுதல் உண்டாயிற்று. ப்ரஹ்மா சொன்ன உத்தரவை நிறைவேற்றுவதில் அவர்கள் ஸந்தோஷமடைந்தனர். காலம் தாழ்த்தவில்லை. பூமியில் அவர்கள் வந-சர-சரீரம் எடுத்துக்கொண்டனர். அவர்களுக்கு அளவிலாத பலம். பிரதாபம். இந்த வீரர்களெல்லாருக்கும் ஆயுதங்கள்—கிரி, மரம், நகம். மதி தீரர்கள். ஹரியின் வழியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கிரிகளிலும் காடுகளிலும் அவரவர் அழகான ஸேனை அமைத்துக்கொண்டு அங்கங்கே நிரம்பியிருந்தார்கள்.

இந்த அழகான கதை எல்லாம் நான் சொன்னேன். இடையிலே விட்டுப்போனதை இப்போது கேள்.

ராமாவதார ப்ரஸங்கம்

இரண்டாவது கேள்விக்கு விடை

அவதபுரியில் [அயோத்யா] ரகுகுல-மணி-ரூப ராஜா இருந்தான். அவன் பெயர் தசர்தன். வேதத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. அவன் தர்ம துரந்தரன். குணநிதி. க்ஞாநி. பகவான் சார்ங்கபாணியின் பக்தியும், நினைவுமே அவன் ஹ்ருதயத்திலிருந்தது. அவனுடைய ப்ரிய ராணிகள் கௌஸல்யா முதலானோர் தூய நடத்தை உள்ளவர்கள். பதிக்கு அநுகூலமா யிருந்தார்கள். அவர்களுக்கு ஹரிபத கமலத்தில் திடமான ப்ரேமை. பணிவுள்ளவர்கள்.

ஒரு ஸமயம் ராஜாவின் மநஸில் தனக்கு புத்ரனில்லையே என்று துக்கமுண்டாயிற்று. உடனே குருவின் வீட்டுக்குப் போனான். சரணங்களில் நமஸ்காரம் பண்ணினான். மிகவும் பணிவுடன் தன் ஸுக துக்கங்களைத் தெரிவித்தான்.

கேட்டு வஸிஷ்டர் பலவிதமாகத் தேற்றினார். ''தைர்யமாய் இரு. நாலு பிள்ளைகள் உண்டாவார்கள். அவர்களுடைய புகழ் மூன்று லோகங்களிலும் உண்டாகும். பக்தர்களின் பயத்தைப் போக்குபவராவார்கள்'' என்றார். *ச்ருங்கி ருஷியை வரவழைத்தார். புத்ர-காம-சுப-யக்ஞம் செய்வித்தார்.

பக்தியுடன் முநிவர் ஆஹுதி கொடுத்தார்.

கையில் *சரு ஏந்தி அக்நிதேவன் தோன்றினான். ராஜாவிடம் சொன்னான்: ''எல்லாக்கார்யமும் உனக்கு நிறைவேறும். ராஜன், இந்த ஹவியை எடுத்துக்கொண்டுபோய் எப்படி உசிதமோ அப்படி பகிர்ந்து ப்ரஸாதமாகக்கொடு''.ஸபையில் எல்லாருக்கும் தெரிவித்துவிட்டு அக்நிதேவன் அந்தர்த்தானமானான்.

ராஜா பரமானந்தத்தில் ஆழ்ந்து போனான். அவனுக்கு ஹ்ருதயம் கொள்ளாத ஸந்தோஷம்! தன் ப்ரிய ராணிகளை அழைத்தான். கௌஸல்யா முதலானோர் அங்கே வந்தார்கள். பாதியை கௌஸல்யாவுக்கு கொடுத்தான். மற்ற பாதியை இரு பாகமாக்கினான். ஒரு பாகத்தை கைகேயிக்குக் கொடுத்தான். மீதி இருந்ததை இரண்டு பாகமாக்கி, கைகேயி, கௌஸல்யா இவர்களின் கையில் வைத்து மலர்ந்த மநஸுடன் ஸுமித்ராவுக்கு கொடுத்தான்.

இப்படியாக ராணிகள் எல்லாரும் கர்ப்பம் கொண்டார்கள். ஹ்ருதயத்தில் ஸந்தொஷப்பட்டார்கள். அவர்களுக்கு பெரிய ஸுகம் உண்டாகியது. ஹரி கர்ப்பத்தில் வந்த நாளிலிருந்து லோகமெங்கும் ஸுகம், ஸம்பத்து பரவியது. அரண்மனையில் ராணிகள் விளங்குகிறார்கள். அவர்கள் சோபை தேஜஸ்களின் களஞ்சியம். ஸுகமாகக் கொஞ்ச காலம் கழிந்தது.

ப்ரபு தோன்றவேண்டிய காலம் வந்தது. யோகம், லக்நம், க்ரஹம், வாரம் திதி எல்லாம் அநுகூலமாக அமைந்தன. சர அசரங்கள் எல்லாம் ஸந்தோஷமாயின.

ஏனெனில் ராம ஜனனம் ஸுகத்தின் மூலம்.

நவமி திதி - பவித்ரமான சைத்ர மாஸம். சுக்ல பக்ஷம். பகவானுக்குப் ப்ரியமான அபிஜித் முஹூர்த்தம். மத்யாஹ்ன ஸமயம். அதிக குளிருமில்லை. கடுமையான உஷ்ணமுமில்லை. உலகத்தில் இளைப்பாறக்கூடிய பவித்ரமான ஸமயம். குளுமையாக மணம் மிக காற்று தவழ்ந்து வந்தது. தேவர்கள் ஸந்தோஷப் பட்டார்கள். ஸாதுக்களின் மநஸில் ஆனந்தமுண்டாயிற்று. வநங்கள் பூத்துக்குலுங்கின. மலைகளில் மணிகளின் சுரங்கங்கள் வெளிப்பட்டன. எல்லா நதிகளிலும் அம்ருதம் பாய்ந்தது.

விரிஞ்சி அந்த வேளை வந்துவிட்டதென தெரிந்துகொண்டதும் எல்லா தேவர்களும் விமானங்கள் ஏற்பாடு பண்ணிக்கொண்டு போனார்கள். நிர்மலமான ஆகாசம் தேவர் ஸமூஹம் நிரம்பியது. கந்தர்வர்கள் குணகானம் பண்ணினார்கள். எல்லா தேவர்களும் அஞ்சலி செய்து புஷ்பங்கள் பொழிந்தார்கள். ஆகாசத்தில் துந்துபி முழங்கியது. நாகர், முநிவர், தேவர் ஸ்துதி பண்ணலானார்கள். அநேகவிதமாக தம் ஸேவையை ஸமர்ப்பித் தார்கள். தேவர் ஸமூஹம் விண்ணப்பம் செய்துவிட்டு அவரவர் இருப்பிடம் சென்றார்கள். ஜகத்தின் அடைக்கலம் புகுமிடம், எல்லா உலகமும் சிரமம் தீரும் ரூபம்— ப்ரபு தோன்றினார்,

க்ருபாலு, தீநதயாளன், கௌஸல்யாவுக்கு நன்மை செய்பவர் தோன்றினார்.

முநிவரின் மநஸைக் கவரவல்ல அத்புத ரூபத்தைப் பார்த்து தாயார் ஸந்தோஷப்பட்டாள். கண்கள் ஆனந்தமடையும் ச்யாம மேகத்துக்கு ஸமமான சரீரம். நாலு கைகளிலும் தன் ஆயுதம் சங்கு, சக்ரம், கதை, பத்மம் [தாங்கி], அணிகள் [பூண்டு], வந-மாலை[அணிந்து]—விசாலமான கண்கள்—கராரி [கரனின் பகைவன்] - சோபையின் ஸமுத்ரமாகத் திகழ்ந்தார்.

இரு கைகளையும் கூப்பி சொன்னாள்: ''ஹே அனந்த! உன்னை எப்படி ஸ்தோத்ரம் பண்ணட்டும்! நீ மாயா, குணம், க்ஞானத்திற்கு அப்பால் பட்டவன், கர்வமிலாதவன்—என்று வேத-புராணம் சொல்கின்றன. ஸுகத்தின் ஸாகரம், குணங்களின் சுரங்கம் என்று சொல்லி வேதங்கள் பாடுகின்றன. பக்தர்களின்மேல் அநுராகம் கொள்ளும் அவரே, ஸ்ரீபதி, என் ஹிதத்துக்காக தோன்றினார்—

ஒவ்வொரு ரோமக்காலிலும் மாயா அமைத்த ப்ரஹ்மாண்டங் களின் ஸமூஹங்கள் ஒட்டிக் கொண்டிருக்கின்றன— என்று வேதங்கள் சொல்கின்றன.

அந்த ப்ரபு என் மார்பில் வஸிப்பாராக. சிரிக்கத்தக்கது! இதைப் பண்டிதர்கள் கேட்டால் பண்டிதர்களின் புத்தி நிலை கொள்ளாது.

தாயாருக்கு க்ஞானம் உண்டானதும் ப்ரபு சிரித்தார்.

பலவிதமான செயல்கள் நிகழ்த்த விரும்புகிறார். ஆகையால் அழகான கதை சொல்லி தாயாரைத் தேற்றினார்.

அவள் 'புத்ர' அன்பு அடைந்தாள்.

மீண்டும் தாயார் பேசினாள். அவளுடைய புத்தி சலன மடைந்தது. ''குழந்தாய், இந்த ரூபத்தை விட்டுவிடு. எல்லை யிலா ப்ரியம் தரும் சின்னஞ்சிறிய குழந்தை லீலை செய், இந்த ஸுகம் உபமானமிலாதது.''

மஹா க்ஞாநி இதைக் கேட்டு அழ ஆரம்பித்தார்.

தேவர்களின் ராஜா பச்சைக்குழந்தை ஆனார்.

இந்த சரித்ரத்தைப் பாடுவோர் ஹரி பதமடைவர். பவக் கிணற்றில் விழமாட்டார்.

மாயா, குணம். இந்த்ரியங்களுக்கு அப்பால்பட்டவர். [அ-து வாக்குக்கு அப்பால்பட்டவர்] விப்ரர், பசு, தேவர், ஸாதுக்கள்.— இவர்களுக்காக தன் ஸங்கல்ப்பமாக சரீரம் ஆக்கிக்கொண்டு மநித அவதாரம் எடுத்துக்கொண்டார்.

குழந்தை அழுத பரம பிரியமான குரல் கேட்டு களிப்பு மிக, எல்லா ராணிகளும் வந்தார்கள். தாஸிகள் ஆனந்தமடைந்து அங்குமிங்கும் ஓடினர். நகர வாஸிகள் எல்லாரும் ஆனந்தத்தில் ஆழ்ந்தார்கள்.

புத்ரன் பிறந்ததைக் கேட்டதுமே தசரதன் ப்ரஹ்மா னந்தத்தில் ஆழ்ந்துவிட்டான் போலானான். சரீரம் முழுதும் மயிர்க்குச்செறிந்தது. எழுந்திருக்க விரும்புகிறான். புத்தியை நிலைப்படுத்திக் கொள்கிறான். 'எவருடைய பெயரைக் கேட்ட தாலேயே சுபமாகிறதோ, அதே ப்ரபு என் வீட்டில் வந்திருக்கிறார்.' ராஜாவின் மநஸ் பரமானந்தத்தால் பூர்ண மாயிற்று [நிரம்பியது]. கூப்பிட்டு வாத்யங்கள் இசைக்கச் சொன்னான்.

குரு வஸிஷ்டர் வீட்டுக்கு அழைப்பு அனுப்பினான்.

அவர் த்விஜர்களைக் கூட்டிக்கொண்டு அரண்மனை வாயிலுக்கு வந்தார். அத்புத பாலகனைப் பார்த்தார். ரூபத்தின் ராசியா யிருந்தது. குணங்கள் அதை வர்ணனை பண்ண முடியாது.

ராஜா நாந்திமுக ச்ரார்த்தம் பண்ணினான். ஜாதகர்மா பண்ணினான். பொன். பசு, ஆடை, மணிகள் எல்லாம் ராஜா விப்ரர்களுக்கு தானம் பண்ணினான். த்வஜம், பதாகம், தோரணங்கள் நகரெங்கும் நிறைந்திருந்தது, எப்படி அலங்காரம் பண்ணினார்களென்று சொல்லமுடியாது! ஆகாசத்தில் புஷ்பமாரி பொழிந்துகொண்டிருந்தது. எல்லாரும் ப்ரஹ்மானந்தத்தில் ஆழ்ந்தார்கள்.

ஸ்த்ரீகள் கூட்டம் கூட்டமாகத் திரண்டு போனார்கள், வழக்கமான அலங்காரங்கள் பண்ணிக்கொண்டு விரைந்தார்கள். தங்கக் குடங்கள், தட்டங்களில் மங்கலப் பொருள்கள் நிரப்பி பாடிக்கொண்டு ராஜ வாயிலில் நுழைந்தார்கள். ஆரதி எடுக்கிறார்கள். த்ருஷ்டி கழிக்கிறார்கள்.

திரும்பத் திரும்ப குழந்தையின் சரணங்களில் படிகிறார்கள். மாகதர், ஸூதர் பாடகர்கள் வந்திகள், ரகுநாயகனின் பவித்ர குணங்களைப் பாடுகிறார்கள். எல்லாரும் தம் எல்லாவற்றையும், தாநம் பண்ணினார்கள். யார் வாங்கிக்கொண்டானோ அவனும் வைத்துக்கொள்ள வில்லை. கஸ்தூரி, சந்தனம், குங்குமம் எல்லா தெருக்களிலும் சேறாகக் கிடந்தது. ஒவ்வொரு வீட்டிலும் ஆனந்த வாத்யம் இசைத்தது. ஏனெனில் பரம சோபையின் மேகம் அன்று தோன்றியிருந்தது. நகரத்தின் ஸ்த்ரீ புருஷர்களின் கூட்டங்கள் எங்கும் ஸந்தோஷமாயிருந்தது.

கைகய ஸுதாவும், ஸுமித்ராவும் அழகான பிள்ளைகள் பெற்றனர்.

அந்த ஸுக ஸம்பத்தான ஸமயத்தையும் ஸமாஜத்தையும் ஸரஸ்வதி, சேஷனும்கூட சொல்லமுடியாது.

அந்த ஸமயத்தில் அவதபுரி எப்படி சோபித்தது என்றால்— ப்ரபுவை ஸந்திக்க ராத்ரி வந்தது.— ஸூர்யனைப் பார்த்து வெட்கப்பட்டது. எனவே ஸந்த்யா ஆகிவிட்டது போலிருந்தது. அகரு தூபத்தால் அடர்ந்த இருள் ஆகியது. அபீர் [ஹோலிப் பண்டிகையில் ஒருவருக்கொருவர் அளிக்கும் சிவப்பு] வானில் பரவியதே அருணோதயம் போலிருந்தது. வீடுகளின் கலசங்கள் நக்ஷத்ரங்களாம். ராஜ மாளிகையின் கலசம் சந்த்ரனும். கோமள வாணியில் வேதத்வநி நடந்துகொண்டிருந்தது. ஒரே ஸமயத்தில்

பக்ஷிகள் எல்லாம் உரலியது போலிருந்தது. இந்த வேடிக்கையை பார்த்து ஸூர்யன் மறந்து போனான். ஒரு மாதம் கழிந்தது அவனுக்குத் தெரியாது. ஒரு மாதம் ஒரு நாள் ஆயிற்று.

இந்த மர்மம் யாருக்கும் தெரியாது. ரதத்துடன் ஸூர்யன் நின்று விட்டான். ராத்ரி எப்படி ஆகும்? இந்த மர்மம் யாருக்கும் தெரியாது. ஸூர்யன் குணகானம் பண்ணிக்கொண்டு போனான். இந்த மஹோத்ஸவம் பார்த்து முநிவர், நாகர், தம் பாக்யத்தை வர்ணித்துக்கொண்டு விடு சேர்ந்தனர்.

கிரிஜா, உன் மதி திடமாகி விட்டதால் என் கள்ளத் தனம் ஒன்று சொல்கிறேன், கேள்- காக புசுண்டி என்னுடன் இருந்தான். நாங்கள் இருவரும் மநுஷ்ய ரூபம் எடுத்துக்கொண்டிருந்தோம். யாருக்கும் தெரியாது. பரமானந்த ப்ரேமை ஸுகத்தால் இரும்பூது பூத்திருந்தோம். தெருக்கள் வழியாக மனம் ஆழ்ந்திருக்க மெய்மறந்து திரிந்தோம். எவர்மேல் ராமக்ருபை இருக்கோ, அவனுக்குத்தான் இந்தச் செயல் தெரியும். அந்த ஸமயத்தில் யார் எப்படி வந்தார்களோ அப்படியே ராஜா அவர் மனஸ் விரும்பிய பொருள் கொடுத்தான். யானை, ரதம், குதிரை, பொன், பசு, வெள்ளி எல்லாவிதமான வஸ்த்ரங்கள் ராஜா அளித்தான்.

எல்லார் மனஸிலும் ஸந்தோஷம். எல்லாரும் அங்கங்கே இருந்துகொண்டே ஆசீர்வாதம் அளிக்கிறார்கள்.

துளஸிதாஸரின் ப்ரபு, புத்தரர்களெல்லாரும் சிரஞ்ஜீவிகளாக இருப்பீராக.

5 [குழந்தை] சிசு சரித ப்ரஸங்கம்

3-வது கேள்விக்கு விடை

சில நாள் இப்படி கழிந்தது. பகல் இரவு தெரியவே இல்லை. நாமகரண [பெயர் வைக்க] ஸமயம் வந்தது தெரிந்து ராஜா க்ஞாநி முநிவரை அழைத்துவரச் சொன்னான். பூஜை பண்ணினான். சொன்னான்—முநிவரே தாங்கள் என்ன பெயர் யோசித்து வைத்திருக்கிறீர்களோ அதே வைக்கலாம்.

முநிவர் சொன்னார்! ''இவனுக்கு அநேக பெயர்கள் இருக்கின்றன. உபமானமிலாதவை. ராஜன், நான் என் புத்திக்கு ஒப்ப சொல்வேன்-ஆனந்தத்தின் ஸமுத்ரம், ஸுகத்தின் ராசி, ஒரு பிந்து அளவினாலேயே மூவுலகுக்கும் ஸுகம் தருபவன்' இந்த ஸுகதாமனின் பெயர் ராம:

ஸம்பூர்ண லோகங்களுக்கும் விச்ராமம் தருபவன் - ஜகத்தை நிரப்புபவன், போஷிப்பவன் [ஊட்டி வளர்ப்பவன்]—இவன் பெயர் பரத:

எவனை ஸ்மரணம் பண்ணிஞலே சத்ருவின் நாசமாமோ இவன் பெயர் சத்ருக்ன:— வேதத்தில் ஒளிர்வது [ப்ரகாசிப்பது]

லக்ஷணங்களின் இல்லம், ராமனுக்குப் ப்ரியமானவன், ஸம்பூர்ண ஜகத்துக்கே ஆதாரம், அவனுடைய சிறந்த பெயர் லக்ஷ்மண: (லச்சிமன்) என்று வைத்தார்.

நன்ருக ஹ்ருதயத்தில் ஆராய்ந்தே குரு பெயர் வைத்தார். சொன்ஞர்! ராஜன், நாலு பிள்ளைகளும் வேதத்தின் தத்வம். முநிவர்களின் தநம். பக்தர்களின் ஸர்வஸ்வம் [எல்லாமே]. சிவனுக்கு ப்ராணன். அவர் [சிவன்] [இவருடைய] பால லீலைகளின் ஆனந்தத்தை ஸுகம் என எண்ணுபவர்.

லச்சிமன் பிள்ளைப் பிராயத்திலிருந்தே ராமனே தன் ஹிதம், ஸ்வாமி என்று எண்ணி ராம சரணங்களில் ப்ரீதி[யை]க் கொண்டான். பரதன்-சத்ருக்னனிடையே ஸ்வாமி-ஸேவகன் போன்ற ப்ரீதியின் பெருமை உண்டாகியது. ச்யாம-வெண்மை யான இரண்டு ஜதைகள். அழகாக இருந்தார்கள்.

தாய்மார்கள் துரும்புகிள்ளி த்ருஷ்டிகழித்தனர். [முறை-வட நாட்டில்] தாய்மார்கள் அழகைப் பார்த்து (மெய்மறந்து) நின்றனர்.

நாலு பேரும் சீலம், ரூபம், குணங்களின் இருப்பிடமாம். இருந்தாலும் ராமன் அதிக அளவில் ஸுக ஸாகரமாயிருந்தான். ஹ்ருதயத்தில் அநுக்ரஹ ரூபமான சந்த்ர ப்ரகாசம். அதன் கிரணமே மனோஹர சிரிப்பு ரூபத்தில் குறிப்பிட்டு காட்டியது. சில ஸமயம் மடியில். சில ஸமயம் அழகான தொட்டிலில் இட்டு தாயார் ப்ரியமான விளையாட்டுக் காட்டி கொஞ்சுகிருள்.

வ்யாபக-ப்ரஹ்ம-நிரஞ்சன-நிர்குணமானவர்-லௌகிக [இவ் வுலக] விளையாட்டுகள் இலாதவர், அவரே ஜன்மமிலாதவரே, பக்தி, ப்ரேமை வசமாகி கௌசல்யாவின் மடியிலிருக்கிருர்! நீல கமல, கம்பீரமான மேகம் நிகர்த்த ச்யாம சரீரத்தின் அழகு ஒரு கோடி காமனைப்போன்றது. அருண (செங்) சரண கமலத்தில் நகத்தின் ஜ்யோதி எப்படி இருந்தது எனில் கமலத்தின் இதழில் முத்து அமர்ந்திருந்தது.

வஜரம், த்வஜம், அங்குச ரேகைகள் [சோபித்தன] மிக அழகாயிருந்தன. தண்டையின் ஒலி கேட்டு முநிவர்களின் மநஸ் மோஹமடைந்தது. அரையில்நாண். வயிற்றில் மூன்று ரேகைகள். கம்பீரமான நாபியின் அழகு— அதைப் பார்த்தவனுக்குத் தான் தெரியும். பரந்த புஜங்களில் ஏராளமாக ஆபரணங்கள். ஹ்ருதயத்தில் புலி நகம், [ஹரி நகம்] மிக அழகாக சோபித்தது. மார்பில் மணிகள் பதித்த ஹாரம் விளங்கியது. விப்ர-சரண சின்னம் பார்க்க மநஸ் மயங்கிப் போகும். சங்கம் போன்ற கழுத்து, அழகான மோவாய். முகத்தில் எண்ணிலாத காமனின் சோபை பரவியிருந்தது. இரண்டிரண்டு பற்கள். சிவந்த உதடு. அழகான நாஸி. அதற்கு நேரே நெற்றித் திலகம்.—யார் வர்ணனை பண்ண முடியும்? அழகான செவிகள். மிக அழகான கன்னங்கள். மிகவும் பிரியமான இனிமையான மழலைப் பேச்சு கர்ப்பத்திலிருந்தே வழுவழுப்பான சுருண்ட தலைமுடி; இன்னம் முடி இறக்கவில்லை. தாயார் பலவிதமாக முடியை சிங்காரித்து இருந்தாள். மஞ்சள் வண்ண சட்டை சரீரத்தில் அணிவித்து இருந்தது.

முழங்கால், கைகளால் தவழ்ந்து செல்லலாயினர். அந்த ஸோபை எனக்கு மிகவும் பிடித்தது. ரூபத்தின் வர்ணனை வேதமும் சேஷனுமே செய்ய முடியாது. கனவிலாவது அதைப் பார்த்திருந்தவர்களுக்குத்தான் அது தெரியும்.

எவர் ஸுக ராசியோ, மோஹத்திற்குமப்பால்ப்பட்டவரோ, எவர் வரை புத்தி, வாக்கு, இந்த்ரியங்கள் எட்ட முடியாதோ அவரே ராஜா-ராணிகளின் பரம-ப்ரேமை வசமாகி பவித்ரமான சிசு லீலைகள் பண்ணிக்கொண்டிருக்கிறார்.

ஜகத்தின் மாதா பிதாவான ராமன் இப்படி கோஸலபுர வாஸிகளுக்கு ஸுகம் தந்து கொண்டிருந்தார். அவர்கள் ரகுநாத சரணங்களில் ப்ரீதி கொண்டார்கள்.

பவாநி, அவர்களுக்கு இந்த ப்ரத்யக்ஷகதி.

ரகுபதியிடம் பாராமுகமாயிருந்து ஒரு கோடி முயற்சி பண்ணினாலும் பவ-கட்டுகளை யார் துண்டிக்கமுடியும்? எந்த மாயா சராசர ஜீவன்களை வசமாக்கி வைத்திருக்கிறதோ, அது ப்ரபுவிடம் [பயத்து நடுங்கி] பயத்தால் கவ்வப்பட்டு காப்பாற்று காப்பாற்று என்பாள். எந்த ப்ரபு அவளை [மாயாவை] புருவ நெரிதலாம் குறிப்பால் ஆட்டி வைக்கிறாரோ அவரை விட்டு யாரை பஜனை பண்ணுவது? மநஸ்-வாக-கர்மாக்களால் ஸாமர்த்யத்தை விட்டு பஜனை பண்ணினால் ரகுராயி க்ருபை பண்ணுவார்.

இப்படியாக ப்ரபு குழந்தை விளையாட்டுகள் நிகழ்த்தினர். எல்லா நகர வாஸிகளுக்கும் ஸுகம் தந்தார். சில ஸமயம் மடியில் வைத்துக்கொண்டு சீராட்டுவாள். சில ஸமயம் தொட்டிலில் இட்டு தாலாட்டுவாள். கௌஸல்யா ப்ரேமையில் ஆழ்ந்திருந்தாள். அவளுக்கு ராத்ரி பகல் கழிவதே தெரியாது. பிள்ளையின் ப்ரேமை வசமாகி பால சரித்ரம் பாடிக்கொண்டு இருந்தாள்.

6. பால சரித ப்ரஸங்கம்.

ஒரு தடவை தாயார் பிள்ளையை நீராட்டினாள். அலங்காரம் எல்லாம் பண்ணி தொட்டிலில் சாய்த்துப் படுக்க வைத்தாள். தன் குலத்தின் இஷ்ட தேவதையைப் பூஜை பண்ண தானும் ஸ்நானம் பண்ணினாள். பூஜை பண்ணினாள். நைவேத்யம் படைத்தாள். சமையல் பண்ணிக்கொண்டிருந்த இடத்துக்கு தானே போனாள். திரும்பி வந்தாள்—பிள்ளை சாப்பிட்டுக் கொண்டிருந்தான். பயந்து போனாள். தொட்டிலில் விட்ட பிள்ளையிடம் போனாள். பிள்ளை தொட்டிலில் தூங்கிக்கொண்டு இருந்தான். மறுபடியும் திரும்பிப் போனாள். அதே குழந்தையைப் பார்த்தாள்! ஹ்ருதயம் நடுங்கலாயிற்று. தைர்யம் மிஞ்சவில்லை. இங்கும், அங்கும்-இரண்டு பிள்ளைகளைப் பார்த்தாள்! 'இது என் புத்தியின் ப்ரமை. பெரிய விஷயம் என்று எண்ணுகிறது!'

தாயார் குழப்பமடைந்திருக்கிறாள் என ராமன் பார்த்தான். புன்முறுவல் பூத்தான். இனிமையாக இருந்தது. தாயாருக்குத் தன் அத்புதமான, அகண்டமான ரூபம் காட்டினான். ஒவ்வொரு ரோமக்காலிலும் ஒரு கோடி ப்ரஹ்மாண்டங்கள் இருந்தன. எண்ணிலடங்காத ஸூர்யன், சந்த்ரன், சிவன், சதுரானன் [ப்ரஹ்மா] கண்டாள். அநேக மலைகள், நதிகள், ஸமுத்ரங்கள், பூமிகள், வநங்கள் கண்டாள். காலம், கர்மா, குணம், ஸ்வபாவம் கண்டாள். யாரும் இதுவரை கேட்டிராத எல்லாமும் கண்டாள். மிகவும் பய பீதியுடன் கைகளைக் கூப்பிக்கொண்டு நின்றிருந்த, எல்லாவிதமாகவும் ஆழ்ந்த, மாயாவைக் கண்டாள்.

மாயா ஆட்டி வைக்கும் ஜீவனைப் பார்த்தாள்.

அதைத் துண்டிக்கும் பக்தியைக் கண்டாள்.

மெய் சிலிர்த்தது. வாயிலிருந்து வார்த்தை வரவில்லை. கண்களை மூடிக்கொண்டாள். சரணங்களில் சிரம் படித்தாள்.

தாயார் ஆச்சர்யமடைந்திருப்பதைப் பார்த்தார் கராரி: சிசுரூபமாகிவிட்டார்.

ஸ்துதி பண்ணவும் முடியவில்லை. 'ஜகத் பிதாவை நான் பிள்ளையாக எண்ணி விட்டேனே!'.

தாயாரைப் பலவிதமாக ஹரி தேற்றினார். ''அம்மா, கேள்! இந்த விஷயம் எங்கும் சொல்லிவிடாதே''.

திரும்பத் திரும்ப கைகள் கூப்பி கௌஸல்யா வேண்டிக் கொள்கிறாள்: ''ப்ரபோ, இனி தங்கள் மாயா என்னை ஒருபோதும் வ்யாபிக்கக்கூடாது''.

ஹரி பலவிதமாக பால சரிதம் நிகழ்த்தினார். தன் தாஸர்களுக்கு பேரானந்தம் கொடுத்தார். கொஞ்ச காலம் ஆயிற்று. குடும்பத்தாருக்கு ஸுகம் தரும் நாலு ஸஹோதரர்களும் பெரியவர்களானார்கள்.

குரு சூடாகரண ஸம்ஸ்காரம் செய்தார்.

விப்ரர்கள் ஏராளமாக தக்ஷிணை அடைந்தார்கள்.

எல்லையிலாத மனோஹரமான அபாரமான சரிதம் நாலு ஸுகுமாரர்களும் நிகழ்த்திக்கொண்டு வளைய வந்தனர். மனஸ் கர்மா வசனத்துக்கு அப்பால்பட்ட அதே ப்ரபு தசரதனின் முற்றங்களில் வளைய வருகிறார்.

போஜன ஸமயத்தில் சக்ரவர்த்தி கூப்பிடுகிறார். ஆனால் பாலர்களின் கூட்டத்தை விட்டு வருவதில்லை. கௌஸல்யா கூப்பிடப் போகிறாள். ப்ரபு அவளுக்கு ஆட்டம் காட்டி இப்படியும் அப்படியும் போகிறார். வேதம் எவரை 'நேதி நேதி' என்கிறதோ, சிவனும் எவரது வரம்பைக் காணவில்லையோ, அவரைத் தாயார் 'பிடிக்க' ஓடிப்போகிறாள். புழுதி படிந்து, அதே வண்ணத்தால் திகழ வருகிறான். சிரித்து, சக்ரவர்த்தி மடியில் அமர்த்திக் கொள்கிறார். சாப்பிடுகிறான்—ஆனால் (பிள்ளையின்) சித்தம் சஞ்சலமாயிருக்கிறது. இங்குமங்கும் பார்க்கிறான். ஸமயம் கிடைத்தவுடன் ஓடிப்போகிறான். வாயில் தயிர் அன்னம் ஒட்டிக்கொண்டிருக்கிறது.

மிகவும் ஸரளமான, அழகான, பால சரிதத்தை சாரதா, சம்பு, சேஷன், ச்ருதி பாடியிருக்கின்றனர். எவர் மனஸ் அதில் மகிழவில்லையோ, விதாதா அவனை மோசம் பண்ணிவிட்டார்.

ஸஹோதரர்கள் குமாரர்களானார்கள். குரு, தாய், தந்தையர் அவர்களுக்கு யக்ஞோபவீதம் கொடுத்தார்கள்.

ரகுராயி குருகுலத்தில் படிக்கப் போனார்.

கொஞ்ச காலத்திலேயே எல்லா வித்யாக்களும் அடைந்து விட்டார். எவருடைய இயல்பான ச்வாஸம் நாலு வேதமுமோ, அந்த ஹரி 'படித்தார்' பெரிய வேடிக்கை! வித்யா, விநயம், குணம், சீலம்—களில் நிபுணர்களான எல்லாரும் 'ராஜாக்கள் விளையாட்டு'க்காகவே விளையாடினர். கையில் வில்லும் அம்பும்-மிக அழகு! ரூபத்தைப் பார்த்ததுமே சராசரம் மோஹித்துப் போகிறது. எந்தத் தெருவில் ஸஹோதரர்கள் விளையாடுகிறார்களோ அங்கு எல்லா ஸ்த்ரீ புருஷர்களும் திகைத்துப் போகிறார்கள். கோஸல புரத்தில் வஸித்த ஸ்த்ரீ புருஷர்கள், முதியவர்கள், குழந்தைகள் —எல்லாருக்கும் க்ருபாளு ராமன் ப்ராணனைவிடப் ப்ரியமானவன்.

ஸஹோதரர்களையும் தோழர்களையும் கூப்பிட்டுக் கூட்டிக் கொண்டு நித்தமும் வனத்தில் போய் வேட்டையாடினான். மநஸில் 'பவித்ரம்' எனக்கருதி ம்ருகங்களை மாய்த்தான். கொண்டுவந்து ராஜா தசரதனுக்கு காட்டினான். ராம பாணத்தால் மாய்ந்த ம்ருகம் சரீரம் விட்டு ஸ்வர்க்கம் சேர்ந்தது.

ஸஹோதரர்கள், தோழர்களுடன் சேர்ந்தே போஜனம் செய்வான். மாதா பிதா ஆக்ஞைப்படியே நடந்தான். நகர ஜனங்கள் எப்படி ஸந்தோஷப்படுவார்களோ அப்படியே நட்பில் இணைந்தான். வேதம், புராணம்—மனமொன்றிக் கேட்டான். தம்பிகளுக்கு விளக்கினான். ரகுநாதன் ப்ராத:காலத்தில் எழுந்தான். மாதா பிதா குருவுக்கு நமஸ்காரம் பண்ணினான். ஆக்ஞை பெற்று புரத்தின் கார்யங்களை கவனித்தான்.

இதெல்லாம் பார்த்து மஹாராஜா மந-மலர்ச்சியடைந்தான்

வ்யாபகன். கலா இலாதவன், இச்சை [விருப்பம்] இலாதவன்—ஜன்ம மிலாத[வன்], குண மிலாத[வன்] நாம-ரூப மிலாத[வன்]- பக்தர்களுக்காக அநேக விதமான உபமானமிலாத செயல்கள் நிகழ்த்துகிறான்.

7. ருஷி வருகை ப்ரஸங்கம்

[உமாவின் நாலாம் கேள்வி — ''ஜாநகி விவாஹம் எப்படி நடந்தது?''—இதற்கு உத்திரம்]

[பக்தர் காரணமாகவே ஜன்ம. பக்தர் காரணமாகவே சிசு சரிதம். பக்தர் காரணமாகவே பலவித சரிதம் நடந்து கொண்டிருக்கிறது]

இந்த சரிதம் எல்லாம் பாடிச் சொன்னேன். இன்னமும் மேலே கதையை மநஸ் ஒன்றிக்கேள்.

விச்வாமித்ரர் மஹாமுநிவர்; க்ஞாநி. சுப ஆச்ரமம் பார்த்து வநத்தில் வஸித்து வந்தார். அங்கே முநிவர் ஜபம், யோகம், யக்ஞம் செய்துவந்தார்கள். ஆனால் மாரீசன். ஸுபாஹுவிடம் மிகவும் பயந்திருந்தார்கள். யக்ஞத்தைப் பார்த்தாலே நிசாசரர் ஓடிவந்தனர். தொல்லை கொடுத்தார்கள். அதனால் முநிவர்களுக்கு துக்கமுண்டாகியது.

காதி-தநயன் [காதியின் புத்ரன் விச்வாமித்ரர்] மநஸில் 'ஹரி இல்லாமல் பாபி நிசிசரர் சாகமாட்டார்கள்' என்று தோன்றியது. ச்ரேஷ்டமான முநிவர் யோசித்தார். ப்ரபு பூமியின் பாரம் அகற்ற அவதாரம் எடுத்துக்கொண்டிருக்கிறார். இதே சாக்கில் [வ்யாஜமாக, நிமித்தமாக] பத தர்சனம் பண்ணலாம். வேண்டிக்கேட்டு இரு ஸஹோதரர்களையும் கூட்டி வருவேன். க்ஞானம், வைராக்யம், ஸகல குணங்களின் வீடான அந்த ப்ரபுவை கண்ணாரக் காண்பேன். பலவிதமாக மநோரதம் பண்ணிக்கொண்டே போக அதிக நேரமாகவில்லை. ஸரயூவில் ஸ்நாநம் பண்ணினார். ராஜவாயிலுக்கு வந்தார்.

முநிவர் வந்ததைக் கேட்டதும் ராஜா விப்ர ஸமாஜத்தைக் கூட்டிக்கொண்டு எதிர்கொண்டு போனான். தெண்டனிட்டான். முநிவருக்கு மரியாதைகள் செய்தான். கூட்டி வந்து தன் ஆஸனத்தில் அமர்த்தினான். சரணங்களை நீராட்டினான். மஹா பூஜை பண்ணினான். சொல்வான்; ''எனக்கு ஸமமாக பாக்யவான் இன்று இன்னொருவர் இல்லை!'' அநேக விதமாக போஜனம் செய்வித்தான்.

முநிவருக்கு ஹ்ருதயத்தில் மிக ஸந்தோஷம் உண்டாகியது.

பின்னர் ராஜா நாலு பிள்ளைகளையும் நமஸ்காரம் பண்ணச் சொன்னான்.

ராமனைப் பார்த்த முனிவருக்கு தேஹ உணர்வே போயிற்று. முக-சோபையைப் பார்த்து ஆழ்ந்திருந்தார். சகோரம் பூரண சந்த்ரனைப் பார்த்து மயங்கி இருப்பதுபோல ஆனார்.

மநஸில் ஸந்தோஷப்பட்டு ராஜா சொன்னான்: ''முனிவரே, தாங்கள் இது போல க்ருபை பண்ணியதே இல்லை. தாங்கள் வந்ததற்குக் காரணம் என்னவோ! அதைச் சொல்லுங்கள். அதை நிறைவேற்றுவதில் தாமதம் பண்ணமாட்டேன்''.

முனிவர் சொன்னார்: 'அஸுர ஸமூஹம் என்னைத் தொந்தரவு பண்ணுகிறது. ராஜன். நான் யாசிக்க வந்தேன். தம்பியுடன் ரகுநாதனை எனக்குக் கொடு. நிசிசர-வதம் ஆகி நான் நாதன் உள்ளவனுவேன். ராஜன், ஸந்தோஷமாகக் கொடு. மோஹம், அக்ஞானம் விடு. ப்ரபோ, உனக்கு தர்மமும் ஸுயசஸ்ஸும் உண்டாகும். அவர்களுக்கோ அளவிலாத நன்மை உண்டாகும்.

கொஞ்சம்கூட பிடிக்காத பேச்சைக் கேட்ட ராஜாவின் ஹ்ருதயம் நடுங்கியது. முகத்தின் களை போகலாயிற்று. ''கிழப் பருவத்தில் நாலு பிள்ளைகள் பிறந்தார்கள். விப்ர! நீங்கள் யோசித்துப் பேசவில்லை! பூமி, பசு, தநம், பொக்கிஷம் கேட்டுக் கொள்ளுங்கள். நான் என் எல்லாவற்றையும் ஸந்தோஷமாகக் கொடுக்கிறேன். தேஹத்தைவிட, ப்ராணனைவிட, ப்ரியமானது ஏதுமில்லை. முனிவரே அவைகளையும் இமைப்பதற்குள் தருகிறேன். எனக்கு எல்லா பிள்ளைகளும் ப்ராண ஸமமாக ப்ரியமானவர்கள்தான். இருந்தாலும், கோஸாயீ, ராமனைக் கொடுப்பது என்பது நடக்காது. மஹா கோர கொடிய ராக்ஷஸர்கள் எங்கே! இளைஞர்களான இந்தப் பிள்ளைகள் எங்கே!''

ப்ரேம ரஸம் தோய்ந்து ராஜா சொன்னதைக் கேட்ட முனிவருக்கு மநஸில் ஸந்தோஷமாயிற்று. அப்போது வஸிஷ்டர் பலவிதமாக விளக்கிச் சொன்னார். ராஜாவின் ஸந்தேஹம் அகன்றது.

மிகவும் பய பக்தியுடன் இரு பிள்ளைகளையும் கூப்பிட்டான். ஹ்ருதயத்துடன் அணைத்துக்கொண்டான். பலவிதமாக புத்திமதி சொன்னான். முனிவரிடம் சொன்னான். ''முனிவரே இந்த இரு பிள்ளைகளும் என் ப்ராணனின் ஸ்வாமி. தாங்கள் இவர்களின் தந்தை. அவ்வளவே!'' பலவிதமாக ஆசீர்வாதம் கொடுத்தான். ருஷியிடம் ஒப்படைத்தான்.

ப்ரபு தாயாரின் மாளிகைக்குப் போனார். பாதங்களில் தலை பணிந்துவிட்டுப் போனார். இரு வீரர்களும் புருஷ ஸிங்கங்கள். ஸந்தோஷமாக முநிவரின் பயம் போக்கப் போனார்கள். ஏனெனில் க்ருபா-ஸமுத்ரம்! மதிதீரர். ஸம்பூர்ண விச்வத்தின் காரணங்களுக்கும் அஸாதாரண காரணர்.

சிவந்த கண்கள், விசாலமான மார்பு, நெடிய புஜங்கள்' நீல-மேக, தமால மரம் போன்ற ச்யாம வண்ணம் சரீரம். அரையில் பீதாம்பரம், நல்ல தூணி; கைகளில் வில் அம்பு, ச்யாம சரீரனும், வெண்மை வண்ணனும் இரு ஸஹோதரகளும் அழகர்.

விச்வாமித்ரர் பெரிய நிதி அடைந்துவிட்டார்.

முநிவர் நினைக்கிறார்: எனக்குத் தெரிந்துவிட்டது. ப்ரபு ப்ரஹ்மண்ய தேவர். எனக்காக பிதாவை பகவான் விட்டு வந்தார்.

*வழியில் போய்க்கொண்டிருந்தபோது. முநிவர் தாடகாவைக் காட்டினார்-

இதைக் கேட்ட தாடகா கோபமாக ஓடிவந்தாள். (ராமன்) ஒரே பாணத்தால் அவளுடைய *ப்ராணனைக் கவர்ந்து விட்டான். இரங்கத் தக்கவளென தெரிந்துகொண்டு அவளுக்கு தன் பதம் அளித்தான்.

ருஷி தன் ஸ்வாமியை ஹ்ருதயத்துடன் தழுவிக்கொண்டார், வித்யா நிதிக்கு 'வித்யா' கொடுத்தார். அதன் [சக்தியால்] பசி இராது, தண்ணீர் தாஹமிராது. சரீரத்தில் அளவிலாத பலமும் தேஜஸூம் ப்ரகாசமாகும். எல்லா அஸ்த்ர சஸ்த்ரங்களும் ஸமர்ப்பித்து ப்ரபுவைத் தன் ஆச்ரமத்துக்குக் கூட்டிக் கொண்டு போனார். பக்தர்க்கு நன்மை பண்ணுபவர். அவருக்கு கிழங்கு—வேர்—கந்த—மூல—பழம் போஜனமாகக் கொடுத்தார்.

விடியற்காலம் ராமன் முநிவரிடம் சொன்னான்: ''நீங்கள் எல்லாரும் பயம் இல்லாமல் யக்ஞம் பண்ணுங்கள்''

முநிவர்கள் எல்லாரும் ஹோமம் பண்ணலானார்கள். தானே யக்ஞத்தைக் காத்து நின்றான்*

1. புரட்டாசி - ஐப்பசி (ஆச்வின்) க்ருஷ்ண பக்ஷ த்வாதசி.
2. அயோத்யாவிலிருந்து 1·5 யோஜனை (19·2 கி.மீ.)யில்தங்கல். மறுநாள் ஸரயூ-கங்கா-ஸங்கம: காமாஸ்ரமத்தில் தங்கல்.
3. சதுர்தசி அன்று.
4. ஆச்விந சுக்ல ப்ரதமை: ஸ்தாபனம். இரவு பகலாக 6 நாள் காவல். 6 ம்நாள் மத்தியானம் நிசிசரர் வந்தது.

இது தெரிந்ததும் கோபமிக்க நிசாசரன், முனிவர்களின் த்ரோஹி, மாரீசன், ஸேனை கூட்டிக்கொண்டு வந்தான். முனை இல்லாத பாணத்தால் ராமன் அவனை அடித்தான். ஸமுத்ரத்தில் 100 யோஜனை தூரம் கொண்டு வீழ்த்தியது. ஆக்நேய அஸ்த்ரத்தால் ஸுபாஹுவை கொன்றான். தம்பி லக்ஷ்மணன் அஸுர ஸேனையை அழித்தான். த்விஜர்களை பயமில்லாதவர் ஆக்குபவன், அஸுரர்களை அழித்தான்.

எல்லா தேவர்களும் முனிவர்களும் ஸ்தோத்ரம் பண்ண லானார்கள்.

ரகு ராயா அங்கே கொஞ்ச நாள் இருந்தான். விப்ரர்களுக்கு தயவு பண்ணினான். பக்திக்காக அவர்கள் அநேக புராண கதைகள் சொன்னார்கள். ப்ரபுவுக்கு எல்லாம் தெரியும், என்றாலும் சொன்னார்கள். முனிவர் பயபக்தியுடன் தெரிவித்தார்: ஹே ப்ரபோ, போய் ஒரு நிகழ்ச்சி பார்க்க வேண்டும்.''

தநுஷ் யக்ஞம் [வில் - வேள்வி] பற்றிக் கேட்டதும் ரகுகுலநாதன் ஸந்தோஷமடைந்தான். முனி-வரருடன் போனான்.

வழியில் ஓர் ஆச்ரமம் பார்த்தான். அங்கே பசு பக்ஷி ஜீவ ஜந்து ஏதுமே இல்லை! ஒரு பாறை இருந்தது. அதைப் பார்த்து ப்ரபு கேட்டார்.

முனிவர் விசேஷ வடிவத்தில் கதை முழுதும் சொன்னார்: கௌதமரின் பத்நி சாப வசப்பட்டு பாறை சரீரமாகக்கொண்டு, தைர்யம் கொண்டு, உங்கள் சரணத்தின் தூளியை எதிர்பார்த் திருக்கிறாள். ஆகையால், மதி தீர, க்ருபை பண்ணுங்கள்.

பவித்ரமாக்குபவர், சோக நாசனம் பண்ணுபவர், சரணம் பட்டவுடன் ஸத்யமான தபஸ்ஸின் பொதி தோன்றினாள்! பக்தர்க்கு ஸுகம் தரும் ரகுநாயகனை பார்த்த வண்ணமாக அவரெதிரே கைகள் கூப்பி நின்றாள். எல்லையிலாத ப்ரேமை. தன் வசமிழந்து நின்றாள். மெய் சிலிர்த்தது. வாயிலிருந்து பேச்சு வரவில்லை. மஹா பாக்யவதி! சரணங்களில் படிந்தாள். இரு கண்களிலிருந்தும் நீர் பெருகி தாரையாக வந்தது. மநஸில் (மெள்ள) தைர்யம் கொண்டாள். ப்ரபுவைத் தெரிந்து கொண்டாள். ரகுபதி க்ருபையால் அவளுக்கு பக்தி கிடைத்தது. மிக நிர்மல வாக்கால் ஸ்துதி ஆரம்பித்தாள்:

''ஜய! க்ஞானத்தால் அடையத்தக்க ரகுராயி, நான் அ-பாவநமான ஸ்த்ரீ [தூயவளல்ல]. ப்ரபு ஜனங்களை பவித்ர மாக்குபவர்; ராவணனின் பகைவர்;

பக்தர்க்கு ஸுகம் தருபவர். ராஜீவ லோசன; ஸம்ஸாரத்தின் பயத்தை அகற்றுபவ, நான் சரணமாக வந்தடைந்தேன். என்னைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள். முநிவர் எனக்குக் கொடுத்த சாபமும் நல்லதாயிற்று. அதை பரம அநுக்ரஹ ரூபமாக பண்ணுகிறேன்.

கண் நிரம்ப பவத்தை விடுவிக்கும் ஹரியின் தர்சனம் பண்ணினேன்.

சிவனும் இதையே லாபமாக எண்ணினார்.

ஹே ப்ரபோ! என் புத்தி மந்தமானது. நான் இதுதான் வேண்டுகிறேன்: வேறெதும் வேண்டாம்: தங்கள் பதகமல பராக ரஸத்தை என் மநஸ் ரூபமான வண்டு பருக அருளுங்கள்.

எந்த சரணங்களிலிருந்து பரம புநிதமான ஸுர ஸரிதா (கங்கா) தோன்றினாளோ, சிவன் அதை சிரமேல் கொண்டார். எந்த அதே சரண கமலத்தை அஜன் பூஜிக்கிறாரோ, அந்த சரணத்தை ஹரி என் சிரமேல் வைத்தார். இப்படி திரும்பத் திரும்ப சரணத்தில் பணிந்து கௌதமரின் பத்நி சென்றாள். எது மனஸுக்கு மிகவும் பிடித்ததோ அதே வரம் வேண்டினாள். பதி லோகத்துக்கு ஆனந்தம் நிரம்பப்பெற்று போனாள்.

ஹரி இத்தகைய தீன பந்து : ப்ரபு : காரணம் அவச்யம் இல்லாமலே க்ருபை பண்ணுபவர்.

துளஸிதாஸ் தன் மநஸ்ஸை சொல்கிறார். துஷ்ட கபட வலைகளை விட்டு அவரை பஜி.

ராமனும் லசிமனும் முநிவருடன் சென்றனர். எங்கே ஜகத்தைப் பவித்ரமாக்கும் கங்கா பாய்கிறதோ அங்கே போனார்கள்*. கங்கா எப்படி பூமிக்கு வந்ததோ, அந்தக் கதை எல்லாம் காதிஸூநு [விச்வாமித்ரர்] சொன்னார்.

ப்ரபு ருஷிகளுடன்கூட ஸ்நானம் பண்ணினார். மஹிதேவர்கள் [ப்ராஹ்மணர்] அநேகவிதமான தானங்கள் அடைந்தனர். முநிவர் கூட்டத்திற்கு உதவி பண்ணியவர்கள் ஸந்தோஷம் அடைந்து போனார்கள். சீக்கிரமே விதேஹ ராஜாவின் நகரத்தின் அருகே வந்தனர்.

---

* ஏகாதசி அன்று கங்கைக்கரை அடைந்தனர். ராத்ரி விழித்திருந்து 'கங்காவதரண' கதை கேட்டனர். மூன்றாம் நாள் த்வாதசி மிதிலா அருகே சேர்ந்தனர்.

ஸீதா ஸ்வயம்வரம்

புரத்தின் அழகு பார்த்து ராமனும் தம்பியும் மிகவும் ஸந்தோஷப்பட்டனர். இறங்கு கிணறுகள், கிணறுகள், நதிகள், குளங்கள், ஏராளமாயிருந்தன. அவற்றின் ஜலம் அம்ருதம் போலிருந்தது. மணிகளிழைத்த படிகள். தேன் அருந்தி மதியிழந்த அழகான வண்டுகள் உரலின, அநேகவிதமான அழகான பக்ஷிகள் ஆர்த்தன, வண்ண வண்ணமான கமலங்கள் மலர்ந்திருந்தன. குளுமையான, மணமுள்ள காற்று தவழ்ந்து வந்த்து. பூங்கா, தோப்பு, வநம், ஏராளமான பக்ஷிகள் வஸிக்குமிடங்கள், புரத்தின் நாலாபக்கமும் பூத்து, பழுத்து, துளிர்த்திருந்தன. மிக அழகாயிருக்கின்றன.

நகரத்தின் அழகு சொல்லி மாளாது. எங்கே போ, அங்கே மநஸ் மயங்கி நின்றுவிடுகிறது.

அழகான கடைவீதி. விசித்ர மாடிகள். மணிமயமாயிருந்தன. விதி தன் கையாலேயே அமைத்தானோ என்று தோன்றும்படி இருந்தது.

தனவான்கள், சிறந்த வணிகர், குபேரனுக்கு நிகராக எல்லாப் பொருள்களும் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள். சதுக்கங்களும், அழகான தெருக்களும் மநஸ் மகிழும்படி, எப்போதும் நல்ல வாஸனை தெளிக்கப்பட்டிருந்தன.

எல்லாருடைய வீடுகளும் மங்கள மயமாயிருந்தன. அவைகளில் சித்திரம் வரையப்பட்டிருந்தது. காமதேவன் தானே சித்ரகாரனாக அவைகளை வரைந்தானோ என்று தோன்றும்படி [அவ்வளவு அழகாக] இருந்தது.

புரத்தின் ஸ்த்ரீ-புருஷர் அழகு; சுத்தம்; ஸாதுக்கள்; தர்மசீலர்; க்ஞானிகள்; குணவான்கள்.

ஜநகன் வஸித்த இடம் உபமானம் சொல்லமுடியாததாயிருந்தது. அங்கத்திய விலாஸத்தைப் பார்த்து தேவர் திகைத்துப் போயினர். கோட்டையைப் பார்த்தால் சித்தம் திகைத்துப்போகும். புவனங்கள் அனைத்தின் அழகும் அங்கே திரட்டி வைத்திருந்தால் போலிருந்தது.

மணிகள் நுட்பமான சிக்கலான வடிவங்களிலுள்ள பட்டுகள் கட்டப்பட்ட வெண் வண்ண மாளிகை ஸிய வஸித்த அழகு அரண்மனையாம் அதன் அழகை எப்படி வர்ணிக்கமுடியும்? அழகான வாயில்களிருந்தன. அவைகளுக்கு வைரமிழைத்த கத்வுகள்.

ராஜாக்களின் கூட்டம், நடர். மாகதர், பாடகர்களின் கூட்டம்

பெரிய பெரிய குதிரை லாயங்கள், யானைக் கவனிகள்; அமைக்கப்பட்டிருந்தன. எப்போதும் யானை, குதிரை, ரதங்கள் நிறைந்திருந்தன.

போர் வீரர், மந்த்ரிகள், அநேக ஸேநாபதிகள் இருந்தனர். அவர்களின் வீடும் மஹாராஜாவின் அரண்மனை போலிருந்தன.

புரத்தின் வெளியே குளம், நதிகளின் அருகே அங்கங்கே அநேக ராஜாக்கள் தங்கியிருந்தனர்.

இணையிலாத மாந்தோப்பு ஒன்று பார்த்தார்கள். எல்லாப் படியாலும் அழகாயிருந்தது. வேண்டிய எல்லாமிருந்தன. கௌசிகர் *''இந்த இடம் எனக்குப் பிடித்திருக்கிறது. ரகுவீர, புத்திமானே, இங்கேயே இருப்போம்'' என்றார்.

'மிகவும் சரி, நாத!' என்று க்ருபா நிகேதன் முநிவர் குழாத்துடன் * தங்கினான்.

மஹாமுநி விச்வாமித்ரர் வந்திருக்கிறார் என மிதிலாதிபதிக்கு செய்தி கிடைத்தது. பவித்ரமான மந்த்ரி, ஏராளமான போர் வீரர், ச்ரேஷ்டமான பூஸுரர் [ப்ராஹ்மணர்], குரு. ஜாதி ஜனங்கள் எல்லாரையும் திரட்டிக்கொண்டு முநிநாயகரை ஸந்திக்க ஸந்தோஷமாக ராஜா போனான். சரணத்தில் நெற்றி வைத்து நமஸ்காரம் பண்ணினான்.

முநிநாதர் ஸந்தோஷமடைந்து ஆசீர்வாதம் பண்ணினார்.

[ராஜா] மரியாதையுடன் விப்ர ஸமூஹத்துக்கு வந்தனம் பண்ணினான். தனக்கு இது மஹா பாக்யம் எனக் கருதி ஆனந்தப் பட்டான்.

திரும்பத்திரும்ப குசலம் விசாரித்து விச்வாமித்ரர் ராஜாவை அமரச் சொன்னார். அதே ஸமயம் இரு ஸஹோதரர்களும் வந்தனர். பூங்காவைப். பார்க்கப் போயிருந்தார்கள். ச்யாம, வெண்ணிறமான அழகு; காளைப் பருவம்; கண்களுக்கு ஸுகம் தருவதாக விச்வத்தின் சித்தத்தைக் கவர்வதாக இருந்தது. ரகுபதி வந்ததும் எல்லாரும் எழுந்து நின்றார்கள். விச்வாமித்ரர் கூப்பிட்டு அருகில் அமர்த்திக்கொண்டார். இரு ஸஹோதரர் களையும் பார்த்து எல்லாரும் ஸுகமடைந்தார்கள். கண்களில் நீர் திரண்டது மெய் சிலிர்த்தது.

---

* 1, 2 த்ரயோதசி அன்று

மனோஹரமான, இனிமையான மூர்த்தி [வடிவம்]யைப் பார்த்து ராஜா விதேஹன் விசேஷமாக வி-தேஹனானான். [மெய் மறந்தான்]

தன் மநஸ் ப்ரேமையில் ஆழ்ந்திருப்பதை ராஜா உணர்ந்தான்.

விவேகத்துடன் தைர்யம் கொண்டான்.

முநிவர் பாதத்தில் நமஸ்காரம் பண்ணினான். தழுதழுக்க கம்பீரமாகச் சொன்னான்: ''நாத, சொல்லுங்கள்,—

இந்த இரு அழகான பிள்ளைகளும் முநிகுல திலகங்களா?
ராஜகுல பாலகர்களா?

'நேதி' என்று வேதங்கள் பாடும் ப்ரஹ்மம் தானே இரு வேஷங்கள் ஏந்தி வந்திருக்கிறதோ?

என் மநஸ் ஸ்வபாவமாகவே வைராக்யரூபமுள்ளது. அது சந்த்ரனைப் பார்த்து சகோரம் மயங்கிப்போவது போல இவர்களைப் பார்த்து திகைத்திருக்கிறது.

ஆகையால் நான் ஸத்யமாகக் கேட்கிறேன்:

சொல்லுங்கள். ஒளிக்கவேண்டாம்.

இவர்களைப் பார்த்துக்கொண்டே மிகவும் ஆசையில் திளைத்து மநஸ் - ப்ரஹ்ம ஸுகத்தைத் தானே கைவிட்டுவிட்டது.

முநிவர் சிரித்தார்: ராஜன், நீ சொன்னது சரி. உன் பேச்சு ப்ரமாணமில்லாமல் போகாது [அதை நிரூபிக்கமுடியும்]. ப்ராணிகளுக்கே இவர்கள் ப்ரியமானவர்கள்''—

—இதைக்கேட்டு ராமன் மநஸுக்குள் சிரித்துக்கொண்டான்.

—''இவர்கள் ரகுகுலமணி தசரதனின் பிள்ளைகள். என் நன்மைக்காக இவர்களை ராஜா அனுப்பினான்.

''ராமன், லக்ஷ்மண இரு ஸஹோதரர்களும் ரூப-சீல-குணங்களின் இருப்பிடம். இவர்கள் அஸுரர்களைப் போரில் ஜயித்து மக [யாக]த்தை ரக்ஷித்தார்கள். இதற்கு ஸம்ஸாரமே ஸாக்ஷி.

''முனிவரே! தங்கள் சரணங்களைப் பார்த்ததில் என் புண்யத்தின் பெருமையைச் சொல்லத் தரமில்லை. இந்த அழகான ச்யாம, வெண்வண்ண ஸஹோதரர்கள் இருவரும் ஆனந்தத்துக்கே ஆனந்தம் தருபவர். இவர்களிடை உள்ள அழகான ப்ரீதி எப்படி பவித்ரமானது, மனதார திகழ்வது என்று சொல்ல முடியாது. நாத கேளுங்கள். இவர்கள் ஸ்நேஹம் ப்ரஹ்மத்தைப்போல இயல்பானது'' என்று ஸந்தோஷமாக விதேஹ ராஜா சொன்னான். ப்ரபுவைத் திரும்பத் திரும்பப் பார்க்கிறான். மெய் சிலிர்க்கிறது. மனஸில் உத்ஸாஹம் அதிகமாகிறது. முனிவரைப் பாராட்டி, பாதத்தில் தலை தாழ்த்தி விட்டு, ராஜா அவர்களை நகரத்துக்கு அழைத்துக்கொண்டு போனான்.

அழகான வீடு - எல்லாக் காலத்திலும் ஸுகம் தர வல்லது. அங்கேயே இவர்கள் இருக்க ராஜா ஏற்பாடு பண்ணினான். பூஜை பண்ணினான் - எல்லாவித பணிவிடைகளும் செய்தான். விடைபெற்றுக்கொண்டு போனான்.

ருஷிகளுடன் கூட ரகு வம்ச மணி போஜனம் பண்ணினான். அவர்களுடனேயே இளைப்பாறினான். பின்னர் தம்பியுடன் போய் உட்கார்ந்தான். பகல் ஒரு ஜாமம் எஞ்ஜியிருந்தது. போய் ஜநகபுரியைப் பார்க்கலாம் என லகந் ஹ்ருதயத்தில் விசேஷ ஆவல் உண்டாகியது, [ஆனால் சொல்ல] ப்ரபுவிடம் பயம்; முனிவரிடம் தயக்கம். ஆகையால் வெளியிடவில்லை. மநஸுக்குள் சிரித்துக்கொண்டான்.

தம்பியின் மநஸின் போக்கை ராமன் தெரித்துகொண்டான். பக்தர்மேல் அன்பு அசைந்து ஆடியெழுந்தது. மிகப்பணிவுடன், தயக்கத்துடன் குருவின் ஆக்ஞை பெற்று ''நாத! லக்கனுக்கு ஜநகபுரி பார்க்க ஆசை. ஆனல் ப்ரபுவிடம் தயக்கம். பயம். வெளியிடவில்லை. எனக்கு தங்கள் உத்திரவு கிடைத்தால் நகரத்தைக் காட்டிவிட்டு சீக்கிரமே கூட்டி வருவேன்'' என்றான்.

முனிவர் இதைக்கேட்டு ப்ரேமையுடன் ''ராம, நீதியை நீ ஏன் ரக்ஷிக்கமாட்டாய்! [கட்டாயம் ரக்ஷிப்பாய்]. தர்மத்தின் அணையை ரக்ஷிப்பவன் நீ. ப்ரேமையின் வசமாகி ஸேவகர்களுக்கு ஸுகம் தருகிறாய். நீங்கள் இருவரும் ஸுக நிதானம். போய் நகரத்தைப் பார்த்துவிட்டு வாருங்கள். அழகு முகங்களைக் காண்பித்து எல்லாரும் கண்கள் பெற்ற பலன் அளித்து வாருங்கள்'' என்றார்.

முனிவரின் பத கமலத்தில் வந்தனம் பண்ணிவிட்டு ஸம்ஸாரத்தின் கண்களுக்கு ஸுகம் தரும் ஸஹோதரர்களிருவரும் போனுர்கள்.

எல்லையிலாத அழகைப் பார்த்து பிள்ளைகள் சேர்ந்து கொண்டார்கள். அவர்களின் மனஸும் கண்களும் மயங்கி விட்டன:

அரையில் பீதாம்பரம். அதோடு அம்புத்தூணி கட்டி யிருந்தது. கைகளில் அழகான வில், அம்பு விளங்கின. சரீரத்துக்கு ஒத்தபடி சந்தனக் கீற்று, ச்யாமள வெண்வண்ண ஜதை; சிங்கம் போன்ற தோள்; விசால புஜம்; மார்பில் மாபெரு கஜ-முத்து ஹாரம் திகழ்ந்தது. அழகான செங்கமலக் கண்கள்; முகமோ சந்த்ரன் போன்று மூன்றுவித தாபங்களையும் அழிக்கவல்லது. காதுகளில் தங்கப்பூக்கள் ஸோபை கொடுக் கின்றன. அழகான பார்வை. திலகக் கோடுகள் மின்னல்போல் மின்னின.

அழகான தலையில் சௌதநீ [4 துண்டுகளால் பண்ணிய தொப்பி], கருமையான சுருள்முடி சோபித்தது. நகத்திலிருந்து சிகை வரை ஸஹோதரர் இருவரும் அழகு! எந்த அங்கம் எப்படி சோபிக்கவேண்டுமோ அப்படியே இருந்தது.

'நகரத்தைப் பார்க்க ராஜகுமாரர்கள் வந்திருக்கிறுர்கள்' —இந்த ஸமாசாரம் புரவாஸிகளுக்குக் கிடைத்தது. வீடு, வேலைகளை விட்டு ஓடினுர்கள் — அது தரித்ரன் கஜானுவைக் கொள்ளை அடிக்க ஓடுவதுபோலிருந்தது.

இயல்பான அழகான இரு ஸஹோதரர்களையும் பார்த்து அவர்கள் கண்களின் பலன் அடைந்து ஸுகி ஆனுர்கள். யுவதிகள் வீட்டு ஜன்னல்களில் ஒட்டிக்கொண்டு ராம ரூப அநுராகத்தால் பார்க்கிறுர்கள். அவர்கள் தங்களுக்குள் ப்ரீதியுடன் சொல்கிறுர்கள்: இவர்கள் ஒருகோடி காமனின் அழகை ஜயித்துவிட்டார்கள். ஸுர, நர, அஸுர, நாக முனிவர்களில் இந்த மாதிரி ஸோபை எங்கும் கேட்டதும் இல்லை. விஷ்ணுவுக்கு நாலு கைகள். விதிக்கு நாலு முகம். புராரிக்கு ஐந்து முகம்; அதோடு பயங்கர ரூபம். இந்த அழகுடன் ஒப்பிடக்கூடிய வேறு தேவதையே இல்லை. காளைப் பருவம், பரம சோபையின் இடம்; ச்யாம - வெண் வண்ண சரீரம்; ஸுகத்தின் இருப்பிடம். இவர்களுடைய ஒவ்வொரு அங்கத்திலும் ஒருகோடி காமதேவர் காணிக்கையாவர். 'ஸகி இந்த ரூபத்தைப் பார்த்து மோஹித்துப் போகாதவர் சரீரமுள்ளவர்களில் யார் இருக்கிறுர் சொல்.'

ஒரு ஸகி இனிமையாக மென்மையாகப், ப்ரேமை ததும்பச் சொல்வாள்: ''அன்பே, நான் கேள்விப்பட்டதைச் சொல்கிறேன் கேள். இவர்களிருவரும் தசரதனின் பிள்ளைகளாம். ஹம்ஸக் குஞ்சு போன்ற ஜதை! கௌசிக முனிவரின் மகத்தைக் காத்தவர்கள். போர்க்களத்தில் நிசாசரர்களைக் கொன்றார் களாம். ச்யாம சரீரம், அழகான கமலம் போன்ற கண்கள் உள்ளவர்—மாரீசன், ஸுபாஹு இருவருடைய மதத்தை மாய்த்தவர், ஆனந்தத்தின் களஞ்சியம், கௌஸல்யாவின் பிள்ளை. இவர் பெயர் ராமன். வில் - அம்பு கைகளில் ஏந்தி யிருப்பவர். வெண் வண்ண சரீரம், அழகான ரூபம், அரையில் தூணி கட்டி, கையில் வில் அம்பு உள்ளவர், ராமன் பின்னாலேயே வருபவர் பெயர் லக்ஷ்மணன். இவர் ராமனின் தம்பி. ஸகி, கேள். இவர் தாயார் ஸுமித்ரா. விப்ரர் கார்யம் முடித்து, ஸஹோதரர்களிருவரும் வழியில் முனிவர் மனைவியின் சாப விமோசனம் அளித்து தநுஷ் யக்ஞம் காண வந்திருக்கிறார்கள்.''

இதைக் கேட்டு எல்லா தோழிகளும் மலர்ச்சியடைந்தார்கள்.

ராமனின் அழகைப் பார்த்து ஒரு ஸகி சொல்வாள்: இந்த வரன் ஜாநகிக்கு ஏற்றவர். ஸகி, ராஜா இவரைப் பார்த்தா ரானால், ப்ரதிக்ஞையைக்கைவிட்டு கட்டாயம் இவருக்கு விவாஹம் பண்ணிக் கொடுப்பார்.

ஒருத்தி சொன்னாள்; ''ராஜாவுக்கு இவர் யார் என்று தெரிந்தாயிற்று. முனிவருடன் இவருக்கு மரியாதை மிக ஸன்மானம் பண்ணியாயிற்று. ஆனால், ஸகி, ராஜா ப்ரதிக்ஞையை விடமாட்டார். விதிவசமாகிவிட்டார். பிடிவாதமாக அவிவேகத்தைத் தன்னுடன் (கூட்டுச்) சேர்த்துக் கொண்டிருக்கிறார்.

இன்னொருத்தி சொன்னாள் ''விதாதா நல்லவரானால், எல்லாருக்கும் உசிதமான பலன் கொடுப்பவர் என்று கேள்விப் படுகிறோம்; அப்படியானால், தோழி, ஜாநகிக்கு இதே வரன் கிடைக்கும். தோழி, இதில் ஸந்தேஹமில்லை. விதிவசமாக [இந்த் இருவரும்] இந்த ஸம்பந்தம் ஆகி இணைந்துவிட்டால் எல்லாரும் வினைப்பேறு பெற்றவராவர். ஸகி, ஆகையால் எனக்கு எல்லை இலாத ஆவல். இந்த சாக்கில் அடிக்கடி இங்கு வருவாராகும். இல்லாவிடில், ஸகி, நமக்கு இவர் தர்சனம் துர்லபமாகும் [கிடைத்தற்கரிதாகும்]. முன் ஜன்மத்தின் பெரிய புண்யமிருந்தால்தான் இந்த ஸம்பந்தம் ஏற்படும்.

இன்னொருத்தி சொல்வாள்: ''ஸகி நீ சொன்னது சரி. இந்த விவாஹத்தில் எல்லாருக்கும் மிகவும் நல்லது இருக்கிறது.''

இன்னொருத்தி சொல்வாள்: ''சங்கர தநுஸ் மிகக் கடினமானது. ச்யாமள வண்ணர் மிக மென்மையானவர். இன்னம் சின்னப்பிள்ளை. அன்பே, எல்லாவிதத்தில் பார்த்தாலும் கஷ்டமாயிருக்கிறது.''

இதைக்கேட்டு இன்னொருவள் இனிமையாகச் சொல்வாள்: ''ஸகி, இவரைப்பற்றி ஒவ்வொருவர் சொல்கிறார்—இவர்க்கு மஹா வல்லமை இருக்கிறதாம். பார்க்கத்தான் சின்னவர். எவருடைய பதபங்கஜ தூளி பட்டதாலேயே பாறையாயிருந்த, மாபெரும் பாபம் பண்ணிய அஹல்யா கடைத்தேறினளோ, அவர் சிவதநுஸை இறுக்காமலா விடுவார்? இப்படி நம்பிக்கையை மறந்துங்கூட கைவிடாதே. எந்த விரஞ்சி ஸீயவைப் படைத்து அழகாகச் செய்தாரோ, அவரே யோசித்துத்தான் ச்யாமள வரனையும் படைத்திருக்கிறார்.

இவள் சொன்னதைக்கேட்டு எல்லாரும் ஸந்தோஷம் அடைந்தார்கள். ஸுகமடைந்தார்கள். அப்படியே ஆகக்கடவது என்றார்கள். அழகான முகமுள்ள[வர்கள்], அழகான கண்கள் உள்ள, யுவதிகள், ஹ்ருதயத்தில் ஸந்தோஷப்படுகிறார்கள். புஷ்பமாரி பொழிகிறார்கள். எங்கெங்கே ஸஹோதரர்கள் இருவரும் போகிறார்களோ, அங்கங்கு பரமானந்தம் உண்டாகிறது.

ஸஹோதரர்களிருவரும் புரத்தின் கிழக்கு பாகத்தில் போனார்கள். அங்கே தநுஷ் யக்ஞத்துக்காக அரங்கு தயார் பண்ணியிருந்தார்கள். மிகவும் பரந்த அழகான தளம் போட்டிருந்தது. நிர்மலமான அழகான வேதியும் அமைத்து இருந்தது. நாலா பக்கமும் தங்க மஞ்சங்கள் பெரிது பெரிதாக இருந்தன. அதில் ராஜாக்கள் உட்காருவார்கள். அதன் பின்னே பக்கத்திலேயே நாலா பக்கமும் இன்னமொரு மஞ்ச மண்டலமிருந்தது. மஞ்சம் முதலியன மாதிரி தநுஷ் யக்ஞ சாஸ்த்ரத்தில் சொல்லியபடி அமைந்திருந்தன. சில உயரமாக, எல்லாவிதத்திலும் அழகாக இருந்தன. அவைகளில் நகர மக்கள் உட்கார்வார்கள். அவைகளினருகே விசாலமாக அழகாக பல வண்ணங்களில் ப்ரகாசமான க்ருஹங்கள் அமைக்கப்பட்டு இருந்தன. அங்கே ஸ்த்ரீகளெல்லாரும் தகுந்தபடி, அவரவர் குலத்துக்கு இசைய, இடங்களில் அமர்ந்து தநுஷ் யக்ஞம் பார்க்க முடியும்.

புரத்தின் பிள்ளைகள் இனிமையாகப் பேசிப் பேசி பயபக்தியுடன் ராம லக்ஷ்மணருக்கு அமைப்பைக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். எல்லாப் பிள்ளைகளும் இந்தச் சாக்கில் ப்ரேமை வசமாகி அவர்களுடைய சரீரத்தைத் தொட்டு மெய் சிலிர்க்கிறார்கள். ஸஹோதரர் இருவரையும் பார்த்து மநஸில் ஸந்தோஷமடைகிறார்கள். ராமன் எல்லாப் பிள்ளைகளையும் ப்ரேமை வசமாகி இருப்பதைப் பார்த்தார். ப்ரீதியுடன் வீடுகளைப் புகழலானார். அவரவர் ருசிக்கேற்ப எல்லாரும் அழைக்கிறார்கள். அன்புடன் ஸஹோதரர் இருவரும் போகிறார்கள்.

அழகாக, இனிமையாகப் பேசி, ராமன் தம்பிக்கு அமைப்புகளைக் காட்டுகிறான்.

எவருடைய ஆக்ஞையால் மாயா ஒரு *நிமிஷ[த்தின்] கால அளவின் ஓரம்சத்தில் ப்ரஹ்மாண்ட ஸமூஹங்களைப் படைத்துத் தள்ளுகிறாளோ, பக்திக்காக அதே தீனதயாளன் திகைத்து, தநுஸ் யக்ஞ சாலையைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்.

வேடிக்கை பார்த்துவிட்டு குருவிடம் போனார்கள், தாமதமாகிவிட்டதே என்று பயப்படுகிறார்கள்.

எவரிடமுள்ள பயத்தால் பயமே பயப்படுகிறதோ, அவரே பஜனையின் வல்லமையைக் காட்டிக்கொண்டிருக்கிறார். ம்ருதுவாக, மதுரமாக, அழகாகப் பேசி பாலகர்களுக்கு பெருமை காட்டுகிறார்.

ஸஹோதரர்களிருவரும் மிகவும் பணிவுள்ளவர்கள். பயம், ப்ரேமை, தயக்கத்துடன் குருபத பங்கஜத்தில் சிரம் தாழ்த்துகிறார்கள். ஆக்ஞை பெற்று அமர்ந்தார்கள்.

ராத்ரி வந்ததும் முநிவர் ஆக்ஞை கொடுத்தார். எல்லாரும் ஸந்த்யா வந்தனம் பண்ணினார்கள். புராணக் கதைகள், இதிஹாஸங்கள் சொல்லிக்கொண்டே அழகான இரவின் இரு ஜாமங்கள் கழித்தார்கள்.

முநிவரர் போய்த் தூங்கலானார். ஸஹோதரர்களிருவரும் ப்ரேமையுடன் குரு சரணங்களைப் பிடித்துவிட்டனர். எவருடைய சரண ஸரோருஹத்தை வேண்டி விரக்த ஜனங்கள் அநேக விதமாக ஜபம் யோகம் பண்ணுகிறார்களோ அந்த இரு ஸஹோதரர்களுமே ப்ரேமையால் ஜயிக்கப்பட்டார்கள்போலும்!

---

* 6 லவம் — 1 நிமேஷம் — கண் இமைக்கும் நேரம்.

ப்ரேமையுடன் குரு-பத-கமலங்களைப் பிடித்து விடுகிறார்கள். மீண்டும் மீண்டும் குரு ஆக்ஞை கொடுத்தார்.

அப்புறம் ரகுவரன் போய்ப் படுத்துக்கொண்டான்.

உளத்தில் பயம், ப்ரேமையுடன் சரணங்களை மார்பில் பதித்துக்கொண்டு லகநு (லக்ஷ்மணன்) பிடித்து விடுகிறான். மீண்டும் மீண்டும் ''தம்பி, போய்த்தூங்கு'' என்று ப்ரபு சொல்கிறார்:

பதகமலங்களை மநஸில் அணிந்துகொண்டு போகிறான்.

ராத்ரி கழிந்தது. அருண சிகா [கோழி] கூவல் கேட்டது. லகநு (லக்ஷ்மணன்) எழுந்தான். ஜகத்பதி, க்ஞாநி, ராமு குருக்கு முன்னரே எழுந்தான். சௌசம் பண்ணிக்கொண்டு ஸ்நாநம் பண்ணினர். நித்ய கர்மா முடித்தனர். முநிவருக்கு நமஸ்காரம் பண்ணினர். ஸமயம் உணர்ந்து முநிவரின் உத்தரவு பெற்று இரு ஸஹோதரும் புஷ்பம் எடுக்கச் சென்றனர். ராஜாவின் சிறந்த பூங்காவுக்குப் போனார்கள்.

வஸந்து ருது அங்கே மயங்கித் தங்கிவிட்டிருப்பதைப் பார்த்தனர். மநஸைக் கவரும் அநேக மரங்கள் இருந்தன. அவைகளின்மேல் வண்ண வண்ணமான கொடிகள் பற்றிப் படர்ந்திருந்தன. கொடி வீடு போல் அமைந்திருந்தன.

புத்தம் புதிய தளிர், பூ, கனிகள் திகழ்ந்தன. தம் ஸம்பத்தால் கல்ப வ்ருக்ஷத்தையும் வெட்கச் செய்தன. சாதகம். கோகிலம், கிளி, சகோரம் கூவின. மயில் ஆடிக்கொண்டிருந்தது, நட்ட நடுவே அங்கே குளம் அழகாயிருந்தது. விசித்ர மணி இழைத்த் படிக்கட்டுகள். விமலமான ஜலம். பல வண்ணக் கமலங்கள் மலர்ந்திருந்தன. ஜல பக்ஷிகள் கூவின. வண்டினம் உரலின.

பூங்காவையும் குளத்தையும் பார்த்து ப்ரபுவும் தம்பியும் ஸந்தோஷமாயினர்.

ராமனுக்கு ஸுகம் தரும் [குளப்] பூங்கா மிகவும் அழகாய் இருந்தது.

நாலா பக்கமும் பார்த்தனர். காவலரிடம் கேட்டு தளமும் புஷ்பங்களும் எடுக்கப்போனார்கள்.

அதே ஸமயம் ஸீதாவும் அங்கே வந்தாள். கிரிஜா பூஜைக்காக தாயார் அனுப்பியிருந்தாள். உடன் புத்திசாலி களான இனிய ஸகிகள் மநஸ் கவரும் குரலில் பாடிக்கொண்டு இருந்தனர்.

கோயில் குளத்தினருகே அழகாயமைந்திருந்தது. அதை வர்ணிக்க முடியாது. பார்த்ததும் மநஸ் மோஹமடைந்தது.

ஸகிகளுடன் குளத்தில் ஸ்நாநம் பண்ணினுள். ஸந்தோஷ மநஸுடன் கௌரி கோயிலுக்குள் போனுள். மிகவும் அநுராகத் துடன் பூஜை பண்ணினுள். தன் ரூபத்துக்கு நிகரான அழகான வரன் வேண்டினுள்.

ஒரு ஸகி ஸீதாவை விட்டு பூங்காவைக் காணப் போயிருந்தாள். அவள் போய் இரு ஸஹோதரர்களையும் கண்டாள். ப்ரேமையால் தன் வசமிழந்து ஸீதாவிடம் வந்தாள்.

அவளுடைய நிலையை ஸகிகள் பார்த்தனர். மெய் சிலிர்த் திருந்தது. கண்களில் நீர் நிரம்பியிருந்தது. எல்லாரும் கனி வுடன் 'ஸந்தோஷத்தின் காரணம் சொல்!' என்று கேட்டனர்.

'பூங்கா பார்க்க இரு ஸஹோதரர் வந்திருக்கின்றனர். நல்ல காளைப்பருவம். எல்லா விதத்திலும் அழகு. ச்யாமள, கௌர [வெண்ணிற]ம்! எப்படி சொல்லி வர்ணிப்பது! குரலுக்குக் கண் இல்லை! கண்ணுக்குக் குரலில்லை!

இதைக்கேட்டு இனிய ஸகிகளும் ஸந்தோஷமடைந்தனர். ஸிய (ஸீதா) ஹ்ருதயத்தில் எல்லையிலாத ஆவல் என தெரிந்து கொண்டனர்.

ஒருத்தி சொன்னுள்: அடி, இது அந்த ராஜகுமாரர்கள்தான்! நேற்று முநிவர் உடன் வந்திருப்பதாகச் சொன்னுர்களே — தம் ரூபத்தில் சொக்குப்பொடி போட்டுக்கொண்டு நகர ஸ்த்ரீ-புருஷர்களை மயக்கி தம் வசமாக்குகிறுர்களே - எல்லாரும் எங்கும் வர்ணிக்கிறுர்களே- பார்க்கவேண்டியவர்கள்! கட்டாயம் பார்க்கவேண்டும்.

அவர்கள் சொன்னது ஸிய (ஸீதா)க்கு மிகவும் பிடித்தது. பார்க்க கண்கள் ஆவலாயின. அந்த ப்ரிய ஸகியையே முன்னிட்டுக்கொண்டு போனுர்கள். பழய ப்ரீதி யாருக்கும் தெரியாது. நாரதர் சொன்னதை நினைத்துக்கொண்டாள். பவித்ர ப்ரீதி உண்டாகியது, பயந்துவிட்ட மான்குட்டிபோல நாலா பக்கமும் பார்க்கலானுள்.

கங்கணம் தண்டை சிலம்புகளின் 'ஜல்'ஜல் எனும் ஒலியைக் கேட்டு ஹ்ருதயத்தில் ஆராய்ந்து ராமன் லகனிடம் (லக்ஷ்மண னிடம்) சொல்வான்: மதனன் துந்துபி முழக்குகிறுன் போல் இருக்கிறது - விச்வ விஜயம் கொள்ள ஆசைப்படுகிறுன் போலும்! என்று சொல்லி, திரும்பி அந்தப் பக்கம் பார்த்தான்.

ஸிய(ஸீதா)வின் முக சசி *உதித்தது. கண்கள் சகோரமாயின. அழகான கண்கள் திகைத்து நின்றன. நிமி வெட்கத்தால் இமைக்க மறந்துவிட்டான். ஸீய சோபை பார்த்து ஸுகமாகியது. ஹ்ருதயத்தில் புகழலானுன். ஆனுல் ஸந்தோஷத்தால் சொல் எழவில்லே. விரஞ்சி தன் நிபுணத்வம் முழுதையும் லோகத்தில் பறைசாற்ற விரும்பினுன் போல் தோன்றியது. அழகுக்கு அழகூட்டுகிறது. அழகு பவநத்தில் ஜோதிச்சுடர் எரிவது போலிருந்தது. எல்லா உபமானங்களேயும் கவி குப்பை என ஒதுக்கிவிட்டான். இந்த சோபை அலாதியானது. விதேஹகுமாரிக்கு (ஸீதாவுக்கு) உபமானம் யாரொடு கொடுப்பது? ஸிய(ஸீதா)வின் சோபாவை ஹ்ருதயத்தில் வர்ணித்துக்கொண்டு தன் நிலேயை யோசித்து, தூய மநஸுடன் ஸமயத்துக்குத் தகுந்தபடி தம்பியிடம் சொன்னுன்—

''தம்பி, தநுஸ் யக்ஞம் யாருக்காக நடக்கிறதோ அதே ஜநக-தநயா (ஜநகர் மகள்) தான் இவள். கௌரி பூஜை பண்ண இவளே ஸகிகள் அழைத்து வந்திருக்கின்றனர். பூங்காவைப் ப்ரகாசப்படுத்திக்கொண்டு வளேய வருகிருள்.

இயல்பாக தூய என் மநஸ் இவ்வுலகத்தியதல்லாத இந்த அழகைப்பார்த்து பொங்குகிறது. அதன் காரணமெல்லாம் விதாதாவுக்கு (ப்ரம்மாவுக்கு)த்தான் தெரியும்! ஆனுல்; தம்பி, மங்கலம் தெரிவிக்கும் என் அங்கம் துடிக்கிறது. ரகுவம்சத்தவர்க்கு செயற்கை இலாத இயல்பு இது! கெட்ட வழியில் மநஸ் போகாது; கால் போகாது. எனக்கு என் மநஸ் மேல் முழு நம்பிக்கை. அது கனவிலும் பர-ஸ்த்ரீயைப் பார்க்காது.

போர்க்களத்தில் பகைவன் எவர்களது முதுகைப் பார்க்க மாட்டானே,
பரஸ்த்ரீ எவர்களது மநஸையோ பார்வையையோ பார்க்கமாட்டாளோ,
யாசகன் எவர்களிடம் 'இல்லே' என்பதை பெறமாட்டானே,
மநிதரில் சிறந்த அத்தகையவர் உலகில் சிலரே.

தம்பியிடம் என்னவோ பேசிக்கொண்டிருக்கிருன்-மநஸோ ஸிய (ஸீதாவின்) ரூபத்தில் மயங்கிக் கிடக்கிறது. முகம்-தாமரை, அழகு-அதன் மகரந்தம் - அதை மநஸ் வண்டுபோல பருகுகிறது.

ஸீதா நாலா பக்கமும் பார்க்கிருள், திகைக்கிருள். மநஸில் கவலே - சிங்கக்குட்டியான ராஜகுமாரர் எங்கே போயினர்!

மான் குட்டி போன்ற கண்களுள்ளவள் எந்தப் பக்கம் பார்க்கிருளோ அங்கே வெண்தாமரை மழை கொட்டுகிறது!

* ஆச்விந சுக்ல சதுர்த்தசி.

அப்போது ஸகிகள் கொடிகளின் நிழலில் அழகான ச்யாமள, (வெண்வண்ண) கௌர ராஜ சிங்கக் குட்டிகளை காட்டினார்கள்,

ரூபத்தைப் பார்த்தாள். கண்கள் ஆவல் மிகுந்தன. ஸந்தோஷமாகியது - தன் பொக்கிஷத்தைக் கண்டு விட்டால் போலிருந்தது. ரகுபதியின் அழகைப்பார்த்து கண்கள் மயங்கின. இமையும் மூட மறந்து கிடந்தது. அதிக ஆசையால் தேஹம் உணர்விழந்தது. சரத்ருது சந்த்ரனை பார்த்த சகோரம்போல ஆனாள். கண் வழியிலிருந்து ராமனை உள்ளத்துத்துக்குள் கொணர்ந்து, ஸாமர்த்தியமாக, இமை-கதவை மூடிவிட்டாள்.

ஸிய(ஸீதா) ப்ரேம வசமாகிவிட்டதை ஸகிகள் பார்த்தனர். ஏதும் சொல்ல முடியவில்லை. மநஸுக்குள் தயங்கினர்.

அதே ஸமயம் இரு ஸஹோதரரும் மேகத்திரையை அகற்றிக்கொண்டு இரு சந்த்ரன்கள் வெளிப்போந்தனபோல கொடிவீட்டினின்று வெளிவந்தனர்.

அழகான இரு வீரரும் சோபையின் எல்லையேயாம். நீல, வெண் கமலம் போல தேஹம். தலையில் மயில் இறகும் நன்கு விரிந்திருந்தன. இடை இடையே பூக்கொத்துகள் செருகி இருந்தன. நெற்றியில் திலகம். வியர்வைத்துளிகள் அரும்பி சோபித்தன. அழகு செவிகளின் அணிகளின் அழகு பரவி நிரம்பியது. வளை புருவம். சுருள் முடி. கண்கள் புதுக்கமலம் போல சிவப்பு. அழகான மோவாய், நாசி, கன்னம். அழகான புன்சிரிப்பு - சிரிப்பின் இனிமை மநஸின் விலைமதிப்பை எடுத்துக் கொண்டுவிட்டது. முகத்தினழகோ என்னால் சொல்ல முடியாது. அதைப்பார்த்து அநேக காமன்கள் வெட்கினர்.

மார்பில் மணிமாலை. சங்கம்போல அழகான கழுத்து. காம களபத்தின் (யானையின்) குட்டியின் துதிக்கை போன்ற கை-பலத்தின் வரம்பேயாம். இடது கையில் புஷ்பம் நிரம்பிய தொன்னை.

"ஸகி ச்யாமள குமாரன் மிகவும் அழகு!"

சிங்க இடை. அதில் பீதாம்பரம்—பரம சோபை. சீலக் களஞ்சியமான பாநுகுல பூஷணனை (ஸூர்யகுல அணிகலனை)ப் பார்த்து ஸகிகள் மெய்மறந்தனர்.

ஸமயோசிதம் தெரிந்த ஸகி ஒருத்தி தைர்யம் கொண்டு ஸீதாவின் கையைப்பிடித்து "கௌரி த்யானம் அப்புறம் பண்ணலாம். பூப கிசோரரைக் (ராஜ-சிங்கக் குட்டியை) கண்ணாரப் பார்த்துக் கொள்வதுதானே!" என்றாள்.

வெட்க மடைந்து ஸிய (ஸீதா) கண்களைத் திறந்தாள். ரகுஸிம்ஹம் இருவரையும் கண்ணெதிரே கண்டாள். ராம சோபையை நக முதல் சிகை வரை பார்த்துக்கொண்டாள். பிதாவின் பணயத்தை நினைத்துக்கொண்டாள். மநஸில் பெரும் குழப்பமுண்டாகியது.

ஸீதா பரவசமாகியிருந்ததை ஸகிகள் பார்த்தனர். எல்லாரும் பயந்தனர்.

''நேரமாகிறது. நாளை இந்த ஸமயத்தில் மீண்டும் வரலாம்'' என்று சொல்லி ஒருத்தி மநஸுக்குள் சிரித்துக் கொண்டாள்.

பொருள் பொதிந்ததாகச் சொன்னதைக் கேட்ட ஸீதா வெட்கமடைந்தாள். நேரமாகிவிட்டதே என மாதாவை எண்ணி பயந்தாள். பெரிய தைர்யம் கொண்டு ராமனை உளத்தில் வைத்துக்கொண்டு, தான் பிதா வசம் என்றதை நினைந்து திரும்பினாள். மான், பக்ஷி, மரங்களைப் பார்க்கும் சாக்கில் மீண்டும் மீண்டும் வந்து பார்த்தாள். ரகுவீர அழகை மீண்டும் மீண்டும் பார்த்து ப்ரீதி வளர்ந்தது கொஞ்சமல்ல! கடின சிவ சாபத்தை [வில்லை] நினைத்துக்கொண்டாள். கவலையுடன் உளத்தில் ச்யாமள மூர்த்தியை வைத்துக்கொண்டு போனாள்.

ஸுக-ஸ்நேஹ-சோபா-குண பொக்கிஷமான ஜாநகி போவது ப்ரபுவுக்குத் தெரிந்து, பரம ப்ரேமையை மையாக சித்த [ரூப] சுவற்றில் அழகு ஓவியம் எழுதிக்கொண்டான்.

(ஸீதா) மீண்டும் பவாநி கோயிலுக்குள் போனாள். சரண வந்தனம் பண்ணி கைகள் கூப்பிக்கொண்டு, ப்ரார்த்தனை பண்ணினாள்:

''ஜய! ஜய!! சிறந்த மலையரசன் மகளே! ஜய மஹேசனின் முகத்தைச் சந்த்ரனுக்கிக் கொண்ட சகோரமே! ஜய - யானை முகத்தனுக்கும் ஆறுமுகனுக்கும் தாயே! லோகத்தின் தாயே! மின்னல் தெரிக்கும் உடலுள்ளவளே! உன் முதல், இடை, கடைசி என்பதே இல்லை. உன் எல்லையிலாத வல்லமை - வேதத்துக்கும் தெரியாது. நீ ஸம்ஸாரத்தின் படைப்பு, காப்பு, நீக்கல் செய்பவள். விச்வத்தை மோஹமடையச் செய்பவள். ஸ்வதந்த்ரமாக விளையாட்டுகள் நிகழ்த்துபவள். தாயே! பதி-வ்ரதாக்களான ஸ்த்ரீகளில் நீ முதல்வளாகக் கருதப்படுகிறாய். உன் எல்லையிலா மஹிமையை ஆயிரம் சாரதாவோ சேஷனோ வர்ணிக்க முடியாது.

வரம் தருபவளே! புராரிக்கு ப்ரியமானவளே! உன் ஸேவை பண்ணுஞல் தர்ம அர்த்த காம மோக்ஷங்கள் எளிதில் கிடைக்கின்றன. தேவி, உன் சரண கமல பூஜை பண்ணி ஸுரர் நரர் முநிவர் ஸுகம் அடைகின்றனர். என் மநோரதத்தை நீ நன்கு அறிவாய். ஏனெனில் எல்லார் உளத்திலும் நீ உறைபவள். எனவே நான் வெளிப்படையாகச் சொல்லவில்லை:''

என்ருள் வைதேஹி; தேவியின் சரணங்களைப் பிடித்துக் கொண்டாள்.

பணிவான ப்ரேமையின் வசமாஞள் பவாநி. மாலை விழுந்தது. மூர்த்தி முறுவல் பூத்தது.

பயபக்தியுடன் ஸீதா ப்ரஸாதத்தைத் தலையில் அணிந்து கொண்டாள்.

உளம் உவப்பு பொங்க கௌரி சொன்ஞள்; ''கேள், ஸிய, இது என் ஆசீர்வாதம்: ஸத்யம்: உன் மநஸின் ஆவல் நிறை வேறும் நாரத வாக்கு எப்போதும் பவித்ரமானது. ஸத்ய மானது உன் மநஸ் கொண்ட வரனே உனக்கு அமையும்.

இயல்பான அழகான ச்யாமளனே உனக்குக் கிடைப்பார். அவர் கருணாநிதான், நல்ல க்ஞாநி: உன் ஸீலமும் ஸ்நேஹமும் அவருக்குத் தெரியும்.''

இப்படி ஆசீர்வாதம் கேட்டு - ஸீதாவும் எல்லா ஸகிகளும் மகிழ்ந்தனர்.

துஸி: பவாநி பூஜை மீண்டும் மீண்டும் பண்ணி ஸந்தோஷ மநஸுடன் வீட்டுக்குச் சென்றனர்.

கௌரி அநுகூலமாக இருப்பது தெரிந்ததும்ஸிய(ஸீதா)வின் ஸந்தோஷம் வர்ணிக்கமுடியாது. அழகான நன்மை உண்டாக்க மூலமானஇட அங்கம் துடிக்கலாயது.

ஸிய(ஸீதாவின்) அழகைப் பாராட்டிக்கொண்டு இரு ஸஹோதரரும் குருவிடம் வந்தனர். கௌசிகரிடம் எல்லா வற்றையு ராமன் சொன்ஞன். ஏனெனில் அவன் ஸ்வபாவம் ஸரளமானது. அதில் ஏமாற்றல் [இம்மி] தீண்டவும் ஒணுது.

புஷ்பங்களை எடுத்துக்கொண்டு முநிவர் பூஜை பண்ணிஞர். இரு ஸஹோதரர்க்கும் ஆசி அளித்தார்—உங்கள் மநோரதம் பலனுள்ளது ஆகட்டும்!

கேட்டு ராம லக்ஷ்மணர் ஸந்தோஷமடைந்தனர்.

விக்ஞாநி முநிவரர் போஜனம் முடித்தார். கொஞ்சம் புராண கதை சொல்லலானுர்.

பகல் முடிந்ததும் முநிவரிடம் உத்தரவு படைந்து ஸஹோதரர் இருவரும் ஸந்த்யா செய்யப் போனுர்கள்.

கிழக்குத் திசையில் சந்த்ரன் அழகாக உதித்தது. அது ஸீதாவின் முகம் போல இருப்பதைப் பார்த்து ராமன்] ஸந்தோஷமடைந்தான். மீண்டும் மநஸில் யோசித்தான்—ஹிமகரன் [சந்த்ரன்] ஸீதாவின் முகத்துக்கு ஸமம் இல்லை.

இது ஸமுத்ரத்திலிருந்து பிறந்தது
இதன் உடன் பிறந்தது விஷம்!
பகலில் இதற்குப் ப்ரகாசமில்லை.
களங்கம் இருக்கிறது.
பாவம், எளிய இது, ஸீதாவின் முகத்துக்கு எப்படி
ஸமமாகும்?
தேய்கிறது, வளர்கிறது.
பிரிந்தவர்க்கு துக்கம் தருகிறது.
ஸமயம் கிடைத்தால் ராஹு இதை விழுங்குகிறது
கோகத்துக்கு சோகம் தருகிறது.
கமலத்துக்கு த்ரோஹம் பண்ணுகிறது.
சந்த்ர உனக்கு கெட்ட குணங்கள் மிக அதிகம்

ஸீதாவின் முகத்தோடு உன்னை ஒப்பிட்டால் பொருத்த மிலாதது பண்ணிய பெரிய தோஷம் ஆகும்—சந்த்ரன் சாக்கில் ஸீதாவின் முக அழகை வர்ணித்தான்.

ராத்ரி வெகு நேரம் ஆகிவிட்டதைப் பார்த்து குருவிடம் வந்தனர். அவரது சரண ஸரோஜத்தில் நமஸ்காரப்பண்ணி ஆக்ஞை பெற்று ஓய்வுஎடுத்துக் கொண்டனர்.

ராத்ரி கழிந்தது. ரகுநாயகன் எழுந்தார். தம்பியைப் பார்த்துச் சொன்னுர்: தம்பி, பார்! பங்கஜம், கோகம், லோகங்களுக்கு ஸந்தோஷம் தருபவன்! அருணன் உதித்து விட்டான்!

கைகளிரண்டும் சேர்த்து லக்ஷ்மணன் ப்ரபுவின் ப்ரபாவத்தைக் குறிப்பிட்டு இனிமையாகச் சென்னுன்: அருணோதயமானதும் குமுதம் வெட்கப்படுகிறது [சிலர் வெட்கப்படுவர்]. நக்ஷத்ர ஒளி மங்கி விட்டது. உங்கஸ்வரவைப் பற்றிக்கேட்டு ராஜாக்கள் பலமிழந்தனர்— எல்லா ராக்களும்

நக்ஷத்ரம்போல மின்னிக்கொண்டுதானிருந்தனர். ஆனுல் சாப [வில்] [ரூப] இருளை அழிக்கமுடியாது. கமலம், கோகம், வண்டுகள், பலவகை பக்ஷிகள், எல்லாம் ராத்ரி கழிந்ததும் ஸந்தோஷப்படுகின்றன. ப்ரபோ, அதேபோல உங்கள் பக்தர்க ளெல்லாரும் தநுஸ் இற்றதும் ஸந்தோஷப்படுவர். பாநு [ஸூர்யன்] உதித்தவுடன் எளிதாக இருள் நாசமாகிவிட்டது. நக்ஷத்ரங்கள் ஒளிந்து கொண்டன. ஜகத்தில் ப்ரகாசம் பரவியது.

ரகு ராயா, ஸூர்யன் தானுதிக்கும் சாக்கில் ப்ரபுவின் வல்லமையை எல்லா ராஜாக்களுக்கும் காட்டிவிட்டான். உங்கள் புஜ பலததை வெளிப்படுத்தவே தநுஸ் இறுக்க வேண்டும் என்று ஏற்பட்டது.

தம்பி சொன்னதைக் கேட்டு ப்ரபு சிரித்தார்.

ஸ்வபாவமாக தூயவர்தான். எனினும் ஸ்நாநம் பண்ணினுர். நித்யகர்மா செய்து குருவிடம் வந்தனர். சரண ஸரோஜத்தில் அழகு சிரம் பணிந்தனர்.

* * * *

ஜநகர் ஸதானந்தரைக் கூப்பிட்டார். உடனே கௌசிக முநிவர்பால் அனுப்பினுர்.

அவர் போய் ஜநகரின் வேண்டுகோளைச் சொன்னுர்.

முநிவர் ஸந்தோஷமடைந்தார். இரு ஸஹோதரர்களையும் கூப்பிட்டார்.

அவர்கள் ஸதானந்தரின் பாதங்களில் வந்தநம் பண்ணி குருவிடம் அமர்ந்தனர்.

முநிவர் 'குழந்தாய், புறப்படு. ஜநகர் சொல்லியனுப்பி இருக்கிருர்.

போய் ஸீய (ஸீதா) ஸ்வயம்வரம் பார்க்கவேண்டும். பார்க்கலாம்—ஈசன் யாருக்குப் பெருமை தரப்போகிருரோ!'

லஷன் (லக்ஷ்மணன்) 'நாத எவர்மேல் தங்கள் க்ருபை இருக்கிறதோ, அவருக்குத்தான் புகழ் கிடைக்கும்,'' என்ருன்.

சிறப்பாக லக்ஷ்மணன் சொன்னதைக் கேட்டு முநிவர் ஸந்தோஷம் அடைந்தார்.

எல்லாரும் இதைக்கேட்டு, [ஒப்புக்கொண்டு, மதித்து] ஸந்தோஷம் அடைந்து ஆசீர்வாதம் பண்ணினர்.

முனிவர் குழாத்துடன் க்ருபாலா தநுஸ்-மக-சாலா (வில் வேள்வி நடக்குமிடம்) பார்க்கப்போனர்.

இரு ஸஹோதரரும் ரங்க பூமிக்கு (அம்பலத்துக்கு) வருவதாக புரவாஸிகளுக்குத் தெரிந்தது. பாலர், முதியோர், ஸ்த்ரீ—புருஷர் வீட்டு வேலைகளை மறந்து போனர்கள்.

பெருங்கூட்டமாகிவிட்டதை ஜநகர் பார்த்தார். நல்ல ஸேவகர்களைக் கூப்பிட்டு 'உடனே போய் எல்லாருக்கும் தகுந்த இடம் கொடுங்கள்' என்றார்.

அவர்கள் மெதுவாகப் பேசி, பணிவாக, உத்தம, மத்ய, நீச-சிறியவர் ஸ்த்ரீ புருஷர் எல்லாருக்கும் நிலைமைக்குத் தகுந்தபடி அவரவருக்கு ஆஸனம் கொடுத்தனர். உட்காரவைத்தனர்.

அப்போது ராஜகுமாரர் இருவரும் அங்கே வந்தனர். அவர்கள் சரீரத்தின்மேல் மநஸைக் கவரும் அழகு போர்த்து இருந்தது போலத் தோன்றினர். அழகான ச்யாமள, கௌர (வெண் வண்ண) சரீரம். குண ஸாகரம், சூரர், சிறந்த வீரர். ராஜ ஸமாஜத்தில் நன்றாகப் ப்ரகாசிக்கிறார்கள். தாராகணங்கள் இடையே இரண்டு பூர்ண சந்த்ரன்கள்போல இருந்தனர்.

யாருக்கு என்ன பாவனை இருந்ததோ அவர் அப்படியே ப்ரபுவின் மூர்த்தியைக் கண்டனர்.

வீர ரஸமே சரீரம் எடுத்துக்கொண்டு வந்ததுபோல மஹா ரணதீரர் ரூபத்தைப் பார்த்தனர். மஹா பயங்கரமாக கெட்ட ராஜாக்களுக்கு பட்டது. (ஏனெனில்) அவர்கள் அவரைப் பார்த்து பயந்துவிட்டனர். அஸுரர்கள் ராஜாக்களாக வேஷம் எடுத்துக்கொண்டு கபடமாக வந்திருந்தனர். அவர்கள் ப்ரபுவை காலன் கண்கூடாக வந்திருப்பதாக எண்ணினர்.

மநித ஜாதியின் பூஷணம், கண்களுக்கு ஸுகம் தருபவராக புரவாஸிகள் எண்ணினர்கள்.

இணையிலாத மூர்த்திகளாக ச்ருங்காரம் விளங்குவதாக ஸ்த்ரீகள் ஸந்தோஷமடைந்து அவரவர் ருசிக்கு ஒத்தபடி கண்டனர்.

வித்வான்கள் ப்ரபுவை அநேக முகம் கை, கால், கண். தலை உள்ள விராட்ரூபமாகக் கண்டனர்—

ஜநகரின் ஜாதி ஜனங்கள் தம்முடன் பிறந்தவராக, ப்ரியமாக கண்டனர்.

குழந்தைகள்மேல் உண்டாகும் ப்ரீதிபோல் 'ஆகி விதேஹனும் ராணிகளும் பார்த்தார்கள். அதன் வர்ணனை பண்ணமுடியாது.

யோகிகளுக்கு அவர்கள் சாந்த சுத்த ஸம ஸஹஜ ப்ரகாச ரூப பரம தத்வ மயமாகத் தோன்றினர்.

ஹரி பக்தர்கள் இருவரையும் ஸுகம் தரும் தம் இஷ்ட தேவதைகளாகக் கண்டனர்.

ராமனை ஸீதா எப்படிப் பார்த்தாள்— அந்த அன்பையும், ஸுகத்தையும் சொல்ல முடியாது. அவளே உளத்தில் அனுபவிக்கிறுளே யன்றி சொல்ல முடியவில்லை.

அப்படியிருக்க எந்தக் கவிதான் அதை எப்படித்தான் சொல்ல முடியும்?

இப்படியாக யாருக்கு என்ன பாவமிருந்ததோ அவர் அப்படியே கோஸலபதியைக் கண்டார்.

விச்வத்தின் கண்களைக் கொள்ளைகொண்ட அழகு ச்யாமள கௌர சரீரமுள்ளவர்கள், கோஸல ராஜாவின் பிள்ளைகள் ராஜ ஸபையில் திகழ்ந்தனர்.

இரண்டு மூர்த்திகளும் ஸ்வபாவமாகவே அழகு. கோடி காமதேவர்களை உபமானமாகச் சொன்னுலும் அது அல்பமாகத் தான் இருக்கும். அழகு முகம் சரத் சந்த்ரனை வெட்கச்செய்யும். நீரஜ நயனம் [கமலக் கண்கள்] மனஸுக்கு மிகவும் பிடித்தன. அழகு பார்வை மாரனின் (காமனின்) மனஸைக் கொள்ளை கொண்டன. மனஸுக்கு மிகவும் பிடித்தது. வர்ணனை பண்ண முடியாது. அழகான கன்னம். காதுகளில் குண்டலங்கள் மின்னின. அழகான மோவாய், உதடு. கோமளமான குரல். குமுத பந்துவை [சந்த்ரனை]ப் பழிக்கும் சிரிப்பு. வளைந்த புருவம். மநங்கவரும் நாசி. பரந்த நெற்றி. அதில் மின்னும் திலகம், குழலைக் கண்டு வண்டினம் வெட்கின. மஞ்சள் சௌகோஸியா [நாலு கோணமான தொப்பி] தலையில் சோபித்தன. நடு நடுவே [பூக்கொத்து] மொட்டுகள். சங்கு போன்ற கழுத்து. அதில் அழகான மூன்று கோடுகள். மூன்று லோக அழகின் வரம்புகள் போலிருந்தன. கழுத்தில் கஜமுத்தாலான அட்டிகை.

மார்பில் துளஸிமாலை. எருதுபோல தோள். சிங்க நடை. பரந்த தோள், புஜம் பலக் களஞ்சியம். அரையில் பீதாம்பரம், தூணி, கட்டியிருந்தது. கையில் கணை, இடது தோளில் வில். மஞ்சள் உபவீதம் திகழ்ந்தது. நகத்திலிருந்து சிகை வரை பேரழகு போர்த்திருந்தது.

பார்த்து எல்லாரும் ஸுகமடைந்தனர். கண் இமைக்காமல் பார்த்தனர். விழியும் அசையவில்லை.

ஸஹோதரர் இருவரையும் பார்த்து ஜநகர் ஸந்தோஷப் பட்டார். முனிவரின் பத கமலத்துக்கு வந்தனம் பண்ணினார். ப்ரார்த்தனை பண்ணி கதை எல்லாம் தெரிவித்தார். அம்பலத்தை முனிவருக்குக் காண்பித்தார். குமாரர் எங்கெங்கே போகிறார் களோ அங்கங்கே எல்லாரும் திகைத்துப் பார்க்கின்றனர். அவரவர் நோக்கப்படி ராமனை எல்லாரும் பார்க்கின்றனர். விசேஷ மர்மம் யாருக்கும் தெரியாது.

அமைப்பு நன்றாக இருக்கிறதென முனிவர் ராஜாவிடம் சொன்னார்.

ராஜா மலர்ச்சி அடைந்தார். பெரிய ஸுகம் உண்டாகியது. எல்லா மஞ்சங்களையும் விட ஒன்று பெரிதாக, சுத்தமாக, அழகாக இருந்தது. அதில் முனிவரை இரு ஸஹோதரர்களுடன் ராஜா அமர்த்தினார்.

ப்ரபுவைப் பார்த்து எல்லா ராஜாக்களும் ஹ்ருதயத்தில் தோல்வி [ஏமாற்றம்] உணர்ந்தனர் — பூர்ண சந்த்ரன் உதித்ததும் தாராகணம் போலாயினர். ''ராமன் தநுஸை இறுத்து விடுவான்; அதில் ஸந்தேஹமில்லை'' என எல்லார் மநஸிலும் நம்பிக்கை. ''பவ தநுஸை (சிவனின் வில்லை) இறுக்காமலேயே ராமன் மார்பில் ஸீய (ஸீதா) மாலை அணி விப்பாள்—என யோசித்து, ஸஹோதரர்களே, புகழ், வல்லமை, பலம், தேஜஸ் எல்லாம் கட்டிவைத்துவிட்டு வீட்டுக்குப் போய்ச் சேருங்கள்'' என்றனர் சிலர்.

அவிவேகத்தால் குருடாகி விட்டிருந்த கர்வம் மிகுந்த வேறு ராஜாக்கள் இதைக்கேட்டு சிரித்தனர். சொல்லலாயினர்: வில் இற்றாலேகூட விவாஹம் ஆழம் காணமுடியாத எங்கோ இருக்கும்; வில் இறுக்காமலே குமாரியை யார் விவாஹம் பண்ணிக்கொள்ள முடியும்? காலனாகவேதான் இருக்கட்டுமே! ஸீய (ஸீதா) வுக்காக ஒரு தடவை நாம் அவனுடனேயும் போரிடுவோம், ஜயித்து விடுவோம்.

தர்ம சீலர்களான, புத்திசாலிகளான. ஹரிபக்தர்களான வேறு ராஜாக்கள் இதைக் கேட்டு சிரித்தனர். 'எல்லா ராஜாக்களின் கர்வத்தையும் போக்கி ராமனை ஸிய (ஸீதா) விவாஹம் பண்ணிக்கொள்வாள். தசரதனின் திறன்மிக்க போர்வீரரான பிள்ளைகளைப் போரில் யார் ஜயிக்கமுடியும்? வீணாய்ப் பிதற்றி ப்ராணனைவிடாதீர்கள். மந லட்டுகளால் பசிதீராது. பரமபவித்ர மான எங்கள் பேச்சைக் கேட்டு, ஸீதாவை ஜகதம்பாவாக ஹ்ருதயத்தில் எண்ணிக் கொள்ளுங்கள். ரகுபதியை ஜகத் பிதாவாக எண்ணிக்கொண்டு கண்ணார அவர் அழகைக் கொள்ளுங்கள். அழகான, ஸுகம் தரும் எல்லா குணங்களுக்கும் களஞ்சியமான இரு ஸஹோதரர்களும், ஸம்பு உள்ளத்தில் வஸிப்பவர். அருகிலிருக்கும் அம்ருத ஸமுத்ரத்தை விட்டு கானல் நீரைப் பார்த்து ஓடி ஏன் ப்ராணனை விடுவீர்?— யாருக்கு எது பிடிக்கிறதோ அவன் இஷ்டப்படியே செய்யுங்கள். நாங்களோ ஜன்மமெடுத்ததன் பலனை இன்று அடைந்துவிட்டோம்'' என்று சொல்லி நல்ல ராஜாக்கள் ப்ரேமையில் ஆழ்ந்தனர். இணையிலா ரூபத்தினை நன்றாக பார்த்துக்கொள்ளலாயினர்.

ஆகாசத்தில் விமானத்தில் வீற்று தேவர் பார்த்துக்கொண்டு இருக்கின்றனர். புஷ்பமாரி பொழிகின்றனர். அழகாகப் பாடுகின்றனர்.

ஸரியான ஸமயம் வந்தவுடன் ஜநகர் ஸிய (ஸீதா)வை அழைத்துவரச் சொன்னார். அழகான ஸாமர்த்யமிக்க ஸகிகள் அவளை அழைத்து வந்தனர்.

ஸிய (ஸீதா) வின் சோபை வர்ணிக்க முடியாது, ஏனெனில் அவள் ஜகதம்பிகா, ரூப-குண-களஞ்சியம். எல்லா உபமானங்களும் அல்பமாக எனக்குத் தோன்றுகின்றன. அவை எல்லாம் இவ்வுலகத்திய ஸ்த்ரீகளைப் பற்றியவை. ஸிய (ஸீதா) வர்ணனைக்கு உபமானம் கொடுத்து யார்தான் கு-கவி என கெட்ட பெயர் வாங்கிக்கொள்வான். ஸிய (ஸீதா) வுக்கு ஸமமாக சொல்லத்தக்க அத்தனை கட்டழகி லோகத்தில் யார்?

கிரா [ஸரஸ்வதி] — வாயாடி;

பவானி — பாதி உடல்;

ரதி — தன் பதிக்கு உடல் இல்லை என மிகவும் துக்கப் பட்டிருப்பவள்.

ரமா [லக்ஷ்மி]—விஷமும், வாருணி [போதை தரும் குடி]யும் உடன் பிறந்தவர்போல அவளுக்கு ப்ரியம். இவளை எப்படி வைதேகிக்கு ஸமமாக சொல்லமுடியும்.

அழகு அம்ருத ஸமுத்ரம் இருந்தால்,

பரம ரூபமான ஆமை அமைந்தால்,

சோபை கயிறு ஆக,

ச்ருங்காரம் மந்தரம் ஆக,

மாரன் (காமன்) தன் கையாலேயே கடைந்தான் எனில்,

ஒரு அழகு - ஸுக-மூல - மூர்த்தி - லக்ஷ்மி உண்டானால், - அப்போதும் தயங்கித்தான் கவி அவளை ஸீயா (ஸீதா)வுக்கு கிட்டத்தட்ட ஸமமாக இருப்பதாகச் சொல்வான்.

ஸாமர்த்ய மிக்க ஸகிகள் ஸீதாவை அழைத்துக்கொண்டு சென்றனர். மநஸ் கவரும் குரலில் பாடிக்கொண்டிருந்தனர். புத்தம் புதிய சரீரம் - அழகான புடைவையின் சோபை - ஜகத் ஜநநியின் அழகு இணையிலாதது; ஆழ்ந்தது. ஒவ்வோர் அங்கத் திலும் பொருத்தமான பூஷணம் ஸகிகள் அணிவித்திருந்தனர்.

ரங்க பூமியில் (அரங்கில்) ஸீதா திருவடி வைத்ததும் ரூபத்தைப் பார்த்து ஸ்த்ரீ-புருஷர் எல்லாரும் மோஹித்துப் போயினர்.

ஸந்தோஷமடைந்து தேவர் டங்கா முழக்கினர். அப்ஸராக்கள் புஷ்ப மாரி பொழிந்து பாடினர்.

கையில் ஜய மாலை !

எல்லா ராஜாக்களும் சட்டென அந்தப்பக்கம் பார்த்தனர்.

ஸீதா திகைத்து ராமனைத் தேடினாள் —

எல்லா ராஜாக்களும் மோஹ வசமாயினர்

முநிவரண்டையில் இரு ஸஹோதரரையும் பார்த்தாள். அவள் கண்கள் தம் நிதியை அடைந்து பேராவலுடன் அப்படியே ஒன்றின. குரு ஜனங்கள் ! பெரிய ஸமாஜம் ! பார்த்து ஸீய (ஸீதா) வெட்கமடைந்தாள். ரகுவீரனை ஹ்ருதயத்தில் கொணர்ந்து, ஸகிகளின் பக்கம் பார்க்கலானாள்.

ராம ரூபம், எளிய அழகு, பார்த்து ஸ்த்ரீ-புருஷரின் இமை மூட முடியாமல் கட்டுண்டு நின்றது. எல்லாரும் கவலைப்படுகின்றனர். ஆனால் சொல்லத் த்யங்குகின்றனர். மநஸில் விதியிடம் வேண்டிக்கொள்கின்றனர்: 'விதி, சீக்கிரமே ஜநகரின் ஜடத் தனத்தைப் போக்கு. எங்களைப்போல அவருக்கும் நல்ல புத்தி கொடு. பெரிதாக யோசிக்கப் புகாமல் ராஜா ப்ரதிக்ஞையை விட்டு எளிய (ஸீதா) ராம விவாஹத்தை நடத்தவேண்டும். ஜகத் இதை நல்லதெனச் சொல்லும். ஏனெனில் எல்லாருக்கும் பிடிக்கும். ஹடம் பிடித்தால் கடைசியில் நெஞ்சு எரியும். 'ச்யாமள வரன் ஜாநகிக்கு தகுந்தவன்' என்ற ஆசையில் எல்லாரும் ஆழ்ந்திருந்தனர்.

அப்போது வந்திகளை ஜநகர் கூப்பிட்டார். அவர்கள் விருதாவளி சொல்லிக்கொண்டு வந்தனர்.

'போய் ப்ரதிக்ஞையை அறிவியுங்கள்' என்றார் ராஜா.

பாடர்களின் ஸந்தோஷம் கொஞ்சமல்ல - போனார்கள் - சிறந்த வசனம் சொன்னார்கள்: ''எல்லா மஹிபாலர்களும் கேளுங்கள். விதேஹ மன்னரின் பணயம் கை பரக்க உயர்த்திச் சொல்லுகிறோம்— மன்னர்களின் புஜபலம் - சந்த்ரன் கடினமான, கனமான சிவ தநுஸ் - ராஹு இதெல்லாருக்கும் தெரியும். ராவணன், பாணாஸுரன் மாபெரும் போர் வீரர்கள் - அவர்களும் வில்லைப் பார்த்துவிட்டு பேசாமல் போய்விட்டனர். புராரியின் அந்த கடினமான தநுஸ்தான் இது. இங்கே ராஜஸமாஜத்தில் வைக்கப்பட்டிருக்கிறது, இதை யார் இறுப்பாரோ அவரை வேறு யோசனையே இல்லாமல் மூவுலக ஜயலக்ஷ்மியுடன் வைதேஹி வரிப்பார்கள்.''

பணயத்தைக் கேட்டதும் எல்லா ராஜாக்களுக்கும் ஆசை உண்டாகியது. வீரர் என தம்மை எண்ணிய ராஜாக்கள் மநஸில் கோபமுண்டாகியது. இடுப்பை வரிந்து வரித்து கட்டிக்கொண்டு ஆத்திரத்துடன் எழுந்து நின்றனர். அவரவர் இஷ்ட தெய்வத்தை வணங்கி, போனார்கள். ஆவேசத்துடன் பார்க்கின்றனர்; குறி பார்த்து சிவ தநுஸைப் பிடிக்கின்றனர்; கோடி விதமாக பலம் பார்க்கின்றனர்; அது அசையவில்லை.

கொஞ்சமேனும் யோசனையிருந்த மன்னர் வில்லின் பக்கமே போகவில்லை. முகம் சிவக்க மூட மன்னர் தநுஸைப் பற்று கின்றனர்: அசையாது போய்விடவும், வெட்கப்பட்டு, போகின்றனர்.

வீரர்களின் பலத்தை வாங்கிக்கொண்டு மேலும் மேலும் அது கனம் ஆகிறது போலும்!

பத்தாயிரம் ராஜாக்கள் சேர்ந்து ஒரேயடியாக எடுக்கலாயினர். எப்படி காமி புருஷனின் பேச்சால் பதிவ்ரதை அசைய மாட்டாளோ அதுபோல சம்பு-வில் அசையாமலிருந்தது.

எல்லா ராஜாக்களும் சிரிப்புக்கிடமாகிவிட்டனர்.

வைராக்யமில்லாத ஸந்யாஸிபோல் ஆயினர்.

மாபெரும் கீர்த்தி, விஜயம், வீரத்தனம் எல்லாம் வீணுக வில்லிடம் தோற்று விட்டுவிட்டு போனுர்கள். ஹ்ருதயத்தில் தோற்றுப்போனதை ஒப்புக்கொண்டு ஸ்ரீ (திரு) இழந்துவிட்டனர். போய் அவரவர் ஸமாஜத்தில் உட்கார்ந்து கொண்டனர்.

ராஜாக்களைப் பார்த்து ஜநகர் கலக்க மடைந்துவிட்டார். சொல்லலானுர்: அவர் பேச்சில் கோபம் ததும்பியிருந்தது போலத் தோன்றியது: 'நான் முடிவு செய்திருந்த பணயத்தைக் கேட்டு ஒவ்வொரு தீவிலிருந்தும் ராஜாக்கள் வந்தனர், தேவர், தானவர், மநித சரீரம் கொண்டு ஏராளமான ரண தீரர்கள் வந்தனர். மநஸைக் கொள்ளை கொள்ளும் குமாரி, பெரிய ஜயம், அழகான கீர்த்தி - எல்லாம் அடையக்கூடியவரை விரஞ்சி படைக்கவில்லை! அடக்கக்கூடிய தநுஸாக படைக்கவே இல்லை போலிருக்கிறது!!

சொல்லுங்கள் - யாருக்கு இந்த லாபம் பிடிக்கவில்லை? எவரும் சங்கர வில்லை நாணேற்றவில்லை. வளைப்பதும் நாணேற்றுவதும் இறுப்பதும் கிடக்கட்டும். எள்ளத்தனை பூமியை விட்டு எடுக்கவும் இல்லை. வீர பெருமை நினைப்புள்ள, எவரும் இனி கோபப்பட வேண்டாம்! எனக்குத் தெரிந்துவிட்டது— பூலோகத்தில் வீரரில்லை! இனி ஆசையை விடுங்கள்; அவரவர் வீடு போய்ச் சேருங்கள். விதி வைதேஹிக்கு விவாஹம் எழுதி வைக்கவில்லை! பணயத்தைக் கைவிட்டேனுனல் தர்மம் போச்சு! குமாரி குமாரியாகவே இருக்கட்டும், இந்தப் புவியில் பெருவீரர் இல்லை என்று எனக்குத் தெரிந்திருந்தால் பணயம் வைத்திருக்க மாட்டேன்; இப்படி சிரிப்புக்கிடமாகியிருக்கமாட்டேன்.

ஜநகர் சொன்னதைக் கேட்டு ஸ்த்ரீ புருஷர் எல்லோரும் ஜாநகி பக்கம் பார்த்தனர். துக்க மடைந்தனர்.

ஆ ஞ ல் லகனுக்கு (லக்ஷ்மணனுக்கு)க் கோபம் வந்தது, புருவங்கள் நெரிந்தன. உதடு துடித்தது, கண்களில் கோபக் கனல் தெரித்தது. ரகுவீரனிடம் பயம். பேச முடியவில்லே. ஆனுல் சொன்னது பாணம்போல தைத்தது. ராம பத கமலத்தில் சிரம் வணங்கினுன். அதிகாரமாகச் சொன்னுன்:

ரகு வம்சத்தவர் ஒருவர் இருக்கும் ஸமாஜத்தில் ஜநகர் சொன்னதுபோல இப்படி தகாதது எவரும் கொல்லமுடியாது.— ரகுகுலமணி இங்கே விளங்குகிருர் என அவருக்குத் தெரியும். அப்படியும் இதுபோலப் பேசிவிட்டார். பாநு-குல-பங்கஜ-பாநு, (ஸூர்ய குல தாமரைக்கு ஸூர்ய) கேளுங்கள் நான் சொல்வது ஸத்யம். கர்வ பேச்சு அல்ல. நீங்கள் உத்திரவிட்டால் ப்ரஹ்மாண்டத்தைப் பந்துபோல தூக்கிக்காட்டுவேன் — சுடாத சட்டிபோல அதை உடைத்துப் போடுவேன்! பகவாநே! உங்கள் ப்ரதாபத்தின் மஹிமையால் மேருவை முள்ளங்கிபோல் ஒடித்துக் காட்டுவேன். அந்த அல்ப வில் எம்மாத்திரம்! நாத இதை உணர்ந்து உத்தரவு ஆகட்டும். ஒரு வேடிக்கை பண்ணு கிறேன்—அதையும் பாருங்கள். தாமரைத் தண்டைப்போல வில்லே வளேத்து நாணேற்றுவேன்; எடுத்துக்கொண்டு நூறு யோஜனே தூரம் ஒடுவேன். நாத, தங்கள் ப்ரதாபத்தால் அதை நாய்க்குடைத் தண்டைப்போல ஒடித்துக் காட்டுவேன். அப்படிச்செய்யாவிடில் ப்ரபு-பத-ஆணே!! [இட்டு] வில்லும் தூணி[யை]யும் கையால் தொடமாட்டேன்.

லஷன் (லக்ஷ்மணன்) கோபமாகச் சொன்னவுடன் பூமி ஆடியது.

திக்கஜங்கள் தள்ளாடின.

எல்லா லோக எல்லா ராஜாக்களும் பயந்தனர்.

ஸிய (ஸீதா) ஹ்ருதயத்தில் ஸந்தோஷமுண்டாகியது.

ஜநகர் வெட்கமடைந்தார்.

எல்லா முநிவர்களும், குருவும், ரகுபதியும்—

ஸந்தோஷமடைந்தனர்.

மீண்டும் மீண்டும் மெய்சிலிர்க்கிறது.

இங்கிதத்துக்காக ராமன் லக்ஷ்மணனைத் தடுத்தான்.

ப்ரேமையுடன் அருகில் அமர்த்திக்கொண்டான்.

விஸ்வாமித்ரர் நல்ல ஸமயமென அறிந்துகொண்டார்,

மிகவும் ஸ்நேஹ மயமாக சொன்னார்: ராம எழுந்திரு

[illegible]வ சாபத்தை (சிவ வில்லை) ஓடி

ராஜா ஜநகரின் கவலையைப் போக்கு !

குரு சொன்னது கேட்டு அவர் சரணங்களில் தலை வணங்கினான் - துயர் ஏதுமில்லை. ஸ்வபாவமாக ஸாதாரணமாக எழுந்து நின்றான்—அந்த மிடுக்கைப் பார்த்து சிங்கக் குட்டியும் வெட்கும். ராஜாக்களின் ஆசை [ரூப] ராத்ரி போய்விட்டது. அவர்களுடைய பேச்சு [ரூப] தாராகணங்கள் மின்னவுமில்லை. கர்வ மிகுந்த ராஜா [ரூப] குமுதம் வெட்கியது; கபட ராஜா [ரூப] ஆந்தை ஒளிந்து கொண்டது.

முனிவர், தேவர் [ரூப] சக்ரவாகத்தின் ஸோக மகன்றது. புஷ்பம் சொரிகின்றனர். ஸேவை தெரிவிக்கின்றன.

ராமன்— குருபத வந்தனம் பண்ணினான்; முனிவர்களிடம் அநுராகத்துடன் ஆக்ஞை கேட்டுக்கொண்டான். ஸம்பூர்ண ஜகத்தின் ஸ்வாமி—ஸ்வபாவமாகவே போனார்—அழகான மத்த கஜம் போல நடை! மஞ்ச ரூபமான உதயமலைமேல் ரகுவர ரூப பால ஸூர்யன் உதித்தது. ஸாது ரூப தாமரை மலர்ந்தது. வண்டுகள்போல கண்கள் மகிழ்ந்தன. ராமன் போகவும் புர ஸ்த்ரீ புருஷர் ஸுகமாயினர். அவர்களின் சரீரம் எல்லாம் புளகமாகியது.

தேவர் பித்ருக்களுக்கு வந்தநம் பண்ணினர். தம் புண்யங்களை நினைத்துக்கொண்டனர். ''கணேச கோசாயீ'' எங்கள் புண்யங்களுக்கு என்ன ப்ரபாவம் உண்டோ, அதனால் — சிவதநுஸை கமலத்தண்டு போல ராமன் ஒடிப்பார் ஆக [அருள்] !

ராமனைப் ப்ரேமையோடு பார்த்து ஸகிகளை அருகிலழைத்து ஸீதாவின் மாதா கலக்கத்துடன் சொல்வாள்.

ஸகி நமக்கு நல்லது பண்ணுபவரென தம்மைச் சொல்லிக் கொள்பவர்களும் வேடிக்கை பார்ப்பவர்களே! யாரும் குருவுக்கு எடுத்துச் சொல்லமாட்டார்கள் - இவர்கள் பிள்ளைகள்- இப்படிப் பிடிவாதம் சரியல்ல! ராவணனும், பாணாஸுரனும் வில்லைத் தொடக்கூடவில்லை. எல்லா ராஜாக்களும் திமிர் பிடித்து, தோற்றுப் போயினர். அந்த தநுஸை ராஜகுமாரன் கையில் கொடுக்கிறார்களே! ஹம்ஸக் குஞ்சு மலையைப் பெயர்த் தெடுக்க முடியுமா? ராஜாவின் புத்திசாலித்தனமெல்லாம் முடிந்துபோய் விட்டது. ஸகி, விதியின் போக்கு ஒன்றும் சொல்ல முடியாது.

கெட்டிக்காரியான ஸகி மெதுவாகச் சொன்னாள்: ராணி, தேஜஸ் உள்ளவரைச் சின்னவராக எண்ணிவிடக் கூடாது—

கும்பஜர் [அகஸ்த்யர்] எங்கே? எல்லையிலாத கடல் எங்கே?

ஆனால் அவர் அதை வற்றப் பண்ணினர்! உலகெலாம் புகழ் பெற்றார்.

ஸூர்ய மண்டலம் பார்க்கச் சின்னது.

ஆனால் அதன் உதயம் மூன்று லோக இருளையும் போக்குகிறது.

மந்த்ரம் மிகச் சின்னது.

ஆனால் விதி, ஹரி, ஹரர், ஸுரர் எல்லாரும் அதன் வசம்.

மகா மத்த கஜராஜன் [எங்கே]

சின்ன அங்குசம் வசமாக்கி விடுகிறது.

காமன் புஷ்ப வில் கையில்கொண்டு கணையால் ஸகல புவநத்தையும் தன் வசம் ஆக்கி [வைத்துக்] கொண்டிருக்கிறான்.

ராணி, இப்படி புரிந்துகொண்டு ஸந்தேஹத்தை விட்டு விடுங்கள்.

ராணி, கேளுங்கள்; ராமன் வில்லை ஒடித்து விடுவார்.

ஸகி சொன்னதைக் கேட்டு நம்பிக்கை உண்டாகியது. துயரம் தீர்ந்தது. ப்ரீதி எல்லையிலாமல் வளர்ந்தது.

ராமனைப் பார்த்து வைதேஹி பயத்துடன் எல்லாரையும் வேண்டிக்கொண்டாள். கலங்கினாள். மநஸுக்குள்ளேயே எண்ணுகிறாள். — மஹேச, பவாநி, அருள்புரியுங்கள். என் ஸேவையைப் பயனுள்ளதாக்குங்கள். எனக்கு நல்லது பண்ண வில்லின் கநத்தை எடுத்து விடுங்கள். கண நாயக! வரதாயக தேவ! இன்று வரை நான் உன் ஸேவை பண்ணியிருக்கிறேன். திரும்பத் திரும்ப நான் வேண்டிக்கொள்கிறேன். வில்லின் பெரும் கநத்தை போக்கு. மிக லேசாகப் பண்ணு. மீண்டும் மீண்டும் ராமனைப் பார்த்து தைர்யம் கொண்டு தெய்வங்களை நினைத்துக்கொள்கிறாள். கண்களில் ப்ரேமை நீர் ததும்பியது. உடலில் புளகமாகியது. நன்றாக கண் நிரம்ப சோபையைப் பார்த்து, பிதாவின் பணயத்தை எண்ணி மீண்டும் மநஸில் கலக்க முண்டாகியது. 'ஓ! பிதா கடினமான பணயம் வைத்து விட்டார். கொஞ்சமும் கேடு நன்மைகளை யோசிக்கவேயில்லை. எல்லா மந்த்ரிகளுமிருக்கின்றனர். யாரும் எடுத்துச் சொல்ல வில்லை. பண்டிதர் ஸமாஜத்தில் கொஞ்சமும் உசிதமிலாதது நடந்துகொண்டிருக்கிறது. வைரத்தினும் கடினமான வில் எங்கே? மென்மையான சரீரமுள்ள ச்யாமள குமாரனெங்கே?

'விதி, நான் எப்படி உளத்தில் உரம் கொள்வது. சிரீஷ (கடுகு) புஷ்பதுகளால் வைரத்தை வெட்ட முடியுமா? ஸபை முழுதுக்கும் புத்தி பேதலித்து விட்டது. சம்பு சாப (வில்லே); இனி எனக்கு நீதான் சரண். உன் ஜடத்தனத்தை லோகத்தின் மேல் போட்டுவிட்டாய். இப்போது ரகுபதியைப் பார்த்து துரும்பாகி விடு.

ஸிய (ஸீதா) மநஸில் மிகவும் காந்தல். இமைக்கும் நேரம் ஆவதும் நூறு யுகம் போல் இருக்கிறது.

ப்ரபுவை பார்க்கிருள். கீழே பார்க்கிருள். சஞ்சலமான கண்கள்—சந்த்ர மண்டல ஊஞ்சலில் இரு காமதேவ [ரூப] மீன்கள் விளையாடுவது போலிருக்கின்றன. குரல் [ரூப] வண்டை முக கமலம் மூடிக்கொண்டு விட்டது. வெட்கமெனும் இரவைப் பார்த்து அது வெளிப்படவில்லை. லோபி கைகளில் சிக்கிய பொன் போல கண்களினோரத்தில் கண்ணீர் நின்றது. தனக்குப் பெரும் கலக்கமுண்டாகிவிட்டதை நினைத்து வெட்கமடைந்தாள். தைர்யம் கொண்டு மநஸில் நம்பிக்கைக்கு இடம் அளித்தாள்.

உடல் மநஸ் சொல்-லால் என் வ்ரதம் (சபதம்) ஸத்யமானுல், என் சித்தம் ரகுபதி பத ஸரோஜத்தில் இணைந்துவிட்டது எனில்-பகவான்-எல்லார்-உளத்திலும் இருக்கிறுர் - என்னை ரகுபதியின் தாஸி ஆக்கிவிடுவார். இதில் ஸந்தேகமில்லை

ப்ரபுவின் பக்கம் பார்த்து சூள் சொன்னுள்.

க்ருபா நிதான ராமன் எல்லாம் தெரிந்து கொண்டார்.

ஸீதாவின் பக்கம் பார்த்தார்.

தனுஸைப் பார்த்தார்.

பாம்புக்குட்டியை கருடன் பார்ப்பது போலிருந்தது.

ரகுவம்ச மணி ஹர-கோதண்டத்தைப் பார்ப்பதை லக்ஷ்மணன் பார்த்தான். அவன் சரீரம் புளக மாகியது. ப்ரஹ்மாண்டத்தைக் காலால் அழுத்திச் சொன்னுன்:

திசி குஞ்ஜரங்களே,

கமட [-ஆமையே],

சேஷ,

கூர்ம,

தைர்யமாயிருங்கள்.
ஆடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.
ராமன் சங்கர தநுஸை இறுக்க விரும்புகிருர்.
என் ஆக்ஞையைக் கேட்டுக் கொள்ளுங்கள்.
எல்லாரும் கவனமாக இருங்கள்.''

ராமன் வில்லண்டை போனுன்.

ஸ்த்ரீ புருஷர்கள் தெய்வங்களேயும், தம் புண்யங்களேயும் நினைத்துக்கொண்டனர்

எல்லாருடைய ஸந்தேஹமும், அக்ஞாநமும்,
மூட ராஜாக்களின் கர்வமும்,
பரசுராமனின் கர்வத்தின் மஹிமையும்,
ஸுரர், முநிவரர்களின் பயமும்,
ஸீதாவின் கவலேயும்,
ஜநகரின் வருத்தமும்,
ராணிகளின் கொடிய துக்கக் காட்டுத்தீயும்,

சம்பு சாப மாம் பெரிய கனமான கப்பலில் சேர்ந்து ஏறிக் கொண்டனர்.

ராம பாஹு பல ரூபமான எல்லேயிலா கடலேக் கடக்க விரும்புகின்றன. ஆனுல் மாலுமி இல்லே!

ராமன் ஜனங்களேப் பார்த்தான்.

வரைந்த ஓவியம் போலிருந்தனர்.
க்ருபாயதனர், ஸிய (ஸீதா)வைப் பார்த்தார்.
மிகவும் கலங்கி விட்டிருக்கிருளென புரிந்துகொண்டார்.
வைதேஹி மிகவும் கலக்க மடைந்திருப்பதைப் பார்த்தார்;
அவளுக்கு இமைக்கும்நேரமும் கழிவது கல்பம் போலிருந்தது!

தண்ணீர் வேட்கையால் தவித்து, உடல் நீத்து, மரித்தபின்
நீர்க்குளமே கிடைத்தாலும் என்ன பலன்?

காலம் கடந்தபின், வயல் வரண்டபின்
மழை பெய்தாலும் என்ன பலன்?

வருந்தித்தான் என்ன பலன்?

இப்படி மநஸில் உணர்ந்து
மநஸுக்குள் குருவுக்கு நமஸ்காரம் பண்ணினார்,
மிக லாகவமாக தநுஸை எடுத்தார்.
எடுத்ததும் மின்னல் போல் தெரித்தது!
ஆகாசத்தில் தநுஸ் மண்டல வடிவமாகியது
எடுத்தார்
வளைத்தார்.
நாணேற்றினார்.
திறமிக்க இழுத்தார்.

யாருக்கும் தெரியவில்லை.—

ராமன் நிற்பதை எல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்

அதே ஸமயம் அவர் தநுஸை நடுவில் ஒடித்து விட்டார்.

புவநம் முழுதும் கோர. கொடூர முழக்கம் எழுந்து நிரம்பியது!

கோர, கொடிய. ஒலி புவநம் முழுதும் நிரம்பியது.
ரவியின் (ஸூர்யனின்) குதிரைகள் வழி பிறழ்ந்தன.
திக் கஜங்கள் பிளிறின.
பூமி ஆடியது
சேஷன், வராஹம், ஆமையும் ஆடின.
ஸுரர். அ-ஸுரர், முநிவர் செவிகளை மூடிக்கொண்டனர்.
எல்லாரும் அதிர்ச்சியுடன் அறிகின்றனர்.
ராமன் வில்லை இறுத்துவிட்டார்.
''ஜய! ஜய!!'' என்கிறார் துளஸிதாஸ்

சங்கர-வில் [ரூபமான] கப்பல்; முன்னர் மோஹ வசமாகி அதில் ஏறிக்கொண்டவர்கள் ரகுவர பாஹு பல கடலில் ஸமாஜம் முழுவதுடன் மூழ்கினர்.

வில்லின் துண்டுகள் இரண்டையும் ப்ரபு கீழே போட்டார்.

பார்த்து எல்லாரும் ஸந்தோஷமடைந்தனர்.

கௌசிகர் ரூப பாவந பயோநிதி [கடல்];

அதில் அழகான ப்ரேமை ஜலம் நிரம்பி ஆழம் காண முடியாதிருந்தது.

ராம ரூப ராகேசனே [இரவின் ஈசன் - பூர்ண சந்த்ரனே]ப் பார்த்து அதில் பெரிய அலே [ரூப] புளகாவளி உண்டாகிறது.

ஆகாசத்தில் பேரானந்த உணர்ச்சி பொங்க நிசானம் முழங்கியது.

தேவ வதூக்கள் (மகளிர்) பாடி ஆடினர்.

ப்ரஹ்மா முதலாக ஸுரர், ஸித்தர், முநீசர். (எல்லாரும்) ப்ரபுவைப் புகழ்ந்தனர்.

ஆசீர்வாதம் அளித்தனர்.

அநேக வண்ண புஷ்ப மாலேகள் சொரிந்தனர்.

கிந்நரர் ரஸம் மிக பாடினர்-

புவநமெங்கும் 'ஜய ஜய' வாணி நிரம்பியது-

வில்லொடிந்த ஒசை பற்றியே தெரியவில்லே.

ஸந்தோஷமாக எல்லா இடங்களிலும் ஸ்த்ரீ புருஷர் சொல்கின்றனர்:

'ராமன் பாரமான சம்பு தநுஸை ஒடித்துவிட்டார்'!

வந்திகள், மாகதர், மதி தீரரான ஸூதர் விருது சொல்கின்றனர். ஜனங்களெல்லோரும் யானே, குதிரை, மணி, தனம், ஆடைகள், த்ருஷ்டி கழிக்க தானம் வழங்குகின்றனர்.

ஜாஞ்ஜி, ம்ருதங்கம், சங்கு, ஸஹ்னை, பேரி, டோல், துந்துபி, எல்லாம்—பலவிதமான இனிமையான வாத்யங்கள்—முழங்கலாயின. அங்கங்கே ஸ்த்ரீகள் மங்கல கீதங்கள் பாடலாயினர்.

எல்லா ராணிகளும் ஸகிகளும் ஆனந்தமடைந்தனர். காய்ந்துவிட்ட நெல் பயிர்மேல் மழை பெய்தது போலிருந்தது.

ஜநகர் வருத்தம் நீங்கி, ஸந்தோஷமடைந்தார். தண்ணீரில் ஒருவன் நீந்தி நீந்தி ஓய்ந்துபோய் தவிக்கிறுன். அப்போது நிலம் தட்டுப்பட்டால்போல் ஆனுர்.

தநுஸ் உடைந்ததும் ராஜாக்கள் ஸ்ரீ(திரு)இழந்துவிட்டனர். பகலில் விளக்கு மங்குவது போலானுர்கள்.

ஸியவின் (ஸீதாவின்) ஸுகத்தை எப்படி வர்ணிப்பது! ஸ்வாதி நக்ஷத்ர நீர்த்துளிகள் கிடைத்ததும் களிக்கும் சாதகி பக்ஷி போலானுள்.

ராமனே லஷநு (லக்ஷ்மணன்) எப்படிப் பார்த்துக் கொண் டிருக்கிறுன்—

சந்த்ரனேப் பார்த்துக்கொண்டிருக்கும் சகோரக்குஞ்சு போலிருக்கிறது.

ஸதானந்தர் ஆக்ஞை இட்டார்.

ராமன் அருகே ஸீதா வந்தாள்.

அவளுடன் அழகான, ஸாமர்த்யமுள்ள ஸகிகள் இருக்கின் றனர். மங்களாசார கீதம் பாடிக்கொண்டு போகிறுர்கள். அவர்களுடைய அங்கங்கள் எல்லேயிலாத அழகு. — ஹம்ஸக் குஞ்சுகள் போல நடக்கின்றனர்.

ஸகிகளினிடை ஸீதா எப்படி அழகாக இருந்தாள்—அழகு களின் நடுவே ஒரு பேரழகுபோல (இருந்தாள்)! அவளது தாமரைக் கைகளில் ஜயமாலே—விளங்கியது. ஜகத்தை ஜயிக்கும் அழகு அவைகளில் நிறைந்திருந்ததுபோலிருந்தது. ஸீதாவின் சரீரத்தில் தயக்கம். மநஸில் எல்லாவற்றிலும் மேலான உத்ஸாஹம். ஒளிந்திருந்த ப்ரேமை எவருக்கும் தெரியவில்லே.

அருகில் போனுள்.

ராம அழகைப் பார்த்தாள்.

தீட்டிய ஓவியம்போல குமாரி நின்றுள்.

பார்த்தாள் - திறமையுள்ள ஸகி - நினேவு படுத்தினுள் - ''அழகு ஜய மாலேயை ராமனுக்கு அணிவிக்க வேண்டும்!''

கேட்டவுடன் ஜயமாலேயை உயர்த்தினுள். ப்ரேமையில் தன் வசமிழந்து நின்றுள்—அணிவிக்க முடியவில்லே.

அப்போது ஸீதாவின் இரு கரங்களும் தண்டுடன் இரு கமலங்கள் சந்த்ரனுக்கு ஜயமாலே இட இருந்தால்போல தோன்றியது.

தோழிகள் இந்த அழகைப் பார்த்து கீதம்பாட ஆரம்பித்தனர்

ராமன் கழுத்தில் ஸீதா ஜயமாலே இட்டாள்.

ராமன் மார்பில் ஜயமாலே பார்த்து தேவர் புஷ்ப மாரி பொழியலாயினர்.

ஸூர்யனேப் பார்த்து குமுதக் கூட்டம்போல ராஜாக்கள் வெட்கம் அடைந்தனர்.

ஜநக புரத்திலும் ஆகாசத்திலும் வாத்யங்கள் முழங்கின.

துஷ்டர்களின் முகம் வெளிறியது.

ஸாதுக்கள் ஸந்தோஷமடைந்தனர்.

தேவர், கிந்நரர், மநிதர், நாகர், முநீசர்கள் 'ஜய ஜய' என ஆசீர்வதித்தனர். அப்ஸராக்கள் பாடினர். ஆடினர். அடுத்து அடுத்து புஷ்பச்செண்டு பொழியலாயினர்.

அங்கங்கே ப்ராஹ்மணர் வேதம் முழக்குகின்றனர்.

வந்திகள் விருதாவளி பாடுகின்றனர்.

'ராமன் தநுஸை இறுத்தார், ஸீதாவை வரித்துக் கொண்டார், என்று பூமி பாதாளம் ஸ்வர்க்கங்களில் புகழ் பரவியது.

ஜநக புர (மிதிலையின்) ஸ்த்ரீ - புருஷர் எல்லாரும் ஆரதி எடுக்கின்றனர். தம் செல்வ நிலை மறந்து, சக்திக்கு மீறி தானம் கொடுக்கிறார்கள்.

ச்ருங்காரமும் அழகும் ஒரே இடத்தில் சேர்ந்ததுபோல— ஸீய(ஸீதா)-ராம ஜதை அழகாயிருந்தது.

'ஸீதா! ப்ரபு சரணங்களைத் தொடு. நமஸ்காரம் பண்ணு' என தோழிகள் சொல்கின்றனர்.

ஸீதா மிகவும் பயப்படுகிறாள் தொடவில்லை. கௌதமர் - மனைவியின் கதியை எண்ணி மிகவும் பயப்படுகிறாள்.

இந்த அ-லௌகிக [இவ்வுலகத்தியதல்லாத] ப்ரீதியைத் தெரிந்துகொண்டு ரகுவம்ச மணி மநஸுக்குள் சிரித்துக் கொண்டார்.

அப்போது ஸீயவைப் பார்த்து ராஜாக்கள் ஆசைப் பட்டனர். துஷ்டர், நல்ல பிறப்பில்லாத மூடர் மநஸில் கோபம் வந்தது. அபாக்யவான்கள் எழுந்து எழுந்து கவசம் அணிந்து கூச்சலிடலாயினர்.

''ஸீயவைக் கைப்பற்று'' என்றான் ஒருவன்

'ராஜகுமாரர் இருவரையும் பிடித்துக் கட்டு; தநுஸை ஒடித்ததுமே ஆசை பூர்த்தியாகிவிடாது. நாங்கள் உயிரோடு இருக்கும் வரை குமாரியை யார் வரிக்கமுடியும்? விதேஹன் அவர்களுக்கு உதவி பண்ணினால், போரில் இந்த இரு ஸஹோதரர் உடன் அவரையும் ஜயித்து விடுங்கள்' என்றான் ஒருவன்.

அவர்கள் சொன்னதைக் கேட்டு நல்ல ராஜாக்கள் சொன்னுர்கள்—இந்த ராஜ ஸமாஜத்தைப் பார்த்து வெட்கமே வெட்கிப் போகிறது. பலம், ப்ரதாபம் வீரம் பெருமை கட்டுப்பாடு எல்லாம் வில்லோடு போய்விட்டன. அந்த சூரத் தனம் இனி எங்கிருந்தாவது அடைய முடியுமா? இப்படி இருக்கும் புத்திக்குத்தான் அப்போதே விதி மூஞ்சியில் கரி பூசி விட்டாரே! ஈர்ஷை, மதம், கோபங்களை விட்டு கண் நிறைய ராமனைப் பார்த்துக் கொள்ளுங்கள். தெரியாமல் லக்ஷ்மண - கோப - பலமிகு - அக்நியில் விட்டிலாகாதீர்!

வைநதேய [கருட]னின் பலியை காகம் விரும்பியதுபோல

நாக-அரியின் [யானையின் பகை - சிங்கத்தின்] பலியை முயல் விரும்பியதுபோல

காரணமிலாமல் கோபிப்பவன் தன்க்ஷேமத்தை விரும்பியதுபோல

சிவ த்ரோஹி எல்லா ஸம்பத்தும் விரும்பியது போல

லோபியும், உழல்பவனும் கீர்த்தி விரும்பியது போல

காமி புருஷன் தனக்குக் களங்கமிருக்கக் கூடாதென விரும்பியது போல

ஹரி-பத-பராமுகன் பரமபதம் விரும்பியதுபோல இருக்கிறது உங்களுடைய ஆசை'

இந்தக் கோலாஹலத்தைப் பார்த்து ஸீயா பயந்துவிட்டாள். அதற்குள் ஸகிகள் அவளைத் தாயார் இருந்த இடத்துக்கு கூட்டிக் கொண்டு போய்விட்டனர்.

ராமன் ஸ்வபாவமாக குருவினருகே போனுன். மநஸுக்குள் ஸீதாவின் ஸ்நேஹத்தை வர்ணித்துக்கொண்டு போனுன்.

இங்கே ராணிகளும் ஸீதாவும் பெருங்கவலைக்குள்ளாயினர்—விதி இனி என்ன பண்ணப் போகிருரோ!

ராஜாக்கள் சொன்னதைக் கேட்டு லகநு (லக்ஷ்மணன்) இங்கு மங்கும் பார்க்கிருன். ஆனுல் ராமனிடம் பயம். பேச முடிய வில்லை. கண் சிவந்தது. புருவம் நெரிந்தது. கோபமாக ராஜாக்களைப் பார்க்கிருன். மத யானைக் கூட்டத்தைப் பார்த்து சிங்கக்குட்டிக்கு ஆர்வம் உண்டாவதுபோல் இருந்தது.

*பரசு ராம வருகை

கலவரத்தைப் பார்த்த புர ஸ்த்ரீகள் கலங்கினர். எல்லாரும் சேர்ந்து மஹிபர்களை - (மந்நர்களைத்) திட்டினர்.

அதே ஸமயத்தில் சிவ நநுஸ் முறிந்ததைக் கேட்டு ப்ருகு-பதி-கமல-பதங்கா [பரசுராமன் - ப்ருகு ருஷியின் வம்ச கமலத்துக்கு ஸூர்யன்] அங்கு வந்தார்—

பார்த்து ராஜாக்கள் எல்லாரும் பதுங்கினர். லகிடு (கழுகு) பாய்வதைப் பார்த்து காடை போலப் பதுங்கினர். கௌர [வெண்ணிற] தேஹத்தில் விபூதியின் நல்ல சோபை; பரந்த நெற்றியில் த்ரிபுண்ட்ரம் (3 பட்டை) திகழ்ந்தது. தலையில் சடை. சந்த்ரன் போன்ற முகம் சோபித்தது. கோபமாய் இருந்ததால் கொஞ்சம் செம்மை படர்ந்திருந்தது. புருவங்கள் நெரிந்தன. கோபத்தால் கண்கள் சிவந்திருந்தன. ஸ்வபாவ மாகவே அவர் பார்த்தார். அதே கோபமாகத்தான் தோன்றியது. காளை போன்ற கழுத்து; பரந்த மார்பு; விரிந்த தோள்கள்; அழகான யக்ஞோப வீதம்; ருத்ராக்ஷ மாலை; மான் தோல் மேல் ஆடை; அரையில் மர உரி; வரிந்து கட்டிய இரண்டு அம்புத் தூணிகள்: கையில் வில்; தோளில் பரசு ! (கோடரி)

சாந்தமான வேஷம் ! கடினமான செயல் !

ஸ்வரூபத்தை வர்ணிக்க முடியாது.

வீர ரஸம் முநிவர் வேஷம் கொண்டு ராஜாக்கள் இருந்த இடத்துக்கு வந்தது போலிருந்தது.

ப்ருகுபதியின் (பரசுராமனின்) கொடிய வேஷத்தைப்பார்த்து ராஜாக்கள் பயத்தால் கலங்கிவிட்டனர். தந்தையின் பெயரையும் சேர்த்து தம் பெயரைச் சொல்லி தெண்டனிட்டு நமஸ்காரம் பண்ணலாயினர்.

யாரையேனும் அவர் நல்ல பாவத்துடன் பார்த்தாலும் அவன் 'என் ஆயுள் தீர்ந்தது' என எண்ணினான்.

ஜநகர் வந்தார். சிரம் தாழ்த்தினார்.

ஸியவை (ஸீதாவை) அழைத்தார். நமஸ்காரம் பண்ணச் சொன்னார்.

பரசுராமன் ஆசீர்வாதம் கொடுத்தார்.

---

18 தோஹாக்களில் இது ஸ்ரீ பகவத் கீதாஸாரம்.

18 அத்யாயங்களில் பகவான் அர்ஜுனனை ஸ்வதர்மத்தைச் செய்ய நிலைபடுத்தினார்.

இங்கே பரசுராமனை பரதர்ம யுத்தத்திலிருந்து திருப்பினார்.

ஸகிகளுக்கு ஸந்தோஷம்! கெட்டிக்காரிகள் — 'ஸுமங்கலி' என தம் ஸமாஜத்துக்கு சேர்த்துக்கொண்டனர்.

விச்வாமித்ரர் வந்து ஸந்தித்தார். ஸஹோதரர் இருவரையும் சரண கமலங்களில் கிடத்தினார். 'ராமன் - லஷன் (லக்ஷ்மணன்) - தசரதரின் பிள்ளைகள்' என்றார்.

பரசுராமன் நல்ல ஜதையைப் பார்த்தார். ஆசீர்வாதம் பண்ணினார். ராமனைப் பார்த்து திகைத்து நின்றார். கண்கள் மங்கின - ரூபத்தின் முதலுமில்லை முடிவுமில்லை. மாரன் (காமன்) மதத்தை அறச்செய்வது!

மீண்டும் விதேஹனைப் பார்த்தார் ''இத்தனை கூட்டம் எதற்கு'' என்றார்.

தெரிந்திருந்தும் தெரியாதவர்போல கேட்கிறார் — அவர் சரீரத்தில் கோபம் பரவியது.

ஜநகர் எல்லாம் தெரிவித்தார்.

பரசுராமன் அதைக்கேட்டு உடனே திரும்பி மறுபக்கம் பார்த்தார் — தநுஸின் இரு துண்டுகள் நிலத்தில் கிடந்தது தெரிந்தது. எல்லையிலாத கோபத்துடன் கடுமையாகச் சொன்னார்: ''சொல், ஜட, ஜநக, தநுஸ் ஒடித்தவன் யார்? சீக்கிரம் சொல், மூட! இல்லாவிடில் எந்த மட்டில் உன் ராஜ்யம் உண்டோ அத்தனை நிலத்தையும் புரட்டிவிடுவேன்.

எல்லையிலாத பயத்தால் ராஜா பதில் சொல்லவில்லை.
குடில ராஜாக்கள் மநஸுக்குள் மகிழ்ந்தனர்.

தேவர்கள், முநிவர், நாகர், நகர ஸ்த்ரீ—புருஷர் அவ்வளவு பேரும் எல்லை கடந்த பயமடைந்து சிந்திக்கிறார்கள்—

ஸீய (ஸீதாவின்) மாதா மநஸுக்குள் துக்கமடைகிறாள்— 'திரண்டு வந்த கார்யத்தை விதி கெடுத்துவிட்டரே!'

ப்ருகுபதியின் (பரசுராமரின்) ஸ்வபாவத்தைக் கேட்டு ஸீதாவுக்கு அரை இமைப்பு நேரம் கழிவதும் கல்பகாலம் போல் ஆகியது.

ஜனங்களெல்லாரும் பயத்துடன் இருப்பதையும், ஜாநகியின் கஷ்டத்தையும் ஸ்ரீ ரகுவீரன் பார்த்தார். அவர் மநஸில் இன்பமோ துன்பமோ துளியும் இல்லை. —சொன்னார். ''நாத! சம்பு துநஸை ஒடித்தவன் தங்கள் தாஸர்களில் ஒருவன்— என்ன ஆக்ஞை! என்னிடம் சொல்லலாமே!''

கோப மிகுந்த முனிவர் சிடுத்துச் சொன்னார்: ''ஸேவகனின் பணி செய்பவன்தான் ஸேவகன். சத்ருவின் கார்யம் பண்ணிய பின் போரிட வேண்டும். கேள், ராம. சிவ த்நுஸை ஒடித்தவன் ஸஹஸ்ர பாஹுவைப் போலவே என் சத்ரு! அவனை ஸமாஜத்தை விட்டுப் பிரித்து ஒதுக்கி நிறுத்து. இல்லாவிடில் எல்லா ராஜாக்களும் கொல்லப்படுவார்கள்'

முனிவர் சொன்னதைக் கேட்டு லகன் (லக்ஷ்மணன்) சிரித்தான். பரசு (கோடரி) ஏந்தியவரை அவமானப் படுத்திச் சொன்னான்—''தேவ கேளுங்கள். பிள்ளைப் பிராயத்தில் ஏராள மான தநுஸ்களை ஒடித்தோம். ஆனால், கோஸாஈ, ஒருபோதும் தாங்கள் இப்படி கோபப்படவில்லையே! உங்களுக்கு இந்த தநுஸ் மேல் இத்தனை சொந்தம் ஏனோ?''

கேட்டு ப்ருகுகுலகேது சொன்னார்; ''ராஜாப்பயலே, நீ கால வசமாகிவிட்டாய். நிதானித்துப் பேசவில்லை. விச்வப் புகழ் பெற்ற - த்ரிபுராரி (சிவ) தநுஸும் - மற்ற தநுஸ்களும் ஒன்றா?

லகன் சிரித்தான் ''எங்களைப் பொறுத்தவரை எல்லாம் ஒன்றேதான். ஒரு பழைய வில்லை ஒடித்ததில் எந்த லாபமுமில்லை கேடுமில்லை. அது புதிய வில் என எண்ணி ராமன் ஏமாந்து பரிசோதிக்கப் பார்த்தார். தொட்டதும் அது விட்டுப் போய் விட்டது. அது ரகுபதியின் குற்றமில்லை. முனிவரே வீணாக ஏன் கோபப்படுகிறீர்கள்?''

பரசுவைப் பார்த்துக்கொண்டு சொன்னார்;

அடே, முட்டாள்! என் ஸ்வபாவத்தைப்பற்றி நீ கேட்ட தில்லையா? பாலகன் என்று உன்னைக் கொல்லாமல் வீடுகிறேன். ஜடமே! என்னை ஸாதாரண [சொத்தை] முனிவன் என்று எண்ணிக் கொண்டிருக்கிறாய். நான் பால ப்ரஹ்மசாரி. எல்லை யிலாத கோபப்படுபவன். விச்வமெல்லாம் தெரியும் — நான் க்ஷத்ரிய த்ரோஹி. புஜ பலத்தால் பூமியில் ராஜாக்கள் இல்லாமல் செய்தேன். பல தடவை நிலத்தை மஹிதேவர்க்குக் (ப்ராமணர்க்கு)க் கொடுத்தேன். ஸஹஸ்ர பாஹுவின் புஜங்களை வெட்டித்தள்ளிய இந்தப் பரசுவைப் பார்.

மஹீப (ராஜ)குமாரா! மஹீச-கிசோர, (ராஜகுமார) உன் மாதா பிதாக்களை சோக வசமாக்காதே. கர்ப்பத்தில் உள்ள சிசுக்களையும் கொல்ல வல்ல என் பரசு[வைப்பார்-] மஹா கோரமானது.

லகனு (லக்ஷ்மணன்) சிரித்து மெதுவாகச் சொன்னான்: ''அஹோ! முநீஸா, உங்களை மஹாவீரன் என எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். அடிக்கடி எனக்கு பரசுவைக் காட்டு கிறீர்கள். வாயால் ஊதி, மலையைப் பறக்கச் செய்யப் பார்க்கிறீர்கள். இங்கே பூசணிப் பிஞ்சு ஏதுமில்லை—சுட்டு விரலைப் பார்த்து செத்து விழாது— இந்த பரசு, தநுஸ், பாணம் பார்த்து நான் கொஞ்சம் பெருமைப்படுத்திச் சொன்னேன். ப்ருகு வம்சத்தவர் என எண்ணி, யக்ஞோப வீதத்தையும் பார்த்து நீங்கள் சொன்னதையெல்லாம் கேட்டும், கோபத்தை அடக்கிக்கொண்டேன்; பொறுத்துக் கொண்டேன். [தேவர்] ஸுரர், மஹிஸுரர், ஹரிஜன் [பகவத் பக்தர்], பசு, மேல் எம் குலம் வீரம் காட்டாது. கொன்றால் பாபம். தோற்றால் கெட்ட பெயர். எனவே நீங்கள் கொன்றாலும் நான் உங்கள் காலில் விழத்தான் வேண்டும். உங்கள் சொற்கள் கடுமையான வஜ்ரத்துக்கு ஸமமாயிருக்கின்றன. தநுஸ், பாணம், கோடரி எல்லாம் வீணாக எடுத்துக்கொண்டு திரிகிறீர்கள். அவைகளைப் பார்த்து நான் உசிதமில்லாதபடி சொல்லிவிட்டேன். மஹாமுநி, தீர, மந்நித்து விடுங்கள்.''

இதைக்கேட்டு ப்ருகு வம்ச மணி கோபமடைந்து கம்பீரமான குரலில் சொன்னார்: கௌசிக (விச்வாமித்ர) கேள். இந்தப் பிள்ளை மந்தமானவன்; குடிலன்; காலவசமாகிவிட்டான். தன் குல நாசகன். பாநு வம்ச ராகேச [சந்த்ர]னில் இவன் களங்கம். கட்டுப்பாடே இல்லாதவன். மூர்க்கன். வெட்கமில்லாதவன். ஒரு க்ஷணத்தில் இவன் காலனுக்குக் கவளமாவான். ஓங்கி அறைந்து சொல்கிறேன்! இனி என்மேல் குற்றமாகாது. இவன் மிஞ்ஜ வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், நீங்கள் அவனுக்கு என் ப்ரதாபம், கோபம், பயம் எல்லாம் எடுத்துச் சொல்லித் தடுத்து வையுங்கள்.

லஷன் சொன்னான்: ''முநிவரே, உங்கள் புகழை உங்களைத் தவிர வேறு யார் சொல்லமுடியும்? உங்கள் வாயால் உங்கள் செயல்களை திருப்பித் திருப்பி அநேக விதமாக வர்ணனை பண்ணி விட்டீர்கள். இன்னம் ஸந்தோஷமாகவில்லை எனில் மறுபடி கொஞ்சம் சொல்லுங்கள்.

''கோபத்தை[த்தடுத்து] அடக்கிக்கொண்டு ஸஹிக்க முடியாத வேதனையை ஸஹிக்கவேண்டாம். வீரத்தொழில் செய்பவர் நீங்கள். அசைக்க முடியாத தீரர். திட்டுவது உங்களுக்கு அழகல்ல. சூரர்கள் போரில் செயல் நிகழ்த்துவர்.

சொல்லி விளக்க மாட்டார்கள். போரில் சத்ருவின் எதிர் வந்து விட்டு பயங்கொளிகள்தான் தம் ப்ரதாபத்தைப் பற்றிப் பேசுவர். நீங்களோ காலனே உடன் கூட்டி கொண்டுவந்திருக்கிறீர்கள் போல அடிக்கடி எனக்காக கூப்பிடுகிறீர்கள்.

லஷனின் கடோர வார்த்தைகளேக் கேட்டு பரசுவைக் கையில் எடுத்துக்கொண்டார். ''இனி ஜனங்கள் என்மேல் பழி சொல்ல மாட்டார்கள். கடுமையாகப் பேசும் இந்த பாலகன் வதம் பண்ணத் தகுந்தவனே. பாலன் என்று இவனே இவ்வளவுக்கும் விட்டு வைத்தேன். ஆனுல் இனி இவன் சாகவே வந்துவிட்டான்'' என்ருர்.

கௌசிகர் சொன்னுர்: '' தப்பை மந்நித்து விடுங்கள். பாலகனின் குண-தோஷங்களே ஸாதுக்கள் பொருட்படுத்த மாட்டார்கள்.''

''என் கோடரி கூர்மையானது. காரணமில்லாவிட்டாலும் கோபப்படுபவன் நான். குருத்ரோஹி, குற்றவாளி என்முன் நிற்கிருன்—உத்தரம் சொல்கிருன்—அவனேக் கொல்லாமல் விட்டு விட்டேன்! கௌசிகரே—, இது உங்கள் சீலத்துக்காகத்தான். இல்லேயெனில் இந்தக் கொடிய கோடரியால் துண்டமாக்க ஒரு துளி ச்ரமத்தோடு குருவின் கடன் தீரும்—

காதிஸூநு (விச்வாமித்ரர்-காதியின் பிள்ளே) மநஸுள் சிரித்துக்கொண்டு-சொல்லிக்கொண்டார்- ''முநிவருக்கு எல்லாம் பச்சைப்பசேரென்றே தோன்றுகிறது. இந்தத் துண்டம் இரும்பு மயமானது. கரும்பு மயமானதல்ல - இந்த அறிவிலி இதை இன்னமும் அறிந்துகொள்ளவில்லே.

லஷன் சொன்னுன்: முநிவரே உங்கள் சீலம் ஸம்ஸாரம் எங்கும் தெரிந்ததே! அது யாருக்குத் தெரியாது? மாதா பிதாக்களின் கடன் தீர்த்து விட்டீர்கள். குரு கடன் எஞ்சி யிருந்தது. அதைப்பற்றி மநஸில் மிகவும் கவலேப்படுகிறீர்கள். அதை என் தலேயில் போடுகிறீர்கள் (என் கணக்கில் எழுதி விட்டீர்கள்) போலிருக்கிறது! பலநாட்களாகிவிட்டது. வட்டியும் நிறைய ஆகியிருக்கும். மஹாஜன் அவர்களே [கடன் கொடுத்தவர்] கூப்பிடுங்கள்—[பண] பையை அவிழ்த்து உடனே கொடுத்து விடுகிறேன்.''

காரமாக [குத்தும்படி] அவன் சொன்னதைக் கேட்டு பரசுராமர் கோடரியை எடுத்தார்.

ஸபையில் ''ஹாய் ஹாய் [ஐயோ, ஐயோ]'' என வீரிட்டனர்.

'' ப்ருகுவர, எனக்கு பரசு காட்டுகிறீர்களா! ந்ருப [மன்னர் களின்] தரோஹி - விப்ரரெனக் கருதி உங்களைக் கொல்லாமல் விடுகிறேன்; உங்களுக்கு ஒருபோதும் நல்ல மஹா வீரனுடன் போர்க்களத்தில் பெரிய கார்யம் இருக்கவில்லை [போரிட நேரவில்லை]. த்விஜ தேவதா [ப்ராஹ்மண தெய்வமே], வீட்டில் தான் உங்களுக்குப் பெருமை உண்டாகும்.''

எல்லாரும் கூச்சலிட்டு ''தகாது, தகாது'' என்றனர்.

இங்கிதமாக ரகுபதி லகனை (லக்ஷ்மணனை)த்தடுத்தார்.

லஷனின் உத்தரம் ஆஹுதி போலிருந்தது. ப்ருகுவரரின் கோபம்-தீ. அது கொழுந்து விட்டெழுவதைப் பார்த்து ரகு குல பாநு ஜலம் போல சொன்னர்.'' நாத ! பாலகன்மேல் அருள் செய்யுங்கள். பால்முக பிள்ளைபோல கபடமிலாதவன். இவன் மேல் கோபப்படாதீர்கள்: தங்கள் ப்ரபாவத்தைக் கொஞ்ச மாவது தெரிந்துகொண்டிருந்தானென்றுல் இந்த அறியாப்பிள்ளை தங்களுக்கு ஸமமாக வாதம் செய்வானு? பிள்ளை துடுக்காக ஏதாவது செய்தால் குரு, பிதா, மாதா மநஸ் ஆனந்தப்படுகிறது. இவனை சிசு [குழந்தை], ஸேவகன் என்று கருதி க்ருபை பண்ணுங்கள். தாங்கள் தீரர், பொறுமையுள்ளவர், முநிவர், க்ஞாநி.

ராமன் சொன்னதைக் கேட்டு கொஞ்சம் குளிர்ந்தார்.

அதற்குள் லஷன் மறுபடியும் ஏதோ சொல்லி சிரித்தான். சிரித்ததைப் பார்த்து நகத்திலிருந்து சிகை வரை கோபம் நிரம்பி விட்டது. சொன்னர். ''ராம, உன் தம்பி மஹா பாபி. அவனுடைய சரீரம்[தான்] வெண்மை. ஆனுல் அவன் மநஸ் கருமையானது. கால கூடவாய் - பால் முகமல்ல. ஸ்வபாவமாக கோணல்தனம். உன் போலல்ல. ஃடையன்! என்னை ம்ருத்யுவுக்கு ஸமம் என தெரிந்து கொள்ள [பார்க்க]வில்லை.

லஷன் சிரித்துச் சொன்னன்: ''முநிவரே, கேளுங்கள், கோபம் பாபத்தின் மூலம். அதன் வசமாகி ஜனங்கள் அநுசிதம் (பொருத்தமலாதது) செய்து விடுகின்றனர். லோகத்துக்கு விரோதமானது பண்ணி விடுகின்றனர்.

முநிராயா, நான் உங்கள் ஸேவகன். கோபம் விட்டு இப்போது தயவு பண்ணுங்கள். உடைந்துபோன வில் கோபப் படுவதால் ஒட்டாது. உட்காருங்கள். கால் கடுக்கும். அது மிகவும் ப்ரியமான வில் எனில் ஒரு உபாயம் பண்ணுங்கள். மிகச் சிறந்த கை வேலைத்திறன் உள்ளவனை வரவழைத்து சேர்த்து இணைத்துவிடுங்கள்''

லஷன் சொன்னது கேட்டு ஜநகர் பயந்துவிட்டார். ''பேசாமலிரு. நீ செய்வது தகாது. இது நல்லதல்ல'' என்றார்.

''சின்ன குமாரன் மிகவும் பொல்லாதவன்'' என்று புர ஸ்த்ரீ புருஷர் கிடு கிடு என நடுங்கினர்

அஞ்சாமல் அவன் சொல்லச்சொல்ல. அதைக் கேட்கக் கேட்க ப்ருகுபதியின் கோபம் தேஹத்தை எரித்தது. பலம் குன்றிக்கொண்டு வந்தது. ராமனுக்கு பரிவு காட்டி சொன்னார். ''உன் தம்பி என்று இவனை விடுகிறேன். இவனுடைய மநஸ் அழுக்கானது. தேஹம் எவ்வளவு அழகாக இருக்கிறது! விஷம் நிரம்ப உள்ள தங்கப்பாத்ரம் போன்றவன்.

கேட்டு லச்சிமன் மறுபடியும் சிரித்தான்.

ராமன் கடுமையாக நோக்கினான்.

அவன் வக்ரமாகப் பேசுவதை விட்டு, வெட்கப்பட்டு, குருவிடம் போய்விட்டான்.

ராமன் இரு கைகளையும் கூப்பினான். எல்லையிலாத பணி வுடன், குளுமையாக, மெதுவாக சொன்னான். 'நாத, கேளுங்கள்: நீங்கள் ஸஹஜமாக க்ஞாநி. பாலகன் வார்த்தைகளை கவனிக்காதீர்கள். குளவியின் ஸ்வபாவமும், பாலகனின் ஸ்வபாவமும் ஒன்றே. ஸாதுக்கள் அதை ஒருபோதும் சீண்ட மாட்டார்கள். கார்யம் எதையும்கூட அவன் கெடுக்கவில்லை. நாத, உங்களுக்குக் குற்றம் இழைத்தவன் நான். க்ருபை, கோபம், வதம், கட்டு — என்ன செய்ய வேண்டுமோ, தாஸனாக என்னை எண்ணி என்னைச் செய்யுங்கள். என்ன விதமாகச் செய்தால் உங்கள் கோபம் போகுமோ அதை சீக்ரம் சொல்லுங்கள், உடனே நான் அதே உபாயம் பண்ணுகிறேன்.

முனிவர் சொன்னார் : ''ராம, கோபம் போகவேண்டும் என்றால் எப்படிப் போகும்? இப்போதும் கூட உன் தம்பி [என்னை முகத்தைச் சுளித்து இளக்காரமாகப் பார்க்கிறான்] பார்வையில் தீமை இருக்கிறது. அவன் கழுத்தில் கோடரி நான் வைக்க வில்லையே! பின் கோபப்பட்டுத்தான் என்ன பண்ணினேன்! என் கோடரியின் பயங்கரமான செயல்களைக் கேட்டதும் ராஜாக்களின் மனைவிகளின் கர்ப்பம் விழுகிறது. அந்தப் பரசு கையில் இருந்தும் இந்த வைரி பூப கிஸோரன் (பகைவனான ராஜகுமாரன்) உயிரோடிருப்பதைப் பார்த்துக்கொண்டிருக் கிறேன். கை ஓடவில்லை. கோபத்தால் மார்பு எரிகிறது. ராஜாக்களை மாய்த்த கோடரி மழுங்கிவிட்டது. விதி இடமாகி விட்டார். அதனால் என் ஸ்வபாவம் மாறிவிட்டது. இல்லா விடில் என் ஹ்ருதயத்தில் எப்போதுதானாகட்டும், க்ருபை ஏது? ஸஹிக்க முடியாத துக்கத்தை இன்று தயா ஸஹித்துக்கொண்டு விட்டது.''

கேட்டதும் ஸௌமித்ரி (ஸுமித்ராவின் பிள்ளை லக்ஷ்மணன்) சிரித்தான். தலை வணங்கினான். ''க்ருபாமூர்த்தி. அனுகூல மான காற்று! பேசுவது புஷ்பம் சொரிவது போல இருக்கிறது. முனிவரே, க்ருபை பண்ணினால் உங்கள் தேஹம் எரிகிறது எனில் கோபப்பட்டால் விதாதா தான் உங்களைக் காப்பாற்ற வேண்டும்!''

''பார், ஜனக! இந்த ஜட பாலகன் பிடிவாதமாக (சாக விரும்புகிறான்.) யம புரத்தில் டேரா போட்டுக்கொள்ள விரும்புகிறான். உடனே இவனை என் கண்ணில் படாமல் அப்பால் அகற்றுவதற்கென்ன? இந்த ராஜாப்பயல் பார்க்க சின்னவன் — ஆனால் மிகவும் கெட்டவன்.''

லகநு சிரித்தான். மநஸுக்குள் சொல்லிக்கொண்டான். ''கண்களை மூடிக்கொண்டால் எங்கும் ஏதும் தென்படாது.''

பரசுராமன் அப்போது ராமனிடம் சொன்னார். அவர் உளத் தில் வெகு கோபம். ''சம்பு ஸராஸனத்தை[வில்லை]ஒடித்து, சட, நீ எனக்கு நல்லுரை சொல்கிறாய்! உன் ஸம்மதத்துடன்தான் உன் தம்பி இப்படி கடுமையாகப் பேசுகிறான். நீ கைகளைச் சேர்த்துக்கொண்டு பொய்யாக பணிவு காட்டுகிறாய். போரிட்டு என்னை ஸந்தோஷப் படுத்து. இல்லாவிடில் ராமன் என்று சொல்லிக்கொள்வதை [பெயரை] விடு. சிவத்ரோஹி! பாசாங்கு பண்ணாதே! போரிடு. இல்லாவிடில் உன் தம்பியுடன் உன்னைக் கொன்று விடுவேன்.'' ப்ருகுபதி கோடரியை எடுத்து நகர்கிறார்.

ராமன் சிரம் வணங்கி மநஸுக்குள் சிரிக்கிறுன்; குற்றமோ லஷனுடையது. கோபம் என்மேல் கொள்கிறுர்! சில இடங்களில் நேர்மையும்கூட பெரிய தோஷமாகி விடுகிறது. பிறை மதியை ராஹுவும் [தொடுவதில்லே] கவ்வுவதில்லே. கெட்டது என்று தெரிந்தும் ஜனங்கள் எல்லாரும் வந்தனம் பண்ணுகிறுர்கள்; சொன்னுன்: ''முநீசா, கோபத்தை விடுங்கள். உங்கள் கையில் கோடரி இருக்கிறது. இந்தத் தலே உங்கள் முன்னுல் இருக்கிறது. எப்படிச் செய்தால் உங்கள் கோபம் தீருமோ அப்படியே செய்யுங்கள். என்னே உங்கள் பணியாளாக எண்ணிக் கொள்ளுங்கள். ப்ரபு, ஸேவகன் —இருவரிடை சமர் ஏது? விப்ரவர கோபத்தை விடுங்கள். பாலகன் மேலும் தப்பில்லே. அவனும் வேஷத்தைப் பார்த்துத்தான் ஏதோ சொன்னுன். கோடரி, பாணம், தனுஸ் ஏந்தியிருப்பதைப் பார்த்து, பெரிய வீரன் என எண்ணிவிட்டான். அதனுல்தான் இவனுக்குக் கோபம் வந்தது. பெயர் தெரியும். ஆனுல் உங்களே அவன் அடையாளம் கண்டுகொள்ளவில்லே. வம்சத்தின் ஸ்வபாவமாக அவன் உத்தரம் சொன்னுன். நீங்கள் முநிவர் மாதிரி வந்திருந் தால் இந்த சிசு உங்கள் பாததூளியை சிரமேல் அணிந்திருப்பான். அறியாப் பிள்ளேயின் தப்பை மன்னித்து விடுங்கள். விப்ரர் உளத்தில் யெரிய க்ருபை உண்டாக வேண்டும்.

''நாத! உங்களுக்கும் எங்களுக்கும் என்ன இணே! எப்படி? சொல்லப் போனுல் பாதமெங்கே, தலேயெங்கே! என் சின்னப் பெயர் 'ராமன்' மாத்ரமே! தங்கள் பெயரோ 'பரசு'வுடன் சேர்ந்து பெரியது. தேவ. என்னிடம் ஒரு குணம் மட்டுமே இருக்சிறது. [சொத்து, திறமை, சிறப்பு] உங்களுக்கோ ஒன்பது குணங்கள்! [ருஜு, தபஸ், ஸந்தோஷம், பொறுமை, இந்த்ர்யத்தை வெற்றி பெற்றது, ஸஹிப்பு, தயா, அவிப்பு, சீலம்] எல்லா விதத்திலும் நாங்கள் உங்களுக்கு விட்டவர்கள் தான். விப்ர, குற்றத்தை மன்னித்து விடுங்கள்.''

திருப்பித் திருப்பி 'முநி' 'விப்ர வர' என்று ராமன் பரசுராமனேச் சொல்லவும், அவர் கோபச்சிரிப்புடன் சொன்னுர்: 'நீயும் உன் தம்பியைப் போலவே கெட்டவன்தான்! நீ என்னே ஸாதாரண த்விஜனுகத்தான் நினேத்துவிட்டாய். நான் எத்தகைய விப்ரன் என்று உனக்குச் சொல்கிறேன்

தநுஸ்—கரண்டி

பாணம்—ஆஹுதி

என் கோபம்—கொழுந்து விட்டெரியும் அக்நி. என தெரிந்து கொள்.

நால்வகைப் படை—ஸமித்

பெரிய பெரிய ராஜாக்கள்—யாக பலிப் பசு ஆகின்றனர்.

இதே பரசுவால் வெட்டி பலி இடுகிறேன். இப்படி யுத்த—யக்ஞம், ஜபம் கோடி பண்ணியிருக்கிறேன். என் ப்ரபாவம் உனக்குத் தெரியாது. அதனால் 'விப்ர' என்ற சாக்கில் நீ என்னை அவமானப் படுத்திப் பேசுகிறாய். தநுஸை ஒடித்தாய். அதனால் திமிர் அதிகமாக வளர்ந்து விட்டது. ஜகத்தையே ஜயித்து விட்டதாக கர்வத்துடன் நிற்கிறாய்.''

ராமன் சொன்னான்: ''முநி, யோசித்துப் பேசுங்கள். உங்கள் கோபம் மிகப் பெரியது. என் தப்பு மிகச் சின்னது. பழய தநுஸ்—தொட்டதும் விட்டுப்போயிற்று. எதைப் பற்றி நான் கர்வப்பட? ப்ருகு நாத, ஸத்யமாகச் சொல்கிறேன், கேளுங்கள்—விப்ரர் என்று சொன்னால் உங்களை இழிவு படுத்தியது எனில், அச்சத்துடன் நாங்கள் சிரம் பணியத்தக்க மஹா வீரன் இந்த ஜகத்தில் யாரிருக்கிறார்? தேவர், தநுஜர், பல வகையான மஹா வீரர்கள்—ஸமமானவர்களானாலும் சரி, அதிக பலவான் ஆனாலும் சரி, எங்களைப் போருக்கிழுத்தால், நாங்கள் ஸந்தோஷமாகப் போரிடுவோம். —அது காலனாகவே இருந்தாலும் சரி. க்ஷத்ரிய சரீரம் எடுத்துக்கொண்டு யுத்தத்தில் பயப்படுபவன் குலத்துக்குக் களங்கமே; பாமரனாக கருதப்படவேண்டும். நான் ஸ்வபாவமாகச் சொல்கிறேன். புகழவில்லை.—ரகுவம்சத்தவர் போரில் காலனிடமும் பயப்படமாட்டார்.

''விப்ர வம்சத்துக்கு இத்தகைய [ப்ரபுத்வம்] மேன்மை இருக்கிறது. உங்களிடம் அஞ்சுபவன் பயமிலாமலிருக்கலாம்.''

ரகுபதியின் கூடமான [பொருள் பொதிந்த] உரையைக் கேட்டு ப்ருகுபதியின் புத்தியின் திரை விலகியது.

''ராம, ரமாபதியின் வில் இது. எடுத்துக்கொள். வளைத்து நாண் ஏற்று. என் ஸந்தேஹம் அகலும்'' என்றார்.

தநுஸ் கொடுக்கும்போது தானும் அதோடு போய்விட்டார். (எப்படி இருந்தாரோ அப்படி இனி இல்லை.)

பரசுராமர் மநஸில் ஆச்சர்யம் ஆகியது. ராமப்ரதாபத்தைத் தெரிந்துகொண்டார். சரீரம் புளகமாகியது. மலர்ச்சி அடைந்தது. உளங்கொகொளாத ப்ரேமை பொங்கியது.

ஜய !
ரகு வம்சம் எனும் தாமரை வநத்தின் [மலரச் செய்யும்] ஸூர்ய !

தநுஜர் [ராக்ஷஸர்] எனும் அடர்ந்த காட்டை எரிக்கும் அக்னியே,
ஜய !
தேவர்கள், ப்ராஹ்மணர்கள், பசுக்களுக்கு நன்மை செய்பவ,
ஜய !
மதம், மோஹம், கோபம், ப்ரமைகளைப் போக்குபவ!
பணிவு, கருணை. குணங்களின் கடலே,
ஜயதி,
வசனம் அமைப்பதில் வல்லவ,
ஸேவகர்களுக்கு ஸுகமளிப்பவ,
எல்லா அங்கங்களும் அழகானவ,
ஜய!
கோடி மன்மத சரீர அழகு உள்ளவ.
ஒரு வாயால் எப்படி நான் உன் புகழைச் சொல்லமுடியும்?
ஜய!
மஹேச மந மாநஸ ஹம்ஸ
ஒவ்வாதபடி அதிகமாகச் சொல்லிவிட்டேன்—தெரியாமல்!
இரு ஸஹோதரர்களும் மன்னிப்பின் ஆலயம்—
மன்னித்தருளுங்கள்.
ஜய !
ஜய !!
ஜய !!!
ரகுகுல கேது !''
என்றார்.

ப்ருகுபதி சென்றார். தபஸ் செய்ய வநத்துக்குப் போனார்.

தமக்கு அழிவுதான் இனி என ராஜாக்கள் பயந்தனர். பயங்கொளிகள் சத்தமிலாமல் இங்குமங்கும் ஓடிப்போனார்கள்.

தேவர்கள் துந்துபி முழக்கினர். ப்ரபுவின் மேல் புஷ்பம் சொரிந்தனர்.

புர ஸ்த்ரீ-புருஷர் களிப்படைந்தனர். மோஹ மயமான சூலம் [துன்பம்-வலி] ஒழிந்தது.

8. விவாஹ ப்ரஸங்கம்

மிகவும் பலமாக வாத்யங்கள் முழங்கலாயின. எல்லாரும் மங்களம் செய்யும் பொருள்கள் சேர்த்தனர். அழகான முகமும் அழகான கண்களும் உள்ள ஸ்த்ரீகள் குயில் போன்ற குரலில் பாடலாயினர்.

விதேஹனின் ஸந்தோஷம் சொல்ல முடியாது.—ஜன்ம முழுதும் தரித்ரனுயிருந்த ஒருவன் கஜானுவே அடைந்துவிட்டான் போலிருந்தார்.

ஸீதாவின் நடுக்கம் தீர்ந்தது. சந்த்ரன் உதித்ததும் ஆனந்தம் அடைந்த சகோரப்புள் போலானுள்.

ஜநகர் கௌசிகருக்கு நமஸ்காரம் பண்ணினுர். ''ப்ரபு, உங்கள் க்ருபையால் ராமன் தநுஸ் இறுத்தான். இரு ஸஹோதரர்களும் என்னே வினைப்பேறு பெற்றவனுக்கினர். உசிதமானது இனி எது எனச் சொல்லுங்கள்'' என்ருர்.

முநிவர் சொன்னுர்; ''ஸாமர்த்யமுள்ள நரேச்வர, கேள், விவாஹம் தநுஸில் அடங்கியிருந்தது. ஆகையால் தநுஸ் இற்ற தாலேயே விவாஹம் நிறைவேறிவிட்டது.* இது தேவர், நாகர், மநிதர் எல்லாருக்கும் தெரிந்துவிட்டது.

''இருந்தாலும் நீ இப்போது போய் குலத்தின் விதிகளின்படி எல்லாம் செய். ப்ராஹ்மணர்களேயும். உன் வம்சத்தில் மூத்தோர்களேயும், குருக்களேயும் கேட்டு வேதம் சொல்லியபடி எல்லாம் செய். முதலில், போனவுடன் அயோத்திக்கு தூதர் அனுப்பு. தசரதனே அழைத்து வரச் செய்.''

ஜநகர் இது கேட்டு ஸந்தோஷப்பட்டர். ''ஆமாம் தயாலு சரியே'' என்ருர்.

அப்போதே தூதர்களேக் கூப்பிட்டனுப்பினுர். *

பிறகு மஹாஜனங்கள் எல்லாரையும் அழைத்தார். எல்லாரும் வந்து தலே வணங்கினார்கள். அவர்களுக்கு ஆக்ஞை இட்டார். நீங்கள் கடைகள் தெருக்கள், வீடுகள் தெய்வங்களின் கோயில்கள் நகரத்தின் நாலு பக்கமும் அலங்காரம் பண்ணுங்கள்.

அவர்கள் ஸந்தோஷமாக அவரவர் வீட்டுக்குப் போனுர்கள்.

---

*ஆச்விந சுக்ல 15 திதி

பிறகு ஸேவகர்களைக் கூப்பிட்டார். 'விசித்ரமான மண்டபம் ஏற்பாடு பண்ணுங்கள் என்று அவர்களுக்கு உத்தரவிட்டார்.

அவர்கள் உத்தரவை சிரமேல் கொண்டு ஸந்தோஷமாகப் போனார்கள்.* மண்டபம் அமைப்பதில் நிபுணர்களைக் கூப்பிட்டனர். அவர்கள் விதியை வணங்கி கார்யம் ஆரம்பித்தனர்.

தங்கத்தால் வாழை மரக் கம்பங்கள் பண்ணினர். அவற்றில் பச்சை வைரங்களால் இலைகள், பழங்கள் அமைத்தனர். பத்மராக மணியால் பூக்கள் செய்தார்கள்.

அவர்களுடைய எல்லையிலாத விசித்ர அமைப்பைப் பார்த்து விரிஞ்சியின் சித்தமும் சுழலலாகும்.

நேரான கணுக்களுடன் பச்சைக் கல்லாலேயே எல்லா மூங்கில்களும். அவற்றில் பச்சை இலைகள்.— எதும் தெரிந்து கொள்ளவே முடியாது. நிஜமானவை போலவே தோன்றின. பொன்னாலேயே நாககொடிகள், இலைகள் பண்ணினர். அவை களையும் தெரிந்துகொள்ளவே முடியாது. நாகவல்லியின் முடிச்சுகள் செய்தனர். அவற்றின் இடையே முத்துக்கயிறுகள். மாணிக்கம், மரகதம், வைரம், நீலம் இவைகளைப் பிளந்து, செதுக்கியவைகளில் பதித்தனர்—இப்படி தாமரை பண்ணினர். அவற்றின்மேல் வண்டுகளும் வண்ண வண்ணமான பக்ஷிகளும் அமைத்தனர். காற்று வீசினால் அவை உரலின, கூவின. கம்பங் களில் தேவர்களின் உருவங்கள் இணைத்திருந்தனர். அவை கைகளில் மங்கலப் பொருள்கள் ஏந்தி நின்றன. பலவிதமான கோலங்கள் யானை முத்தாலாக்கினர். நீல மணி விளிம்பு அமைந்த அழகான இனிய மாவிலை. தங்க மாம்பூக்கள். மரகத மணி பழக்கொத்துக்கள்—பட்டுக் கயிற்றால் தொங்கின. அழகான சிறந்த வரவேற்புத் தோரணங்கள். அவை காம தேவனின் வலைகளெனத் தோன்றின. அநேக மங்கல கலசங்கள், கொடிகள், பதாகங்கள், துணிகள், சாமரங்கள். மனஸைக் கவரும் மணிவிளக்குகள். விசித்ரமான விதானங்கள்.

மணப்பெண் ஸீதாவுக்கு அமைக்கப்பட்ட மண்டபத்தின் அழகை வர்ணிக்கக்கூடிய புத்தி கவிக்கு ஏது ?

ரூப, குண, ஸமுத்ரமான வரன் ராமனுக்கு அமைக்கப்பட்ட மண்டபம் மூன்று லோகத்திலும் புகழ் பெற்றது.

ஜநகரின் மாளிகை எத்தனை அழகாயிருந்ததோ அப்படியே ஜநகபுரம் முழுதும் ஒவ்வொரு வீடும் இருந்தது.

அப்போது மிதிலாபுரியைப் பார்த்தவனுக்கு 14 உலகங்களும் அல்பமாகத் தோன்றின. அங்கே கீழானவரின் வீட்டிலும் இருந்த ஸம்பத்தைப் பார்த்து இந்த்ரனும் மோஹமடைந்தான். எந்த நகரத்தில் லக்ஷ்மியே வேறு சிறந்த ஸ்த்ரீ—ரூபத்தில் ஒளிவாக வஸித்து வந்தாளோ அந்த நகரத்தின் வர்ணனை பண்ண சாரதாவும் சேஷனுமே தயங்குவர்.

ஜநகன் அனுப்பிய தூதர்கள் ராமபுரம் (அயோத்யா) வந்து சேர்ந்தனர். அழகான நகரத்தைப் பார்த்து ஸந்தோஷப் பட்டார்கள். ராஜ வாயிலை அடைந்து உள்ளே செய்தி அனுப்பினர்.

கேட்டு, தசரதன் அவர்களைக் கூட்டி வரச்சொன்னான்.

தூதர்கள் நமஸ்காரம் பண்ணி கடிதத்தைக் கொடுத்தனர்.

ஸந்தோஷமடைந்து ராஜா எழுந்து வந்து தானே கடிதத்தை வாங்கிக்கொண்டான். படித்ததும் கண்களில் நீர் திரண்டது. சரீரம் புளகமாயது. நெஞ்ஜம் நிறைந்தது. உளத்தில் ராமு; லஷனு! கையில் கடிதம்!! கசப்பாகவோ இனிப்பாகவோ ஏதும் சொல்ல முடியவில்லை. பின்னர் தைர்யமடைந்து கடிதத்தைப் படித்தார்.

ஸத்யமான செய்தியைக் கேட்டு ஸபா ஸந்தோஷமடைந்தது.

பரதன் விளையாடிக் கொண்டிருந்தான், அங்கே இது எட்டியது. தம்பி, தோழருடன் வந்தான். எல்லை கடந்த ஆசையுடன், தயங்கி, கேட்கலானான்: ''எந்தையே, கடிதம் எங்கிருந்து வந்தது? ப்ராண ப்ரிய ஸஹோதரர்கள் க்ஷேமம் தானே? எந்த தேசத்திலிருக்கின்றனர்?''

ஆசை தோய்ந்து கேட்டதன் மேல் ராஜா படித்துக் காட்டினார்.

கடிதத்தைக் கேட்டு இரு ஸஹோதரரும் புளகமடைந்தனர். அதிகமான ஆசை—தேஹம் கொள்ளவில்லை.

பரதனின் பவித்ரமான ப்ரேமையைப் பார்த்து ஸபா முழுதும் விசேஷ ஸுகமடைந்தனர்.

ராஜா தூதர்களை அருகே அமர்த்திக் கொண்டார். இனிமையாக, மநஸ் கவரும்படி கேட்டார்:

ஆச்விந சுக்ல 15 மிதிலை விட்டு புறப்பட்டனர். 4 ராத்ரி வழியில் கழிந்தன. கார்த்திக க்ருஷ்ண 5 அயோத்யா சேர்ந்தனர்.

''ஐயா, இரு ஸஹோதரர்களின் குசலம் சொல்லுங்கள். நீங்கள் நன்ருக உங்கள் கண்ணுரப் பார்த்திருக்கிறீர்கள். ச்யாமள, கௌர வண்ணம். வில்லேந்தி தூணி கட்டியிருப்பர். குமார பருவம். கௌசிகர் உடனிருப்பார். அடையாளம் தெரிகிறதோ,-அவர்களின் ஸ்வபாவம் எப்படி, சொல்லுங்கள்?'' ப்ரேம வசமாகி ராஊ [ராஜா] இதைத் திரும்பத் திரும்ப கேட்கிருர்.

''முநிவர் கூட்டிக்கொண்டு போன நாளிலிருந்து இன்றுதான் அவர்களைப்பற்றி தெரியவந்தது. இதைச் சொல்லுங்கள். விதேஹன் அவர்களை எப்படித் தெரிந்து கொண்டார்?''

ப்ரியமாகக் கேட்டதைப் பார்த்து தூதர்கள் சிரித்தனர்: ''மன்னர்-முகுட-மணி, கேளுங்கள். உங்களுக்கு ஸமமான தந்யர் எவருமில்லை. விச்வபூஷணரானராம, லக்ஷ்மணர் உங்களுக்குபிள்ளைகள் உங்கள் பிள்ளைகளைப்பற்றி விசாரிப்பதே தகாது. அவர்கள் புருஷ சிம்ஹங்கள். மூன்று லோகங்களிலும் ப்ரகாசிப்பவர். அவர்களுடைய யசஸ்ஸின் முன்னுல் சசி மாசுள்ளதாகத் தோன்றும். அவர்களுடைய ப்ரதாபத்தின் முன்னுல் ரவி குளிர்ந்ததாகத் தோன்றும். நாத அவர்களை எப்படித் தெரிந்து கொண்டார் என்கிறீர்களே! கையில் விளக்கெடுத்துக் கொண்டா ரவியைத் தேடவேண்டும்?

ஸீய ஸ்வயம்வரத்தில் அநேக ராஜாக்கள் திரண்டிருந்தனர், ஒருவரை விட ஒருவர் மஹா வீரர். —ஸம்பு வில்லை ஒருவரும் அசைக்கக்கூட முடியவில்லை. பலமிக்கவரெல்லாரும் தோற்றனர். மஹா வீரர் தாம் என எண்ணினவர், மூன்று லோகங்களிலும் எத்தனை பேர் இருக்கிருர்களோ, எல்லாருடைய சக்தியையும் ஸம்பு தநுஸ் அழித்துவிட்டது. [பலனில்லாமல் செய்தது]. பாணுஸுரன் ஸுமேரு மலையையும் கிளப்ப வல்லவன்; அவனும் ஹ்ருதயத்தில் தோற்று திரும்பிப் போனுன்.

*சிவ சைலத்தை (கைலாஸத்தை) விளையாட்டாக எழுப்பினவன் —அவனுக்கும் அந்த ஸபையில் தோல்வி கிடைத்தது. மஹா மஹி பால, கேளுங்கள். அங்கே துளி பாடில்லாமல் ராமன் தநுஸை ஒடித்துப் போட்டார். யானை தாமரைத் தண்டை ஒடிப்பது போலிருந்தது.

இதைக் கேட்டு ப்ருகு [குல] நாயகன் கோபமாக வந்தார். பலவிதமாக கண்ணைக் காட்டினுர். ராம பலத்தைப் பார்த்தார். தன் வில்லையே கொடுத்தார். பலவிதமாக வேண்டிக்கொண்டார் வநத்துக்குப் போய்விட்டார்:

ராஜன், ராமன் எப்படி அளவிலாத பலமுடையவரோ அப்படியே லஷ்நு தேஜஸ்ஸின் களஞ்சியம். அவர் உற்றுப் பார்த்தாலே ராஜாக்கள் சிங்கக் குட்டியைக் கண்ட யானை மந்தை போல நடுங்குகிறார்கள்! தேவ, உங்கள் பாலகர் இருவரையும் பார்த்த பின்னர் வேறெவரும் எங்கள் கண்களில் தேர்வதே இல்லை. ஏனெனில் அவர்கள் ப்ரேமை, வல்லமை வீர ரஸம் செறிந்தவர்கள்.

தூதர்கள் சொன்ன வண்ணம் மிகவும் பிடித்தது. ஏனெனில் அதில் ப்ரேமை, ப்ரதாபம், வீரரஸம் தோய்ந்திருந்தது. ஸபாவும், ராஜாவும் ப்ரேமையில் ஆழ்ந்தனர். தூதர்களுக்கு வெகுமதி கொடுக்கப் போனார்.

''இது அநீதி'' என அவர்கள் காதைப் பொத்திக்கொண்டனர், அவர்கள் இத்தகைய தர்மத்தை வழிபடுவதை எண்ணிப் பார்த்து எல்லாரும் ஸந்தோஷ மடைந்தனர்.

ராஜா எழுந்துபோய் வஸிஷ்டரிடம் கடிதத்தைத் தந்தார். மரியாதையுடன் தூதர்களை அழைத்து கதை எல்லாம் சொல்லச் செய்தார். கேட்டு முனிவர் ஸுகம் அடைந்து ''ஸமுத்ரத்துக்கு விருப்பம் இல்லாவிடினும் நதிகள் அதைப்போய் அடைவதுபோல புண்யாத்மாக்களுக்காக பூமி ஸுகம் நிரம்பி இருக்கிறது; ஸுக ஸம்பத்திகள் அழைக்காமலே தர்ம சீலர்களிடம் ஸ்வபாவமாகப் போயடையும். நீ குரு-விப்ர-தேநு-ஸுரரை ஸேவிப்பவன். கௌஸல்யா தேவியும் அதேபோல புநிதமானவள். ராஜன், உன்னைப்போல புண்யாத்மா ஜகத்தில் யாருமிருந்ததில்லை, இப்போதில்லை, இருக்கப்போவதுமில்லை! ராமனே புத்ரனாக இருக்கும் உன்னைவிட புண்யாத்மா யார்? உன் நாலு பிள்ளைகளும் வீரர், பணிவுள்ளவர், தர்ம வ்ரதத்தை நிலைபடுத்துவோர். எல்லாக் காலத்திலும் உனக்கு நன்மையே. டங்கா முழக்கி பராத் [மாப்பிள்ளை ஸமாஜம்] ஏற்பாடு பண்ணு. சீக்கிரம் போ'' என்றார்.

குரு சொன்னது கேட்டு 'நல்லது, நாத' என்று சொல்லி விட்டு, நமஸ்காரம் பண்ணி, மாளிகைக்குச் சென்றார். தூதர்கள் தங்க ஏற்பாடு பண்ணினார்; எல்லா ராணிகளையும் கூப்பிட்டார். ஜநகரின் கடிதத்தைப் படித்துக் காட்டினார். செய்தியைக்கேட்டு எல்லாரும் ஸந்தோஷமடைந்தார்கள். ராஜா கதை எல்லாம் வர்ணித்தார்.

ப்ரேமையால் மலர்ந்த ராணிகள் மேகத்தின் சத்தம் கேட்ட மயில் பேடைகள் போலானுர்கள்: பெரியவர்களின் மனேவியர் ஸந்தோஷமடைந்து ஆசீர்வாதம் பண்ணுகிருர்கள; தாய்மார் எல்லேயிலாத ஆனந்தத்தில் ஆழ்கின்றனர். ஒருவரிடமிருந்து ஒருவர் மிக ப்ரியமான கடிதத்தை வாங்கிக்கொண்டு, அதை ஹ்ருதயத்தில்வைத்து நெஞ்ஜம் குளிர்கின்றனர். ராம-லஷ்ணரின் கீர்த்தி, சாதனேகளே பூப-வரர் [மன்னரில் சிறந்தவர்] திரும்பத் திரும்ப வர்ணிக்கின்றனர்.

'இதெல்லாம் முநிவரின் ப்ரஸாதம்' என்ருர். பின்னர் மஹலே விட்டு வெளியே வந்தார்.

ராணிகள் மஹிதேவர் [ப்ராஹ்மணர்]களே அழைத்தனர். ஆனந்தமாக அநேக தானங்கள் அளித்தனர்.

சிறந்த அந்த விப்ரர் ஆசீர்வாதம் கொடுத்து, போனுர்கள்.

யாசகர்களே வரச்செய்து, கோடி விதமாக த்ருஷ்டிப் பொருள் தாநம் கொடுத்தனர்.

அவர்களும் ஆசீர்வாதம் கொடுத்துச் சென்றனர். ''சக்ரவர்த்தி தசரதரின் நாலு பிள்ளேகளும் சிரஞ்ஜீவிகளாக இருப்பாராக'' என்றனர். அநேக வித ஆடைகள் அணிந்து கொண்டு சென்றனர். ஸந்தோஷமாக ஆர்வத்துடன் பலமாக டங்கா முழக்கினர்.

எல்லாருக்கும் செய்தி கிடைத்தது. ஒவ்வொரு வீட்டிலும் விழா எடுத்தனர். வாத்யங்கள் முழங்கின.

பதினுலு புவநங்களிலும் கொண்டாட்டம் நிரம்பியது.

''[ஜநகர் பெண்ணுக்கும்] ஜநகஸுதாவுக்கும்-ரகுவீரனுக்கும் விவாஹம்'' என்ற நல்லது சொல்லக் கேட்டு ஜனங்களிடை அன்பு வளர்ந்தது. தெரு, வீடு, ஸந்து எல்லாம் அலங்கரிக்க லாயினர்.

அவத (அயோத்யா) எப்போதும் அழகானதுதான் எனினும், ராமபுரி மங்கல மயம், தூய்மையாக்குவது எனினும் மேலும் ப்ரீதியின் போக்கு அழகாகிறது. மங்கல ஏற்பாடுகள் அமைத்தனர். கொடி, பதாகம், பட்டு, சாமரம் எண்ணிலாதன அமைந்த கடைத்தெரு பரம விசித்ரமாயிருந்தது. தங்கக் கலசங்கள், மணி வரிசை தோரணம், மஞ்சள் அவல், அக்ஷதை, மாலேகளினுல் ஜனங்கள் தம் வீடுகளே அழகுபடுத்தி மங்கல மயமாக்கினர். அழகான கோலங்கள் இட்டு ஸந்துகளே நிரப்பினர்.

அங்கங்கே ஸ்த்ரீகள் கூடி பதினாறு சிருங்காரங்கள் பண்ணிக் கொண்டு பாடலாயினர். எல்லாருடைய அங்கங்களின் ஒளியும் மின்னல்போல, முகம் சந்த்ரன் போல, கண்கள் மான்குட்டிகள் போல இருந்தன. தம் ரூபத்தால் ரதியின் கர்வத்தைப் போக்குபவராயிருந்தனர். மநஸ் அள்ளும் குரலில் மங்கலகாநம் செய்யலாயினர். இனிய இசையைக் கேட்டு குயிலும் வெட்கமடைந்தது.

ராஜாவின் மாளிகையை எப்படி வர்ணிப்பது. விச்வத்தை மோஹம் அடையச் செய்யவல்ல மண்டபம், விதானம். அநேக விதமான *மங்கலப் பொருள்கள் திகழ்ந்தன. மநஸ் கவரும்படி அமைத்தனர். அநேக வாத்யங்கள் முழங்கின. வந்திகள் விருதாவளி பாடினர். பூஸுரர் [ப்ராஹ்மணர்] வேதம் முழக்கினர். அழகியர் ராமு - ஸீதா நாமமமைத்துப் பாடினர். பெரிய உத்ஸாஹம்: இதைக்கொள்ள முடியாதபடி மாளிகையே அவ்வளவு சின்னது!- பொங்கி நாலா பக்கமும் பரவிப் பாய்ந்தது போலிருந்தது.

எல்லா தேவர்களின் சிரோமணி, ராமன், அவதாரம் எடுத்துக்கொண்ட தசரத பவநத்தின் சோபையை எந்தக்கவி வர்ணிக்கமுடியும்!

ராஜா பரதனைக் கூப்பிட்டனுப்பினர். ''போய் யானை குதிரை ரதம் எல்லாம் ஏற்பாடு பண்ணு. சீக்கிரமே ரகு வீர (விவாஹ கோஷ்டி) பாராத் அமைக்கச்சொல்'' என்றார்.

கேட்டதும் ஸஹோதரரிருவரும் புளகமடைந்தனர்.

பரதன் அணித்தலைவர்களைக் கூப்பிட்டு உத்தரவிட்டான்.

அவர்கள் ஸந்தோஷமாக விரைந்தனர். அழகாக குதிரைகளுக்கு சேணம் சேர்த்தனர். வண்ண வண்ண அழகான குதிரைகள் திகழ்ந்தன. எல்லாக் குதிரைகளும் துடிப்பானவை. அவை தரையில் கால் வைத்ததே பழுக்கக் காய்ந்த இரும்பைத் தொட்டது போலிருந்தது. அநேக ஜாதிகள். வர்ணிக்கவே முடியாது. காற்றைக் கண்டித்து பறக்க விரும்பினபோலிருந்தன.

*பூர்ணகும்பம், ப்ராஹ்மணர், வேசி, வெள்ளை தாந்யம், கண்ணாடி, தயிர், நெய், தேன், பொரி, பூ, அருகு, வெண்-அக்ஷதை, எருது, யானை, குதிரை, கொழுந்துவிட்டெரியும் தீ பொன், தளிர், அணிகள், முத்து, புஷ்ப மாலா, புதிய மாம்ஸம், சந்தநம்—

அவை எல்லாவற்றின் மேலும் பரதனுக்கு ஸமமான வயஸுள்ள ஒய்யாரமானவர் ராஜகுமாரர் ஏறியிருந்தனர். எல்லாரும் அழகர். அணிகள் பூண்டிருந்தனர். கையில் வில், அம்பு, அரையில் பெரிய தூணி, துடிப்பாக, ஒய்யாரமானவர், எல்லாரும் சூரர். க்ஞாநிகள். கட்டிளமை. ஒவ்வொருவருடனும் இரு மெய்க்காவலர்-கத்தி வீரர்-காலாட்கள். விருதுசேர் வீரர், வீரப் போரில் திறமை மிக்கோர், வெளியே வந்து புரத்தின் வெளியே நின்றனர்.

ம்தருங்கம், பாஜா, பணவம், நிசானங்களின் முழக்கம் கேட்டு, திறமைமிக்கவர்கள் குதிரைகளை அதற்கேற்ற கதிகளில் நடாத்தி மகிழ்ந்தனர்.

கொடி, பதாகம், மணி சேர்த்து, அணிகள் பூண்டு, ஸாரதிகள் ரதங்களில் எல்லாம் சேகரித்து வைத்திருந்தனர். ரதத்தில் சாமரம் வீசியது. மணிகள் ஒலித்தன. ஸூர்யனின் ரதத்தின் அழகை வெல்பவை !

கரிய வண்ணக் காதுக் குதிரைகள்—எண்ணிலடங்காதவை, அவைகளை ஸாரதிகள் ரதத்தில் பூட்டியிருந்தனர். அழகானவை. அலங்கரிக்கப்பட்டிருந்தன. அவைகளைப் பார்த்த முநிவர் மநஸும் மயங்கும்படி அவ்வளவு சோபித்தன. நிலத்தில் போலவே நீரிலும் குளம்பு நனையாதபடி அவ்வளவு வேகமாக செல்லவல்லவை. ஸாரதிகள் அஸ்த்ரம் சஸ்த்ரம் எல்லாம் சேகரம் பண்ணி, ரத வீரர்களை அழைத்தனர்.

ரதத்திலமர்ந்து நகருக்கு வெளியே பாராத் கூடலாயிற்று.

என்ன கார்யத்துக்காகப் போகிறார்களோ அதற்கான நல்ல சகுனங்கள் உண்டாயின.

அலங்கரிக்கப்பட்ட யானைகள் மேல் அம்பாரிகள் வைத்திருந்தன. அவை எப்படி அலங்கரிக்கப்பட்டன என்று சொல்ல முடியாது. மணிகளுடன் கூடிய மத யானைகள் ச்ராவண மேகத் திரள்கள் போல சென்றன.

மேலும் அனேக விதமான வாஹனங்கள் பல்லக்கு ஸுக ஆஸனங்களுடன்-அவைகளில் அமர்ந்து விப்ரர் குழாம் சென்றது. வேத-சந்தஸ்கள் சரீரம் எடுத்துக்கொண்டு போவது போலிருந்தது.

மாகதர், ஸூதர், வந்திகள்—குணம் பாடுவோர், அவரவர் தகுதியின்படி வாஹனங்களில் அமர்ந்து சென்றனர்.

ஒட்டகம், அநேக ஜாதி காளைகள், எண்ணிலாத பொருள்களைச் சுமந்து சென்றன.

கோடி காவடிகள் எடுத்துக்கொண்டு கஹாராக்கள் (வீட்டு வேலை செய்யும் ஒரு ஜாதியினர்) சென்றனர். அவைகளில் பலவித பொருள்களிருந்தன. அவைகளை யார் வர்ணிக்க முடியும்.

ஸேவகர் ஸமாஜம் எல்லாம் ஏற்பாடு பண்ணப்பட்டபடி சென்றனர்.

எல்லார் உளத்திலும் மகிழ்ச்சி பொங்குகிறது. சரீரத்தில் புளகம் உண்டாகிறது — ''எப்போது கண்ணார ராமுவை, லஷ்ணுவை, இரு வீரர்களையும் பார்ப்போம்'' என்ற ஆவல்.

யானைகள் பிளிறுகின்றன. மணிகளின் பேரொலி. நாலா பக்கமும் ரதங்களின் பேரொலி. குதிரைகள் கனைக்கின்றன. மேகங்களை இழித்து டங்கா முழங்குகிறது.

தான் பேசுவதோ பிறர் சொல்வதோ யாருக்கும் ஏதும் கேட்கவில்லை. ராஜ வாசலில் பெரிய கூட்டம். கல் கீழே விழுந்தால் பொடியாகிவிடும். ஸ்த்ரீகள் மாடங்களில் இருந்து பார்க்கின்றனர். அவர்கள் மங்கல தட்டங்களில் ஆரதி எடுக்கின்றனர். பலவித உளங்கவர் கீதம் பாடுகின்றனர். எல்லையிலாத ஆனந்தம் பெருகுகிறது. வர்ணிக்க முடியாது.

ஸுமந்த்ரன் இரு ரதங்கள் ஸித்தப்படுத்தினன். அவைகளில் ஸூர்ய ரத குதிரைகளைப் பழிக்கும்படி குதிரைகள் பூட்டி யிருந்தன. அழகான இரு ரதங்களையும் *பூபனண்டை கொணர்ந்து நிறுத்தினன். அவைகளை சாரதாவும் புகழ முடியாது.

ஒரு ரதத்தில் ராஜரீக பொருள்கள். மற்றது தேஜஸ் பிழம்பாக விளங்கியது. இரண்டாவதில் மகிழ்ச்சி மிக ராஜா வஸிஷ்டரை அமரச் செய்தான்.

தான் ஹர - குரு - கௌரி - கணேசரை ஸ்மரணம் பண்ணி முதலதில் ஏறிக்கொண்டார்.

வஸிஷ்டருடன் ராஜா எப்படி திகழ்ந்தான்! ஸுரகுரு [ப்ருஹஸ்பதி] உடன் புரந்தரன் [இந்த்ரன்] போலிருந்தான். வேத விதிகளைச் செய்தான். குல முறைகளை முடித்தான்.

---

* 1. ராஜா (நிலம் - காப்பவன்) 2. மஹிபன் 3. ஸஹ்நாலி 4. கஸ்ரந்

எல்லாருக்கும், எல்லாவிதமும் ஏற்பாடு பண்ணிவிட்டு, மேற் பார்வை பார்த்து, ராமனை ஸ்மரணம் பண்ணிக்கொண்டான்; குருவின் உத்தரவு பெற்ருன்; *மஹீபதி சங்கம் முழக்கி புறப்பட்டார். கோஷ்டியைப் பார்த்து தேவர் மகிழ்ந்தனர். மங்கலமாக்கும் மலர்களைச் சொரியலாயினர்.

யானை பிளிறியது; குதிரை கனைத்தது. இரைச்சல் சூழ்ந்தது. ஆகாசத்திலும் கோஷ்டியிலும் வாத்யங்கள் முழங்கின. தேவதைகளும், ஸ்த்ரீகளும் மங்கல கானம் பண்ணினர். ரஸமிக *ஸஹ்நாஈ இசைத்தது. பெரிய மணிகளும் கிண்கிணிகளும் ஒலித்தன. அதை ஒன்றும் சொல்ல இயலாது.

*கஸ்ரத் பண்ணுகின்றனர். காலாட்கள் இரைகின்றனர். விதூஷகர் பலவித வேடிக்கைகள் பண்ணுகின்றனர். சிரிப்பூட்டு வதில் நிபுணர் - நல்ல ஸங்கீதம் நன்கு தெரிந்நவர்

சிறந்த ராஜகுமாரர். மிருதங்க, நிசான ஓசைக்கு ஏற்றபடி குதிரைகளை நடத்துகின்றனர். நகர நர்த்தகர் அதைப் பார்த்து வியக்கின்றனர். தாளக்கட்டு இம்மியும் விட்டுப்போகவில்லை.

கூடியிருந்த பாராத்தை வர்ணிக்க முடியாது,

அழகான, சுபம் தரும் சகுனங்கள் தோன்றின :-

நீலகண்டம் இடப்பக்கம் உணவு எடுத்தது. எல்லா மங்கலமும் சொல்லிவிட்டது போலிருந்தது.

வலது பக்கம் அழகான வயலில் காகம் விளங்கியது.

ஒவ்வொருவரும் கீரி பார்த்தார்.

குளுமையாக இனிமையாக மணமுள்ள காற்று முன்னுல் இருந்து தவழ்ந்து வந்தது.

குடமும் குழந்தையும் எடுத்துக்கொண்டு சுமங்கலி வந்தாள்.

குள்ள நரி சுற்றிச்சுற்றி வந்து தர்சனம் கொடுத்தது.

பசு முன்னுல் கன்றை ஊட்டியது.

மான் கூட்டம் வலப்பக்கம் வந்தது.

மங்கல கணம் காட்டுவது போலிருந்தது.

கருடன் க்ஷேமகரீ விசேஷமான ரூபத்தில் க்ஷேமம் சொல்லியது.

ச்யாமாவை இடப்பக்கம் நல்ல மரத்தில் பார்த்தனர்.

முன்னுல் தயிரும் மீனும் வந்தன.

கையில் புஸ்தகத்துடன் பண்டிதர்களான இரு ப்ராஹ்மணர் வந்தனர். மங்கல மயமாக, கல்யாண மயமாக, வேண்டிய பலன் தருவதாக எல்லாம் உண்மையாவதற்காக ஒரே ஸமயத்தில் சேர்ந்து தோன்றின.

ஸகுண ப்ரஹ்மம் எவருக்குப் அழகான புத்ரனோ, மங்கல சகுனம் எல்லாம் அவருக்கு எளிதிலமையும்.

ராமனன்ன வரன்

ஸீதா அன்ன [மாட்டுப்பெண்] வதூ

ஜநகர், தசரதர் அன்ன தூய ஸமதிகள்!

இத்தகைய விவாஹம் பற்றிக் கேள்விப்பட்டு சகுனங்கள் எல்லாம் 'விரஞ்சி நம்மை உண்மையாக்கினுர்' என நாட்டியம் ஆடின.

இப்படியாக பாராத் புறப்பட்டது.

குதிரை கனைத்தது; யானை பிளிறியது;

நிஸானம் முழங்கியது.

பானுகுல-கேது (ஸூர்ய குலக்கொடி) வருவது கேட்டு ஜநகர் நதிகளுக்குப் பால மமைக்கச் செய்தார். இடையிடையே பாராத் தங்குவதற்காக சிறந்த வாஸங்கள் நிறுவச் செய்தார். அவைகளில் தேவலோகம்போல ஸம்பத் நிரப்பியிருந்தது. அழகான போஜனம், படுக்கை, சிறந்த ஆடை — அவரவர் சுவைக்கேற்ப எல்லாம் கிடைத்தன. நித்தமும் புதிய ஸுகம் அடைந்து பாராத் முழுதும் களிப்படைந்தது. அவர்களுக்குத் தம் வீடே மறந்து விட்டது.

சிறந்த பாராத் வருவது கேட்டு, டங்காவின் பெரு முழக்கம் கேட்டு, ஜனங்கள், யானை, குதிரை ரதம் கூட்டி வரவேற்கப் போனுர்கள்.

தங்கப் பூர்ணகும்பம். கொப்பரை, தட்டங்கள். அநேகவித அழகான பாத்ரங்கள் நிரம்ப பலவித அம்ருதத்துக்கு நிகரான சமைத்த உணவு—அவற்றை வர்ணிக்கவே முடியாது.

அநேக பழங்கள், சிறந்த அழகான பொருள்கள் ராஜா களிப்புடன் சீராக அனுப்பினுர். அணிகள், துணிகள் பலவித மஹா மணிகள், பறவைகள், ம்ருகங்கள், யானை. குதிரை, பலவித வாஹனங்கள்.

மங்கல சகுனப் பொருள்கள், அழகான பலவித மணம் சேர்த்த பதார்த்தங்கள், ராஜா ஜநகர் அனுப்பினர். தயிர்ச் சிஉரா (தயிரில் பண்ணிய தின்பண்டம்) காணிக்கைகள் காவடி களில் நிரப்பி நிரப்பி கஹார்கள் எடுத்துப் போயினர்.

வரவேற்கப் போனவர்கள் பாராத்தைப் பார்த்ததும் அவர்கள் உளம் ஆனந்தமடைந்தது; உடல் முழுதும் புல்லரித்தது; வரவேற்பவர்கள் சீருடன் இருப்பதைப் பார்த்து ஸந்தோஷமாகி பாராதியர் (விவாஹ கோஷ்டியார்) டங்காவில் பலமாக முழக்கலாயினர்.

சிலர் விரைந்து முன்னல் போய்க் கூடினர். இரு பக்கத்தில் இருந்தும் ஸந்தோஷமடைந்து சென்றனர். இரு ஆனந்த ஸமுத்ரங்கள் அதனதன் கரையை உடைத்துக் கலப்பது போலிருந்தது.

தேவர்களின் ஸுந்தரிகள் மலர் சொரிந்து பாடலாயினர்; தேவர் களிப்புடன் நகாரி முழக்கினர்.

ஜனங்கள் எல்லாப் பொருள்களையும் சக்ரவர்த்திமுன் படைத்து எல்லையிலா ப்ரேமையுடன் வேண்டிக் கொண்டனர்.

ப்ரேமையுடன் ராஜா தசரதன் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டார்; யாசகர்களுக்குக் கொடுக்கும்படி உத்தரவிட்டார். கொடுக்கப்பட்டன. பூஜை, ஸம்மானம், பாராட்டு செய்து எல்லாரையும் ஜநவாஸத்தை (தங்குவதற்கு ஏற்பாடான இடம்) நோக்கி அழைத்துக்கொண்டு சென்றனர்.

அத்புதப் பொருள்களை மிதி பாவாடையாக விரித்தனர். அதைப்பார்த்துகுபேரனின் செல்வச்செருக்கு விட்டுப்போயிற்று.

மிக அழகான ஜநவாஸம் தரப்பட்டது. அங்கே எல்லா ருக்கும் எல்லாவித ஸௌகர்யமும் இருந்தது.

பாராத் நகரத்துக்குள் வந்துவிட்டதென ஸீதாவுக்கு தெரிந்தது. தன் மஹிமை கொஞ்சம் வெளிப்படுத்தினள். ஹ்ருதயத்தில் ஸ்மரணம் பண்ணினள். ஸித்திகள் எல்லாரையும் வருவித்தாள். ராஜாவுக்கு விருந்தோம்ப அனுப்பினள்.

எல்லாரும் ஸீதாவின் ஆக்ஞை பெற்று ஜநவாஸத்துக்குச் சென்றனர். ஸுர-புர-போக-விலாஸம், ஸுகம், ஸம்பத்து, கொண்டு போனர்கள்.

பாராதியர் அவரவர் டேராவைப் பார்த்தனர். தேவர்களின் எல்லா ஸுகமும் எளிதில் கிடைத்தது. செல்வ வித்யாஸம் யாருக்கும் கொஞ்சமும் தெரியவில்லை. எல்லாரும் ஜநகரைப் புகழ்ந்தனர்.

ஸிய மஹிமையை ரகுநாயகன் தெரிந்து கொண்டார். ப்ரேமையைத் தெரிந்து கொண்டார். ஹ்ருதயத்தில் ஸந்தோஷப் பட்டார். ஸஹோதரரிருவரும் பிதா வந்ததைத் தெரிந்து கொண்டனர். எல்லையிலாத ஆனந்தம்—ஹ்ருதயம் கொள்ள வில்லை. தயக்கத்தால் குருவிடம் சொல்ல முடியவில்லை. மநஸில் பிதாவைப் பார்க்க ஆவல்!

இத்தனை பெரிய பணிவைப் பார்த்து விச்வாமித்ரருக்கு விசேஷ ஸந்தோஷம் உண்டாகியது. களிப்பு மேலிட இருவரையும் மார்பொடு தழுவிக்கொண்டார். மெய் சிலிர்த்தது; கண்களில் நீர் பொங்கி வந்தது. ஜநவாஸத்தில் தசரதர் இருந்த இடத்துக்குப் போனார்கள். நீர்-வேட்கை குளத்தை நோக்கி போவது போலிருந்தது.

முநிவர் பிள்ளைகளைக்கூட்டி வருவது பூபனுக்கு தெரிந்தது. பார்த்ததும் ஆனந்தமடைந்தார். ஸுக ஸமுத்ரத்தின் ஆழம் காண்பார் போல போனார். *மஹீசன் முநிவருக்கு தெண்டநிட்டு நமஸ்காரம் பண்ணினார். பத-பொடியை மீண்டும் மீண்டும் சிரமேலணிந்தார்.

கௌசிகர் ராஉவை [ராஜாவை] மார்பொடு தழுவிக் கொண்டார். ஆசீர்வாதம் அளித்தார். குசலம் விசாரித்தார்.

இரு ஸஹோதரரும் தெண்டனிடுவதைப் பார்த்தார். ராஜாவுக்கு ஹ்ருதயம் கொள்ளாது ஸுகம் பொங்கியது. பிள்ளைகளை ஹ்ருதயத்தோடு அணைத்துக்கொண்டார். ஸஹிக் கொணு துக்கத்தை போக்கிக் கொண்டார். மரித்த உடலில் மீண்டும் ப்ராணன் இயங்க ஆரம்பித்தாற் போலிருந்தது.

பின்னர் அவர்கள் வஸிஷ்டர் பதத்தில் சிரம் வணங்கினர். ப்ரேமையால் ஸந்தோஷமாகி முநிவரர் அவர்களை ஹ்ருதயத் தோடு தழுவிக்கொண்டார். இரு ஸஹோதரரும் விப்ர குழாத்துக்கு வந்தனம் பண்ணினர். வேண்டிய ஆசி பெற்றனர்.

பூமியின் ஈசன்—ராஜா 2) ராஜா

பரதனும் தம்பியும் நமஸ்காரம் பண்ணினர். ராமா அவர்களை எழுப்பி மார்பொடு அணைத்துக்கொண்டார். இரு ஸஹோதரரையும் பார்த்து லகன் களிப்படைந்தான். ப்ரேமை நிரம்பிய சரீரத்துடன் அவர்களை அணைத்துக்கொண்டான்.

புர ஜனங்கள், பரி ஜனங்கள், ஜாதி ஜனம் மந்த்ரிகள், மித்ரர், எல்லாரையும் பரம க்குபாலு, பணிவுள்ளவர், ப்ரபு, உரியபடி ஸந்தித்தார்.

ராமனைப் பார்த்து பாராத் மநஸ் குளிர்ந்தது. ப்ரீதியின் போக்கு சொல்ல முடியாது.

ராஜா அருகே நாலு பிள்ளைகளும் தநம், அர்த்தம், தர்மம், முதலான நாலு புருஷார்த்தங்களும் சரீரம் எடுத்துக்கொண்டு வந்திருந்தது போல தோன்றியது.

பிள்ளைகளுடன் தசரதனைப் பார்த்து பாராத் களிக்கிறது.

ஜநக புர ஸ்த்ரீ புருஷர் விசேஷமாக மகிழ்ந்தனர்.

ஸுரர் புஷ்பம் சொரிந்து நிஸானம் முழக்கினர். அப்ஸராக்கள் நாட்டியம் ஆடினர்.

ஸதானந்தர், விப்ரர், மந்த்ரிகணம், மாகதர், ஸூதர், வந்திகள் பாராத்துக்கும் சேர்த்து ராஜாவுக்கு ஸன்மானம் பண்ணினர். உத்தரவு பெற்று, எதிர்கொண்டழைக்க வந்தவர் திரும்பிச் சென்றனர்.

முதல் பாராத் லக்னத்துக்கு முன்னரே வந்துவிட்டது.* இதனால் நகரத்தில் ஆனந்தம் அதிகரித்தது. ஜனங்கள் ப்ரஹ்மானந்தமடைகின்றனர். ''இரவும் பகலும் நீடிக்கட்டும்'' என விதியிடம் வேண்டிக்கொள்கின்றனர். ராம-ஸீய சோபையின் எல்லை! புண்யத்தின் எல்லை - இரு ராஜாக்களும். நகரவாஸிகள் அங்கங்கே கூடி இதேதான் சொல்கின்றனர்.

ஜநகரின் புண்யத்தின் மூர்த்தி - வைதேஹி.
தசரதரின் புண்யத்தின் மூர்த்தி ராமனாக தேஹம் கொண்டது.
இவர்களுக்கு ஸமமாக எவரும் சிவ-ஆராதனை பண்ணியதில்லை.
இவர்களுக்கு ஸமமாக எவரும் பலன் பெற்றதும் இல்லை.
இவர்களுக்கு ஸமமாக ஜகத்தில் யாரும் இல்லை.
யாரும் இருந்ததும் இல்லை.
யாரும் இனி இருக்கப்போவதும் இல்லை.

நாமெல்லாரும் எல்லாப் புண்யங்களின் ராசி. [எனவேதான்] ஜகத்தில் ஜநக புரியில் ஜன்மமெடுத்து வஸிக்கலானோம். ஜாநகி-ராம அழகை பார்க்கும் நமக்கு ஸமமாக விசேஷ புண்யாத்மா யார்?

---

*சுந த்ரயோதசி அன்று

இன்னம் ரகுவீர விவாஹம் பார்ப்போம். நல்லவிதமாக கண்களின் லாபம் அடைவோம்.

கோகில வயநிகள் தம்மிடை பேசிக்கொள்கின்றனர். ''ஸுநயநி. இந்த விவாஹத்தால் பெரிய லாபம்! பெரிய பாக்யமாக விதி இதைச் செய்துள்ளார். இரு ஸஹோதரரும் வந்து நம் கண்களின் விருந்தினராவர். ஆசை வசமாக ஜநகர் அடிக்கடி ஸீயவை அழைத்து வருவர். கூட்டிப்போக கோடி மந்மதரிலும் அழகான இரு ஸஹோதரரும் வருவர். பலவிதமாக விருந்தோம்பல் நடக்கும். அம்மா, இந்த மாதிரி மாமனுர் யாருக்குத்தான் ப்ரியமாயிருக்காது? அவ்வப்போது ராம லகனரைப் பார்த்து புரஜனங்கள் எல்லாரும் ஸுகம் அடைவர். ஸகி, ராம லஷ்ண ஜதை எப்படியோ அப்படியே ராஜாவுடன் இரு பிள்ளைகள் இருக்கின்றனர். ச்யாம, கௌர வண்ணம்-அங்க மெல்லாம் அழகு! பார்த்து வந்தவர்கள் சொல்கிருர்கள்''. ஒருத்தி சொன்னுள். ''நான் இன்றே பார்த்தாயிற்று. விரஞ்சி தன் கையாலேயே உருவாக்கினுன் போலும்! பரதன் ராமனைப் போலவே! சட்டெனப் பார்த்தால் தெரிந்துகொள்ள முடியாது. லகனு, ஸத்ரு ஸூதனு ஒரே ரூபம். நகத்திலிருந்து சிகை வரை எல்லா அங்கமும் இணை இலாதவை. வாயால் சொல்ல முடியாது. உபமானமாக மூவுலகிலும் எவருமில்லை.

துளஸி சொல்கிருர்: கவிகள், வித்வான்கள் சொல்கின்றனர்— இவர்களுக்கு உபமானம் எங்குமே கிடையாது.— பலம், வித்யா, விநயம், சீலம், சோபை யின் ஸமுத்ரம் அவர்களுக்கு நிகர் அவர்களே.

புர ஸ்த்ரீ புருஷர் எல்லாரும் தலைப்பை விரித்து விதியிடம் வேண்டுகிருர்கள்.— நாலு ஸஹோதரருக்கும் இங்கேயே இந்த புரத்திலேயே விவாஹமாக வேண்டும். நாங்கள் மங்களம் பாடுவோம். ஸ்த்ரீகள் கண்களில் நீர் நிரம்ப, புளகமாகி தம்மிடையே சொல்லிக்கொள்கிருர்கள. ''ஸகி, புராரி எல்லாம் பூர்த்தி பண்ணுவார். ஏனெனில் ராஜாக்கள் இருவரும் புண்ய பயோநிதி [கடல்]''.

இப்படி எல்லாரும் மநோரதம் கொள்கிருர்கள். ஆனந்தம் பொங்கிப் பொங்கி உள்ளம் நிரம்புகிறது.

ஸீய ஸ்வயம்வரத்துக்கு வந்திருந்த ராஜாக்கள் எல்லாரும் ஸஹோதரர் எல்லாரையும் பார்த்து ஸுகமடைகின்றனர்.

தூய்மையான, விரிவான, ராம யசஸ் சொல்லிக்கொண்டே மன்னர் அவரவர் இடத்துக்குப் போனுர்கள்.

சில நாள் இப்படி கழிந்தன. புர ஜனங்களும் பாராதியரும் ஆனந்தமாயிருந்தனர்.

மங்கல-மூல-லக்ந-திநம் வந்தது. ஹிம ருது [பநிக்காலம்] அழகான அகஹந மாஸம் [மார்கழி], க்ரஹம், திதி, நக்ஷத்ரம், சிறந்த நாள், லக்னம் சோதித்து விதி யோசித்தார், தீர்மானித்தார். அதை நாரதரிடம் கொடுத்தனுப்பினுர்.

ஜநகரின் ஜ்யோதிஷர்களும் அதையேதான் நிச்சயம் பண்ணி யிருந்தனர்.

ஜனங்களுக்கு இது தெரிந்தது. ''ஜ்யோதிஷர் என்ன, ப்ரஹ்மா அல்லவா?'' என்றனர்.

விமல கோதூளி வேளே. [பசு மாடுகள் மாலேயில் வீடு திரும்ப, புழுதி எழும்பும் வேளே] எல்லா ஸுமங்கலந்துக்கும் மூலம்.

சகுனம் அநுகூலமானதைப் பார்த்து விப்ரர் ராஜாவிடம் சொன்னுர்கள்.

''இனி தாமதிக்க காரணமில்லேயே'' என்று உபரோஹிதரிடம் ராஜா சொன்னுர்.

ஸதானந்தர் மந்த்ரிகளே கூப்பிட்டார். மங்களப்பொருள்கள் கூட்டி அவர்கள் கொண்டு வந்தனர்.

சங்கம், நிசானம். பணவம் பல முழங்கின.

மங்கல கலசம் சுப சகுனப் பொருள்கள் சேர்த்தனர்.

அழகான ஸுவாஸிநிகள் பாடலானுர்கள்.

புநித விப்ரர் வேத கோஷமிட்டனர்.

மரியாதை மிளிர இப்படி எடுத்துச் சென்றனர். ஜநவாஸத்தில் பாராதியரிடம் போனுர்கள்.

கோஸலபதியின் செல்வமும் ஸமாஜமும் பார்த்து ஸுர ராஜாவும் (இந்த்ரனும்) மிக அல்பமாகத் தோன்றினுன்.

'ஸமயமாகிவிட்டது, புறப்படலாமே' என்று தெரிவித்தனர்.

இதைக் கேட்டதும் டங்காவில் முழக்கலாயினர்.

குருவிடம் கேட்டார். குல தர்மத்தின்படி குலவிதி பண்ணி முநி, ஸாது ஸமாஜத்துடன் ராஜா சென்ருர்.

*அவதேசரின் பாக்யம், ஐச்வர்யம், பார்த்து ப்ரஹ்மா முதலான தேவகணங்கள் தம் ஜன்மம் வீண் என எண்ணினர். ஆயிர வாயால் புகழ்ந்தனர்.

தேவர் ஸுமங்கல ஸமயம் அறிந்தனர். டங்கா முழக்கி புஷ்பம் சொரிகின்றனர். சிவ, ப்ரஹ்மா முதலான தேவ கணங்கள் கூட்டம் கூட்டமாக விமானங்களில் வீற்றிருக்கின்றனர். ப்ரேமையால் சரீரம் புளகமாகியிருக்கிறது. ஹ்ருதயத்தில் உத்ஸாஹம். ராம விவாஹம் பார்க்கப் போனுர்கள். ஜநக புரத்தைப் பார்த்து தேவர்களுக்கு ஆசை உண்டாகியது. அவரவர் லோகம் சின்னதாகத் தோன்றியது.

விசித்ர மண்டபத்தைத் திகைத்துப் பார்த்தனர். பலவிதமாக அமைப்பு இந்த உலகத்தியதல்லாததாக இருந்தது! நகர ஸ்த்ரீ புருஷர் ரூபகளஞ்ஜியம், கட்டமைந்தவர், தர்மவான்கள், நல்ல சீலமுள்ளவர், புத்திசாலிகள். அவர்களேப் பார்த்து எல்லா தேவர்களும் தேவதைகளும் சந்த்ர ப்ரகாசத்தில் நக்ஷத்ரங்கள் போல மங்கலாயினர். விதிக்கு விசேஷ ஆச்சர்யம் உண்டாகியது. அவர் தன் வேலேப்பாடு எங்குமே கொஞ்சமும் காணவில்லே.

சிவன் எல்லா தேவர்களுக்கும் அறிவுறுத்தினுர்.— ''ஆச்சர்யத்தினுல் மறந்து விடாதீர்கள். ஹ்ருதயத்தில் தைர்யம் கொண்டு நடந்து கொள்ளுங்கள். இது ஸிய-ரகுவீர விவாஹம். எவருடைய நாமத்தை எடுத்துக்கொண்டதுமே ஜகத்தில் எல்லா அமங்கலமும் அழியுமோ, *நாலு பதார்த்தமும் கைக்குக் கிடைக்குமோ--அவரே ஸீதாராம:'' என்று சம்பு ஸுரர்களுக்கு அறிவுறுத்தினுர். நந்தியை மேலே செலுத்தினுர்.

தசரதன் போவதை தேவர் பார்த்தனர். அவர்கள் மநஸில் பேரானந்தம், புல்லரித்துக்கொண்டிருந்தது. ஸாது ஸமாஜமும் மஹி தேவர்களும் உடனிருந்தனர் ஸுகம் (சரீரம் எடுத்துக் கொண்டு) ஸேவை பண்ணுவது போலிருந்தது. நாலு அழகு குமாரர்களும் அவருடன் இருந்தனர்—மோக்ஷத்தின்**நாலுவிதம் சரீரம் கொண்டு வந்தது போலிருந்தது. மரகத, கநக வர்ண சிறந்த ஜதைகள் பார்த்து தேவர்களுக்கு உண்டான ப்ரீதி கொஞ்சமல்ல. மீண்டும் ராமனேப் பார்த்து ஹ்ருதயம் மகிழ்ந்தனர். ராஜாவைப் புகழ்ந்து புஷ்பம் சொரிந்தனர்.

---

* 1. அயோத்யாவின் ஈசன்—ராஜா தசரதன்

2: தர்ம அர்த்த காம மோக்ஷம்

**3. ஸாலோக்ய ஸாமீப்ய ஸாரூப்ய ஸாயுஜ்யம்

நகத்திலிருந்து சிகம் வரை ராமனின் அழகு ரூபத்தை மீண்டும் மீ ண் டு ம் பார்த்து உமாவுக்கும் புராரிக்கும் புளக மாகியது. கண்களில் நீர் நிரம்பியது. மயில் கழுத்து போல ச்யாம அங்கம். மின்னலைப் பழிக்கும் நல்வண்ண ஆடை. பலவித விவாஹ ஆபரணங்கள். மங்கள மயமாக, எல்லாவிதத்திலும் அழகாக விளங்கின. சரத்கால விமல விது [சந்த்ர] முகம்.

அப்போதலர்ந்த தாமரையை வெட்கச்செய்யும் கண்கள், அழகெல்லாம் இவ்வுலத்தியதே அல்ல. வ ர் ண னை பண்ண முடியாது. மநஸுக்கு மிக இனிதாயிருக்கும். மநஸைக்கவரும் ஸஹோதரர் உடன் சோபிக்கின்றனர். துடிப்பான குதிரையை நாட்டியம் நடத்திச் செல்கின்றனர். ராஜகுமாரர் சி ற ந் த குதிரைகளின் சிறப்பைக் காட்டுகின்றனர். மாகதர் விருது சொல்கின்றனர்.

ராமன் வீற்று திகழ்ந்த குதிரையின் கதி (நடை) பார்த்து கருடனுக்கு வெட்க முண்டாகியது. அது எல்லா விதத்திலும் அழகு. அந்த அழகைச் சொல்ல முடியாது. காமனே குதிரை வேஷத்தில் வந்தான் போலும்.

கண்கூடாக காமனே ராமனுக்கு குதிரை வேஷத்தில் மிகவும் சோபிக்க வந்தான் போலும். தன் வயஸ், பலம், ரூபம், குணம், கதியால் புவனம் முழுவதையும் மோஹிக்கப் பண்ணுவது. பதிக்கமுள்ள சேணம் மின்னியது. அழகான முத்து, மணி, மாணிக்கம் கோத்திருந்தன. அழகான சுருளான முடி; அழகான லகாம் பார்த்து தேவர், மநிதர், முநிவர், மயங்கினர். ப்ரபுவின் மநஸுடன் மநஸ் கலந்து அந்தக் குதிரை போகப்போக சோபை அடைந்தது. தாரா கணங்கள், மின்னல்களால் அலங்கரிக்கப் பட்ட மேகம் அழகான மயிலை ஆடச்செய்வது போலிருந்தது. எந்தச் சிறந்த குதிரைமேல் ராமன் ஏறிச் சென்ருரோ அதன் வர்ணனை சாரதாவும் பண்ண முடியாது.

சங்கரு ராம ரூபத்தில் சொக்கியவர். அவருக்கு பதினைந்து கண்கள் மிகவும் ப்ரியமாயின.

ஹரி (விஷ்ணு) ப்ரேமையுடன் ராமனைப் பார்த்தபோது, ரமாபதியும் ரமாவுமே மயங்கிப் போனுர்கள்.

ராம அழகைப் பார்த்து விதி ஸந்தோஷப்பட்டார்—ஆனுல் எட்டே கண்கள் தானே இருக்கின்றன என வருந்தினுர்.

ஸூர ஸேனாபதி ஹ்ருதயத்தில் பெரிய உத்ஸாஹம்! விதியின் கண்கள் போல் தனக்கு ஒன்றரை மடங்கு கண்களே!

புத்திசாலி ஸூரேசன் ராமனைப் பார்த்தான்-கௌதம சாபம் பரம நல்லது என எண்ணினான்.

தேவர் எல்லாரும் ஸூரபதியைப் பார்த்து பொறாமைப் பட்டனர். இன்று இந்த்ரனுக்கு ஸமம் யாருமில்லை என்றனர். ராமனைப் பார்த்து ஆனந்தப்பட்டனர்.

இரு ராஜ ஸமாஜங்களிலும் விசேஷமான ஆனந்தம்.

இரு ராஜ ஸமாஜங்களிலும் எல்லையிலாத ஆனந்தம். இரு தரப்பிலும் துந்துபி மிக பலமாக முழங்குகின்றன. தேவர் ஆனந்தம் அடைந்து—''ஜய ஜயதி ஜய ரகுகுலமணி'' என்று சொல்லி புஷ்பம் சொரிகின்றனர்.

இப்படி பாராத் வருவதைத் தெரிந்து வாத்யங்கள் ஏராளமாக முழங்கலாயின. ராணிகள் ஸூவாஸினி ஸ்த்ரீகளை அழைத்து த்ருஷ்டி கழிக்க மங்கலப் பொருள்கள் சேகரித்தனர். அநேக விதமாக ஆரதி ஏற்பாடு பண்ணி, மங்கலப் பொருள் எல்லாம் கூட்டிவைத்து மகிழ்ச்சியுடன் *சிறந்த கஜ காமினி [பிடி நடை] ஸ்த்ரீகள் சென்றனர். விது [சந்த்ர] வதநிகள் [முகமுடையவர்], ம்ருக[மான்] நயனி [கண்ணி]கள், எல்லாரும் தம் சரீர அழகால் ரதியின் கர்வத்தை ஒடுக்கவல்லவர், எல்லாரும் வண்ண வண்ண புடைவைகள் உடுத்திருந்தனர். சரீரத்தில் எல்லாவித பூஷணங்கள் அணிந்திருந்தனர். எல்லா ஸூமங்கலங்களும் அங்கங்களில் பண்ணிக் கொண்டிருந்தனர். கோகிலம் வெட்கும்படி பாடிக்கொண்டிருந்தனர். கங்கணம், கிண்கிணி, நூபுரம் ஒலித்தன. அவர்கள் நடையைப் பார்த்து யானை ரூபமேந்திய காமனும் வெட்கப் படுவான். பலவித வாத்யங்கள் முழங்கின. ஆகாசத்திலும் நகரத்திலும் மங்களாசாரம் நடந்துகொண்டிருந்தன. *சசி [இந்த்ராணி], சாரதா, ரமா, பவானி, ஸூரஸ்த்ரீகள், தூயவர், ஸ்வபாவமாகவே புத்திசாலிகள் ஒளிவாக வேறு வேஷத்தில் எல்லாரும் அந்தப்புரத்தாருடன் கலந்து கொண்டனர். அழகான இனிய குரலில் பாடுகின்றனர். எல்லாரும் ஸந்தோஷ வசமா யிருக்கின்றனர். எனவே எவரும் இவர்களைத் தெரிந்துகொள்ளவில்லை. யார் யாரைத் தெரிந்து கொண்டார்? எல்லாரும் ஆனந்தத்தில் பித்தாகி ப்ரஹ்ம வரனுக்கு த்ருஷ்டி கழிக்கப் போனார்கள். அழகான கானம் நடக்கிறது. இனிய நிசானம் முழங்குகிறது. தேவர் புஷ்பம் சொரிகின்றனர். மிகவும் நல்ல சோபை!

ஆனந்த கந்த வரனைப் பார்த்து எல்லாரும் ஹ்ருதயத்தில் ஆனந்தம் அடைந்தனர். கமல கண்களில் நீர் பெருகியது. அழகு அங்கங்களில் புல்லரித்தது.

ராமனை வர வேஷத்தில் பார்த்து ஸிய மாதா மநஸில் என்ன ஸுகமடைந்தாளோ அதை ஆயிரம் சாரதாவோ, சேஷனுமோ நூறு கல்பகாலம் சொன்னாலும் மாளாது.

மங்கல ஸமயம் என உணர்ந்து ராணியர் கண்ணீரைத்தடுத்து மலர்ந்த மநஸுடன் த்ருஷ்டி கழிக்கின்றனர்.

வேதத்தின்படி சடங்குகள், மற்றவைகள் எல்லாம் நன்றாகப் பண்ணினர். ஐந்துவித வாத்யங்கள் முழங்க மங்கல கீதம் பாடுகின்றனர்; பலவிதமான மிதி பாவாடைகள் விரித்திருக்கிறார்கள்; ஆரதி எடுத்தனர்; அர்க்யம் தந்தனர்.

ராமன் மண்டபத்தில் ப்ரவேசித்தான்.

தசரதன் ஸமாஜத்துடன் விளங்குகிறார். செல்வத்தைப் பார்த்து லோகபாலர் வெட்கப்படுகிறார்கள். அவ்வப்போது தேவர்கள் பூச்சொரிகின்றனர். *மஹீஸுரர் (ப்ராஹ்மணர்) அநுகூலமாக சாந்தி பாடம் சொல்கின்றனர். ஆகாசத்திலும் நகரத்திலும் கொண்டாட்டம். தான் சொல்வதோ மற்றவர் சொல்வதோ ஏதும் காதில் படவில்லை. இப்படியாக—

ராமன் மண்டபத்தில் வந்தான்.

அர்க்யம் கொடுத்து

ஆஸநத்தில் அமர்த்தினர்

ஆஸநத்தில் அமர்த்தினர்

ஆரதி எடுத்தனர்.

மாப்பிள்ளையைப் பார்த்து ஸுகமடைகின்றனர். மணி, ஆடை, பூஷணங்கள் நன்றாக ரக்ஷை கழிக்கின்றனர். ஸ்த்ரீகள் மங்கலம் பாடுகின்றனர். ப்ரஹ்மா முதலான ஸுரவரர் விப்ர வேஷத்தில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனர். ரகு-குல-கமல-ரவியின் அழகைப் பார்த்து வாழ்வின் பலன் அடைகின்றனர். நாவிதன், பாரீ [இலைகளால் தொன்னை செய்பவர்] பாடர், நடர், த்ருஷ்டி கழித்த பொருள்களை தானமடைந்து ஸந்தோஷமாகி தலை வணங்கி ஆசீர்வாதம் பண்ணுகின்றனர். அவர்களுக்கு ஹ்ருதயம் கொள்ளாத மகிழ்ச்சி.

வைதிக, லௌகிக விதிகள் எல்லாம் பண்ணி ஜநகரும் தசரதரும் எல்லையிலாத ப்ரீதியுடன் சேர்ந்தனர்.

உபமானம் தேடித்தேடி கவிகள் வெட்கப்பட வேண்டிய தாயிற்று.

உபமானம் எங்கும் கிடைக்காது போகவே தோல்வி ஒப்புக்கொண்டனர். ''அவர்களுக்கு அவர்கள்தான் ஸமம்'':— இந்த உபமானம் நிச்சயம் பண்ணினர்.

ஸமதிகள் ஸந்தித்ததைப் பார்த்து தேவர்கள் ப்ரேமை வசமாயினர்; புஷ்பம் சொரிந்தனர்; யசகானம் பண்ணினர். ''விரிஞ்சி ஜகத்தைப் படைத்ததுமுதல் ஏராளமான விவாஹங்கள் பார்த்திருக்கிறோம்; கேட்டிருக்கிறோம். ஆனால் எல்லா விதத்திலும், எல்லா ஸமாஜமும், ஸமமான ஸமதிகள் இன்றுதான் பார்க்கிறோம்'' என்றனர்.

தேவர்கள் அழகாக ஸத்யமாக சொன்னது கேட்டு இரு தரப்பிலும் உலகத்தியதல்லாத ஆனந்தம் நிரம்பியது.

அழகான மிதி பாவாடை விரித்து, அர்க்யம் கொடுத்து, மரியாதையாக ஜநகர் தசரதரை மண்டபத்துக்குள் அழைத்து வந்தார்.

தசரதர் மண்டபத்தின் விசித்ர அமைப்பைப் பார்த்தார். அந்த அழகு முநிவரின் மநஸையும் கொள்ளை கொண்டது. புத்திமானான ஜநகர் எல்லாருக்கும் ஆஸனம் தன் கையாலேயே கொண்டுவந்து, கொண்டுவந்து போட்டார். குல இஷ்ட தேவதைக்கு நிகராக வஸிஷ்டரைப் பூஜை பண்ணினார். வேண்டிக்கொண்டார். ஆசீர்வாதம் அடைந்தார். விச்வாமித்ரரை பூஜித்ததில் ப்ரீதியின் ரீதி ஒன்றும் சொல்ல முடியாது. வாமதேவர் முதலான ருஷிகளை ராஜா ஆனந்தமாகப் பூஜித்தார். எல்லாருக்கும் திவ்ய ஆஸனம் அளித்தார். எல்லாரிடமும் ஆசீர்வாதம் அடைந்தார்.

பின்னர் ஈசனாகவே பாவித்து கோஸலபதியை பூஜை பண்ணினார்—மநஸில் வேறு பாவமே இல்லை. கைகள் சேர்த்து வேண்டிக்கொண்டார். ஸ்தோத்ரம் பண்ணினார். தன் பாக்யத்தின் செழிப்பை மிகவாக [எவ்வளவு பெரிய பாக்யம் என்று] ச்சொன்னார்.

ஸமதிக்கு ஸமமாகவே எல்லா விதமாயும் மரியாதையுடன் ராஜா பாராதியர் எல்லாரையும் பூஜித்தார். எல்லாருக்கும் தகுந்த ஆஸனம் தந்தார்.

அந்த உத்ஸாஹத்தை ஒரு வாயால் எப்படி வர்ணிக்கட்டும்?

ஜநகர் எல்லாருக்கும் தாநம் பெருமை பாராட்டு, ப்ரார்த்தனைகளுடன் மரியாதை செய்தார்.

விதி ஹரி ஹரன் திக்பாலர், திநராஊ[தின-ராஜா ஸூர்யன்] முதலானோர்-ரகு-வீர-ப்ரபாவம் தெரிந்தவர் - எல்லாரும் ஒளிவான [மாறு] வேஷம் - சிறந்த ப்ராஹ்மண வேஷம் எடுத்துக் கொண்டு ஆனந்தமாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். ஜநகர் அவர்களை தேவர்களுக்கு 'ஸமமாக' எண்ணி பூஜை செய்தார். தெரிந்து கொள்ளாமலேயே உத்தம ஆஸனம் அளித்தார். [அந்த ஸமயத்தில்] யார் யாரைத் தெரிந்து கொண்டார்! அந்தக் கூட்டத்தில் ஆனந்த கந்த [ராமனை] வரன் ஆகப்பார்த்து இரு தரப்பிலும் ஆனந்தம் நிறைந்தது. எல்லாரும் மெய் மறந்திருந்தனர். [இப்படியான நிலையில்] நல்ல க்ஞாநி ராமன் தேவர்களைக் கண்டுகொண்டார். அவர் அவர்களுக்கு மாநஸீகமாக ஆஸனம் அளித்து மானஸீக பூஜை பண்ணினார். ப்ரபுவின் சீலம், ஸ்வபாவம் பார்த்து தேவர்கள் மநஸில் ஸந்தோஷப்பட்டார்கள். சந்த்ரனைப் பார்த்து சகோர பக்ஷி ஆனந்தப்படுவது போல, பார்த்துக்கொண்டே இருப்பதுபோல ராம-சந்தர-முக-சந்த்ரனின் அழகை எல்லாருடைய கண்கள் ரூபமான சகோர பக்ஷி ஆர்வத்துடன் பருகி பேரானந்தம் அடைந்தது.

ஸமயம் வந்துவிட்டதென வஸிஷ்டர் ஸதானந்தரைக் கூப்பிட்டார்.

அவர் உடனே மரியாதையுடன் வந்தார்.

''சீக்கிரம் போய் கந்யாவை அழைத்து வாருங்கள்'' என்றார்.

வஸிஷ்டரின் ஆக்ஞை பெற்று அவர் ஸந்தோஷமாக அழைத்துவரப் போனார். [உள்ளே போய் அவர் ராணியிடம் சொன்னார்]

புரோஹிதர் [ஸதானந்தர்] சொன்னதைக் கேட்டு, ஸாமர்த்யமுள்ள ராணியும் ஸகிகளும் ஆனந்தமடைந்து, குலத்தில் வயதானவர்களையும் ப்ராஹ்மணிகளையும் அழைத்து வரச்சொல்லி மங்கலகாநம் முதலில் பாடி குலாசாரத்தைச் செய்தனர்.

ஸ்த்ரீகள் வேஷத்தில் வந்திருந்த சிறந்த தேவ-மனைவியர் ஸ்வபாவமாகவே அழகாகவும் ச்யாமா [16 வயதினர்] ஆகவும் இருந்தார்கள். அவர்களைப் பார்த்து எல்லா ஸ்த்ரீகளும் ஸந்தோஷமடைந்தனர்.

யார் எனத் தெரியாமலே அவர்கள் இவர்களுக்கு ப்ராண ப்ரியமாயினர். அவர்களை லக்ஷ்மி, பார்வதி, ஸரஸ்வதிக்கு ஸமமாகக் கருதி ஜநகரின் ராணி அவர்களுக்கு திரும்பத்திரும்ப ஸந்மாநம் பண்ணினாள்.

அவர்கள் ஸீயாவுக்கு எல்லா ஆபரணங்களும் அணிவித்து அலங்காரம் பண்ணி ஸபைக்கு அழைத்துப் போனார்கள்.

ஸகிகளும் மற்ற ஸ்த்ரீகளும் ஸீதாவை ஸபைக்கு அழைத்துப் போனார்கள். எல்லாரும் பதினாறு ச்ருங்காரங்களும் பண்ணிக் கொண்டிருந்தார்கள். மத - யானை - நடையில் போனார்கள். அவர்களது பாட்டைக் கேட்டு ருஷிகளின் த்யானமும் கலைந்தது, காமரூப குயிலும் கூட வெட்கப்பட்டன. கை வளைகள், நூபுரங்கள், திவ்ய கங்கணங்களின் ஓசை ராகம்-தாளத்துக்கு அமைந்திருந்தன.

ஸ்வபாவமான அழகுள்ள ஸீதா அந்த ஸ்த்ரீகள் ஸமூகத்தில் சோபையே ரூபமெடுத்து வந்தவர்களிடையே ஒரு பரம சோபை போல இருந்தாள்.

ஸியவின் அழகு வர்ணிக்க முடியாது. ஏனெனில் என் புத்தி சிறியது அந்த அழகோ பென்னம் பெரியது!

பிள்ளை வீட்டார் கோஷ்டியில் வந்தவர் எல்லாருமே அழகினிருப்பிடம் ஆனவளும், எல்லா விதத்திலும் பவித்ரமானவளுமான ஸீதா வருவதைப் பார்த்து மநஸுக்குள் நமஸ்காரம் பண்ணினர்.

ராமன் அவளைப் பார்த்து மனோரதம் நிறைவேறப்பெற்றார்,

தசரதர் பிள்ளைகளுடன் உவந்தார். அவர்கள் ஹ்ருதயத்தில் எத்தனை ஆனந்தம் ஏற்பட்டது எனச் சொல்லமுடியாது.

தேவர் நமஸ்காரம் பண்ணி பூமாரி பொழிகிறார்கள்.

மங்களம் தரும் ருஷிகளின் ஆசீர்வாதம் ஓங்கி எழுகிறது.

ஓரிடத்தில் பாடிக்கொண்டிருக்கிறார்கள்.

ஓரிடத்தில் நிசானம் முழுங்குகிறது.

பெரிய கோலாஹலமாயிருக்கிறது. எல்லா ஸ்த்ரீ புருஷர் களும் ஆனந்த உத்ஸவத்தில் மூழ்கிக் கிடக்கிறுர்கள்.

இப்படியாக ஸீதா மண்டபத்துக்குள் வந்தாள்.

ருஷீச்வரர்கள் சாந்தி பாடம் சொல்லலாயினர்.

இரண்டு குல குருக்களும் அப்போது செய்யவேண்டிய வைதிக விதிகளேயும், குலாசாரங்களேயும் பண்ணினர்.

ப்ராஹ்மணர் ஆசார விதி பண்ணி, ஸந்தோஷமாக குரு கணேச, கௌரி முதலானேரின் பூஜை பண்ணலாயினர். தேவதைகள் கண்கூடாக வந்து பூஜையைப் பெற்றுக்கொண்டு ஆசீர்வாதம் அளித்து ஸந்தோஷப்படுகிறுர்கள்,

மதுபர்க்கம், மங்களப் பொருள்-எதெது எப்போது ருஷிகள் கேட்டார்களோ உடனுக்குடனே அவைகளேத் தங்கப் பாத்திரங் களிலும், தட்டங்களிலும் ஸேவகர்கள் கொடுக்கிறுர்கள்.

ஸூர்ய நாராயணன் குலத்தின் எல்லா விதங்களேயும் மிக ப்ரியமாகச் சொல்கிறுர். அதற்கேற்றபடியே மிக மரியாதை யுடன் எல்லாக் கார்யமும் நடக்கிறது.

தேவதா பூஜை ஆனவுடன் ஸீதாவுக்கு திவ்ய ஸிம்மாஸனம் தரப்பட்டது.

ஸீதாவும் ராமனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டதோ. ஒருவர்மேல் மற்றவருக்கு உண்டான ப்ரீதியோ யாருக்கும் தெரியாது. ஏனெனில் மநஸ், புத்திகளுக்கு அப்பால் பட்ட விஷயத்தைக் கவி எப்படி வெளியிட முடியும்.

ஹோமம் பண்ணியபோது அக்நிதேவன் சரீரம்கொண்டு நேரில் வந்தார். மிக ஸந்தோஷமாக ஆஹுதியை ஏற்றுக் கொண்டார். வேத ப்ராஹ்மண வேஷத்தில் விவாஹ விதி முழுதும் சொல்லிக்கொடுத்தார்.

ஜநக மஹா ராஜாவின் பட்டத்து ராணி— ஜகத் ப்ரஸித்த மான ஸீதாவின் தாயாரின் வர்ணனே எப்படி பண்ணமுடியும்! அவளே ப்ரஹ்மாவே நல்ல புகழும், புண்யமும், ஸுகமும், அழகும் சேர்த்து எல்லா குணங்களுடனும் ஆக்கியிருக்கிறுர்!

ஸமயம் வந்ததும் முநிவர்கள் மஹாராணியை கூப்பிட்டனர். உடனே ஸுஹாஸினியான ஸ்த்ரீகள் அவளே மரியாதையுடன் அழைத்து வந்தனர்.

ஸுநயனு [மஹாராணி] மஹாராஜா ஜநகரின் இடப்புறம், ஹிமாசலனுடன் மேனு போல விளங்கினுள். அழகான தங்கக் கலசங்களில் சுத்தமான நல்ல வாஸனையுள்ள மங்கள ஜலம் நிரப்பி ராஜாவும் ராணியும் ஸந்தோஷமாக தம் கையாலேயே ராமனின் முன்னுல் கொண்டுவந்து வைத்தார்கள்.

ருஷிகள் மங்கள மயமான வேதம் ஓதினார்கள். ஸமயம் ஆனதும் ஆகாசத்திலிருந்து புஷ்பமாரி பொழிந்தது. வரனைப் பார்த்து ராஜாவும் ராணியும் ப்ரேமை நிரம்ப அவருடைய பவித்ர சரணங்களை நீராட்டலானுர்கள். அப்போது அவர் களுடைய சரீரங்கள் புளகமடைந்தன.

நகரத்தில், ஆகாசத்தில், பாட்டு, நிசான இசை; ஜய ஜய என்ற வாழ்த்துகள் நாலு பக்கமும் பொங்கி எழுந்தது.

எந்த சரண கமலங்கள் காமதேவனின் பகைவரின் [சிவனின்] ஹ்ருதய ரூபமான ஏரியில் எப்போதும் ஒளி வீசுகின்றனவோ' எந்த புண்யமயமான சரணங்களை ஒரு தடவை ஸ்மரித்தாலே மநஸ் பவித்ரமாகிறதோ, கலியுக ஸம்பந்தமான தோஷம் அழிகிறதோ எது ஸ்பர்சமானதும் [பட்டதும்] மஹா பாபியா யிருந்த முநி பத்நி, அஹல்யா நல்ல கதி அடைந்தாளோ, எவற்றின் மகரந்தப்பொடியை சம்பு தலையில் அணிகிருரோ, தேவர்கள் எவற்றை பவித்ரத்தின் எல்லை என வர்ணிக்கிருர்களோ, ருஷிகணங்களும் யோகி கணங்களும் தம் மநஸை வண்டாகக் கருதி எவற்றின் ஸேவை பண்ணி வேண்டிய கதி (மோக்ஷம்) அடைகின்றனரோ—அந்த சரண கமலங்களை பாக்யத்திற்கு பாத்ரமான ஜநகர் நீராட்டுகிருர்! ஜனங்கள் எல்லாரும் ஜய ஜய என்று கோஷமிடுகின்றனர்.

வரன் - கந்நி இருவருடைய உள்ளங் கைகளையும் இணைத்து இரண்டு குல குருக்களும் சாகை [வம்ச பரம்பரை] சொல்கிருர்கள்.

அந்த பாணிக்ரஹணத்தைப் பார்த்து ப்ரஹ்மா முதலாக தேவர், ருஷிகள், மநிதர், ஆனந்தம் நிரம்பப் பெறுகின்றனர்,

ஸுகத்தின் மூலமான வரனைப் பார்த்து தம்பதிகள் [ராஜாவும் ராணியும்] மெய் சிலிர்க்கின்றனர். ஹ்ருதயம் பொங்க ஆரம்பித்தது.

ராஜ மணி (ஜநகர்) லௌகிகமான, வேதத்தில் சொல்லிய, விதிகள் எல்லாம் பண்ணி கந்யா தானம் பண்ணினர். ஹிமவான் [பார்வதியை] கிரிஜாவை மஹேசனுக்கு அளித்ததுபோல, ஸாகரம் ஹரிக்கு ஸ்ரீயை அளித்ததுபோல—

ஜநகர் ராமனுக்கு ஸியவை ஸமர்ப்பித்தார்.

இந்தப் புதிய புகழ் லோகமெல்லாம் பரவியது. விதேஹன் எப்படி ப்ரார்த்தனை பண்ணிக்கொள்வார்—ச்யாமளமூர்த்தி அவரை வி-தேஹனுக்கிவிட்டார்.

விதிப்படி ஹோமம் ஆகி தாலி முடிந்தாயிற்று.

அக்நியை வலம் வந்தாகியது.

வந்திகளும் பாணர்களும், ஜயகோஷம் பண்ணலாயினர். வேத பாடம் நடக்கலாகியது. மள்கள கீதம் பாடலாயினர் நிசானம் முழங்காலாகியது. இதெல்லாம் கேட்டு ஸாமர்த்ய மான தேவர் ஸந்தோஷமடைந்து கல்ப வ்ருக்ஷ புஷ்பங்கள் சொரியலாயினர்.

குமாரியும் குமாரனும் வலம் வந்து கொண்டிருக்கின்றனர். அழகாக இருக்கிறது. பார்ப்பவரெல்லாரும் கண்கள் பெற்றதன் பயன் அடைகிறுர்கள். இந்த-மநஸ்-கவரும் ஜதையை வர்ணிக்க முடியாது. கொடுக்கக் கூடிய உபமானம் ஏதும் குறைவாகவே தான் ஆகும்.

ராமன்-ஸீதாவின் ப்ரதி பிம்பங்கள் அழகாக கம்பங்களில் இருந்த மணிகளில் மின்னலாயின. மதனனும் ரதியும் அநேக ரூபங்கள் எடுத்துக்கொண்டு இணையிலாத ராம-விவாஹத்தைப் பார்ப்பது போல் இருந்தது. அவர்கள் மநஸில் தர்சனம் பண்ண ஆசை; ஆனுல் தயக்கமும் அதிகம். ஆகையால் அவ்வப் பொழுது வெளிப்படுகின்றனர். மறைகின்றனர்.

பார்த்தவர்கள் எல்லாரும் ப்ரேமையில் ஆழ்ந்திருந்தார்கள். ஜநகர் போலவே அவர்களும் மெய் மறந்திருந்தனர்.

ருஷிகளும் ஸந்தோஷமாக அவர்களை [அக்நி] வலம் வரச் செய்தனர். பலதானம் உட்பட எல்லா விதிகளையும் செய்து முடித்தனர்.

ஸப்தபதியின்போது ராமன் ஸீதாவின் நெற்றியில் குங்குமம் இட்ட சோபையை எந்த விதமாகவும் சொல்ல முடியாது. அது இந்த மாதிரி தோன்றியது; அம்ருதம் பருக ஆசையுடன் ஸர்ப்பம் செந்தாமரையில் அதன் சிவந்த மகரந்தத்தை நிரப்பி அதனுல் சந்த்ரனுக்கு அலங்காரம் பண்ணுவது போலிருந்தது.

பிறகு வஸிஷ்டர் ஆக்ஞை இட்டார்.

வரனும் வதூவும் ஒரே ஆஸனத்தில் அமர்ந்தனர்.

ராமனும் ஜாநகியும் வராஸனத்தில் அமர்ந்தனர்.

தசரதன் மநஸ் ஸந்தோஷமாகியது. தன் புண்ய ரூபமான கல்பக வ்ருக்ஷத்தில் புதிய பழம் பார்த்து அவர் சரீரம் அடிக்கடி புளகமாகிறது.

உலகம் முழுவதிலும் உத்ஸாஹம் நிரம்பியது.

'ராம விவாஹம் முடிந்துவிட்டது' என்று சொல்லிக் கொண்டனர்.

அந்தப் பேரானந்தத்தின் வர்ணனை முழுவதும் ஒரு நாவால் எப்படிச் சொல்லமுடியும்? நா ஒன்றே! மங்கலமோ மஹா பெரியது!

பின்னர் ஜநகர் வஸிஷ்டரின் ஆக்ஞை பெற்று விவாஹத்துக்கு வேண்டிய பொருள் எல்லாம் சேகரித்து மாண்டவி, ச்ருதகீர்த்தி ஊர்மிளா, மூன்று கந்யைகளையும் அழைத்துவரச் சொன்னுர். முதலில் குச-கேதுவின் (தன் தம்பியின்) பெண்—குணம், சீலம், ஸுகம், சோபை ரூபமானவளை (மாண்டவியை) பரதனுக்கு எல்லா விதிப்படியும் ப்ரேமையுடன் விவாஹம் பண்ணிக் கொடுத்தார்.

ஜாநகியின் தங்கை ஊர்மிளா—எல்லா அழகிகளிலும் சிறந்தவள் என்ற நினைவுடன் லக்ஷ்மணனுக்கு எல்லா விதத்திலும் பெருமைப்படுத்தி விவாஹம் பண்ணிவைத்தார்.

இதேபோல ரூபம் சீலம் ப்ரகாசிப்பவள், அழகான கண்கள்-அழகான முகம் உள்ள, எல்லா குணங்களும் நிரம்பப்பெற்ற ச்ருதகீர்த்தி எனும் பெயருள்ளவளை சத்ருக்னனுக்கு விவாஹம் பண்ணிவைததார்.

வரன்களும் வதூக்களும் அவரவர் தமக்கு இணையான ஜதை [தான் என] உணர்ந்து வெட்கமும் ஸந்தோஷமும் அடைந்தனர்.

எல்லா ஜனங்களும் ஆனந்தம் ஆகி ஆகி அழகைப் புகழலாயினர்.

தேவ கணங்கள் புஷ்பம் சொரியலாயினர்.

ஒரே மண்டபத்தில் நாலு வரன்களும் நாலு வதூக்களுடன் சோபித்தது இப்படி இருந்தது: ஜீவர்களின் உளத்தில் நாலு அவஸ்தாக்களும் அதிஷ்டான தேவதைகளுடன் விளங்கின!

அவதபதி தன் பிள்ளைகள் எல்லாரையும், நான்கு மாட்டுப் பெண்களையும் பார்த்து அடைந்த ஆனந்தம்—நரேச ரத்னனுக்கு க்ரியாக்களுடன் நாலு பலன்களும் கிடைத்தது போலிருந்தது.

ரகு வீரனின் விவாஹ விதி வர்ணிக்கப்பட்டது போலவே எல்லா குமாரர்களின் விவாஹமும் செய்யப்பட்டது.

சீர் வரிசைகள் கொடுக்கப்பட்டது ஏதும் சொல்லி மாளாது. மண்டபம் முழுதும் பொன்னும் மணியும் நிரம்பிக்கிடந்தது. கம்பளிகள், ஆடைகள், விதவிதமான பட்டு, விலையுயர்ந்த வஸ்த்ரங்கள் கொஞ்சமல்ல. யானை, குதிரை, ரதம், பணியாள், பணிப்பெண், நன்றாக அலங்காரம் பண்ணிய காமதேனு போன்ற பசுமாடு, இன்னும் அநேகம் இருந்தன. எத்தனைதான் எண்ணமுடியும்? சொல்லிமுடியாது. அதைப் பார்த்தவர்களுக்குத்தான் தெரியும்.

லோகபாலர் அவைகளைப் பார்த்துப் பொறாமைப்பட்டனர்.

மிக ஸந்தோஷமாக தசரதர் அவைகளை ஏற்றுக்கொண்டார்.

யாசகர் யாருக்கு எது இஷ்டமோ அது கொடுக்கப்பட்டது. மிஞ்சியதை ஜநவாஸத்துக்கு அனுப்பினர்.

ஜநகர் கைகூப்பி பாராத் முழுதுக்கும் மரியாதை செய்து பணிவாகச் சொன்னார். மரியாதை தானம் பணிவு பெருமையுடன் பாராத் முழுதுக்கும் உபசாரம் பண்ணிவிட்டு, ஸந்தோஷமாக, மரியாதையாக முநி-கண- பூஜை பண்ணினார். பிறகு தலை தாழ்த்தி தேவர்களை த்யாநித்து கைகள் கூப்பி எல்லாரிடமும் சொன்னார்: ''தேவர்களும் ஸாது ஜனங்களும் மநஸில் கருத்தும் ப்ரீதியும் விரும்புகின்றனர். ஓர் அஞ்சலி ஜலம் தருவதால் ஸமுத்ரம் த்ருப்தி அடைய முடியுமா?''

பின்னர் தானும் தம்பியும் கோஸலாதிபதியிடம் கைகள் கூப்பி ப்ரேமையுடன் சீலமாக அழகாக—''ராஜன், இப்போது உங்கள் உறவால் நான் எல்லாவிதத்திலும் பெரியவனாகி விட்டேன். இந்த ராஜ ஸிம்ஹாஸனத்துடன் என்னை சம்பளம் இலாத தாஸனாக எண்ணிக் கொள்ளுங்கள்.

இந்தக் கந்நிகளை உங்கள் பணியாட்களாகக் கருதி தயவுடன் இவர்களைக் காப்பாற்றுங்கள். உங்களை இங்கே கூப்பிடுவது, அநுப்புவது, எல்லாம் துணிச்சலாகப் பண்ணிவிட்டேன். இந்த அபராதத்தை மன்னித்தருள வேண்டும்'' என்றார்.

பாநுகுலபூஷணன் தன் ஸமதிக்குப் பெரிய ஸந்மானம் பண்ணினார்.

இரண்டு ஸமதிகளும் ஒருவருக்கொருவர் செய்துகொண்ட வேண்டுகோள் எல்லாம் வர்ணிக்க முடியாது. இருவருடைய ஹ்ருதயமும் ப்ரேமை நிரம்பின.

ராஜா ஜநவாஸத்துக்குப் போனபோது தேவ கணங்கள் புஷ்பம் பொழிந்தனர். ஆகாசத்திலும் நகரிலும் துந்துபி முழங்கியது. ஜயஜய கோஷம்! வேத பாடம்!

அநேகவித வேடிக்கைகள் கொண்டாட்டங்கள் நிகழ்ந்தன!

*பிறகு முநிவர் ஆக்ஞை பெற்று ஸகிகள் தம்பதிகளை கோஹ்பர்க்கு அழைத்துப் போயினர். மங்கல கீதம் பாடிக் கொண்டு போயினர்.

ராமனை அடிக்கடி பார்த்துப் பார்த்து ஸீதா வெட்கப் படுகிறாள். ஆனால் மநஸ் வெட்கப்படவில்லை. ப்ரேமை ரஸ தாஹம் அடைந்த அவள் கண்கள் மீன்களின் [செயல]ழகை வென்றன.

ச்யாம வண்ணமான தேஹம். ஸ்வபாவமாகவே அழகானது. சோபை கோடி மந்மதர்களை வெல்லும்படி இருந்தது. யாவகம் தீட்டிய சரண கமலம் மிகவும் ஸுகமானவை. அவைகளில் முநிவர்களின் மந-வண்டுகள் எப்போதும் அடைக்கலமாயின. அவருடைய மஞ்சள் வண்ண பவித்ரமான வேஷ்டி பால ஸூர்யனின் மின்னல்களின் கதிர்களைத் தோற்கடிக்கும்.

மநஸைக் கவரும் அரைஞாண், கிண்கிணி, விசாலமான புஜங்களில் ஆபரணங்கள், அழகாகத் திகழும் மஞ்சள் யக்ஞோ-பவீதம், விரல்களில் மோதிரம், பார்ப்போர் சித்தத்தை அள்ளும். விவாஹ ஸமயத்துக்கான எல்லா அலங்காரமும்! விசாலமான மார்பு. அதில் நல்ல நல்ல நகைகள் மின்னுகின்றன. மஞ்சள் வண்ண துபடா, வல கக்கத்திலிருந்து இட தோள்மேல் போகிறது [ப்ரஹ்ம வஸ்த்ரம்]. அதன் இரு ஓரங்களிலும் மணிகளும் முத்துக்களும். கமலக் கண்கள். காதுகளில் அழகான குண்டலம்.

*பெரிய வீடுகளில் குடும்ப தெய்வங்களுள்ள அறை.

அவருடைய முகம் அழகெல்லாம் வாஸம் பண்ணும் இடம்! அழகான புருவங்கள், மநஸைக் கவரும் மூக்கு நெற்றித் திலகம் அழகின் நிவாஸம், முத்துக்களும், மணிகளும் பதித்த அழகான மங்கள மயமான மகுடம். மநஸைக் கவரும் மகுடத்தின்மேல் மணிகள் கோத்திருந்தது. எல்லா அவயவங்களும் சித்தத்தைக் கொள்ளை கொள்ளும்.

நகர ஸ்த்ரீகளும் தேவர் மனைவியரும் மங்கல கீதம் பாடுகின்றனர். தேவ கணங்கள் புஷ்பம் சொரிகின்றனர். வரனுக்கு துரும்பு கிள்ளி த்ருஷ்டி கழிக்கின்றனர். மணிகள், வஸ்த்ரங்கள், நகைள் காணிக்கைகளாகக் கொடுத்து ஆரதி எடுக்கின்றனர். மங்கல கீதம் பாடுகின்றனர். தேவகணங்கள் புஷ்பம் சொரிகின்றனர். ஸூதர், மாகதர், வந்தீ ஜனங்கள் சுத்த கீர்த்தியை பாடி கேட்கச் செய்கின்றனர்.

ஸுவாஸிநிகள் குமாரனையும், குமாரியையும் ஸந்தோஷமாக கோஹ்பருக்குக் கூட்டிப் போகின்றனர். மங்கல கீதம் பாடி லோக ரீதிப்படி செய்கின்றனர். கௌரி ராமனுக்கும் சாரதா ஸீதாவுக்கும் * லஹ்கௌரி சொல்லிக்கொண்டிருக்கின்றனர். அந்தப்புறம் முழுதும் சிரித்து, கேலி, விளையாட்டுகளை ரஸித்து அதில் ஆழ்ந்திருக்கிறது.

[உதாரணமாக இப்போதும் அந்த நாட்டில் வழங்கும் ஏசல்களில் ஒன்று—

மிதிலா: மஹா ராணி, மாப்பிள்ளையை ஒன்று கேட்க வேண்டும். ஏன், மாப்பிள்ளை, உங்களூரில் பாயஸம் குடித்தால் பிள்ளை பிறக்குமாமே?''.

ராமன். ''நீங்கள் கேட்கவும் நினைவு வருகிறது. உங்களூரில் கலப்பை முனையில் பெண் பிறக்குமாமே'']

எல்லாரும் ஜன்மமெடுத்த பலன் அடைகிறார்கள்.

ஜானகி தன் கை ஆபரணங்களில் ராம ப்ரதி பிம்பம் பார்த்து கைகளையும் புஜங்களையும் அசைக்காமல் வைத்துக்கொள்கிறாள்—பிரிவு ஏற்பட்டு விடக்கூடாதே என்று கவலை.

அந்த ஸமயத்திய ஆனந்தத்தையும் ப்ரேமையையும் சொல்ல முடியாது. அது ஸகிகளுக்குத்தான் தெரியும்.

பின்னர் ஸகிகள் வரன்-வதூக்களை ஜன வாஸத்தில் கொண்டுவிடக் கூட்டிப் போகின்றனர்.

---

* விவாஹத்தில் வரனும் வதூவும் ஒருவருக்கொருவர் உணவு ஊட்டுதல்.

நகரத்திலும் ஆகாசத்திலும் அப்போது பேரானந்தம் நிரம்பியது. அங்கங்கே நாலு பக்கததிருந்தும் தொடர்ந்து ஆசீர்வாதம் பண்ணுகிறுர்கள். எல்லாரும் ஸந்தோஷ மநஸுடன் ''அழகான நாலு தம்பதிகளும் சிரஞ்ஜீவிகளாக இருபார்களாக'' என்று மநஸுக்கள் சொன்னுர்கள்.

யோகீந்த்ரர், ஸிததர், முநீந்த்ரர், தேவர் துந்துபி முழக்கினர். புஷ்பம் சொரிந்து திரும்பத் திரும்ப 'ஜய ஜய' என்று சொல்லி ஸந்தோஷமாகத் தம் இருப்பிடம் சென்றனர்.

நாலு குமாரர்களும் வதூக்களும் பிதாவிடம் வந்தனர்.

அழகு ஆனந்தம் மங்கலம்-ஜநவாஸத்தில் பொங்கி வழிந்தது. பலவிதமாக சமையல் பண்ணியிருந்தனர்.

ஜநகர் கல்யாண கோஷ்டியை அழைத்துவரச் சொன்னுர்.

தசரதன் நாலு பிள்ளைகளுடனும் விலையுயர்ந்த மிதி பாவாடையின்மேல் நடந்து போனுர்.

மரியாதை மிக எல்லார் கால்களையும் நீராட்டினர். தகுந்தபடி எல்லாரையும் ஆஸனங்களில் இருக்கச் செய்தனர். ஜநகர் தசரதரின் பாதங்களை நீராட்டினுர். அவருடைய சீலமும் ப்ரேமையும் சொல்ல முடியாது.

எந்த ராம-பத-பங்கஜத்தை ஹரன் எப்போதும் ஹ்ருதய கமலத்தில் ஒளித்து வைத்துக் கொண்டிருக்கிறுரோ அதை நீராட்டினுர். மூன்று ஸஹோதரர்களின் பாதங்களையும் ராமசந்த்ரனுடைய பாதங்களுக்கு ஸமமாகவே எண்ணி நீராட்டினுர்.

எல்லாருக்கும் அவரவர் விரும்பியபடி ஜநகர் ஆஸனம் அளித்தார். சமையல் பண்ணியிருந்த எல்லாவற்றையும் கொண்டுவரச் சொன்னுர். மரியாதையுடன் இலைகள் போட்டனர். மணிகள் இழைத்து பொன்னுலான ஆணிகள் அமைந்த இலைகள்! ஸாமர்த்யமுள்ள பரிசாரகர் ஒரு நொடியில் இனிய பவித்ரமான பருப்பு அந்நம் பசுநெய் சேர்த்து எல்லாருக்கும் பரிமாறிவிட்டனர்.

எல்லாரும் பஞ்ச க்ராணி [ப்ராண அபாந வ்யாந உதாந ஸமாந-ங்களுக்கு ஸ்வாஹா] செய்து சாப்பிட ஆரம்பித்தனர். ஏசல்-பாட்டுகள் கேட்டு மிகவும் ஸந்தோஷமடைந்தனர்.

அம்ருதத்துக்கு நிகரான பலவகை சமைத்த அந்நங்கள் பரிமாறினர். அவற்றை வர்ணிக்கவே முடியாது. திறமைசாலி களான பரிசாரகர் விதம் விதமான வ்யஞ்ஜனம் பரிமாறினர். அவற்றின் பெயர் யாருக்குத் தெரியும்! சமையல் சாஸ்த்ரத்தில் நாலுவித போஜன விதி சொல்லப்பட்டிருக்கிறது. இங்கேயோ அவற்றில் ஒன்றைக்கூட வர்ணித்தாகாது. [அவ்வளவு வகைகள்]. ஆறு சுவைகள்; ஒவ்வொன்றிலும் அழகான பல வகைகளான வயஞ்ஜனங்கள். அவை ஒன்றைவிட ஒன்று சுவையில் மிஞ்ஜியது போஜனம் பண்ணும்போது ஸ்த்ரீகள் புருஷர் - ஸ்த்ரீகளின் பெயர்கள் அமைத்து ஏசல் பாடினர்.

ஸமயத்துக்கு ஏற்ற இனிமையான பாட்டுகளைக் கேட்டு தசரதனும் ஸமாஜமும் சிரித்தனர். இப்படியாக எல்லாரும் சாப்பிட்டனர். பிறகு அவர்களுக்கு மரியாதையுடன் ஆசமனம் அளித்தனர். ஜனகர் தசரதருக்கும் சுற்றத்தாருக்கும் தாம்பூலம் அளித்து மரியாதை பண்ணினார்.

ராஜாக்கள் எல்லாரிலும் சிரோமணி தசரதர் ஜநவாஸத் துக்குப் போனார்.

ஜநக புரியில் தினமும் மங்கல உத்ஸவம். பகலும் இரவும் க்ஷணம் போலக் கழிந்தன.

விடியற்காலத்திலேயே தசரதர் எழுந்தார். யாசகர் ராஜா வின் குண கணங்களைப் பாடினர். நாலு பிள்ளைகளையும் மாட்டுப் பெண்களையும் பார்த்தார். அந்த ஆனந்தத்தை எப்படிச் சொல்வது! ப்ராத:கால க்ரியைகளைச் செய்து முடித்து, குரு வஸிஷ்டரிடம் போனார். அவர் மநஸில் பேரானந்தமும் ப்ரேமையும் நிரம்பியிருந்தது. நமஸ்காரம் பண்ணி, பூஜை பண்ணிவிட்டு, கைகள கூப்பி, அம்ருதம் தோய்ந்ததாக, இனிமை யாகச் சொன்னார். ''முநிராஜ, உங்கள் க்ருபையால் நான் இன்று என் ஆசை முழுதும் நிறைவேறப் பெற்றேன். கோஸாயி, இப்போது எல்லா ப்ராஹ்மணர்களையும் கூப்பிட்டு எல்லாவித மாகவும் அலங்கரித்த பசுக்கள் தாநம் கொடுங்கள்.''

இதைக் கேட்டு வஸிஸ்டர் ராஜாவைப் பாராட்டினார். ருஷி கணங்களை அழைத்துவரச் சொன்னார்.

வாமதேவர், தேவர்ஷி [நாரதர்], வால்மீகி, ஜாபாலி, தபோ நிதி [விச்வாமித்ரர்] எல்லா ருஷிகளின் ஸமாஜங்களும் வந்தன.

எல்லாருக்கும் ராஜா தண்டனிட்டு நமஸ்காரம் பண்ணினுர். ப்ரேமையுடன் பூஜை பண்ணி, சிறந்த ஆஸனம் அளித்தார். காமதேநுவுக்கு நிகரான சீலமான அழகான நாலு லக்ஷம் பசுக்கள் வருவித்தார். அவை எல்லாவற்றையும் எல்லாவிதமாகவும் அலங்காரம் பண்ணச்செய்து மலர்ச்சியுடன் ப்ராஹ்மணர்களுக்கு அளித்தார். மனிதருள் சிறந்த தசரதன் பலவிதமாக ப்ரார்த்தனை பண்ணி ''இன்று ஜகத்தில் வாழ்வதன் பலனை அடைந்து விட்டேன்'' என்ருர். ப்ராஹ்மணர்களிடம் ஆசீர்வாதம் பெற்று ராஜா ஸந்தோஷமடைந்தார்.

பின்னர் யாசகர்களைக்கூப்பிட்டனுப்பினுர். அவர்கள் இஷ்டப்படி பொன், வஸ்த்ரம், மணி, குதிரை, யானை, ரதங்கள் கொடுத்தார்.

அவர்கள் எல்லாரும் தானம் அடைந்து ராஜாவின் குணங்களை வர்ணித்துப் படித்துப் படித்துப் பாடிக்கொண்டு ''ஜய ஜய ஜய திநகரகுல [ஸூர்ய வம்ச] நாத'' என்றனர்.

ராம விவாஹ உத்ஸவத்தின் வர்ணனை முழுதும் ஆயிர வாயாலும் பண்ணமுடியாது.

கௌசிகர் பாதங்களில் ராஜா திரும்பத் திரும்ப நமஸ்காரம் பண்ணி ''முநிராஜ, இந்த ஸுகம் எல்லாம் உங்கள் க்ருபா கடாக்ஷத்தின் [அருள் நோக்கின்] பலனே'' என்ருர். ஜநகரின் ஸ்நேஹம், சீலம், செயல்கள், அவருடைய செல்வம் எல்லாவற்றையும் பலவிதமாகப் புகழ்ந்தார்.

தினமும் எழுந்ததும் அயோத்யாபதி ஊர் திரும்ப உத்தரவு கேட்கிருர். ஆனுல் ஜநகர் ப்ரேமையுடன் மேலும் இருத்திக் கொள்கிருர். ஒவ்வொரு நாளும் புதிய மரியாதை செய்யப் படுகிறது. ஆயிரம் விதமாக வரவேற்பு விழாக்கள். நகரத்திலும் தினந்தோறும் புதிய உத்ஸவம் ஆனந்தமாக நடக்கிறது. தசரதன் திரும்பிப் போவது யாருக்குமே பிடிக்கவில்லை. இப்படி பல நாள் கழிந்தது. பாராதி ஜனங்கள் ஆசைக் கயிற்ருல் கட்டுண்டவர் போலிருந்தனர்.

ஸதானந்தரும் கௌஸிகரும் ஜநகரிடம் போய் எடுத்துச் சொன்னுர்கள். ''ராஜன், ஸ்நேஹத்தால் நீங்கள் அவரைப்போக விட விரும்பவில்லை என்ருலும் இனி அவர் போக உத்தரவு கொடுக்கவேண்டும்'' என்றனர்.

''மிகவும் ஸரி, நாத'' என்ருர் ஜநகர். மந்த்ரி ஸமாஜத்தைக் கூப்பிட்டார்.

அவர்கள் வந்து 'ஜய, ஜீவ' என்றனர். வாழ்த்தினர். நமஸ்காரம் பண்ணினர்.

'அயோத்யா நாதன் ஊர் திரும்பிப்போக விரும்புகிறார் என உள்ளே போய்ச் சொல்லுங்கள்' என்றார்.

இதைக் கேட்டதும் மந்த்ரிகள், ப்ராஹ்மணர், ஸபையோர் எல்லாரும் ப்ரேமை வசமாயினர். ராஜாவும் அப்படியே ஆனார். பிள்ளை வீட்டார் ஸமாஜம் புறப்படப்போகிறது என கேள்விப் பட்டதும் நகர ஜநங்கள் வாட்டமடைந்து ஒருவரை ஒருவர் கேட்கலாயினர். போவது உண்மைதான், நிச்சயம் என்று தெரிந்ததும் எல்லாரும் வருத்தமடைந்தனர். தாமரை ஸந்த்யா காலத்தில் கூம்புவது போல் ஆயினர்.

பிள்ளை வீட்டு ஸமாஜம் அயோத்யாவிலிருந்து வந்தபோது தங்கிய இடங்களிலெல்லாம் [இப்போது மீண்டும்] பலவிதமான ரஸமான சாப்பாடு கிடைத்தது. பலவிதமான உலர்ந்த பழங்கள், சமைத்தவை, சமைக்காத தேவையான பொருள்கள் எல்லாம் வரலாயின. அதை வர்ணிக்கவே முடியாது. ஜநகர் பொருள்களை காளைகள் மேலேற்றியும், காவடிகளிலும் அனுப்பிவைத்தார். எத்தனையோ காவடிக்காரர் காவடிகளில் பால் ஏடு, பால் ஏடால் செய்த மிட்டாயீ, தயிர் அனுப்பிவைத்தார்.

ஒரு லக்ஷம் குதிரைகள், ஐம்பதாயிரம் ரதங்கள், எல்லாம் நகத்திலிருந்து உச்சி வரை அலங்கரிக்கப்பட்டிருந்தன. பத்தாயிரம் மத யானைகள் அலங்காரமாகியிருந்தன. அவைகளைப் பார்த்து திக்-கஜங்களும் வெட்கப்பட்டன. வண்டிகள் நிறைய பொன், வஸ்த்ரம், மணிகள், பலவிதமான பொருள்கள், பசுக்கள், எருமைகள் அனுப்பினர். ஜநகர் ஏராளமாக சீர் கொடுத்தார் - அவைகளை வைக்க இடமில்லை. அவைகளைப் பார்த்து லோகபதிகளான இந்த்ரன், குபேரன் இவர்களின் செல்வம் கொஞ்சம் போல் தோன்றியது. ஜநகர் இப்படி எல்லா வித ஸாமான்களும் ஏற்பாடு பண்ணிவைத்து அயோத்யாவுக்கு அவர்கள் புறப்படச் செய்தார்.

இங்கே ராணிகள் பிள்ளைவீட்டு ஸமாஜம் புறப்படப் போவதைப்பற்றிக் கேட்டனர். தண்ணீர் மிகக் குறைந்து, போதாதபடி ஆகிவிட்டால் மீன்கள் எப்படித் துடிக்குமோ அதுபோல் ஆயினர். ஸீதாவைத் திரும்பத் திரும்ப மடியில் அமர்த்திக் கொள்கின்றனர். ஆசீர்வாதம் பண்ணி புத்திமதி கொடுக்கின்றனர்: ஸீதா, எப்போதும் உன் பதியிடம் ஆசையோடு [பதிக்குப் பிரியமானவளாக] இரு.

அதனுல் உனக்கு விள்ளாத ஸௌபாக்யம் உண்டாகும். இதுதான் எங்கள் ஆசீர்வாதம். மாமியார் மாமனுர் பெரியோர் எல்லாருக்கும் ஸேவை பண்ணவேண்டும்— பதியின் நோக்கம் பார்த்து அவருடைய ஆக்ஞையை நிறைவேற்ற வேண்டும்.''

திறமைசாலிகளான ஸகிகள் ப்ரேமை வசமாகி இனிமையாக ஸ்த்ரீ தர்மத்தைப்பற்றிச் சொன்னுர்கள். கற்பித்தார்கள்.

ராணிகள் மிகவும் கனிவுடன் நாலு பெண்களுக்கும் விளக்கிச் சொன்னுர்கள். திரும்பத்திரும்ப மார்பொடு அணைத்துக் கொண்டனர். தாயார்கள் திரும்பத் திரும்ப புத்ரிகளைத் தழுவிக் கொண்டனர். ''ஹா! ப்ரஹ்மா ஸ்த்ரீகளை ஏன்தான் படைத்தாரோ!'' என்றனர்.

அதே ஸமயத்தில் பாநு-குல-கேது ராமு விடை பெறுவதற் காக தம்பிகளுடன் ஜநக - அரண்மனைக்கு வந்தார்.

ஸ்வபாவமாக அழகான நாலு ஸஹோதரர்களையும் பார்க்க நகர ஸ்த்ரீ புருஷர் விரைந்தனர். ''இன்றே புறப்படுகின்றனர். வழியனுப்ப எல்லா ஸாமான்களும் ஜநகர் ஏற்பாடு பண்ணியாகி விட்டது'' என்ருர் ஒருவர்.

''ப்ரியமான நண்பர்களே, அன்புள்ள ஸகிகளே, விருந்தினர் ஆன இந்த நாலு குமாரர்களையும் இன்றே கண்ணுரப் பார்த்துக் கொள்ளுங்கள். எந்தப் புண்யத்தின் சக்தியால் விதி அவர்களை அழைத்துவந்து நம் கண்களுக்கு விருந்து ஆக்கினுரோ - யாருக்குத் தெரியும்?

மரிப்பவனுக்கு அம்ருதம் கிடைத்தால் எப்படி இருக்கும்,
வாழ்நாளெல்லா பசியோடிருந்தவனுக்கு கல்பவ்ருக்ஷம்
கிடைத்தால் எப்படி இருக்கும்,
நரகத்திலுழலும் பாபிக்குஹரிபதம் கிடைத்தால் எப்படி இருக்கும்
அதேபோல அவர்களுடைய தர்சனம் நமக்குக் கிடைத்திருக்கிறது

ராம சோபையைப் பார்த்து உளத்தில் அணிந்து கொள்ளுங்கள். ஸர்ப்பம் எப்படி தன் மணியை அணிந்து கொண்டிருக்குமோ, அப்படி நீங்கள் உங்கள் மநஸை ஸர்ப்பமாக்கி கொள்ளுங்கள். இவர்களுடைய வடிவங்களை மணிகளாக கொள்ளுங்கள். அதில் இடைவிடாது த்யானம் பண்ணுங்கள்.

இப்படி, பார்த்தவர் எல்லாம் தாம் கண்கள் பெற்றதன் பலன் - அடைந்துவிட்டதாக எண்ணும்படி செய்து கொண்டு ராஜகுமாரர்கள் ராஜமாளிகையை அடைந்தனர்.

ரூப ஸிந்துவான [அழகுக்கடலான] நாலு ஸஹோதரர் களையும் பார்த்து அந்தப்புரம் முழுதும் ஸந்தோஷமடைந்தது. மாமியார்கள் ஸந்தோஷமாக குமாரர்களுக்கு த்ருஷ்டி கழித்து ஆரதி எடுத்தார்கள். ராம-அழகைப் பார்த்து ராணிகள் மிகவும் ப்ரியத்தினல் நிரம்பி விட்டனர். ப்ரேமை வசமாகி திரும்பத் திரும்ப அவர் சரணங்களில் பணிந்தார்கள். உளத்தில் ப்ரீதி நிரம்பியது; எனவே வெட்கம் விட்டுப் போயிற்று.

அந்த ஸ்வபாவமான ப்ரேமையை எப்படி வர்ணிப்பது?

ராமனுக்கும், ஸஹோதரர்களுக்கும் ராணிகள் தைல ஸ்நாநம் பண்ணி வைத்தனர். மிகவும் ஆசையுடன் ஆறு சுவை யுள்ள போஜனம் அளித்தனர்.

நல்ல ஸமயம் பார்த்து ராமன் சீலம், ஸ்நேஹம், ஸங்கோசத் துடன் சொன்னுன்-மஹாராஜா அயோத்யா போக விரும்புகிருர்- [உங்களிடம்] விடைபெற்று வரும்படி அவர் எங்களை அனுப்பினுர். தாய்மார்களே அன்பு கூர்ந்து எங்களுக்கு விடை கொடுங்கள். எங்களை உங்கள் பிள்ளைகளாக நினைத்து எப்போதும் எங்கள்மேல் உங்கள் அன்பு இருக்க வேண்டும்''

இதைக் கேட்டதும் அந்தப்புரததுக்கு அழுகையே வந்து விட்டது. ப்ரேமை வசமாகி மாமியார்கள் திகைத்துப் போனுர்கள். பேச முடியவில்லை. புத்ரிகளை மார்பொடு தழுவிக் கொண்டனர். அவரவர் பதியிடம் ஒப்படைத்தனர்—வேண்டிக் கொண்டனர்—

ராணி ராமனுக்கு ஸீதாவை ஸமர்ப்பித்து பணிவுடன் கைகூப்பி திரும்பத் திரும்ப சொன்னுள் —புத்ர, நான் [ஆத்மார்ப்பணம்] வ்ரதம் எடுத்துக் கொள்கிறேன்—நீங்கள் ஸாமர்த்யமுள்ளவர். உங்களுக்கு எல்லாருடைய நிலையும் தெரியும். குடும்ப ஜனங்களுக்கும், எனக்கும் ராஜாவுக்கும், பட்டண ஜனங்களுக்கும் ஸீதா ப்ராணனைவிட ப்ரியம்—என்று நினைவு வைத்துக்கொள்ளுங்கள்.

துளஸி: இவளுடைய நல்ல சீலம், ஸ்நேஹங்களைப் பார்த்து இவளைத் தங்கள் தாஸியாகக் கருதவேண்டும்.

நீங்கள் பரிபூர்ண காமன், க்ஞாந சிரோமணி. உங்களுக்கு [கருத்து-ப்ரேமை] பாவ ப்ரேமை மிகவும் ப்ரியம். ஜனங்களின் குணத்தை எடுத்துக் கொள்பவர். ராம, குற்றங்களை மன்னிப் பவர். தயையின் இருப்பிடம்'' என்று சொல்லி ராணி அவரது சரணங்களைப் பிடித்துக் கொண்டாள். அவள் பேச்சு ப்ரேமைச் சேற்றில் சிக்குண்டது.

மாமியார் அன்பு செறிய சொன்னது கேட்டு ராமன் அவளைப் பாராட்டினர். கைகள் கூப்பிக்கொண்டு விடை பெற்றுக் கொண்டார். திரும்பத் திரும்ப நமஸ்காரம் பண்ணினர். ஆசீர்வாதம் அடைந்து மீண்டும் தலை வணங்கி தம்பிகளுடன் புறப்பட்டார்.

ராணிகள் எல்லாரும் ராம மஞ்சு-மதுர [அழகிய - இனிய] மூர்த்தியை உளத்தில் அணிந்து ஸ்நேஹத்தால் தளர்ச்சி அடைந்தனர். மீண்டும் பலம் வருவித்துக்கொண்டு கந்யைகளை அழைத்து மீண்டும் தழுவிக் கொண்டனர். மீண்டும் மீண்டும் தழுவிக்கொண்டனர். ஸகிகளைத் தனியே அனுப்பிவிட்டு மீண்டும் மீண்டும் தழுவிக் கொண்டனர். இளங்கன்றிடம் தாய்ப்பசு திரும்பத் திரும்ப வருவது போலிருந்தது.

அந்தப்புரத்து ஸ்த்ரீ புருஷர், ஸகிகள் எல்லாரும் ப்ரேமையால் தம் வசமிழந்திருக்கின்றனர்.

ஜநக புரியில் பிரிவும், இரக்கவும் வஸிக்க ஆரம்பித்துவிட்டது போலும்!

ஜாநகி வளர்த்த கிளிகளும் மைனுக்களும், தங்கக் கூண்டுகளி லிருந்து கலக்கமடைந்து வைதேஹி எங்கே என்று கேட்க ஆரம்பித்தன.

இதைக் கேட்டு யாருடைய தைர்யம்தான் விட்டுப்போகாது! ம்ருகம் பக்ஷிகளே இப்படி வசமிழந்து போய்விட்ட இடத்தில் மநிதர்களின் நிலையை என்னவென்று சொல்வது!

அந்த ஸமயத்தில் ஜநகர் தம்பியுடன் வந்தார். பொங்கி எழுந்த ப்ரேமையால் கண்களில் நீர் திரண்டிருந்தது. எப்போதும் பரம வைராக்யமுள்ளவர்—ஸீதாவைப் பார்த்ததும் அவருடைய தைர்யம்கூட விட்டுப்போயிற்று. ஜாநகியை மார்பொடு தழுவிக்கொண்டார். க்ஞாநத்தின் பெரிய கட்டுப்பாடு விட்டுப் போயிற்று.

க்ஞாநிகளான மந்த்ரிகள் தேற்றினர்.

அவரும் இந்த ஸமயம் இப்படி உறவு-பாசத்துக்கு ஏற்றதல்ல என உணர்ந்து கொண்டார். மீண்டும் மீண்டும் ஸீதாவை மார்பொடு தழுவிக்கொண்டார். அழகாக அலங்கரித்திருந்த பல்லக்கைக் கொண்டுவரச் சொன்னர்.

குடும்பம் முழுதும் தன் வசமிழந்து ப்ரேமையில் திளைத்துக் கொண்டிருக்கிறது. [ப்ரேமையில் பித்துப்பிடித்தவர் போலிருக் கின்றனர்]

மங்கலமான வேளை வந்ததும் ஜ ந க ர் ஸித்தி-கணேசனை ஸ்மரணம் பண்ணிக்கொண்டு கு மா ரி க ளை ப் பல்லக்கில் அமர்த்தினர். புத்ரிகள் நாலுபேருக்கும் பலவிதமாக புந்திமதிகள் சொன்னர். ஸ்த்ரீ தர்மம், குலத்தின் வழக்கங்கள் எல்லாம் சொல்லிக் கொடுத்தார்.

அநேக பணியாட்கள், பணிப்பெண்கள், ஸீதாவுக்கு யார் மிக நம்பிக்கைக்கு பாத்ரமானவர்களோ, ப்ரியமாக இருந்தார் களோ, எல்லாரும் அவளுடன் போக ஏற்பாடு பண்ணினர்.

ஸீதா புறப்பட்டபோது நகர வா ஸி க ள் பரிதாபமாக ஆயினர்.

ச கு ன ங் க ள் சிறந்தனவாகவும். மங்களமயமாகவும். தோன்றலாயின.

கொண்டு விடுவதற்காக ராஜா ப்ராஹ்மணர். மந்த்ரிமார், ஸமாஜம் எல்லாரையும் உடன் அழைத்துக்கொண்டு போனர்.

உரிய ஸமயத்தில் வாத்யங்கள் முழங்கின.

பிள்ளை வீட்டாரும் யானை, குதிரை, ரதம் எல்லாம் ஏற்பாடு பண்ணினர்கள்.

அங்கே, தசரதர் எல்லா ப்ராஹ்மணர்களையும் அழைத்தார். தாநங்கள் வழங்கினர். பாராட்டுகள் சொன்னர். அவர்களை மகிழ்வித்தார். அ ந் த ப்ராஹ்மணர்களின் பாததூளியைத் தலையில் ஏற்றுக்கொண்டார். அவர்களுடைய ஆசீர்வாதம் அடைந்தார். ஸந்தோஷமடைந்தார். கஜானனை ஸ்மரணம் பண்ணிக்கொண்டு புறப்பட்டார்.

மங்கள மூலமான அநேக சகுனங்கள் தோன்றின. தேவர்கள் ஆனந்தமாகி பு ஷ் ப ம் சொரிந்தனர். அப்ஸராக்கள் பாட லாயினர்.

அயோத்யாதிபதி நிசான் முழக்கச்செய்து அயோத்யாவுக்குப் புறப்பட்டார். தன்னுடனேயே புறப்பட்ட ஜனங்களை தசரதர் வேண்டிக்கொண்டு திரும்பிப்போகச் சொன்னர். மிக அன்புடன் யாசகர்களைக் கூப்பிட்டுவரச் சொன்னர். அ வ ர் க ளு க் கு பூஷணங்கள், வஸ்த்ரங்கள், குதிரை, யானை எல்லாம் கொடுத்து ஸந்தோஷப்படுத்தி அங்கேயே இருக்கும்படி சொன்னர்.

அவர்கள் திரும்பத்திரும்ப புகழுரை சொல்லி ராமனை ஹ்ருத யத்தில் அணிந்து திரும்பிப் போனர்கள்.

தசரதர் ஜநகரைத் திரும்பிப் போகும்படி மீண்டும் மீண்டும் சொன்னர்.

ஆனுல் ப்ரியத்தால் அவருக்குத திரும்பிப்போக விருப்ப மில்லே.

மறுபடி நல்லுரை சொன்னுர். ''நீங்கள் வெகு தூரம் வந்து விட்டீர்கள். இனி திரும்பிப் போகவேண்டும்'' என்று சொல்லிக் கொண்டு ரதத்திலிருந்து இறங்கினுர்.

அவர் கண்களில் நீர் நிரம்பியது. ப்ரேமை வெள்ளம் பெருகியது. ஜநகர் கைகள் கூப்பிக்கொண்டு ஸ்நேஹ ரூபமான அம்ருதத்தில் தோய்ந்த வார்த்தைகள் சொன்னுர்,— ''மஹாராஜா, நான் எப்படி உங்களேப் பாராட்டி பெருமைப் படுத்திச் சொல்வது! நீங்களே எல்லாவிதத்திலும் பெருமை அளித்தீர்கள்.''

இத்தகைய நல்லோரான ஸமதியை எல்லா விதமாகவும் கோஸலபதி பாராட்டினுர்.

ஸந்தித்ததில் ஒருவர்க்கொருவர் மேலான பணிவு இருந்தது. ப்ரேமை ஹ்ருதயம் கொள்ளவில்லே.

ஜநகர் முனிவர் மண்டலத்துக்கு நமஸ்காரம் பண்ணினுர். எல்லாரிடமும் ஆசீர்வாதம் அடைந்தார். பிறகு, ரூபம்-சீலம் குண நிதியான நாலு ஸஹோதரர்களேயும் தழுவிக்கொண்டார். அழகான தாமரைக் கைகளேக் கூப்பிக்கொண்டு சொன்னுர்.— ராம, முநி - மஹேச - மாநஸ - ஹம்ஸ, உங்கள் புகழை நான் எப்படிச் சொல்வது! யாருக்காக யோகிகள் கோபம், மோஹம், தனதெனும் எண்ணம், மதம் இவைகளே விட்டு யோக ஸாதனம் பண்ணுகிருர்களோ, யார் ப்ரஹ்ம வ்யாபகரோ [எல்லாவற்றிலும் வஸிப்பவர்], அலக்ஷ்யனோ [நினேவில் வராதவர்], அவிநாசியோ, சைதன்ய ஆனந்த ரூபியோ, நிர்குணனோ [ஸத்வ ரஜ தம குணங்கள் அற்றவரோ], எல்லா குணங்களினுடையவும் இருப் பிடமோ [தயா தாக்ஷிண்யம்], யாரை மனஸுும் வாக்கும் அறிந்து கொள்ள முடியாதோ, அநுமானத்தாலோ, தர்க்கத்தால் ஊஹித்தோ எவருடைய பூர்ண ரூபத்தை நிருபிக்க முடியாதோ, 'நேதி, நேதி' என்று சொல்லி எவருடைய மஹிமையை வேதம் ப்ரதிபாதநம் (விளக்கம்) பண்ணுகிறதோ, யார் மூன்று காலங் களிலும் ஒரே ரஸமாக [எப்படி இருந்தாரோ அப்படியே] இருக்கிருரோ, அவரே முழுமையான ஸுகங்களின் மூலமான பரமாத்மா, எனக்கு நேரில் கண்கூடாக இருக்கிறீர்கள் !

ஈச்வரன் அனுகூலமாக இருந்தால் ஜகத்தில் எல்லா லாபங்களும் கிடைத்துவிடுகிறது !

நீங்கள் எல்லா விதத்திலும் எனக்குப் பெருமை தந்தீர்கள். என்னை உங்களவனுக [ஸேவகனுக]எண்ணி ஏற்றுக்கொண்டீர்கள். பத்தாயிரம் சேஷனோ, சாரதாவோ ஒரு கோடி கல்பகாலம் கணக்கு பண்ணினுலும், ரகுநாதா, அவர்கள் என் பாக்யத்தையோ உங்கள் குணங்களின் புகழையோ சொல்லி முடிக்க இயலாது. நான் சொல்வதெல்லாம் இந்த தைர்யத்தில்தான்—கொஞ்சம் ப்ரேமையாலேயே நீங்கள் த்ருப்தி ஆகிறீர்கள். நான் கைகள் கூப்பி உங்களிடம் திரும்பத்திரும்ப இதேதான் யாசிக்கிறேன்.— மறந்துங்கூட என் மநஸ் உங்கள் சரணங்களை விட்டுவிடக் கூடாது.

ஸ்நேஹத்தால் புஷ்டியாக்கப்பட்ட வசனத்தைக் கேட்டு ராமு, பூர்ண-காமு, மிகவும் ஸந்தோஷப்பட்டார். மாமனுரைத் தன் தகப்பனுர், கௌசிகர், வஸிஷ்டருக்கு ஸமமாகக் கருதி உத்தமமான நமஸ்காரம் பண்ணி அவரைப் பாராட்டினுர்,

பிறகு மஹீசன், [ஜநகர்] பரதனை வேண்டிக்கொண்டார். ப்ரேமையுடன் தழுவிக்கொண்டார். ஆசீர்வாதம் பண்ணினுர். லக்ஷ்மணன் சத்ருக்னனையும் தழுவிக்கொண்டார். அவர்கள் இருவருக்கும் ஆசீர்வாதம் பண்ணினுர்.

எல்லாரும் ப்ரேமையில் மெய்மறந்து நின்றனர். இரு ஸஹோதரர்களும் திரும்பத் திரும்ப தலைதாழ்த்தி வணங்கினர். ரகுபதி பலதடவை நமஸ்காரம் பண்ணி, வேண்டிக்கொண்டு தம்பிகளுடன் புறப்பட்டார்.

ராஜா கௌசிகரிடம் போய் அவர் பாதங்களைப் பிடித்துக் கொண்டார். அவரது திருஅடிப்பொடியைத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டு தலையில் அணிந்துகொண்டார். ''சிறந்த முநீச்வர, கேளுங்கள்! இதுதான் என் நம்பிக்கை! உங்கள் த்ர்சனம் கிடைத்தால் எதுமே கிடைக்க அரிதாகாது. எந்த ஸுகத்துக்காக, எந்த கீர்த்திக்காக இந்த்ரனும் லோகபாலர் களும் ஆசைப்படுகிறுர்களோ, மநஸில் வேண்டிக்கொண்டே இருந்து தயங்குகிறுர்களோ, ஸ்வாமி, அதே ஸுகம், அதே நல்ல புகழ் எனக்கு எளிதாகக் கிடைத்துவிட்டது. உங்கள் தர்சனத்தைத் தொடர்ந்து எல்லா ஸித்திகளும் வருகின்றன.'' இப்படி ப்ரார்த்தனை பண்ணிவிட்டு, பல தடவை தலை தாழ்த்தி, நமஸ்காரம் பண்ணிவிட்டு ஆசீர்வாதம் அடைந்து திரும்பிப் போனுர்.

நிசானம் முழங்கியது!

பாராத் முன்னே சென்றது. சின்ன, பெரிய மண்டலங்கள் எல்லாவற்றின் ஜனங்களும் ஸந்தோஷமாயிருக்கிறார்கள். [வழி யிலிருந்த] க்ராமத்து ஸ்த்ரீ புருஷர் எல்லாரும் ராமனைப் பார்த்து கண்கள் பெற்ற பலன் அடைகின்றனர். ஸந்தோஷப் படுகின்றனர்.

நடு நடுவே தங்கி சாலையில் இருந்த ஜனங்களுக்கு ஸுகம் அளித்துக்கொண்டு, சுப நாளில் அயோத்யாவின் அருகே வந்து சேர்கிறது. கூட்டம் அருகே வந்ததும் நிசானம், பணவம். பேரி, சங்கம் முழங்கின. யானைகள் பிளிறின. குதிரைகள் கனைத்தன. ஜாஞ்ஜி. பேரி, டிண்டிமா ஆனந்தமாகக் கேட்டன. ஸஹ்நாயில் ரஸமான ராகம் இசைத்தனர்.

பாராத் வருவது கேட்டு அயோத்யா புர ஜனங்கள் மலர்ச்சி அடைந்தனர். எல்லாரும் புளகமடைந்தனர். அவரவர் அழகான வீடு, கடைகளை அலங்காரம் பண்ணினர். தெருக்கள், பாதைகள், நாற்சந்திகள், வீடுகளிலெல்லாம் கோலமிட்டனர். நகர வாயில் எல்லாம் அலங்காரம் பண்ணினர். ஸந்துகளில் அரகஜா தெளித்தனர். அங்கங்கே அழகான பந்தல், தோரணம், கொடி, பதாகம், மண்டபங்கள். கடைத்தெருவின் அலங்காரம் வர்ணிக்கவே முடியாது. பாக்கு, வாழைமரம், மா, மகிழம்பூ, கதம்பம், தமாலம்—அங்கங்கே இருந்த எல்லா மரங்களும் பழங் களின் பாரத்தால் [வளைந்து] பூமியைத் தொட்டுக் கொண் டிருந்தன. அது மிக அழகாக இருந்தது. அவற்றின் பாத்திகளில் மணிகளால் செய்த வேலைப்பாடு நன்கு தெரிந்தது. ஒவ்வொரு வீட்டிலும் மங்கல கலசம்.பலவிதமாக அலங்கரிக்கப் பட்டிருந்தன.

ரகு வர-புரியை ப்ரஹ்மாதி ஸுரர் பார்த்துப் புகழ்ந்தனர்.

இந்த ஸமயத்தில் ராஜ அரண்மனை எவ்வளவு அழகாய் இருந்தது— அதைப்பார்த்து மதநனின் [காமதேவனின்] மநஸும் மோஹமடைந்தது. மங்கல மயமான சகுனப் பொருள்கள், மநஸைக் கவரும் அழகு, ஸித்தி ருத்திகள், ஸுகம் ஸம்பத்து எல்லாம் திகழ்ந்தன. அந்த விழாவில் எல்லா விதமான ஆனந்தமும் அதது சரீரம் எடுத்துக்கொண்டு தசரத மாளிகைக்கு வந்திருந்தன, ராம-வைதேஹி தர்சனம் பண்ண ஆசை யாருக்குத்தான் இருக்காது!

மதந-விலாஸிநி [ரதி] யையும் தோற்கடிக்கும் காந்தி உள்ள ஸுவாஸினிகள் கோஷ்டி கோஷ்டியாகச் சேர்ந்து போனார்கள்.

எல்லார் வேஷமும் மங்கள மயமானது. ஆரதி ஏற்பாடு பண்ணி வைத்துக்கொண்டு பாடிக்கொண்டிருக்கின்றனர். அநேக பாரதிகள் பாடிக்கொண்டிருந்தால் போல் தோன்றியது,

அரண்மனையில் உத்ஸவத்தின் கோலாஹலம் நிரம்பியது. அதை வர்ணிக்கவே முடியாது. கௌஸல்யா முதலான தாய்மார்கள் ப்ரேமை வசமாகி மெய்மறந்திருந்தனர். அவர்கள் கணேசனுக்கும் த்ரிபுராரிக்கும் பூஜை பண்ணி ப்ராஹ்மணர் களுக்கு ஏராளமாக தானம் வழங்கினர்.

மஹா தரித்ரன் நாலும் அடைந்தாற்போல ஆனுர்கள். அவ்வளவு ஆனந்தம்.

தாய்மார் எல்லாரும் உத்ஸவ ஆனந்தத்தில் தன் வசமிழந் திருந்தனர். அதனுல் தளர்ச்சியடைந்து போய் கால்கள் எழவு மில்லை. ராம தர்சனத்துக்காக மிகவும் ஆவலாகி த்ருஷ்டி கழிக்க வேண்டிய எல்லாப் பொருள்களும் ஏற்பாடு பண்ணினர்.

பலவித வாத்யங்கள் முழங்கலாயின. ஆனந்தமாக ஸுமித்ரா எல்லா மங்கலப் பொருள்களும் சேகரித்துவைத்தாள். மஞ்சள், அவல், அருகம்புல். தயிர், மாவிலை. புஷ்பங்கள், வெற்றிலை, பாக்கு—முக்யமானவை அக்ஷதை, யவம், கோரோ சனை, பொரி, [முளை]ப்பாலிகை [ம்ருதுவாக] தளிரான கொத்து துளஸி, பல வர்ணங்களில் அலங்கரித்த தங்கக் கலசம், ஏற்கனவே அழகானவை. அவைகளைப் பார்த்து மதநன் வெட்கப் பட்டு ஒளிந்து கொள்ள கூடு கட்டிக்கொண்டு விட்டான் போலும்! சகுனத்துக்கான பொருள்களும் வாஸனைப் பொருள்களும் வர்ணனை பண்ணமுடியாது. ராணிகள் எல்லாரும் ஸம்பூர்ணமாக மங்கலம் செய்யும் அலங்காரம் பண்ணிக் கொண்டிருந்தனர். பலவிதமான விதிகளின்படி ஏராளமாக ஆரதி ஆயத்தமாய் வைத்துக்கொண்டிருந்தனர். எல்லாரும் ஸந்தோஷமாக இனிமையாகப் பாடினர். மங்கலப் பொருள்களைத் தங்கத் தட்டுகளில் ஏந்தி சரீரம் புளகமாகி பரிசன் செய்ய [த்ருஷ்டி கழிக்க] போயினர்.

தூபங்களினுல் எழுந்த புகை ஆகாசத்தில் திரண்டு ச்ராவண மாஸ மேகக் கூட்டம் போலப் பரவியது. தேவர் கல்ப வ்ருக்ஷ புஷ்ப மாலை சொரியலாயினர். கொக்கு வரிசைகள் மநஸை இழுத்துப் போவது போலத்தோன்றின. திவ்ய மணிகளால் கட்டி யிருந்த தோரணங்கள்—இந்த்ர தநுஸ் அலங்காரம் பண்ணப் பட்டிருந்தது போல் இருந்தது. பார்ப்பதற்காக மாடங்களில் ஸ்த்ரீகள் வந்து போய்க்கொண்டிருந்தது—

-அழகான மின்னல் ஆகாசத்தில் துடித்தது போலிருந்தது. துந்துபிகள் முழக்கம் மேகங்கள் கர்ஜித்ததுபோலும், யாசகர்கள் கூக்குரல் சாதகம், தவளை, மயில் எல்லாம் சேர்ந்து கூவியது போலும் இருந்தது. தேவர் பலவித நல்ல மணமுள்ள ஜலம் பொழிந்தனர். அயோத்யா ஜனங்கள் நல்ல பயிர் உள்ள வயல் போல் தோன்றினர்.

முஹூர்த்தம் வந்தது. குரு ஆக்ஞை கொடுக்க, மண்டலத்துடன் தசரதன் சம்பு கிரிஜா கணராஜன் இவர்களை ஸ்மரணம் பண்ணிக் கொண்டார். ரகு- குல-மணி புரப்-ப்ரவேசம் பண்ணினர்.

நல்ல சகுனங்கள் உண்டாயின, தேவகணங்கள் துந்துபி முழக்கினர். புஷ்பம் சொரிந்தனர். அப்ஸராக்கள் ஸந்தோஷமாக மங்கல கீதம் பாடினர்.

மாகதர், வந்திகள், ஸூதர் திறமை மிக்க நடர், மூன்று லோகங்களிலும் ஒளி வீசிய ராம புகழைப் பாடினர்.

சுப மங்கலமாக வேத கோஷம் முழங்கியது.

‘ஜய ஜய’ கோஷம் பத்து திசையும் பரவியது. அநேக வாத்யங்கள் முழங்கின.

ஆகாசத்தில் தேவரும் நகரத்தில் மாந்தரும் மகிழ்ந்தனர்.

பாராதி ஜனங்கள் அலங்கரித்துக்கொண்டிருந்தது, வர்ணிக்க முடியாது. அவர்களுடைய ஆனந்தம் மனஸ் கொள்ளவில்லை.

நகர ஜனங்கள் ராஜாவுக்கு நமஸ்காரம் பண்ணினர். ராம-தர்சனத்தால் ஸுகமடைந்தனர். மணி-வஸ்த்ரம் தானம் செய்தனர். ப்ரேமை ஜலம் கண்களில் நிரம்பியது. தேஹம் புளகமாகியது. நகர ஸ்த்ரீகள், நாலு குமாரர்களையும் பார்த்து ஆரதி எடுக்கிறார்கள். மலர்ச்சி அடைகின்றனர். பல்லக்கை மூடியிருக்கும் திரைகளை விலக்கி நாலு வதூக்களையும் பார்த்து ஸந்தோஷம் நிரம்பப் பெறுகின்றனர்.

இப்படி எல்லாருக்கும் ஆனந்தம் அளித்துக்கொண்டே அரண்மனை வாயிலை அடைந்தனர். தாய்மார் பேரானந்தத்துடன் மாட்டுப் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் த்ருஷ்டி கழித்தனர். திரும்பத் திரும்ப ஆரதி எடுத்தனர்.

அந்த ஸமய ப்ரேமை - அநுராகம் யார் வர்ணனை பண்ண முடியும்?

அவர்கள் ஆரதி எடுத்து பூஷணங்கள், ரத்னங்கள், வித விதமான வஸ்த்ரங்கள் தானம் கொடுக்கலாயினர். மாட்டுப் பெண்களுடன் பிள்ளைகளைப் பார்த்து தாய்மார் பரம ஆனந்தம் நிரம்பினர். ராம-ஸீதா முகங்களைப் பார்த்து ஸந்தோஷ மடைந்தனர். தங்கள் வாழ்வு பலனுள்ளதாகியது என எண்ணினர். ஸகிகள் ஸீதாவின் முகத்தைப் பார்த்துப் பார்த்து தங்கள் புண்யத்தை மெச்சிக் கொண்டனர்.

தேவர்கள் பாட்டுப்பாடி கணத்துக்குக் கணம் புஷ்பம் சொரிகின்றனர். நாட்டியமாடி, பாட்டுப்பாடி தங்களுடைய ஸேவையைக் காண்பிக்கின்றனர்.

மனஸைக் கவரும் நாலு தம்பதிகளையும் பார்த்து சாரதா (ஸரஸ்வதி) எல்லா உபமானங்களையும் பார்த்துப் பார்த்து எல்லாம் அல்ப்பமானவையாகத் தோன்றியதால் ஏதும் கொடுக்கவில்லை. அந்த ரூபத்தைப் பார்த்து ப்ரேமை வசமாகி வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருக்கிறாள்.

எல்லா ஸ்த்ரீகளும் சாஸ்த்ரத்தில் சொல்லியபடியும் குலாசாரப்படியும் எல்லாம் பண்ணி கால்களை நீராட்டி, மிதி பாவாடை விரித்து, அர்க்யம் கொடுத்து மாட்டுப் பெண்களுடன் நாலு குமாரர்களையும் மாளிகைக்குள் அழைத்துப் போனார்கள்.

இயற்கையாகவே அழகான நாலு ஸிம்ஹாஸனங்கள். தன் கையாலேயே மனோஜன் (மன்மதன்) பண்ணியது போலிருந்தன. அவற்றில் நாலு குமாரர்களையும் குமாரிகளையும் உட்கார்த்தினர். ஆதரவுடன் சரணங்களை நீராட்டினர். வேதத்தில் சொல்லியபடி தூபம் காட்டி, தீபம் காட்டி, நைவேத்யம் படைத்து, மங்களம் இருக்குமிடமான வதூவரர்களைப் பூஜை பண்ணினர். அடுத் தடுத்து ஆரதி எடுத்தனர். தலைக்குக் குடை பிடித்து சாமரம் வீசினர்.

பல பொருள்கள் தானம் கொடுக்கப்படுகின்றன.

எல்லாத் தாய்மாரும் ஆனந்தம் நிரம்பி விளங்குகின்றனர்.— பரம தத்வம் கிடைத்த யோகி போல, அம்ருதம் கிடைத்த ரோகி போல, பாரஸ் மணி கிடைத்த பரம தரித்ரன் போல, கண்கள் பெற்ற குருடன்போல, ஊமை நாவில் சாரதா வந்து வஸிக்கலானாள் போல, யுத்தத்தில் ஜயம் கிடைத்த பெரிய சூர வீரன் போல ஆனார்கள். இப்படி எல்லாருக்கும் கிடைத்தது போல நூறு மடங்கு தாய்மாருக்கு ரகு-குல-சந்து ஸஹோதர ருடன் விவாஹம் பண்ணிக் கொண்டதில் கிடைத்தது.

தாய்மார் லோக முறைப்படி செய்தனர். ஆனால் வரன்களும் வதூக்களும் வெட்கமடைந்தனர். எல்லையிலா ஆனந்தம். வேடிக்கை பார்த்து ராமன் மனஸுக்குள் சிரித்துக் கொண்டான்.

மீண்டும் அவர்கள் தேவர்-பித்ருக்களுக்கு பூஜை பண்ணினர். ஏன் எனில் வாழ்வின் விருப்பம் எல்லாவற்றையும் அவர்கள் நிறைவேற்றினர். எல்லாருக்கும் நமஸ்காரம் பண்ணி, தாய்மார் இந்த வரம் வேண்டினர். ''ராமனுக்கும் தம்பிகளுக்கும் க்ஷேமம் உண்டாகவேண்டும்.''

மறைவாயிருந்த தேவ கணங்கள் ஆசீர்வாதம் பண்ணினர். தாய்மார் தலைப்பை விரித்து அதை வாங்கிக் கொள்கின்றனர். ஆனந்தமடைகின்றனர்.

பின்னர் தசரதன் பாராதிகளைக் கூப்பிட்டனுப்பி அவர்களுக்கு வாஹனங்கள், வஸ்த்ரங்கள், ரத்னங்கள், பூஷணங்கள், அளித்தார். மஹாராஜாவிடம் உத்தரவு பெற்று ராமனை உளத்தில் வைத்துக்கொண்டு அவர்களெல்லாரும் அவரவர் வீடு சேர்ந்தனர். பின்னர் நகரத்தின் ஸ்த்ரீ புருஷர் எல்லாருக்கும் ராஜா வஸ்த்ரங்கள் அணிவித்தார்.

ஒவ்வொரு வீட்டிலும் விழாக் கொண்டாடினர்.

யாசகர் என்னென்ன பொருள்கள் கேட்டார்களோ அதெல்லாம் ராஜா ஸந்தோஷமாகக் கொடுத்தார். ஸேவகர் எல்லாருக்கும், வாத்யக்காரர் எல்லாருக்கும் பலவித தானங்கள் தந்தார். பெருமைப்படுத்தினர். தான் மகிழ்ந்தார்.

எல்லாரும் நமஸ்காரம் பண்ணி ராஜாவின் குணங்களின் கதை பாடினர்.

குரு, ப்ராஹ்மணர்களுடன் ராஜா அரண்மனை சென்றார். வஸிஷ்டர் ஆக்ஞைப்படி லௌகிகமும் வேதத்தில் சொல்லிய வையும் எல்லாம் ராஜா மரியாதையுடன் செய்தார். பெரிய ப்ராஹ்மணர் கூட்டத்தைப் பார்த்து ராணிகள் அதைத் தம் பெரிய பாக்யமாக எண்ணினர். எல்லார் பாதங்களையும் நீராட்டினர். ஸ்நானம் செய்வித்து நல்ல முறையில் பூஜை பண்ணி, போஜனம் செய்வித்து, மரியாதைகள் செய்து, தானங்கள் அளித்து, ப்ரேமையுடன் எல்லாரையும் ஸந்தோஷப் படுத்தினர்.

அவர்களும் மிகவும் ஸந்தோஷப்பட்டு ஆசீர்வாதம் அளித்துப் புறப்பட்டுப் போனார்கள்.

பின்னர் காதி-ஸுதருக்கு [விச்வாமித்ரருக்கு]- பூஜை அநேக விதிப்படி பண்ணினர் ''நாத, என்போல் தந்யன் யாரும் இருக்க முடியாது'' என மிகவும் பெருமைப்படுத்தி அவர் பாததூளியை சிரமேல் அணிந்து மாளிகையுள்ளேயே அவருக்கு இருக்க சிறந்த இடம் ஏற்பாடு பண்ணினர். ராஜாவும் ர்ாணிகளும் ஸமமாகவே அவருடைய நோக்கமறிந்து எதிர்பார்த்து இருந்து ஸேவை பண்ணினர்.

பின்னர் குரு-பத-கமல பூஜை பண்ணினர். எல்லையிலாத ப்ரேமையுடன் நமஸ்காரம் பண்ணினர். நாலு ராஜகுமாரர்கள், ராணிகள், மாட்டுப் பெண்களுடன் ராஜா பல தடவை குருசரண வந்தனம் பண்ணினர்.

வஸிஷ்டர் ஆசீர்வாதம் அளித்தார்.

உளத்தில் மிகவும் ப்ரேமையுடன் புத்ரர்களேயும் ஸம்பத்தை யும் அவருக்கு ஸமர்ப்பித்து ப்ரார்த்தனே பண்ணிக்கொண்டார்.

முநி ராஜா தன் தக்ஷிணேயை எடுத்துக் கொண்டார். பலவிதமாக ஆசீர்வாதம் தந்தார். ஸீதாவுடன் ராமனே உளத்தில் அணிந்து ஸந்தோஷமாக தன் வீட்டுக்குப் போனர்.

மஹாராஜா எல்லா ப்ராஹ்மண ஸ்த்ரீகளேயும் அழைத்தார். உயர்வான வஸ்த்ரமும் பூஷணங்களும் அணிவித்தார். ஸுவாஸினிகளே அழைத்தார். அவர்கள் விருப்பப்படி அவர் களுக்கு பஹுமானமளித்தார். குடும்பத்தாருக்கு வெகுமதிகள் அளித்தார். பூஜிக்கத் தகுந்தவரென எண்ணிய விருந்தினர்க்கு வெகுமதிகள் அளித்தார்.

தேவர் ரகுவீர விவாஹ உத்ஸவம் பார்த்து, புஷ்பங்கள் சொரிந்து, உத்ஸவத்தைப் பெருமைப்படுத்தி, ஸுகமடைந்து, நிசான் இசைத்து, அவரவர் லோகம் சென்றனர். போகும்போது ஒருவர்க்கொருவர் ராம புகழைச் சொல்லிக் கொண்டு சென்றனர் அவர்களுக்கு ப்ரேமை உளங்கொளவில்லே,''

ராஜா எல்லாருக்கும் ஸந்மானம் பண்ணினர். மரியாதை பண்ணினர்; அவர் ஹ்ருதயம் உத்ஸாஹத்தால் நிரம்பியது.

பின்னர் அந்தப்புரத்தார் இருந்த இடத்துக்குப் போனர்: மாட்டுப்பெண்களுடன் பிள்ளேகளேப் பார்த்தார்.

பேரானந்தந்துடன் பிள்ளைகளை மடியில் அமர்த்திக் கொண்டார். அப்போது அவருக்கு எத்தனை ஆனந்தம் உண்டாகியது என யார் சொல்லமுடியும்! பின்னர் மாட்டுப் பெண்களை அமர்த்திக் கொண்டார். மீண்டும் மீண்டும் ஹ்ருதயத்தில் ஆனந்தம் அடைந்து அவர்களை மிகப் ப்ரியமாக எண்ணி அப்போது கூடியிருந்த ஸமாஜத்தைப் பார்த்து அந்தக் காக்ஷியைப் பார்த்து அந்தப்புறம் முழுதும் ஸந்தோஷப்பட்டது. எல்லார் உள்ளத்திலும் ஆனந்தம் குடிகொண்டது.

விவாஹம் எப்படி நடந்தது என்று சொன்னுர்.

அதைக் கேட்டு எல்லாருக்கும் ஆனந்தம் உண்டாகியது. ஜநகரின் குணம், சீலம், பெருமை, ப்ரேமையின் மாதிரி சிறப்பான அவரது ஸம்பத்தின் பரப்பு எல்லாம் விரிவாக - புகழ் பாடுவார்போல - வர்ணித்தார்.

அதைக் கேட்டு எல்லா ராணிகளும் மகிழ்ந்தனர்.

புத்ரர்களுடன் ராஜா ஸ்நானம் பண்ணினுர். ப்ராஹ்மணர், குரு, ஜாதி ஜனங்கள் எல்லாரையும் அழைத்து பலவிதமாக போஜனம் பண்ணி வைத்தார். இதற்குள் ராத்ரி ஐந்து நாழிகை ஆகிவிட்டது. சிறந்த அழகியர் வந்து மங்கல கீதம் பாடினர்.

அந்த ராத்ரி ஸுகத்துக்ரு ஆதாரமாக மநஸைக் கவர்வதாக ஆகியது. எல்லாரும் போஜனத்தின்பின் ஆசமனம் பண்ணினர். தாம்பூலம் எடுத்துக்கொண்டனர். வாஸனை, மாலை அணிந்தனர்.

ராமனைப் பார்த்து போக விடை பெற்றுக்கொண்டு, தலை வணங்கி, அவரவர் வீடு சென்றனர்.

அந்த ஸமயத்தின் ப்ரேமை, ஆனந்தம், விநோதம், சுபமான பான்மை, கூட்டத்தின் அழகு, எல்லாம் நூறு சேஷன், சாரதா, விரஞ்சி, மஹேசன் கணேசனும் எடுத்துரைக்க முடியாது.

அதை நானெப்படி சொல்ல முடியும்?
பூமியில் பிறந்த பாம்பு பூமியைத் தாங்க முடியுமா?

தசரதன் எல்லாரையும் எல்லாவிதத்திலும் ஸந்மாநம் பண்ணினுர். பிறகு ராணிகளைக் கூப்பிட்டார் — ''மாட்டுப் பெண்கள் இன்னம் சின்ன பெண்கள். வேறு வீட்டுக்கு வந்திருக்கின்றனர். கண்களை இமைகள் போல நீங்கள் இவர்களை வைத்துக்கொள்ள வேண்டும். பிள்ளைகளும் சோர்ந்திருக்கின்றனர். தூங்கி வழிகிறுர்கள்—எல்லாருக்கும் படுக்க ஏற்பாடு பண்ணுங்கள்'' என்றுர். ராம சரணங்களில் சித்தம் வைத்து படுக்கும் பவநத்துக்குப் போனுர்.

ராஜாவின் ஸ்வபாவமான இனிய பேச்சைக் கேட்டனர். ராணிகள் மணிகள் ஜோடித்த தங்க மஞ்சம், படுக்கை அமைக்க ஏற்பாடு பண்ணினுர்கள்.

அழகான, பசும்பால் நுரை போன்ற வண்ண விரிப்பு மென்மையாக, மனஸைக் கவரும்படி இருந்தன. உயர்ந்த ரகமான தலை அணைகள்—எல்லாம் வர்ணிக்கவே முடியாது. அந்த மணி மந்திரத்தில் மாலைகளும், வாஸனைப் பொருள்களும் மணம் நிறைத்தன. சிறந்த விதானங்கள் கட்டியிருந்தன. ரத்ன தீபங்கள்.

அந்த பவநத்தின் அழகை வர்ணிக்க முடியாது. அதைப் பார்த்தவர்களுக்குத்தான் அதன் அழகு தெரியும்.

இப்படி அழகான படுக்கை அமைத்து ராமனை எழுந்திருக்கச் சொன்னுர்கள். மஞ்சத்தில் படுத்துக்கொள்ளச் சொன்னுர்கள்.

ராமன் தம்பிகளைத் தூங்கப் போகும்படி பல தடவை சொன்னுர்.

அவர்கள் போய் அவரவர் படுக்கையில் படுத்துக்கொண்டனர்

ராமனின் ச்யாம ஸுந்தர அங்கங்களைப் பார்த்து, தாய்மார் ப்ரேமை மிக சொன்னுர்:- குழந்தாய், போகும்போது வழியில் மஹா பயங்கரமான கோர தாடகையை நீ எப்படி மாய்த்தாய்? கோரமான ராக்ஷஸர், பெரிய வீரர், போரில் யாரையும் கொஞ்சமும் பொருட்படுத்தாவர்கள், அப்படிப்பட்ட ஸுபாஹுவையும் அவனைச் சேர்ந்தவரையும் நீ எப்படிக் கொன்ருய்? மாரீசனை எப்படி கொண்டு வீழ்த்தினுய்? குழந்தாய், நான் வ்ரதம் அனுஷ்டிக்காக எடுத்துக்கொள்கிறேன்! முநிவரின் அருளால் பரமாத்மா உன் அநேக இடைஞ்சல்களை அகற்றினுர். நீங்கள் இருவரும் யக்ஞத்தைக் காப்பாற்றி குருவினருளால் எல்லா வித்யையயும் அடைந்தீர்கள். உன் திருவடிப்பொடி பட்டதும் முநிவரின் மனைவி சாபம் நீங்கினுள்.

இந்தப் பெருமை லோகமெங்கும் பரவிவிட்டது.

ஆமை ஓட்டை விட, வஜ்ரத்தை விடவும் கடினமான சிவ தநுஸை ராஜாக்கள் கூடியிருந்த ஸபையில் ஒடித்தாய்!

அதனுல் லோகத்தில் ஜயமும் பெருமையும், ஜாநகியையும் அடைந்தாய். நாலு ஸஹோதரர்களும் விவாஹம் பண்ணிக் கொண்டு வீடு திரும்பியிருக்கிறீர்கள்!

நீ செய்த இந்தக் கார்யங்களெல்லாம் மநித-சக்திக்கு அப்பால்பட்டது. கௌசிகரின் க்ருபை ஒன்ருல் மாத்திரம் நடந்தன. குழந்தாய், இன்று உன் சந்திரன் போன்ற முகத்தைப் பார்த்து லோகத்தில் எங்கள் ஜன்மம் பலன் பெற்றதாயிற்று. உன்னைப் பார்க்காமல் எங்கள் வாழ்நாட்கள் எத்தனை கழிந்து விட்டனவோ அந்த நாட்களை விரஞ்சி எங்கள் ஆயுஸில் கணக்குப் பண்ணிக்கொள்ளக் கூடாது.''

ராமன் பணிவாக சிறந்தமாதிரி பேசி தாயார்களை ஸந்தோஷப் படுத்தினுன். பிறகு சம்பு - குரு - விப்ர - பாத ஸ்மரணம் பண்ணி கண்களை நித்திரையின் வசமாக்கினுன்.

துயிலும் திருமுகம் அழகாக இனிமையாக இருந்தது. ஸந்த்யா ஸமயத்தில் கூம்பிய தாமரைபோலிருந்தது.

ஒவ்வொரு வீட்டிலும் ஸ்த்ரீகள் விழித்திருந்தனர். தம் மிடையே மங்களமயமான ஏசல் பண்ணிக்கொண்டிருந்தனர்.

ராணிகள் சொன்ஞர்கள்: ஸகிகளே, பாருங்கள் - அயோத்யா புரியின் அழகும். இந்த ராத்ரியின் அழகும் எப்படி இனிமையா யிருக்கிறது !

நாகம் எப்படி தன் தலை மணியை ஹ்ருதயத்தில் மறைத்து வைத்துக்கொண்டிருக்குமோ அதுபோல மாமியார்கள் மாட்டுப் பெண்களைத் தம் மார்போடு அணைத்துக்கொண்டு துயில்கொள்ள லாயினர்.

ப்ராத: காலமானதும் பவித்ரமான ஸமயத்தில் ப்ரபு எழுந்தார். அழகாக அருண - சூடன் [கோழி] கூவியது. மாகதரும் வந்திகளும் வந்து குணவளி பாடலாயினர். நகர ஜனங்கள் நமஸ்காரம் பண்ண மாளிகை வாசலை யடைந்தனர்.

நாலு ஸஹோதரரும் எழுந்து ப்ராஹ்மணர் தேவர் குரு பிதா மாதாக்கு நமஸ்காரம் பண்ணி ஆசீர்வாதம் அடைந்து ஸந்தோஷ மாயினர்.

தாய்மார் அன்புடன் எல்லார் முகங்களையும் பார்ததனர்.

ராஜாவுடன் அவர்கள் வாசலில் தோன்றினர் பின்னர்— ஸ்வபாவமாக சுத்தமான நாலு ஸஹோதரர்களும் சௌச விதி முடித்து பவித்ர ஸரயூவில் ஸ்நாநம் பண்ணினர். ப்ராத: கர்மா முடித்து பிதாவிடம் வந்தனர்.

பார்த்ததும் ராஜா அவர்களை மார்போடு தழுவிக் கொண்டார். பிதாவின் உத்தரவு பெற்று ஸந்தோஷமாக உட்கார்ந்தனர்.

ராம தர்சனம் பண்ணி ஸபை முழுதும் உளம் குளிர்ந்தது. கண்களுக்கு எல்லாவற்றிலும் முதலான லாபம் இதுதான் என அநுமானம் பண்ணினர்.

வஸிஷ்டரும் கௌசிகரும் வந்தனர்.

அவர்களுக்கு ராஜா சிறந்த ஆஸனம் அளித்து அமரச் செய்தார். புத்ரர்களுடன் பூஜை பண்ணினர். பாதத்தைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டனர்.

குரு இருவரும் ராமனைப்பார்த்து ப்ரியம் நிரம்பப்பெற்றனர்,

தர்மம் விளக்கும் இதிஹாஸம் வஸிஷ்டர் சொல்லலானார்,

மஹாராஜா அந்தப்புரத்தார் உடன் கேட்டார்.

முனிவர்கள் மனஸுக்குக்கூட எது எட்டாததோ அந்த காதி-ஸுத செயலை வஸிஷ்டர் விதிகளின்படி விரிவாகச் சொன்னார்.

''ஆமாம், இதெல்லாம் ஸத்யமே என வாமதேவர் ஸாக்ஷ்யம் சொன்னார்.'' விச்வாமித்ரரின் புகழ் மூன்று லோகங்களிலும் பரவியது.

இதைக் கேட்டு எல்லாருக்கும் ஆனந்தம் உண்டாகியது.

ராம-லக்ஷ்மணர் மனஸில் விசேஷமான உத்ஸாஹம் உண்டாகியது.

இப்படி மங்கல ஆனந்த உத்ஸாஹத்தில் பகல்நேரம் தினமும் கழிகிறது. ஆனந்தத்தால் அயோத்யா பொங்கியது. நாளுக்கு நாள் ஆனந்தம் பெருகியது.

நல்ல நாள் சோதித்துப் பார்த்து வதூ-வரர்களுக்கு கங்கணம் அவிழ்க்கும் விழா நடந்தது. அன்றும் மங்களாசாரமும் விநோதங்களும் கொஞ்சமல்ல. இப்படி நித்தமும் புதிய ஸுகம் உண்டாவது பார்த்து தேவர்களும் ஆசைப்படலாயினர். அயோத்யாவில் ஜன்மா உண்டாக அருளும்படி விதியை ப்ரார்த்தனை பண்ணிக் கொண்டனர்.

விச்வாமித்ரர் திரும்பிப்போக ஆசைப்படுவார். ஆனால் ராமனின் ப்ரேமை, ஸ்நேஹத்தால் கட்டுப்பட்டு இருந்து விடுவார்.

ராஜாவின் பாவம் நாளுக்கு நாள் நூறு மடங்கு வளர்வதை அறிந்து மஹா - முநி - ராஜா அவரைப் பாராட்டினுர்.

முநிவர் விடை பெற்றுக்கொண்டபோது ராஜா புத்ரர் களுடன் அவர் முன் நின்று ப்ரேமை நிரம்பி சொன்னுர். ''நாத, இந்த எல்லா ஸம்பத்தும் ஸிம்ஹாஸனமும் உங்களுடையதே. மனைவிகள், புத்ரர்களுடன் நான் உங்கள் ஸேவகன். பிள்ளைகள் மேல் நீங்கள் எப்போதும் தயவு வைத்திருக்க வேண்டும், எனக்கு அவ்வப்போது தர்சனம் கொடுத்தருள வேண்டும்'' என்று சொல்லி ராணிகள், புத்ரர்களுடன் அவரது சரணங்களில் ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணினுர். ப்ரேமை வசமாகி அவருக்கு அதற்குமேல் பேசமுடியவில்லை.

விப்ரரான விச்வாமித்ரர் பலவிதமாக அவர்களுக்கு ஆசீர் வாதம் பண்ணினுர். புறப்பட்டுப் போனுர்.

அந்த ஸமயத்தின் ப்ரீதியின் போக்கு சொல்லமுடியாது. ப்ரேமையுடன் ராமன் தன் தம்பிகளுடன் அவரை வழியனுப்ப போய், உத்தரவு பெற்று, திரும்பிவந்தார்.

காதி-குல-சந்த் மிக ஸந்தோஷமாக ராம ரூபத்தையும், பூபதியின் பக்தியையும், விவாஹ உத்ஸவ ஆனந்தத்தையும் மநஸில் பாராட்டிக் கொண்டு சென்ருர்.

க்ஞாநிகளான வாமதேவரும், ரகு குல குருவும் காதி-ஸுதனின் கதையைச் சொன்னுர்கள்.

அவரது அழகான கீர்த்தியைக் கேட்டு ராஜா தன் மநஸுக்குள் தன் புண்யத்தின் பெருமையை விவரித்துப் பார்த்துக் கொண்டார்.

ஜனங்களும் உத்திரவு பெற்று அவரவர் வீடு சென்றனர்.

ராஜா புத்ரர்களுடன் மாளிகைக்கு வந்தார்.

ராம விவாஹப் புகழை ஜனங்கள் எங்கும் பாடினுர்கள்.

அத்ன் பவித்ரமான புகழ் மூன்று லோகங்களிலும் பரவியது.

ராமன் விவாஹம் பண்ணிக்கொண்டு வந்ததிலிருந்து எல்லா ஆனந்தமும் அயோத்தியில் வந்து வஸித்தது.

ப்ரபு விவாஹத்தில் எப்படி கொண்டாட்டமெல்லாம் நடந்ததென கிராவோ [ஸரஸ்வதியோ] சேஷனோ கூட சொல்ல முடியாது.

பக்கம்.	வரி.		பக்கம்.	வரி.	
55	17	எல்லா	81	26	ப்ரகாச
56	10	கொள்''	82	5	அது ஸூர்ய
57	17	பதித்து		18	சிப்பியில்
	35	படுகிறேன்''			வெள்ளியும்
58	24	''இப்போ		19	கிரணங்களால்
	29	செய்வோம்''			காநல் நீரும்
	30	''நீங்கள்			[முத்துப்போல]
59	10	எனக்கு இதே			விட்டுவிட
	13	விடமாட்டேன்.''	83	13	கடந்து
		ஜகதம்பா			விடுவானோ
		''உங்கள்		17	விடுகின்றன.''
	32	போரிட்டான்	91	35	வரிப்பாள்
62	22	வநம், உப	93	7	அவருடன் ரமா
	23	வநம்		17	உனக்கு—ரமா
		விட்டுவிடவும்.		36	ப்ரபு சாபத்தை
	24	பொலிந்தது.	94	1	அங்கே ரமா
	28	மணமுள்ள		17	வராது.''
	31	கோகிலம்		28	வேண்டுகிறோம்''
63	31	சங்கரனின்	96	28	கழிந்து விட்டதே''
64	13	மதனனின்	97	24	ஆசை:
	18	பிறகு	98	27	மாநஸ ஸரோ
65	7	உண்மையானால்	99	20	லச்சி
	19	(ரன்) —	100	1	கூடியதோ !
		விட்டுவிட		10	ராஜன்,
69	36	கேட்ட துஹிந	101	15	மநிதனாக சரீரம்
72	28	எனக்கு		24	சொன்னார்
76	25	அடியில் நிழலில்	102	25	ராஜா—
	32	அராதி	103	18	கோயில்கள்,
77	25	மநஸ்,		28	மட்டும்].
	27	எனில்]	105	17	புத்திசாலி—
78	22	ராம ரஹஸ்ய	106	30	எரித்துவிடும்''
79	20	ஹ்ருதயத்தில்,		34	''அதனால்
		க்ருபையால்,	107	1	''நீ
	27	வாசல்		4	துக்கமுண்டாகும்''
80	19	பவாநி,		22	ஏதுமில்லை''
	20	மோஹ	108	1	''உன்
	38	2 சாஸ்த்ர		10	பெற்றுக்கொள்''
		க்ஞானம்		32	முடியாது
	39	3 பூர்வ...	110	15	உண்பாரோ

பக்கம்.	வரி.	
111	17	உண்பாரோ
	31	ஸந்திப்பேன்''
	39	அவரது இணை
		யிலாத படுக்கை
		யில் படுத்துக்
		கொண்டான்.
115	2	சொல்வார்]—
	3	கொடுத்தோம்''
	7	புத்தியைத்
	11	அ-மலமான
133	21	காண்பேன்'
135	9	ஸஹோதரர்களும்
137	15	வைத்தார்''
138	33	அரண்மனையாம்.
139	33	ஸஹோதரர்
140	18	கைவிட்டது''
	25	ஏகநு—
	27	லாக்ஷி.''
143	36	ஏற்படும்''
159	18	சந்த்ரன்.
	19	ராஹு.
162	5	ஓடி
	7	குரு சொன்னது
		வணங்கினான்—
		மகிழ்ச்சி
163	22	ஹரி
164	25	புஷ்ப துகளால்
166	17	கொண்டன
167	7-10	மூன்று வரிகள் சேர்த்துக்கொள்க: ப்ரபு ஜாநகி பக்கம் -பார்த்தார். விசேஷமான -ப்ரீதியைப் -பார்த்தார். புளகமாகியது.

பக்கம்.	வரி.	
167	25	ஆடியது,
177	13	சொன்னார். ''
180	24	தேவ,
181	1	அக்நி—
186	13	விச்வ பூஷணரான ......பிள்ளைகள்—
192	30	(கருடன்)
194	24	பார்த்து குபேரனின்
197	4	ஸுநயநி,
	10	வருவார்
201	29	ஸ்வபாவ
203	26	வாம தேவர்
208	14	முழங்கலாகியது.
209	18	ச்ருதகீர்த்தி,
213	2	பக்கத்திலிருந்தும்
	6	ஸித்தர்
214	8	மிஞ்ஜியது.
	26	கைகள்
219	15	இரக்கமும்
220	13	ப்ராஹ்மணர்,
221	1	அவருக்குத்
223	26	ரகு-வர
228	27	சென்றனர்.
	29	பண்ணினார்;
	31	போனார்.
229	1	பேரானந்தத்துடன்
	5	எண்ணினார்
230	24	அநுஷ்டிக்க
231	16	புரியின் அழகும்,
232	16	ஸத்யமே''
	17	சொன்னார்.

கோஸ்வாமி— கோ—புலன்கள் — 'புலன்களுக்கு ஸ்வாமி'— இந்த்ரிய நிக்ரஹம், புலனடக்கம் உள்ளவர். 'யோகி' 'ஸாது' போல ஆத்மீக மேம்பாட்டைக் குறிக்கும் பதம்.

ஒவ்வொரு பக்க ஆரம்பத்திலும் தொடங்கும் சௌபாயி எண் அதையடுத்து வரும் தோஹா எண்

பக்.	சௌ.	தோஹா	பக்.	சௌ.	தோஹா	பக்.	சௌ.	தோஹா
7	1	— 1	45	1	— 53	83		— 118
8	3	— 3	46	1	— 55	84	4	— 120
9	4	— 4	47		— 56	85	1	— 122
10		— 5	48		— 58	86	1	— 124
11	2	— 6	49	1	— 61	87	3	— 125
12	5	— 7	50	1	— 63	88	1	— 127
13	4	— 8	51	1	— 65	89	4	— 128
14		— 9	52	1	— 67	90	4	— 130
15	1	— 11	53		— 68	91	4	— 132
16	4	— 12	54		— 71	92	3	— 134
17		— 13	55	1	— 73	93	1	— 136
18		— 14க	56		— 74	94	1	— 138
19	4	— 15	57		— 76	95	1	— 140
20	1	— 17	58		— 78	96	4	— 141
21	2	— 18	59		— 81	97	2	— 143
22	3	— 19	60	1	— 83	98	3	— 145
23		— 20	61		— 84	99	2	— 148
24	1	— 22	62		— 85	100	2	— 149
25	3	— 23	63	2	— 87	101	2	— 151
26	2	— 26	64	2	— 88	102	1	— 153
27	1	— 27	65	1	— 90	103		— 154
28	4	— 28க	66	1	— 92	104	1	— 157
29		— 29	67	4	— 93	105	1	— 159
30		— 30ங	68	1	— 95	106	3	— 160
31	1	— 32	69	3	— 96	107	4	— 162
32		— 32க	70	1	— 98	108	1	— 164
33	2	— 34	71	4	— 99	109		— 165
34	4	— 35	72		— 100	110	4	— 167
35	4	— 36	73	1	— 102	111	1	— 170
36	7	— 37	74	4	— 103	112	1	— 172
37	3	— 39	75	1	— 105	113		— 173
38	1	— 41	76		— 106	114		— 175
39	1	— 43	77		— 108	115	3	— 177
40	1	— 44	78	3	— 110	116	1	— 179
41		— 45	79	4	— 111	117	2	— 180
42	1	— 48	80	4	— 113	118	3	— 182க
43	4	— 49	81	3	— 115	119	ச	— 183
44	3	— 51	82	1	— 117	120	1	— 185

பக்.	சௌ. தோஹா.	பக்.	சௌ. தோஹா.	பக்.	சௌ. தோஹா
121	ச4 — 156	159	1 — 249	197	3 — 310
122	4 — 187	160	— 250	198	2 — 312
123	1 — 189	161	3 — 252	199	— 313
124	1 — 191	162	1 — 253	200	— 315
125	4 — 192	163	-- 255	201	3 — 317
126	— 193	164	1 — 257	202	ச — 318
127	— 195	165	4 — 258	203	1 — 320
128	4 — 197	166	1 — 260	204	3 — 321
129	2 — 199	167	1 — 261	205	4 — 322
130	4 — 200	168	1 — 263	206	3 — 323
131	4 — 202	169	3 — 263	207	2 — 324
132	2 — 203	170	1 — 265	208	ச — 324
133	1 — 206	171	3 — 266	209	4 — 325
134	3 — 207	172	1 — 268	210	ச4 — 326
135	— 208	173	2 — 269	211	ச3 — 326
136	2 — 210	174	1 — 271	212	4 — 327
137	ச1 — 211	175	1 — 273	213	ச4 — 327
138	3 — 212	176	— 274	214	1 — 329
139	1 — 214	177	3 — 276	215	1 — 331
140	4 — 215	178	1 — 278	216	4 — 332
141	1 — 217	179	4 — 279	217	2 — 333
142	1 — 219	180	2 — 281	218	— 335
143	2 — 221	181	1 — 283	219	1 — 336
144	1 — 223	182	4 — 284	220	— 338
145	4 — 224	183	1 — 286	221	3 — 340
146	2 — 226	184	3 — 287	222	1 — 342
147	1 — 228	185	4 — 289	223	4 — 343
148	1 — 230	186	2 — 291	224	3 — 345
149	2 — 232	187	2 — 293	225	2 — 346
150	2 — 234	188	2 — 295	226	1 — 348
151	1 — 236	189	1 — 297	227	1 — 351
152	2 — 237	190	4 — 298	228	3 — 352
153	1 — 239	191	3 — 300	229	2 — 354
154	2 — 240	192	1 — 302	230	1 — 356
155	1 — 242	193	— 303	231	3 — 357
156	— 243	194	3 — 305	232	1 — 358
157	4 — 245	195	1 — 307	233	2 — 360
158	3 — 247	196	4 — 308	234	4 — 361

யார்பால் சொல என் வெகு தீமையே
ஸ்ரீ ரகு வீர தீர (அ)ருள்வாயே 1

என்னுள்ளம், ப்ரபு! உன்னில்லம்தான்
குடிவந்தாரதில் பல கள்ளர்தான் 2

அதட்டுகின்றார் மிக என்னைத்தான்
செவி சாய்க்கிலர் என் வேண்டுதலைத்தான் 3

வெறி, சின, அறிவி(ன்)-பகை மாரன் தான்
மோஹ, லோப, இருள் எண்ணம் - 'தான்' 4

தொல்லை என்னை மிக செய்கின்றார்
கதியில னென்றெனை வாட்டுகின்றார் 5

அவர் பல மனவிலை! நான் தனி தான்
கேட்கில ராரு மென் கூக்குரலைத்தான் 6

நாத ஓடுகிலனே!- உடனே தான்
தொடர்வர்! கார் ரகுநாதா நீதான் 7

துளஸி சொல்வதைக் கேள் ராமா
உன்னி(ல்)லில் கள்ளர் கொள்ளையாமா 8

பெரிதாம் கவ(லை)ல எனக்கிது தான்
ஆகா(து) இழுக்கு (உ)னக்குத்தான். 9

(துளஸிதாஸ் - விநயபத்திரிகா 125)

Actual Cost Rs. 8.